இந்திய
சாட்சியச் சட்டம்
Indian Evidence Act

• இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு •

இந்திய
சாட்சியச் சட்டம்

Indian Evidence Act

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

P.R.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

திருத்தச் சட்டங்கள் மற்றும் அண்மைக்காலம் வரையிலான
முக்கிய வழக்குகளுடன் வெளியாகும் **10**–ஆம் பதிப்பு

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019
[The Criminal Law (Amendment) Bill, 2019]
ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019
[The Jammu and Kashmir Reorganisation Act, 2019]
குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018
[The Criminal Law (Amendment) Act, 2018]
குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013
[The Criminal Law (Amendment) Act, 2013]
குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005
[The Criminal Law (Amendment) Act, 2005]
இந்திய சாட்சிய (திருத்தச்) சட்டம், 2002
[The Indian Evidence (Amendment) Act, 2002]
தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000
[The Information Technology Act, 2000]

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, **சேலம் 636007.**

மின்வணிக வலைதளம் : **www.shripathirajanpublishers.com**

பத்தாம் பதிப்பு : ஜனவரி, 2023
பதிப்புரிமை © : பி.ஆர்.ஜெயராஜன், வழக்குரைஞர்

இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு

விலை : ₹ 460-00 ISBN : 978-81-940495-3-1

- □ **Title** : **Indiya Satchiyach Sattam**
  [Indian Evidence Act]
- □ **Author** : Dr. P.R.Jayarajan
- □ **Language** : Tamil
- □ **Edition** : First Edition, April, 1996
  Second Revised Edition, August, 1997
  Third Revised Edition, July, 1999
  Fourth Revised Edition, October, 2002
  Fifth Revised Edition, May, 2006
  Sixth Revised Edition, June, 2009
  Seventh Revised Edition, April, 2012
  Eighth Revised Edition, October, 2015
  Ninth Revised Edition, April, 2021
  Tenth Edition, January, 2023
- □ **Pages** : 532
- □ **Size** : 22 x 14 c.m. (Demy)
- □ **Fonts** : 10 & 11 pts.
- □ **Paper** : 18.1 Kg. Maplitho
- □ **Binding** : Hard Bound
- □ **Published by :**
  SHRI PATHI RAJAN PUBLISHERS,
  69/42-C, Meenakshi Nagar, Hasthampatty, **SALEM.**
- □ **Price : ₹ 460-00**
- □ Shop online at : **www.shripathirajanpublishers.com**

அச்சுப்பணி:

எழுத்தாக்கம் : ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,
69/42–சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,
சேலம் – 636 007. தொலைப்பேசி 0427–2403402

நூலாக்கம் : ஸ்ரீ அபிராமி ஆஃப்செட்,
6/1ஏ, துரைசாமி நகர், பள்ளப்பட்டி, சேலம் 636 009.

பத்தாம் பதிப்பில் என்னுரை

பேரன்பு கொண்ட நெஞ்சங்களே,

வணக்கம்.

சட்டங்கள் எத்தனை இயற்றப்பட்டாலும், நீதிமன்றத்தில் வழக்கின் பொருண்மைகளை மெய்ப்பிக்க அல்லது பொய்ப்பிக்க வழி காட்டுவது '**இந்திய சாட்சியச்சட்டம்**' எனும் ஒரே சட்டமாகும். சீர்மிகு அச்சட்டத்தை முற்றிலும் மறுஆய்வு செய்யப்பட்ட இந்த **பத்தாம் பதிப்பின்** வாயிலாக உங்களுக்கு திறம்பட விளக்குவதில் நான் பெருமை கொள்கின்றேன்.

இந்திய சாட்சியச்சட்டத்தின் சிறப்பம்சமே, '**விதியும் விதி விலக்குகளும்**' **(Rules and Exceptions)** என்று கூறலாம். '**இன்னது இப்படி இருக்க வேண்டும்**' என்று ஒரு சட்டப்பிரிவின் வழியாக சாட்சியச் சட்டம் கூறினால், அப்பிரிவின் அடுத்த பத்தியிலோ அல்லது அடுத்த பிரிவுகளிலோ, '**சில சூழ்நிலைகளின் கீழ் இப்படிக்கூட இருக்கலாம்**' என மேற்படி விதிக்குண்டான விதிவிலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏனெனில் எல்லா சூழ்நிலைகளிலும் சாட்சியச் சட்ட விதிகளை ஒரே மாதிரியாக கண்டிப்புடன் பின்பற்றவியலாது. எனவேதான், விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. சாட்சிய சட்ட விதிகளிலும், விதிவிலக்குகளிலும் சிறந்து விளங்கும் வழக்குரைஞர்கள், தாங்கள் நடத்தும் வழக்குகளை மிக எளிதாக வெற்றியின் இலக்கிற்கு இட்டுச்சென்றுவிடலாம்.

சாட்சியச்சட்டத்தின் வகைமுறைகளை (Provisions) மேலெழுந்த வாரியாகப் படித்தால், ஒன்றும் புரியாது. சிறிது ஆழ்ந்து படித்தால் தான், சட்டப்பிரிவுகளின் சாரம்சத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அப்பொழுதும் சரியாக விளங்கிக் கொள்ள சில சமயங்களில் முடிவதில்லை. ஏனெனில் அதற்குண்டான அடிப்படை அப்பிரிவுகளில் கூறப்பட்டிருக்காது. எனவே, அத்தகு அடிப்படை விடயங்களை எளிய நடையில் படிப்படியாக தெளிவாக இந்நூலில் விளக்கியுள்ளேன்.

இந்திய சாட்சியச்சட்டம் பின்வரும் **ஆறு** சட்டங்களால் திருத்தப்பட்டுள்ளது. அவை, (1) The Information Technology Act,

2000, (2) The Indian Evidence (Amendment) Act, 2002, (3) The Criminal Law (Amendment) Act, 2005, (4) The Criminal Law (Amendment) Act, 2013. (5) The Criminal Law (Amendment) Act, 2018, (6) The Jammu and Kashmir Reorganisation Act, 2019. இவற்றில் முதல் சட்டத்தால் செய்யப்பட்ட பல்வேறு திருத்தங்களை இப்பதிப்பில் பொருத்தமான இடங்களில் சேர்த்துள்ளேன். அடுத்து வரும் ஐந்து சட்டங்களால் இந்திய சாட்சியச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை இந்நூலின் தொடக்கத்திலேயே தனியாகக் தொகுத்துக் கொடுத்துள்ளேன். தவிரவும் இந்திய சாட்சியச்சட்டத்தை மேலும் திருத்தும் முகமாக கொண்டுவரப்படவுள்ள **குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 [The Criminal Law (Amendment) Bill, 2019]** என்ற சட்டமுன்வடிவையும் இப்பதிப்பில் கொடுத்துள்ளேன். அத்துடன் சாட்சிய சட்டத்தின் கீழ் அண்மைக்காலத்தில் எழுந்த முக்கிய வழக்குகள் மற்றும் அவற்றின் தீர்ப்பு நெறிகளை இந்நூலில் ஒரு தனிப்பகுதியின் கீழ் தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

இந்திய சாட்சியச் சட்டத்தை எதனுடனாவது ஒப்பிடும்படி என்னைக் கேட்டால், நான் அதனை **திருக்குறளுடன்** ஒப்பிடுவேன். ஏனென்றால் சட்டங்களிலேயே மிகக் குறைந்த சட்டப்பிரிவுகளைக் கொண்டது, சாட்சியச் சட்டமாகும். அதாவது மொத்தம் 167 பிரிவுகளே உள்ளன. ஆனால் அவற்றிற்கு விளக்கம் கூறுவதாக இருந்தால், இன்றெல்லாம் கூறிக்கொண்டே இருக்கலாம். திருக்குறள் இரண்டே வரிகளில் இருந்தாலும், அதன் விளக்கத்திற்கு எல்லையே கிடையாது. திருக்குறள் **அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்** என்று மூவகையாகப் பிரிக்கப்பட்டிருப்பதைப் போல, இந்திய சாட்சியச் சட்டமும், **பொருண்மைகளின் தொடர்புடைமை, மெய்ப்பித்தல், சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும்** என்று மூவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது. திருக்குறள் நமது அக மற்றும் இக வாழ்விற்கு வழி காட்டுவதைப் போல, இந்திய சாட்சியச் சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு உண்டான சாட்சிய விதிகளைக் கூறி வழி காட்டுகிறது.

வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

எனதருமைத் தந்தையார் வழக்குரைஞர்
திருமிகு. பி.ஆர்.ரங்காச்சாரி, **B.Sc., B.L., D.P.P.A.,** அவர்களின்
நீங்கா நினைவிற்கு இந்நூல் அர்ப்பணம் ... ...

பொருளடக்கம்

இந்திய சாட்சியச்சட்டம்
Indian Evidence Act

- பத்தாம் பதிப்பில் என்னுரை v
- பொருளடக்கம் vii
- சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய வழக்குகளின் பட்டியல் xxi

இந்திய சாட்சியச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள்

– ஒரு பார்வை

Amendments in the Indian Evidence Act

- A glance

- குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 xxvii
  [The Criminal Law (Amendment) Bill, 2019]
  - **Statement of Objects and Reasons of the Criminal Law (Amendment) Bill 2019** xxxi
- ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019 xxxiii
  [The Jammu and Kashmir Reorganisation Act, 2019]
- குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018 xxxv
  [The Criminal Law (Amendment) Act, 2018]
- குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013 xxxvii
  [The Criminal Law (Amendment) Act, 2013]
- குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005 xlii
  [The Criminal Law (Amendment) Act, 2005]
- இந்திய சாட்சிய (திருத்தச்) சட்டம், 2002 xliii
  [The Indian Evidence (Amendment) Act, 2002]

இந்திய சாட்சியச் சட்டம், 1872

திருத்தச்சட்டங்களால் திருத்தப்பட்டவாறு

Indian Evidence Act, 1872

As Amended by the Amendment Acts

பகுதி - I

பொருண்மைகளின் தொடர்புடைமை
[Relevancy of Facts]

1. அறிமுகம்
[Introduction] 1

- பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது 1
  - அறிமுகவுரை 1
  - இந்தியாவில் சாட்சியச் சட்டம் – தோற்றமும் வளர்ச்சியும் 2
  - இந்தியச் சாட்சியச் சட்டத்தின் அமைப்பு 4

2. சாட்சியச் சட்டம் - வரையறை
[Law of Evidence - Definition] 5

- தலைமை நீதிபதி மோனிர் கூறும் வரையறை 5
- சர் ஜேம்ஸ் ஸ்டீபன் கூறும் வரையறை 6
- சாட்சிய சட்டத்தை படிப்பதன் முக்கியத்துவம் 6
- சாட்சிய விதிகள் தேவைதானா? 6
- நீதி விசாரணையில் சாட்சியச் சட்டத்தின் பணி 7
- சாட்சிய சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 8
  - மிகச் சிறந்த சாட்சிய விதி – விளக்கமும் கொள்கைகளும் 8
- நிலைமுறை, நடைமுறைச் சட்டம் – வேறுபாடு 10
- "சாட்சியச் சட்டம் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு உள்நாட்டுச் சட்டமே" – விளக்கம் 11
- இந்திய சாட்சியச் சட்டம் இந்நாட்டு சட்டம் மட்டுமா? 12

3. சாட்சியம் - வரையறை
[Evidence - Definition] 14

- அறிஞர் ஸ்டீபன் கூறும் வரையறை 14
- அறிஞர்கள் பெந்தாம் மற்றும் பெஸ்ட் கூறும் வரையறை 14
- டெய்லர் கூறும் வரையறை 14
- பொதுவாக சாட்சியம் என்றால் என்ன? 14
- இந்திய சாட்சியச் சட்டம் கூறும் வரையறை 15

4. சாட்சியங்களின் பல்வேறு வகைகள்
[Kinds of Evidence] 17

- தலைநிலைச் சாட்சியம் மற்றும் சார்நிலைச் சாட்சியம் 17
- தெரிநிலைச் சாட்சியம் மற்றும் ஆள் தரும் சாட்சியம் 18
- நேர்நிலைச் சாட்சியம் மற்றும் சூழ்நிலைச் சாட்சியம் 19
- மூலச் சாட்சியம் மற்றும் கேள்வி நிலைச் சாட்சியம் 19
- அகநிலைச் சாட்சியம் மற்றும் புறநிலைச் சாட்சியம் 19
- உறுதியூட்டும் சாட்சியம் 19
- வேறுபாடுகள்
  - வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியம் 21
  - நேர்நிலைச் சாட்சியம் மற்றும் சூழ்நிலைச் சாட்சியம் 21
  - தெரிநிலைச் சான்று மற்றும் ஆள்தரும் சான்று 22

5. சூழ்நிலைச் சாட்சியம் - விளக்கமும் பல சுவையான வழக்குகளும் **[Circumstantial Evidece and Interesting Case-Laws]** 23
- பல சுவையான வழக்குகள் 23
- சூழ்நிலைச் சாட்சியங்கள் பயன்படாத வழக்குகள் 28
- நேர்நிலைச் சாட்சியம், சூழ்நிலைச் சாட்சியத்தை விட உயர்ந்ததா அல்லது தாழ்ந்ததா? 31

6. பொருண்மை **[Fact]** 33
- பொருண்மை [Fact] 34
  - சாட்சியச் சட்டம் தரும் வரையறை 34
  - எடுத்துக்காட்டுகள் 35
- தீர்வுதரு பொருண்மை [Fact in issue] 35
  - சாட்சியச் சட்டம் தரும் வரையறை 36
  - விளக்கம் 36
  - எடுத்துக்காட்டு 36
- தீர்வுதவு பொருண்மை [Relevant Fact] 36
- தீர்வுதரு பொருண்மை மற்றும் தீர்வுதவு பொருண்மை – இரண்டு எளிய உதாரணங்கள் 37
- தீர்வுதரு பொருண்மை மற்றும் தீர்வுதவு பொருண்மை – வேறுபாடுகள் 38

7. அனுமானம் (அல்லது) துணிபு **[Presumption]** 41
- விளக்கம் 41
- ஆங்கில சட்டத்தின்படி அனுமானம் அல்லது துணிபு 42
  - பொருண்மைத் துணிபு 42
  - சட்டத் துணிபு 42
    - மறுக்கக்கூடிய சட்டத் துணிபு 43
    - மறுக்கமுடியாத சட்டத் துணிபு 43
- இந்திய சட்டத்தின்படி அனுமானம் அல்லது துணிபு 44
  - அனுமானிக்கலாம் [May Presume] 44
  - அனுமானித்தல் வேண்டும் [Shall Presume] 46

– அறுதியான சான்றுறுதி [Conclusive Proof] 47
– அனுமானம் அல்லது துணிபு பற்றிய எளிய வரைபடம் 48
– பொருண்மைத் துணிபு மற்றும் சட்டத் துணிபு – வேறுபாடுகள் 49
– அனுமானிக்கலாம் மற்றும் அனுமானித்தல் வேண்டும் – வேறுபாடுகள் 50

8. மெய்ப்பித்தல்
[Proving] 51

– மெய்ப்பிக்கப்பட்டது [Proved] 51
– பொய்ப்பிக்கப்பட்டது [Disproved] 52
– மெய்ப்பிக்கப்படாதது [Not Proved] 52
– மெய்ப்பிக்கப்பட்டது, பொய்ப்பிக்கப்பட்டது மற்றும் மெய்ப்பிக்கப்படாதது – வேறுபாடுகள் 52
– சான்றுறுதி 54
– சாட்சியம் மற்றும் சான்றுறுதி 54
– குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளில் நிரூபணம் 55
– "உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஒரே சாட்சிய சட்ட விதிகள்" – விதியும், விதிவிலக்குகளும் 56

9. குற்றக் கூறுகளின் தொகுதிக் கோட்பாடு
[Doctrine of Corpus Delicti] 59

– விளக்கம் 59
– உதாரணங்கள் 59
– முக்கிய வழக்குகள் 60

10. சாட்சியத்தின் தொடர்புடைமையும் சாட்சியத்தை அனுமதித்தலும்
[Relevancy and Admissibility of Evidence] 61

– தொடர்புடைய பொருண்மை (அல்லது) தொடர்புடைமை 61
– தொடர்புடையது மற்றும் அனுமதிக்கத்தக்கது 62
– மேற்கண்டவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள் 62
– தர்க்கரீதியான மற்றும் சட்டரீதியான தொடர்புடைமை – விளக்கம் 63

11. வழக்கெழு வினாவைப் பொறுத்து மட்டுமே சாட்சியம்
[Evidence confined to matters in issue] 65

– விதிவிலக்குகள் 65

12. ஒன்றிய செயல் - எப்பொழுது தொடர்புடையதாகின்றது?
[Res Geatae - When relevant?] 67

– ஒன்றிய செயல் – விளக்கம் 67
– இந்திய சாட்சியச் சட்டத்தில் ஒன்றிய செயல் 70

13. உட்கருத்து, குற்றம் புரிய தயாராகுதல் மற்றும் நடத்தை - எப்பொழுது தொடர்புடையதாகின்றன?
[Motive, Preparation and Conduct - When relevant?] 72

– உட்கருத்து – வரையறை 73

– கருத்து, உட்கருத்து – வேறுபடும் விதம் 73
– உட்கருத்து குறித்து அளிக்கப்படும் சாட்சியம் எப்பொழுது மிகவும் முக்கியமானதாகிறது? 73
– எடுத்துக்காட்டுகளும் வழக்குகளும் 74
– உட்கருத்து இருப்பதாலும், இல்லாததாலும் ஏற்படும் விளைவுகள் 75
– குற்றம் புரிய தயாராகுதல் குற்றவியல் வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் தொடர்புடையதா? 76
– உரிமையியல் வழக்கு விஷயத்தில் தயார் நிலை 77
– நடத்தையும் தொடர்புடைமையும் – பிரிவு 8 கூறும் விளக்கம் 78
– எடுத்துக்காட்டுகள் 78
– சர்ச்சைக்குள்ளான முக்கிய வழக்கு 79

14. தீர்வுதரு அல்லது தீர்வுதவு பொருண்மையை விளக்கும் அல்லது அறிமுகப்படுத்த தேவையான பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை?
[Facts necessary to explain or introduce relevant facts - When relevant? 80
– சாட்சிய சட்ட விதி – பிரிவு 9 80
– எடுத்துக்காட்டுகள் 81

15. சதி மற்றும் சதிகாரர்களின் செயல்கள் - எப்பொழுது தொடர்புடையதாகின்றன?
[Conspiracy and acts of conspirators - When relevant?] 83
– சதி – விளக்கம் 83
– பிரிவு 10 கூறுவதாவது 84
– மற்ற சாட்சியத்திற்கும் சதி குறித்த சாட்சியத்திற்கும் உள்ள வேறுபாடுகள் 85

16. மற்றபடி தொடர்பில்லாத பொருண்மைகள் (அல்லது) வேற்றிட வாதம் (அல்லது) அலிபி - எப்பொழுது தொடர்புடையவை?
[Facts not otherwise relevant (or) Alibi - When relevant?] 87
– இந்திய சாட்சியச் சட்டம் கூறுவதாவது – பிரிவு 11 87
– எடுத்துக்காட்டுகள் 87
– வேற்றிட வாதம் (அல்லது) அலிபி (அல்லது) முரண்படுத்துகிற பொருண்மைகள் 88
– சாட்சிய சட்டம் கூறும் முரண்பட்ட பொருண்மைகள் 89
– ஒரு நிகழ்ச்சி பெரிதும் நிகழ்தற்குரியது எனக் காட்டும் பொருண்மைகள் 90

17. உரிமை அல்லது வழக்கத்தின் இருப்பு குறித்து எழும் வினாவிற்கு தொடர்புடைய பொருண்மைகள்
[Facts relevant when right or custom is in question] 92
– இந்திய சாட்சியச் சட்டம் கூறுவதாவது – பிரிவு 13 92
– எடுத்துக்காட்டு 93

– உரிமையும் வழக்கமும் 93
– உரிமை அல்லது வழக்கத்தை மெய்ப்பிக்கும் முறைகள் 93

18. மனநிலை, உடல் நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டும் பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை? **[Facts showing the existence of state of mind, or of body or bodily feeling - When relevant?]** 95
– பிரிவு 14 கூறுவதாவது 95
– பிரிவு 14 உணர்த்தும் அடிப்படைத் தத்துவம் 96
– எடுத்துக்காட்டுகள் 96

19. செய்கை, தற்செயலானதா அல்லது கருத்துடன் செய்யப்பட்டதா என்ற பிரச்சனையைத் தெளிவாக்கும் பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை? **[Facts bearing on question whether act was accidental or intentional - When relevant?]** 98
– பிரிவு 15 யாது கூறுகிறது? 98
– பிரிவு 15 உணர்த்தும் அடிப்படைத் தத்துவம் 98
– எடுத்துக்காட்டுகள் 99
– ஒத்த பொருண்மைகள் 99

20. ஒத்தேற்புரை **[Admission]** 104
– விளக்கம் 104
– சாட்சியச் சட்டத்தின் வரையறை 105
– முக்கிய ஆக்கக் கூறுகள் 105
– யார் ஒத்தேற்புரையைச் செய்யலாம்? 106
– ஒத்தேற்புரையின் சான்று மதிப்பு 106
– ஒத்தேற்புரை மெய்ப்பிக்கப்படல் குறித்த பொது விதி – பிரிவு 21 107
– விதிவிலக்குகள் 108
– பிரிவு 22 கூறுவதாவது 111
– உரிமையியல் வழக்கின் ஒத்தேற்புரையானது தொடர்பற்றதாகக் கூடிய சூழ்நிலைகள் 111
– பாதகமின்றி ஒத்தேற்புரை 112

21. குற்ற ஏற்புரை **[Confession]** 113
– விளக்கம் 113
– குற்ற ஏற்புரையின் வரையறை குறித்த கருத்துக்கள் 113
– குற்ற ஏற்புரை – இரு வகைகள் 116
– குற்ற ஏற்புரை குறித்து இந்திய சாட்சியச் சட்டத்தின் வகைமுறைகள் 116
– பிரிவு 24 கூறுவதாவது 118

- பிரிவு 25 கூறுவதாவது 124
- பிரிவு 26ன்படி
  - காவல்துறை பாதுகாவலில் 127
  - மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் குற்ற ஏற்புரை 127
- பிரிவு 27ன்படியிலான விதிவிலக்கு 128
- மிக முக்கியமான வழக்குகள் 129
- உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரையின் சான்றியல் மதிப்பு 134
- உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரை மற்றும் உடன் குற்றவாளியின் சாட்சியம் – வேறுபாடுகள் 136
- பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரை 137
- நீதிமன்ற குற்ற ஏற்புரை 138
- நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை 139
- ஒத்தேற்புரை மற்றும் குற்ற ஏற்புரை – வேறுபாடுகள் 140

22. சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் [Statements by Persons who cannot be called as witnesses] 143

- எப்பொழுது தொடர்புடையவை? 143
  - பிரிவு 32 கூறுவதாவது 144
- மரண வாக்குமூலம் – எப்பொழுது தொடர்புடையது? 147
  - வரையறை 149
  - மரண வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அடிப்படை 149
  - ஒரு செல்லத்தகு மரண வாக்குமூலத்தின் முக்கியக் கூறுகள் 149
  - மரண வாக்குமூலத்தின் அமைப்பு 150
  - மரண வாக்குமூலம் எப்பொழுது செய்யப்படலாம்? 151
  - மரணத்திற்கு எது காரணமோ அது குறித்துதான் மரண வாக்குமூலம் 153
  - மரண வாக்குமூலத்தின் சான்று மதிப்பு 153
  - மரண வாக்குமூலத்தை எங்ஙனம் மெய்ப்பிப்பது? 156
  - மரண வாக்குமூலம் கொடுப்பவர் பிழைப்பின்? 156
- முந்திய அல்லது பிந்திய நீதிமுறை நடவடிக்கையில் சாட்சியம் – எப்பொழுது தொடர்புடையது? 157

23. நீதிமன்றங்களின் தீர்ப்புகள் - எப்பொழுது தொடர்புடையவை? [Judgments of Courts - When relevant?] 159

- பிரிவு 43 கூறும் கோட்பாடு 160
- விதிவிலக்குகள் 161
- தீர்ப்புகளின் சான்று மதிப்பு 164

24. கருத்துச் சாட்சியம் - எப்பொழுது தொடர்புடையது? [Opinion Evidence - When relevant?] 165

- விதிவிலக்குகள் 166
- வல்லுநர் கருத்து சாட்சியம் 169

25. வழக்குத் தரப்பினர்களின் குண இயல்பு - எப்பொழுது தொடர்புடையது?
[Character of Parties - When relevant?] 175

- குண இயல்பு – விளக்கம் 175
- தரப்பினர்களின் மற்றும் சாட்சிகளின் குண இயல்பு 176
  - உரிமையியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்வு 176
  - குற்றவியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்வு 178
- சாட்சிகளின் குண இயல்பு 178

பகுதி - II

மெய்ப்பித்தல் பற்றி
[On Proof]

26. நீதிமுறை கவன ஏற்பும் மெய்ப்பிக்கத் தேவையில்லாத பொருண்மைகளும்
[Judicial Notice and Facts which need not be proved] 180

- நீதிமுறையில் கவன ஏற்பு – விளக்கம் 181
  - பிரிவு 56 கூறுவதாவது 181
  - நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருண்மைகளின் பட்டியல் – பிரிவு 57 181
  - ஒத்தேற்றுக் கொள்ளப்பட்ட பொருண்மைகள் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை – பிரிவு 58 183

27. வாய்மொழிச் சாட்சியம்
[Oral Evidence] 185

- வாய்மொழிச் சாட்சியம் மூலம் மெய்ப்பித்தல் – பிரிவு 59 185
  - வாய்மொழிச் சாட்சியம் நேரடியானதாக இருத்தல் வேண்டும் – பிரிவு 60 186
- கேள்விநிலைச் சாட்சியம் – விளக்கம் 187
  - கேள்விநிலைச் சாட்சியத்தை நீதிமன்றம் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை? 188

28. ஆவண சாட்சியம்
[Documentary Evidence] 191

- தலைநிலைச் சாட்சியம் அல்லது முதல்தரச் சாட்சியம் 191
  - ஆவண சாட்சியம் – விளக்கம் 191
  - ஆவணத்தை எவ்வாறு மெய்ப்பிக்கலாம்? (பிரிவு 61) 191
  - தலைநிலைச் சாட்சியம் (பிரிவு 62) 192
  - சார்நிலைச் சாட்சியம் (பிரிவு 63) 193
- சார்நிலைச் சாட்சியம் அல்லது இரண்டாந்தரச் சாட்சியம் 194
  - சார்நிலைச் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படும் சூழ்நிலைகள் 194
- தலைநிலைச் சாட்சியம் மற்றும் சார்நிலைச் சாட்சியம் – வேறுபாடுகள் 195
- சான்றொப்பமிட வேண்டிய ஆவணத்தை நிரூபித்தல் 196

– சான்றொப்பம் 196
– நாடாவில் பதிவு செய்யப்பட்ட சாட்சியம் 197

29. பொது ஆவணங்கள்
[Public Documents] 199

– பொது ஆவணங்களும் தனியார் ஆவணங்களும் – மெய்ப்பிக்கும் முறைகள் 199
– ஆவணம் – வரையறை 199
– பொது ஆவணங்கள் – பிரிவு 74 கூறும் வரையறை 200
– தனியார் ஆவணங்கள் – பிரிவு 75 கூறும் வரையறை 201
– பொது ஆவணங்கள் மற்றும் தனியார் ஆவணங்கள் – வேறுபாடு 201
– பொது ஆவணங்கள் மெய்ப்பிக்கப்படும் முறை 201

30. ஆவணங்கள் பற்றிய துணிபுகள்
[Presumptions as to Documents] 199

– ஆவணத் துணிபுகள் – இரண்டு விதம் 203
– தொல்லாவணமும் அதன் துணிபும் 205

31. ஆவண சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் ஒதுக்கப்படுதல்
[Exclusion of Oral Evidence by Documentary Evidence] 209

– ஆவண சாட்சியம் வாய்மொழி சாட்சியத்தை ஒதுக்கும் சூழ்நிலைகள் 209
– அடிப்படைக் கருத்து 209
– பிரிவு 91 கூறுவதாவது 210
– பிரிவு 92 கூறுவதாவது 211
– எடுத்துக்காட்டுகள் 211
– பிரிவு 92க்கு விதிவிலக்குகள் 212
– வெளிப்படை மற்றும் உட்கிடை பொருள் மயக்கம் 213
– வெளிப்படை பொருள் மயக்கம் 214
– உட்கிடை பொருள் மயக்கம் 215
– வேறுபாடுகள் 217

பகுதி - III

சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும்
[Production and Effect of Evidence]

32. மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பு
[Burden of Proof] 219

– மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பின் விளக்கமும் விதிகளும் 219
– விளக்கம் 219
– மெய்ப்பிக்கும் பொறுப்பு – இரு விதம் 220
– தனி விதிகள் 223

– மணமான பெண்ணின் தற்கொலை தொடர்பான விதி 226
– நிரபராதி மற்றும் இறந்துபட்டவர் குறித்த அனுமானங்கள் 227
– முறைமணப் பிறப்பு குழந்தை குறித்த அனுமானம் 229

33. முரண்தடை
[Estopel] 234

– பொது விளக்கம் 235
– பிரிவு 115 கூறுவதாவது 236
– எடுத்துக்காட்டு 237
– அடிப்படை வழக்கு 237
– தொடர்புடைய சில வழக்குகள் 238
– சில குறித்த வகை முரண்தடைகள் 239
– முரண்தடையின் பல்வேறு வகைகள் 239
– முரண்தடை, முன்தீர்ப்புத் தடை – வேறுபாடுகள் 241
– முரண்தடை, உரிமை விடுப்பு – வேறுபாடுகள் 243
– முரண்தடை, அனுமானம் – வேறுபாடுகள் 243
– முரண்தடை, ஒத்தேற்புரை – வேறுபாடுகள் 243
– இளவருக்கு எதிராக முரண்தடை சாத்தியமா? 244

34. சாட்சிகள்
[Witnesses] 245

– சாட்சிகளின் தகுதி 245
– சாட்சிகளின் கட்டாயப்படுத்தும் தன்மை 246
– குழந்தை மற்றும் ஊமை சாட்சியம் 247
– காப்புடைச் செய்திகள் 248
  – விளக்கம் 250
  – காப்புடைச் செய்திகளின் வகைகள் 250
– உடன் குற்றவாளியும் அவரது சாட்சியமும் 255

35. சாட்சிகளை விசாரித்தல்
[Examination of Witnesses] 260

– முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணை 260
  – விளக்கம் 261
– முதல் விசாரணை [Examination-in-Chief] 261
– குறுக்கு விசாரணை [Cross Examination] 262
– மறு விசாரணை [Re-Examination] 263
– குறுக்கு விசாரணை, மறு விசாரணை – வேறுபாடுகள் 265
– விடையமை வினாக்கள் (அல்லது) விடை பொதி வினாக்கள் 265
– முந்திய உரைகளைப் பற்றி குறுக்கு விசாரணை செய்தல் 267
– குறுக்கு விசாரணையில் எத்தகு கேள்விகள் கேட்கப்படலாம்? 268
– முறையற்ற குறுக்கு விசாரணை 269
– பழிதூற்றும் கேள்வி 271
– பிறழ் சாட்சி 273

- சாட்சியின் நாணயத்தைத் தாக்குதல் 274
- நினைவைப் புதுப்பித்தல் 275
- நீதிமன்ற வினாக்கள் 277

36. சாட்சியங்களை முறையற்ற விதத்தில் அனுமதித்தலும் நிராகரித்தலும் **[Improper Admission and Rejection of Evidence]** 279

- புத்துரு விசாரணை 279

பிரச்சனைகளும் தீர்வுகளும் **[Problems and Solutions]**

1. சூழ்நிலைச் சாட்சியம் [Cirucumstantial Evidence] 281

2. கேள்விநிலைச் சாட்சியம் [Hearsay Evidence] 281

3. சங்கதிகளின் (பொருண்மைகளின்) தொடர்புடைமை [Relevancy of Facts] 282

4. ஒத்தேற்புரை [Admission] 297

5. குற்ற ஏற்புரை [Confession] 299

6. சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் வாக்குமூலங்கள் (அல்லது) உரைகள் [Statements by persons who cannot be called as witnesses] 304

7. மரண வாக்குமூலம் [Dying Declaration] 306

8. சிறப்பு சூழ்நிலையில் செய்யப்பட்ட உரைகள், கணக்குப் புத்தகத்திலுள்ள பதிவுகள் [Statements made under special circumstances and entries in Book of Account] 309

9. மூன்றாம் நபர்களின் கருத்துரைகள் எப்போது தொடர்புடையன? [Opinions of third persons, when relevant] 309

10. ஆவணம் வடிவில் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், கொடைகள் அல்லது சொத்து குறித்த பிற ஏற்பாடுகளின் சரத்துகள் பற்றிய சாட்சியம் [Evidence of terms of contracts, grants and other dispositions of property reduced to form of document] 312

11. வாய்மொழி உடன்படிக்கை பற்றிய சாட்சியம் ஒதுக்கப்படுதல்

[Exclusion of evidence of Oral Agreement] 312

12. அப்யத்திற்குரிய பத்திரத்தை விளக்கவோ,
திருத்தவோ கொடுக்கப்படும் சாட்சியத்தை ஒதுக்குதல்
[Exclusion of evidence to explain or amend
ambiguous document] 313

13. இரண்டு பொருண்மைத் தொகுப்புகளில் எதனுடனும் முழுவதும்
சரியாகப் பொருந்தாத மொழி அவற்றுள் எந்தத் தொகுப்புடன்
பொருந்துகிறது என்பது குறித்த சாட்சியம்
[Evidence as to application of language to one of two sets
of facts, to neither of which the whole correctly applies] 314

14. பத்திரத்தின் சரத்துக்களை மாற்றியமைக்கின்ற உடன்படிக்கை
பற்றி சாட்சியம் தரவல்ல நபர்கள்
[Who may give evidence of agreement
varying terms of documents] 315

15. மெய்ப்பிக்கும் சுமை
[Burden of Proof] 316

16.. மண வாழ்க்கையில் பிறந்த குழந்தை முறைப்படியானது
என்பதற்கு முடிவான நிரூபணம்
[Birth during marriage, conclusive proof of legitimacy] 320

17. திருமணமான பெண் ஒருத்தியால் செய்து கொள்ளப்பட்ட
தற்கொலைக்கு உடந்தை குறித்த அனுமானம்
[Presumption as to abetment of suicide
by a married woman] 322

18. நீதிமன்றம் சில பொருண்மைகளை உண்மையானதென அனுமானிக்கலாம்
[Court may presume existence of certain facts] 323

19. முரண்தடை
[Estoppel] 325

20. நீதிபதிகளும் நடுவர்களும் (மாஜிஸ்ட்ரேட்)
[Judges and Magistrates] 327

21. மண வாழ்வில் பரிமாறிக் கொள்ளப்பட்ட செய்திகள்
[Communications during Marriage] 327

22. தொழில்முறையில் தெரிவிக்கப்படும் செய்திகள்
[Professional Communications] 329

23. வாய்மையை சோதிக்கின்ற கேள்விகளுக்கான
பதில்களை முரண்படுத்தும் சாட்சியம் ஒதுக்கப்படுதல்
[Exclusion of evidence to contradict
answers to questions testing veracity] 331

24. சாட்சியின் நாணயத்தைத் தாக்குதல்
[Impeaching credit of witness] 333

அண்மைக்கால முக்கிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பு நெறிகள் – ஒரு பார்வை
Recent Case Laws - A glance

இந்நூலின் 335 முதல் 420 வரையிலான பக்கங்களில் அண்மைக்கால முக்கிய வழக்குகள் பலவற்றில் தரப்பட்ட தீர்ப்பு நெறிகள் விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மின்னியக்க சாட்சியத்தின் (Electronic Evidence) நிரூபணம் தொடர்பான முக்கிய வழக்குகள் பல இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் – பார்வைக்கு
Previous Year Question Papers of Tamil Nadu Dr.Ambedkar Law University - For Reference

இந்நூலின் 421 முதல் 471 வரையிலான பக்கங்களில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டக்கல்வி வினாத்தாள்கள் ஜூன் 2022 வரை கொடுக்கப்பட்டுள்ளன. நிறைவாக இத்தேர்வை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான முக்கியக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

சிறு குறிப்புகள் [Short Notes]

1. Circumstantial Evidence 23
2. May Presume 48
3. Proof 54
4. Proof in Criminal and Civil Cases 55
5. Burden of proof in Civil Cases 55
6. Doctrine of Corpus Delicti 59
7. Res Gestae 67
8. Motive 72
9. Conspiracy 83
10. Alibi 87
11. Similar Facts 99
12. Admission by strangers 104
13. Admission without prejudice 111
14. Confession of a co-accused 133
15. Retracted Confession 137
16. Extra - Judicial Confession 138
17. Dying Declaration 148
18. Proof of Handwriting 165
19. The importance of the expert evidence 170
20. Judicial Notice 180
21. Hearsay Evidence 187

22. Attestation 196
23. Tape recorded evidence 197
24. Public Documents 199
25. Ancient Documents 205
26. Presumption as to documents thirty years old 206
27. Latent ambiguity 213
28. Patent ambiguity 213
29. Burden of Proof 219
30. Presumption regarding legitimacy of a child 229
31. Estoppel 234
32. Privileged Communications 249
33. Professional Communications 249
34. Accomplice 256
35. The evidence of an accomplice 256
36. Testimony of Approver 256
37. Cross Examination 261
38. Re-Examination 261
39. Leading question 265
40. Scandalous question 271
41. Exclusion of Evidence to contradict answers to questions testing veracity 271
42. Hotile witness 273
43. Impeaching the credit of a witness 274
44. Refreshing memory 275
45. Court questions 277
46. Effect of improper admission and rejection of evidence 279
47. De Novo Trial 279

வேறுபாடுகள் [Distinctions]

1. Substantive Laws and Adjective Laws 9
2. Oral Evidence and Documentary Evidence 20
3. Direct Evidence and Circumstantial Evidence 21
4. Real Evidence and Personal Evidence 22
5. Fact in issue and Relevant Fact 38
6. Presumption of fact and Presumption of law 49
7. May Presume and Shall Presume 50
8. Proved, Disproved and Not Proved 52
9. Evidence and Proof 54
10. Evidence in Civil and Criminal Proceedings 57
11. Relevancy and Admissibility of Evidence 61

12. Confession of Co-accused and Testimony of Accomplice 136
13. Admission and Confession 140
14. Judgment in rem and Judgment in personam 159
15. Primary Evidence and Secondary Evidence 195
16. Public Documents and Private Documents 201
17. Patent ambiguity and Latent ambiguity 217
18. Estoppel and Resjudicata 241
19. Estoppel and Waiver 242
20. Estoppel and Presumption 243
21. Estoppel and Admission 243
22. Competancy and Compellability of witness 245
22. Cross Examination and Re-Examination 265

சுட்டிக்காட்டப்பட்ட வழக்குகளின் பட்டியல்
[Case Laws Cited]

"A"

1. Abdul Rahman v. State of Mysore 171
2. Abdul Wahid v. Union of India 238
3. Abdullah v. Queen Empress 150,307
4. Alisandari (Alias Chandrasekhar) v. The King 150,307
5. Anant Chintaman Lagu v. State of Bombay 23,60
6. Anderson v. Weston 207
7. Appu v. State 252
8. Athappa Goundan v. Emperor 130
9. Aziz Bano v. Mohamad Ibrahim Hussain 172

"B"

10. Bain v. White Haven and Furness Junction Railway Company 11
11. Bakshish Singh v. The State of Punjab 28
12. Basanti v. State of H.P. 132
13. Bhika v. R. 129
14. Bhuboni Sahu v. The King 258
15. Bhulani Sahu v. The King 135

"C"

16. Chain Mahto v. Emperor 71
17. Chandramathi v. F.Balan 232
18. Chandrawati v. Lakshmi Chand 210
19. Chilukuri Venkateshwarly v. Venkatanarayan 231
20. Chirutha Kutty v. Subramaniam 232
21. Choat Hool v. Khan Seni Bee 305
22. Crippen's Case 27

"D"

23. Dadu v. State of Maharashtra 258
24. Darshan Singh v. Prabha Singh 208

"E"

25. Emperor v. Har Piari 125
26. Emperor v. Panchudas 102
27. Empress v. Mohan Lal 121

"F"

28. Fakhruddin v. State of Madhya Pradesh 167
29. Father Benedict v. State of Kerala 29

"G"

30. Gaya Prasad v. State 139

"H"

31. Hanumant v. State of M.P. 114
32. Harris v. Director of Public Prosecutions 100
33. Holcombe v. Hewson 100

"I"

34. In Re Gulam Mohammed 76
35. In Re Gurusami Tevar 154

"J"

36. Jagar Nath v. Lalta Prasad 244
37. Jaya Mala v. Govt. of J. & K. 172
38. Juwar Singh v. State of M.P. 263

"K"

39. Kamini v. Purna Chandra 223
40. Kansa Bchera v. State of Orissa 121
41. Kashmira Singh v. State of M.P. 135,258
42. Keshoram v. State of Assam 116
43. Khushal Rao v. State of Bombay 154
44. Kishan Singh v. Singh 171

"L"

45. Lucas v. Williams 9

"M"

46. M. Rawthor Ismile v. State 127
47. M.Din v. Kesam Singh 202
48. Mahadeo v. King 258
49. Mahamaya v. Haridas 93
50. Mahendra Munilal Nanavathi v. Sushila Nanavathi 184
51. Majhi v. State of Orissa 138,139
52. Masoom Alam v. Union of India 183
53. Mirza Akbar v. Emperor 86
54. Mobark Ali Ahmed v. State of Bombay 13
55. Mohamde Sugal v. The King 248
56. Moti Singh v. State of U.P. 153
57. Muniappan v. State of Madras 150
58. Muniappan v. State of Madras 307

"N"

59.	N.N.Pahari v. Ram Govind Pahari	230
60.	Narayan Amma v. Padmanabha Pillai	208
61.	Narayan v. State of Maharashtra	75
62.	Natha Singh v. Emperor	74
63.	Nellore v. Ramana Reddy	277
64.	Nishi Kant Jha v. State of Bihar	115
65.	Noor Mohamad v. The King	101
	"O"	
66.	Octanious Steel Co. v. Endogram Tea Co.	189
67.	Onkarnath v. Delhi Administration	183
	"P"	
68.	P.M.Das v. Central Bank	167
69.	Pakala Narayanaswami v. King Emperor	114,152,157
70.	Palvindar Kaur v. State of Punjab	114
71.	Pickard v. Sears	237
72.	Pohalya Motya Valvi v. State of Maharashtra	31
73.	Presidential Election Case	198
74.	Public Prosecutor v. Oor Goundan and another	132
75.	Pulukuri Kottaya v. Emperor	130
76.	Pyare Lal Bhargava v. State of Rajasthan	120,137
	"Q"	
77.	Queen Empress v. Jagrup	126
78.	Queen Empress v. Abdullah	79
79.	Queen Empress v. Donoghue	252
	"R"	
80.	R. v. Balke and Tye	85
81.	R. v. Bedingfield	69
82.	R. v. Christie	57,69
83.	R. v. Cleary	121
84.	R. v. Cooley	120
85.	R. v. Foster	68
86.	R. v. Oaklay	171
87.	R. v. Palmer	75
88.	R. v. Paratt	120
89.	R. v. Thompson	119
90.	R. v. Thompson	119
91.	R. v. Westlake	120
92.	Rajendra Kumar v. State of Punjab	75
93.	Ram Bharosey v. State of U.P.	251,252,328
94.	Ram Chandra v. State of Haryana	278
94.	Ram Kishan v. Savitri Devi	232
95.	Ram Narain Kallia v. Monace Bibee	305
96.	Ram Nath Madho Prasad v. State of Madhya Pradesh	153
97.	Ram Singh v. Col. Ram Singh	198
98.	Ramachandra v. State of U.P.	60

99.	Ramanathan Chetty v. Murugappa Chetty	305
100.	Ramchandra Shankershet v. Emperor	251
101.	Ramesh Chandra Mehta v. State of West Bengal	126
102.	Ranjit Singh v. State	151
103.	Ratten v. The Queen	68
104.	Rex v. Ball	101
	"S"	
105.	Santa Singh v. State of Punjab	91
106.	Sarat Chunder Dey v. Gopal Chunder Laha	238
107.	Sardul Singh v. State of Bombay	86
108.	Sashi Kumar v. Subodh Kumar	173
109.	Sat Paul v. Delhi Administration	273
110.	Secretary to Gov., Home Dept., v. Hari Rao	305
111.	Sethu v. Palani	230,322
112.	Shakarlal v. Asst. Collector of Customs	125
113.	Shri Shail Nagesh Pare v. State of Maharashtra	137
114.	Shrinath v. The State	151
115.	Sita Ram v. State	125
116.	Soward v. Legatt	317
117.	State of M.P. v. Sughan Singh	89
118.	State of Maharashtra v. Madhukar Keshav Maity	138
119.	State of Punjab v. Barkatram	125
120.	State of Punjab v. Bhajan Singh	139
121.	State of U.P. Deoman Upadhaya	132
122.	State of U.P. v. Boola Singh	138
123.	State of U.P. v. M.K.Anthony	140
124.	State v. Kanchan Singh	154
125.	Sukhan v. Emperor	129
126.	Swarnop v. State of Maharashtra	86
127.	Syed Abdul Hassan Karimulla v. Razik Husain	223
	"T"	
128.	Taburi Sahai v. Jhunjhunwala	210
129.	The Duches Kingston's Case	160
	"U"	
130.	Uday Paul Singh v. State of U.P.	74
	"V"	
131.	Veera Ibrahim v. State of Maharashtra	114
132.	Veeraswami v. Narayanan	211
133.	Vinayak v. State of Maharashtra	133
134.	Vishwanathan v. Abdul Wajid	211
	"W"	
135.	W.R.Colliery v. Bihar State Co-op. Marketing Union	221
136.	Woolmington v. Director of Public Prosecution	228
	"Z"	
137.	Zwing Lee Aviel v. State of M.P.	128

இந்திய சாட்சியச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள்

– ஒரு பார்வை

Amendments in the Indian Evidence Act

- A glance

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 [The Criminal Law (Amendment) Bill, 2019]

- ஒரு பார்வை

முப்பெரும் குற்றவியல் சட்டங்களில் ஒன்றான இந்திய சாட்சியச் சட்டமானது, **2000-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தகவல் தொழில்நுட்பச்சட்டத்தால் (The Information Technology Act, 2000)** திருத்தப்பட்டதற்குப் பிறகு பின்வரும் திருத்தச் சட்டங்களால் திருத்தங்களுக்கு ஆளானது. அவை,-

(1) இந்திய சாட்சிய (திருத்தச்) சட்டம், 2002
[The Indian Evidence (Amendment) Act, 2002]

(2) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005
[The Criminal Law (Amendment) Act, 2005]

(3) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013
[The Criminal Law (Amendment) Act, 2013]

(4) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018
[The Criminal Law (Amendment) Act, 2005]

இவற்றையடுத்து இந்திய சாட்சியச் சட்டமானது, **2019-ஆம் ஆண்டில் ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டத்தால் (The Jammu and Kashmir Reorganisation Act, 2019)** திருத்தப்பட்டது. இத்திருத்தச்சட்டத்தின் விளைவாக, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக நமது நாட்டில் செயல்விளைவில் (அமலில்) இருந்து வந்த இந்திய சாட்சியச் சட்டம், தற்போது ஜம்மு மற்றும் காஷ்மீர் உள்ளடங்கலாக இந்திய நாடு முழுமைக்கும் பொருந்தும் சட்டமாக ஆனது.

இந்நிலையில் மேற்சொன்ன திருத்தச்சட்டங்களில் மிக முக்கியமானவை என எடுத்துக்கொண்டால் 3 மற்றும் 4 இலக்கமிட்டதைக் குறிப்பிடலாம். காரணம், இவை இரண்டும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்புணர்வு உள்ளிட்ட பாலியல்

குற்றங்கள் பற்றி பல்வேறு திருத்தங்களை இந்திய தண்டனைச் சட்டத்தில் செய்தன. குறிப்பாக பாலியல் தொடர்பாக பல புதிய குற்றங்களை அறிமுகப்படுத்தின. மேலும் பாலியல் குற்றங்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த தண்டனையின் அளவை அதிகப்படுத்தின.

இவ்வாறு இந்திய தண்டனைச்சட்டத்தில் கொண்டு வரப் பட்ட திருத்தங்களுக்கு இயைந்தவாறு, குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச்சட்டம், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம் ஆகியவற்றின் வகைமுறை களிலும் அவ்விரு சட்டங்களும் திருத்தங்களைக் கொண்டு வந்தன.

இந்நிலையில்தான் பாலியல் குற்றங்கள் என்றாலே பெண்கள் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமா? அவர்கள் மட்டுமே அக்குற்றங்களிலிருந்து சட்டப்பாதுகாப்புடையவர்களா? ஏன் ஒரு ஆணோ, ஓரினச்சேர்க்கையாளரோ, இருபால் சேர்கையினரோ அல்லது ஒரு மூன்றாம் பாலினத்தவரோ வன் புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்களால் பாதிக்கப்படுபவர் களாக ஆகும் இடர் இல்லாதவர்களா? நமது இந்திய அரசியல மைப்பு பாலினத்தைக் கொண்டு பாகுபாடு காட்டுவதைத் தடுக்கி றது. மேலும் திருநங்கை நபர்களை மூன்றாம் பாலினத்தவராக **(Transgender Persons as the 'Third Gender')** உச்ச நீதிமன்றம் வழக் கொன்றில்[1] அங்கீகரித்து, அவர்களுக்கும் சட்டத்தின் முன் சமமான உரிமையும் சம பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று கூறுகி றது.

எனவே வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்கள், 'பெண்' என்ற ஒரு பாலினத்திற்கு மட்டும் எதிரானது என்ற நிலையிலிருந்து மாறி, அவை பாலின பாகுபாடு அற்றது **(Gender-neutral)** என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டங்களில் 'பெண்' என்று வரும் இடங்களில் 'நபர்' என்ற சொல்லை மாற்றீடாக்கி வைக்க வேண்டும் என்றும், அதுபோல் 'ஆண்', 'பெண்' என்ற சொற்கள் வரும் இடங்களில் அவர்களுக்கடுத்து, 'திருநங்கை' சொல்லும் இடம் பெற வேண்டும் என்றும், இதன் அடிப்படையில் இந்திய தண்டனைச் சட்டத்தில் பாலியல் குற்றங்களைப்பற்றி கூறும் வகை முறைகளைத் திருத்த வேண்டும் என்றும், இதற்கிணங்க குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டத்தைத் திருத்த

1. National Legal Services Authority v. Union of India, (2014) 5 SCC 438

வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்தது.

இவற்றின் அடிப்படையில் இந்தியாவில் பாலியல் குற்றங்களை பாலின பாகுபாடற்றதாக ஆக்க வேண்டுமென்ற நோக்கில் 2019 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 12-ஆம் தேதியில் மூத்த வழக்குரைஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான **திரு. கே.டி.எஸ்.துள்சி** என்பவர் சட்டமுன்வடிவு ஒன்றை மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தினார்.

மொத்தம் நான்கு இயல்களைக் கொண்ட இந்த சட்ட முன்வடிவின் நோக்கம் இந்திய தண்டனைச் சட்டம், இந்திய சாட்சிய சட்டம், 1872, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ஆகியவற்றை மேலும் திருத்துவது[1] ஆகும்.

இச்சட்டமுன்வடிவு இந்திய தண்டனைச் சட்டத்தில் மிக விரிவான திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. அதே நேரம் அவற்றுக்கு இயைந்தவாறு குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டத்திலும் சில திருத்தங்களைச் செய்துள்ளது. அவற்றில் நாம் இந்த நூலுக்குத் தொடர்புடையதாக உள்ளதும், சட்டமுன்வடிவின் 4-ஆம் இயலில் விவரிக்கப்பட்டுள்ளதுமான இந்திய சாட்சியச் சட்டத்திருத்தங்களைப் பற்றி மட்டும் நாம் பின்வருமாறு காண உள்ளோம்.

1. பிரிவு 53அ-இல் திருத்தம் (Amendment of Section 53A):-

(இதற்குப் பின்னிட்டு இந்த இயலில் சாட்சியச்சட்டம் என்பதாக சுட்டுகை செய்யப்படும்) இந்திய சாட்சிய சட்டம், 1872-இன் பிரிவு 53-இல், "பிரிவு 354ஈ" என்ற சொல், எண் மற்றும் எழுத்துக்குப் பிறகு, "பிரிவு 375அ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்படுதல் வேண்டும்.[2]

2. பிரிவு 114அ-இல் திருத்தம் (Amendment of Section 114A):-

இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 114அ-இல், "குற்ற வழக்கு தொடர்கை ஒன்றில்" என்ற சொற்களுக்குப் பிறகு, "பிரிவு 375அ-இன் கீழான பாலியல் தாக்குதல் மற்றும்" என்ற சொற்கள்

1. A BILL further to amend the Indian Penal Code, 1860; the Code of Criminal Procedure, 1973 and the Indian Evidence Act, 1872.

2. **Amendment of section 53A .-** In section 53 of the Indian Evidence Act, 1872 (hereafter in this Chapter referred to as the Evidence Act), after the word, figure and letter "section 354D", the word, figure and letter "section 375A" shall be inserted.

சேர்க்கப்படுதல் வேண்டும்.[1]

அதாவது **"வன்புணர்வுக்கான குற்றவழக்கு தொடர்கை சிலவற்றில் சம்மதம் இல்லாமல் இருப்பது பற்றிய துணிபு** Presumption as to absence of consent in certain prosecution for rape)" பிரிவு 114அ கூறுகிறது. இதில் இடம் பெறும் "வன்புணர்வுக்கான குற்ற வழக்கு தொடர்கை ஒன்றில்" என்று சொற்களில் "பிரிவு 375அ-இன் கீழான பாலியல் தாக்குதல் மற்றும்" என்ற சொற்களைச் சேர்த்து, **"பிரிவு 375அ-இன் கீழான பாலியல் தாக்குதல் மற்றும் வன்புணர்வுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில்"** என்று தொடர்ந்து வாசித்துக் கொள்ளல் வேண்டும்.

3. பிரிவு 146-இல் திருத்தம் (Amendment of Section 146):-

இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 146-இன், வரம்புரை வாசகத்தில், "வரம்புரையாக குற்றமொன்றுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில்" என்ற சொற்களுக்குப் பிறகு, "பிரிவு 375அ" என்ற சொல், எண் மற்றும் எழுத்து சேர்க்கப்படுதல் வேண்டும்.[2]

அதாவது, வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்கள் பற்றி இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ ஆகியன கூறுகிறது. இப்பிரிவுகளின் கீழான குற்றம் ஒன்றிற்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில் சம்மதம் பற்றி குறுக்கு விசாரணையின் கேள்வி கேட்பது குறித்து பிரிவு 146-இன் வரம்புரை வாசகம் கூறுகிறது. அவற்றில் பாலியல் தாக்குதல் குற்றத்தைப் பற்றிக் கூறும் பிரிவு 375அ-வையும் சேர்க்க வேண்டும் என்பதே மேற்படி திருத்தத்தின் நோக்கமாகும். இதன்படி, இப்பிரிவு "வரம்புரையாக இந்திய தண்டனைச் சட்டத்தின் **பிரிவு 375அ**, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ கீழான குற்றம் ஒன்றிற்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில்..." திருத்தம் பெறும்.

இந்த மூன்று திருத்தங்களை மேற்கண்ட சட்டமுன்வடிவு இந்திய சாட்சியச்சட்டத்தில் செய்ய உத்தேசிக்கிறது.

---

1. **Amendment of section 114A .-** In section 114A of the Evidence Act, after the words "in a prosecution for", the words "sexual assault under section 375A and" shall be inserted.

2. **Amendment of section 146 .-** In section 146 of the Evidence Act, in the proviso, after the words "Provided that in a prosecution for an offence under", the word, figure and letter "section 375A", shall be inserted.

இந்நூல் அச்சேறும் வரையில் அறிமுக நிலையில் இருந்து வரும் இச்சட்டமுன்வடிவின் நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கையை ஒருமுறை வாசித்துப் பார்த்தால், இன்று ஏற்பட்டுள்ள பெரும் சமூக மாற்றத்தில் பாலியல் குற்றங்களில் பால் மற்றும் பாலின பாகுபாடற்ற நடுநிலையைப் பேண வேண்டியது அரசிய லமைப்புபடி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நன்கு புலனாகும். அந்த அறிக்கையின் ஆங்கில வடிவம் வருமாறு :-

STATEMENT OF OBJECTS AND REASONS OF THE CRIMINAL LAW (AMENDMENT) BILL 2019

The idea of India, as envisaged by our founding fathers, is of one land embracing many, a nation that may endure differences of caste, creed, colour, conviction, culture, cuisine, costume and custom and yet continue to maintain its composite and pluralistic democracy. It's the underlying seamless web that unites India as a Sovereign, Socialist, Secular, Democratic Republic.

The Constitution of India guarantees to all persons the right to life and personal liberty, the equal protection of laws and prohibits discrimination on the ground of sex and provides a special provision for the advancement of socially backward classes of citizens;

It is imperative to note that transgender persons including homosexuals and bisexuals and men are excluded from the point of view of victims of sexual exploitation, assault or harassment and, from protection of rape, etcetera, under the penal laws of the country despite an impending need for the same.

The intention of the Bill is not to undermine the experiences of women subjected to rape and discrimination. But, as society matures, we must develop empathy for all and this includes male and transgender rape victims also. We need to break our silence on the issue of male and transgender rape and questioning social constructs that glorify machismo, reduce men and transgender to stereotypes and force them to mask their feelings. This Bill is an endeavor to bring laws relating to sexual exploitation, harassment and assault to be instep with changing social morality.

Pursuant to the resolutions of the United Nations and the Universal Declaration of Human Rights, 1948, there has been a steady stream of countries that have amended the laws to make sexual offences gender neutral in line with the Universal Declaration of Human Rights, 1948. More than 63 countries have already given effect to gender neutrality in relation to sexual offences by amending their penal Laws to bring them in conformity with their commitment to the United Nations and the mankind. It cannot be forgotten that discrimination is the antithesis of equality and recognition of equality in its truest sense will foster the dignity of every individual. The lack of acknowledgment of male rape has impacted the ability of victims to recognize their own victimization.

Therefore, this Bill.

ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019

(சட்டம் எண். 34 / 2019)

The Jammu and Kashmir Reorganisation Act, 2019

(34 of 2019)

முக்கியக் குறிப்பு

ஜம்மு-காஷ்மீர் மாநிலமும் நமது இந்திய ஒன்றியத்தின் ஓர் பகுதிதான். எனினும் அதன் தகுநிலை (அந்தஸ்து) இந்தியாவின் பகுதியாக உள்ள மற்ற மாநிலங்களின் தகுநிலையைக் காட்டிலும் வேறுபட்டதாகவே பல ஆண்டுகளாக துய்க்கப்பட்டு வந்தது. இதற்கு அந்த மாநிலத்திற்கென ஓர் சிறப்புத் தகுநிலையை (Special Status) இந்திய அரசியலமைப்பின் 370-ஆம் உறுபு அதற்கு வழங்கியிருந்ததே காரணமாகும். இதனால் நமது இந்திய நாடாளு மன்றம் இயற்றும் சட்டங்கள் அனைத்தும் அதன் அளாவுகையைப் பொறுத்தவரை "**ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்தும்**" என்று ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை தவிர்த்துவிடும். அதாவது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தனக்கென ஓர் தனி அரசியலமைப்பைக் கொண்டு இயங்கி வந்தது. (எனினும் இந்திய அரசின் நிர்வாகத்துறை அதிகாரத்தின் கீழ் ஜம்மு-காஷ்மீர் மாநில ஆட்சி நடைபெற்று வந்தது.) இந்த சிறப்பு தகுநிலை காரண மாக மைய சட்டங்களுக்கு இணையான சட்டங்களை ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சில வரம்புகளுக்குட்பட்டு தனக்காக தானே இயற்றிக் கொள்ளும்.

இந்நிலையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு தகுநிலையை நீக்கும் பொருட்டு **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019**-ஐ நாடாளுமன்றம் இயற்றியது. **இச்சட்டம் செயல்திறத்திற்கு வந்த 31-10-2019**–ஆம் தேதியில் இருந்து ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கென வழங்கப்பட்டிருந்த சிறப்புத் தகுநிலை இரத்தானது. இதனால் இந்தியாவின் மற்ற மாநிலங்கள் மைய அரசுடன் எத்தகு சட்ட உறவு கொண்டு கூட்டாட்சியில் இருந்து வருகிறதோ, அதே உறவு கொண்டு விளங்கும் ஓர் ஆட்சி நிலப்பரப்பாக ஜம்மு-காஷ்மீர் ஆனது. இதன் விளைவாக வெளி

மாநிலத்தவர் எவரும் ஜம்மு- காஷ்மீரில் அசையாச் சொத்து வாங்க முடியாது, அரசுப் பணியில் அமர முடியாது என்றெல் லாம் வகை செய்யும் உறுபு 35A-ம் நீக்கறவு செய்யப்பட்டது. இதன் விளைவாக ஒரே இந்தியாவாகி கூட்டாட்சி வலுப்பெற்றது.

அந்த வகையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்த தாக இருந்த வந்த **இந்திய சாட்சியச் சட்டம், 1872**, தற்போது பொருந்தும் வண்ணமாக மாறியது. இந்தச் சட்டம் மட்டுமல்ல, நமது நாடாளுமன்றம் இயற்றிய பல சட்டங்களும் ஜம்மு-காஷ்மீர்-க்கு 31-10-2019-ஆம் தேதியிலிருந்து பொருந்தும் படி மேற்சொன்ன **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019** ஆக்கியுள்ளது என்றால் அது மிகையன்று.

முந்தைய இந்திய சாட்சியச் சட்டத்தின் **பிரிவு 1** இதன் குறுந் தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம் **(Short title, extent and commencement)** பற்றிக் கூறுகிறது. அவற்றில் "**அளாவுகை**" **(Extent)** என்ற இரண்டாம் பத்தியின் ஆரம்பத்தில் "இது ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும்" என்று இருந்தது, தற்போது **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச் சீரமைப்பு சட்டம், 2019**-இன் பிரிவுகள் 95 மற்றும் பின்னிணைப்புப் பட்டியல் V, அட்டவணை 1-இன்படி, "**ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக**" என்ற சொற்கள் முற்றிலுமாக அகற்றப் பட்டுவிட்டன. **இதனால் தற்போது இந்திய சாட்சியச் சட்டம் இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும் ஓர் சட்டமாக ஆனது.** [The words "except the State of Jammu and Kashmir" omitted by Act 34 of 2019, s. 95 and Sch. V (**w.e.f. 31-10-2019**)].

மேற்படி மறுச்சீரமைப்புச் சட்டத்தால் இந்திய சாட்சியச் சட்டம், 1872-இன் பகுதி I-இன் கீழான முதனிலைப்பகுதியில் (Preliminary) பிரிவு 1-இன் சொற்றொடரில் ஏற்பட்ட மாற்றத்தின் ஆங்கில வடிவம் வருமாறு:-

PART I

RELEVANCY OF FACTS

CHAPTER I.--PRELIMINARY

1. Short Title.- This Act may be called the Indian Evidence Act, 1872.

Extent.—It extends to the whole of India [1*]**

1. The words *"except the State of Jammu and Kashmir"* **omitted by the Jammu and Kashmir Reorganisation Act, 2019** (34 of 2019), sec. 95 and the Fifth Schedule **(w.e.f. 31-10-2019).**

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018 [The Criminal Law (Amendment) Act, 2018] கொண்டு வந்த திருத்தங்கள்

- ஒரு பார்வை

குற்றவியல் சட்டம் [திருத்தச்] சட்டம், 2018[1]

(எண். 22/2018)

The Criminal Law (Amendment) Act, 2018

(11–08–2018)

முக்கியக் குறிப்பு

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018 என்ற இந்தச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், இந்திய சாட்சிய சட்டம், 1872, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம், 2012 ஆகியவற்றை மேலும் திருத்துவதற்கான ஓர் சட்டமாகும். இச்சட்டம் இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

இச்சட்டம் இந்தியக் குடியரசுத்தலைவரின் இசைவை 11-08-2018-ஆம் தேதியில் பெற்று, அதே தேதியில் இந்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டது. எனினும் இது முன் தேதியிலிருந்து செயல் விளைவுக்கு (With retrospective effect) வந்துள்ளது. அதாவது, இந்தச் சட்டம் 21-04-2018 முதல் செயல் விளைவுக்கு வந்துள்ளதாகக் கருதப் படுதல் வேண்டும்.

இச்சட்டத்தில் மொத்தம் அய்ந்து இயல்கள் (Chapters) உள்ளன. அவை, (1) முதனிலை (Preliminary), (2) இந்திய தண்டனைச் சட்டத்திற்கு திருத்தங்கள் (Amendments to the Indian Penal Code), (3) இந்திய சாட்சியச் சட்டம், 1872-க்கு திருத்தங்கள் (Amendments to the Indian Evidence Act, 1973), (4) குற்றவியல் நடைமுறைச் சட்டம்,

1. Received the asent of the President on 11-8-2018, and published in the Gazette of India, Ext., Pt. II, S. 1, dated 11-8-2018 and came into force with retrospective effect on 21-04-2018.

1973-க்கு திருத்தங்கள் (Amendments to the Code of Criminal Procedure, 1973), மற்றும் (5)பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாது காத்தல் சட்டம், 2012-க்கு திருத்தம் (Amendment to the Protection of Children from Sexual Offences Act, 2012). இந்த ஐந்து இயல்களில் நாம் இந்திய சாட்சியச் சட்டத்திற்கு தொடர்புடையதாக உள்ள 3-ஆம் இயலை மட்டும் பின்வருமாறு காண உள்ளோம் என்பதை கவனத்தில் கொள்க.

1. பிரிவு 53அ-இல் திருத்தம் (Amendment of Section 53A):-

இந்திய சாட்சிய சட்டம், 1872-இன் பிரிவு 53அ-இல், "பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்களுக்காக, "பிரிவு 376அ, பிரிவு 376அஆ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376ஈஅ, பிரிவு376ஈஆ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்கள் பதிலீடாக்கப்படுதல் வேண்டும்.

முன்னதாக 2013-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டத்தால் இந்திய சாட்சியச் சட்டத்தில் **பிரிவு 53அ** என்றொரு புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. அது "**சில நேர்வுகளில் குணஇயல்பு அல்லது முந்தைய பாலியல் அனுபவம் பற்றிய சாட்சியம் தொடர்புடையதன்று (New Section 53A - Evidence of character or previous sexual experience not relevant in certain cases)**" என்று கூறுகிறது. தற்போது இதில் வன்புணர்வு பற்றி கூறும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 376-ன் கீழான உட்கூறுகள் சில மேற்கண்டவாறு 2018-ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தால் பதிலீடாக்கப்பட்டுள்ளன.

2. பிரிவு 146-இல் திருத்தம் (Amendment of Section 146):-

மேற்சென்றதைப்போல இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 146-லும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதாவது, இத்திருத்தத்தின் படி, சாட்சிய சட்டத்தின் பிரிவு 146-இன் வரம்புரை வாசகத்தில், "பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு இ, பிரிவு 376ஈ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்களுக்காக, "பிரிவு 376அ, பிரிவு 376அஆ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376ஈஅ, பிரிவு376ஈஆ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்கள் பதிலீடாக்கப்படுதல் வேண்டும்.

பிரிவு 146-ஆனது குறுக்கு விசாரணையில் சட்டப்பூர்வமான கேள்விகள் (Questions lawful in cross examination) பற்றி கூறுகிறது.

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013 [The Criminal Law (Amendment) Act, 2013] கொண்டு வந்த திருத்தங்கள்

- ஒரு பார்வை

குற்றவியல் சட்டம் [திருத்தச்] சட்டம், 2013[1]

(எண். 13/2013)

The Criminal Law (Amendment) Act, 2013

(2–04–2013)

முக்கியக் குறிப்பு

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013 என்ற இந்தச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, இந்திய சாட்சிய சட்டம், 1872 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம், 2012 ஆகியவற்றை மேலும் திருத்துவதற்கான ஓர் சட்டமாகும். இந்தச் சட்டம் இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தில் மொத்தம் ஆறு இயல்கள் (Chapters) உள்ளன. அவை, (1) முதனிலை (Preliminary), (2) இந்திய தண்டனைச் சட்டத்திற்கு திருத்தங்கள் (Amendments to the Indian Penal Code), (3) குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-க்கு திருத்தங்கள் (Amendments to the Code of Criminal Procedure, 1973), (4) இந்திய சாட்சியச்சட்டம், 1872-க்கு திருத்தங்கள் (Amendments to the Indian Evidence Act, 1973), (5) பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம், 2012-க்கு திருத்தம் (Amendment to the Protection of Children from Sexual Offences Act, 2012), மற்றும் (6) பலவகைப்பட்டவை (Miscellaneous). இந்த ஆறு இயல்களில் நாம் இந்திய சாட்சியச் சட்டத்திற்கு தொடர்புடையதாக உள்ள 4-ஆம் இயலை மட்டும் அடுத்து காண உள்ளோம் என்பதை கவனத்தில் கொள்க.

---

1. Received the assent of the President on 2-4-2013, and pub. in Gaz. of India, Part II, Sec. 1, Ext. No. 17, dated 2-4-2013 and came into force from 3rd February 2013 (w.r.e.)

1. புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 53 அ:[1]

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013-ஆல் இந்திய சாட்சிய சட்டத்தில் பிரிவு 53அ என்ற ஒரு புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. அது "**சில நேர்வுகளில் குணஇயல்பு அல்லது முந்தைய பாலியல் அனுபவம் பற்றிய சாட்சியம் தொடர்புடையதன்று (New Section 53A - Evidence of character or previous sexual experience not relevant in certain cases)**" என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகிறது. அதாவது, "இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ-இன் கீழான குற்றம் ஒன்றிற்கான அல்லது அத்தகு குற்றம் எதையும் செய்ய முயற்சித்தலுக்கான குற்ற வழக்கு தொடர்கை ஒன்றில், சம்மதம் பற்றிய வினா பிரச்சனையில் இருக்குமிடத்து, பாதிக்கப்பட்டவரின் குணஇயல்பு அல்லது நபர் எவருடனும் அத்தகு நபரின் முந்தைய பாலியல் அனுபவம் பற்றிய சாட்சியமானது அத்தகு சம்மதம் அல்லது சம்மதத்தின் தரம் பற்றிய பிரச்சனைக்கு தொடர்புடையது ஆகாது."

2. மாற்றியமைக்கப்பட்ட புதிய பிரிவு 114அ:[2]

2013-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது பிரிவு 114அ-க்கு புதிய பிரிவை மாற்றீடாக்கியுள்ளது (Substitution of new section for

---

1. **Insertation of new section 53A:-** After section 53 of the Indian Evidence Act, 1872 (1 of 1872) (hereafter in this Chapter referred to as the Evidence Act), the following section shall be inserted, namely:—

   "53A. Evidence of character or previous sexual experience not relevant in certain cases.— In a prosecution for an offence under section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 376, section 376A, section 376B, section 376C, section 376D or section 376E of the Indian Penal Code (45 of 1860) or for attempt to commit any such offence, where the question of consent is in issue, evidence of the character of the victim or of such person's previous sexual experience with any person shall not be relevant on the issue of such consent or the quality of consent.".

2. **Substitution of new section for section 114A :-** For section

Section 114A). அது, "வன்புணர்வுக்கான குற்றவழக்கு தொடர்கை சிலவற்றில் சம்மதம் இல்லாமல் இருப்பது பற்றிய துணிபு **(Substituted Section 114A - Presumption as to absence of consent in certain prosecution for rape)**" என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறுகிறது. அதாவது, "இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 376-இன் உட்பிரிவு (2)-இன் கூறு (அ), கூறு (ஆ), கூறு (இ), கூறு (ஈ), கூறு (உ), கூறு (ஊ), கூறு (எ), கூறு (ஏ), கூறு (ஐ), கூறு (ஒ), கூறு (ஓ), கூறு (ஔ), கூறு (அஅ) அல்லது கூறு (அஆ)-இன் கீழான வன்புணர்வுக்கான குற்ற வழக்கு தொடர்கை ஒன்றில், குற்றஞ்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்ட பாலியல் உடலுறவு மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, வன்புணர்வு செய்யப்பட்டதாக சொல்லப்படுகின்ற பெண்ணின் சம்மதம் இன்றி அது செய்யப்பட்டதா என்பது வினாவாக இருந்து, அத்தகு பெண் தான் சம்மதிக்கவில்லை என்று நீதிமன்றத்தின் முன்பு தனது சாட்சியத்தில் கூறினால், அவள் சம்மதிக்கவில்லை என்பதை நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

விளக்கம்.- இந்தப்பிரிவில், "பாலியல் உடலுறவு" என்பது இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 375-இன் கூறுகள் (அ) முதல் (ஈ) வரையிலான கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எதுவும் என்று பொருள்படும்."

114A of the Evidence Act, the following section shall be substituted, namely:—

'114A. Presumption as to absence of consent in certain prosecution for rape.— In a prosecution for rape under clause (a), clause (b), clause (c), clause (d), clause (e), clause (f), clause (g), clause (h), clause (i), clause (j), clause (k), clause (l), clause (m) or clause (n) of sub-section (2) of section 376 of the Indian Penal Code (45 of 1860), where sexual intercourse by the accused is proved and the question is whether it was without the consent of the woman alleged to have been raped and such woman states in her evidence before the court that she did not consent, the court shall presume that she did not consent.

Explanation.— In this section, "sexual intercourse" shall mean any of the acts mentioned in clauses (a) to (d) of section 375 of the Indian Penal Code (45 of 1860).'.

3. மாற்றியமைக்கப்பட்ட புதிய பிரிவு 119:[3]

2013-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது பிரிவு 119-க்கு புதிய பிரிவை மாற்றீடாக்கியுள்ளது (Substitution of new section for Section 119). அது, "**வாய்மொழியாக தகவல்தெரிவிக்க இயலா சாட்சி (Substituted new section 119 - Witness unable to communicate verbally)**" பற்றி விளக்குகிறது. அதாவது, "பேச இயலா சாட்சி ஒருவர் தனது சாட்சியத்தை, எழுத்துப்பூர்வமாக அல்லது சைகைகள் செய்வது போன்று வேறு எந்த முறையில் புரிந்து கொள்ளும்படி அவர் செய்ய முடியுமோ அந்த முறை எதிலும் அளிக்கலாம்; ஆனால் அத்தகு எழுத்துப்பூர்வமானது மற்றும் சைகைகளானது திறந்த நீதிமன்றத்தில் எழுதப்பட வேண்டும் மற்றும் செய்யப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்ட சாட்சியம் வாய்மொழி சாட்சியமாக கருதப்படல் வேண்டும்:

வரம்புரையாக சாட்சி வாய்மொழியாக தகவல்தெரிவிக்க இயலவில்லை என்றால், அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ய பொருள் விளக்குபவர் அல்லது சிறப்பு கல்வியளிப்பவரின் உதவியை நீதிமன்றம் நாட வேண்டும், மேலும் அத்தகு வாக்குமூலம் காணொலியாக பதிவு செய்யப்படுதல் (videographed) வேண்டும்."

4. பிரிவு 146-இல் கொண்டு வரப்பட்ட திருத்தம்:[4]

2013-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது பிரிவு 146-இல்

---

3. **Substitution of new section for section 119:-** For section 119 of the Evidence Act, the following section shall be substituted, namely:—

"*119. Witness unable to communicate verbally.*—A witness who is unable to speak may give his evidence in any other manner in which he can make it intelligible, as by writing or by signs; but such writing must be written and the signs made in open Court, evidence so given shall be deemed to be oral evidence:

Provided that if the witness is unable to communicate verbally, the Court shall take the assistance of an interpreter or a special educator in recording the statement, and such statement shall be videographed.".

4. **Amendment of section 146:-** In section 146 of the Evidence Act,

ஒரு திருத்தத்தை கொண்டு வந்துள்ளது. அது பிரிவு 146-இன் கீழான வரம்புரை வாசகத்தை பின்வருமாறு மாற்றியமைத்துள்ளது. அதன்படி,

"வரம்புரையாக இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ-இன் கீழான குற்றம் ஒன்றிற்கான அல்லது அத்தகு குற்றம் எதையும் செய்ய முயற்சித்தலுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில், சம்மதம் பற்றிய வினா பிரச்சனையாக இருக்குமிடத்து, அத்தகு சம்மதம் அல்லது சம்மதத்தின் தரத்தை மெய்ப்பிப்பதற்காக பாதிக்கப்பட்டவரின் பொதுவான முந்தைய குணஇயல்பு, அல்லது நபர் எவருடனும் கொண்ட முந்தைய பாலியல் அனுபவம் பற்றி சாட்சியம் அளிப்பது அல்லது அத்தகு பாதிக்கப்பட்டவரின் குறுக்கு விசாரணையில் வினாக்கள் கேட்பது அனுமதிக்கப்படுதல் ஆகாது."

---

for the proviso, the following proviso shall be substituted, namely:—

"Provided that in a prosecution for an offence under section 376, section 376A, section 376B, section 376C, section 376D or section 376E of the Indian Penal Code (45 of 1860) or for attempt to commit any such offence, where the question of consent is an issue, it shall not be permissible to adduce evidence or to put questions in the cross-examination of the victim as to the general immoral character, or previous sexual experience, of such victim with any person for proving such consent or the quality of consent.".

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005 [The Criminal Law (Amendment) Act, 2005] கொண்டு வந்த திருத்தங்கள்

- ஒரு பார்வை

குற்றவியல் சட்டங்களான இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம் ஆகிய வற்றில் சில திருத்தங்களைச் செய்வதற்காக மேற்கண்ட **'குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005'** இயற்றப்பட்டது. இது இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவை 20-1-2006-ஆம் தேதியில் பெற்றது. இச்சட்டம் இந்திய சாட்சியச் சட்டத்தில் பிரிவு 154-இல் மட்டும் கூடுதலாக ஒரு உட்கூறைச் சேர்க்கிறது. அது வருமாறு.

பிரிவு 154-இல் கொண்டு வரப்பட்ட திருத்தம்:[1]

பிரிவு 154-ஆனது **'தரப்பினர் தம் சாட்சியையே கேள்வி கேட்டல்' (Question by party to his own witness)** பற்றிக்கூறுகி றது. அதன்படி, 'எதிர்த்தரப்பினரால் குறுக்கு விசாரணையில் போடப்படலாகும் கேள்விகள் எவற்றையும் சாட்சி ஒருவரை அழைக்கின்றவர் அந்த சாட்சியிடம் போடுவதற்கு, நீதிமன்றம், தன் விருப்பம் போல், அவரை அனுமதிக்கலாம்'

இந்த பிரிவு 154-ஆனது உட்பிரிவு (1) என எண்ணிடப்பட்டு, இதற்கடுத்த (2)-வது உட்பிரிவாக பின்வரும் வகைமுறையை ஒன்றை இத்திருத்தச்சட்டம் சேர்க்கிறது. அது, **'(2) இந்தப்பிரிவில் உள்ள எதுவும் அத்தகு சாட்சியின் சாட்சியத்தின் பகுதி எதையும் சார்ந்திருக்க உட்பிரிவு (1)-இன்படி அவ்வாறு அனுமதிக்கப் பட்ட ஆள் எவரையும் உரிமையற்றவராக்காது.".**

---

1. **Amendment of section 154 of Act 1 of 1872:-** In the Indian Evidence Act, 1872, section 154 shall be numbered as sub-section (1) thereof and after sub-section (1) as so numbered, the following sub-section shall be inserted, namely:—

"(2) Nothing in this section shall disentitle the person so permitted under sub-section (1), to rely on any part of the evidence of such witness"

செய்ய முயற்சிக்கான குற்ற வழக்கீடு ஒன்றில், குற்றவழக்கிட்ட பெண்ணின் குறுக்கு விசாரணையில் அவளது பொதுவான ஒழுக்கங்கெட்ட நடத்தை குறித்த கேள்விகளைப் போடுதல் அனுமதிக்கப்படுதல் ஆகாது.' **(Provided that in a prosecution for rape or attempt to commit rape, it shall not be permissible to put questions in the cross examination of the prosecutrix as to her general immoral character)**

2. பிரிவு 155-இல் கொண்டு வரப்பட்ட திருத்தம்:

பிரிவு 155 'சாட்சியின் நாணயத்தைத் தாக்குதல்' **(Impeaching credit of witness)** பற்றி கூறுகிறது.

இப்பிரிவின் கீழ் வரும் (4)-ஆம் உட்கூறானது, 'வன்புணர்ச்சி அல்லது கற்பழிக்க முயன்றதற்காக ஒருவர் மீது குற்ற வழக்கிட்டிருக்கும் போது, குற்றவழக்கு தொடுத்த பெண் பொதுவாக ஒழுக்கங்கெட்ட நடத்தையுடையவள் என்று காட்டப்படலாம்' ['(4). when a man is prosecuted for rape or an attempt to ravish, it may be shown that the prosecutrix was of generally immoral character'] என்று கூறுகிறது. இது மேற்படி திருத்தச் சட்டத்தால் விடப்பட்டுவிட்டது (omitted).

இந்திய
சாட்சியச் சட்டம், 1872

திருத்தச்சட்டங்களால்
திருத்தப்பட்டவாறு

Indian
Evidence Act, 1872

As amended
by the Amendment Acts

இந்திய சாட்சியச்சட்டத்தில் ஆங்கில சட்டப்பதத்திற்கு இணையான தமிழ்ச் சட்டப்பதங்கள்

இந்திய சாட்சியச்சட்டத்தில் இடம்பெறும் ஆங்கில சட்டப்பதம் ஒன்றுக்கு இணையாக தமிழ் மொழியில் பல சட்டப்பதங்கள் உண்டு. அவற்றை முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொண்டால், இந்நூலை படிக்கும் போது மிகவும் உதவியாக இருக்கும் எனும் எண்ணத்தில் அவை இங்கு கொடுக்கப்பட்டுள்ளன - நூலாசிரியர்.

1.	Evidence	-	சாட்சியம், சான்று.
2.	Witness	-	சாட்சி, சான்றுரையர்.
3.	Fact	-	பொருண்மை, சங்கதி
4.	Fact in issue	-	வழக்கிலுள்ள பொருண்மை, பிரச்சனையிலுள்ள சங்கதி, தீர்வுதரு பொருண்மை
5.	Relevant Fact	-	தொடர்புடைய பொருண்மை, தொடர்புடைய சங்கதி, தீர்வுதவு பொருண்மை
6.	Presumption	-	அனுமானம், துணிபு, ஊகம்.
7.	Proving	-	மெய்ப்பித்தல், நிரூபித்தல்.
8.	Proof	-	சான்றுறுதி, நிரூபணம்.
9.	Burden of Proof	-	மெய்ப்பிக்கும் சுமை, மெய்ப்பிக்கும் பொறுப்பு.

இந்திய சாட்சியச் சட்டம், 1872

(திருத்தச்சட்டங்களால் திருத்தப்பட்டவாறு)

Indian Evidence Act, 1872

[As amended by the Amendment Acts]

பகுதி - I

பொருண்மைகளின் தொடர்புடைமை

[Relevancy of Facts]

1 அறிமுகம் [Introduction]

பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது

அறிமுகவுரை:

சட்டங்கள் பலவற்றின் கீழ் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப் படுகின்றன. ஆனால் தக்க ஆதாரங்களை வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தின் முன்னர் சமர்ப்பித்தால்தான் அவ்வழக்குகளில் வெற்றி கிடைக்கின்றது. போதிய ஆதாரங்கள் இல்லாவிட்டால் வழக்கு தள்ளுபடி யாகிவிடும். அத்தகு ஆதாரங்கள்தாம் '**சாட்சியம்**' ஆகின்றது. எனவே எத்தனை சட்டங்களின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டாலும் 'சாட்சியம்' இல்லாமல் அவ்வழக்கை சரிவர தீர்மானிக்க இயலாது. அத்தகு சாட்சியங்கள் எத்தனை வகைப்படும், அவற்றை எவ்வாறு நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிப்பது, வழக்கின் பொருண்மைகளுக்கு அவற்றை எவ்வாறு தொடர்புபடுத்துவது ஆகிய வினாக்களுக்கு விடை பகரும் முகமாக இயற்றப்பட்டதே '**சாட்சியச் சட்டமாகும்**'

பல சட்டங்களின் கீழும் வழக்கு நடத்துவதற்கு பேருதவியாக 'சாட்சியச் சட்டம்' இருப்பதால், இதை சட்டங்களின் '**இதயம்**' எனக் கூறலாம். பிற

சட்டங்களெல்லாம் **'உடல்'** என்றால் 'சாட்சியச் சட்டத்தை' அவற்றிற்கு வாழ்வு கொடுக்கும் **'உயிர்'** எனக்கூறலாம். எனவே சட்டங்களின் இரு பெரும் பிரிவான, உரிமையியல் (Civil) மற்றும் குற்றவியல் (Criminal) சட்டங்களைச் சார்ந்த வழக்குகளில் ஏற்படும் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, இச்சட்டமே அடிப்படையாக உள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்தியாவில் சாட்சியச்சட்டம் - தோற்றமும் வளர்ச்சியும்:

ஒருவருக்கு, வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தில் உரிமை இருக்கிறதா இல்லையா என்பதையோ அல்லது ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பதையோ அறிவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் பகுத்தறிவுக்கு ஒவ்வாத பல முறைகள் பயன்படுத்தப்பட்டன. **"நிரபராதிக்கு என்றுமே தெய்வமே துணை நிற்கும்"** என்ற கோட்பாட்டின்படி, கடுஞ்சோதனைகள் மற்றும் சண்டைகள் வாயிலாகவும் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. அவற்றில் வெற்றி பெற்றவன் நிரபராதி எனப்பட்டான். அதாவது அவன் நிரபராதி என்பதால்தான், அவனுக்கு தெய்வம் துணை புரிந்ததாக நம்பப்பட்டது. மேலும் வழக்காடுவோரை போர்க்களத்தில் போரிடுமாறு செய்து வெற்றி பெற்றவன் நிரபராதி எனப்பட்டான். இம்முறை 1817-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஒழிக்கப்பட்டது. மற்றொரு புறம் பழுக்கக் காய்ச்சிய இரும்பினைப் பற்றும்படியாக செய்தல் அல்லது கொதிக்கும் நீரில் தள்ளுதல் போன்ற கொடூரமான முறைகளும் இருந்தன. குற்றமற்ற நிரபராதிக்கு இவற்றினால் தீமைகள் ஏற்படாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இக்கொடிய சோதனை முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

இந்திய சாட்சியச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னை ஆகிய பெருநகரங்களில் முறையான சாட்சியச் சட்டம் ஏதும் இல்லை. பண்டைய இந்துச் சட்டத்தில் குறிப்பாக இசுலாமியர்களின் சட்டத்தில் சாட்சியச் சட்டம் தொடர்பான சில விதிகள் இருந்தன. ஆனால் அவை சீரான விதத்தில் இல்லை. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமானவுடன், அரசருடைய பட்டயப் பத்திரத்தினால் ஏற்படுத் தப்பட்ட நீதிமன்றங்கள் (Chartered Courts), இங்கிலாந்து சாட்சியச் சட்ட விதிகளின்படி செயல்பட்டன. பின்னர் 1726-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பட்டயப்பத்திரத்தினால், மேற்படி நகரங்களில் இங்கிலாந்தின் பொதுச்சட்டமும், எழுத்துருவிலான சட்டங்களும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால் இச்சட்டங்கள் மேற்படி நகரங்களில் மட்டுமே அமல் படுத்தப்பட்டன. அவற்றுக்கு அடுத்தும், அப்பாலும் உள்ள வெளியூர்களில் (Mofussil Districts) அச்சட்டங்கள் புகுத்தப்படவில்லை. மேலும் அச்சட்டங்கள் தெளிவற்றதாகவும், உறுதியற்றதாகவும் இருந்தன.

எனவே, 1835-க்கும், 1855-க்கும் இடைப்பட்ட காலத்தில், சாட்சியச் சட்டத்தின் மேம்பாட்டிற்காக சில சட்டங்கள் தொடர்ச்சியாக இயற்றப் பட்டன. 1837-ல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக, ஒருமுறை குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட நபர், பின் என்றும்

சாட்சியம் கொடுக்க முடியாது என்று இருந்த விதியானது நீக்கப்பட்டது. 1852-இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக, உரிமையியல் பிரச்சனை சார்ந்து வழக்காடுகின்றவர்கள், தத்தம் சார்பில் சாட்சி கூறுபவர்களாக இருக்கலாம் என்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு நிலவிய வழக்கத்தின் படி, வழக்குத் தரப்பினர் ஒருவர், இயல்பாகவே தமக்குத்தான் சாதகமாகப் பேசுவார் என்றும், ஆகவே அவர் ஒரு உண்மையான சான்றுரைப்பவராக இருக்க இயலாது என்றும், எனவே அவர் சாட்சியம் கொடுக்கத் தகுதியற்றவர் என்றும் கருதப்பட்டு வந்தது. இதற்குப் பின் 1855-ஆம் ஆண்டில் சாட்சிய விதிகள் தொடர்பாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இது மற்ற சாட்சிய சட்டங்களைவிட மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஏனெனில், அச் சட்டம் பல சிறப்பம்சங்களுடன் இங்கிலாந்தில் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பலவற்றையும் கொண்டிருந்தது. ஆனால் அது ஓர் முழுமையான சட்டத் தொகுப்பாக அமையவில்லை; அரைகுறைச்சட்டமாக இருந்தது. அதே சமயத்தில், சாட்சியம் அளிப்பது தொடர்பான வழக்காறுகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவி வந்தன. ஆனால் அவையும் சட்ட வலிமையைப் பெற இயலவில்லை. இந்தியாவில் சாட்சியச்சட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒரு திருப்தியற்ற நிலைதான் அன்று நிலவியது. எனவே, முறையாகச் சட்டம் இயற்றுவது அவசியமாயிற்று.

சர் ஜேம்ஸ் ஸ்டீபன்

1868-ஆம் ஆண்டில் ஆளுநர் பேரவையில் உறுப்பினராக இருந்த சர் ஹென்றி மெய்ன் **(Sir Henry Main)** என்பார், இந்தியாவிற்கு பொருந்தும் வண்ணம் சாட்சியச்சட்டமொன்றை எழுதிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் எழுதிக்கொடுத்த வரைவுச்சட்டம் (Draft) இந்தியாவின் சூழ்நிலைகளுக்குப் பொருத்த மற்றதாக, இங்கிலாந்து சாட்சியச் சட்டத்தின் பின்னணியைக் கொண்டதாக இருந்தது. பின்னர் அப்பணியானது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆளுநர் பெருமன்றத்தில் அப்போது சட்ட உறுப்பினராக இருந்த சர் **ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Stephen)** என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது வரைவு ஏற்கப்பட்டு **1872-ஆம் ஆண்டின் 1-வது சட்டமாக இந்திய சாட்சியச் சட்டம்** உருவாயிற்று. இது 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்திய சாட்சியச் சட்டத்தின் அமைப்பு (Constitution of the Act):

2019-ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டத்தின்படி (The Jammu and Kashmir Reorganisation Act, 2019) இந்திய சாட்சிய சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும் **(பிரிவு 1)**. இச்சட்டத்தில் மொத்தம் 167 சட்டப்பிரிவுகள் உள்ளன. அவை அடுத்து வரும் பக்கத்தில் கண்டுள்ளவாறு முப்பெரும் பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ளன.

பகுதி I

இது **பொருண்மைகளின் தொடர்புடைமை (Relevancy of Facts)** பற்றி கூறுகிறது. இதில் அத்தியாயங்கள் I & II அடங்கியுள்ளன.

அத்தியாயம் I - சில பதங்களுக்கு வரையறை (Interpretation-clause) கூறுகிறது. **(பிரிவுகள் 1 - 4)**

அத்தியாயம் II - பொருண்மைகளின் தொடர்புடைமை (Of the Relevancy of Facts) பற்றிக் கூறுகின்றது. **(பிரிவுகள் 4 - 55)**

பகுதி II

இது **மெய்ப்பித்தல் பற்றி (On Proof)** கூறுகிறது. இதில் **III, IV, V** மற்றும் VI-வது அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

அத்தியாயம் III - மெய்ப்பிக்கப்படத் தேவையில்லா பொருண்மைகளைப் (Facts which need not be proved) பற்றிக் கூறுகிறது. **(பிரிவுகள் 56-58)**

அத்தியாயம் IV - வாய்மொழிச் சாட்சியம் பற்றி (Of Oral Evidence) கூறுகிறது. **(பிரிவுகள் 59-60)**

அத்தியாயம் V - ஆவணச்சாட்சியம் பற்றி (Of Documentary Evidence) கூறுகிறது. **(பிரிவுகள் 61-90)**

அத்தியாயம் VI - ஆவணச்சாட்சியத்தால் வாய்மொழிச் சாட்சியம் விலக்கப்படுவது பற்றி (Of the Exclusion of Oral by Documentary Evidence) கூறுகிறது. **(பிரிவுகள் 91-100)**

பகுதி III

இது **சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும் (Production and Effect of Evidence)** பற்றி கூறுகிறது. இதில் **VII, VIII, IX, X** மற்றும் **XI**-வது அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

அத்தியாயம் VII - மெய்ப்பிக்கும் சுமை பற்றியது (Of the Burden of Proof) **(பிரிவுகள் 101-114)**

அத்தியாயம் VIII - முரண்தடை (Estoppel) **(பிரிவுகள் 115-117)**

அத்தியாயம் IX - சாட்சிகளைப் பற்றியது (Of Witnesses) **(பிரிவுகள் 118-134)**

அத்தியாயம் X - சாட்சிகளை விசாரிப்பது பற்றியது (Of the Examination of Witnesses). **(பிரிவுகள் 135-166)**

அத்தியாயம் XI - சாட்சியத்தை முறையற்ற வகையில் அனுமதித்தலும் நிராகரித்தலும் பற்றியது (Of Improper Admission and Rejection of Evidence). **(பிரிவு 167)**

2 சாட்சியச்சட்டம் – வரையறை [Law of Evidence - Definition]

1. Define the law of evidence and state the underlying principles of the Law of Evidence. (சாட்சிய சட்டத்தை வரையறுத்து அதன் அடிப் படை கோட்பாடுகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Define the Law of Evidence and briefly discuss the importance of the study of Law of Evidence. Are the rules of evidence necessary? (சாட்சியச் சட்டத்தை வரையறுத்து சாட்சியச் சட்டத்தை படிப்பதின் முக்கியத் துவத்தை சுருக்கமாக விவாதி. சாட்சிய விதிகள் தேவைதானா?)

(அல்லது)

What do you mean by the Law of Evidence? State the functions of the Law of Evidence in Judicial Inquiries? What are the Cardinal rules of the Law of Evidence? (சாட்சிய சட்டம் என்றால் என்ன? நீதிமன்ற விசாரணையில் சாட்சிய சட்டத்தின் பணிகளைக் குறிப்பிடுக. சாட்சிய சட்டத்தின் முல விதிகள் யாவை?)

முன்னுரை:

'சாட்சியம்' **(Evidence)** என்ற சொல்லானது **'Evidentia'** என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'Evidentia' என்றால், தெளிவு படுத்துதல்; அதாவது, ஒளிவு மறைவற்று, வெளிப்படையாக தெளிவு படுத்துதல் **(the state of being evident, i.e. plain, apparent, clear)** என்று பொருளாகும். மேலும் 'Evidens evidere' என்ற இலத்தீன் சொற்றொடரானது, தெளிவாக காண்பிக்க, ஒளிவு மறைவில்லாமலாக்க, உறுதிபடுத்த அல்லது நிரூபிக்க (to show clearly, to make plain, certain or to prove) என்று பொருள் படும்.

சாட்சிய சட்டம் - வரையறை:

தலைமை நீதிபதி மோனிர் **(M.Monir, C.J.)** கூறும் வரையறை:

"நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்கின் பொருண்மை பற்றிய குழப்பமான விடைகளுக்கு விடையளித்து உறுதிபடுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்ட விதிகளின் அமைப்பே சாட்சிய சட்டமாகும்."[1]

1. "The Law of Evidence is a system of rules for ascertaining controverted questions of fact in judicial enquiries".

சர் ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Stephen) கூறும் வரையறை:

சர் ஜேம்ஸ் ஸ்டீபனின் கூற்றுப்படி, "சாட்சிய சட்டமென்பது நடைமுறைச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். அது வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் உரிமைகள் (rights) மற்றும் கடப்பாடுகளை (liabilities) நிர்ணயம் செய்து உறுதிபடுத்துவதற்காக பின்வருவனவற்றை தீர்மானிக்கிறது. அவை,

(i) வழக்குத் தரப்பினர்கள், எப்படிப்பட்ட பொருண்மைகளை மெய்ப்பிக்க வேண்டும் என்பதையும் மற்றும் அவர்கள் எப்படிப் பட்ட பொருண்மைகளை மெய்ப்பிக்கத் தேவையில்லை என்பதையும்,

(ii) மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மைகளுக்காக எப்படிப் பட்ட சாட்சியம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும், மற்றும்

(iii) அப்படிப்பட்ட சாட்சியம் யாரால், எப்படிப்பட்ட முறையில் அளிக்கப்பட வேண்டும் என்பதையும், சாட்சிய சட்டம் தீர்மானிக்கிறது."

சாட்சிய சட்டத்தை படிப்பதன் முக்கியத்துவம் (Importance):

சட்டங்கள் பல உள்ளன. அவற்றின் கீழ் வழக்குகள் பல தொடுக்கப் படுகின்றன. அவற்றின் வெற்றி, தோல்வியானது, நீதிமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும் ஆதாரங்களை அதாவது சாட்சியங்களைப் பொறுத்தே அமைகின் றன. அத்தகு சாட்சியங்களை எவ்வாறு சமர்ப்பிப்பது, எத்தகு சாட்சியங்கள் ஒரு பொருண்மையை மெய்ப்பிக்க உதவும் என்பனவற்றிற்கு விளக்கம் தரும் விதிகள்தாம் சாட்சியச் சட்டமாகும். இவ்வாறு சட்டங்களில் இரு பெரும் பிரிவான உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து தக்க நீதி நல்கிட சாட்சிய சட்டமே உதவி புரிகின்றது. இச்சாட்சிய சட்டம் இல்லாவிட்டால், பிற சட்டங்களின் கீழ் வழக்கிட்டு பயனில்லை; நிவாரணம் பெறுவதில் குழப்பம் ஏற்படும். எனவே சட்டம் படிப்போர் சாட்சிய சட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து படித்தல் வேண்டும். (அடுத்து வரும் தலைப்பின் கீழ் உள்ளவற்றையும் சேர்த்துப் படிக்கவும்).

சாட்சிய விதிகள் தேவைதானா?

நீதிமன்றத்தின் நோக்கம் பொருண்மை ஒன்று இருப்பதையோ அல்லது இல்லாமையையோ கண்டறிவதாகும். அதற்கு, அப்பொருண்மையைப் பற்றி எந்த அளவுக்கு நீதிமன்றம் விசாரணை செய்கிறதோ, அந்த அளவுக்கு சரியான முடிவுக்கு வருவதற்கு மிகுதியான வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்பட்டது. அதாவது சம்பந்தப்பட்ட வழக்கில், ஒரு பொருண்மையைப் பற்றிக் கூறும் ஒவ்வொருவரையும் நீதிமன்றம் விசாரித்தல் வேண்டும். சில செயல்களை நீதிமன்றம் ஒதுக்குமானால், நியாயமானதொரு முடிவுக்கு வர

இயலாமல் போய்விடும். எனவே நீதிமன்றத்தின் முன் கொண்டு வர வேண்டிய சாட்சியங்களின் மீது வரம்புகளை, நிபந்தனைகளை விதிக்கின்ற விதிகள் அனைத்துமே நீதிக்கு ஊறு விளைவிப்பதாகும், என்று சொல்லப்பட்டது.

ஆனால், சாட்சிய விதிகளானது சாட்சியங்களை சமர்ப்பிப்பது, அதன் மூலம் பொருண்மைகளை மெய்ப்பிப்பது ஆகியவற்றிற்கு சில வரம்புகளை விதித்து நடைமுறைப்படுத்துகின்றது. இவ்வாறு வரம்புகளை விதிப்பதால் சாட்சிய விதிகளே தேவையில்லை எனக் கருதப்பட்டது. ஆனால் இது ஆரோக்கியமானதல்ல. சாட்சிய சட்ட விதிகள் இல்லையென்றால் பல குழப்பங்கள் எழும்.

முதலாவதாக, வழக்குகளை ஒரு குறித்த காலத்தில் தீர்க்க முடியாது. "காலம் தாழ்த்தி வழங்கப்படும் நீதி, மறுக்கப்படும் நீதிக்குச் சமம்" என்று ஒரு சட்ட முதுமொழியே உண்டு. எளிய வழக்குகளைக்கூட தீர்ப்பதற்கு ஆண்டுக் கணக்கில் ஆகக்கூடும். **இரண்டாவதாக,** வழக்கு விசாரணைகளின் பொழுது, எப்பொழுது வேண்டுமானாலும் சாட்சியங்களை சமர்ப்பிக்கலாம் என்ற நிலை தோன்றும். இதனால் வழக்கு விசாரணையானது முடிவில்லாது நீண்டு கொண்டே போகும். தரப்பினர்களுக்கு தேவையில்லாத அலைக் கழிப்புகளும், செலவுகளும் ஏற்படலாம். மூன்றாவதாக அதிகப்படியான மற்றும் தெளிவில் லாத சாட்சியங்கள் நீதி வழங்கும் நீதிபதிகளை குழப்பக்கூடும். இதனால் அவர்கள் சரியான முடிவிற்கு வர இயலாத நிலை ஏற்படும்.

எனவே, மேற்கண்ட குழப்பங்கள் ஏற்படாமலிருக்க, சாட்சியங்களை யாரால், என்று, எப்பொழுது சமர்ப்பிப்பது, பொருண்மைகளை எவ்வாறு அதன்மூலம் மெய்ப்பிப்பது என்று வரம்புகளை விதித்து முறைப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. அதற்கு சாட்சிய விதிகள் என்றுமே நமக்குத் தேவை.

நீதிமன்ற விசாரணையில் சாட்சிய சட்டத்தின் பணி

சாட்சிய சட்டமானது நீதிமன்ற நடைமுறை சார்ந்த சட்டமாகும் (Procedural Law). காரண காரியங்களை (reasoning) அறிந்து கொள்ள எவ்வாறு தர்க்கரீதியான (logic) அறிவு உதவுகின்றதோ, அதேபோல சட்டத் தொழிலி லும், நீதித்துறையிலும் பொருண்மைகளின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள சாட்சிய சட்டம் உதவுகின்றது.

சாட்சிய சட்டம் இல்லாவிடில் நீதிமன்ற விசாரணைகளுக்கு முடிவே இருக்காது. உரிமையியல் வழக்குகளில் வாதி பலவிதமான இன்னல்களுக்கும், அலைக்கழிப்புகளுக்கும் ஆளாக நேரிடும். குற்றவியல் வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர் பலவிதமான துன்பங்களுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாக வேண்டிவரும். இவற்றைத் தடுப்பதற்கு சாட்சிய சட்டமே உதவி புரிகின்றது. இச்சாட்சியச் சட்டத்தின் துணை கொண்டே நீதிமன்றம், வழக்கின் தரப்பினர்கள் கூறும் பொருண்மைகளில் உண்மை உள்ளதா அல்லது உண்மை இருந்திருக்குமா அல்லது குறிப்பிட்ட சம்பவம் குறிப்பிட்ட

நபரினால் அல்லது செயலினால் நடந்திருக்குமா என்பதை அறிந்து வழக்கின் உண்மை நிலையை உணர முடியும். தக்க தீர்ப்பையும் வழங்க முடியும்.

சாட்சிய சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகள் [The underlying Principles of Law of Evidence] (அல்லது) சாட்சிய சட்டத்தின் மூல விதிகள் [The Cardinal Rules of the law of Evidence) (அல்லது) சாட்சியத்தின் பொன் விதிகள் [The Golden Rules of Evidence[1]]:

1. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியமானது வழக்கெழு வினாவிற்கு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் (Evidence must be confined to the matters in issue);
2. கேள்வி நிலைச் சாட்சியம்[2] அனுமதிக்கப்படமாட்டாது (Hearsay Evidence must not be admitted);
3. அனைத்து வழக்குகளிலும் மிகச் சிறந்த சாட்சியமே வழங்கப்பட வேண்டும் (Best Evidence must be given in all cases).

மேற்கண்ட மூன்று விதிகளுமே, சாட்சிய சட்டத்தைப் பொறுத்தவரை மிகமிக முக்கியமான விதிகளாகும். அவற்றில் முதலிரண்டு விதிகள் மிக முக்கிய மான விதிகள் என்றாலும், அவற்றிற்கு ஒரு படி மேலாக முக்கியத்துவம் வாய்ந் ததாக "**மிகச் சிறந்த சாட்சிய விதி**" **(Best Evidence Rule)** அமைந்துள்ளது. அவ்விதியில் உள்ளடங்கிய கொள்கைகளை பின்வருமாறு காண்போமா?

மிகச் சிறந்த சாட்சிய விதி - விளக்கமும் கொள்கைகளும்:

வழக்கிடும் தரப்பினர், தனது வழக்கின் பொருண்மைகளை நிரூபிக்க, தன்னிடம் உள்ள சாட்சியங்களில் மிகவும் சிறந்த (அதாவது மிகவும் நம்பகத் தன்மையுள்ள மற்றும் வலிமை வாய்ந்த) சாட்சியத்தையே சமர்ப்பிக்க வேண்டும் என்பதே, "மிகச் சிறந்த சாட்சிய விதி" எனப்படும். இச்சாட்சியமே '**தலைநிலை சாட்சியம்**' ஆகிறது **(Primary Evidence).**

இந்த தலைநிலை சாட்சியம் ஒருவரது வசம் இல்லாது போனால்தான் மற்றும் அவ்வாறு இல்லாமல் போனதற்கு சட்டப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் உள்ள பொழுதுதான் **இரண்டாம் நிலை அல்லது சார்நிலை சாட்சியத்தை (Secondary Evidence)** சமர்ப்பிக்க முடியும்.

எடுத்துக்காட்டாக, ஒரு ஆவணத்தின் உள்ளடக்கத்தை (Contents of a document) நிரூபிக்க, அதன் அசலை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது மிகச்சிறந்த சாட்சியமாகும். இது தலை நிலை சாட்சியம் எனப்படுகிறது

1. "சான்றுச்சட்ட 'பொன் விதிகளை' விவரிக்கவும்" (Explain "The Golden Rules of Evidence") என்றொரு வினா தேர்வில் கேட்கப்படுகிறதென்பதை கவனத்தில் கொள்க.
2. பிறர் கூறியதைக் கேள்விப்பட்டு, அதை சாட்சிகள் தம் சாட்சியத்தில் உரைப்பது. இதை செவிவழிச்சாட்சியம் என்றும் கூறுவர்.

ஒருவேளை அந்த அசல் ஆவணம் வங்கியில் அடைமானக் கடன் பெறும் பொருட்டு ஈடாக வைத்திருக்கப்பட்டால், அதன் பதிவு நகலை (Registration Copy) ஒப்படைக்கலாம். இங்கு வங்கியில் கடன் பெறும் பொருட்டு, அந்த அசல் ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத் தக்கதொரு காரணமாகும். எனவே, மிகச் சிறந்த சாட்சியமான அசல் ஆவணத்தை சமர்ப்பிப்பதை மன்னித்து, அதன் நகலை சார்நிலை சாட்சியமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், காரணமில்லாமல் வேண்டுமென்றே அசலை தன் வசமே வைத்துக் கொண்டு, நகலை ஒப்படைப்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதில்லை. அது வழக்குப் பொருண்மைகளின் நம்பகத் தன்மையைக் குலைத்துவிடும். இதனால் வழக்கு தோற்றுவிடும் அபாயமும் ஏற்படுகிறது. எனவே, வழக்கில் வெற்றி பெற எப்பொழுதும், மிகச் சிறந்த சாட்சியத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (அது, எப்பொழுதும் தலை நிலை சாட்சியமாகவே இருக்கும்.)

Lucas v. Williams[1] எனும் முந்தய வழக்கொன்றில் **நீதிப் பெருமகனார் Esher** அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அஃதாவது, "தலை நிலைச் சாட்சியமென்பது, சட்டம் முதலில் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சாட்சியமாகும்; சார்நிலை சாட்சியமென்பது, சிறந்த சாட்சியம் கிடைத்திட்டாத பொழுது, அதற்குண்டான சரியான காரணம் கொடுக்கும் பொழுது அளிக்கப்படக் கூடிய சாட்சியமாகும்" என்று கூறுகிறார்.

மேற்கண்ட "மிகச் சிறந்த சாட்சிய விதி" கொள்கைகள் யாவும் இந்திய சாட்சிய சட்டத்தின் V-வது அத்தியாயத்தின் 61, 62, 63, 65, 74, 76 ஆகிய பிரிவுகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன. (அப்பிரிவுகளை விரிவாக இந்நூலின் அத்தியாயம் 26-ல் காண்க.)

2. What principles underlie the Best Evidence Rule? (மிகச் சிறந்த சாட்சிய விதி என்பதனின் உள்ளடங்கிய கொள்கைகளைக் கூறுக.)

[முந்தைய வினாவின் விடையில் இறுதிப் பகுதியில் வரும் "சாட்சிய சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்" என்ற தலைப்பிலிருந்து அவ்விடையின் இறுதி வரை படித்துக் கொள்க.]

3. Explain the difference between Substantive and Adjective Laws. Is it correct to say that the Law of Evidence is Adjective? (நிலைமுறைச் சட்டத்திற்கும் நடைமுறைச் சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக. சாட்சிய சட்டம் ஒரு நடைமுறைச் சட்டமே என்பது சரியா?)

1. 1862 2 QB 116

முன்னுரை :

சட்டத்தினை நிலைமுறைச் சட்டம் (Substantive Law) என்றும், நடைமுறைச் சட்டம் (Procedural Law) இருவகையாகப் பிரிக்கலாம். நடைமுறைச் சட்டத்திற்கு 'Adjective Law' என்றும் ஆங்கிலத்தில் அழைப்பர். மேற்படி இரண்டு முறை சட்டங்களும் இரண்டு வேறுபட்ட செயல் பாட்டினைக் கொண்டதாகும். அவ்வேறுபாடுகள் வருமாறு.

நிலைமுறை, நடைமுறைச் சட்டம் - வேறுபாடு:

நிலைமுறைச் சட்டம் என்பது, நபர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை எடுத்துச் சொல்லி, அவர்கள் எத்தருணங்களில் தங்கள் செயல்களினால் பொறுப்புக்குள்ளாகிறார்கள் என்பதை விளக்குகிறது. **உதாரணமாக,** ஒப்பந்தச் சட்டம், தண்டனைச் சட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

நடைமுறைச் சட்டம் என்பது வழக்கில் ஈடுபடும் நபர்களின் உரிமைகள், கடமைகள் மற்றம் பொறுப்புகளை எங்ஙனம் தீர்மானிப்பது என்பது குறித்து நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகளைக் கூறும் சட்டமாகும். உதாரணமாக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் (Civil Procedure Code) - இது உரிமையியல் வழக்குகளில் நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் கூறி அதனைக் கட்டுப்படுத்துகிறது. இவ்வாறே குற்றவியல் வழக்குகளில், குற்றவியல் நடைமுறைச் சட்டமானது (Criminal Procedure Code) குற்றவியல் நீதிமன்றங்களை வழிநடத்திச் செல்கின்றது.

இந்தவகையில் சாட்சியச் சட்டமும் ஒரு நடைமுறைச் சட்டமே (Procedural Law) ஆகும். ஏனெனில் சாட்சிகள் கூறும் சாட்சியங்களின் தன்மை என்ன, தகுதி என்ன, மேலும் அச்சாட்சியங்கள் தொடர் புடையவையா, தொடர்பற்றவையா என்பவை தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது; அதற்குண்டான விதிமுறைகளை சாட்சியச் சட்டம் நீதிமன்றங்களுக்கு எடுத்துக் கூறுகிறது. நீதிமன்றங்கள் அச்சட்டவிதிகளை பின்பற்றி வழக்குகளை தீர்மானிக்க வேண்டும். ஆனால் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் அதாவது தொடர்புடைமை மற்றும் துணிபுகள் (Presumptions) குறித்த சாட்சிய சட்ட விதிகளானது நிலைமுறைச் சட்டத்தின் ஒரு பகுதியாக நின்று செயல்பட வேண்டியுள்ளது. எனவே சாட்சிய சட்டத்தை முழுக்க முழுக்க ஒரு நடைமுறைச் சட்டமே எனக் கூற இயலாது. இருந்த போதிலும் பொதுவாக கூறவேண்டுமெனில் சாட்சிய சட்டம் ஒரு நடைமுறைச் சட்டமேயாகும்.

முடிவுரை:

ஒரு நாட்டில் வழக்கு நடைபெறும் பொழுது, அந்நாட்டு சட்ட

நடைமுறை விதிகளை (Procedural Laws) மட்டுமே நீதிமன்றம் கடைப்பிடித்து வழக்குகளைத் தீர்மானிக்க வேண்டும். முன்கூறியதுபோல் சாட்சியச் சட்டமானது ஒரு நடைமுறைச் சட்டமாகும். எனவே, வழக்கு எந்நாட்டில் நடக்கிறதோ, அந்நாட்டில் நிலவும் சாட்சியச் சட்டத்தை மட்டுமே நீதிமன்றம் கருத்தில் கொண்டு அவ்வழக்கில் தீர்ப்பளிக்கும். எனவே சாட்சியச் சட்டமானது **உள்நாட்டு சட்டமாகவும் (Lex Fori)** செயல்படுகின்றது எனக் கூறலாம். (மேலும் விரிவாக அடுத்த வினாவில் காண்க.)

4. "The Law of evidence is the '*lex fori*' which governs the court" - Comment. ("சாட்சியச் சட்டம் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் ஓர் 'உள்நாட்டுச் சட்டமே' ஆகும்" - விமர்சிக்க.)

(அல்லது)

Is the Indian Evidence Act *Lex Fori*? (இந்திய சாட்சியச் சட்டம் இந்நாட்டுச் சட்டம் மட்டுமா?)

(அல்லது)

Discuss briefly that the Law of Evidence is *Lex Fori*. (சாட்சியச் சட்டம் வழக்காடும் நாட்டின் சட்டம் ஆகும் என்பதை சுருக்கமாக விவாதி.)

முன்னுரை:

Lex Fori என்பது, எந்த இடத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதோ, அவ்விடத்தின் சட்டம் (The law of the place where an action is instituted) எனக் கூறலாம். அதாவது உள்நாட்டுச் சட்டம் எனச் சுருங்கக் கூறலாம்.

"சாட்சியச் சட்டம் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் ஓர் உள்நாட்டுச் சட்டமே" - விளக்கம்:

மேற்கண்ட கூற்றை **Bain v. White Haven and Furness Junction Railway Company**[1] என்ற வழக்கில் **புரோஹம் நீதிப்பிரபு (Lord Brougham)** அவர்கள் கூறினார். அதன்படி, "வழக்கொன்றில் சான்றுரைக்க வந்திருக்கும் சாட்சி தகுதியுடையவர்தானா, ஒரு குறிப்பிட்ட விஷயம் எழுத்தால் மெய்ப்பிக்கப்பட வேண்டுமா; குறிப்பிட்ட சாட்சியம் ஒரு குறிப்பிட்ட பொருண்மையை நிரூபிக்கிறதா; என்ற வினாக்கள் யாவும் அவ்வழக்கிற்கான வழக்கெழு வினா எந்த நாட்டில் எழுந்ததோ அல்லது அவ்வழக்கில் வழங்கப்படும் நிவாரணம் எந்நாட்டில் வலியுறுத்தப்பட முடியுமோ அந்நாட்டுச் சட்டத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

புரோஹம் நீதிப்பிரபு கூறிய மேற்படி கோட்பாடானது, சாட்சிய சட்டத்தினை வழிநடத்திச் செல்லும் ஒரு அடிப்படை கூறாக உள்ளது. சாட்சிய சட்டமானது நடைமுறைச் சட்டத்தின் ஒரு பகுதி என நாம் சென்ற

1. (1850) 3 H.C.C. 1 at p. 19

வினாவிலேயே கண்டோம். எனவே, எந்நாட்டில் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதோ அந்நாட்டு சாட்சிய சட்டமே அவ்வழக்கில் நீதிமன்றத்தால் பின்பற்றப்படுமே தவிர, வழக்கிற்கான மூல காரணம் எழுந்த நாட்டின் சட்டத்தால் அல்ல.

உதாரணமாக, ஒப்பந்தம் தொடர்பான வழக்கொன்றில், அவ்வழக்கு நடவடிக்கைகள் எந்த நாட்டில் எழுந்துள்ளனவோ (Where the proceedings have taken place) அந்நாட்டின் சாட்சியச் சட்டத்தால்தான் அவ்வழக்கு தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர, அவ்வொப்பந்தத்தை எந்த நாட்டில் தரப்பினர்கள் செய்து கொண்டுள்ளனரோ அந்நாட்டின் சாட்சியச் சட்டத்தால் அல்ல (not by the country where the contract was entered upon by the parties).

மேற்படி கோட்பாடானது, சட்டமானது எவ்வித இடைஞ்சலும் இல்லாமல், வசதியாக செயல்படும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. சாட்சியச் சட்டமானது எந்நாட்டில் வழக்கு நடக்கின்றதோ, அந்நாட்டுச் சட்டத்தால் வழி நடத்தப்பட வேண்டிய ஒரு நடைமுறைச் சட்டம் ஆகும். அக்கோட்பாட்டிற்கு முரணாக நடந்தால், அனாவசியமான குழப்பங்களும் அதிகாரவரம்பு மீறலும் ஏற்படும்.

எடுத்துக்காட்டாக, இங்கிலாந்திலோ அல்லது பிரான்சிலோ எழுந்த வழக்கின் மூல காரணத்திற்கு, இந்தியாவில் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டால், இந்திய நாட்டு சாட்சியச் சட்டந்தான் நீதிமன்றத்தால் பின்பற்றப்படுமே தவிர, இங்கிலாந்து அல்லது பிரான்சு நாட்டுச் சட்டம் அல்ல.

இந்திய சாட்சியச் சட்டம் இந்நாட்டு சட்டம் மட்டுமா? (Is the Indian Evidence Act *Lex Fori*?)

இந்தியச் சாட்சியச் சட்டம் இந்நாட்டு சட்டம் மட்டுமேயாகும். அதாவது இந்தியாவிற்கு மட்டுமே பொருந்தக்கூடிய உள்நாட்டுச் சட்டமாகும். அதில் எள்ளளவும் அய்யமில்லை. பொதுவாக சாட்சியச் சட்டமே ஒரு உள்நாட்டுச் சட்டம்தான் என்பதை நாம் மேற்சென்ற பத்திகளில் கண்டுள்ளோம்.

இந்திய சாட்சியச் சட்டமானது இந்திய எல்லைக்குட்பட்ட எல்லோரையும் கட்டுப்படுத்தும் ஓர் பொதுவான உள்நாட்டுச் சட்டமாகும். இந்திய எல்லை என்று கூறும்பொழுது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக என்று பொருள் கொள்ள வேண்டும். மேலும் இது ஒரு இனமுறைச் சட்டமும் (Personal Law) அல்ல. இந்திய எல்லையில் வாழும் அனைத்து மதத்தவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

மேலும் ஒரு அயல்நாட்டுக் குடிமகனையும், இச்சட்டம் நம் நாட்டின் எல்லைக்குள் அவர் இருக்கும் வரை அவரையும் கட்டுப்படுத்தும்.

அதாவது வேற்று நாட்டுக் குடிமகன் ஒருவன் இந்திய எல்லையில் வந்த பின், ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பாரேயானால், அவருக்கு இந்திய சாட்சிய சட்டமே பொருந்தும். அவர் தனது வழக்கில் தன் நாட்டுச் சட்டத்தை கடைபிடிக்கும்படி கூற முடியாது. பின்வரும் வழக்கு இதை விளக்கும்.

Mobark Ali Ahmed v. State of Bombay[1]

மேற்படி வழக்கில், குற்றவாளியானவர் கராச்சியில் இருந்து கடிதம் மூலமாகவும், தந்தி மூலமாகவும், தொலைபேசி மூலமாவும் பம்பாயில் இருந்த வியாபாரியிடம் பொய்யான செய்திகளைக் கூறி அவ்வியாபாரியின் சொத்து இழப்பிற்கும், அவர் பெரும் நஷ்டம் அடைவதற்கும் காரணமாக இருந்தார். இந்திய நாடு அக்குற்றவாளி மீது வழக்கு தொடர்ந்தது. இந்திய நீதிமன்றத்தால் அவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. இங்கு அக்குற்றவாளி வெளிநாட்டவனாக இருந்தாலும் வழக்கானது இந்திய நாட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டதால், மேற்படி வழக்கில் இந்திய சாட்சிய சட்டமே பின்பற்றப்பட்டது.

முடிவுரை:

நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெறும்பொழுது அவ்வழக்கில் கூறப்படும் பொருண்மைகளையோ அல்லது தொடர்புள்ள பொருண்மைகளையோ மெய்ப்பிப்பதற்கும், சாட்சியம் தொடர்பான இதர வினாக்களுக்கும் அந்நீதிமன்றம் இந்திய நாட்டின் நீதிமன்றமாய் இருந்தால் இந்திய சாட்சிய சட்டமும், அதுவே பிரான்சு நாட்டு நீதிமன்றமாய் இருந்தால் பிரான்சு சாட்சிய சட்டமுமே பொருந்தும். எனவே சாட்சிய சட்டமென்பது ஒரு உள்நாட்டு சட்டமே என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

- o -

1. AIR 1957 S.C. 857

3 சாட்சியம் - வரையறை [Evidence - Definition]

5. What is Evidence? (சாட்சியம் என்றால் என்ன?)

சாட்சியம் - வரையறை (Definition):

அறிஞர் ஸ்டீபன் (Stephen) கூறும் வரையறை:

சாட்சியமென்பது நீதிமன்றத்தின் முன் கொடுக்கப்படும் வாக்குமூலங்கள் அல்லது சமர்பிக்கப்படும் ஆவணங்கள்,[1] என ஸ்டீபன் வரையறுக்கிறார்.

அறிஞர்கள் பெந்தம் (Bentham) மற்றும் பெஸ்ட் (Best) கூறும் வரையறை:

வழக்கொன்றில் வேறு சில பொருண்மைகள் உள்ளன அல்லது அத்தகு பொருண்மைகள் இல்லை என்பது குறித்து ஒரு ஒத்துணர்வை மனதில் ஏற்படுத்தக்கூடிய பொருண்மைகள் அனைத்துமே சாட்சியங்கள், என மேற்படி அறிஞர்கள் கூறுகின்றனர்.[2]

டெய்லர் (Taylor) கூறும் வரையறை:

பொருண்மை ஒன்றினை மெய்ப்பிக்க அல்லது பொய்ப்பிக்க உதவும் அனைத்த சட்டமுறைப்படியான வழிகளும் சாட்சியங்களே. இதன்மூலம் நீதிமன்றங்கள் அப்பொருண்மையில் பொதிந்துள்ள உண்மையை கண்டறிகின்றன.[3]

பொதுவாக சாட்சியம் என்றால் என்ன?

ஒரு நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளத் தக்க வாக்குமூலங்களும் (Statements) ஆவணங்களுமே (Documents) சாட்சியம் ஆகும்.

வழக்கின் பொருண்மை பற்றித் தாங்கள் அறிந்தவற்றை சாட்சிகள் நீதிமன்றத்தில் வாய்மொழியாக கொடுக்கும் சாட்சியமே வாக்குமூலங்கள் (Statements) எனப்படுகின்றன. இவ்வகைச் சாட்சியமே வலுவான சாட்சியமாகும். ஏனெனில் இவ்வகைச் சாட்சியத்தை நீதிமன்றத்தில் முதல் விசாரணை (Examination - in - Chief), குறுக்கு விசாரணை (Cross Examination),

1. Statements given in court or documents placed before court.
2. Evidence is defined as facts which will produce in the mind a persuasion about the existence of some other facts or their non-existence.
3. All the legal means which tend to prove or disprove any matter of fact.

மறு விசாரணை (Re - Examination) ஆகியவற்றிற்கு உட்படுத்தலாம். மேலும் சாட்சிகள் தாங்கள் சாட்சி அளிப்பதற்கு முன்னர் சத்தியப் பிரமாணம் (oath) செய்துகொள்ள வேண்டும். அதாவது **"நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை"**, என்று சத்தியம் செய்ய வேண்டும். இதனால் சாட்சிகள் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர் களாகின்றனர். பொய்யைப் பேச அவர்கள் நா எழுவதில்லை என்று கருதப்படுகின்றது. எனவே வழக்கில் நீதியை நிலைநாட்ட இவ்வகைச் சாட்சியமே பெரிதும் உதவி புரிகின்றது என்பதில் ஐயமில்லை. இத்தகு சாட்சியம் **'வாய்மொழிச் சாட்சியம்' (Oral Evidence)** எனப்படுகின்றது.

வழக்கின் பொருண்மை குறித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களுமே பொதுவாக ஆவண சாட்சியங்கள் எனப்படும். இத்தகைய ஆவணத்தை வைத்திருக்கும் ஒருவர் தானாகவோ அல்லது நீதிமன்ற ஆணைக்குட்பட்டோ அவற்றை நீதிமன்ற ஆய்விற்காகச் சமர்ப்பிக்கலாம். இவ்வாறு ஆவணங்கள் மூலம் அளிக்கப்படும் சாட்சியமே **'ஆவண சாட்சியம்' (Documentary Evidence)** எனப்படுகின்றது.

மேற்படி ஆவண சாட்சியத்தில், **'ஆவணம்'** என்ற சொல் எவற்றையெல்லாம் உள்ளடக்கும் என்பதை இங்கு அறிந்துகொள்ள வேண்டும். இந்திய சாட்சிய சட்டத்தின் **3வது பிரிவின்படி**, எழுத்தால் எழுதப்பட்ட உரையே ஆவணமாகும். அது எண்களாகவோ அல்லது குறிகளாகவோ கூட இருக்கலாம். அது எப்பொருளின் மீதும் வெளியிடப் பட்டோ அல்லது வரையப்பட்டோ இருக்கலாம். அச்சடிக்கப்பட்ட காகிதங்கள், கல்லச்சு முறையில் தயாரிக்கப்பட்டவை (Lithogrphed) அல்லது புகைப்படமெடுக்கப்பட்ட சொற்கள் (Photographed), பூகோள வரைப்படம் (Map), அமைப்புப்படம் (Plan) ஆகியவையும் ஆவணங்களாகும். மேலும் உலோகத்தகடு அல்லது கல்லின் மீது பொறிக்கப்பட்ட எழுத்து ஒரு ஆவணமாகும். கேலிச் சித்திரமும் (Caricature) ஒரு ஆவணமே.

சாட்சியம் - இந்திய சாட்சியச் சட்டம் கூறும் வரையறை:

நாம் மேற்சென்ற பத்திகளில் கண்டவற்றையே இந்திய சாட்சிய சட்டமானது ஒழுங்குபடுத்தி தனது **3வது பிரிவின்** வாயிலாக 'சாட்சியத்திற்கு' வரையறை தருகின்றது. அதன்படி 'சாட்சியம்' என்பது,

1) விசாரணையிலிருக்கும் ஒரு பொருண்மை சம்பந்தமான விஷயங்களைப் பொறுத்து நீதிமன்றம் தன்முன் கொடுக்குமாறு சாட்சிகளை அனுமதிக்கும் அல்லது கொடுக்குமாறு அவர்களைக் கோரும் **வாக்கு மூலங்கள் (உரைகள்)** அனைத்தும்.

2) நீதிமன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் மின்னியக்க பதிவேடுகள் (electronic records) உள்ளிட்ட[1] ஆவணங்கள் அனைத்தும்.

1. "மின்னியக்க பதிவேடுகள் உள்ளிட்ட" எனும் பதம் 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் மேற்படி பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதில் முதலில் கண்டது வாய்மொழி சாட்சியம் (Oral evidence) எனவும், பின்கண்டது ஆவண சாட்சியமென்றும் (Documentary evidence) என்றும் வழங்கப்படுகின்றது.

முடிவுரை:

மேற்கண்ட இரண்டு சாட்சியங்களே சாட்சியச் சட்டத்திற்கு அடிப்படை அஸ்திவாரமாக விளங்குகின்றது. இவ்விரண்டு சாட்சியங்களைச் சார்ந்து வேறு சில வகை சாட்சியங்களும் உண்டு. [அவற்றை விரிவாக அடுத்த வினாவில் காண்போம்.]

- o -

4 சாட்சியங்களின் பல்வேறு வகைகள் [Kinds of Evidence]

6. Define evidence. What are the various kinds of evidence? (சாட்சியம் என்பது என்ன? பலவகைப்பட்ட சாட்சியங்கள் யாவை?)

(அல்லது)

Define "Evidence". State the kinds of evidence admissible in Indian Evidence Act. ("சாட்சியம்" என்பதை வரையறு. இந்திய சாட்சிய சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் சாட்சியத்தின் வகைகளைக் கூறுக.)

சாட்சியம் - விளக்கம்:

(சென்ற வினாவில் காண்க)

பலவகைப்பட்ட சாட்சியங்கள்:

சாட்சியங்கள் (1) வாய்மொழிச் சாட்சியம் என்றும் (2) ஆவண சாட்சியமென்றும் இரு பெரும்பிரிவாக உள்ளன. இவற்றைச் சார்ந்து, அதாவது மேற்படி இரண்டு சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்ட வேறு சில சாட்சியங்களும் உண்டு. அவற்றை பின்வருமாறு காண்போம்.

I. தலைநிலைச் சாட்சியம் மற்றும் சார்நிலைச் சாட்சியம் (Primary Evidence and Secondary Evidence):

தலைநிலைச் சாட்சியம் (பிரிவு 62):

இதனை 'முதல்நிலை சாட்சியம்' என்றும் அழைப்பர். ஒரு ஆவணத்தை சாட்சியமாக நீதிமன்றத்தில் ஆய்வுக்காக முன்னிலைப்படுத்த வேண்டும்பொழுது, அந்த ஆவணத்தையே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதாவது அதன் அசலையே (Original) சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அசல் ஆவணமே, தலைநிலைச் சாட்சியமாகும்.

சார்நிலைச் சாட்சியம் (பிரிவு 63):

இதனை 'இரண்டாம் தரச் சாட்சியம்' என்றும் அழைப்பர். நீதிமன்ற ஆய்வுக்கு அசல் ஆவணத்தை சமர்ப்பிக்க முடியாதபொழுது, தக்க காரணங்களைக்கூறி அந்த அசல் ஆவணத்திற்கு பதில் அதனுடைய உண்மையான போட்டோ நகல் அல்லது அசல் ஆவணத்துடன் ஒப்பு நோக்கப்பட்ட நகல் அல்லது அசல் ஆவணத்தின் உண்மை நகலைச் சமர்ப்பிக்கலாம். இப்படிப்பட்ட நகல்கள் சார்நிலைச் சாட்சியமாகிறது.

II. தெரிநிலைச் சாட்சியம் மற்றும் ஆள் தரும் சாட்சியம் (Real and Personal Evidence):

தெரிநிலைச் சாட்சியம்:

தெரிநிலைச் சாட்சியமென்பது, ஆவணத்திலிருந்தோ அல்லது சாட்சிகள் கூறும் செய்திகளிலிருந்தோ பெறப்படுவதில்லை. மாறாக, கருப்பொருள் (Material object) ஒன்றை நீதிமன்ற ஆய்விற்கு சமர்பிப்பதன் வாயிலாக பொருன்மை ஒன்றை வெளிக் கொண்டு வருவதே தெரிநிலைச் சாட்சியமாகும்.

உதாரணமாக, (i) கொலை செய்யப் பயன்படுத்திய ரத்தக்கறை தோய்ந்த கத்தியை (Material object) சம்பந்தப்பட்ட கொலைக் குற்ற விசாரணையில் உள்ள பொழுது, நீதிமன்றத்தின், ஆய்வுக்கு சமர்ப்பித்தல் (ii) நபர்களின் வெளித்தோற்றம் (Appearance of persons) (iii) சாட்சிகளின் நடையுடை பாவனை (Demeanor of witness) (iv) குற்றம் நடந்த இடத்தை ஆய்வின் பொருட்டு பார்வையிடல் (local inspection).

ஆள்தரும் சாட்சியம்:

மனித நபர் ஒருவரால் தரப்படும் சாட்சியம் **ஆள்தரும் சாட்சியம்** ஆகும்.

III. நேர்நிலைச் சாட்சியம் மற்றும் சூழ்நிலைச் சாட்சியம் (Direct Evidence and Circumstantial Evidence):

நேர்நிலைச் சாட்சியம்:

வழக்கொன்றில் பிரச்சனையிலுள்ள பொருண்மையை (Fact in issue) நேராகக் கண்டவரோ, அறிந்தவரோ அப்பொருண்மை பற்றிக் கூறுவதே 'நேர்நிலைச் சாட்சியம்' ஆகும்.

உதாரணமாக, A என்பவர் B என்பவரைக் கொலை செய்து விடுகிறார். அக்கொலையை C என்பவர் நேரடியாகப் பார்த்திருக்கிறார். அந்நிலையில் C கூறும் சாட்சியம் நேர்நிலைச் சாட்சியமாகும். ஏனெனில் அவர் அவ்வழக்கின் பிரச்சனையிலுள்ள பொருண்மை பற்றி சாட்சி கூறுகிறார்.

சூழ்நிலைச் சாட்சியம்:

ஒருவர் கொடுத்த சாட்சியத்திலிருந்து அல்லது ஆவணத்திலிருந்து பிரச்சனையிலுள்ள பொருண்மை ஊகிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தால் அத்தகைய சாட்சியம் 'சூழ்நிலைச் சாட்சியம்' ஆகும்.

உதாரணமாக, நீதிமன்ற விசாரணையில் கையில் இரத்தக் கறை படிந்த கத்தியுடன் A என்பவர் B என்பவரின் வீட்டிலிருந்து வெளியே

வந்தார் என்று C என்பவர் சாட்சியம் கூறுகிறார். அப்பொழுது அவ் வீட்டிற்குள் B கத்தியால் குத்துக் காயங்களுடன் இறந்து கிடந்தார். இங்கு B கூறிய சாட்சியமானது சூழ்நிலைச் சாட்சியமாகும். ஏனெனில், அச்சாட்சியத்திலிருந்து A என்பவர் B என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார், என்ற பிரச்சனையிலுள்ள பொருண்மையானது ஊகித்து அறியப்படுகிறது. இதனடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

IV. மூலச்சாட்சியம் மற்றும் கேள்வி நிலைச் சாட்சியம் (Original and Hearsay Evidence):

மூலச் சாட்சியம் என்பது, ஒரு சாட்சி தன்னுடைய புலன்களால் (own senses) நேரடியாகக் கண்டதை அல்லதை கேட்டதை கூறுவதாகும். கேள்வி நிலைச் சாட்சியம் என்பது, சாட்சியானவர் தன்னுடைய புலன்களால் நேரடியாகக் காணாததை அல்லது கேட்காததை கூறுவதாகும். அதாவது பிறர் பார்த்ததையோ அல்லது கேட்டதையோ அறிந்து கூறுவதாகும். இதில் மூலச் சாட்சியம்தான் சட்டத்தால் அனுமதிக்கப்படும். கேள்வி நிலைச் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

V. அகநிலைச் சாட்சியம் மற்றும் புறநிலைச் சாட்சியம் (Intrinsic and Extrinsic Evidence):

ஒரு ஆவணத்தில் உள்ள வாசகங்களே சாட்சியமாக பயனாகும் பொழுது அது அகநிலைச் சாட்சியமாகும். அந்த ஆவணத்தில் உள்ள வாசகத்தை விளக்கியோ அல்லது அந்த ஆவணத்தை எழுதியவர்களின் கருத்து அதிலுள்ள வாசகத்திற்கு மாறானது என்பதைக் காட்டவோ விடப்படும் சாட்சியம், புறநிலைச் சாட்சியம் எனப்படும்.

VI. உறுதியூட்டும் சாட்சியம் (Corroborative Evidence):

ஒரு பொருண்மை குறித்து ஒரு சாட்சி கூறிய சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக பிறிதொரு சாட்சியானவர் சாட்சியம் அளிப்பது உறுதியூட்டும் சாட்சியம் ஆகும். அது அப்பொருண்மை தொடர்பான தாகவும் இருக்கலாம் அல்லது அப்பொருண்மையுடன் தொடர்புடைய பிற பொருண்மைகளைப் பற்றியதாகவும் இருக்கலாம்.

ரோஸ்கோல் என்ற அறிஞரின் கூற்றுப்படி, "ஒரு விஷயம் குறித்த மாறுபட்ட பண்புகளை உடைய கூடுதல் சாட்சியமே உறுதியூட்டும் சாட்சியமாகும்".[1]

உதாரணமாக, B என்பவர் மீது ஒரு கார் ஏறி விட்டு சென்று விடுகிறது. அதை A பார்க்கிறார். உடனே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார். நீதிமன்ற விசாரணையில் தான் கண்டதை A கூறுகிறார்.

1. According to **Roscol**, corroborative evidence is additional evidence of a different character to the same point.

இது B மீது கார் ஏறியதைப் பற்றி அவர் அளிக்கும் நிலைமுறைச் சாட்சியமாகும் (Substantive Evidence). இதனை உறுதியூட்டும் விதமாக தான் அப்பொழுது அளித்த புகாரை நீதிமன்றத்தில் A சமர்ப்பிக்கிறார். இந்த ஆவணம் உறுதியூட்டும் சாட்சியமாகும். ஆனால் A நீதிமன்றத்திற்கு வந்த சாட்சி கூறவில்லையெனில் அவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை மட்டும் கொண்டு காரோட்டிய நபரை தண்டிக்க இயலாது. ஏனெனில் அப்புகார் ஒரு உறுதியூட்டும் சாட்சியம் மட்டுமே ஆகும். நிலைமுறைச் சாட்சியம் அல்ல. எனவே நிலைமுறை சாட்சியத்தை உறுதியூட்டும் முகமாக அளிக்கப்படும் சாட்சியமே உறுதியூட்டும் சாட்சியமாகிறது. இவ்வாறு உறுதியூட்டக்கூடிய வகையில் சாட்சியமளிக்கும் சாட்சியிடம் எப்படிப் பட்ட கேள்விகளை விசாரணையில் கேட்கலாம் என்பதை பிரிவுகள் 156 மற்றும் 157 கூறுகிறது.

7. Distinguish between Primary evidence and Secondary evidence.

[இதற்கான விடையை பிந்திய அத்தியாயத்தில் காண்க.]

8. Distinguish between Oral and Documentary evidence.

வாய்மொழி சாட்சியம் (Oral Evidence)	ஆவண சாட்சியம் (Documentary Evidence)
1. வழக்கின் பொருண்மை பற்றித் தாங்கள் அறிந்தவற்றை சாட்சிகள் நீதிமன்றத்தில் வாய்மொழியாக கொடுக்கும் சாட்சியமே வாய்மொழி சாட்சியம் ஆகும்.	வழக்கின் பொருண்மை குறித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களுமே பொதுவாக ஆவண சாட்சியம் எனப்படும்.
2. வாய்மொழி சாட்சியத்தில் ஒரு பொருண்மை குறித்து தன் கண்ணால் கண்டவற்றை அல்லது தன் காதால் கேட்டவற்றை ஒரு சாட்சி உரைக்கிறார்.	இங்கு, எழுத்தால், எண்களால் அல்லது குறிகளால் ஒரு பொருண்மை குறித்து விளக்கப் பட்டுள்ள விஷயத்தை தாங்கிய ஆவணமே சாட்சியமாக சமர்ப்பிக்கப்படுகிறது.
3. இங்கு சாட்சி நீதிமனறத்தில் ஆஜராகி சாட்சி கூற வேண்டும்.	இங்கு தேவையில்லை.
4. வாய்மொழிச் சாட்சியம் கூற விரும்பும் சான்றுரையர், தகுதி வாய்ந்த (Competent) சான்றுரை யராக இருத்தல் வேண்டும்.	ஆவண சாட்சியம் என்றால், அந்த சாட்சியம் ஏற்புடைய (admission) சாட்சியமாக இருக்க வேண்டும்.

5. வாய்மொழிச் சாட்சியத்தில் சான்றுரைப்பவரின் நாணயம், குறுக்கு விசாரணை (Cross Examination) மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது.	ஆவணச் சாட்சியத்தின் ஏற்புடைமையானது, அதனைக் கொண்டு வந்தவர்கள், அதை எழுதியவர்கள், அதன் தரப்பினர் கள் மூலம் நிர்ணயம் செய்யப் படுகிறது.

9. Distinguish between Direct evidence and Circumstantial evidence.

நேர்நிலைச் சாட்சியம் (Direct Evidence)	சூழ்நிலைச் சாட்சியம் (Circumstantial Evidence)
1. வழக்கொன்றில் பிரச்சனை யிலுள்ள பொருண்மையை (Fact in issue) நேராகக் கண்டவரோ, அறிந்தவரோ, அப்பொருண்மை பற்றிக் கூறுவது நேர்நிலைச் சாட்சியம் ஆகும்.	ஒருவர் கொடுத்த சாட்சியத்திலி ருந்து அல்லது ஆவணத்திலிருந்து பிரச்சனையிலுள்ள பொருண்மை ஊகிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தால், அத்தகைய சாட்சியம் சூழ்நிலை சாட்சியம் ஆகும்.
2. நேர்நிலைச் சாட்சியத்தில் சம்பவத்தை (பிரச்சனையிலுள்ள பொருண்மையை) சாட்சிகள் தங்களது சொந்தக் கண்களால் பார்த்ததையும், சொந்தக் காதுகளால் கேட்டதையும், தங்களது சொந்த புலன்களால் உணர்ந்ததையும் கூறுகின்றனர்.	இங்கு சம்பவத்திற்கு தொடர்பான சில பொருண்மைகளை (related facts) பற்றி சாட்சிகள் சாட்சியம் அளிக்கின்றனர். அதிலிருந்து அச் சம்பவம் (பிரச்சனையிலுள்ள பொருண்மை) ஊகித்தறியப் படுகிறது. அதாவது, இங்கு சம்பவத்தை தங்களது சொந்த புலன்களால் சாட்சிகள் அறிந் திருக்கவில்லை.
3. இவ்வகைச் சாட்சியம் அறுதி யானதாகும் (conclusive).	இவ்வகைச் சாட்சியம் அறுதியான தாகவும் (conclusive) அனுமானிக்கத் தக்கதாகவும் (Pre-sumptive) உள்ளது. வழக்கின் சூழலுக்குத் தக்கவாறு இது வேறுபடும்.
4. நேர்நிலைச் சாட்சியம் ஒரு முறை அளிக்கப்பட்டு விட்டால், அதை கூர்ந்து ஆராய வேண்டியதில்லை. இதைக் கொண்டு நீதிமன்றம் எளிதில் ஒரு முடிவுக்கு வர இயலும்.	சூழ்நிலைச் சாட்சியம் அவ்வாறல்ல. அதைக் கூர்ந்து ஆராய வேண்டும். ஒரு சூழ்நிலை குற்றஞ்சாட்டப் படுவோருக்குச் சார்பாக இருந்தாலும், அவன் விடுதலை பெற வாய்ப்புண்டு.

5. சூழ்நிலைச் சாட்சியத்தை விட நேர்நிலை சாட்சியம் மிகவும் பாதுகாப்பானது. தைரியமாக தீர்ப்பு வழங்கலாம்.	நேர்நிலைச் சாட்சியம் இல்லாத பொழுது சூழ்நிலைச் சாட்சியம் ஒரு பதில் மாற்றீடாக (Substitute) செயல்படுகிறது.
6. சூழ்நிலைச் சாட்சியத்தை விட நேர்நிலைச் சாட்சியந்தான் மேலானது.	நேர்நிலைச் சாட்சியத்தை விட சூழ்நிலைச் சாட்சியம் தாழ்ந்தது.
7. நேர்நிலைச் சாட்சியத்தில் சாட்சிகள் சத்தியப் பிரமாணம் (oath) செய்த பின்னரே, சாட்சி அளிக்கின்றனர். இருந்தாலும் அவர்கள் பொய் சொல்ல வாய்ப்புண்டு.	சூழ்நிலைச் சாட்சியத்திலும் சாட்சியம் சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே சாட்சியம் அளிக்கின்றனர். ஆனால் சூழ்நிலைச் சாட்சியம் என்பது பொருண்மையின் ஒரு வரிசைக் கோவையாகும். (series of facts) சாட்சியங்களின் சங்கிலித் தொடரிலிருந்து (Chain of evidences) ஒரு உண்மை ஊகிக்கப்படுகிறது. எனவே, சாட்சிகள் பொய் சொல்லலாம். ஆனால் சூழ்நிலை கள் தொடர்பான பொருண்மைகள் பொய் சொல்லாது.

10. Distinguish between Real and Personal evidence.

வேறுபடுத்திக் காட்டுக.
தெரிநிலைச் சான்றும்; ஆள்தரும் சான்றும்.

(i) தெரிநிலைச் சாட்சியம் என்பது கருப்பொருள் (material object) ஒன்றை நீதிமன்றம் ஆய்வு செய்வதிலிருந்து பெறப்படுவது. ஆள்தரும் சாட்சியமென்பது சாட்சி கூறும் செய்தியிலிருந்து பெறப்படுவது.

(ii) தெரிநிலைச் சாட்சியத்தில் கருப்பொருளுக்கும் நீதிமன்றத்திற்கும் உள்ள தொடர்பு நேரடியானதாகும். கருப்பொருளை நீதிமன்றமே ஆய்வு செய்கிறது. தெரிநிலைச் சாட்சியத்தில் அவ்வாறில்லை. ஒரு நிகழ்வைப் பற்றிய செய்தியை நீதிமன்றமே நேரடியாக அறிய முடியாது. யாரேனும் ஒரு நபர் அதைப் பற்றி சாட்சியமளிக்க வேண்டும்.

(iii) தெரிநிலைச் சாட்சியத்தில் ஆய்வுக்கென, சம்பந்தப்பட்ட கருப்பொருளை தன்முன்னர் சமர்பிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்திரவிடலாம். உதாரணமாக, கத்தியால் குத்தப்பட்டு கொலை நடந்த வழக்கில், கத்தியானது ஒரு கருப்பொருளாகும். அதைத் தன் முன்னர் ஆய்வுக்கென சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் கோரலாம். ஆள்தரும் சாட்சியத்தில் அவ்வாறில்லை.

5 சூழ்நிலைச் சாட்சியம் - விளக்கமும் பல சுவையான வழக்குகளும் [Circumstantial Evidence and Interesting Case-Laws]

11. Can the court convict an accused only on the basis of the circumstantial evidence? Discuss with illustrative cases. (சூழ்நிலைச் சான்று மட்டும் கொண்டு குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை நீதிமன்றம் தண்டிக்கலாமா? எடுத்துக்காட்டும் வழக்குகள் கொண்டு விவாதிக்கவும்.)

(அல்லது)

Is direct evidence superior or inferior to circumstantial evidence? Discuss. (நேர்நிலைச் சான்று சூழ்நிலைச் சான்றை விட உயர்ந்ததா அல்லது தாழ்ந்ததா? விவாதிக்கவும்.)

(அல்லது)

Circumstantial evidence - Write short notes. (சூழ்நிலைச் சான்று - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

சாட்சியங்களில் - நேர்நிலைச் சாட்சியம் (Direct evidence) மற்றும் சூழ்நிலைச் சாட்சியம் (Circumstantial evidence) என இரண்டு வகை உண்டு. இதை நாம் முன்னரே கண்டுள்ளோம். வழக்கொன்றிற்கு இரண்டு சாட்சியங்களும் முக்கியமானவைதான். நேர்நிலைச் சாட்சியம் இருந்தால், நீதிமன்றம் பெரும்பாலும் வேறு சாட்சியங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதில்லை. சில சமயங்களில் நேர்நிலைச் சாட்சியம் இல்லாத இக்கட்டான நிலை ஏற்படலாம். அச்சமயத்தில் சூழ்நிலைச் சாட்சியத்தைத் தான் நீதிமன்றம் சார்ந்துள்ளது. அதைக் கொண்டுதான் தீர்ப்பு வழங்கும். எனவே சூழ்நிலைச் சாட்சியத்தைக் கொண்டு மட்டுமே குற்றஞ் சாட்டப்பட்ட நபரை நீதிமன்றம் தண்டிக்கலாம். இதற்கு பல எடுத்துக்காட்டு வழக்குகள் உள்ளன. அவற்றில் பிரபலமான ஓரிரண்டு வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

Anant Chintaman Lagu v. State of Bombay[1]

மேற்படி வழக்கு, சூழ்நிலைச் சாட்சியத்தின் முக்கியத்துவத்தை விளக்கக்கூடிய மிகப் பிரபலமான இந்திய வழக்காகும்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர், பூனாவில் தொழில் புரியும்

1. AIR 1960 SC 500

ஒரு டாக்டர்; கொலையுண்டு இறந்து போனவள் அதே நகரத்தில் பெரும் சொத்தும் செல்வாக்கும் படைத்த ஒரு விதவை. அவள் சர்க்கரை வியாதி மற்றும் எலும்புருக்கி நோயால் (Tuberculosis) அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். மேற்படி டாக்டர்தான் அப்பெண்மணியின் நம்பிக்கைக்கு பாத்திரமான மருத்துவ ஆலோசகர். இதனால் அப்பெண்மணி தன் உடல் நோயிலிருந்து தனக்குள்ள சொத்து விவரங்கள் உட்பட அந்த டாக்டரிடம்தான் தெரிவித்து வந்தாள்.

இந்நிலையில் அப்பெண்மணிக்கு உள்ள நோய்க்கு பம்பாயில் உள்ள சிறப்பு மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெறலாம் என மேற்படி டாக்டர் கூறியதின் பேரில், அப்பெண்மணி அந்த டாக்டருடன் பூனா விலிருந்து பம்பாய்க்கு 12-12-1956ஆம் தேதி இரவு 10 மணி அளவில் ரயில் மூலம் பயணமானாள். ரயில் பம்பாயை அதிகாலை 5.45க்கு அடைந்தது. ஆனால் ரயில் பம்பாயை அடையும் பொழுது, அப்பெண்மணி மயக்கமடைந்திருந்தாள். சிறிதும் உணர்வில்லை. மேற்படி டாக்டர் உணர்வற்ற அப்பெண்மணியை பம்பாய் G.T. மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு அவருக்கு சர்க்கரை வியாதியினால் ஏற்பட்ட கோமா (Diabetic coma) எனக் கருதி சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அப்பெண்மணி உணர்வு திரும்பாத நிலையிலே அன்று பகல் 11.30 மணிக்கு இறந்து போனாள். அவளது உடல் 14ஆம் தேதி வரை அம்மருத்துவமனையிலே இருந்தது. பின்னர், யாரும் அவரது உடலை பெற முன்வராததால், அது மருத்துவ கல்லூரி மாணவர்களின் கூராய்விற்காக (dissection) அனுப்பப்பட்டது. **இங்குதான் விதி விளையாட ஆரம்பித்தது.**

மருத்துவக் கல்லூரியின் பியூன் ஒருவர், அவ்வுடலில் சில சிராய்ப்புகளைக் கண்டு, அதனை பிண ஆய்வாளருக்கு (Coroner) தெரிவித்தார். இதனால், அவர் சந்தேகத்தின் அடிப்படையில் அவ்வுடலை பிணப் பரிசோதனைக்கு (Post mortem) அனுப்பி வைத்தார். அவளது உடல் 19ஆம் தேதி (அவள் இறந்து 6 தினங்கள் கழித்து) பிணப் பரிசோதனை செய்யப்பட்டது. விஷத்தினால் இறந்திருப்பாரோ என்பதன் அடிப்படையில் நுரையீரல் (viscera) ஆகியவை வேதியியல் நிபுணரால் ஆய்வு செய்யப் பட்டது. ஆனால், அப்பரிசோதனையில் விஷம் உட்கொண்டதற்கான எவ்விதமான அறிகுறியும் தென்படவில்லை. இதயம்-நுரையீரலில் அங்கீகரிக்கப்பட்ட விஷம் (recognisable poison) எதுவுமில்லை என வேதியியல் நிபுணர் அறிவித்தார். எனவே அவளது இறப்பில் எவ்வித சந்தேகமுமில்லை என்பதன் அடிப்படையிலும், அவளது உடலை யாரும் பெற முன் வராததாலும், அவளது உடல் தகனம் செய்யப்பட்டது.

எனினும் மேற்படி அப்பெண்மணி நீண்ட நாட்களாக காணப்படவில்லையே என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவளது உற்றார் உறவினர்கள் காவல்துறையிடம் மனுக்கொடுத்தனர். இதனால்

காவல்துறை விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. (இது அப்பெண்மணி இறந்து 14 மாதங்கள் கழித்து). அவர்களது புலனாய்வின் முடிவில் மேற்படி டாக்டர் மீது, சொத்துக்கு ஆசைப்பட்டு அப்பெண்மணியை அங்கீகரிக்கப்படாத ஏதோ ஒரு விஷத்தைக் அவருக்குக் கொடுத்துக் கொன்ற குற்றத்திற்காக, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டது. டாக்டருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. டாக்டர் செய்த முறையீட்டில் பம்பாய் உயர் நீதிமன்றம், கீழ் நீதிமன்ற தண்டனையை ஊர்ஜிதம் செய்தது. இதனால் டாக்டர் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தார். அங்கும் டாக்டருக்கு மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப் பட்டது. **இங்குதான் சூழ்நிலைச் சாட்சியத்தின் முக்கியத்துவமே வருகிறது.** ஏனெனில் இக்கொலைக்கு நேரடிச் சாட்சியம் யாருமே கிடையாது. பின்வரும் சூழ்நிலைச் சாட்சியங்களை கொண்டுதான், அப்பெண்மணியை கொன்றவர், மேற்படி டாக்டர்தான் என்று முடிவு செய்யப்பட்டது.

1. மேற்படி டாக்டரும் அப்பெண்மணியுடனே ரயிலில் ஒரே பெட்டியில் பயணம் செய்தார்.

2. பூனாவிலிருந்து பம்பாய் செல்ல எக்ஸ்பிரஸ் ரயில்கள் பல இருக்கும் பொழுது, மெதுவாக சென்று பம்பாயை அடையும் ரயிலை டாக்டர் தேர்ந்தெடுத்தார்.

3. அப்பெண்மணி பூனாவில் ரயிலில் ஏறும் பொழுது நல்ல தேக ஆரோக்கியத்தில் இருப்பவர் எவ்வாறு நடந்து கொள்வாரோ, அவ்வாறே அப்பெண்மணி செயல்பட்டதாகவும் நோய்க்கு சிகிச்சை பெறச் செல்லுபவர் போல் தெரியவில்லையென்றும், பூனா இரயில் நிலையத்தில் அவளை கண்டவர்கள் சாட்சியம் அளித்தனர்.

4. மேற்படி ரயில் பெட்டியில் தானும், அப்பெண்மணியும் மட்டும் தனித்து பயணம் செய்வதற்கு வசதியாக, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அப்பெட்டியிலிருந்த மற்ற இருக்கைகளில் யாரும் அமரா வண்ணம் அந்த டாக்டர் ஏற்பாடு செய்து கொண்டார்.

5. அப்பெண்மணியை உணர்வற்ற நிலையில் மேற்படி டாக்டர் பம்பாய் G.T. மருத்துவமனையில் சேர்க்கும் பொழுது, ரயிலில் திடீரென அவள் மயக்கமடைந்து விட்டாள் என கூறியிருந்தார். ஆனால் அவள் எவ்விதமான வியாதியினாலோ அல்லது சர்க்கரை வியாதியினால் ஏற்படும் மயக்க நிலையினாலோ (Diabetic Coma) இறக்கவில்லை என Dr. Mehta எனும் மருத்துவ நிபுணர் (expert doctor) சாட்சியம் அளித்தார். ஏனெனில் மேற்படி கோமா நிலை திடீரென ஏற்படாது. அதற்கு முன்னர் பல தொந்தரவுகள், உடல் உபாதைகள் ஏற்படும் எனவும் சாட்சியம் அளிக்கப்பட்டது. அவை ஏற்பட்டதற்கான அறிகுறிகள் அப்பெண்மணியிடம் காணப்படவில்லை.

6. மேற்படி Dr. Mehta மேலும் சாட்சியம் அளித்த பொழுது,

அப்பெண்மணிக்கு அங்கீகரிக்கப்படாத விஷத்தை கொடுத்ததன் விளைவாக அவள் இறந்து விட்டாள் எனக் கூறினார். காலம் கடந்து பிணப் பரிசோதனை செய்ததினால் மேற்படி விஷத்தை கண்டறிய இயலவில்லை என்றும் தெரிவித்தார்.

7. அப்பெண்மணி இயற்கைக் காரணங்களால் இறந்து போனார் என பிணப் பரிசோதனை அறிக்கை கொடுக்கும் படி, பிணப் பரிசோதனை மருத்துவருக்கு, ஒரு தெரிந்த நண்பர் மூலம், கையூட்டு கொடுக்க மேற்படி டாக்டர் முனைந்திருந்தார்.

8. அப்பெண்மணி இறக்கக் காரணமாக இருந்த விஷத்தை மேற்படி டாக்டரே பூனாவில் ஒரு கடையில் வாங்கினார். அவ்விஷம் மெதுவாக ஆளைக் கொல்லக்கூடிய தன்மை வாய்ந்ததாகும். விஷம் கொடுக்கப் பட்டவுடன் ஆளைக் கொன்று விடாது. ஆகையினால் அந்த டாக்டர் அப்பெண்மணிக்கு பல சந்தர்ப்பங்களில் அவ்விஷத்தினை ரயிலில் பயணம் செய்த அவ்விரவு முழுவதும் கொடுத்துக் கொண்டே வந்தார்.

9. தன்னுடைய கடையில்தான் அவ்விஷத்தினை அந்த டாக்டர் வாங்கியதாக அக்கடை உரிமையாளர் சாட்சியம் அளித்தார். மேலும் அவர், ஏன் இவ்விஷத்தை வாங்குகிறீர்கள் என்று டாக்டரிடம் கேள்வி கேட்டபொழுது, டாக்டர் உடனே கோபமடைந்து இம்மாதிரியான தேவையற்ற வினாக்களை எழுப்பாதே என்று கூறியதாகவும் சாட்சியம் அளித்தார்.

10. அப்பெண்மணியை பம்பாய் மருத்துவமனையில் சேர்க்கும் பொழுது அவளது தவறான பெயரைக் கொடுத்தார். மேலும் சில உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறினார்.

11. அப்பெண்மணி போட்டிருந்த நகைகளோ அல்லது அவள் கொண்டு வந்த பயணப் பெட்டியோ, அவள் உணர்வற்ற நிலையில் பம்பாயை அடையும் பொழுது, அவருடன் காணப்படவில்லை. அப்பெண்மணி பூனாவில் ரயிலில் ஏறும் பொழுது நிறைய நகைகளைப் போட்டிருந்ததாக, பூனா ரயில் நிலையத்தில் அவளைப் பார்த்தவர்கள் சாட்சியம் அளித்தனர்.

12. அப்பெண்மணியை மருத்துவமனையில் சேர்த்துள்ள விஷயத்தை மேற்படி டாக்டர் பம்பாயில் உள்ள அவளது உறவினர்கள் யாரிடமும் தெரிவிக்கவில்லை. அனைவரது விலாசமும் மேற்படி டாக்டருக்கு தெரிந்திருந்தும், அவர் தகவல் கொடுக்கவில்லை.

13. அப்பெண்மணியின் இறந்த உடலைப் பெற முன்வராமல், டாக்டர் தலைமறைவானார். இது அவர்தான் அக்கொலையை செய்திருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்தியது.

14. அவளது உடல் தகனம் செய்யப்பட்ட சில தினங்களுக்குள், அப்பெண்மணியின் போலிக் கையெழுத்திட்டு அவளது சொத்துக்களில் ஒரு பகுதியை அந்த டாக்டர் தன்வசம் செய்து கொண்டிருந்தார். இதனால் மேற்படி கொலையின் உள்நோக்கம் (motive), அதாவது சொத்துக்கு ஆசைப்பட்டு மேற்படி டாக்டர் கொலை செய்துள்ளார், என நிரூபணமாகிறது.

மேற்கண்ட சூழ்நிலைச் சாட்சியங்களின் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தின் பெருவாரியான நீதிபதிகள், உயர்நீதிமன்றம் மேற்படி டாக்டருக்கு "இலாபத்திற்காக திட்டமிட்டு நயவஞ்சகமாக செய்யப்பட்ட இக்கொலைக்கு இத்தண்டனை ஒன்றுதான் விதிக்கப்படவியலும்" (it was the only sentence that could be imposed for this planned and cold blooded murder for gain) என்று அளித்த மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்தனர்.

[மேற்படி வழக்கின் சுவாரஸ்யம் கருதி, அதன் பொருண்மைகள் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் தேர்வு எழுதும் மாணவர்கள் இதனை சுருக்கி எழுதலாம் - **ஆசிரியர்**.]

Crippen' s Case

கிரிப்பன் என்பவர் தன்னுடைய மனைவியை கொன்றதற்காக குற்றஞ் சாட்டப்பட்டார். அதற்கு நேர்நிலைச் (direct) சாட்சியம் ஏதுமில்லை. ஆனால் பின்வரும் வலுவான சூழ்நிலைச் சாட்சியங்கள் இருந்தன. அவை, கிரிப்பனும் அவரது மனைவியும் ஒருநாள் இரவு மற்றொரு தம்பதிகளுடன் உணவருந்தினர் (dinner). அதன் பிறகு கிரிப்பனுடைய மனைவி காணப்படவில்லை. இதனை கிரிப்பனுடைய நண்பர்கள் விசாரித்த பொழுது, தனது மனைவி அமெரிக்கா சென்றுள்ளாள் எனக் கூறினார். ஆனால் அவளுடைய விலாசத்தைத் தரவில்லை. சில தினங்கள் கழித்து, அவளுக்கு திடீரென நோய் ஏற்பட்டு அமெரிக்காவிலேயே இறந்து விட்டதாகக் கூறி, போலியாக துக்கம் வடித்தார். ஆனால், கிரிப்பனுடைய மனைவி காணாமல் போனதிலிருந்து, கிரிப்பனும் அவரது அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண் டைப்பிஸ்ட்டும் கள்ளக் காதல் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவையெல்லாம் கிரிப்பனின் மனைவியுடைய நண்பர்களுக்கு பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதனால் காவல்துறைக்கு புகார் கொடுக்கப்பட்டது. கிரிப்பனை விசாரித்த காவல்துறையினரிடம், தன்னுடைய மனைவி இன்னும் உரிருடனேயே வாழ்வதாகவும், அவள் ஒழுக்கமற்ற விதத்தில் வாழ்ந்து வந்ததால், அந்த அவமானத்திலிருந்து தப்பிக்கவே, முன்கூறியதுபோல் தவறான தகவல்களை தெரிவித்ததாக, கிரிப்பன் தெரிவித்தார். ஆனால் அவருடைய வீட்டை சோதனை செய்த பொழுது, தரைக்கடியில் சிதைந்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவரின் சாட்சியத்தின்படி அது ஒரு பெண்ணுடையது என நிரூபணமாகியது. மேலும் மருத்துவ ஆய்வின் பொழுது, அவ்வெலும்புக்

கூட்டின் அடிவயிற்றுப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட தோலில் ஒரு தழும்பு (Scar) காணப்பட்டது. அத்தழும்பு ஒரு அறுவை சிகிச்சையினால் ஏற்பட்டிருக்கலாம் என சாட்சியம் கூறப்பட்டது. கிரிப்பனுடைய மனைவிக்கும் அந்த இடத்தில் ஒரு அறுவை சிகிச்சை நடந்து தழும்பு ஏற்பட்டது பின்னர் தெரிய வந்தது. இதற்கிடையில் கிரிப்பன் தன்னுடைய வைப்பாட்டி (keep) டைப்பிஸ்டுடன் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு தப்பியோட முயன்றார். ஆனால் அது தவிர்க்கப்பட்டது. மேற்கண்ட வலுவான சூழ்நிலைச் சாட்சியங்களின் அடிப்படையில் கிரிப்பனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கிரிப்பனும் தூக்கிலிடப்பட்டார்.

சூழ்நிலைச் சாட்சியங்கள் பயன்படாத வழக்குகள்:

மேற்கண்ட இரண்டு முக்கியமான வழக்குகளிலும், சூழ்நிலைச் சாட்சியங்கள் சங்கிலித் தொடர் போல் அமைந்துள்ளதால், குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் பின்வரும் வழக்குகளில் சூழ்நிலைச் சாட்சியம் இருந்தும், அது குற்றஞ் சாட்டப் பட்டவர்களின் குற்றச் செயலை எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நிரூபிக்காததால், அவர்களுக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். அத்தகு வழக்குகள் வருமாறு.

Bakshish Singh v. The State of Punjab[1]

இவ்வழக்கில் கொலைக் குற்றத்திற்காக குற்றஞ் சாட்டபட்டவன் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப் பட்டவனுக்கு எதிராக உள்ள ஒரே சாட்சியம் என்னவென்றால், அவன் இறந்து போனவளின் சடலம் வீசி எறியப்பட்ட இடத்தைக் குறித்து காவல் அதிகாரிகளிடம் அவனே கொடுத்த குற்ற ஒப்புதல் உரையாகும்.

அவ்வாறு அவன் சொன்ன இடம் ஒரு ஆறு ஆகும். ஆற்றங்கரையில் உடைந்து போன சில பற்த்துண்டுகளும், மனித உடலின் சில பகுதிகளும் காணப்பட்டன. இவையெல்லாம் குற்றஞ் சாட்டப்பட்டவரின் மீது கொலைக் குற்றத்திற்கான சந்தேகத்தை எழுப்பினாலும் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 25ன் படி காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படும் குற்ற ஒப்புதலுரை ஏற்புடையதல்ல. மேலும் வழக்கு விசாரணையின் பொழுது குற்றஞ் சாட்டப்பட்டவன் இந்த குற்ற ஒப்புதலுரையை எதிர்த்தான். இவை தவிர, குற்றஞ் சாட்டப்பட்டவன்தான் அக்கொலையை செய்தான் என்பதற்கு, எவ்வித வலுவான சூழ்நிலைச் சாட்சியமும் இல்லை. இங்கு குற்றச் செயல் குறித்து சங்கிலித் தொடர் போன்று சூழ்நிலைச் சாட்சியங்கள் அமையாததால், குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு சந்தேகத்தின் பலன் (benefit of doubt) அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டான்.

1. AIR 1971 SC 2016

Father Benedict v. State of Kerala[1]

Benedict என்பவர் ஒரு பாதிரியார். மரியகுட்டி என்ற ஒரு பெண்ணை கடத்திச் சென்று கொலை செய்ததாக மேற்படி பாதிரியார் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. பாதிரியாருக்கும், மரியகுட்டிக்கும் இடையே கள்ளத் தொடர்பு இருந்ததாகவும், அதன் விளைவாக மரியகுட்டிக்கு குழந்தை ஒன்று பிறந்ததாகவும், இந்த விஷயத்தை வெளியே சொல்லி பாதிரியாருக்கு களங்கம் உருவாக்குவதாக, மரியகுட்டி பாதிரியாரை மிரட்டி பலமுறை பணம் பறித்ததால், அவர் மேற்படி மரியகுட்டியை தாம் குடியிருந்த செங்கணாஞ்சேரி என்ற இடத்திலிருந்து மன்னமாருதி என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று இரவில் அவளுடன் வெட்டவெளி ரோட்டில் காதல்லீலை புரிந்து உல்லாசமாக இருந்துவிட்டு, அதே ரோட்டில் நிர்வாணமாக விட்டுச் சென்றார் என்பதே அரசு தரப்பினரின் வழக்கு (Prosecution case). இதனால் அப்பெண்ணை கடத்தி சென்று கொன்றதாக இ. த. ச. பிரிவு 364 மற்றும் 302ன் கீழ் அரசு தரப்பினர் பாதிரியார் மீது குற்றஞ் சாட்டினார். மேற்படி பாதிரியார்தான் அக்கொலையைச் செய்தார் என்பதற்கு கண்ணால் பார்த்த நேரடிச் சாட்சிகள் யாரும் இல்லை. எனவே அரசு தரப்பினர் சூழ்நிலை சாட்சியங்களையே சார்ந்திருந்தனர். பின்வரும் சூழ்நிலைச் சாட்சியங்களின் அடிப்படையில் செஷன்ஸ் நீதிமன்றம் பாதிரியாருக்கு தண்டனை வழங்கியது. அவை.

(i) மரியகுட்டி, தனக்கும் பாதிரியாருக்கும் இருந்த கள்ளக் காதலை அம்பலப்படுத்தி, அவருக்கு அவமானம் உண்டாக்குவதாக மிரட்டி பிளாக் மெயில் செய்து பணம் பறித்ததால்தான், அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டி மேற்படி மரியகுட்டியை பாதிரியார் கொன்று விட்டார். எனவே, பாதிரியார் மரியகுட்டியைக் கொல்ல ஒரு வலுவான உட்கருத்தை (motive) கொண்டிருந்தார் என்று அரசு தரப்பினர் சுட்டிக் காட்டினர்.

(ii) கொலை நடந்த தேதியில் செங்கணாஞ்சேரியிலிருந்து மன்னமாருதிக்கு செல்லும் வழியில் மரியகுட்டியை பாதிரியாருடன் பார்த்ததாக சிலர் சாட்சியம் அளித்தனர்.

(iii) கொலை நடந்த இடத்திலிருந்து பாதிரியார் மட்டும் நள்ளிரவில் திரும்பி வந்து கொண்டிருந்ததை பார்த்ததாகவும் சாட்சியம் கூறப் பட்டது.

(iv) மரியகுட்டியின் பிணத்தின் மீது போர்த்தப்பட்டிருந்த பெட் ஷீட்டில், பாதிரியாரின் துணிகளுக்கு அவரது சலவைக்காரர் இடும் அடையாளக்குறி (dhobi mark) காணப்பட்டது.

(v) பாதிரியாரே கொடுத்த ஒப்புதலுரையின் பேரில் கொலை

1. 1967 KLT 466

செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கத்தி, இரத்தக்கறை படிந்த நீலநிறப்பை ஒன்று ஆகியவை போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

ஆனால் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து பாதிரியார் **உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தார். இதனால் வழக்கின் போக்கே திசை திரும்பிவிட்டது.** மேற்படி சூழ்நிலைச் சாட்சியங்கள் பாதிரியார்தான் அக்கொலையை செய்தார், என்பதை சரிவர நிரூபிக்காததால், பாதிரியார் விடுதலை செய்யப்பட்டார். அதற்கு காரணங்கள் பின்வருமாறு. அவை,

(i) பாதிரியார் கொலை செய்ய கொண்டிருந்த உட்கருத்து (motive) நிரூபிக்கப்படவில்லை. கள்ளக் காதலை அம்பலப்படுத்தி பணம் பறிக்கும் எண்ணத்துடன் மரியகுட்டி பாதிரியாரை குழந்தையுடன் பலமுறை இக்கட்டான நேரங்களில் சந்தித்து மிரட்டியதே, மரியகுட்டியை பாதிரியார் கொல்வதற்கு காரணமாக இருந்த உட்கருத்தாகும். மேற்படி கள்ளக்காதல், மிரட்டுதல், குழந்தைப்பேறு குறித்து மூவர் அரசு தரப்பில் சாட்சியம் அளித்தனர். ஆனால் குறுக்கு விசாரணையில் மேற்படி பொருண்மைகள் குறித்து தங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாதென்றும், பிறர் கூறியதை வைத்து தாங்கள் சாட்சியம் அளிப்பதாகவும் கூறினர். பிறர் கூறியதை கேள்விப்பட்டு சாட்சியமளிப்பது, கேள்வி நிலைச் சாட்சியமாகும் (Hearsay evidence). இது சாட்சிய சட்டத்தில் அனுமதிக்கக்கத்தல்ல. எனவே பாதிரியாரின் உட்கருத்து நிரூபணமாகவில்லை.

(ii) மரியகுட்டியுடன் பாதிரியார் செங்கணாஞ்சேரியிலிருந்து மன்னமாருதிக்கு சென்றதையும் பின்னர் அவர் மட்டும் இரவில் தனியாக திரும்பி வந்ததையும் பார்த்ததாக பலர் சாட்சியம் அளித்தனர். ஆனால் அவர்கள் எல்லோரும் பாதிரியாரைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை. அதற்கு முன்னர் பாதிரியாரைப் பார்த்தது கிடையாது. ஆனால் பல வாரங்கள் கழித்து விசாரணையின் பொழுது பாதிரியாரை எவ்வித குழப்பமும், சிரமமும் இல்லாமல் அடையாளம் கண்டு கொண்டனர். இது அரசு தரப்பு சாட்சிகளின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒருமுறை மட்டுமே பாதிரியாரை, அதுவும் எதேச்சையாக பார்த்தவர்கள், எப்படி பல வாரங்கள் கழித்து சட்டென்று பாதிரியாரை அடையாளம் கண்டு கொண்டனர் என்று பலத்த சந்தேகம் தோன்றியது. பாதிரியார் போன்று உடை தரித்த பலரை நிற்க வைத்து அதில் கொலை செய்ததாக கூறப்படும் பாதிரியாரை சாட்சிகள் அடையாளம் கண்டு கொண்டு (identification parade) தெரிவித்திருந்தால், அவர்களின் சாட்சியத்தை நம்புவதற்கு வாய்ப்புண்டு என்று நீதிமன்றம் அச்சாட்சியத்தை நிராகரித்தது.

(iii) கொலை நடந்ததற்கு பிறகு பல வாரங்கள் கழித்து பாதிரியார் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னரே, பிணத்தின் மீது போடப்பட்டிருந்த பெட்ஷீட்டில், பாதிரியாரின் சலவைக் குறியை புலனாய்வு அதிகாரிகள் கண்டிருந்ததாக ஆய்வுக்குழு கூறுகிறது. இதனால்,

வேண்டுமென்றே வழக்கை பாதிரியாரின் மீது ஜோடிப்பதற்காக இடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது.

(iv) பாதிரியார் கொடுத்த ஒப்புதலுரையின் பேரில் கத்தி முதலியவை கைப்பற்றப்பட்டன. ஆனால் மேற்படி ஒப்புதலுரை வலுக்கட்டாயத்தின் பேரில் கொடுக்கப்பட்டதாகும். எனவே அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 20(3)ன் கீழ் மேற்படி ஒப்புதலுரை ஏற்புடையதல்ல.

பாதிரியார் மேற்படி மரியகுட்டியை கொன்றிருப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதற்கு மேற்கண்டவற்றுடன் பின்வரும் சூழ்நிலைகளும் பாதிரியாருக்கு சாதகமாக அமைந்திருந்தன. வெட்டவெளி ரோட்டில் காதல் லீலை புரிவதும், அதுவும் ஒரு பாதிரியார் செய்ததாக கூறுவது ஏற்புடையதாக அமையவில்லை. மேலும் தன்னுடைய அடையாளத்தை மறைப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல், குறைந்த பட்சம் தன்னுடைய பாதிரியார் உடைகளையாவது (cassock) களையாமல் காதல் லீலை புரிந்துவிட்டு, கொலையும் செய்து, பிணத்தையும் நிர்வாணமாக ரோட்டில் விட்டுவிட்டு துணிச்சலாக ஒரு பாதிரியார் திரும்பினார் என்பதெல்லாம் நம்பத் தகுந்தவையாக நீதிமன்றம் கருதவில்லை. மரியகுட்டி தன்னுடைய ஒழுங்கற்ற நடத்தையில் ஏற்பட்ட தகராறினால் யாரோ வேறு சிலரால், வேறு எங்கோ கொலை செய்யப்பட்டு, அந்த இடத்தில் வீசப்பட்டு சென்றதாகத்தான் கருதுவதற்கு மேற்படி சூழ்நிலைச் சாட்சியங்கள் வாய்ப்பளிக்கின்றன. மேற்படி பாதிரியாரை மேற்படி, சூழ்நிலைச் சாட்சியங்களை வைத்து தண்டிக்கவியலாது எனக்கூறி நீதிமன்றம் அவருக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்தது.

Pohalya Motya Valvi v. State of Maharashtra[1]

சூழ்நிலைச் சாட்சியங்களை மட்டுமே சார்ந்திருக்கிற வழக்கில், அரசுத் தரப்பு, தாம் சார்ந்துள்ள ஒவ்வொரு சந்தர்ப்பமும் அறிவுக்குப் பொருத்தமானதாகவும் மற்றும் தெளிவான நம்பத் தகுந்த சாட்சியத் தினாலும் நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிக்கப்பட்ட எல்லா சாட்சியங் களும் ஒரு முற்றுப்பெற்ற சங்கிலிக் கோவையாகவும் (a complete chain) அதில் தொடர்புள்ள எதுவும் அச்சங்கிலிக் கோவையிலிருந்து நழுவாமலும் இருக்க வேண்டும். அவைகள் எல்லாம் குற்றஞ் சாட்டப் பட்டவரின் குற்றத்தை எவ்வித ஏற்பாட்டிற்கும் இடமில்லாமல் நிரூபிக்கும் வகையில் அமைய வேண்டும், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

நேர்நிலைச் சாட்சியம், சூழ்நிலைச் சாட்சியத்தை விட உயர்ந்ததா அல்லது தாழ்ந்ததா?

மேற்கண்ட வழக்குகளைக் காணும் பொழுது சூழ்நிலைச்

1. AIR 1979 SC 1949; 1980 (1) SCC 530

சாட்சியத்தைக் கொண்டு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது; அவ்வாறே சூழ்நிலை சாட்சியங்கள் இருந்தும் அவை குற்றச் செயலை சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்காததால் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுதலையும் செய்யப்பட்டுள்ளார். ஒரு வழக்கில் நேர்நிலைச் சாட்சியங்கள் இருந்து விட்டால், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு தண்டனை நிச்சயம் என உறுதியாகக் கூறலாம். ஆனால் சூழ்நிலைச் சாட்சியம் அவ்வாறல்ல. அவை ஒரு சங்கிலித் தொடர்போல் அமைந்து, குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்றச் செயலை சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபித்தால்தான், அவருக்கு தண்டனை விதிப்பதற்கு வாய்ப்புண்டு. இதற்கு மாறாக சூழ்நிலைச் சாட்சியங்களின் சங்கிலித் தொடரில் ஏதேனும் ஒரு சங்கிலி நழுவி ஒரு சிறிய சந்தேகத்தை உண்டு செய்தாலும் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட வாய்ப்பு உள்ளது. அதாவது சூழ்நிலைச் சாட்சியங்களை மட்டும் நம்பி தொடுக்கப்படும் குற்ற வழக்குகள் மதில் மேல் பூனை நின்ற கதைதான். குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு தண்டனை நிச்சயம் கிடைக்கும் என உறுதியாகக் கூற முடியாது. எனவே சூழ்நிலைச் சாட்சியத்தைவிட நேர்நிலைச் சாட்சியந்தான் உயர்ந்ததாக கூற முடியும்.

முடிவுரை:

வழக்கின் சூழ்நிலைகள், குற்றஞ் சாட்டப்பட்டவர் அக்குற்றச் செயலை செய்திருப்பதற்கு வாய்ப்புண்டு; அவ்வாறு சந்தேகப்படுவதற்கு இடமுள்ளது என்பது மட்டும் அவரை தண்டிப்பதற்கு போதாது. அவை, அக்குற்றச் செயலைச் செய்தவர் மேற்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்தான் என்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் 100 விழுக்காடு நிரூபிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவரைத் தண்டிக்கவியலும். இவற்றைப் பார்க்கும்பொழுது, சூழ்நிலைச் சாட்சித்தை விட நேர்நிலைச் சாட்சியமே மேல் என்பது புலனாகும்.

- o -

6 பொருண்மை [Fact]

12. Explain

a) fact

b) facts in issue

c) relevant fact

விளக்குக.

அ) பொருண்மை

ஆ) தீர்வுதரு பொருண்மை

இ) தீர்வுதவு பொருண்மை

(அல்லது)

Define 'facts', 'facts in issue' and 'relevant facts'. (சங்கதி, பிரச்சனையில் உள்ள சங்கதி, தொடர்புற்ற சங்கதி இவற்றை வரையறுக்க).

(அல்லது)

"Evidence may be given of fact in issue and relevant facts" . What are these facts? ("தீர்வுக்குரிய பொருண்மைகள் பற்றியும் தீர்வு தவு பொருண்மைகள் பற்றியும் சான்றுகள் அளிக்கப்படலாம்". இத்தகைய பொருண்மைகள் யாவை?)

(அல்லது)

Define "Fact". Explain critically the kinds of facts that are admissible as evidence. ("பொருண்மை" என்பதினை வரையறு. எத்தகைய பொருண்மைகள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதை விளக்குக.)

முன்னுரை:

பொருண்மை (fact), தீர்வுதரு பொருண்மை (facts in issue) மற்றும் தீர்வுதவு பொருண்மை (relevant facts) ஆகியவைதாம் இனிவரும் அத்தியாயங்களை படிப்புதற்கு பேருதவியாக இருக்கும் சாட்சிய சட்டத்திற்கு அடிப்படையான சொற்களாகும். 'பொருண்மை' என்பதை 'சங்கதி' (fact) என்றும், 'தீர்வுதரு பொருண்மையை' 'பிரச்சனையில் உள்ள சங்கதி' (facts in issue) என்றும், 'தீர்வுதவு பொருண்மையை' 'தொடர்புடைய சங்கதி' (relevant facts) என்றும் அழைப்பதுண்டு. அவை மேற்படி ஆங்கிலப்

பதங்களுக்கு நேரடியான தமிழ்பதங்களை கூறுகிறன. ஆனால் மேற்படி சொற்களின் செயல்பாட்டை நோக்கும் பொழுது மேற்கண்டவாறு பொருண்மை, தீர்வுதரு பொருண்மை, தீர்வுதவு பொருண்மை என முறையே அழைப்பதுதான் சாலச்சிறந்தது. இவ்வாறு தமிழில் அழைக்கப் படுவதற்குண்டான காரணத்தை பின்வரும் பத்திகளைக் கண்டால் மேலும் தெளிவாகும். மேற்படி மூன்று பதங்களுக்கும் இந்திய சாட்சியச் சட்டத்தின் **3வது பிரிவில் வரையறை (definition)** கொடுக்கப்பட்டுள்ளது.

(a) பொருண்மை (Fact):

அறிஞர் பெந்தாம் **(Bentham)** அவர்கள் பொருண்மைகளை (1) உடல் புலன்களால் அறியக்கூடிய பொருண்மை (Physical Fact) என்றும், (2) உள்ளுணர்வின் மூலம் அறியக்கூடிய பொருண்மை (Psychological Fact) என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். இதில் முதல் வகையை நமது புலன்களாகிய கண், காது இவற்றால் பார்த்தும், கேட்டும் அறிந்து கொள்ளலாம். இரண்டாவது வகையை அவ்வாறு புலன்களால் அறிய முடியாது. உள்ளுணர்வின் மூலம் மட்டுமே அறிந்துகொள்ள முடியும். இது ஒருவனின் மனநிலையை (mental condition) அறிந்து கொள்ள உதவி புரியும். உதாரணமாக நல்லெண்ணம் மற்றும் தீயெண்ணம்.

இந்திய சாட்சிய சட்டமும் மேற்கண்டவாறே பொருண்மைகளை வகைப்படுத்தி வரையறுத்துள்ளது. சில பொருண்மைகளை நமது உடல் புலன்களால் அறிந்து கொள்ளலாம். ஆனால் சில பொருண்மைகளை அவ்வாறு அறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக ஒருவனின் மனநிலை இதைப் பார்க்க முடியாது; தொட்டு உணர முடியாது; இதை உள்ளுணர்வின் (conscious) மூலம்தான் அறிய முடியும். ஒருவன் தீய எண்ணத்தை கொண்டுள்ளான் என்பது அவனது மனநிலை. இது உள்ளுணர்விற்கு மட்டுமே தெரியக்கூடியதாகும். எனவே, மேற்படி அத் தீயெண்ணம் ஒரு பொருண்மையாகிறது.

சாட்சியச் சட்டம் தரும் வரையறை:

இதையே பின்வருமாறு இரண்டே வரிகளில் இந்திய சாட்சிய சட்டம் வரையறுக்கிறது.

பொருண்மை என்பது,

1) புலன்களால் அறியக்கூடிய பொருள், பொருள்களின் நிலை, பொருள்களின் உறவு (தொடர்பு) எதுவும். (anything, state of things or relation of things, capable of being perceived by the senses);

2) எவரேனுமொருவரின் உணர்வுக்குத் தெரிகிற மனநிலை எதுவும். (any mental condition of which any person is conscious).

மேற்கண்டவற்றில், 1-வது உட்பிரிவில் கூறப்பட்டவை உடல்

புலன்களால் அறியக் கூடியது. 2-வது உட்பிரிவில் கூறப்பட்டவை உள்ளுணர்வால் அறியக்கூடியது.

எடுத்துக்காட்டுகள் (Illustrations):

அ) ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட முறையில் குறிப்பிட்ட பொருள்கள் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது ஒரு பொருண்மை.

ஆ) ஏதோ ஒன்றை ஒரு மனிதர் கேட்டார் அல்லது பார்த்தார் என்பது பொருண்மை.

இ) குறிப்பிட்ட சொற்களை ஒரு மனிதர் கூறினார் என்பது ஒரு பொருண்மை.

ஈ) ஒரு மனிதர் குறிப்பிட்ட ஒரு கருத்துக் கொண்டிருக்கிறார், குறிப்பிட்ட ஒரு உட்கருத்துக் கொண்டிருக்கிறார், நல்லெண்ணத்துடனோ அல்லது மோசடியாகவோ செயற்படுகிறார் அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளில் ஒரு குறிப்பிட்ட சொல்லை பயன்படுத்துகிறார் அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி அவருடைய உணர்வுக்கு தெரிகிறது அல்லது தெரிந்தது என்பது ஒரு பொருண்மை.

உ) ஒரு மனிதர், ஒரு குறிப்பிட்ட பெயரெடுத்தவராயிருக்கிறார் என்பது ஒரு பொருண்மை.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் (அ) முதல் (இ) வரையுள்ளவற்றை உடல் புலன்களால் அறியக்கூடிய பொருண்மைகள் எனலாம். (ஈ) மற்றும் (உ) ஆகியவை உள்ளுணர்வால் அறியக்கூடிய மனநிலையை பொறுத்த பொருண்மைகள் எனலாம்.

(b) தீர்வுதரு பொருண்மை (Fact in issue):

'தீர்வுதரும் பொருண்மையை' 'பிரச்சனையில் உள்ள பொருண்மை' என்றும் கூறலாம் என நாம் முன்னுரையிலே கண்டோம். அதாவது ஒரு வழக்கென்பதே ஒரு பிரச்சனையை ஒட்டி அமைவதாகும். அப்பிரச்சனையில் ஒரு தரப்பினரால் கூறப்படும் சில பொருண்மைகள் மறு தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது மறுக்கப்படும். மறு தரப்பினர் ஏற்றுக்கொள்ளும் பொருண்மைகளுக்கு சாட்சியம் அளிக்க வேண்டியதில்லை. ஆனால் மறுதரப்பினர் மறுக்கும் பொருண்மைகளை நிரூபிக்க சாட்சியம் அளிக்க வேண்டும். அதற்காக நீதிமன்றம் சில வினாக்களை வனைகிறது. அவைகளுக்கு அளிக்கப்படும் விடைகளே தீர்ப்பு எழுதுவதற்கு ஆதாரமாக அமைகின்றன. அப்படிப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றும், ஒரு பொருண்மையைக் குறித்ததாகவே இருக்கும். இந்தப் பொருண்மையிலிருந்து வழக்கின் தீர்வு எளிதில் பெறப்படுகின்றது. இதை "தீர்வுக்குரிய பொருண்மைகள்" என்றும் கூறலாம்.

சுருங்கக்கூறின், ஒரு வழக்கில் வலியுறுத்தப்படும் அல்லது மறுக்கப்படும் ஓர் உரிமை, பொறுப்பு அல்லது இயலாமை இவற்றைப் பற்றி அறியப்படும் வகையில் அமையும் பொருண்மைகள் 'தீர்வுதரும் பொருண்மைகள்' ஆகின்றன.

சாட்சிய சட்டம் தரும் வரையறை:

இதையே, இந்திய சாட்சிய சட்டம் தனது **3-வது பிரிவின்** வாயிலாக சற்று விரிவாக பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது,

'தீர்வுதரும் பொருண்மைகள்' என்பது ஓர் உரிமையியல் வழக்கில் அல்லது நடவடிக்கையில் வலியுறுத்தப்படும் அல்லது மறுக்கப்படும் ஏதேனும் ஒரு உரிமை, பொறுப்பு அல்லது இயலாமை (liability or disability) இருப்பதோ (existence) அல்லது இல்லாமலிருப்பதோ (non - existence) அல்லது அதன் தன்மையோ (nature) அல்லது அளவோ (extent), - ஒரு பொருண்மையிலிருந்து அந்தப் பொருண்மை தனித்திருப்பினும் அல்லது மற்ற பொருண்மைகளுடன் தொடர்புற்றிருப்பினும் - பெறப்படுவது இன்றியமையாததாக இருப்பின், அவை அனைத்தும் 'தீர்வு தரும் பொருண்மைகள்' ஆகும்.

விளக்கம்:

உரிமையியல் நடைமுறை சம்பந்தமாக அவ்வப்போது அமலில் உள்ள சட்ட நெறிமுறைகளின்படி, ஒரு நீதிமன்றம் ஒரு பொருண்மை பற்றிய வினாவினை எழுத்துருவில் கிளப்பும்போது, அந்த வினாவிற்கு விடையளிக்கும் முறையில் கூறப்படுகின்ற அல்லது மறுக்கப்படுகின்ற பொருண்மை, தீர்வுதரு பொருண்மையாகும்.

எடுத்துக்காட்டு (Illustration):

A என்பவர் B என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அவர் மீது நடக்கும் வழக்கு விசாரணையில் பின்வரும் பொருண்மைகள் தீர்வுக்குரிய (பிரச்சனைக்குரிய அல்லது தீர்வு தரக்கூடிய) பொருண்மைகளாக உள்ளன.

அ) A என்பவர் B என்பவருக்கு மரணத்தை விளைவித்தாரா என்பது,

ஆ) A, Bக்கு மரணம் விளைவிக்கும் உட்கருத்து கொண்டிருந்தாரா என்பது,

இ) Bஆனவர் Aயை கொலை செய்யும் அளவுக்கு திடீரென்று ஆத்திரமடையச் செய்தாரா என்பது,

ஈ) A, B-யைக் கொலை செய்யும் பொழுது புத்தி சுவாதீனமில்லாமல் இருந்து, அதனால் தான் செய்யும் செயலின் தன்மையை அறியும் திறனற்றவராக இருந்தாரா என்பது.

(c) தீர்வுதவு பொருண்மை (Relevant fact):

இதை 'தொடர்புடைய பொருண்மை' என்றும் அழைக்கலாம். இது இலத்தீன் மொழியில் 'ஃபேக்ட்டம் புரோபேன்ஸ்' **(Factum Probans)** என அழைக்கப்படுகிறது.

இந்திய சாட்சிய சட்டப்படி, ஒரு பொருண்மை மற்றொரு பொருண்மையுடன் தொடர்பு கொண்டிருந்தால், அது 'தொடர்புடைய பொருண்மை' எனப்படுகிறது. இது சட்டத் தமிழில் 'தீர்வு தரு பொருண்மை' என அழகாக அழைக்கப்படுகிறது. தொடர்புபடுத்துவதன் நோக்கம் யாதெனில், தொடர்பு கொண்டுள்ள பொருண்மைகளில் ஒரு பொருண்மையை மெய்ப்பிப்பதன் வாயிலாக மற்றொரு பொருண்மையை மெய்ப்பிக்கலாம் அல்லது பொய்ப்பிக்கலாம். அவ்வாறு ஒரு பொருண்மையை பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் மெய்ப்பிக்க உதவும் மற்றொரு பொருண்மையை 'தீர்வுக்கு உதவும் பொருண்மை' அதாவது 'தீர்வு தவு பொருண்மை' என அழைப்பதே முறையானதாகும். சுருங்கக்கூறின், தீர்வுதரு பொருண்மைகளை மெய்ப்பிப்பதற்கோ அல்லது பொய்ப்பிப்பதற்கோ உதவும் வகையில் அமையும் பொருண்மையே 'தீர்வுதவு பொருண்மை' எனப்படுகிறது.

'அறிஞர் சர் ஜேம்ஸ் ஸ்டீபன்' அவர்களின் கருத்துப்படி, நிகழ்ச்சிகளின் பொதுவான போக்கில், ஒரு பொருண்மை தனித்தோ அல்லது பிற பொருண்மைகளுடன் சேர்ந்தோ கடந்த காலத்தில் ஒரு பொருண்மை இருந்ததையோ அல்லது இல்லாமல் இருந்ததையோ அல்லது நிகழ்காலத்தில் ஒரு பொருண்மை இருப்பதையோ அல்லது இல்லாமல் இருப்பதையோ அல்லது எதிர்காலத்தில் ஒரு பொருண்மை இருக்கப்போவதையோ அல்லது இல்லாமல் இருக்கப்போவதையோ மெய்ப்பித்தால் அல்லது அநேகமாக நிகழும் வாய்ப்புள்ளதாக ஆக்குமானால், அது அப்பொருண்மையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தீர்வுதவு பொருண்மையாக உள்ளது எனப்படும். தீர்வுதவு பொருண்மைகள் சான்று கூறும் பொருண்மைகளாகும். அவற்றிலிருந்து தீர்வுதரும் பொருண்மை, உடனடியாகவோ அல்லது அனுமானத்திலி ருந்தோ கிடைக்கிறது. அப்படிப்பட்ட பொருண்மைகள்தாம் தீர்வுதரும் பொருண்மையை மெய்பிக்க முனையும் பொருண்மைகளாகும். இவ்வாறு மேற்கண்ட அறிஞர் கூறுகிறார்.

தீர்வுதரு பொருண்மை மற்றும் தீர்வுதவு பொருண்மை - இரண்டு எளிய உதாரணங்கள்:

1) தம்மிடமிருந்து ரூ. 10,000/- கடன் வாங்கியதாகவும், அதைத் திருப்பித் தரவில்லை என்றும் கூறி A என்பவர் Bயின் மீது வழக்குத் தொடுக்கிறார். ஆனால் B, Aயின் வழக்கை மறுத்து, தான் அவ்வாறு கடன் வாங்கவில்லை எனக் கூறுகிறார். இப்பொழுது இவ்வழக்கில் எழக்கூடிய வினா யாதெனில்,

'B என்பவர் Aயிடமிருந்து ரூ. 10,000/– கடன் வாங்கினாரா?"

என்பதுதான். இதனைத்தான் 'தீர்வுதரு பொருண்மை' அல்லது 'தீர்வுக்குரிய பொருண்மை' (Fact in issue) என்கிறோம்.

B, Aயிடம் கடன் வாங்கும் பொழுது அதை நேரடியாக கண்ட சாட்சி இருக்கலாம். அந்த சாட்சியத்திலிருந்து 'தீர்வுதரு பொருண்மை' அறியப்படலாம். மேலும், கடன் வாங்கப்பட்ட சமயத்தில், Bயின் மகளுக்கு திருமணம் நடந்ததாகவும், அத்திருமணத்திற்கு Bக்கு பணம் தேவைப்பட்டதாகவும் கூறும் சாட்சியங்களை A நீதிமன்றத்தின் முன் படைக்கிறார்.

Bயின் மகளின் திருமணமும், அதற்கு Bக்கு பணம் தேவைப்பட்டதும், வழக்கின் நேரடித் தீர்வுக்கு உள்ளன அல்ல. எனினும் முன்கண்ட தீர்வுதரு பொருண்மையை துணிவதற்கு இவை உதவியாக உள்ளன. Bக்கு அச்சமயத்தில் பணம் தேவைப்பட்டு இருந்ததால், ஒருவேளை கடன் வாங்கியிருக்கலாம் என்ற ஊகம் எழுகிறது. எனவே Bயின் மகளின் திருமணம் பற்றியும், சாட்சியம் கொண்டு வரப்படுகிறது. ஆகவே **Bயின் மகளின் திருமணச் செய்தி** 'தீர்வுதவு பொருண்மை' அல்லது 'தொடர்புடைய பொருண்மை' (Relevant fact) ஆகிறது.

மேற்கண்ட உதாரணத்தில், பொருண்மைகளை தொடர்புபடுத்தி, Bயின் மகளின் திருமணத்தையும் அதற்கு பணம் தேவைப்பட்டதையும் மெய்ப்பித்து அதன் வாயிலாக B, Aயிடமிருந்து கடன் வாங்கினார் என்ற பொருண்மைளை மெய்ப்பிக்கிறோம்.

2) மற்றொரு உதாரணத்தில் A, Bயை கத்தியால் குத்தி கொலை செய்தார் என குற்றஞ்சாட்டப்படுகிறது. இதில் **"A, Bயைக் கத்தியால் குத்தி கொலை செய்தாரா?"** என்பது தீர்வுதரு பொருண்மையாகும்.

A, Bயைக் கொலை செய்யும் தினத்திற்கு முன் அவர் அக்குறிப்பிட்ட **கத்தியை ஒரு குறிப்பிட்ட கடையில் வாங்கியதாகவும், Aக்கும் Bக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம்** இருந்ததாகவும் சாட்சியங்கள் நீதிமன்றத்தின் முன் கொணரப்படுகின்றன. வழக்கினைத் தீர்ப்பதில் இச்சாட்சியங்கள் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லையென்றாலும், வழக்கினை தீர்ப்பதற்கு உதவியாக உள்ளது. அதாவது தீர்வுதரு பொருண்மையை மெய்ப்பிக்க உதவுவதாக மேற்கண்ட பொருண்மைகள் உள்ளது. ஆகவே அவை தீர்வுதவு பொருண்மைகள் ஆகும்.

13. Distinguish between

Fact in issue and Relevant fact.

வேறுபடுத்திக் காட்டுக.

தீர்வுதரு பொருண்மை மற்றும் தீர்வுதவு பொருண்மை

தீர்வுதரு பொருண்மை (Fact in issue)	தீர்வுதவு பொருண்மை (Relevant fact)
1. ஒரு வழக்கில் வலியுறுத்தப் படும் அல்லது மறுக்கப்படும் ஒரு உரிமை (right), பொறுப்பு (liability) அல்லது இயலாமை (disability) குறித்து ஒரு தீர்விற்கு வரும் பொருட்டு பெறப்படும் பொருண்மைகள் தீர்வுதரு பொருண்மைகள் ஆகும். அதாவது வழக்கின் இருதரப் பினர்களுக்கிடையே எழும் உரிமை மற்றும் பொறுப்பு குறித்த கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் அமையும் விஷயமே 'தீர்வுதரு பொருண்மையாகும்'.	இரண்டு பொருண்மைகளில் ஒரு பொருண்மையை மெய்ப்பிப் பதன் வாயிலாக மற்றொரு பொருண்மையை மெய்ப்பிக்கலாம். அல்லது பொய்ப்பிக்கலாம் என்ற நிலை இருந்தால், அவ்வாறு ஒரு பொருண்மையை பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் மெய்ப்பிக்க உதவும் மற்றொரு பொருண்மையே 'தீர்வுதவு பொருண்மை' எனப்படும்.
2. இப்பொருண்மை வழக்குத் தரப்பினர்களின் உரிமை மற்றும் பொறுப்புகளை சுட்டிக்காட்டி வழக்கின் தீர்வுக்கு வழி வகுக்கிறது.	இங்கு அவ்வாறில்லை. இவை தீர்வு தரு பொருண்மைகளை மெய்ப் பிக்க அல்லது பொய்ப்பிக்க மட்டுமே பயனாகிறது. அதாவது தீர்வுதரு பொருண்மை நிகழ்ந் துள்ளது (existence) என்பதை எடுத்துக்காட்டுகிறது.
3. தீர்வுதரு பொருண்மையை 'முதனிலைப் பொருண்மை' (Principal fact or factum probandum) என அழைக்கலாம்.	தீர்வுதவு பொருண்மையை, 'சான்று கூறும் பொருண்மை' (Evidentiary fact or factum probans) என அழைக்கலாம்.
4. வழக்கொன்றில் தீர்வுக்கு வருவதற்கு 'தீர்வுதரு பொருண்மை' தான் அடிப் படையாகும். இது இல்லா விட்டால் அவ்வழக்கை சரியான திசையில் நடத்த முடியாது.	இங்கு அவ்வாறில்லை. இப் பொருண்மைகள் இல்லாமலும் வழக்கை நடத்தலாம். (நேரடிச் சாட்சியங்கள் உள்ளபொழுது மட்டும்).
5. **உதாரணம்:** ஒரு கொலை வழக்கில் "A, Bயைக் கொன்றானா?" என்பது தீர்வுதரு பொருண்மையாகும்.	**உதாரணம்:** A, Bயைக் கொன்றதற்கு கண்ணால் பார்த்த சாட்சிகள் (நேரடிச் சாட்சிகள்) இருந்தால், தீர்வுதவு

	பொருண்மைகளுக்கு அவசியமில்லை. அவ்வாறு இல்லாத பொழுது "Aக்கும் Bக்கும் முன் விரோதம் இருந்தது. ஏற்கனவே கொலை முயற்சி நடந்தது" என்பது தீர்வுதவு பொருண்மை ஆகும். ஏனெனில் அது தற்பொழுது நடந்துள்ள கொலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பொருண்மையாக விளங்குகிறது.

- o -

7

அனுமானம் (அல்லது) துணிபு [Presumption]

14. Define and Explain

a) **May presume**

b) **Shall presume**

c) **Conclusive proof.**

பொருள் இலக்கணம் கூறி விளக்குக.

அ) அனுமானிக்கலாம்

ஆ) அனுமானிக்க வேண்டும்

இ) அறுதியான சான்றுறுதி.

(அல்லது)

Explain the significance of "May Presume", "Shall Presume" and "Conclusive Proof" in the Indian Evidence Act. (இந்திய சாட்சிய சட்டத்தில் காணப்படும் "அனுமானிக்கலாம்", "அனுமானித்தல் வேண்டும்" மற்றும் "அறுதியிட்டுக் கூறுதல்" எனும் பதங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.)

(அல்லது)

State the kinds of presumptions under the Indian Evidence Act and the legal incidents of each of them. (இந்திய சாட்சிய சட்டத்தில் உள்ள பல்வகை அனுமானங்களையும் அவற்றின் சட்டமுறையான சிறப்புக் கூறுகளையும் எடுத்தியம்புக.)

அனுமானம் (அல்லது) துணிபு (Presumption) - விளக்கம்:

பின்வருவனவற்றை தெரிந்து கொள்வதற்கு முன் 'அனுமானம்' என்பதின் விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். 'அனுமானம்' என்பதை **'ஊகம்'** அல்லது **'துணிபு'** என்றும் கூறலாம். பொதுவாக ஒன்றிலிருந்து மற்றொன்றை ஊகிப்பதை 'அனுமானம்' அல்லது 'துணிபு' என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, ஓர் ஆணும் பெண்ணும், கணவனும் மனைவியுமாக ஒரே வீட்டில் பல ஆண்டுகள் வசித்து வந்தார்கள் என்பதற்கு சான்று இருந்தால் அவர்கள் இருவரும் திருமணம் ஆனவர்கள் என்று ஊகிக்கலாம். இவர்களது உடனுறைவிலிருந்து திருமணம் துணியப் படுகிறது. இதுவே 'அனுமானம்' அல்லது 'துணிபு' எனப்படுகிறது.

இதையே சட்ட மொழியில் கூறுவதென்றால் நீதிமுறையின்படி

அறிந்து கொள்ளப்பட்ட (judicially noticed), மெய்ப்பிக்கப்பட்ட அல்லது உண்மையென ஏற்கப்பட்ட ஒரு பொருண்மையிலிருந்து எழும் மற்றொரு பொருண்மை பற்றிய ஊகம் அல்லது முடிவு, 'அனுமானம்' எனப்படுகிறது.

இத்தகு அனுமானத்தை, இந்திய சாட்சிய சட்டமானது தனது **4–வது பிரிவின்** வாயிலாக, **அனுமானிக்கலாம், அனுமானித்தல் வேண்டும் மற்றும் அறுதியான சான்றுறுதி** என்ற மூன்று நிலைகளில் விளக்குகிறது. இது அனுமானம் (துணிபு) பற்றிய ஆங்கிலச் சட்ட விதிகளுக்கு சற்று மாறுபட்டதாகும். ஆனால் ஆங்கில சட்ட விதிகள்தாம் மேற்கண்ட மூன்று அனுமான நிலைகளுக்கும் அடிப்படையாகும். எனவே முதலில் ஆங்கில சட்டடத்தின்படியிலான அனுமானத்தை (துணிபு) தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

ஆங்கில சட்டத்தின்படி அனுமானம் (அல்லது) துணிபு:

ஆங்கில சட்டமானது துணிபை (i) பொருண்மை துணிபு (Presumption of law) என்றும், (ii) சட்டத் துணிபு (Presumption of law) என்றும் இரண்டு முக்கிய வகையாகப் பிரிக்கின்றது.

(i) பொருண்மைத் துணிபு (Presumption of fact):

நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் எதையெல்லாம் சாதாரணமாகவும் இயற்கையாகவும் ஊகித்து செயல்படுகிறோமோ, அவையாவும் பொருண்மைத் துணிபு எனப்படும். இவை மனித மனம், மனிதனின் செயல், சமுதாய பழக்க வழக்கங்களை ஒட்டி எழும் ஊகங்களாகும். இதை **இயற்கைத் துணிபு (Natural Presumption)** என்றும் கூறலாம்.

எடுத்துக்காட்டாக, கத்தியால் குத்தப்பட்டு இறந்து கிடந்த ஒருவனது அறையிலிருந்து, இரத்தக்கறை படிந்த உடைகளுடன் மற்றொருவன் வெளிவந்தால், அந்த மற்றொருவன்தான் அந்த ஒருவனை கத்தியால் குத்திக் கொன்ற கொலையாளி என்று நாம் இயற்கையாக அனுமானிக்கலாம். இதுவே பொருண்மைத் துணிபு எனப்படுகிறது.

(ii) சட்டத் துணிபு (Presumption of law):

இத்துணிபு சட்டத்தின் வலிமையைப் பெற்றதாகும். சட்டம் சிலவற்றை அனுமானிக்க வேண்டும் என்று கூறுகிறது. சில பொருண்மைகள் ஒரு ஊகத்திற்கு வருமளவிற்கு அடிப்படையாக விளங்குகிறது என சட்டம் அனுமானித்தால், சில காரணங்களை முன்னிட்டு அதை அவ்வாறே (செயற்கையாக) அனுமானிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. அத்தகு அனுமானமே, சட்டத் துணிபாகும். இது **செயற்கைத் துணிவு (Artificial Presumption)** என்றும் கூறப் படுகிறது.

எடுத்துக்காட்டாக, குற்றஞ் சாட்டப்பட்டவரின் மீதான குற்றச் சாட்டு நிரூபிக்கப்படும் வரை அவரை நிரபராதி என்றே அனுமானித்தல் வேண்டும் (A man is presumed innocent, until he is proved guilty).

சட்டத் துணிபு - இரண்டு வகை:

சட்டத்துணிபை (அ) மறுக்கக்கூடிய சட்டத் துணிபு என்றும், (ஆ) மறுக்க முடியாத சட்டத் துணிபு என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். விரிவாக பின்வருமாறு காண்போம்,

(அ) மறுக்கக்கூடிய சட்டத் துணிபு (Rebuttable Presumption of law):

பொதுவாக அனைத்து பொருண்மைத் துணிபுகளையும் (Presumption of fact) மறுக்கும் வண்ணம் சாட்சியங்களை சமர்ப்பிக்கலாம். உதாரணமாக நாம் மேற்சென்ற பத்தியில் கண்ட எடுத்துக்காட்டில், கத்தியால் குத்தப்பட்டு கிடந்தவரின் அறையிலிருந்து இரத்தக்கறை படிந்த ஆடைகளுடன் வெளிவந்தவனே கொலையாளி என்ற பொருண்மைத் துணிபைக் கண்டோம். இதனை மறுக்கலாம். அதாவது கத்தியால் குத்தப்பட்டவனை அவனது அலறல் கேட்டு காப்பாற்றும் பொருட்டு அவனது அறைக்குள் நுழைந்து அவனைத் தாங்கிப் பிடித்தபொழுது, அவனுடைய உடம்பில் இருந்து வெளியேறிய ரத்தம் அவனைக் காப்பாற்ற முயன்ற மேற்படி நபரின் ஆடைகளில் படிந்து விட்டது, என்பதாக சாட்சிகள் கொடுத்து, அப்பொருண்மைத் துணிபை மறுத்து விடலாம்; அந்நபரைக் கொலை குற்றத்திலிருந்தே காப்பாற்றி விடலாம். எனவே அனைத்து பொருண்மைத் துணிபுகளும் மறுக்கத்தக்கதே.

ஆனால் சட்டத் துணிபுகளை ஒரு சில சூழ்நிலைகளில் மட்டுமே மறுக்கமுடியும். சில சூழ்நிலைகளில் அவற்றை மறுக்கமுடியாது (Irrebuttable). சட்ட விதியானது ஒரு துணிபை மறுக்கமுடியும் எனக் கூறி அனுமதித்தால், அத்துணிபை பொய்ப்பிக்கும் வண்ணம் சாட்சியம் கொடுக்கலாம்.

எடுத்துக்காட்டாக, குற்றஞ் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை அவரை நிரபராதி என்றே கருத வேண்டும், என்ற சட்டத் துணிபை நாம் மேலே கண்டோம். ஆனால் அவன் குற்றவாளிதான் என்று மெய்ப்பிப்பதற்கு அரசு தரப்பினருக்கு (Prosecution) முழு உரிமையை சட்டம் வழங்கியுள்ளது. எனவே தக்க சாட்சியங்களை கொண்டு, அவன் செய்த குற்றத்தை நிரூபித்து, அவன் நிரபராதி என்ற 'சட்டத்துணிபை' அரசு தரப்பினர் மறுக்கலாம்.

(ஆ) மறுக்கமுடியாத சட்டத் துணிபு (Irrebuttable Presumption of law):

ஒரு சட்டத் துணிபை மறுக்கக்கூடாது என சட்ட விதிகள் கூறினால், அதை பொய்ப்பிக்கும் வண்ணம் சாட்சியங்கள் எதனையும்

சமர்ப்பிக்கக்கூடாது. அப்படிப்பட்ட சட்டத் துணிபுகளை 'மறுக்க முடியாத சட்டத் துணிபு' என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, சட்டங்கள் முறைப்படி இயற்றப்படுகின்றன. தக்க விதத்தில் நிறைவேற்றப்பட்டு, **'அரசிதழில்' (Gazette)** வெளியிடப்படுகிறது. அந்த 'அரசித்ழ்' அறிக்கையே அச்சட்டம் முறைப்படி நிறைவேற்றப்பட்டதற்கு சான்றாக அமைகிறது. அதாவது அரசிதழில் ஒரு சட்டம் வெளியிடப்பட்டுவிட்டால், அது முறைப்படி இயற்றப்பட்ட தாகவே அனுமானிக்க வேண்டும் என்பதே இங்கு எழும் சட்டத் துணிபாகும். ஒரு சட்டம் குறித்த பிரச்சனையில் 'அரசிதழ்' அறிக்கை சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டால், அதை மறுத்து வேறு சாட்சியங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படக் கூடாது என சட்டம் விதிக்கிறது. எனவே இவ்வாறு சட்டம் தடுப்பதால், மேற்படி சட்டத்துணிபை வேறு சாட்சியங்கள் கொண்டு மறுக்கக்கூடாது. இதுவே 'மறுக்கமுடியாத சட்டத் துணிபு' எனப்படுகிறது.

இந்திய சட்டத்தின்படி அனுமானம் (அல்லது) துணிபு:

ஆங்கிலச் சட்டம் மேற்கண்டவாறு கூறியதையே, இந்திய சாட்சிய சட்டமானது, அனுமானிக்கலாம் (May Presume); அனுமானித்தல் வேண்டும் (Shall Presume); அறுதியான சான்றுறுதி (Conclusive Proof) என வேறு பெயரிட்டு வரையறுக்கிறது. அவற்றை பின்வருமாறு காணலாம்.

(a) அனுமானிக்கலாம் (May Presume) [பிரிவு - 4]:

ஆங்கிலச் சட்டம் கூறிய 'பொருண்மைத் துணிபே' (Presumption of fact), இந்திய சாட்சிய சட்டத்தால் 'அனுமானிக்கலாம்' என்ற தலைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

நீதிமன்றம் ஒரு பொருண்மையை அனுமானித்துக் கொள்ளலாம் என்று, இந்திய சாட்சிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கும் போதெல்லாம், அப்பொருண்மை பொய்ப்பிக்கப்படும் வரை மெய்ப்பிக்கப்பட்டதாகவே அனுமானிக்கலாம் அல்லது அதற்கான சான்றுறுதியை (Proof) கொடுக்குபடி கோரலாம்.

இந்திய சாட்சிய சட்டத்தில் ***86 முதல் 90 வரை உள்ள பிரிவுகளும் 114வது*** பிரிவும் பொருண்மைகளை அனுமானிக்கலாம் என்று கூறுகிறது. ***பிரிவு 114***ல் சில எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை 'அனுமானிக்கலாம்' என்பதற்கு சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன. அவை வருமாறு.

(i) திருட்டுப் பொருளை தன்னுடைய உடைமையில் வைத்துக் கொண்டிருக்கும் நபர் அப்பொருள் குறித்து (அது எப்படி வந்தது; யார் விற்றது; என்ன விலை கொடுத்த வாங்கியது என்பது போன்ற) சரியான

விபரம் கொடுக்கவில்லையென்றால், நீதிமன்றம் இரண்டு விதங்களில் அனுமானிக்கலாம். ஒன்று, அப்பொருளை அவரே திருடியிருக்க வேண்டும்; மற்றொன்று, அப்பொருளை திருட்டுப் பொருள் என்ற தெரிந்தே தீய எண்ணத்துடன் பெற்றிருக்க வேண்டும்.

(ii) உடன் குற்றவாளி (accomplice) கூறும் உரைகள் மற்ற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட்டாலன்றி, அவர் நம்பத்தகுதியற்றவரே என்று நீதிமன்றம் அனுமானிக்கலாம்.

(iii) ஒரு மாற்றுச் சீட்டு (bill of exchange) ஏற்றுக் கொள்ளப்பட்டாலோ (accepted) அல்லது மேலெழுதிக் கொடுக்கப்பட்டாலோ (endorsed) அது ஒரு நல்ல மறுபயனுக்காகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது மேலெழுதிக் கொடுக்கப்பட்டது, என அனுமானிக்கலாம்.

(iv) ஒரு பொருளின் நிலையானது, அதில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்படாத வரை, அது அவ்வாறே உள்ளது என்று அனுமானிக்கலாம்.

(v) நீதிமன்ற நடவடிக்கைகளும், அலுவலக நடவடிக்கைகளும் எப்பொழுதும் முறைப்படி நடைபெற்றது என அனுமானிக்கலாம்.

(vi) குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொதுவான அலுவல் நடைமுறையே (common course of business) பின்பற்றப்பட்டுள்ளது, என அனுமானிக்கலாம்.

(vii) வழக்கொன்றில் ஒருவர் ஒரு சாட்சியத்தை தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் அதை தாக்கல் செய்ய மறுக்கிறார். எனவே அவர் அச்சாட்சியத்தை தாக்கல் செய்தால், அது அவருக்கு எதிராக அமையும் என அனுமானிக்கலாம்.

(viii) வழக்கொன்றின் விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விக்கு சாட்சி பதில் கூறாமல் மறுத்தால், அப்பதில் அவருக்கு எதிராக அமையும் என அனுமானிக்கலாம்.

(ix) ஒரு பொறுப்பை உண்டாக்குகின்ற பத்திரமொன்று, அப்பொறுப்பை உடையவரின் கையில் உள்ளபோது, அப்பொறுப்பு தீர்ந்து விட்டதாக அனுமானிக்கலாம்.

பிரிவு 86, வெளிநாட்டு நீதித்துறை பதிவேடுகளின் சான்றிட்ட நகல்களை மெய்யானதென்றும் துல்லியமானதென்றும் அனுமானிக்கலாம் என்று கூறுகிறது. (Presumption as to certified copies of foreign judicial records). **பிரிவு 87,** புத்தகங்கள், புவிப்படங்கள் மற்றும் விளக்க அட்டவணப் படங்கள் ஆகியவை எந்த காலத்தில், எந்த இடத்தில் அச்சடிக்கப் பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அங்கேயே அந்த காலத்தில் அச்சடிக்கப்பட்டதாக அனுமானிக்கலாம் என்று கூறுகிறது. (Presumption

as to books. maps and charts). **பிரிவு 88**, தந்திச் செய்திகள் எந்த அலுவலகத்தில் கொடுக்கப்பட்டதோ, அதனுடன் ஒத்திருப்பதாக நீதிமன்றம் அனுமானிக்கலாம். (Presumption as to telegraphic messages). **பிரிவு 90**, முப்பது ஆண்டு காலமான ஆவணங்கள் எவரது கையெழுத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதோ, அது அவராலேயே எழுதிக் கொடுக்கப்பட்டதாக நீதிமன்றம் அனுமானிக்கலாம் என்று கூறுகிறது. (Presumption as to 30 years old documents)

(b) அனுமானித்தல் வேண்டும் (Shall presume) [பிரிவு - 4]:

ஆங்கிலச் சட்டம் கூறிய 'சட்டத் துணிபே' (Presumption of law), இந்திய சாட்சிய சட்டத்தால் 'அனுமானித்தல் வேண்டும்' என்ற தலைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

நீதிமன்றம் ஒரு பொருண்மையை அனுமானித்துக் கொள்ள வேண்டுமென்று, இந்திய சாட்சிய சட்டம் பணிக்கும் (direction) போதெல்லாம், அப்பொருண்மை பொய்ப்பிக்கப்படும் வரை மெய்ப்பிக்கப்பட்டதாகவே அனுமானித்தல் வேண்டும்.

இந்திய சாட்சிய சட்டத்தில் **79 முதல் 85 வரையுள்ள பிரிவுகளும், 89 மற்றும் 105 ஆகிய பிரிவுகளும்** பொருண்மைகளை அனுமானித்துக் கொள்ளவேண்டும் (Shall) என்று பணிக்கிறது.

உதாரணமாக, 79 முதல் 85 வரையுள்ள பிரிவுகள் ஆவணங்கள் பற்றிய சில பொருண்மைகளை அனுமானித்துக் கொள்ள வேண்டும் என்று பணிக்கிறது. **பிரிவு 89** தனது, தாக்கல் செய்யப்படாத எந்தவொரு ஆவணமும், சட்டப்படி சான்றொப்பமிடப்பட்டு, முத்திரை வில்லை ஒட்டப்பட்டு, எழுதிக் கொடுக்கப்பட்டது என்று அனுமானித்தல் வேண்டுமென கூறுகிறது. குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர், தாம் விதிவிலக்கான (exceptions) சூழ்நிலைகளின் கீழ் வருவதாக வாதம் செய்வாராயின், அதை நிரூபிக்கும் பொறுப்பு அக்குற்றஞ் சாட்டப் பட்டவரையே சார்ந்தது. அவ்வாறு நிரூபிக்கவில்லையெனில், அம்மாதிரியான விதிவிலக்கான சூழ்நிலைகள் எதுவும் இல்லையென்றே நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும், என்று **பிரிவு 105** கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட A என்பவர், புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால், தான் செய்வது கொலை என்பதை அறிந்திருக்கவில்லை என்று சொல்கிறார். புத்தி சுவாதீனமின்மை என்ற விதிவிலக்கான சூழ்நிலையை அக்குற்றஞ் சாட்டப்பட்டவர் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கா விட்டால், அவருக்கு புத்தி சுவாதீன மின்மை கிடையாது என்றே சட்டம் அனுமானித்துக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட துணிபை (அனுமானத்தை) மறுத்து சாட்சியங்கள் கொண்டு வரலாம். அதற்கு தடையேதுமில்லை. எனவே, இதை

'மறுக்கக்கூடிய சட்டத் துணிபு' (Rebuttale Presumption of law) என்ற தலைப்பின் கீழும் வகைப்படுத்தலாம்.

(c) அறுதியான சான்றுறுதி (Conclusive Proof):

இதனை 'அறுதியான நிரூபணம்' என்றும் கூறலாம். ஆங்கில சட்டம் கூறிய 'மறுக்கமுடியாத சட்டத் துணிவே' (Irrebuttable Presumption of Law), இந்திய சாட்சிய சட்டத்தால் 'அறுதியான சான்றுறுதி' என்ற தலைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

ஒரு பொருண்மை மற்றொரு பொருண்மையை அறுதியாக நிரூபணம் செய்கிறது என்று இந்திய சாட்சிய சட்டம் விளம்பும்போது, அந்த ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டதன் பேரில், அம்மற்றொரு பொருண்மையும் மெய்ப்பிக்கப்பட்டதாகவே நீதிமன்றம் கொள்ளுதல் வேண்டும். மற்றும் அதைக் பொய்ப்பிக்கும் பொருட்டு சாட்சியம் கொடுக்கப்படுவதை அனுமதித்தல் கூடாது.

உதாரணமாக, சட்டமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்படுகிறது. ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமெனில் சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்களில் பெரும்பாலோர் அதற்கு வாக்களித்திருக்க வேண்டும். அதற்குப்பின், ஆளுநரோ அல்லது இந்திய குடியரசுத் தலைவரோ அச்சட்டம் இயற்றப்படுவதற்கு 'ஒப்புதல்' (Assent) தந்திருக்க வேண்டும். இவை எல்லாம் நடந்தன என்பதற்குத் தக்க சாட்சியங்களை நீதிமன்றத்தில் காட்டுவதென்றால், அதில் பல சிக்கல்கள் எழுவதுண்டு. எனவே, 'அரசிதழில்' (Gazette) ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதாகத் தக்க முறைப்படி வெளிடப்பட்டுவிட்டால், அந்த அரசிதழ் அறிக்கையே இச்சட்டம் முறைப்படி நிறைவேற்றப்பட்டதற்குச் சாட்சியாக அமைகிறது. அதாவது அரசிதழ் அறிக்கை என்ற ஒரு பொருண்மை சட்டம் இயற்றப்பட்டுவிட்டது என்ற மற்றொரு பொருண்மையை அறுதியாக நிரூபிக்கிறது.

எனவே, இந்த அரசிதழ் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்ட பின்னர், அதை மறுக்கும் வகையில் சாட்சியம் எதுவும் கொடுக்கக்கூடாது என்று சட்டம் விதிக்கிறது. இவ்வாறு ஒரு சட்டம் இயற்றப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஏற்ற சான்றுறுதியாக அமைவது, அதை முறைப்படி வெளியிடும் அரசிதழ் ஆகும். இதை மறுக்கும் வகையில் வேறு சாட்சியங்கள் கொடுக்கப்படுவதை சட்டம் தடுப்பதால் அந்த அரசிதழானது, அறுதியான சான்றுறுதி எனப்படுகிறது.

இந்திய சாட்சிய சட்டத்தில் *41, 112 மற்றும் 113* **ஆகிய பிரிவுகள்** "அறுதியான சான்றுறுதிக்கு" எடுத்துக்காட்டுகளைக் கூறுகிறது.

தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றம், உயில் மெய்ப்பிதழ் (Probate), மணவியல் (Matrimonial), கடலியல் (Admirality) அல்லது நொடிப்பியல் (Insolvency) அதிகார வரம்பைச் செலுத்தி வழக்குகளில் வழங்கும்

தீர்ப்பாவது, அது தொடர்பான முடிவுகளுக்கு அறுதியான சான்றுறுதியாகும் என்று பிரிவு 41 கூறுகிறது. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண உறவு அமலில் உள்ளபோதோ அல்லது திருமணம் ரத்தாகி 280 நாட்களுக்குள்ளாகவும், அப்பெண் மறுமணம் செய்து கொள்ளாதபொழுதும், அப்பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தால், அது மேற்படி ஆணுக்கு பிறந்த முறைப்படியான குழந்தைதான் என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகும் என பிரிவு 112 கூறுகிறது. நாட்டின் ஏதேனும் ஒரு பாகத்தை கொடையாக அளித்ததற்கு அறுதியான சான்றுறுதி (Proof of cession of territory) பற்றி பிரிவு 113 கூறுகிறது.

அனுமானம் (அல்லது) துணிபு பற்றிய எளிய வரைபடம்:

அனுமானம் (அல்லது) துணிபு

- பொருண்மைத் துணிபு (Fact) (அல்லது) இயற்கைத் துணிபுகள் (Natural)
- சட்டத் துணிபு (Law) (அல்லது) செயற்கைத் துணிபுகள் (Artificial)
  - அனுமானிக்கலாம் (May) [பிரிவுகள் 86 முதல் 88, 90 & 114] (Conclusive Proof) (அல்லது)
  - மறுக்கக்கூடிய சட்டத் துணிபு (Rebuttable) (அல்லது) அனுமானித்தல் வேண்டும் (Shall) [பிரிவுகள் 79 முதல் 85, 89 & 105]
  - மறுக்க முடியாத சட்டத் துணிபு (Irrebutable) (அல்லது) அறுதியான சான்றுறுதி [Conclusive Proof] [பிரிவுகள் 41, 112, & 113]

15. What are the circumstances in which the court may presume the existence of certain facts? (எந்நெந்த சூழ்நிலைகளில் ஒரு நீதிமன்றம் சில பொருண்மைகள் இருப்பதை அனுமானித்துக் கொள்ளலாம்?)

(அல்லது)

May Presume - Write short notes. (அனுமானிக்கலாம் - சிறு குறிப்பு வரைக.)

[முந்தைய வினாவில் 'இந்திய சட்டப்படி அனுமானம்' என்ற தலைப்பின் கீழ் (a) பிரிவைக் காண்க.]

16. Distinguish between presumption of fact and presumption of law (பொருண்மைத் துணிபையும் சட்டத் துணிபையும் வேறுபடுத்துக).

பொருண்மைத் துணிபு (Presumption of fact)	சட்டத் துணிபு (Presumption of law)
1. இத்துணிபு தர்க்கரீதியான அறிவை (logic) அடிப்படையாக கொண்டு அமைந்த ஊகமாகும்.	இத்துணிபு சட்டத்தினை அடிப் படையாகக் கொண்டு எழும் ஊகமாகும்.
2. ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு பொருண்மைத் துணிபு மாறுபடும்.	சட்டத் துணிபு பொதுவானதாகும்.
3. இத்துணிபுகளை அனுமானிக் கலாம் அல்லது அனுமானிக் காமலும் இருக்கலாம்.	இத்துணிபுகளை அனுமானித்தே ஆக வேண்டும் என சட்டம் பணிக்கிறது.
4. இத்துணிபை அனுமானிக் கலாமா வேண்டாமா என்பது நீதிமன்றத்தின் விருப் புரிமையைச் (discretion) சார்ந்தது.	இங்கு நீதிமன்றத்தின் விருப்பு உரிமைக்கு இடமில்லை. ஏனெனில் சட்டத் துணிபுகள் ஏற்கனவே அனுமானிக்கப்பட்டு விடுகிறது.
5. பொருண்மைத் துணிபில் வகைகள் இல்லை.	சட்டத் துணிபை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (1) மறுக்கக் கூடிய (Rebuttable) சட்டத் துணிபு (2) மறுக்க முடியாத சட்டத் துணிபு.
6. பொருண்மைத் துணிபை மறுத்து எப்பொழுது வேண்டு மானாலும் சாட்சியங்களை சமர்ப்பிக்கலாம்.	சட்டத் துணிபை சில சமயங்களில் மறுத்து சாட்சியம் கொடுக்கலாம். சில சமயங்களில் அவ்வாறு மறுக்க முடியாது. இது வழக்கின் சூழ்நிலையைப் பொறுத்தது.
7. இத்துணிபுகள் இயற்கையான தாகும். எனவே வாதமுறையின் பாற்பட்ட ஊகங்களைக் கொடுக்கிறது.	இத்துணிபுகள் சட்டத்தால் வடி வமைக்கப்பட்டதால், செயற்கை யானதாகும். எனவே ஏதேச்சை யான (arbitrary) ஊகங்களுக்கு வழி வகுக்கிறது.
8. இத்துணிபுகளை வழக்கின் ஆரம்பத்திலேயே பரிசீலனைக்கு எடுத்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.	இத்துணிபுகள் வழக்கின் ஆரம் பத்திலேயே எடுத்துக் கொள்ளப் படுகிறது.

9. பொருண்மைத் துணிபுகள் சட்டத் துணிபை விட வலிமை குறைந்தவை.	சட்டத்துணிபுகள் பொருண்மைத் துணிபை விட வலிமை அதிகமானவை.
10. இத்துணிபு, இந்திய சாட்சிய சட்டத்தில், அனுமானிக்கலாம் (may presume) என்ற தலைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.	இத்துணிபில் மறுக்கக் கூடிய சட்டத் துணிபானது, அனுமானித்தல் வேண்டும். (Shall presume) என்றும், மறுக்க முடியாத சட்டத் துணிபானது அறுதியான சான்றுறுதி (Exclusive Proof) என்றும் இந்திய சாட்சிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

17. Distinguish between
May presume and Shall Presume.

அனுமானிக்கலாம் (May Presume)	அனுமானித்தல் வேண்டும் (Shall Presume)
1. ஆங்கில சட்டத்தில் கூறப்பட்ட பொருண்மைத் துணிபே, இந்திய சாட்சிய சட்டத்தால் 'அனுமானிக்கலாம்' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப் பட்டுள்ளது.	ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்ட மறுக்கக்கூடிய சட்டத் துணிபே (Rebuttable Presumption of law), இந்திய சாட்சிய சட்டத்தால் அனுமானித்தல் வேண்டும் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப் பட்டுள்ளது.
2. இங்கு, நீதிமன்றத்திற்கு விருப்புரிமை உண்டு. அதாவது, ஒரு பொருண்மை மெய்பிக்கப்பட்டு விட்டதாகவே அனுமானிக்கலாம் அல்லது அப் பொருண்மையை மெய்ப்பிக்க மேலும் சாட்சியம் கோரலாம்.	இங்கு அப்படிப்பட்ட விருப்புரிமை கிடையாது. ஆனால் ஒரு பொருண்மை, சாட்சியத்தால் பொய்ப்பிக்கப்படும் வரை அப் பொருண்மை மெய்பிக்கப் பட்டதாக அனுமானிக்க வேண்டும்.
3. இதற்கு எடுத்துக்காட்டுகளை 86 முதல் 88, 90 & 114 ஆகிய பிரிவுகள் கூறுகின்றன.	இதற்கு, 79 முதல் 85, 89 & 105 ஆகிய பிரிவுகள் கூறுகின்றன.
4. இங்கு ஒரு பொருண்மையை அனுமானிக்கலாம் என்று சட்டம் கூறுகிறது.	இங்கு ஒரு பொருண்மையை அனுமானித்துக் கொள்ள வேண்டுமென்று சட்டம் பணிக்கிறது.
5. இது பொருண்மைகளை (Fact) சார்ந்து எழும் ஊகமாகும்.	இது சட்ட விதிகளை சார்ந்து எழும் ஊகமாகும்.
6. இதற்கு வலிமை குறைவு.	இதற்கு வலிமை அதிகம்.

8 மெய்ப்பித்தல் [Proving]

18. When is a fact said to be

a) Proved

b) Disproved

c) Not Proved

எப்பொழுது ஒரு பொருண்மையானது

அ) மெய்பிக்கப்பட்டது

ஆ) பொய்ப்பிக்கப்பட்டது

இ) மெய்பிக்கப்படவில்லை.

என்று சொல்லப்படுகின்றது?

முன்னுரை:

தன் முன்னால் உள்ள வழக்கொன்றில் அளிக்கப்பட்ட சாட்சியங்களையும் விவாதங்களையும் நீதிமன்றம் ஆய்வு செய்த பின்னர், தரப்பினர்கள் வலியுறுத்திய (asserted) அல்லது மறுத்த (denied) பல்வேறு பொருண்மைகளில் எவை உள்ளது (existence) அல்லது இல்லை (non-existence) என்பது குறித்து (அதாவது எப்பொருண்மைகள் மெய் என்பது குறித்தும் எப்பொருண்மைகள் பொய் என்பது குறித்தும்) முதலில் ஒரு முடிவுக்கு வரும். பின்னர் உள்ளதாகக் கருதப்படும் அனைத்து பொருண்மைகளையும் ஒன்று திரட்டி அதற்கு சட்ட விதிகளைப் பயன்படுத்தும். அத்தகு பொருண்மைகள் யாவும் சட்டத்தின் எல்லைக்குட்பட்டு இருந்தால், தரப்பினர் கோரிய உரிமை (right) அல்லது மறுதரப்பினரின் பொறுப்புரிமை (liability) குறித்து நீதிமன்றம் வழக்கு தொடுத்தவருக்கு ஆதரவாக தீர்ப்பாணை வழங்கும். அவ்வாறு பொருண்மைகள் இல்லையென்றால், வழக்கு தள்ளுபடியாகும். இங்கு பொருண்மைகள் உள்ளது (exist) என்று நீதிமன்றம் கண்டறிந்தால், அப்பொருண்மைகள் **மெய்பிக்கப்பட்டது (Proved)** எனப்படும். பொருண்மைகள் இல்லை (does not exist) என்றால், அப்பொருண்மைகள் **பொய்பிக்கப்பட்டது (Disproved)** எனப்படும். ஒரு பொருண்மை மெய்பிக்கப்படாமலும் பொய்பிக்கப்படாமலும் இருந்தால், அது **மெய்பிக்கப்படாதது (Not proved)** எனப்படும். இதையே இந்திய சாட்சியத்தின் 3வது பிரிவு பின்வருமாறு சற்று விரிவாகக் கூறுகிறது.

(a) மெய்ப்பிக்கப்பட்டது (Proved):

நீதிமன்றம் தன்முன் உள்ள வழக்கொன்றில் எழுந்த விஷயங்களை

ஆராய்ந்த பின்னர் அதில் ஒரு **பொருண்மை உள்ளது (exist)** என்று நம்பும் பொழுதோ அல்லது அக்குறிப்பிட்ட வழக்கின் சூழ்நிலையில் விவேகமுள்ள மனிதன் ஒருவன் (A prudent man), பொருண்மை ஒன்று உள்ளது என்னும் உத்தேசத்தின் அடிப்படையிலேயே செயல்படுவான் என்னும் அளவிற்கு அப்பொருண்மை நிகழ்தற்குரியது என்று அந்த நீதிமன்றம் கருதும் பொழுதோ, அப்பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும்.

மேற்கண்டதில் 'விவேகமுள்ள மனிதன்' என்பவர் ஒரு சராசரி அறிவு படைத்த மனிதனாக கருதப்படுவார்.

(b) பொய்ப்பிக்கப்பட்டது (Disproved):

நீதிமன்றம் தன்முன் உள்ள வழக்கொன்றில் எழுந்த விஷயங்களை ஆராய்ந்த பின்னர், அதில் ஒரு **பொருண்மை இல்லை (does not exist)** என்று நம்பும் பொழுதோ அல்லது அக்குறிப்பிட்ட வழக்கின் சூழ்நிலையில் விவேகமுள்ள மனிதன் ஒருவன், பொருண்மை ஒன்று இல்லை என்னும் உத்தேசத்தின் அடிப்படையிலேயே செயல்படுவான் என்னும் அளவிற்கு அப்பொருண்மை நிகழ்தற்கரியது என்று அந்த நீதிமன்றம் கருதும் பொழுதோ, அப்பொருண்மை பொய்ப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும்.

(c) மெய்ப்பிக்கப்படாதது (Not Proved):

ஒரு பொருண்மை **மெய்ப்பிக்கப்படாமலும், பொய்ப்பிக்கப் படாமலும்** இருந்தால், அது மெய்ப்பிக்கப்படாதது எனப்படும்.

வேறுபாடுகள்:

மெய்ப்பிக்கப்பட்டது (Proved)	பொய்ப்பிக்கப்பட்டது (Disproved)	மெய்ப்பிக்கப்படாதது (Not Proved)
1. ஒரு பொருண்மை (நிகழ்ந்து) உள்ளது என நீதிமன்றம் கருதுமானால் அது 'மெய்ப்பிக்கப்பட்டது' எனப்படும். அதாவது நேர்மறையான, விஷயத்தைக் (Positive) கூறுகிறது.	ஒரு பொருண்மை (நிகழ) இல்லை என நீதிமன்றம் கருதுமானால் அது 'பொய்ப்பிக்கப்பட்டது' எனப்படும். அதாவது எதிர்மறையான விஷயத்தைக் (Negative) கூறுகிறது.	இது மெய்ப்பிக்கப் பட்டது மற்றும் பொய்ப்பிக்கப்பட்டது ஆகிய இரண்டு நிலைகளுக்கும் இடைப் பட்டதாகும்.
2. ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டால் அதை மெய்ப்பித்த	ஒரு தரப்பினர் கூறிய பொருண்மை மறு தரப்பினரால்	சில பொருண்மை களைக் கூறி வழக்குத் தொடுத்தவர், அப்

வருக்கு சார்பாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.	பொய்ப்பிக்கப்பட்டால், அது (ஒரு) தரப்பினரின் வழக்கில் உண்மை இல்லை எனக் கருதி, நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்யும்.	பொருண்மைகளை சாட்சியத்தால் மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறு மெய்பிக்க வில்லையெனில் அது அவரது வழக்கையே பாதிக்கும்.
3. **உதாரணம்:** A என்பவன் மீது கொலைக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. கொலை நடந்த பொழுது, தான் 200 மைல்களுக்கு அப்பால் இருந்ததாக மேற்படி A கூறுகிறான். அங்கு ஒரு மருத்துவ தனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதாக 'அலிபி' (alibi) என்ற எதிர் வாதத்தை எடுக் கின்றான். இதற்கு ஆவண சாட்சியங் களும் சூழ்நிலை சாட்சி யங்களும் ஆதரவாக உள்ளன. நீதிமன்றம் அச்சாட்சியங்களின் அடிப்படையில் A யை விடுதலை செய்கிறது. இங்கு 'அலிபி' என்ற பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டதா கின்றது.	**உதாரணம்:** A என்பவன் மீது கொலைக் குற்றம் சாட் டப்படுகிறது. கொலை நடந்த பொழுது, தான் 200 மைல்களுக்கு அப்பால் ஒரு மருந்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந் ததாகக் கூறி 'அலிபி' எனும் எதிர்வாதத்தை எடுக்கின்றான். அதற்கு சில சாட்சியங்களை முன் வைக்கின்றான். ஆனால் அரசு தரப்பினர் அச்சாட்சி யங்களை உடைத்து, அவன் கொலை நடந்த பொழுது அம்மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்க வில்லை, என்பதை காட்டும் வண்ணம் சில சாட்சியங்களை சமர்பிக்கின்றனர். அவற்றின் அடிப் படையில் நீதிமன்றம் Aயை தண்டிக்கிறது. இங்கு 'அலிபி' என்ற பொருண்மை அரசு தரப்பினரால் பொய்ப் பிக்கப்பட்டது.	**உதாரணம்:** A என்பவன் மீது கொலைக் குற்றம் சாட்டப்படுகிறது. முன்கூறியபடி, 'அலிபி' எனும் எதிர்வாதத்தை எடுக்கின்றான். ஆனால் கொலை நடந்த இடத்திலிருந்து, தான் 200 மைல்களுக்கு அப்பால் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந் ததை மெய்ப்பிக்கும் வண்ணம் சாட்சியங்கள் எதனையும் அவன் சமர்ப்பிக்கவில்லை. எனவே அவன் கூறிய 'அலிபி' எனும் பொருண்மையானது, மெய்ப்பிக்கப் படாததாகின்றது. அவன் கூறியதையே மெய்ப்பிக்க அவனுக்கு சாட்சியங்கள் இல்லாததால், அரசு தரப்பினரின் வழக்குபடி அவனுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

முடிவுரை:

சுருங்கக்கூறின், வழக்கொன்றில் கொடுக்கப்படும் சாட்சியங்கள் வாயிலாக ஒரு பொருண்மை மெய்யானதுதான் என்று நீதிமன்றம் கருதினால், அப்பொருண்மை 'மெய்ப்பிக்கப்பட்டது' (Proved) எனப்படும். இவ்வாறே, சாட்சியங்களை ஆய்ந்தபின், அப்பொருண்மை பொய்யானது என நீதிமன்றம் கருதினால், அது பொய்ப்பிக்கப்பட்டது (Disproved) எனப்படும். ஒன்று மெய்ப்பிக்கப்படாமலும் பொய்ப்பிக்கப்படாமலும் இருந்தால், அது 'மெய்ப்பிக்கப்படாதது' (Not Proved) எனப்படும்.

19. Proof - Write short notes. (சான்றுறுதி - சிறு குறிப்பு வரைக)

ஒன்றை மெய்ப்பிப்பது அல்லது பொய்ப்பிப்பது என்றால், அதை மெய்யென்றோ அல்லது பொய்யென்றோ உறுதி செய்வதற்குத் தக்க சாட்சியங்கள் இருந்தால்தான், அச்சாட்சியத்திற்கு ஏற்ப ஒன்றை மெய்யென்றோ அல்லது பொய்யென்றோ நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறு சான்றிலிருந்து பிறக்கும் உறுதியானது **'சான்றுறுதி' (Proof)** எனப்படுகிறது. இதை 'நிரூபணம்' என்றும் அழைக்கலாம். ஆனால் 'சான்றுறுதி' என்ற சொல்லே சாலச் சிறந்தது. இங்கு ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். 'சான்றுறுதி' என்பதை 'கண்கூடாக தெளிவான ஒன்று' (Rigid demonstration) எனக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் ஒரு நிகழ்வை நீதிமன்றத்தில் மெய்ப்பிப்பது என்றால், அந்த நிகழ்வை நீதிமன்றம் கண்ணால் காணும்படி மீண்டும் நடத்திக் காட்டுவது இயலாது. இது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே இயல்பான சூழ்நிலைகளில் ஒரு சராசரி அறிவு படைத்த (விவேகமுள்ள) மனிதனை ஓரளவு சரியான முடிவிற்கு வரும்படி தூண்டும் சாட்சியமே, 'சான்றுறுதி' ஆகிறது. எனவே, ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கலாம் அல்லது நடக்காமலும் இருந்திருக்கலாம் என்ற நிகழ்தகவினை (Probability) மையமாகக் கொண்டே 'சான்றுறுதி' விளங்குகிறது.

சான்றுறுதியால் விளைவதே ஒரு பொருண்மை மெய்பிக்கப்பட்டது (Proved) என்ற நிலை ஆகும். [இதனை நாம் சென்ற வினாவிலேயே கண்டுள்ளோம்.]

20. Distinguish between Evidence and Proof.

சாட்சியம் (Evidence)	சான்றுறுதி (Proof)
1. சாட்சியமென்பது நீதிமன்றத்தின் முன் உள்ள பொருண்மை குறித்த விஷயங்களை மெய்ப்பிக்க	சான்றுறுதி என்பது தகுந்த சட்ட வழிகளைப் பின்பற்றி தீர்வுக்குரிய பொருண்மைகளை நீதிமன்றம் திருப்தி கொள்ளும் வகையில் நிலை

அல்லது பொய்ப்பிக்க பயன் படுத்தப்படும் சட்ட முறையான வழியாகும்.	நிறுத்தலாகும். (நிரூபித்தலாகும்). [estabilishment of facts in issue]
2. சாட்சியம் என்பது சான்றுறுதியை அடைய உதவும் வழியாகும்.	சான்றுறுதி என்பது சாட்சியங் களின் விளைவாகும்.
3. சாட்சியம் பல வகைப்படும். உதாரணமாக, வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம், நேர்நிலை மற்றும் சூழ்நிலை சாட்சியம், தலைநிலை மற்றும் சார்நிலை சாட்சியம்.	சான்றுறுதிக்கு அப்படி பல வகைகள் சிடையாது. அளிக்கப் பட்ட சாட்சியங்களின் மொத்த வடிவமே. 'சான்றுறுதி' ஆகும்.
4. நீதிமன்றம் ஏற்கத்தக்க வாக்கு மூலங்களும், ஆவணங்களுமே சாட்சியம் ஆகும்.	சாட்சிய சட்டத்தால் கூறப் பட்டுள்ள நிபந்தனைகளின்படி ஏற்படும் நம்பிக்கையே, சான்றுறுதி ஆகும். உதாரணமாக ஒரு பொருண்மை உள்ளது என நீதிமன்றத்தை நம்பும்படி கொள்ளச் செய்தல்.
5. அனைத்து சாட்சியங்களும் அனுமதிக்கப் படத்தக்கதல்ல. (All evidence are not admisiable)	சாட்சியங்கள் ஏற்கப்பட்டு அனுமதிக்கப்படுவதால் சான்றுறுதி தோன்றுகிறது. (Proof is a product of admission). பொருண்மை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டபின்தான், அது மெய்ப்பிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

21. Proof in criminal and civil cases. (குற்றவியல் வழக்கிலும் உரிமையியல் வழக்கிலும் நிருபணம்) - Write short notes.

(அல்லது)

Burden of proof in Civil Cases - Write short notes. (உரிமையியல் வழக்குகளில் மெய்ப்பிக்கப்படும் சுமை - சிறு குறிப்பு எழுதுக.)

இந்திய சாட்சிய சட்டத்தின் சில பிரிவுகள், குற்றவியல் வழக்கு விசாரணைக்கென நிரூபித்தல் சம்பந்தமாக பிரத்தியேகமாக தனிக் கவனத்துடன் உண்டாக்கப்பட்டுள்ளன. **பிரிவுகள் 24 முதல் 30 வரை** குற்ற ஏற்புரை (confession) பற்றிக் கூறுகின்றன. **பிரிவுகள் 53 மற்றும் 54** ஆகியவை குற்றஞ் சாட்டப்பட்ட நபரின் நடத்தை (Character) பற்றி கூறுகின்றன. **பிரிவு 120** ஆனது, குற்றஞ் சாட்டப்பட்டவர் சாட்சியம் கூற தகுதியின்மை பற்றி கூறுகின்றது. இவையெல்லாம், குற்ற வழக்கு

விசாரணைக்கென்றே பிரத்தியேகமாக இந்திய சாட்சிய சட்டத்தில் இயற்றப்பட்டது போல் தோன்றுகிறது.

உரிமையியல் வழக்குகளில் தீர்வுதரு பொருண்மையை (issue in fact) நிரூபிக்க அதனை கூடுமானவரை தெளிவாக்க (Preponderance of Probability) முயன்றாலே போதும். ஆனால் குற்றவியல் வழக்குகளிலோ குற்றஞ் சாட்டப்பட்ட நபர் தான் குற்றம் புரிந்துள்ளார் என்பதனை சந்தேகத்திற்கு இடமின்றி (beyond all reasonable doubt) நிரூபித்தல் வேண்டும். குற்றஞ் சாட்டப்பட்டவர் அக்குற்றத்தை செய்திருப்பாரோ என்று ஒரு சிறு சந்தேகம் எழுந்தாலும், வழக்கு தொடுத்தோர் (Prosecution) அவர் தம் வழக்கை நிரூபிக்கவில்லை என முடிவு கட்டப்பட்டு, அவ்வழக்கு தள்ளுபடியாகி, அந்நபர் விடுவிக்கப்படுவார் (discharge). அதாவது சந்தேகத்தின் பலன் (Benefit of doubt) குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு சாதகமாகவே அளிக்கப்படும். ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதே மேற்கண்ட கூற்றுக்கு அடிப்படையாகும். எனவே குற்றவாளிதான் என சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டாலொழிய, குற்றஞ் சாட்டப்பட்டவரை தண்டிக்கவியலாது. உரிமையியல் வழக்குகளில் இப்படிப்பட்ட கடுமையான நிரூபணம் வேண்டியதில்லை. பெரும்பாலும் ஆவணங்களே உரிமையியல் வழக்கில் நீதிமன்றத்தில் பேசுகின்றன. அதில் கூறப்பட்டிருப்பவையே வழக்கின் தீர்ப்புக்கு ஆதாரமாக அமைகின்றன.

22. "The rules of Evidence are in general the same in civil and criminal proceedings" - Comment and mention the important exceptions to the statement. ("பொதுவாக உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளுக்கும் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கும் சாட்சிய சட்ட விதிகள் ஒன்றேயாகும்" - விமர்சிக்க. மேற்படி கூற்றுக்கு முக்கியமான விதிவிலக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

"The rules of evidence are general for both Civil and Criminal proceedings" - Explain. ("உரிமையியல் மற்றும் குற்றவியல் நடைமுறைகளில் சான்று விதிகள் பொதுவானவைகளே" - விளக்குக.)

உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஒரே சாட்சிய சட்ட விதிகள்" - பொது விதி - விளக்கம்:.

மேற்படி விதியின்படி, பொதுவாக, உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளுக்கும் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கும், சாட்சிய சட்ட விதிகள் ஒன்றுதான். அவ்விதிகள் இரண்டிற்கும் பொதுவாக பொருந்துகின்றன. குற்றவியல் வழக்கில் அரசு மற்றும் மக்கள், குற்ற வழக்கு தொடுப்பவர் மற்றும் குற்றஞ் சாட்டப்பட்டவர் ஆகியோர் அடுக்கென்றும், உரிமையியல் வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி,

கட்சிக்காரர் மற்றும் வழக்கறிஞர் ஆகியோர்களுக்கென்றும் எவ்வித பாகுபாடுமில்லாமல் ஒரே சாட்சிய சட்ட விதிகள்தாம் கையாளப் படுகின்றன. சாட்சியங்களை அனுமதித்து ஏற்றுக் கொள்ளுதல் (admissibility of evidence) மற்றும் சாட்சியங்களை வாய்மொழியாக கொடுத்தல் ஆகியவை தொடர்பான சாட்சிய விதிகள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு பொதுவாக உள்ளன.

R. v. Christie[1]

இவ்வழக்கில் **ரீடிங் நீதிப்பிரபு அவர்கள் (Lord Reading)** உரிமையியல் வழக்கிலும், குற்றவியல் வழக்கிலும், சாட்சிய விதிகளை பொறுத்த மட்டில் வேறுபாடுகள் இல்லை என்பது உளமார முடிவு செய்யப்பட்ட ஒன்று என்றும், உண்மையைக் கண்டறிய சிறந்த வழிமுறைகளை ஏதேனும் விதிகள் கூறினால் அவை அனைத்து வழக்குகளுக்கும் மற்றும் அனைத்து நாகரிகம் வளர்ந்த நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்றும், கூறினார்.

மேற்படி பொதுவிதிக்கு விதிவிலக்குகள் (Exceptions):

உரிமையியல் வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய பிரிவுகள்:

i) முரண்தடை (Doctrine of Estoppel) - ***பிரிவுகள் 115 – 117.***

ii) உரிமையியல் வழக்குகளில் ஒருவரது குண இயல்பு (Character) - ***பிரிவுகள் 52 மற்றும் 55.***

iii) பாதகம் விளையாத ஏற்புரை (Admission without prejudice) - ***பிரிவு 23.***

iv) சாட்சியம் அளிக்க உரிமையியல் வழக்கு தரப்பினர்களுக்கு உள்ள தகுதியுடைமை (Competency) - ***பிரிவு 120.***

குற்றவியல் வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய பிரிவுகள்:

i) குற்ற ஏற்புரை (Confession) - ***பிரிவுகள் 24 முதல் 30 வரை.***

ii) நீதிமன்றத்தின் முன் ஆஜராகும் நபர்களின் குண இயல்பு (Character) – ***பிரிவு 53 மற்றும் 54.***

iii) தரப்பினர்கள் சான்றுரையர்களாக தோன்றுவதற்கு தகுதியின்மை (Incompetency) - ***பிரிவு 120.*** அதாவது குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சி அளிக்க முடியாது.

உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் சாட்சியம் அளிப்பதில் உள்ள வேறுபாடு (Difference between evidence in Civil and Criminal procedings):

உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் சாட்சி

1. 1914 AC 345 P. 564

யங்களை ஏற்றுக் கொள்வது தொடர்பான விதிகள் பொதுவாக ஒரே மாதிரியாக இருந்தாலும், பின்வரும் பல விஷயங்களில் அவை வேறுபடுகின்றன. அவை,

1) வழக்கு தொடுத்தவர் மீதுதான் அதனை மெய்ப்பிக்கும் சுமை உள்ளது. உரிமையியல் வழக்குகளில், வழக்கெழு வினாவை (தீர்வுதரு பொருண்மையை) (Issue in fact) கூடுமானவரை மெய்ப்பிக்க (Preponderance of probability) முயன்றாலே போதும். எள்ளளவு சந்தேகத்திற்கும் இடமின்றி மெய்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. எத்தரப்பினருக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் (Balance of Probabilities) மற்றும் வசதி வாய்ப்புகளின் நிலை (Balance of convenience) சாதகமாக இருக்கிறதோ அவருக்கே வழக்கின் தீர்ப்பு சாதகமாய் இருக்கும். எனவே தரப்பினர்கள் தங்களது உரிமைகளை இயன்றவரை மெய்ப்பித்தாலே போதும். ஆனால் குற்றவியல் வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்ட நபர்தான் குற்றம் புரிந்துள்ளார், என்பதனை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி மெய்பிக்க வேண்டும். (Must be proved beyond all reasonable doubt). நீதிபதியின் மனதில் சிறு சந்தேகம் எழுந்தாலும் குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு அச்சந்தேகத்தின் பலன் (Benefit of doubt) அளிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்படுவார். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பதே இக்கடுமையான மெய்பித்தலுக்கு (Strict Proof) அடிப்படையாகும்.

2) உரிமையியல் வழக்குகளில் நீதிமன்றம் வழக்குத் தரப்பினர்களின் ஒப்புதலுடன் (Consent) சாட்சிய சட்டத்தின் விதிகளைத் தளர்த்தலாம். ஆனால் குற்றவியல் வழக்குகளில், அவ்வாறு செய்ய முடியாது.

3) குற்றவியல் வழக்குகளில் குற்றச் செயலை மெய்பிக்கும் பொறுப்பு அரசு தரப்பினரையே (Prosecution) சார்ந்ததாகும். எக்காலத்திலும் குற்றஞ் சாட்டப்பட்டவர் தான் குற்றம் புரியவில்லை என மெய்பிக்கத் தேவையில்லை. அதாவது மெய்பிக்கும் சுமை அரசு தரப்பினரிடமிருந்து குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு மாறுவதில்லை. ஆனால் உரிமையியல் வழக்குகளில் வாதி கூறும் வழக்கை பிரதிவாதி மறுப்பதோடு மட்டுமில்லாமல் அவ்வழக்கை பொய் என்றும் மெய்ப்பிக்க வேண்டும். அதாவது மெய்ப்பிக்கும் சுமையானது வாதியிடமிருந்து பிரதிவாதிக்கும் மாறும்.

4) எந்த சாட்சியம் மிகச் சிறந்தது (Best) என்று எண்ணுகிறார்களோ அதனை நீதிமன்றத்தில் கொண்டுவந்து சமர்பிப்பது உரிமையியல் வழக்குகளில் தரப்பினர்களின் கடமையாகும் (Duty). ஆனால் குற்றவியல் வழக்குகளில் தக்க நீதி நல்கிடும் பொருட்டு, அனைத்து தொடர்புடைய சாட்சியங்களையும் கோப்பில் கொண்டு வர வேண்டியது நீதிமன்றத்தின் கடப்பாடு (Obligation) ஆகும்.

- o -

9 குற்றக் கூறுகளின் தொகுதிக் கோட்பாடு [Doctrine of Corpus Delicti]

23. Doctrine of Corpus Delicti - Write short notes. (குற்றக்கூறுகளின் தொகுதிக் கோட்பாடு - சிறு குறிப்பு எழுதுக.)

விளக்கம்:

ஒவ்வொரு குற்ற வழக்கிற்கும் பின்வரும் இரண்டு கூறுகள் அவசியமாகும். அஃது 1) குற்றம் ஒன்று நடந்துள்ளது 2) குற்றஞ் சாட்டப்பட்டவர் அக்குற்றத்தை செய்துள்ளார். அதாவது ஒரு குற்றம் நடந்துள்ளதாக கூற வேண்டுமானால், முதலில் அக்குறிப்பிட்ட குற்றத்தின் ஆக்கக்கூறுகள் (Ingredients) அனைத்தும் நடந்து முடிந்து விட்டதாக நிரூபிக்க வேண்டும். பின்னர் அக்குறிப்பிட்ட குற்றத்தினை, யார்மீது அக்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதோ, அவர்தான் செய்தார் என்பதனை நிரூபிக்க வேண்டும். இவ்வாறு குற்றம் ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதற்கு அதன் ஆக்கக்கூறுகளை நிரூபித்தல், 'குற்றக்கூறுகளின் தொகுதிக் கோட்பாடு" எனப்படுகிறது.

உதாரணங்கள்:

உதாரணமாக, 1) திருட்டுக் குற்றத்தில் சில பொருள்கள் அல்லது சொத்து திருடப்பட்டிருக்கிறது என்பது நிரூபிக்கப்பட வேண்டும். 2) கொலைக் குற்றத்தில், கொலை செய்யப்பட்ட உடல் அல்லது உடலின் சில பகுதிகள் இருக்க வேண்டும் என மேற்படி கோட்பாடு கூறுகிறது.

ஆனால் சில சமயங்களில் திருடப்பட்ட பொருளோ அல்லது கொலையுண்டவரின் பிரேதமோ கிடைக்காமல் போய்விடக்கூடும். இதனைக் கொண்டு குற்றஞ் சாட்டப்பட்ட நபரை தண்டிக்க வழியில்லை என்ற முடிவுக்கு வருதல் கூடாது. மேற்படி குற்றங்களின் ஆக்கக்கூறுகளை நேரடி மற்றும் சூழ்நிலைச் சான்று கொண்டு நிரூபிக்கலாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், மேற்படி கோட்பாடு தளர்த்தப்படும்.

உதாரணமாக, ஒருவர் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பதைக் கீழ்கண்டவற்றை கருத்தில் கொண்டு உறுதி செய்யலாம்.

i) குற்றஞ் சாட்டப்பட்டவரே கொலை பற்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும் பொழுது;

ii) கொலை செய்த உடலை குற்றஞ்சாட்டப்பட்டவர் எரிக்கும் பொழுது அல்லது அதை வேறு வகையில் அழிக்கும்பொழுது, தான் கண்ணால்

பார்த்ததாக ஒருவர் சாட்சியம் கூறும்பொழுது.

முக்கிய வழக்குகள்:

Anant Chintaman Lagu v. State of Bombay[1]

இவ்வழக்கில் விஷம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சூழ்நிலைச் சான்றினால் நிரூபித்தாலே போதும் என உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

Ramchandra v. State of U.P[2]

இவ்வழக்கில் ஒரு சிறுவனை கடத்திச் சென்று ஆற்றில் மூழ்கடித்து கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் அச்சிறுவனின் உடலை மீட்க முடியவில்லை. குற்றக் கூறுகளின் தொகுதிக் கோட்பாடுபடி கொலை நிகழ்ந்துள்ளது என்பதை நிரூபிக்க குறைந்தபட்சம் அச்சிறுவனின் உடலை (பிரேதத்தை) முன்னிடப்பட வேண்டிய அவசியம் உண்டானது. ஆனால் கொலை நிகழ்ந்துள்ளது என்பதை நிரூபிக்க நேரடி அல்லது சூழ்நிலைச் சாட்சியம் இருப்பின் அதுவே போதும் என நீதிமன்றம் கருதியது. (ஏனெனில், உடலை மீட்டால்தான் குற்றஞ் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட இயலும் என்ற நிலை உண்டானால் கொலை செய்யும் குற்றவாளி, தான் கொலை செய்த பின்னர் உடலை அழித்துவிடக்கூடும். இதனால் குற்றவாளிகள் பெருகக்கூடிய அபாயம் ஏற்பட்டு விடும். ஆகவே மேற்படி கோட்பாட்டை நீதிமன்றம் கடுமையாக பின்பற்றாமல் கொலை நிகழ்ந்துள்ளது என்பதை அறிய நேரடி மற்றும் சூழ்நிலைச் சான்றுகளை துணைக்கு கொள்கிறது.)

ஆனால் மேற்கண்ட வழக்கில் கொலை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க முதலில் கொலையுண்ட அச்சிறுவனின் உடல் கிடைக்கவில்லை. மேலும் நேரடிச் சாட்சியமோ அல்லது சூழ்நிலைச் சாட்சியமோ கொலை செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் இல்லை. ஆகவே அரசு தரப்பினரின் குற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்.

- o -

1. AIR 1960 SC 500
2. AIR 1957 SC 381

10 சாட்சியத்தின் தொடர்புடைமையும் சாட்சியத்தை அனுமதித்தலும் [Relevancy and Admissibility of Evidence]

24. What is meant by Relevancy? Distinguish between Relevancy and Admissibility. (தொடர்புடைமை என்பதன் பொருள் யாது? தொடர்புடைமை மற்றும் அனுமதிக்கத்தக்கதை வேறுபடுத்துக.)

(அல்லது)

"Relevancy and admissibility are not co-extensive terms" - Discuss. ("தொடர்புடைமையும், சட்டப்பூர்வமாக கொள்ளத் தகுதியும் உடனிணைந்து பரவிய சொற்கூறுகள் அல்ல" - ஆராய்க.)

(அல்லது)

Distinguish between Relevancy and Admissibility of evidence. (சாட்சியத்தை அனுமதித்தல் மற்றும் தொடர்புடைமை - வேறுபடுத்திக் காட்டுக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் **(Chapter II)** 5 முதல் 55 வரையிலான பிரிவுகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் 5வது பிரிவானது தீர்வுதரு பொருண்மை மற்றும் தீர்வுதவு (தொடர்புடைய) பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளிக்கப்படலாம் (Evidence may be given facts in issue and relevant facts) என்று கூறுகிறது. 6 முதல் 55 வரையுள்ள பிரிவுகள் பொருண்மைகள் எப்பொழுதெல்லாம் தொடர்புடையவையாக (Relevancy of facts) உள்ளன என்று கூறுகின்றது.

தொடர்புடைய பொருண்மை (Relevant fact) (அல்லது) தொடர்புடைமை (Relevant):

தொடர்புடைய பொருண்மை என்பதனை 'தீர்வுதவு பொருண்மை' என்றும் அழைக்கலாம். இதனை நாம் முன்னரே கண்டுள்ளோம். இந்திய சாட்சிய சட்டத்தின் 3-வது பிரிவில் தொடர்புடைய பொருண்மை குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு வழியில் ஒரு பொருண்மை மற்றொரு பொருண்மையுடன் தொடர்பு கொண்டிருந்தால், அப்பொருண்மை தொடர்புடைய பொருண்மை எனப்படும். இதையும் நாம் முன்னரே கண்டுள்ளோம். சென்ற பத்தியில் கண்ட பிரிவு 5-ன்படி சாட்சிய சட்டத்தில் கூறப்பட்டுள்ள தொடர்புடைய பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளிக்கலாம். ஏனெனில் அப்பொருண்மைகள் வழக்கினை தீர்ப்பதற்கு உதவும்

பொருண்மைகள் ஆகும். எப்பொருண்மைகள் தொடர்புடையன என்பதை 6 முதல் 55 வரையுள்ள பிரிவுகள் கூறுகின்றன. எனவே அப் பொருண்மைகள் குறித்து அளிக்கப்படும் சாட்சியம் மட்டுமே அனுமதிக்கத் தக்கதாகும் (admission). வேறுவிதத்தில் கூறப்போனால் இந்திய சாட்சிய சட்டப்படி ஒரு பொருண்மை தொடர்புடையது என்றாலே அது அனுமதிக்கத்தக்கதே என்று கூறலாம் (relevant means admissible in evidence). ஆனால் ஒரு பொருண்மை தொடர்புடையதா என்பதை மனிதனின் தர்க்க அறிவும், அனுபவ அறிவும்தான் தீர்மானிக்கிறது.

தொடர்புடையது மற்றும் அனுமதிக்கத்தக்கது:

மேற்கண்டதிலிருந்து ஒரு பொருண்மை தொடர்புடையதாக இருந்தால் அனுமதிக்கத்தக்கது என்று அறிந்தோம். இதைக் கொண்டு மேலெழுந்தவாரியாக பார்க்கப்போனால் தொடர்புடையது (relevant) மற்றும் அனுமதிக்கத்தக்கது (Admissibility) ஆகிய இரண்டு சொற்களும் உடனிணைந்து செல்வது (Co-extensive) போல் தெரியும். ஆனால் பின்வரும் உண்மை புலனாகும். அதாவது சில பொருண்மைகள் தொடர்புடையதாக இருக்கலாம். ஆனால் அவை அனுமதிக்கத்தக்கதல்ல. ஏனெனில் பல பொருண்மைகள் தொடர்புடையனவாக இருந்தாலும், சில பொருண்மைகள் மட்டுமே வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்கு (Issue in fact) மிகவும் நெருக்கமாக இருக்கும். இத்தகைய நெருக்கமான தொடர்புடைய பொருண்மைகள் மட்டுமே வழக்கின் தீர்வுதரு பொருண்மையினை முடிவு செய்ய மிகவும் உதவியாக இருக்கும். சில தொடர்புடைய பொருண்மைகள் வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்கு மிகத் தொலைவில் இருக்கும். அவைகள் வழக்கின் தீர்வுதரு பொருண்மையை முடிவு செய்ய உதவுவதில்லை. எனவே சட்டம் எந்தத் தொடர்புடைய பொருண்மைகள் வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்கு மிக நெருக்கமாக இருந்து அதனை முடிவு செய்ய உதவுகிறதோ, அதுவே சட்டத்தால் அனுமதிக்கத்தக்கது (Legally admissible in evidence) எனப்படும். இதைத்தான், **''அனைத்து அனுமதிக்கத்தக்க சாட்சியமும் தொடர்புடையது; ஆனால் அனைத்து தொடர்புடைய சாட்சியமும் அனுமதிக்கத்தக்கதல்ல." (All admissible evidence is relevant; but all relevant evidence is not admissible)** எனப்படுகிறது. எனவே தொடர்புடையது மற்றும் அனுமதிக்கத்தக்கது ஆகிய இரண்டும் உடனிணைந்து செல்லும் சொற்கள் அல்ல, (not co-extensive) என்பது புலனாகும்.

தொடர்புடைமை மற்றும் அனுமதிக்கத்தக்கது - வேறுபாடுகள்:

1. தொடர்புடைமை என்பது இரண்டு பொருண்மைகளை இயற்கையின் அடிப்படையிலும் (by nature) அல்லது தர்க்கரீதியின் (Logical) அடிப்படையிலும் தொடர்புபடுத்துவது. ஆனால் அனுமதிக்கதக்கது

என்பது வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்கு மிக நெருங்கிய தொடர்புடைய சட்டத்தால் அனுமதிக்கப்படும் பொருண்மைகள் ஆகும்.

2. தொடர்புடைமை என்பது மனிதனுடைய அனுபவத்தினாலும் தர்க்க ரீதியின் அடிப்படையிலும் அமைவது. ஆனால் அனுமதிக்கப்படுவது என்பது சட்டத்தின் அடிப்படையில் அமைவதாகும்.

3. தொடர்புடைமை மற்றும் அனுமதிக்கத்தக்கது ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று உடனிவைந்து செல்வதல்ல.

4. தொடர்பில்லாப் பொருண்மை அனுமதிக்கத்தக்கதல்ல. ஆனால் அனுமதிக்கத் தகாத சாட்சியம், எதிர் தரப்பினரால் ஆட்சேபணை ஏதும் செய்யப்படவில்லையானால் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படும்.

5. எடுத்துக்காட்டாக, ஒரு புரோநோட்டின் அடிப்படையில் தொடுக்கப்படும் தாவாவில் கடன் வாங்கியவரால் எழுதிக் கொடுக்கப்பட்ட புரோநோட் தொடர்புடையதாகும். ஆனால் அது சரியான வருவாய் முத்திரைவில்லை (revenue stamp) ஒட்டப்பட்டிருந்தால்தான் அது அனுமதிக்கத்தக்கதாகும். அதாவது கடன் வாங்கியதற்கு, புரோநோட் தொடர்புடைய ஆவண சாட்சியமாகும். ஆனால் அது அனுமதிக்கப்பட வேண்டுமானால், அதில் தக்க வில்லை ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

தர்க்க ரீதியான மற்றும் சட்ட ரீதியான தொடர்புடைமை (Logical and Legal relevancy) - ஒரு விளக்கம்:

பொருண்மைகள் தர்க்க ரீதியாக தொடர்புபடுத்தப்படுகின்றன. ஆனால் அவை சட்ட ரீதியாக தொடர்புபடுத்தப்படும் பொழுதுதான் அனுமதிக்கத்தக்கதாகின்றது. எனவே இரண்டு பொருண்மைகள் தர்க்கரீதியாக தொடர்புடையவையாக இருக்கலாம். ஆனால் அவை சட்டரீதியாக தொடர்புடையவைகளாக இருப்பதில்லை. அதாவது அப்பொருண்மையை மெய்ப்பிக்கும் பொருட்டு சாட்சியம் அளிப்பதை சாட்சியச் சட்டம் தடுக்கிறது.

தீர்வுதரு பொருண்மைக்கு சில சமயங்களில் தர்க்க ரீதியான அடிப்படையில் உள்ள தொடர்புடைய பொருண்மைகளைச் சட்டம் ஏற்றுக்கொண்டாலும், அவை அனுமதிக்கப்படுவதற்கு, தொடர்புடைய பொருண்மை என்ற ஒரு காரணத்தை மட்டும் சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, அத்தொடர்புடைய பொருண்மையை பொதுநெறி மற்றும் தகைமை நெறி ஆகியவற்றை கருத்தில் கொண்டு சட்டம் அதனை அனுமதிப்பதா, வேண்டாமா என்பதை தீர்மானிக்கிறது.

உதாரணமாக (1) குற்ற ஏற்புரையை (Confession) மெய்ப்பிக்கும் முன்னர், அக்குற்ற ஏற்புரை குற்றவாளியினால் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் தன்னிச்சையாக வழங்கப்பட்டது என்பதை மெய்ப்பிக்க

வேண்டும். இத்தகைய பொருண்மைகள் தீர்வுதரு பொருண்மையுடன் (Fact in issue) எவ்விதத்திலும் நேரடியாக தொடர்பு கொண்டிருப்பதாக தெரிவதில்லை. எனினும் அவைகள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப் படுகின்றன.

(2) கொலைக் குற்ற விசாரணையில் தீர்வுதரு பொருண்மை கொலை மட்டுமே ஆகும். எனினும் இறந்து போன மனிதனுடைய அங்க அடையாளங்கள், வயது, நடத்தை, தொழில் முதலியவைகள் கொலைச் செயலுக்கு தொடர்புடையவையாக இல்லை என்றாலும் கூட, அவை நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகின்றன.

சில சமயங்களில் தொடர்புடைய பொருண்மைகளாக இருந்தாலும், அவற்றை இந்திய சாட்சியச் சட்டம் பொது நியதியின் அடிப்படையில் அனுமதிப்பதில்லை.

உதாரணமாக, (1) வழக்கறிஞர் மற்றும் அவரது கட்சிக்காரர் ஆகிய இருவருக்கும் இடையே திரை மறைவில் நடந்த இரகசியப் பேச்சு வார்த்தைகளை வெளியில் கூற சாட்சியச் சட்டம் அனுமதி மறுக்கிறது.

(2) கணவன்-மனைவிக்கிடையே நடக்கும் உரையாடல்கள் — கணவன், தான் ஒரு கொலை செய்து விட்டதாக தனது மனைவியிடம் கூறுகிறான். அதை மனைவி நீதிமன்றத்தில் கூறுகிறார். இச்சாட்சியம் தர்க்கரீதியாக மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும், பொது நியதியின் அடிப்படையில் இந்திய சாட்சிய சட்டமானது **பிரிவு 122**ன் கீழ்படி அதனை அனுமதிப்பதில்லை.

முடிவுரை:

சாட்சிய சட்டத்திற்கு மூன்று அடிப்படையான விதிகள் உள்ளன என்று ஆரம்ப அத்தியாயத்திலேயே கண்டோம். அஃதாவது,

(1) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியமானது வழக்கெழு வினாவிற்கு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்; (2) கேள்வி நிலைச் சாட்சியம் அனுமதிக்கப்படமாட்டாது. (3) அனைத்து வழக்குகளிலும் மிகச்சிறந்த சாட்சியமே வழங்கப்பட வேண்டும். இந்த மூன்று மூல விதிகளை கருத்தில் கொண்டே தொடர்புடைய பொருண்மைகள் சட்டத்தால் அனுமதிக்கப்படத் தக்கதா என நீதிமன்றம் நிர்ணயிக்கிறது.

- o -

11 வழக்கெழு வினாவைப் பொறுத்து மட்டுமே சாட்சியம் [Evidence confined to matters in issue]

25. "Evidence must be confined to matters in issue" - State the exceptions to this rule. ("வழக்கெழு வினாவைப் பொறுத்து மட்டுமே சாட்சியம் அளிக்கப்பட வேண்டும்" - இவ்விதியின் விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.)

முன்னுரை:

"வழக்கெழு வினாவைப் பொறுத்து மட்டுமே சாட்சியம் அளிக்கப்பட வேண்டும்" என்பது சாட்சிய சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பொது விதியாகும். ஒரு வழக்கில் வழக்கெழு வினா என்பது அவ்வழக்கின் மையப் பிரச்சனையாகும்; அதாவது தீர்வுதரு பொருண்மையாகும். (fact in issue) கொலை வழக்கில், அப்படிப்பட்ட கொலை செய்யப்பட்டதா என்பதே வழக்கெழு வினா அல்லது தீர்வுதரு பொருண்மையாகும். எனவே அப்பொருண்மையை மெய்ப்பிக்கும் பொருட்டோ அல்லது பொய்ப்பிக்கும் பொருட்டோ சாட்சியம் அளிக்கப்படலாம். வேறு பொருண்மைகளைப் பொறுத்து சாட்சியம் அளிக்கப்படக்கூடாது. அதிகப்படியான சாட்சியங்களால் வழக்கின் போக்கு குழம்பாமல் இருக்கவும், காலம் வீணாவதை தடுக்கவும், இப்பொதுவிதி இந்திய சாட்சிய சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இவ்விதிக்கு **பல விதிவிலக்குகள்** உள்ளன. அவற்றை இந்திய சாட்சிய சட்டமானது **6** முதல் **11** வரையலான **பிரிவுகளின்** வழியாக கூறுகிறது. அதன்படி தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புடைய பொருண்மைகள் குறித்தும் சாட்சியம் அளிக்கப்படலாம். உதாரணமாக, கொலை வழக்கில் கொலையாளி, A என்பவருடைய கடையில் கத்தி வாங்கினான் என்பது தொடர்புடைய பொருண்மையாகும். எனவே இது குறித்தும் சாட்சியம் அளிக்கப்படலாம். அது அனுமதிக்கத்தக்கதே. இனி இவ்வாறான விதிவிலக்குகளைக் காண்போம்.

விதிவிலக்குகள்

1. பிரிவு 6: ஒரே நடவடிக்கையின் பகுதியாக அமையும் பொருண்மைகள் தீர்வு தரும் பொருண்மைக்கு (வழக்கெழு வினாவிற்கு) தொடர்புடையவையாகும். எனவே இது குறித்து அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கது. (Relevancy of facts forming part of the same transaction) (விளக்கமாக அடுத்த வினாவில் காண்க)

2. பிரிவு 7: தீர்வு தரு பொருண்மைகள் நிகழ்ந்த சமயத்தில்

நடைபெற்றவை அத்துடன் தொடர்புற்ற பொருண்மைகளாகும். அதன் காரணமாகவும் (cause), காரியமாகவும் (effect) உள்ளவைகளும் தொடர்புற்ற பொருண்மைகளாகும். (Facts which are the occasion, cause or effect of facts in issue).

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவரை கொள்ளை யடித்தாரா என்பது கேள்வி. (தீர்வுதரு பொருண்மை). கொள்ளை அடிக்கப்படுவதற்கு சற்று முன்பு பணத்தை எடுத்துக் கொண்டு B சந்தைக்குப் போனார்; வேறு ஒரு நபரிடம் தாம் வைத்திருந்த பணத்தைக் காட்டினார் அல்லது தாம் பணம் வைத்திருக்கும் பொருண்மையை மற்றவரிடம் குறிப்பிட்டார் என்ற பொருண்மைகள் மேற்படி தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புற்றவை களாகும்.

3. பிரிவு 8: தீர்வுதரு பொருண்மைக்கான அல்லது தீர்வுதவு பொருண்மைக்கான உட்கருத்தை (motive) அல்லது முன்னேற்பாட்டை (Preparation) காட்டுகின்ற அல்லது உருவாக்குகின்ற எந்தப் பொருண்மையும் தொடர்புற்ற பொருண்மையாகும். அதேபோல் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கில் தரப்பினர்களின் நடத்தையும் தொடர்புற்ற பொருண்மையாகும். (motive, preparation and previous or subsequent conduct) [விளக்கமாக வினா எண் 27ல் எடுத்துக்காட்டுகளுடன் காணலாம்].

4. பிரிவு 9: தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வு தரு பொருண்மை ஒன்றினை விளக்குவதற்கும் அறிமுகப் படுத்துவதற்கும் அவசியமான பொருண்மைகள். (Facts necessary to explain or introduce fact in issue or relevant fact). [விளக்கமாக வினா எண் 28ல் காண்க].

எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட ஆவணம் A என்பவர் எழுதிய உயில்தானா என்பது கேள்வி. அந்த உயில் எழுதப்பட்ட நாளன்று A யின் சொத்துக்களைப் பற்றிய நிலைமைகளும் அவரது குடும்பத்தைப் பற்றிய நிலைகளும் தொடர்புற்ற பொருண்மைகளாகும்.

5. பிரிவு 10: சதிகாரர்களின் பொதுவான நோக்கம் குறித்து அவர்களால் பேசப்பட்ட அல்லது செய்யப்பட்ட எதுவும் தொடர்புற்ற பொருண்மையாகும். (Things said or done by conspirator in reference to common design) [விளக்கமாக வினா எண் 29ல் எடுத்துக்காட்டுடன் காண்க.]

6. பிரிவு 11: வேறு விதத்தில் தொடர்பில்லாத பொருண்மைகள் எப்பொழுது தொடர்புற்றவையாக ஆகிறது என மேற்படி பிரிவு 11 கூறுகிறது. (When facts not otherwise relevant become relevant). [விளக்கமாக வினா எண் 30ல் எடுத்துக்காட்டுகளுடன் காண்க.]

12 ஒன்றிய செயல் - எப்பொழுது தொடர்புடையதாகின்றது? [Res Gestae - When relevant?]

26. a) What is meant by Res Gestae?

b) How far it is worked out in the Evidence Act?

அ) ஒன்றிய செயல் என்பதனால் அறியப்படுவதென்ன?

ஆ) எந்த அளவிற்கு இது இந்திய சாட்சிய சட்டத்தில் செயல் படுத்தப்பட்டிருக்கிறது?

(அல்லது)

Write short notes on Res Gestae. (ஒன்றிய செயல் குறித்து சிறுகுறிப்பு வரைக)

a) ஒன்றிய செயல் (Res Gestae) - விளக்கம்:

'Res Gestae' என்பது இலத்தீன் வார்த்தையாகும். அதன் பொருள் **'செய்யப்பட்ட காரியங்கள்' (things done)** என்பதாகும். இது ஆங்கிலச் சட்டத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு எடுத்தாளப்பட்டது. அதன்படி, 'ஒரு நடவடிக்கையின் போக்கில் செய்யப்பட்ட காரியங்கள் அல்லது சொல்லப்பட்ட செய்திகள்' (things said and done in the course of a transaction) என்று பொருள் தரும்.

நீதிமன்றத்தின் முன்வரும் ஒவ்வொரு வழக்கிற்கும் பின்னணியாக ஏதேனும் ஒரு பொருண்மை இருக்கும். அப்பொருண்மையானது செயல்களால் (acts), செயல் தவிர்க்கைகளால் (omission) அல்லது கூற்றுகளால் (statements) ஆனதாக இருக்கும் அப்படிப்பட்ட ஒவ்வொரு செயலும், செயல் தவிர்க்கையும் அல்லது கூற்றும் வழக்கு எழுவதற்கு காரணமாக இருந்த நடவடிக்கையின் (transaction) தன்மை குறித்து சில விஷயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரும். மேலும் அந்நடவடிக்கையின் உண்மையான சொரூபத்தை வெளிப்படுத்தும். எனவே, அச்செயல்கள், செயல் தவிர்க்கைகள் மற்றும் கூற்றுகளும் அந்நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு ஒன்றிய செயல்கள் எனப்படுகிறது. இவை தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புடையவை யாகும். எனவே இதற்கு அளிக்கப்படும் சாட்சியத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். [நடவடிக்கை என்பது பிரச்சனைக்குரியதாக உள்ள ஒரு குற்றம், ஒரு ஒப்பந்தம், ஒரு தவறு அல்லது விசாரணையில் உள்ள வேறு ஏதேனும் விஷயம் குறித்து தொடர்பு கொண்டு விளங்கும் பல பொருண்மைகளின் தொகுதி ஆகும் - **ஸ்டீபன்**.]

சுருங்கக்கூறின், தீர்வுதரு பொருண்மையோடு உடன் நிகழ்ந்த அல்லது அதை விளக்குகிற அல்லது அதனுடன் ஒன்றி ஒன்றானதகாகக் கொள்ளப்படுகிற செயல்கள், செயல் தவிர்க்கைகள், கூற்றுகள் ஆகிய அனைத்தும் 'ஒன்றிய செயலாகும்.'

Ratten v. The Queen[1]

இவ்வழக்கில் மனைவியை சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவரது எதிர்வாதம் என்னவென்றால், துப்பாக்கியானது தற்செயலாக வெடித்து விட்டதே தவிர, அவர் சுடவில்லை, என்பதேயாகும். ஆனால் இறந்துபோன அப்பெண், தான் இறப்பதற்கு முன் தொலைபேசியில் **"தயவு செய்து போலீசைக் கூப்பிடுங்கள்" (Get me the Police, please)** என்று பேசியதற்கு சாட்சியம் இருந்தது. தொலைபேசி ஆபரேட்டர் காவல் நிலையத்திற்கு தொடர்பு கொடுப்பதற்குமுன், அப்பெண் தனது வீட்டு முகவரியை கொடுத்துவிட்டு தொலைபேசியை சட்டென்று வைத்துவிட்டாள். அவள் மிகவும் வேதனையுடன் அழுகுரலுடன் தொலைபேசியில் பேசியதாக தெரிகிறது. பின்னர் போலீஸ் அவள் வீட்டிற்கு வந்து பார்த்தபொழுது, அவள் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடந்தாள். அவள் இறப்பதற்கு முன் தொலைபேசியில் பேசியது, அவள் கூறிய வார்த்தை, அவள் பேசிய விதம் ஆகியவை யாவும், அவள் இறப்பதற்கு காரணமாக இருந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிலிருந்து துப்பாக்கி தற்செயலாக வெடித்து அவள் இறக்கவில்லை; மாறாக சுடப்பட்டுத்தான் இறந்தாள் என்பது ஊர்ஜிதமாகியது. குற்றவாளியின் வாதப்படி திடீரென தற்செயலாக துப்பாக்கி வெடித்து விட்டதாகக் கொண்டால், அது நடந்து தன்மீதுதான் எப்படியும் குண்டுபாயும் என்பதை அறிந்து, அது நடப்பதற்கு முன்னரே போலீசை வரவழைக்க வேண்டும் என்று அப்பெண்மணி உட்பட எவரும் முன்கூட்டியே சிந்திப்பதற்கு வாய்ப்பில்லை என்பதாலும், தனது கணவர் தன்னை சுட முயற்சிக்கிறார் என்பதை அறிந்த பின்னர்தான் அவள் தொலைபேசி செய்துள்ளாள் என்று மெய்ப்பிக்கப்பட்டபடியாலும், அவளது கணவனுக்கு தண்டனை வழங்கப்பட்டது. இவ்வழக்கில் அவள் தொலைபேசியில் பேசியவிதம், செய்தி ஆகியவை ஒன்றிய செயலாக கொள்ளப்பட்டன.

R. v. Foster[2]

இவ்வழக்கில் ஒருவர் மீது கார் மோதி, அவரைக் கொன்று விடுகிறது. ஓட்டுநர் மீது வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையில் சாட்சியாக வந்தவர், அந்த நபரின் மீது மோதும்பொழுது தான் பார்க்கவில்லை

1. 1971 W.L.R. 930
2. (1834) 6 C. & P. 325

என்றும், ஆனால் அந்த விபத்து நடந்த சில நிமிடங்களில் அந்தக் கார் மிக வேகமாகச் சென்றதைப் பார்த்தேன் என்றும், அதைத் தொடர்ந்து ஒருவருடைய மரண ஓலத்தைக் கேட்டு அந்த இடத்திற்கு ஓடிச்சென்று பார்த்த பொழுது, அந்த நபர் இறப்பதற்கு முன் **தம்மை கார் மோதி விட்டுச் சென்றது** என்றும் கூறிவிட்டு இறந்து விட்டார். இறப்பதற்குமுன் விபத்து பற்றி இறந்தவர் கூறிய செய்திகள் ஒன்றிய செயல் என்றும், அது குறித்த சாட்சியம் அனுமதிக்கத்தக்கது என்றும் நீதிமன்றம் கூறியது.

R. v. Bedingfield[1]

இவ்வழக்கில் பெட்டிங்ஃபீல்ட் என்பவன் ஒரு அறையில் ஒரு பெண்ணின் குரல்வளையை அறுத்துவிட்டு ஓடிவிடுகிறான். உடனே அப்பெண்மணி அவ்வறையை விட்டு தட்டுத்தடுமாறி வெளிவந்து தான் இறப்பதற்கு முன் பின்வருமாறு கூறுகிறார் **"அய்யோ அத்தையே, பெட்டிங்ஃபீல்ட் எனக்கு என்ன செய்திருக்கிறான் என்று பாருங்கள்" ("Oh dear Aunt, see what Bedingfield has done to me")**

மேற்படி கூற்றை ஒன்றிய செயலாக நீதிபதி **Cockburn C.J.,** ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் அப்பெண்மணி தன்னுடைய குரல்வளையை பெட்டிங்ஃபீல்டு கத்தியால் அறுக்கும்பொழுது எந்தச் சப்தமும் செய்யாமல் இருந்து விட்டு, அவன் அந்த அறையை விட்டு ஓடியதும், அவள் அந்த அறையின் வாசல் அருகே வந்து கத்தியதால், இது ஒரே நடவடிக்கையில் அமைந்த செயல் ஆகாது என்றும் எனவே ஒன்றிய செயலாக கொள்ள முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

ஆனால் இதே அவள் தன்னுடைய குரல்வளையை பெட்டிங்ஃபீல்டு அறுக்கும் பொழுது கூறியிருந்தால் அது ஒரே நடவடிக்கையில் அமைந்த ஒன்றிய செயலாக கருதப்படும். **உதாரணமாக, 'என்னைக் கொல்லாதே' (Don't Harry)** என்பது போன்ற சிறு வாக்கியத்தை குரல்வளை அறுபடும் போது கூறியிருந்தாலும் அது ஒன்றிய செயலாக கருதப்படும். ஆனால் மேற்படி வழக்கில் குரல்வளை அறுபடும் கூற்று அனுமதிக்கத்தக்கதல்ல என நீதிமன்றம் கூறியது. இவ்வாறே பின்வரும் ஒரு வழக்கும் அமைகிறது.

R. v. Christie[2]

இவ்வழக்கில் ஒருவர் 4 வயதுடைய சிறுவனை அடித்து விடுகிறார். அதன்பிறகு அவன் தன் தாயாரிடம் சென்று தனக்கு அடி விழுந்ததைப் பற்றியும், தன்னை அடித்த நபர் பற்றியும் கூறினான். இக்கூற்றுகள் ஒன்றிய செயலின்பாற்படாது. ஏனெனில் அடிபடும் பொழுது அவன் எதையும் கூறவில்லை. மாறாக அடிவிழுந்த சம்பவம் முடிந்த பிறகே அவன் கூறியுள்ளான். இக்கூற்றை அனுமதிக்க முடியாது என நீதிமன்றம் கூறியது.

1. (1879) 14 Cox c.c. 341
2. 1914 AC 545

b) இந்திய சாட்சியச் சட்டத்தில் ஒன்றிய செயல்:

மேற்படி ஒன்றிய செயல் கோட்பாட்டினை (Doctrine of Res Gestae) பல சட்ட அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இக்கோட்பாடு தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் இல்லை என்பதே இதன் காரணமாகும். பேராசிரியர் **Wigmore** அவர்கள் இக்கோட்பாடு பயனற்றது மட்டுமல்லாமல் தீங்கானதும் ஆகும் என்று கூறுகிறார். எனவே இந்திய சாட்சிய சட்டத்தில் Res Gestae என்ற பதம் பயன்படுத்தப் படவில்லை. மாறாக நில மாற்றங்களுடன் இந்திய சாட்சிய சட்டத்தில் **பிரிவுகள் 6 முதல் 9, 11, 14 மற்றும் 15** ஆகியவைகளின் வாயிலாக எடுத்தாளப்பட்டுள்ளது. அவற்றில் பிரிவு 6 'ஒன்றிய செயல்' பற்றி குறிப்பாக கூறுகின்றது.

பிரிவு 6 கூறுவதாவது:

நில பொருண்மைகள் வழக்குப் பிரச்சனையில் வராமல் இருக்கலாம். ஆனால் அவை ஒரே நடவடிக்கையின் பகுதியாக அமையும்படி ஒரு தீர்வு தரும் பொருண்மையுடன் மிக நெருக்கமாக இருக்கலாம். அப்போது அவை அந்நடவடிக்கையில் ஒரே நேரத்திலும் மற்றும் இடத்திலும் நிகழ்ந்தவைகளாக இருப்பினும் சரி அல்லது வெவ்வேறு நேரங்களிலும் மற்றும் இடங்களிலும் நிகழ்ந்தவைகளாக இருப்பினும் சரி, அவற்றைத் தொடர்புற்றவையாகவே கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்:

(1) Bயை அடித்துக் கொலை செய்ததாக A என்பவன் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. அடித்தது ஒரு நடவடிக்கை. எனவே அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமையும்படி அதற்குச் சற்று முன்பு அல்லது பின்பு B அல்லது Aயால் அல்லது அவர்களுக்கு அருகில் இருந்தவர்களால் (by-standrs) சொல்லப்பட்டவையும் செய்யப்பட்டவையும் தொடர்புற்ற பொருண்மைகளாகும்.

(2) சொத்துக்களை அழித்தும், படைகளைத் தாக்கியும் சிறைகளை உடைத்தும் திறந்தும் செயல்பட்ட ஆயுத புரட்சி ஒன்றில் அங்கம் வகித்து இந்திய அரசை எதிர்த்து போர் தொடுத்ததாக A என்பவர் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. இங்கே கூறப்பட்ட பொருண்மைகள் ஒவ்வொன்றிலும் A பங்கு கொள்ளவில்லை என்றாலும், இவையனைத்தும் ஒரு பொதுவான நிகழ்ச்சியின் வெவ்வேறு பகுதிகளாக அமைகின்ற காரணத்தால் தொடர்புற்றவையாகும்.

(3) ஒரு கடிதத்தில் எழுதப்பட்டுள்ள வாசகங்களுக்காக A என்பவர் மீது B என்பவர் எழுத்துவழி அவதூறு வழக்கினைத் தொடர்கிறார். இந்த எழுத்துவழி அவதூறு எழுதுவதற்குக் காரணமாக இருந்தவை அனைத்தும்,

அது சம்பந்தப்பட்டவை அனைத்தும். இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்றுள்ள கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவை தொடர்புற்ற பொருண்மைகளாகும்.

(4) B என்பவரிடமிருந்து அனுப்புமாறு கோரப்பட்ட குறிப்பிட்ட சரக்குகள் A என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டவையா என்பது கேள்வி. அச்சரக்குகள் இடையிலுள்ள பலருக்கு அடுத்தடுத்து ஒப்படைக்கப்பட்டன. அத்தகைய ஒவ்வொரு ஒப்படைப்பும் ஒரு தொடர்புற்ற பொருண்மையாகும்.

Chain Mahto v. Emperor[1]

இவ்வழக்கில் ஒரு நடவடிக்கை (சம்பவம்) நடந்து கொண்டிருக்கும்பொழுதோ அல்லது அதற்கு உடன் முன்னரோ அல்லது பின்னரோ அதற்கு அருகில் இருந்து கண்ணால் பார்த்தவர்கள் அளிக்கும் வாக்குமூலங்கள் தொடர்புற்ற பொருண்மைகளாகும். ஏனெனில் அவை ஒரே நடிவடிக்கையின் பகுதியாக அமைகின்றன என நீதிமன்றம் கூறியது.

முடிவுரை:

மேற்கண்டதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், ஒரே நடவடிக்கையின் (ஒன்றிய செயலின்) பகுதியாக அமையும் பொருண்மைகள் தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புடைய பொருண்மைகளாகும். அவற்றை மெய்ப்பிக்க அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதேயாகும். மேலும் இவ்வாறு ஒன்றிய செயலினால் அமையும் பொருண்மைகள் ஒன்றிய பொருண்மைகளாகவும் அழைக்கப் படலாம்.

- o -

1. AIR 1939 PC 146

13 உட்கருத்து, குற்றம் புரிய தயாராகுதல் மற்றும் நடத்தை - எப்பொழுது தொடர்புடையதாகின்றன? [Motive, Preparation and Conduct - When relevant?]

27. a) Define motive.

b) Is preparation to commit an offence relevant in criminal prosecution?

c) When would conduct of any party to any suit or proceedings be relevant? Substantiate your answer with case law.

அ) உட்கருத்து என்றால் என்ன? வரையறுக்கவும்.

ஆ) குற்றம் புரிய தயாராகுதல், குற்றவியல் வழக்கு விசாரணை நடவடிக்கையில் தொடர்புடையதா?

இ) வழக்குத் தொடங்குவதிலோ, நடவடிக்கையிலோ தரப்பினர் களின் நடவடிக்கையும் நடத்தையும் எந்த அளவிற்கு எப்போது தொடர்பு உடையது?

(அல்லது)

Define 'motive'. When and to what extent, is the conduct of a party to a proceeding relevant? (உட்கருத்து என்பதை வரையறு. எப்பொழுது மற்றும் எந்த அளவிற்கு ஒரு வழக்கு நடவடிக்கையில் தரப்பினரின் நடத்தை தொடர்புடையதாகும்?)

(அல்லது)

Motive - Write short notes. (உட்கருத்து - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 8வது பிரிவானது, ஒரு செயலைச் செய்ய அல்லது அதற்குண்டான முன்னேற்பாடுகளைச் (preparation) செய்ய தரப்பினரைத் தூண்டுகின்ற உட்கருத்தை (motive) ஒவ்வொரு வழக்கினைத் தீர்க்கும் பொழுதும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. எனவே அந்த உட்கருத்து அல்லது முன்னேற்பாடுகள் குறித்து அளிக்கப்படும் சாட்சியமானது, ஒரு வழக்கு சூழ்நிலைச் சாட்சியத்தை மட்டுமே சார்ந்திருக்கும்பொழுது, மிக முக்கியமானதாகிறது. விளக்கமாக மேற்கொண்டு தொடர்வதற்கு முன் 'உட்கருத்து' என்பதின் பொருளை அறிந்து கொள்ளல் நலம்.

a) உட்கருத்து (motive) - வரையறை:

உட்கருத்து என்பது ஒரு மனிதனை குறிப்பிட்ட செயலொன்றைச் செய்யத் தூண்டும் உள்மனதின் கருத்தாகும். ஒரு செயலைச் செய்தற் பொருட்டு ஒருவன் அதற்குண்டான காரண காரியங்களுடன் தன் உள்மனதில் ஒளித்து வைத்திருக்கும் ஆசையே 'உட்கருத்தாகும்'. மனிதனின் செயல் 'உட்கருத்தினை' மையமாகக் கொண்டே இருக்கும். உட்கருத்தில்லாமல் எச்செயலும் கிடையாது. உட்கருத்தில்லாத செயலானது காரணமே ஏதுமில்லாமல் செய்யப்படும் காரியத்திற்கு ஒப்பாகும். (An action without a motive is like an effect without a cause) உட்கருத்தினை ஒரு மனிதனின் மனநிலை (a state of mind) என்றும், மனக்கிளர்ச்சி (emotion) என்றும் குறிப்பிடலாம்.

கருத்து, உட்கருத்து - வேறுபடும் விதம்:

கருத்து (Intention) என்பது உட்கருத்திலிருந்து மாறுபட்டதாகும். ஒரு குறிப்பிட்ட செயலில் ஒரு மனிதனின் உட்கருத்து நல்லதாக இருக்கலாம். ஆனால் அதில் அவனுடைய கருத்து கெட்டதாக இருக்கும். **எடுத்துக்காட்டாக,** ஏழைப் பெண்ணொருத்தி ரொட்டிக் கடையில் ரொட்டித் துண்டு ஒன்றைத் திருடுகிறாள். அதில் ரொட்டியை திருட வேண்டும் என்பது அவளுடைய கருத்து. ஆனால் அவளுடைய உட்கருத்தோ, பட்டினியால் வாடும் குழந்தைக்கு கொடுப்பதற் காகத்தான்.

ஒரு மனிதனுடைய கருத்து என்பது ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதா அல்லது வேண்டாமா என்று முடிவு செய்தல் ஆகும். ஆனால் உட்கருத்து என்பது அவன் ஒரு செயலைச் செய்யலாமா அல்லது வேண்டாமா என்று முடிவு செய்வதற்குண்டான காரணமாகும்.

எனவேதான் தீர்வுதரு பொருண்மைக்கான அல்லது தீர்வுதவு பொருண்மைக்கான உட்கருத்தை காட்டும் அல்லது உருவாக்குகின்ற பொருண்மைகள் தொடர்புடையவையாகும். அதற்கு அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதாகும் என்று **பிரிவு 8** கூறுகிறது.

உட்கருத்து குறித்து அளிக்கப்படும் சாட்சியம் எப்பொழுது மிகவும் முக்கியமானதாகிறது?

ஒரு வழக்கின் முடிவானது சூழ்நிலைச் சாட்சியத்தை மட்டுமே சார்ந்திருக்கும் பொழுது, உட்கருத்து குறித்து அளிக்கப்படும் சாட்சியம் மிக முக்கியமானதாகிறது. ஒரு வழக்கில் நேரடி அல்லது நம்பத்தகுந்த வலுவான சாட்சியங்களே இல்லாமல் சூழ்நிலைச் சாட்சியம் மட்டுமே இருக்கும்பொழுது, வழக்கு தரப்பினரின் உட்கருத்தானது அதிக முக்கியத்துவம் உடையதாகின்றது.

எடுத்துக்காட்டுகளும் வழக்குகளும்:

1. B என்பவரைக் கொலை செய்ததற்காக A என்பவன் மீது விசாரணை நடக்கிறது. மேற்படி A என்பவர் இதற்கு முன் C என்வரைக் கொலை செய்திருந்தார். இந்தப் பொருண்மை B க்கு தெரிந்திருந்து, தனக்கு தெரிந்ததை மற்றவர்களிடம் கூறிவிடுவேனென்று அச்சுறுத்தி A யிடம் பணம் பறிப்பதற்குப் B முயற்சி செய்தார். இங்கு Aக்குள்ள உட்கருத்து தெளிவாகப் புலனாகும். அதாவது தான் ஏற்கனவே Cயை கொலை செய்ததை B யாருக்கும் சொல்லாமல் இருக்கும் பொருட்டு, அவரை A கொலை செய்கிறார். இதுவே உட்கருத்தாகும். மேற்கண்ட பொருண்மை தொடர்புடையதாகும். கொலை குறித்து நேரடிச் சாட்சியம் இல்லாத பொழுது, உட்கருத்து குறித்து அளிக்கப்படும் சாட்சியம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. **[பிரிவு 8 எடுத்துக் காட்டு (a)]**

Natha Singh v. Emperor[1]

மேற்கண்ட எடுத்துக்காட்டை ஒத்த மாதிரியே இவ்வழக்கின் பொருண்மைகள் அமைந்திருக்கின்றன. A என்பவரை Natha Singh என்றும், B என்பவரை K. Singh என்றும், C என்பவரை Bhan Singh என்றும் மேற்படி எடுத்துக்காட்டில் பொருத்திப் படிக்கவும். இங்கு Natha Singh- ன் உட்கருத்து தெளிவானதால், அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

2. A என்பவரிடமிருந்து பத்திரம் (Bond) ஒன்றின் அடிப்படையில் B என்பவர் கடன் வாங்கியிருந்ததாகவும், அதை திருப்பிச் செலுத்தும் படியும் A என்பவர் B என்பவர் மீது வழக்கு ஒன்றைத் தொடுக்கிறார். அவ்வாறு, தான் பத்திரம் எழுதிக் கொடுத்ததை B மறுத்து, தான் கடன் வாங்கவில்லை என்று சாதிக்கிறார். இங்கு மேற்படி Bக்கு பணம் கடனாகக் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் அவருக்கு பணக் கஷ்டம் இருந்தது என்பதும், ஒரு குறிப்பிட்ட செலவுக்காக பணம் தேவைப்பட்டது என்பதும் தொடர்புற்ற பொருண்மைகளாகும். B பணம் கடன் வாங்கியதற்கான உட்கருத்து, அவருக்கு ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக பணம் தேவைப்பட்டது என்பதாகும். எனவே அவ்வுட்கருத்தை மெய்பிக்கும் பொருட்டு சாட்சியம் அளிக்கலாம். **[பிரிவு 8 எடுத்துக்காட்டு (b)]**

Uday Paul Singh v. State of U.P.[2]

ஒரு குற்றத்திற்கு நேரடிச் சாட்சியங்கள் இல்லாத பொழுது சூழ்நிலைகளிலிருந்து மட்டுமே அக்குற்றச் செயலை ஊகிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும் பொழுதும், அக்குற்றத்திற்கான உட்கருத்து மிக

1. AIR 1946 SC 187
2. AIR 1972 SC 54

முக்கியமானதாகிறது. அந்த உட்கருத்தில் ஏதேனும் அய்யப்பாடுகள் எழுந்தாலோ அல்லது அப்படிப்பட்ட உட்கருத்து இல்லை என்றாலோ அது குற்றஞ் சாட்டப்பட்டவரின் விடுவிப்பிற்கு வழிவகுக்கும். எனவே நேரடிச் சாட்சியங்கள் இல்லாத பொழுது உட்கருத்து முக்கியமானதாகிறது என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

உட்கருத்து இருப்பதாலும், இல்லாததாலும் ஏற்படும் விளைவுகள்:

மேற்கண்டதிலிருந்து ஒருவனுக்கு ஒரு குற்றச் செயலைச் செய்ய உட்கருத்து ஏதுமில்லை என்றால், அவனுக்கு தண்டனை கிடையாது என்ற முடிவுக்கு வரக்கூடாது. அவன் புரிந்த குற்றச் செயலானது நேரடிச் சாட்சியங்களால் நிரூபிக்கப்பட்டுவிட்டால், அவனுக்கு அக்குற்றச் செயலை செய்ய உட்கருத்து ஏதுமில்லை என்றாலும், அவனுக்கு தண்டனை நிச்சயம். பின்வரும் வழக்குகள் இதை மேலும் விளக்கும்.

Narayan v. State of Maharastra[1]

இவ்வழக்கில், குற்றம் புரியப்பட்டது தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டால், அக்குற்றத்திற்கான உட்கருத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு குறிப்பிட்ட நபரால் அக்குற்றம் புரியப்பட்டுள்ளது என்பதற்கு தெளிவான சாட்சியங்கள் இருக்கும் பொழுது, அவனுக்கு அக்குற்றம் புரிய உட்கருத்து இல்லை என்பதையோ (Absence of motive) அல்லது உட்கருத்து போதுமானதாக இல்லை என்பதையோ (Inadequacy) கருத்தில் கொள்ள வேண்டியதில்லை என உச்ச நீதிமன்றம் கூறியது.

Rajendra Kumar v. State of Punjab[2]

இவ்வழக்கில் நேரடிச் சாட்சியம் இருக்கும் பொழுது, குற்றத்திற்கான போதுமான உட்கருத்து இல்லை என்பதனாலேயே அக்குற்றத்தின் தன்மை அல்லது கடுமை குறைந்து விடாது என உச்சநீதிமன்றம் கூறியது.

R. v. Palmer[3]

இது உட்கருத்து குறித்த முக்கியமான ஆங்கில வழக்காகும். இதில் Palmer என்பவர் பொருளாதார ரீதியாக மிகவும் நொடிந்து போயிருந்தார். அதிலிருந்து மீள தனது ஒரு நண்பனிடம் இருந்து ஒரு பெருத்த தொகையை கடனாகப் பெற்றார். மேற்படி Palmer-ம் அவரது அந்நண்பரும் குதிரைப் பந்தயங்களுக்கு சேர்ந்து போகும் பழக்கமுடையவர்கள். அப்படி ஒரு நாள் தான் தங்கியிருந்த ஓட்டல் அறைக்கு இரவில் திரும்பினார். அவர் படுத்த சில நிமிடங்களுக்குள் இறந்து போயிருந்தார். இங்கு Palmer மீது சந்தேகம்

1. AIR 1971 SC 1656
2. AIR 1966 SC 1322
3. Central Criminal Court, 1856

எழுந்தது. அதாவது கடனாளி நன்னடத்தை ஒழித்து விட்டால் பிறகு நிம்மதியாக வாழலாம் என்ற உட்கருத்துடன் Palmer, அவரது நன்னடத்தை விஷம் வைத்து கொன்று விட்டார் என்று நீதிமன்றம் கருதி, அவ்வுட்கருத்து மேற்படி கொலைச் செயலுக்கு தொடர்புற்றது எனத் தீர்மானித்து Palmer ரை நீதிமன்றம் தண்டித்தது.

எனவே ஒரு செயலிற்கான உட்கருத்தை விளக்கும் பொருண்மைகள் தொடர்புற்றவையாகும். அதற்கு அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத் தக்கதாகும்.

b) குற்றம் புரிய தயாராகுதல் குற்றவியல் வழக்கு விசாரணை நடவடிக்கையில் தொடர்புடையதா?

ஒரு குற்றச் செயலுக்கு நான்கு நிலைகள் உள்ளன. அவை 1) குற்றக்கருத்து (Intention); 2) குற்றம் புரிய தயாராகுதல் (Preparation); 3) குற்றம் புரிய முயற்சித்தல் (Attempt); 4) குற்றம் புரிதல் (Commission). இதில் வெறுமனே குற்றக் கருத்தினை மட்டும் ஒருவன் கொண்டிருந்தால், அவனைத் தண்டிக்க இயலாது. உதாரணமாக, ஒருவனைக் கொல்ல வேண்டும் என்று மற்றொருவன் கருதுகிறான். அப்படிக் கருதியதால் மட்டுமே அவனைத் தண்டிக்க இயலாது. அவ்வாறே குற்றம் புரியத் தயாராகுதலையும் இந்திய தண்டனைச் சட்டம் தண்டிப்பதில்லை. ஆனால் இதற்கு நான்கு விதிவிலக்குகள் உண்டு. அதன்படி இந்திய அரசிற்கு எதிராக போர் தொடுக்க தயாராகுதல், இந்தியா நட்புறவு கொண்ட நாடுகளில் சூறையாட தயாராகுதல், கள்ள நாணயம் தயாரிக்க தயாராகுதல் மற்றும் கூட்டுக் கொள்ளையடிக்க தயாராகுதல் ஆகிய குற்றங்களில் வெறுமனே தயாரிப்பு நிலையிலேயே தண்டிக்கலாம். குற்றம் புரிய முயற்சித்தலையும் (attempt) மற்றும் குற்றச் செயலையும் இந்திய தண்டனைச் சட்டம், தக்கவாறு தண்டிக்கிறது. குற்றம் புரிய தயாராகுதலுக்கும் குற்ற முயற்சிக்கும் இடையே அதிக இடைவெளி கிடையாது. சிறிது தவறினாலும் குற்றம் புரிய தயாராகுதல் எனும் நிலை குற்ற முயற்சி ஆகிவிட வாய்ப்புண்டு. இது குறித்து பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

In Re Gulam Mohammed

இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒரு நகராட்சி உறுப்பினர். தன்னுடைய அலுவலகத்தில் ஒரு வேலைக்காக பெண்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தார். ஒரு பெண் அத்தேர்விற்காக அவரது அறைக்குள் நுழைந்தவுடன் அவளைக் கற்பழிக்கும் பொருட்டு மேற்படி குற்றஞ் சட்டப்பட்டவர் அவளை பலாத்காரம் செய்வதற்கு அவ்வறையின் கதவை உட்பக்கமாக தாழிட்டுவிட்டார். அவளை பலாத்காரம் செய்வதற்கு முன், திடீரென அவளது கணவன் அவ்வறைக்குள் எப்படியோ எதிர்பாராமல் வந்துவிட்டார். நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மேற்படி குற்றஞ் சாட்டப்பட்டவர் மீது 'கற்பழிக்க முயற்சி' (attempt to

rape) என குற்ற வழக்கிடப்பட்டது. இங்கு நீதிமன்றத்தின் முன்னர் எழுந்த கேள்வி என்னவென்றால், கதவுகளை உட்புறம் தாழிட்ட செயல் குற்றம் புரிய தயாரான நிலையா அல்லது அதற்கு அடுத்த நிலையான குற்ற முயற்சியா (attempt) என்பதுதான். நீதிமன்றம் குற்றம் புரிய தயாரான நிலை மட்டுமே, குற்ற முயற்சி கிடையாது என அவரை விடுவித்தது. ஒருவேளை, அவளது ஆடைகளை அலங்கோலப்படுத்தியிருந்தால், அது கற்பழிக்க முயற்சியாகும். அப்பொழுது அவர் கதவை உட்புறம் தாழிட்டது கற்பழிக்க முயற்சி எனும் பொருண்மைக்குத் தொடர்புற்ற பொருண்மையாகும்.

இதையே இந்திய சாட்சிய சட்டத்தின் **8வது பிரிவானது,** தீர்வுதரு பொருண்மைக்கான அல்லது தொடர்புற்ற பொருண்மைக்கான முன்னேற் பாட்டை அதாவது தயார் நிலையை காட்டும் பொருண்மைமைகள் தொடர்புற்றவையே என்று கூறுகிறது. எனவே இது குறித்து அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதே.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவரை நஞ்சிட்டுக் கொல்ல முயற்சித்தார் என்பதற்காக அவர் விசாரணை செய்யப்பட்டார். இதில் B இறப்பதற்கு முன், அவருக்கு கொடுக்கப்பட்டது போன்ற அதே நஞ்சினை A என்பவர் முயன்று பெற்றார் (procured) என்பது தொடர்புற்ற பொருண்மையாகும். இவ்வாறு பெற்ற நஞ்சினை முயன்று பெற்ற நிலை குற்றம் புரியதயாராகுதல் (முன்னேற்பாடு) ஆகும். **[பிரிவு 8 எடுத்துக் காட்டு (c)].**

உரிமையியல் வழக்கு விஷயத்தில் தயார் நிலை:

உரிமையியல் வழக்கு விஷயத்திலும் தயார்நிலை என்பது தொடர்புற்ற பொருண்மையே. எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட ஆவணம் A என்பவரின் உயில்தானா என்பது கேள்வி. அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தேதிக்கு நெடுநாட்களுக்கு முன்னர் என்று சொல்ல முடியாத ஒரு கால அளவில் அவ்வுயிலின் வகைமுறைகள் எந்த விஷயங்களுக்குச் சம்பந்தமுடையவையோ அந்த விஷயங்களைப் பற்றி A விசாரித்தார் என்னும் பொருண்மையும், உயில் எழுதுவது குறித்து வக்கீல்களைக் கலந்து பேசினார் என்னும் பொருண்மையும், மற்ற உயில்களின் வரைவுகளைத் தாம் தயாரிக்கச் செய்து அவற்றை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்னும் பொருண்மையும் தொடர்புடையவையாகும். இவை A உயில் எழுதுவதற்கு முன் தன்னை தயார் செய்து கொண்ட நிலைகளைக் கூறும் பொருண்மைகளாகும். எனவே இது குறித்த சாட்சியமும் அனுமதிக்கத்தக்கதே.

மேற்கண்டதிலிருந்து தயார் நிலை (Preparation) என்பது குற்ற வழக்கு விசாரணையில் மட்டுமல்லாது உரிமையியல் வழக்கு விசாணையிலும் தொடர்புடையதாகவே உள்ளது, என்பது புலனாகிறது. ஆனால் குற்ற வழக்கு விசாரணையில் 'தயார் நிலை' அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தொடர்புடையதாகவும் உள்ளது.

c) நடத்தையும் (conduct) தொடர்புடைமையும் - பிரிவு 8 கூறும் விளக்கம்:

8வது பிரிவின் இரண்டாவது பத்தியானது வழக்குத் தரப்பினர்களின் நடத்தை எந்த அளவிற்கு எப்போது அவ்வழக்கிற்கு தொடர்புடையதாக அமைகிறது என்று கூறுகிறது.

அதன்படி, உரிமையில் வழக்கு (suit) அல்லது நடவடிக்கை (proceeding) ஒன்றைக் குறித்து அல்லது அதிலுள்ள அல்லது அத்துடன் தொடர்புடைய தீர்வுதரு பொருண்மை எதனையும் குறித்து, அந்த வழக்கு அல்லது நடவடிக்கைத் தரப்பினருடைய அல்லது அவருடைய முகவருடைய நடத்தை, தொடர்புடைய பொருண்மையாகும். ஒருவர் மேல் உள்ள குற்ற நடவடிக்கையில் அவருடைய நடத்தை, தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதரு பொருண்மை எதனையும் பாதிப்பதாக இருந்தாலும் அல்லது பாதிக்கப்படுவதாக (influenced) இருந்தாலும் தொடர்புடையதாகும். அந்நடத்தை அதற்கு முந்தயதாக இருந்தாலும் சரி (previous) அல்லது பிந்தியதாக (subsequent) இருந்தாலும் சரி, தொடர்புடையதே.

விளக்கம் (Explanation) - 1: 'நடத்தை' என்ற சொல்லில் வழக்கு தரப்பினர்களின் 'வாக்குமூலங்கள்' (statements) அடங்காது. ஆனால் அவை ஏதேனும் ஒரு செயலுடன் கூடியதாகவோ அல்லது ஒரு செயலை விளக்கக்கூடியதாகவோ இருப்பின் அவை 'நடத்தை' என்பதில் அடங்கும்.

விளக்கம் (Explanation) - 2: ஒரு நபரின் நடத்தை தொடர்புடையதாக உள்ள பொழுது, அந்த நபரிடம் அல்லது அவர் முன்னிலையில் அவர் கேட்கும்படி, அந்த நடத்தையை பாதிக்கின்ற வகையில் சொல்லப்பட்ட வாக்குமூலங்கள் தொடர்புடையதாகும்.

எடுத்துக்காட்டுகள்:

1. A என்பவர் மீது ஒரு குற்றம் சுமத்தப்படுகிறது. மேற்படி குற்றம் செய்யப்படுவதற்கு முன்பு அல்லது செய்யப்பட்ட சமயத்தில் அல்லது அதற்கு பிறகு, தமக்குச் சாதகமான தோற்றத்தை உண்டாக்கும் விதத்தில் மேற்படி A சாட்சியம் தயார் செய்தார். சாட்சியங்களை அழித்தார் அல்லது மறைத்தார். சாட்சிகளாக இருந்திருக்கக் கூடியவர்களைச் சாட்சியம் கூற விடாமல் தடுத்தார். அவர்களை நீதிமன்றத்திற்கு வராதிருக்கும் படிச் செய்தார். அல்லது அதற்கான பொய்ச் சாட்சியம் அளிப்பதற்காக ஆட்களை தகாத முறையில் சரிக்கட்டினார் என்ற பொருண்மைகள் A யின் நடத்தையை காட்டக்கூடியவையாகும். எனவே அவை தொடர்புடையவையாகும். **[பிரிவு 8 எடுத்துக்காட்டு (e)]**

2. A என்பவர் B என்பவரைக் கொள்ளையடித்தாரா என்பது கேள்வி. B கொள்ளையடிக்கப்பட்ட பிறகு, அவரைக் கெள்ளையடித்த ஆளைத் தேடிக்கொண்டு காவலர் வருகின்றனர் என்று Aயின்

முன்னிலையில் C என்பவர் கூறினார்; அதைக் கேட்டவுடன் A அங்கிருந்து ஓடிவிட்டார் எனும் பொருண்மைகள் அக்குற்றத்திற்கான A நடத்தையைக் காட்டுக்கின்றது. எனவே அவை தொடர்புடையவையாகும் **[பிரிவு 8 எடுத்துக்காட்டு (f)]**

3. A என்பவர் B என்பவருக்கு ரூ. 10,000/- கொடுக்க வேண்டியுள்ளதா என்பது கேள்வி. A என்பவர் தமக்கு பணம் கடன் தருமாறு C என்பவரைக் கேட்டார். "Aவை, நம்ப வேண்டாம்; ஏனெனில் அவர் ஏற்கனவே Bக்கு ரூ.10,000/-க்கு கடன் பட்டிருக்கிறார்" என்று Aயின் முன்னிலையிலும், அவருக்கு கேட்கும்படியும் Cயிடம் D என்பவர் சொன்னார். அதன் பேரில் பதில் எதுவும் சொல்லாமலேயே A சென்று விட்டார் எனும் பொருண்மைகள் A கடன் வாங்கியதற்கு தொடர்புடைய நடத்தையாக உள்ளது. அதாவது Aயின் நடத்தையை பாதிக்கக்கூடிய வாக்குமூலங்களாக உள்ளன. இது **பிரிவு 8ன்** இரண்டாவது விளக்கத்திற்கு (explanation) உட்பட்டுவருகிறது. எனவே இவை தொடர்புடைய பொருண்மைகளாகும். **[பிரிவு 8 எடுத்துக்காட்டு (g)]**

4. A என்பவர் குற்றமொன்றைச் செய்தாரா என்பது கேள்வி. குற்றவாளியைப் பற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது என்று எச்சரிக்கைக் கடிதம் வந்ததற்குப் பிறகு A தலைமறைவாகிவிட்டார் என்பதும், அந்தக் கடிதத்தின் உள்ளடக்கமும் தொடர்புடைய பொருண்மைகளாகும். அக்குற்றத்திற்கும் Aக்கும் சம்பந்தமுள்ளது என்ற சந்தேகத்தை தூண்டும் வகையில் Aயின் நடத்தை உள்ளது. **[பிரிவு 8 எடுத்துக்காட்டு (h)]**

சர்ச்சைக்குள்ளான முக்கிய வழக்கு:

Queen Empress v. Abdullah[1] - இவ்வழக்கில் தன்னை கொன்றவர்களைப் பற்றி இறக்கும் தருவாயில் கைகளை அசைத்து சைகைகள் மூலம் விளக்கிய பெண்மணியின் செயல்கள் மேற்படி பிரிவின்படி நடத்தை என்று கொள்ளப்பட்டது. ஆனால் முழு பெஞ்சின் (Full Bench) பெருவாரியான நீதிபதிகள் இதை மரண வாக்குமூலம் (Dying Declaration) என முடிவு செய்தனர். தலைமை நீதிபதி பீதேராம் **(Petharem)** அவர்களும், நடத்தை என்பது தொடர்புடையதாக இருக்க வேண்டும்; பின்னர்தான் அந்த நடத்தையின் விளைவாக கொடுக்கப்படும் வாக்குமூலங்கள் தொடர் புடையதாகும் என்று கூறினார். இவ்வழக்கில் அப்பெண்மணி காட்டிய சைகைகளுக்கு எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் கற்பிக்கலாம். எனவே அது மேற்படி கொலைச் செயலுக்கு தொடர்புடையதல்ல. ஆகவே அந்த தொடர்பற்ற நடத்தையின் (irrelevant conduct) மூலம் எழுந்த வாக்கு மூலங்களும் (அப்பெண்மணியின் சைகைகளைக் கொண்டு மாஜிஸ்ட்ரேட் எழுத்து மூலம் பதிவு செய்தது) தொடர்பற்றவையே எனக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாக்குமூலத்தை **பிரிவு 32ன்** கீழ் மரண வாக்குமூலமாக தலைமை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

1. (1885) All. 385 (F.B)

14 தீர்வுதரு அல்லது தீர்வுதவு பொருண்மையை விளக்கும் அல்லது அறிமுகப்படுத்த தேவையான பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை? [Facts necessary to explain or introduce relevant facts - When relevant?]

28. State the rules of Evidence relating to the relevancy of the facts necessary to explain or introduce a fact in issue or relevant fact. (தீர்வு தரு பொருண்மை அல்லது தீர்வுதரு பொருண்மையை விளக்குவதற்கு அல்லது அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான பொருண்மையின் தொடர்புடைமை குறித்த சாட்சிய சட்ட விதிகளைக் கூறுக.)

சாட்சிய சட்ட விதி - பிரிவு 9:

இந்திய சாட்சிய சட்டத்தின் 9வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அதன்படி-,

i) தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மை யொன்றை விளக்கவோ அல்லது அறிமுகப்படுத்தவோ அவசியமாக இருக்கும் பொருண்மைகள், அல்லது

ii) தீர்வுதரு பொருண்மையால் குறிப்பாக உணர்த்தப்படும் (suggested) ஒரு ஊகத்திற்கு துணை நிற்கின்ற (support) பொருண்மைகள், அல்லது அதை மறுக்கின்ற (rebut) பொருண்மைகள், அல்லது

iii) எந்தப் பொருளின் அல்லது ஆளின் தனித்தன்மை (identity of anything or person) தொடர்புடையதோ அந்தப் பொருளின் அல்லது ஆளின் தனித்தன்மையை நிலைநாட்டுகின்ற பொருண்மைகள், அல்லது

iv) தீர்வு தரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மை நிகழ்ந்த நேரத்தையோ இடத்தையோ நிர்ணயிக்கின்ற பொருண்மைகள் (fix the time or place at which any fact in issue or relevant fact happened), அல்லது

v) எந்தத் தரப்பினர்களால் மேற்கண்ட அத்தகு பொருண்மை நிகழ்த்தப்பட்டதோ அந்தத் தரப்பினர்களின் உறவைக் காட்டுகின்ற (relation of parties by whom any such fact was transacted) பொருண்மைகள்,

மேற்கண்ட பொருண்மைகள் அனைத்தும் அந்தந்த நோக்கத்திற்கு அவசியமாக இருக்குமளவிற்கு தொடர்புடையதாகும்.

எடுத்துக்காட்டுகள் (Illustrations):

1) ஒரு குறிப்பிட்ட ஆவணம் A என்பவரின் உயில்தானா என்பது கேள்வி. அந்த உயில் எழுதப்பட்ட தேதியன்று Aயின் சொத்துக்களைப் பற்றிய நிலைமைகளும் அவரது குடும்பத்தைப் பற்றிய நிலைகளும் தொடர்புடைய பொருண்மைகளாகும்.

2) A என்பவரைக் குறித்து அவதூறான எழுத்துக்களைப் பிரசுரித்ததாக B என்பவர் மீது A வழக்கிடுகிறார். ஆனால், தான் எழுதியவை அனைத்தும் உண்மையானவை என்று B உறுதி கூறுகிறார். (அதாவது A என்பவர் மீது உண்மைக்கு புறம்பாக எதுவும் கூறவில்லை என்று B உறுதி கூறுகிறார்)

அத்தகைய அவதூறு வெளியிடப்பட்ட சமயத்தில் இரு தரப்பினருடைய உறவுகளும், நிலைகளும் தீர்வுதரு பொருண்மைகளை அறிமுகப்படுத்தும் பொருண்மைகள் என்ற நிலையில் தொடர்புடையவை ஆகும்.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏதேனும் தகராறு ஏற்பட்டு, அதனால் அந்த இருவருக்கும் இடையில் உள்ள உறவு பாதிக்கப் பட்டிருக்குமாகில், அத்தகைய தகராறு இருந்தது என்பது தொடர்புடைய பொருண்மையாகும். இருப்பினும் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட அவதூறுக்கு ஒரு சிறிதும் சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி இருக்குமாகில் அந்த விவரங்கள் தொடர்பற்றவையாகும் (irrelevant).

3) A என்பவர் மீது ஒரு குற்றம் சாட்டப்படுகின்றது. குற்றம் புரிந்த பின்னர் அவர் தலைமறைவாகிவிட்டார் எனும் பொருண்மை தீர்வுதரு பொருண்மைக்குப் பிற்பட்டதனால் பாதிக்கப்பட்ட நடத்தை (as conduct subsequent to and affected by facts in issue) எனும் அளவில் **8-வது பிரிவின்** படி தொடர்புடையதாகும்.

அவர் அப்படி வீட்டை விட்டுச் சென்ற நேரத்தில் அவர் எங்கே சென்றாரோ அங்கு அவருக்கு எதிர்பாராத வேலை இருந்தது எனும் பொருண்மை அவர் திடீரென வீட்டை விட்டுச் சென்றார் என்பதனை விளக்குவதற்குப் பயன்படுகிறது என்னும் வகையில் (as tending to explain the fact) தொடர்புடையதாகும்.

அந்த வேலையைப் பற்றிய விவரங்களைத் தொடர்புடையனவாகக் கொள்ள முடியாது. ஆனால், அந்த வேலை எத்தகைய அவசரமானது என்பதனை விளக்கும் அளவில் மட்டும், அந்த வேலையை பற்றிய விவரங்கள் தொடர்புடையதாகும்.

4) A என்பவருடன் செய்து கொண்ட ஓர் ஊதிய ஒப்பந்தத்தை முறிக்குமாறு C என்பவரைத் தூண்டியதற்காக B என்பவர் மீது A வழக்குத் தொடர்கிறார்.

அந்த ஊழியத்தை விடுத்துப் புறப்படும் போது Aயிடம், 'இதைவிடப் பெரிய வேலையை எனக்கு B கொடுக்க முன் வந்திருப்பதால், நான் உங்களை விட்டுச் செல்கின்றேன்' என்று C கூறுகிறார். அவரது கூற்று அவரது நடத்தையை விளக்குகின்றது என்ற வகையில் அந்தப் பேச்சு ஒரு தொடர்புடைய பொருண்மையாகும். அவரது நடத்தை, தீர்வுதரு பொருண்மை எனும் வகையில் தொடர்புற்றதாகும்.

5) A என்பவர் மீது ஒரு பொருளைத் திருடியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அந்தப் பொருளை அவர் B என்பவரிடம் கொடுத்ததைப் பார்த்ததற்கு சாட்சி உள்ளது. B அதனை Aயின் மனைவியிடம் கொடுத்ததை பார்த்ததற்கும் சாட்சி உள்ளது. அதைக் கொடுக்கும் பொழுது, 'நீங்கள் இதை மறைத்து வைக்க வேண்டும் என்று A சொல்கிறார்' என்று B கூறுகிறார். Bயின் இவ்வுரையானது அந்நடவடிக்கைகளின் பகுதியாகவுள்ள பொருண்மையை விளக்குகின்றது (explanatory of a fact which is part of the transaction) என்ற முறையில் தொடர்புடையதாகும்.

6) A என்பவர் மீது ஒரு கலகக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தினர் எழுப்பிய முழக்கங்கள் அந்த நடவடிக்கையின் தன்மையை விளக்குவன என்ற வகையில் தொடர்புடையதாகும்.

முடிவுரை:

மேற்படி பிரிவு மொத்தத்தில் ஐந்து வகையான பொருண்மைகள் தொடர்புடையவை எனக் கூறுகின்றன. அவை தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மையை விளக்கவோ அல்லது அறிமுகப்படுத்துவதற்கும் அவசியமாக உள்ளன.

- o -

15 சதி மற்றும் சதிகாரர்களின் செயல்கள் - எப்பொழுது தொடர்புடையதாகின்றன? [Conspiracy and acts of conspirators - When relevant?]

29. State what facts the Indian Evidence Act holds as relevant to prove the existence of a conspiracy and the conspirator' s connections with it. (சதியொன்று இருப்பதையோ அல்லது அதனுடன் சதிகாரர்களுக்கு உள்ள தொடர்பையோ மெய்ப்பிக்க எந்தப் பொருண்மைகள் தொடர்புடையவை என்று இந்திய சாட்சியச் சட்டம் கூறுகிறதோ அவற்றைக் குறிப்பிடுக.)

(அல்லது)

In what circumstances are the acts and declarations of conspirators evidence against their fellow conspirators? (சதிகாரர்களின் செயல்களும் விளம்புரைகளும் எந்த சூழ்நிலைகளில் கூட்டுச் சதியாளர்களுக்கு எதிராகச் சான்றாக அமையும்?)

(அல்லது)

Discuss the law of conspiracy as laid down in the Evidence Act. (சாட்சியச் சட்டத்தில் கூறியுள்ளபடி சதி பற்றிய விதிகளை விவாதிக்க.)

(அல்லது)

"Anything said, done or written by any one of the conspirators is a relevant fact as against all the other conspirators". Explain with refernce to leading laws. ("சதிகாரர்களில் யாரேனும் ஒருவரால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதுவும் மற்ற அனைத்து சதிகாரர்களுக்கு எதிராக ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்". முக்கிய வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

Discuss the mode of proof in the criminal conspiracy cases as laid down in the Indian Evidence Act. (இந்திய சாட்சிய சட்டத்தில் கூறப் பட்டுள்ளபடி குற்றமுறு சதி வழக்குகளில் மெய்ப்பிக்கும் முறை குறித்து விவாதிக்க.)

(அல்லது)

Conspiracy - Write short notes. (சதி - சிறு குறிப்பு வரைக.)

சதி (Conspiracy) - விளக்கம்:

முதலில் 'சதி' என்ற பதத்தின் விளக்கத்தைக் காண்போம். அதாவது

இருவரோ அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்களோ ஒரு பொதுவான கருத்துடன் ஒரு சட்ட விரோதமான செயலைச் செய்யவோ அல்லது சட்டவிரோதமான வழிகளைப் பின்பற்றி சட்டத்திற்குட்பட்டதொரு செயலைச் செய்யவோ ஒன்று சேருதலே 'சதி' எனப்படும். அதில் உள்ள ஒவ்வொருவரும் சதிகாரர்கள் (Conspirators) எனப்படுவர். அவர்களின் பொதுவான கருத்தை (common intention) நிறைவேற்றுதற் பொருட்டு அவர்களில் யாரேனும் ஒருவர் ஒரு செயலைச் செய்தாலும், அதற்கு அக்கூட்டத்தில் உள்ள மற்ற கூட்டுச் சதிகாரர்களும் (fellow - conspirators) பொறுப்பாவார்கள். அச்செயல் அவர்களில் ஒவ்வொருவராலும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.

இந்திய சாட்சிய சட்டத்தின் 10வது பிரிவு கூறுவதாவது:

இந்திய சாட்சிய சட்டத்தின் **10வது பிரிவு** சதிகாரர்களில் ஒருவனது செயல்கள், அவர்களுடன், உள்ள மற்ற சதிகாரர்களுக்கு எதிரான ஒரு தொடர்புற்ற சாட்சியமாக எப்பொழுது கொள்ளப்படும் என்று கூறுகிறது. அதன்படி, குற்றமொன்றினை அல்லது வழக்குத் தொடர்வதற்குரிய நீங்கொன்றைச் செய்ய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்று கூடிச் சதி புரிந்தனர் என்று நம்புவதற்கு ஆதாரம் இருக்கும் பொழுது, அத்தகைய கருத்தை அவர்களில் எவரேனுமொருவர் முதலில் மனதில் கொண்டதற்குப் பிறகு, அவர்களில் எவரேனும் ஒருவரால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதுவும், அவர் அந்தச் சதியில் பங்கு பெற்றிருந்தார் என்ற நோக்கத்தைக் காட்டுகிறது. அத்துடன் அந்தச் சதியின் உண்மையை மெய்ப்பிப்பதற்குப் பயன்படுகிறது. எனவே அவை (அதாவது, அவ்வாறு சொல்லப்பட்டவை, செய்யப்பட்டவை அல்லது எழுதப் பட்டவை) அச்சதியில் பங்கேற்றவர்களாக நம்பப்படும் மற்ற சதிகாரர்கள் ஒவ்வொருவருக்கும் எதிராக ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்.

அதாவது அச்சதியில் பங்குகொண்ட ஒருவனால் செய்யப்பட்டவை அல்லது எழுதப்பட்டவை மற்ற உடன் சதிகாரர்களுக்கு எதிரான ஒரு சாட்சியமாக அமையும். ஏனெனில் சதியின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒரு சதிகாரர் செய்தவை, மற்ற அனைத்து சதிகாரர்களாலும் செய்யப்பட்டவையாகவே கருதப்படுவதால், அப்பொருண்மைகள் தொடர்புடைவையாக கருதப்படுகின்றன.

எடுத்துக்காட்டு:

இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுக்கும் சதியொன்றில் A என்பவர் சம்பந்தப்பட்டு உள்ளார் என்பதனை நம்புவதற்கேற்ற ஆதாரம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

அந்தச் சதிக்காக B என்பவர் ஐரோப்பாவில் ஆயுதங்களைச் சேகரித்தார். C என்பவர் கல்கத்தாவில் பணம் திரட்டினார். D என்பவர்

அந்தச் சதியில் சேருமாறு பம்பாயில் ஆட்களைத் தூண்டினார். அந்த பொது நோக்கத்திற்கு ஆதரவான சொற்களை E என்பவர் ஆக்ராவில் வெளியிட்டார். கல்கத்தாவில் C திரட்டிய பணத்தை காபூலில் உள்ள G என்பவருக்கு டெல்லியில் உள்ள F என்பவர் அனுப்பி வைத்தார். மற்றும் சதியைப் பற்றிய விவரங்கள் H என்பவரால் எழுதப்பட்ட கடிதத்தில் அடங்கியிருந்தன. மேற்கண்ட ஒவ்வொன்றும் அந்த சதியின் உண்மையை மெய்ப்பிப்பதற்கும், அவை அனைத்தும் பற்றி மேற்படி A என்பவர் ஒன்றும் அறியாதவராக இருப்பினும், அதில் சம்பந்தப்பட்டு உள்ள நபர்கள் அவருக்கு அந்நியர்களாக இருப்பினும், A அந்தச் சதியில் சேர்வதற்கு முன்னர் அல்லது அவர் அதை விட்டு விலகிச் சென்ற பின்னர் அவை நிகழ்ந்திருப்பினும், இந்தப் பொருண்மைகள் ஒவ்வொன்றும், அவர் அச்சதிக்கு உடந்தையாக இருந்தார் என்பதனை மெய்ப்பிப்பதற்குத் தொடர்புடையவையாகும்.

மற்ற சாட்சியத்திற்கும் சதி குறித்த சாட்சியத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:

ஒருவர் தன்னுடைய வியாபாரம் சம்பந்தமாக சிலவற்றை தன்னுடைய ஒரு டைரியில் குறித்து வைத்திருந்தார். அந்த டைரியில் உள்ளவை அவரைப் பொறுத்த ஒரு சாட்சியமாக மட்டுமே கருதப்படும். அதிலுள்ளவற்றை பிறிதொருவர்களுக்கு எதிரான ஒரு சாட்சியமாக பயன்படுத்த முடியாது; இது சாதாரணமாக சாட்சியமாகும். ஆனால் சதி குறித்த சாட்சியத்திலோ நிலைமை வேறு. மேற்கண்டது போலவே சதியில் ஈடுபட்டிருக்கும் நபர் ஒருவர் அச்சதி குறித்து தன்னுடைய டைரி ஒன்றில் குறித்து வைத்திருந்தார். இங்கு அதன் உள்ளடக்கங்கள் (contents) அந்த டைரியை வைத்திருந்தவர் மற்றும் அச்சதியில் உள்ள மற்ற உடன் சதிகாரர்களுக்கும் (fellow conspirators) எதிராக ஒரு சாட்சியமாக பயன்படுத்தப்படும். இதுவே மேற்படி பிரிவின் சாராம்சமான விஷயமாகும்.

R. v. Blake and Tye[1]

இவ்வழக்கில் Blake என்பவர் சுங்க இலாகாவில் ஒரு அதிகாரியாக பணிபுரிந்து கொண்டிருந்தார். Tye என்பவர் அங்கேயே இறக்குமதி யாளர்களின் ஏஜெண்டாக பணிபுரிந்து வந்தார். இவர்கள் இருவரும் சேர்ந்து சதி செய்து, இறக்குமதியாகும் வெளிநாட்டு பொருட்களுக்கு முழு சுங்கத் தீர்வையும் விதிக்காமல், பொருட்களை உரியவரிடம் ஒப்படைத்து தங்களுக்கென ஒரு தொகை பெற்றனர். இதில் Tye என்பவர், இரண்டு நோட்டுப் புத்தகங்களில் சிலவற்றைக் குறித்து வைத்திருந்தார். அதில் ஒன்று மேற்படி சதி குறித்த விஷயங்கள் அடங்கியதாகும். மற்றொன்று Tyeயின் சொந்த விஷயங்கள் அடங்கியதாகும். மேற்கண்ட இரண்டில் முதல் நோட்டுப் புத்தகமே உடன் சதிகாரரான Blakeக்கு எதிரான ஒரு சாட்சியமாக பயன்படுத்த முடியும் என்றும், மற்றொன்று சதி குறித்த

1. (1844) 6 Q & B 126

பொதுவான நோக்கத்தைப் பற்றி பேசாததால் அதை Blakeக்கு எதிரான ஒரு சாட்சியமாக அனுமதிக்க முடியாது என்றும் தலைமை நீதிப்பிரபு டென்மேன் **(Lord Tenman)** அவர்கள் கூறினார்.

Mirza Akbar v. Emperor[1]

சதி குறித்த பொதுவான கருத்தில் (common intention) 'கருத்து' என்ற பதமானது எதிர்காலத்தில் செய்யக் கருதியுள்ள செயலை (act intended is in the future) மட்டுமே குறிக்கிறது. எனவே சதிகாரர்களால் கூறப்படும் வாக்குமூலங்கள் எதிர்காலத்திற்கு மட்டுமே தொடர்புடையவையாகும். மேற்படி வழக்கில் சதிகாரர்களால் கடந்த கால செயல்கள் குறித்து செய்யப்பட்ட வாக்குமூலங்கள், சதி குறித்த அவர்களது பொதுவான கருத்தினைக் குறித்ததாகாது எனக் கூறப்பட்டது.

Sardul Singh v. State of Bombay[2]

சதி குறித்த காலத்திற்கு அப்பாற்பட்ட நேரத்தில் செய்யப்பட்ட செயல்கள் குறித்து அளிக்கப்படும் சாட்சியமானது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இவ்வழக்கில் சதி குறித்த காலமானது டிசம்பர், 1948லிருந்து ஜனவரி 1949 எனக் குற்றச்சாட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மாதிரியான சமயத்தில் அக்காலத்திற்கு அப்பாற்பட்ட காலத்தில் உடன் சதிகாரர்களால் செய்யப்பட்ட செயல்கள் தொடர்புடையவை ஆகாது; அது குறித்த சாட்சியம் அனுமதிக்கதக்கதல்ல என உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவுரை:

மேற்கண்ட 10வது பிரிவின்படி ஒரு சதிகாரர் கூறியதை அச்சதியின் மற்ற உடன் சதிகாரர்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்த முடியுமே தவிர, அவருக்கு ஆதரவாக பயன்படுத்த முடியாது. அதாவது ஒரு சதிகாரர் அச்சதியில் பங்கு கொள்ளவில்லை என்று பிறிதொரு சதிகாரர் கூற முடியாது. **[Swarnop v. State of Maharastra**[3]**]. சதிக்கும்பலில் யார் வாயைத் திறந்தாலும் அது மற்ற சதிகாரர்களுக்கு விரோதமாகத்தான் முடியும்.**

- o -

1. AIR 1940 P.C. 176
2. AIR 1957 SC 747
3. AIR 1965 SC 682

16 மற்றபடி தொடர்பில்லாத பொருண்மைகள் (அல்லது) வேற்றிட வாதம் (அல்லது) அலிபி - எப்பொழுது தொடர்புடையவை?

[Facts not otherwise relevant (or) Alibi - When relevant?]

30. When facts not relevant become relevant? (மற்றபடி தொடர்புற்றவையாக இல்லாத பொருண்மைகள் எப்போது தொடர்புற்றவையாக ஆகின்றன?)

(அல்லது)

Write short notes on Alibi (வேற்றிட வாதம் குறித்து சிறு குறிப்பு வரைக)

(அல்லது)

எப்போது வழக்கெழு வினாவில் உள்ள பொருண்மைக்கு முரண்பட்டவையாகத் தோன்றும் பொருண்மைகளும் தொடர்புற்ற பொருண்மைகளாகும்?

இந்திய சாட்சிய சட்டம் கூறுவதாவது:

சில நேரங்களில் சில பொருண்மைகள் தொடர்புடைய பொருண்மைகளாக இல்லாமல் இருப்பது போல் தோன்றுகிறது. அவை வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்குத் (Fact in issue) தொடர்புடைய பொருண்மையாகவே இருக்கும். அது எச்சந்தர்ப்பத்தில் என **பிரிவு 11** கூறுகிறது. அதன்படி,

1. தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மைக்கு முரண்பட்டவைகளாக அப்பொருண்மைகள் இருக்கும் பொழுது, (if the facts inconsistent with any fact in issue or relevant fact.)

2. தனியாகவோ அல்லது மற்ற பொருண்மைகளுடன் சேர்ந்தோ தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மையின் உண்மையை (existence) அல்லது இன்மையை (non-existence) பெரிதும் நிகழ்வதற்கு அரியவையாக (improbable) அப்பொருண்மைகள் ஆக்கும் பொழுது.

எடுத்துக்காட்டுகள்:

1. A என்பவர் ஒரு குறிப்பிட்ட நாளில் கல்கத்தா நகரில் குற்றமொன்றைப் புரிந்தாரா என்பது கேள்வி.

அந்தக் குறிப்பிட்ட நாளில் அவர், லாகூரில் இருந்தார் என்ற பொருண்மை தொடர்புடையதாகும்.

இந்தப் பொருண்மை, அவர் அந்தக் குற்றத்தைப் புரிந்தார் என்பதைப் பொய்ப்பிக்கும் (impossible) அளவுக்கு இல்லாவிடினும், அவ்வளவு தொலைவான இடத்தில் குற்றம் சம்பவிக்கும் காலத்தில் அவர் இருந்தார் என்பது, மேற்படி குறறச் செயல் அவரால் செய்யப்பட்டது என்பதை பெரிதும் நிகழ்தற்கரிதாக்கும் வகையில் (அதாவது அவரால் அக்குற்றம் செய்யப்பட்டிருக்க முடியாது என்னும் வகையில் [highly improbable]) உள்ளதால் அப்பொருண்மை மேற்படி குற்றச் செயலுக்கு மற்றபடி ஒரு தொடர்பற்ற பொருண்மையாக இல்லாது போனாலும், மேற்கண்ட வற்றின்படி ஒரு தொடர்புடைய பொருண்மையே.

2. A என்பவர் குற்றமொன்றைச் செய்தாரா என்பது கேள்வி.

அந்தக் குற்றம் A, B, C, D ஆகிய நால்வரில் எவராலும் செய்யப் பட்டிருக்கக்கூடும் என்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால் வேறு எவரும் அந்தக் குற்றத்தை செய்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதும், B, C, D ஆகியவர்களால் அது செய்யப்படவில்லை என்பதைக் காட்டும் பொருண்மைகளும் மேற்படி A என்பவர் அக்குற்றத்தைத் செய்தாரா எனும் கேள்விக்கு தொடர்புடையவையாகும். (அதாவது A, B, C, Dயில் B, C, D அக்குற்றத்தை செய்யவில்லை எனில் Aதான் குற்றவாளி என்ற முடிவுக்கு வருமளவிற்கு தொடர்புடையவையாகும்.)

வேற்றிடவாதம் (அல்லது) அலிபி (Alibi) (அல்லது) முரண்படுகின்ற பொருண்மைகள் (Inconsistent Facts) [பிரிவு 11 (1)]:

பொதுவாக வழக்கிற்கு தொடர்பு இல்லாத பொருண்மைகளுக்கு சாட்சியம் அளிக்கப்படுவது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் அப்பொருண்மைகள் அவ்வழக்கின் தீர்வுதரு பொருண்மைக்கோ அல்லது தீர்வுதவு பொருண்மைக்கோ முரண்பட்டதாக (inconsistent) இருப்பின், அவை வழக்கிற்கு தொடர்புடைய பொருண்மைகளாக கருதப்படுகின்றன, என மேற்படி பிரிவு 11 (1) கூறியதை மேலே கண்டோம். **இதுவே வேற்றிட வாதத்திற்கு (Alibi) அடிப்படையாக அமைகிறது.**

'வேற்றிடவாதம்' என்பது, குற்றம் நிகழ்ந்த காலத்தில், தான் வேறொரு இடத்தில் இருந்ததாகவும், குற்றம் நிகழ்ந்த இடத்தையும், காலத்தையும் வைத்துக் கணிக்கும் பொழுது, தாம் குற்றம் நிகழ்ந்த இடத்தில் அப்போது இருந்திருக்க முடியாதென்றும் குற்றம் சாட்டப்பட்டவர் கூறும் வாதமே ஆகும்.

மேற்கண்டதில் அக்குற்றத்தை அந்நபர் செய்திருப்பாரா என்பது தீர்வுதரு பொருண்மையாகும். அதே நேரத்தில் அக்குற்றம் நிகழ்ந்த சமயத்தில் அவர் வேறொரு இடத்தில் இருந்தார் என்று கூறுவது மேற்படி தீர்வுதரு பொருண்மைக்கு முரண்பட்டதாக (inconsistent) உள்ளது. எனவே மேறபடி பிரிவு 11ன் படி இது ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்.

அந்நபர், தாம் அக்குற்றம் நடந்த சமயத்தில் வேறொரு இடத்தில் இருந்தார் என்பதை மெய்ப்பித்து விட்டால், அவர் அக்குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவார். அவர் வேறிடத்தில் இருந்ததை பின்வருமாறு மெய்ப்பிக்கலாம். அஃதாவது அவ்வேறிடத்தில், தான் ஒரு லாட்ஜில் ரூம் எடுத்து தங்கியிருந்ததாகவோ அல்லது ஒரு கடிதத்தை அந்த இடத்தில் இருந்து தபாலில் சேர்த்தாகவும் அல்லது அந்த இடத்திலுள்ள வங்கி ஒன்றில் காசோலை ஒன்றை மாற்றி பணம் பெற்றதாகவும் மெய்ப்பித்து வேற்றிட வாதம் புரிந்து, அரசு தரப்பினரால் தனக்கெதிராக தொடுக்கப் பட்ட குற்ற வழக்கை ஒன்றும் இல்லாமல் ஆக்கி விடலாம்.

மேற்படி **பிரிவு 11ல்** கூறப்பட்டுள்ள 1வது எடுத்துக்காட்டும் 'வேற்றிட வாதத்தையே' குறிப்பிடுகின்றது. இதை நாம் மேலே கண்டுள்ளோம்.

State of M.P. v. Sughan Singh[1]

யார் ஒருவர் குற்றம் நிகழ்ந்த சமயத்தில் தான் அவ்விடத்தை விட்டு தொலைவான வேறொரு இடத்தில் இருந்ததாக கூறுகின்றாரோ, அவர்தான் அதை மெய்ப்பிக்க வேண்டும். மேற்படி வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒரு தொழிற்சாலையில் பணிபுரிகிறார். அப்பொழுது மணி காலை 8-30. தொடர்புடைய கொலையானது அதே தினத்தில் காலை 9 மணிக்கு நடக்கின்றது. மேற்படி தொழிற்சாலைக்கும் கொலை நடந்த இடத்திற்கும் உள்ள தூரமானது அதிக தொலைவில்லை. 10 நிமிடத்தில் தொழிற்சாலை யிலிருந்து கொலை நடந்த இடத்தை அடைந்து விடலாம். எனவே மேற்படி குறறஞ் சாட்டப்பட்டவர் கொலை நடந்த இடத்திலிருந்து, அக்கொலையை செய்ய முடியாத அளவிற்கு, வெகு தொலைவில் இருந்தார் என்ற அவரது வேற்றிட வாதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர் பணி புரிந்த தொழிற்சாலையும், கொலை நடந்த இடமும் வெகு அருகிலேயே இருந்ததால், அவரால் அவரது வேற்றிட வாதத்தை மெய்ப்பிக்க முடியவில்லை. எனவே அவர்தான் குற்றவாளி எனப்பட்டு தண்டிக்கப் பட்டார்.

சாட்சிய சட்டம் கூறும் முரண்பட்ட பொருண்மைகள்:

சாட்சிய சட்டமானது பின்வரும் பொருண்மைகள் தீர்வுதரு பொருண்மைக்கு அல்லது தீர்வுதவு பொருண்மைக்கு முரண்பட்டவை எனக் கூறுகிறது.

i) வேற்றிட வாதம் (அல்லது) அலிபி (Alibi): குற்றம் நிகழ்ந்த காலத்தில் தொலைவிலுள்ள வேறொரு இடத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர் இருந்தார் என்று காட்டப்படும் வாதம்.

ii) கணவனின் தொடர்பு கொள்ளாமை (Non-access of

1 AIR 1978 SC 201

husband): குழந்தை கருக்கொள்ளும்பொழுது கணவன் தனது மனைவியுடன் தொடர்வு கொள்ளவில்லை என்ற பொருண்மை அக்குழந்தை கள்ளத் தொடர்பில் (illegitimate) பிறந்ததா எனும் தீர்வுதரும் பொருண்மைக்கு முரண்பட்டதாகும். உதாரணமாக, A எனும் குழந்தை, B என்பவரின் முறைமணப் பிறப்பில் பிறந்ததா என்பது தீர்வுதரு பொருண்மையாகும். தற்பொழுது குழந்தை பிறந்த தினத்திலிருந்து 270 நாட்கள் (9 மாதங்கள்) முன்பு வரை மேற்படி A எனும் அக்குழந்தையை ஈன்ற அம்மனைவியை B எனும் கணவன் தொடர்பு கொள்ளவே இல்லை எனும் பொருண்மை மேற்படி தீர்வுதரு பொருண்மைக்கு முரண்பட்டதாகும். எனவே அது குறித்த சாட்சியம் அனுமதிக்கத்தக்கதே. மேற்கண்டது மெய்ப்பிக்கப்பட்டால், அக்குழந்தை Bக்கு பிறந்ததல்ல என்பது தீர்மானமாகிவிடும்.

iii) இறந்தவராக சொல்லப்பட்டவர் உயிருடன் இருத்தல் (Survival of the alleged deceased): Bயை 1995ஆம் வருடம் அக்டோபர் 10ஆம் நாள் A என்பவர் கொன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் மேற்படி B அதே மாதத்தில் 21ஆம் தேதியில் உயிருடன் இருந்ததாக கூறப்படும் பொருண்மை தீர்வுதரு (தீர்வுதவு) பொருண்மைக்கு முரண்பட்டதாகும். எனவே அனுமதிக்கத்தக்கது.

iv) மூன்றாம் நபரால் ஒரு குற்றம் செய்யப்படல் (Doing of a crime by a third person): Bயைக் கொன்றதாக A மீது குற்றஞ் சாட்டப்பட்டது. Bயைக் கொன்றது C என்று சாட்சியம் அளிக்கப்பட்டால், அது முரண்பட்டதாகும்.

v) தனக்குத் தானே தீங்கு விளைவித்துக் கொண்டதாக கூறல் (Self-infliction of the harm alleged): B என்பவரை விஷம் வைத்துக் கொன்றதாக A மீது குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் B என்பவர் தானே விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டதாக A கூறியது முரண்பட்ட பொருண்மையாகும். எனவே அதனை மெய்ப்பிக்க அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதே.

ஒரு நிகழ்ச்சி நிகழ்தற்குரியது எனக் காட்டும் பொருண்மைகள் (Facts showing Probabilities) [பிரிவு 11(2)]:

ஒரு பொருண்மை தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மையின் உண்மையை அல்லது இன்மையை பெரிதும் நிகழ்வதற்குரியவையாக அல்லது நிகழ்வதற்கு அரியவையாக ஆக்கினால், அப்பொருண்மை தொடர்புடையதாகும் என **பிரிவு 11 (2)** கூறுகிறது. எனவே அது குறித்து சாட்சியமளிக்கலாம்.

பல வழக்குகளில், குறிப்பாக பொருண்மைகளில் சிலவற்றை நேரடியாக நிரூபிக்க முடியாத பொழுது, நீதிமன்றமானது அந்நிகழ்ச்சி

நடந்திருப்பதற்கோ அல்லது நடந்திராமல் இருப்பதற்கோ (Probabilities of the situation) உண்டான சூழல்களை பின்பற்றி முடிவெடுக்கும்.

உதாரணமாக, 5 நபர்கள் ஒரு அறையில் தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவன் அவ்வறையில் கொல்லப்பட்டு கிடந்தான். எனவே மீதி உள்ள நால்வரில் யாரேனும் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவரோதான் அவனைக் கொன்று இருக்க வேண்டும் என்று மேற்கண்ட சூழலைக் கொண்டு எளிதில் அறியலாம். எனவே மேற்படி நால்வரில் யாரேனும் ஒருவரால் அவர் பெரும்பாலும் (Probable) கொல்லப்பட்டிருக்கக்கூடும் (existence) என்பதையோ அல்லது அந்நால்வரில் யாரேனும் ஒருவர் அக்கொலையுடன் தொடர்பு கொண்டிருக்க பெரும்பாலும் வாய்ப்பில்லை (non-existence) என்பதையோ காட்டும் ஒவ்வொரு பொருண்மையும் தொடர்புடைவையே. அதற்கு உற்ற சாட்சியங்களை அளிக்கலாம். இது நாம் மேலே கண்ட 2வது எடுத்துக்காட்டை ஒத்ததாகும்.

Santa Singh v. State of Punjab[1]

இவ்வழக்கில், ஒருவர் 25 அடி தொலைவிலிருந்து சுடப்பட்டதால் இறந்து விட்டார் என்று அதைக் கண்ணால் பார்த்த சாட்சிகள் கூறினர். ஆனால் மருத்துவ அறிக்கையின்படி அவர் இறப்பதற்கு காரணமாக அமைந்த துப்பாக்கிச் சூட்டுக் காயம், ஒரு அடி தூரத்திலிருந்து துப்பாக்கி சுடப்பட்டால் மட்டுமே ஏற்படும் என்று கூறியது. எனவே மேற்படி சாட்சிகள் கூறிய வாக்குமூலமானது மேற்படி துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியை பெரிதும் நிகழ்தற்கரியதாக (highly improbable) ஆக்கிவிட்டது. எனவே இறந்தவரை சுட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் விடுவிக்கப்பட்டார்.

- o -

1. AIR 1956 SC 525

17

உரிமை அல்லது வழக்கத்தின் இருப்பு குறித்து எழும் வினாவிற்கு தொடர்புடைய பொருண்மைகள் [Facts relevant when right or custom is in question]

31. What facts are relevant when the question is as to the existence of any right or custom? (ஒரு உரிமையோ அல்லது வழக்கமோ பிரச்சனையில் இருக்கும்போது, தொடர்புற்றவையாய் இருக்கின்ற சங்கதிகள் எவை?)

(அல்லது)

State what facts are relevant where the question is as to the existence of any right or custom, with illustrations (ஒரு உரிமை அல்லது வழக்கம் இவைகளின் இருப்பைக் குறித்து எழும் வினாவிற்கு தீர்வுதரும் பொருண்மைகள் எவை என்று எடுத்துக்காட்டுகளுடன் கூறுக.)

(அல்லது)

What facts are relevant when the existence of any right or custom is in dispute? In what ways can a right or custom be proved under the Evidence Act? (ஒரு உரிமை அல்லது வழக்கம் இவற்றின் இருப்பு விவாதத்திற்கு உட்பட்டிருக்கும்பொழுது, எந்தப் பொருண்மைகள் தொடர்பு உடையவையாக உள்ளது? சான்றியல் சட்டத்தின் கீழ் ஒரு உரிமை அல்லது வழக்கம் எவ்விதமான வழிகளில் மெய்ப்பிக்கப்படலாம்?)

சாட்சிய சட்டம் கூறுவதாவது - பிரிவு 13:

இந்திய சாட்சிய சட்டத்தின் 13வது பிரிவு மேற்படி கேள்விக்கு பதிலளிக்கிறது. அதன்படி, ஓர் உரிமை அல்லது வழக்கம் உண்மையானதா என்பது பிரச்சனையாக இருக்கும் பொழுது, பின்வரும் பொருண்மைகள் அதற்கு தொடர்புடையவை ஆகும்.

a) பிரச்சனையில் உள்ள அந்த உரிமை அல்லது வழக்கம் உண்டாக்கப்பட்ட, கொண்டாடப்பட்ட, மாற்றியமைக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட நடவடிக்கைகளும் அல்லது அதன் உண்மைக்கு முரண்பட்டதாக இருந்த நடவடிக்கைகளும்.

b) அந்த உரிமை அல்லது வழக்கம் கொண்டாடப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, நடைமுறையில் செயலாக்கப்பட்ட அல்லது

அந்நடைமுறைச் செயல் ஆட்சேபிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப் பட்ட (asserted) அல்லது விலக்கப்பட்ட (departed) நிகழ்ச்சிகளும்.

எடுத்துக்காட்டு (Illustration):

A என்பவர் மீன் பிடிக்கும் உரிமை பெற்றிருந்தாரா என்பது கேள்வி.

A யின் முன்னோர்களுக்கு அத்தகைய மீன் பிடிக்கும் உரிமையை வழங்கக்கூடிய ஓர் ஆவணம்; மீன் பிடிக்கும் அந்த உரிமையை Aயின் தந்தை அடமானம் வைத்தது; பின்னர் அவர் அதனை அந்த அடமானத்துக்குப் புறம்பாக பராதீனம் செய்தது; Aயினுடைய தந்தை அத்தகைய உரிமையைப் பயன்படுத்தி வந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது அவர் அப்படிப் பயன்படுத்திய அத்தகைய உரிமையை அருகில் வசிப்பவர்கள் தடுத்து நிறுத்திய நிகழ்ச்சி ஆகியவை தொடர்புடைய பொருண்மைகளாகும்.

உரிமையும் வழக்கமும்:

உரிமை (right) எனும் பதத்தில் சட்டம் அங்கீகரிக்கும் அனைத்து உரிமைகளும் அடங்கும். வழக்கம் (custom) என்பது, (i) ஒரு செயல் தொன்மையானதாகவும் (ancient), (ii) தொடர்ச்சியாகவும் ஒரே மாதிரியாகவும் (continuous and uniform), (iii) நியாயமானதாகவும் (reasonable), (iv) நிச்சயமானதாகவும் வரையறுக்கப்பட்டதாகவும் (certain and definite), (v) கட்டாயமானதாகவும் விருப்பத்திற்குட்படாததாகவும் (compulsory and not optional), (vi) அமைதியானதாகவும் (Peace) இருப்பின், அது ஒரு செல்லத்தகு வழக்கம் (Valid Custom) என நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே அத்தகு உரிமை மற்றும் வழக்கத்தை மெய்ப்பிக்க மேற்படி பிரிவு 13-ல் கூறியுள்ளவாறு அதற்கு தொடர்புடைய பொருண்மைகளை சாட்சியத்தின் மூலம் மெய்ப்பித்து, உரிமை மற்றும் வழக்கம் உண்டு என்று நீதிமன்றத்திற்கு சுட்டிக் காட்டலாம்.

Mahamaya v. Haridas[1]

இவ்வழக்கில், ஒரு வழக்கமானது பழமையானது (immemorial), நியாயமானது (reasonable), தடைபடாதது (uninterrupted) மற்றும் அதன் தன்மையில் நிச்சயமானது (certain) என்று நிரூபிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அதை ஒரு வழக்கமாக ஏற்றுக் கொள்ள முடியும் எனக் கூறப்பட்டது. எனவே மேற்கண்ட பழமை, நியாயம் முதலிய சொற்களுக்கு ஆதரவான பொருண்மைகள் அனைத்தும் அவ்வழக்கத்தை பொறுத்த தொடர்புடைய பொருண்மைகளே.

உரிமை அல்லது வழக்கத்தை மெய்ப்பிக்கும் முறைகள்:

a) நேரடிச் சாட்சியத்தின் மூலம்

1. 19 CWN 208 : 20 CLJ 1837

b) உரிமை அல்லது வழக்கத்தை அங்கீகரிக்கும் செயல் குறித்த சாட்சியத்தின் மூலம்

c) ஒரு வழக்கம் தொடர்புடையது என நீதிமன்றம் அங்கீகரித்து வழங்கும் தீர்ப்புகளின் மூலம் **[பிரிவு 42ன் கீழ்]**

d) பொது உரிமை அல்லது வழக்கம் குறித்த விஷயத்தைப் பற்றி ஒருவர் தாம் இறப்பதற்கு முன் செய்யும் கருத்துரைகள் தொடர்பான மரண வாக்குமூலத்தின் மூலம், இது **பிரிவு 32 (4)**ன் கீழ் அனுமதிக்கத்தக்கது.

e) வட்டாரத்தில் நிலவும் ஒரு வழக்கம் அல்லது வழக்காறு பற்றி அறிந்த ஒருவர் அளிக்கும் கருத்துரை சாட்சியம் (evidence of opinion) மூலம் **[பிரிவு 48ன் கீழ்]**

f) இந்துச் சட்டம் அல்லது இஸ்லாமியர் சட்டம் போன்ற இந்திய சட்டங்களின் பகுதியாக விளங்கும் உரிமை அல்லது வழக்கத்தை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொள்வதன் (Judicial Notice) மூலம். **[பிரிவு 57]**

- o -

b) உரிமை அல்லது வழக்கத்தை அங்கீகரிக்கும் செயல் குறித்த சாட்சியத்தின் மூலம்

c) ஒரு வழக்கம் தொடர்புடையது என நீதிமன்றம் அங்கீகரித்து வழங்கும் தீர்ப்புகளின் மூலம் **[பிரிவு 42ன் கீழ்]**

d) பொது உரிமை அல்லது வழக்கம் குறித்த விஷயத்தைப் பற்றி ஒருவர் தாம் இறப்பதற்கு முன் செய்யும் கருத்துரைகள் தொடர்பான மரண வாக்குமூலத்தின் மூலம், இது **பிரிவு 32 (4)**ன் கீழ் அனுமதிக்கத்தக்கது.

e) வட்டாரத்தில் நிலவும் ஒரு வழக்கம் அல்லது வழக்காறு பற்றி அறிந்த ஒருவர் அளிக்கும் கருத்துரை சாட்சியம் (evidence of opinion) மூலம் **[பிரிவு 48ன் கீழ்]**

f) இந்துச் சட்டம் அல்லது இஸ்லாமியர் சட்டம் போன்ற இந்திய சட்டங்களின் பகுதியாக விளங்கும் உரிமை அல்லது வழக்கத்தை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொள்வதன் (Judicial Notice) மூலம். **[பிரிவு 57]**

- o -

18 மனநிலை, உடல் நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டும் பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை?

[Facts showing existence of state of mind, or of body or bodily feeling - When relevant?]

32. State when facts showing existence of any state of mind or of body or bodily feeling are relevant evidence. (மனநிலை, உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டும் பொருண்மைகள் எப்பொழுது தொடர்புடைய சாட்சியமாகும் என்பதைக் குறிப்பிடுக.)

முன்னுரை:

இது குறித்து இந்திய சாட்சிய சட்டத்தின் 14-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 14 கூறுவதாவது:

கருத்து (intention), அறிவு (knowledge), நன்னம்பிக்கை (good faith), கவனக் குறைவு (negligence), அஜாக்கிரதை (rashness), குறிப்பிட்ட நபர் எவரிடமேனும் வெறுப்பு அல்லது விருப்பு (ill will or good will) போன்ற மனநிலையின் உண்மையைக் காட்டுகின்ற அல்லது உடல் நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டுகின்ற பொருண்மைகள் தொடர்புடையவையே. ஆனால் எப்பொழுதென்றால், அவரது மனநிலை அல்லது உடல் நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டும் பொருண்மைகளானது, தீர்வுதரு பொருண்மையாகவோ அல்லது தீர்வுதவு பொருண்மையாகவோ இருத்தல் வேண்டும்.

விளக்கம் 1 : தொடர்புடைய மனநிலையின் உண்மையைக் காட்டுவதால் தொடர்புற்றதாக உள்ள ஒரு பொருண்மை, அந்த மனநிலையின் உண்மையைப் பொதுவான வகையிலல்லாமல், ஆனால் பிரச்சனையிலுள்ள குறிப்பிட்ட விஷயம் சம்பந்தப்பட்ட வகையில் இருப்பதாகக் காட்டுதல் வேண்டும்.

விளக்கம் 2 : ஆனால் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் மீது நடக்கும் விசாரணையில், அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபர் முந்திய குற்றமொன்றைச் செய்திருப்பது, இப்பிரிவில் அமைந்த பொருளின்படி தொடர்புடையதாக

இருக்குமிடத்து, அத்தகையவரின் முந்திய தண்டனைத் தீர்ப்பும் கூட ஒரு தீர்வுதவு பொருண்மையே (a relevant fact).

பிரிவு 14 உணர்த்தும் அடிப்படைத் தத்துவம்:

குற்ற மனமில்லாச் சொல் ஒரு குற்றமாவதில்லை என்பது குற்றவியல் சட்டம் கூறும் கோட்பாடாகும். அதாவது ஒருவரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கு முன்பு, அவர் குற்ற மனதுடன் அக்குற்றத்தைச் செய்துள்ளாரா என்று பார்க்க வேண்டியது அவசியமென குற்றவியல் சட்டம் வலியுறுத்துகின்றது. மேலும் சில உரிமையியல் வழக்குகளில் கூட என்ன கருத்தில் ஒரு செயல் செய்யப்பட்டது, அவர் எந்த மனநிலையில் அச்செயலைச் செய்தார் என்று ஆராயப்படுவதை நாம் பார்க்கிறோம். இங்கு கருத்துடனோ, கவனக்குறைவுடனோ, அஜாக்கிரதையாகவோ, வெறுப்புடனோ அல்லது விருப்புடனோ செய்யப்படும் செயல்களுக்கும், சாதாரணமான மனநிலையில் இயல்பாக செய்யப்படும் செயல்களுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. அதாவது ஒருவர் இயல்பாகப் பேசுவதற்கும், பொடி வைத்து உள்ளர்த்தத்துடன் பேசுவதற்கும் உள்ள வேறுபாட்டை, நாம் இதற்கு ஒப்பிடலாம்.

இவ்வாறு மனநிலை, உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையைக் காட்டுகின்ற பொருண்மைகள், அவை தீர்வுதவு அல்லது தீர்வுதரு பொருண்மையாக இருக்கும்பொழுது, சாட்சியமாக அனுமதிக்கப்படும். இந்நிலைப்பாடு, பிரிவு 14-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஓரிரண்டு எடுத்துக்காட்டுகளைக் கண்டால் மேலும் தெளிவாகும்.

பிரிவு 14-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

1. 'B' என்பவரைக் கொல்ல வேண்டும் என்னும் கருத்துடன் அவரைப் பார்த்து சுட்டதாக 'A' என்பவர் குற்றஞ் சாட்டப்படுகிறார். 'A' -யின் கருத்தைக் காட்டுவதற்காக, 'A' முன்னமேயே 'B' யைப் பார்த்துச் சுட்டிருக்கிறார் என்னும் பொருண்மையை மெய்ப்பிக்கலாம். **[பிரிவு 14–ன் கீழ் எடுத்துக்காட்டு (i)]**

2. 'B' என்பவருக்கு அச்சுறுத்தும் கடிதங்களை அனுப்பியதாக 'A' என்பவர் குற்றஞ் சாட்டப்படுகிறார். 'B' -க்கு 'A' முன்னமேயே அனுப்பிய அச்சுறுத்தும் கடிதங்களை, அக்கடிதங்களின் அச்சுறுத்தும் கருத்தை அவை காட்டுகின்றன என்னும் வகையில் மெய்ப்பிக்கலாம். **[பிரிவு 14–ன் கீழ் எடுத்துக்காட்டு (j)]**

3. 'A' என்பவர் தம் மனைவியான 'B' என்பவரைக் கொடுமைப் படுத்திய குற்றத்தைச் செய்துள்ளாரா என்பது கேள்வி. மேற்சொல்லப்பட்ட அக்கொடுமைக்கு சற்று முன்போ பின்போ அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் காட்டிய உணர்ச்சியின் வெளிப்பாடுகள் தீர்வுதவு பொருண்மைகளாகும். **[பிரிவு 14–ன் கீழ் எடுத்துக்காட்டு (k)]**

4. 'A' என்பவரின் மரணம் நஞ்சினால் ஏற்பட்டதா என்பது கேள்வி. தம் நோயின் போது தமக்கு ஏற்பட்ட அறிகுறிகளைப் பற்றி 'A' கூறிய வாக்குமூலங்கள் தீர்வுதவு பொருண்மைகளாகும். **[பிரிவு 14-ன் கீழ் எடுத்துக்காட்டு (l)]**

மேற்கண்ட நான்கு எடுத்துக்காட்டுகள், பிரிவு 14-ன் கீழ் பொருண்மைகள் எந்த அளவிற்கு தீர்வுதவு (தொடர்புடைய) பொருண்மைகளாக விளங்குகின்றன என்பதை புலப்படுத்தும்.

நமது முதல் எடுத்துக்காட்டில் 'B' என்பவரைக் கொல்ல வேண்டும் என்னும் கருத்துடன் அவரைப் பார்த்து 'A' சுடுவதாகக் கண்டோம். அதிலேயே முன்னமேயே 'B'-யைப் பார்த்துச் சுட்டிருக்கிறார் என்னும் பொருண்மை, 'B'-யைச் சுட வேண்டும் என்ற கருத்து 'A'-க்கு இருந்தது என்பதைக் காட்டும் வகையில் தொடர்புடையதாகும்.

ஆனால், கொலை செய்யும் கருத்துடன் 'A' ஆட்களைப் பார்த்துச் சுடும் வழக்கம் உடையவராக இருந்தார் எனும் பொருண்மை தொடர்பற்றதாகும். இந்த அளவில் பிரிவு 14-ன் கீழான பொருண்மைகளின் தொடர்புடைமை வேறுபடுகிறது.

- o -

19 செய்கை, தற்செயலானதா அல்லது கருத்துடன் செய்யப்பட்டதா என்ற பிரச்சனையைத் தெளிவாக்கும் பொருண்மைகள் - எப்பொழுது தொடர்புடையவை?

[Facts bearing on question whether act was accidental or intentional - When relevant?]

33. What facts are relevant when the question is whether an act was accidental or intentional? (ஒரு செய்கை தற்செயலானதா அல்லது கருத்துடன் செய்யப்பட்டதா என்பது பிரச்சனையாக உள்ள பொழுது, எப்பொருண்மைகள் தொடர்புடையவை?)

முன்னுரை:

இது குறித்து பிரிவு 15 பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 15 யாது கூறுகிறது?

ஒரு செய்கை, தற்செயலானதா அல்லது கருத்துடன் செய்யப் பட்டதா அல்லது குறிப்பிட்ட அறிவோடு அல்லது கருத்தோடு செய்யப்பட்டதா எனும் கேள்வி எழும்போது, அதையொத்த நிகழ்ச்சிகள் சேர்ந்த ஒரு தொடரின் பகுதியாக அத்தகைய செய்கை அமைந்திருந்து, அந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும், அந்தச் செய்கையைச் செய்தவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்னும் பொருண்மை தொடர்புற்றதாகும். *(பிரிவு 15)*

பிரிவு 15 உணர்த்தும் அடிப்படைத் தத்துவம்:

குற்ற மனமில்லாச் செயல் குற்றமாவதில்லை எனும் விதியை நாமறிவோம். சில வழக்குகளில் குற்றச் செயல் தெளிவுபட மெய்ப்பிக்கப் பட்டிருப்பினும், அச்செயலைச் செய்தவர் தாம், அந்தக் குற்றச் செயலுக்குரிய குற்ற மனத்தோடு செயல்படவில்லை அல்லது அது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று எதிர்வாதம் செய்ய முடியும். அது போன்ற சந்தர்ப்பங்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர் அது போன்றதொரு செயலைச் செய்திருக்கிறார் அல்லது அதே போல் ஒத்த நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது என்பதற்கான சாட்சியங்களை அனுமதிக்க வேண்டியிருக்கும். இவ்விதம் அதுபோலொத்த அல்லது அதே போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதால், குற்றஞ் சாட்டப்பட்டவரின் செயல் தற்செயலானதா, குற்ற மனதுடன் செய்யப்பட்டதா என்பதை முடிவு கட்ட அவை போதிய சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும். இந்த அளவில்

அப்பொருண்மைகள் பிரிவு 15-ன் கீழ் தொடர்புடையதாகின்றன. இந்நிலைப்பாட்டை, பின்வரும் சில எடுத்துக்காட்டுகள் மேலும் தெளிவாக்கும்.

பிரிவு 15-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

(1) காப்பீடு செய்யப்பட்டுள்ள தம் வீட்டை, காப்பீட்டுப் பணத்தைப் பெறுவதற்காக எரித்தழித்ததற்காக 'A' என்பவர் குற்றஞ் சாட்டப்படுகிறார். 'A' அடுத்தடுத்து பல்வேறு வீடுகளில் வசித்தார்; அவ்வீடுகள் ஒவ்வொன்றையும் அவர் காப்பீடு செய்தார்; அவற்றில் ஒவ்வொன்றிலும் தீப்பிடித்தது; அவ்வாறு ஏற்பட்ட தீப்பிடித்தல் ஒவ்வொன்றுக்குப் பிறகும் வெவ்வேறு காப்பீட்டு அலுவலகங்களிலிருந்து 'A' பணம் பெற்றார் எனும் பொருண்மைகள், அந்தத் தீ பிடித்த நிகழ்ச்சிகள் தற்செயலானவை அல்ல என்பதைக் காட்ட முனையும் வகையில் தொடர்புற்றவையாகும். **[பிரிவு 15–ன் கீழ் எடுத்துக்காட்டு (a)]**

(2) 'B' என்பவரின் கடன்காரர்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்காக 'A' என்பவர் நியமிக்கப்படுகிறார். தாம் வசூல் செய்த தொகைகளைக் காட்டும் வகையில் ஒரு புத்தகத்தில் அவற்றைப் பதிவு செய்ய வேண்டியது 'A' -யின் கடமையாகும். அவர் ஒரு குறிப்பிட்ட சமயத்தில், உண்மையில் அவர் வசூலித்ததை விடக் குறைவாக வசூலித்ததாகக் காட்டும் பதிவு ஒன்றைச் செய்கிறார்.

இந்தப் பொய்யான பதிவு, தற்செயலானதா அல்லது கருத்துடன் செய்யப்பட்டதா என்பது கேள்வி.

அதே புத்தகத்தில் 'A' -யினால் செய்யப்பட்ட பிற பதிவுகள் பொய்யானவை எனும் பொருண்மையும், அப்பொய்யான பதிவு ஒவ்வொன்றும் 'A' -க்கு அனுகூலமாகவே உள்ளது என்ற பொருண்மையும் தொடர்புற்றவையாகும். **[பிரிவு 15–ன் கீழ் எடுத்துக்காட்டு (b)]**

(3) 'B' என்பவருக்குக் கள்ள ரூபாய் ஒன்றை மோசடியாகக் கொடுத்ததாக 'A' என்பவர் குற்றஞ் சாட்டப்படுகிறார். ரூபாயைக் கொடுத்தது தற்செயலானதா என்பது கேள்வி.

'B' -க்கு கொடுத்ததற்குச் சற்று முன்போ பின்போ 'A' கள்ள ரூபாய்களை 'C', 'D', 'E' ஆகியோருக்குக் கொடுத்தார் என்னும் பொருண்மைகள் 'B' -க்குக் கொடுத்தது தற்செயலானது அல்ல என்பதைக் காட்டும் வகையில் தொடர்புடையதாகும்.

34. Similar facts - Write short notes. (ஒத்த பொருண்மைகள் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

"Similar facts are not admitted" - Elucidate. ("ஒத்த பொருண்மைகள் அனுமதிக்கப்படத்தக்கதல்ல" - விளக்குக.)

ஒத்த பொருண்மைகள் - விளக்கம்:

ஒரு பொருண்மை, தீர்வுதரு பொருண்மை ஒன்றை ஒத்தவாறு இருப்பின், அப்பொருண்மை ஒத்த பொருண்மை எனப்படுகிறது (a fact is said to be similar to another when it is similar to a fact in issue).

எடுத்துக்காட்டுகள்:

1. ஒருவர் தரமற்ற "பீர்" (Beer) எனும் மதுபானத்தை விற்றதற்காக அவர் மீது வழக்கிடப்பட்டிருக்கும்பொழுது, அவர் மற்ற நபர்களுக்கும் அவ்வாறே தரமற்ற பீரை விற்றுள்ள பொருண்மை, ஒத்த பொருண்மையாகும். **(Holcombe v. Hewson)**[1]

2. கவனக்குறைவாக அறுவை சிகிச்சை ஒன்றைச் செய்ததற்காக, மருத்துவர் ஒருவர் மீது வழக்கிடப்பட்டிருக்கும் பொழுது, பிற அறுவை சிகிச்சையிலும் அவ்வாறே அவர் கவனக்குறைவாக செயல்பட்டிருக்கும் பொருண்மை, ஒத்த பொருண்மையாகும். **(Harris v. Director of Public Prosecutions)**[2]

சாட்சிய சட்டத்தில் ஒத்த பொருண்மைகள் எப்பொழுது தொடர்புடையது (அல்லது) அனுமதிக்கத்தக்கது?

பொதுவாக, ஒரு பொருண்மை மற்றொரு தீர்வுதரு பொருண்மையுடன் ஒத்துள்ளது என்ற காரணத்திற்காக அவற்றை தொடர்புடையதாகக் கூறி நீதிமன்றங்கள் எந்த முடிவிற்கும் வரக் கூடாது. இது ஒரு பொது விதியாகும். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில், 2-வது எடுத்துக்காட்டின்படி, அம்மருத்துவர் முன்பே செய்த அறுவை சிகிச்சைகளில் கவனக்குறைவாக செயல்பட்டுள்ளார் என்ற பொருண்மையை, பின்னிட்டு அவர் கவனக் குறைவாக அறுவை சிகிச்சை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கிற்கு தொடர்புடையதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அந்தந்த வழக்கின் தனிப் பண்புகளை ஆராய்ந்தே, நீதிமன்றங்கள் ஒரு முடிவிற்கு வர வேண்டும். மாறாக ஒத்த பொருண்மைகளின் அடிப்படையில் செயல்படக் கூடாது என பல ஆங்கில வழக்குகளிலும் இங்கிலாந்து நீதிமன்றங்கள் கூறியுள்ளன.

எனினும் இதற்கு ஒரு விதிவிலக்கை இங்கிலாந்து நீதிமன்றங்கள் கூறுகின்றன. அதாவது, ஒரு பொருண்மை மற்றொரு பொருண்மையுடன் ஒத்திருப்பதாக சொல்லப்படும் பொழுது, அவ்விரு பொருண்மைகளுக்கும் இடையில் ஒரு **முனைப்பான ஒப்புமை** (அதாவது கருத்தை உடனே கவரும் விதத்தில் அமைந்த ஒப்புமை - striking similarity) இருத்தல் வேண்டும். வேறுவிதத்தில் கூறுவதானால், அவ்விரண்டு பொருண்மை

1. (1810) 2 Comp. 391 : 170 E.R. 1194
2. (1952) A.C. 694 : (1952) 1 All. E.K. 1044 (H.L.)

களும் தனிப்பட்ட ஒரு கூறில் ஒத்திருக்க வேண்டும். அவ்வாறு முனைப்பாக ஒத்துள்ள கூறைப் பொறுத்த மட்டும் ஒத்த பொருண்மைகளுக்குண்டான சாட்சியத்தை நீதிமன்றம் அனுமதிக்கலாம். மற்றபடி பொதுப்படையாக ஒத்துள்ள பொருண்மையை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை.

ஒத்த பொருண்மைகள் ஏன் அனுமதிக்கப்படத்தக்கதல்ல?

(1) ஒத்த பொருண்மைகளின் அடிப்படையில் நீதிமன்றங்கள் செயல்படக் கூடாது என்பதைத்தான் **Rex v. Ball**[1] எனும் வழக்கில் **நீதிப் பெருமகனார் லோர்பர்ன் (Lord Loreburn)** என்பவர் பின்வருமாறு கூறுகிறார். அஃதாவது, "குற்றம் ஒன்றிற்காக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவரை, அவர் மற்றொரு குற்றத்தை செய்துள்ளார் என்பதை நிரூபிப்பதன் வாயிலாக நீர் தண்டிக்கவியலாது"[2] என்று நீதிமன்றங்களை அறிவுறுத்துகிறார். ஒவ்வொரு வழக்கும் அதனதன் பொருண்மைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டுமேயொழிய மற்ற வழக்குகளின் பொருண்மைகளின்படியல்ல.

(2) சான்றியல் மதிப்பற்ற (no probative value) ஒத்த பொருண்மைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதனால் அவை வழக்கில் முரண்பாடாக உள்ள முக்கிய பொருண்மைகளிலிருந்து நீதிமன்றங்களின் கவனத்தை, குற்றஞ் சாட்டப்பட்டவரின் பொதுவான குண இயல்பிற்கு (general character of the accused) திருப்பி விடுகிறது. இதனால் நீதிமன்றங்கள் சரியான ஒரு முடிவிற்கு வர முடியாமல், இறுதியில் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு பாதகத்தையே விளைவித்துவிடும் அபாயம் நேருகிறது. எனவேதான் **Noor Mohamad v. The King**[3] என்ற வழக்கில் இங்கிலாந்து உச்ச நீதிமன்றமான பிரிவி கவுன்சில், "ஒத்த பொருண்மைகள் அனுமதிக்கப்படலாகாது" (Let no similar facts be admitted) என்று திட்டவட்டமாக கூறியது.

(3) ஒரு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட நபரின் முந்தய குற்ற வரலாற்றை புரட்டிப்பார்ப்பதனால், அவ்வழக்கிலும் அவர் குற்றம் புரிந்திருப்பார் என்ற முடிவிற்கு நீதிபதி கண்மூடித்தனமாக வந்துவிடுகிறார். இதைத் தவிர்க்கவும் அவருக்கு தக்க நீதி கிடைக்கவும் ஒத்த பொருண்மைகள் அனுமதிக்கப்படக் கூடாது.

ஒத்த பொருண்மைகள் குறித்து இந்திய சாட்சிய சட்டத்தின் நிலை (Position under Indian Evidence Act):

"ஒத்த பொருண்மைகள்" என்ற பதமானது இந்திய சாட்சிய

1. (1911) A.C. at p. 71
2. "You cannot convict a man of one crime by proving that he had committed some other crime" - **Lord Loreburn.**
3. (1949) A.C. 182

சட்டத்தில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. ஒத்த பொருண்மைகள் குறித்து சாட்சியம் அளிக்கப்படலாம் என்றோ, அளிக்கப்படக் கூடாது என்றோ இந்திய சாட்சிய சட்டத்தில் எங்கேயும் விளம்பப்படவில்லை.

எனினும் பல வழக்குகளில் இந்திய நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகளைப் பார்த்தோமேயானால், ஒத்த பொருண்மைகளை நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை என்பதை உணர முடிகிறது. இது காலப்போக்கில் இந்திய சாட்சிய சட்டத்தில் எழுதப்படாத ஒரு பொது விதியாகவே மாறிவிட்டது என்றும் கூறலாம்.

எடுத்துக்காட்டாக, **Emperor v. Panchudas**[1] என்ற வழக்கில், கூட்டுக் கொள்ளை மற்றும் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட சில நபர்களுக்கெதிராக விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது, அதே நபர்களால் அதே முறையில் செய்யப்பட்ட வேறு சில கூட்டுக் கொள்ளைகள் தொடர்பான சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள கல்கத்தா உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அதே சமயத்தில் இரு பொருண்மைகளுக்கிடையே இங்கிலாந்து நீதிமன்றங்கள் கூறியுள்ளபடி, ஒரு முணைப்பான ஒப்புமை (striking similarity) உள்ள பொருண்மைகளை தொடர்புடையதாக, இந்திய சாட்சியச் சட்டமானது, நாம் இதற்கு முன் கண்ட பிரிவுகள் 13, 14 மற்றும் 15-ன் கீழாக அங்கீகரிக்கிறது. (அப்பிரிவுகளின் விளக்கத்தை இங்கு ஒரு முறை நினைவிற்கு கொண்டு வரல் நலம்)

மேற்கண்ட பிரிவுகளின் கீழ் ஒத்த பொருண்மைகள் அனுமதிக்கப்படுவது, குற்றஞ் சாட்டப்பட்டவர் முன்னர் திருடி இருக்கிறார்; எனவே இத்திருட்டையும் அவர்தான் பெரும்பாலும் செய்திருக்க வேண்டும் என்பதை மெய்ப்பிப்பதற்காக அன்று. ஆனால் அவ்வித குற்ற மனதுடன், தான் அதைச் செய்யவில்லை என்று மறுப்பதை எதிர்த்துரைக்கும் நிரூபணமாகவோ அல்லது தற்செயலாகவோ அறியாமையினாலோ அக்குற்றம் நடந்து விட்டது என்ற வாதத்தை முறியடிப்பதற்காகவோ அவை தொடர்புடைய பொருண்மையாகக் கொள்ளப்படும்.

முடிவுரை:

எனவே, பொதுவாக ஒத்த பொருண்மைகள் சாட்சியமாக அனுமதிக்கப்படுவதில்லை. எனினும், இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவுகள் 6, 13, 14 மற்றும் 15-ல் கூறப்பட்ட கருத்துகளும், எடுத்துக் காட்டுகளும் மேற்படி பொது விதிக்கு விலக்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மற்ற சூழ்நிலைகளில் ஒத்த பொருண்மைகள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுவதில்லை. அனுமதித்தால், அங்கு நீதி தவற வாய்ப்புண்டு. ஒவ்வொரு வழக்கும் அதனுடைய பொருண்மைகளையும், அவற்றிற்குள்ள

1. (1920) I.L.R. 47 Cal. 671 (F.B.) : 58 I.C. 929

சாட்சியங்களையும் கருத்தில் கொண்டே தீர்மானிக்கப்படல் வேண்டும். எப்பொழுதோ ஒத்ததொரு குற்றம் செய்ததின் அடிப்படையில், இப்பொழுதும் குற்றம் செய்துள்ளார் என்று கூறவோ அல்லது அனுமானிக்கவோ இந்திய நீதிமன்றங்களில் இடமில்லை.

- o -

20 ஒத்தேற்புரை [Admission}

35. Define an 'admission' . Who can make them? What is the evidentiary value of an admission? ('ஒத்தேற்புரை' என்றால் என்ன? யார் அவற்றைச் செய்யலாம்? அதன் சான்றியல் மதிப்பு யாது?)

(அல்லது)

Define 'admission'. State the circumstances when admissions are admissible. ('ஒத்தேற்புரை' வரையறு. எச்சூழ்நிலைகளில் ஒத்தேற்புரைகள் அனுமதிக்கத்தக்கன என்பதைக் கூறுக.)

(அல்லது)

What are the rules of relevancy in regard to admissions under the Evidence Act? (சான்றியல் சட்டத்தின் கீழ் ஒத்தேற்புரைகளின் தொடர்புடைமை குறித்த விதிகள் யாவை?)

(அல்லது)

Explain the law relating to admission under the Indian Evidence Act. (இந்திய சாட்சிய சட்டத்தில் ஒப்புதல் உரையைப் பற்றி கூறப்பட்டுள்ள சட்டத்தினை விளக்குக.)

(அல்லது)

What is admission? How is it different from confessions under the Evidence Act? Discuss the relevancy of admissions in civil cases. (ஒத்தேற்புரை என்றால் என்ன? சான்றுச் சட்டத்தின் கீழ் அது எவ்விதம் குற்ற ஏற்புரையினின்றும் வேறுபட்டிருக்கிறது? உரிமையியல் வழக்குகளில் ஒத்தேற்புரைகளின் தொடர்புடைமையை விவாதிக்க?)

(அல்லது)

Distinguish between
Admission and Confession.

வேறுபடுத்துக
ஒத்தேற்புரை மற்றும் குற்ற ஏற்புரை.

(அல்லது)

Admission by strangers - Write short notes. (அந்நியரின் ஏற்புரை - சிறு குறிப்பு வரைக.)

ஒத்தேற்புரை (Admission) - விளக்கம்:

ஒருவர் கூறுவதை மற்றொருவர் உண்மையென ஏற்று, எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ ஒப்புக் கொள்வதுண்டு. ஒருவர் ஓர்

உரிமையைக் கொண்டாடலாம். அவ்வுரிமை அவருக்கு உண்டு என்ற கோரிக்கையை மற்றொருவர் ஒத்து ஏற்றுக் கொள்ளலாம். இவ்வாறு ஒருவருடைய கூற்றினை அல்லது கோரிக்கையை மற்றொருவர் ஒத்து ஏற்பது அவர்களிடையே எழுந்த வழக்கிலோ அல்லது வேறு சூழ்நிலைகளிலோ நிகழலாம். ஒருவர் பிறரது கூற்றை அல்லது உரிமையை ஒத்து ஏற்பதிலிருந்து அந்தக் கூற்று அல்லது உரிமை உண்மையானதென்று நீதிமன்றம் ஊகிப்பதற்கு ஏதுவாகிறது. இவ்வாறு ஒருவரது கூற்றினை அல்லது உரிமையை உண்மையென ஊகிப்பதற்கு இடம் தரும் வகையில் அமையும் ஏற்புரையை 'ஒத்தேற்புரை' **(Admission)** என்கிறோம்.

சாட்சிய சட்டத்தின் வரையறை (Definition):

இந்திய சாட்சிய சட்டத்தின் 17வது பிரிவு 'ஒத்தேற்புரையை' வரையறுக்கிறது. அதன்படி,

தீர்வுதரு பொருண்மை (Fact in issue) அல்லது தீர்வுதவு பொருண்மை (Relevant fact) பற்றிய ஊகம் எதனையும் குறிப்பினால் உணர்த்தக் கூடிய வகையில் உள்ள, இதன் பின் விளக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் சொல்லப்பட்ட நபர்கள் எவராலேனும் வாய்மொழியாக அல்லது ஆவணம் மூலமாக அல்லது **மின்னியக்க வடிவில் உள்ளடக்கியவாறு (contained in electronic form)**[1] செய்யப்படும் உரை, 'ஒத்தேற்புரை' **(Admission)** எனப்படும்.

முக்கிய ஆக்கக்கூறுகள் (Essential ingredients):

மேற்கண்ட வரையறையிலிருந்து ஒரு 'ஒத்தேற்புரைக்கு' பின்வருவன முக்கிய ஆக்கக் கூறுகளாகும்.

i) தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மை பற்றிய ஊகம் எதனையும் குறிப்பினால் உணர்த்தக்கூடிய உரையே 'ஒத்தேற்புரை' ஆகும்.

ii) அது வாய்மொழியாகவோ (oral) அல்லது எழுத்து வழியாகவோ (documentary) இருக்கலாம்.

iii) அது, இந்தச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் சொல்லப்பட்ட நபர்கள் யாரேனும் ஒருவரால் செய்யப்பட்டதாக இருக்கலாம்.

iv) எதிர்தரப்பினர் கூறும் பொருண்மையை உண்மையென ஒத்துக் கொள்வதன் மூலம் அது தொடர்பான சாட்சியங்களை ஆஜர் படுத்துவதை தவிர்ப்பதே (dispensing) அல்லது தளர்த்துவதே (waiving) ஒத்தேற்புரையின் நோக்கமாகும்.

1. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்ப சட்டத்தால் சேர்க்கப்பட்டது.

யார் ஒத்தேற்புரையைச் செய்யலாம்? (Who can make admission?)

இந்திய சாட்சிய சட்டத்தின் *18, 19, மற்றும் 20வது பிரிவுகள்* ஒரு ஒத்தேற்புரையானது யாரால் செய்யப்படலாம் என்று கூறுகிறன. அதன்படி பின்வருவோர் ஒத்தேற்புரை செய்யலாம்.

i) வழக்கின் தரப்பினர்கள் (Party to the Proceedings).

ii) அத்தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் (Agent authorised by such party).

iii) பிரதிநிதித்துவ முறையில் (representative character) வழக்கிடும் அல்லது வழக்கிடப்படும் தரப்பினர்.

iv) வழக்குப் பொருள் மீது (Subject matter of procedings) உடைமையுரிமையோ (Proprietary) அல்லது நிதி பற்றிய உரிமையோ (Pecuniary interest) உள்ள நபர்.

v) வழக்குப் பொருளில் உள்ள உரிமையை வழக்குத் தரப்பினர்கள் எவரிடமிருந்து பெற்றார்களோ அவர்கள். **[*பிரிவு 18*]**

iv) உரிமை வழக்கிற்குரிய தரப்பினருக்கெதிராக எவர்களது நிலை (position) அல்லது கடப்பாடு (liability) மெய்ப்பிக்கப்பட வேண்டுமோ அவர்கள். **[*பிரிவு 19*]**

vii) உரிமை வழக்கிற்குரிய தரப்பினரால், வழக்கில் உள்ள விஷயத்தைப் பற்றி மற்றொருவரிடம் இருந்து தெரிந்து கொள்ள வெளிப்படையாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட (expressly referred) நபர்கள் செல்வது. **[*பிரிவு 20*].** எடுத்துக்காட்டாக, A என்பவரால் B என்பவருக்கு விற்கப்பட்ட ஒரு குதிரை பழுதற்றதா என்பது கேள்வி. "C என்பவரிடம் சென்று கேளுங்கள்; அதைப் பற்றிய அனைத்தும் Cக்குத் தெரியும்" என்று Bயிடம் A கூறுகிறார். இங்கு அக்குதிரை பற்றி C சொல்லும் உரை ஒத்தேற்புரையாகும்.

மேற்கண்டதில் இறுதி நான்கு பிரிவினர் (அதாவது, (iv) முதல் (vii) முடிய உள்ளவர் செய்யும் ஒத்தேற்புரை, **அந்நியரின் ஒத்தேற்புரை (Admission by Strangers)** எனப்படும்.

ஒத்தேற்புரையின் சான்று மதிப்பு (Evidentiary Value of an admission):

ஒத்தேற்புரை என்பது மிகவும் வலுவிழந்த சாட்சியமாகும். வழக்கின் சூழ்நிலைகள், அவ்வொத்தேற்புரை உண்மையற்றது எனக் காட்டினால், நீதிமன்றம் அதனை ஒரு சாட்சியமாக எடுத்துக் கொள்ளாது. ஒத்தேற்புரை ஒரு அறுதியான சான்றுறுதி (Conclusive proof) ஆகாது. வழக்கு குறித்த சாட்சியங்களில் ஒத்தேற்புரை ஒரு சிறு பகுதி மட்டுமே; முழு வழக்கையும் அதனைச் சார்ந்து மட்டுமே தீர்க்க முடியாது. ஒத்தேற்புரை என்பது, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றிய அறுதியான சான்றுறுதி ஆகாது; ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட உரைகள் முரண்தடையாக

(estoppels) செயல்பட வாய்ப்புண்டு, என பிரிவு 31 கூறுகிறது. எனவே முரண்தடையாக செயல்படாத ஒத்தேற்புரைகள் அறுதியான சாட்சியமாகாது. ஒரு ஒத்தேற்புரைக்கு வழக்கின் பிற சூழ்நிலைகள் சாதகமாக இருந்தால், அது பலம் பெற்ற சாட்சியமாக மாறும்.

ஒத்தேற்புரை (admission) மற்றும் குற்ற ஏற்புரை (confession) - வேறுபாடு.

[குற்ற ஏற்புரையின் விளக்கத்தை நாம் இதுவரை காணாததால், மேற்படி இரண்டிற்கும் வேறுபாடுகளை இங்கே சொல்வது பொருத்தமானதல்ல. அது தெளிவாக புரியாது. எனவே குற்ற ஏற்புரை தொடர்பான அத்தியாயத்தில், மேற்படி இரண்டிற்கும் உண்டான வேறுபாடுகளைக் காண்போம். – ஆசிரியர்.]

36. "Admissions cannot be proved by or on behalf of the persons who make them". Comment. ("ஒத்தேற்புரைகளை அவற்றைச் செய்கின்ற வராலோ அல்லது அவரது சார்பாகவோ மெய்ப்பிக்க முடியாது". விமர்சிக்க.)

(அல்லது)

"Admissions cannot be proved by or on behalf of the person making it." Explain. Are there any exceptions to the rule? ("ஒத்தேற்புரைகளை அவற்றைச் செய்கின்றவராலோ அல்லது அவரது சார்பாகவோ மெய்ப்பிக்க முடியாது". விளக்குக. இவ்விதிக்கு விதிவிலக்குகள் ஏதேனும் உள்ளதா?)

(அல்லது)

Admission can be proved against the person who made it; but cannot be proved by or on behalf of the person who made it. State the exceptions if any to this rule. (ஒருவருக்கு எதிராக அவர் சொன்ன ஏற்புரையை மெய்ப்பிக்க முடியும். ஆனால் அவரால் அவருக்கு சாதகமாக சொன்ன ஏற்புரையை மெய்ப்பிக்க முடியாது. இவ்விதிக்கு விலக்குகள் இருப்பின் விளக்குக.)

ஒத்தேற்புரை மெய்ப்பிக்கப்படல் குறித்த பொது விதி - பிரிவு 21:

பிரிவு 21, ஒத்தேற்புரை மெய்ப்பிக்கப்படல் குறித்த பொது விதியை இரண்டு கூறாக விளக்குகிறது.

i) ஒத்தேற்புரை யாரால் செய்யப்படுகின்றதோ அந்த நபர் அல்லது அவரது பிரதிநிதிக்கு எதிராக மட்டுமே மெய்ப்பிக்கப்படலாம்; ஆனால்

ii) ஒத்தேற்புரை யாரால் செய்யப்பட்டதோ அவர் அல்லது அவரது பிரதிநிதியால் அல்லது அவர்களது சார்பாக மெய்ப்பிக்கப்படல் கூடாது.

அதாவது, ஒத்தேற்புரை யார் கொடுத்தார்களோ அவருக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த இயலும். ஒத்தேற்புரை அதைச் செய்தவருக்கு பாதகமாக இருக்கும்பொழுது மட்டுமே, அது ஒரு தொடர்புடைய பொருண்மையாகும். ஏனெனில் மனச்சாட்சிக்கு பயந்தவர்கள் யாரும் தனக்கெதிரான ஒன்றை ஒத்தேற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, அப்படிப்பட்ட நல்லது கிடைக்க வேண்டும் என்பதன் பொருட்டு யார் ஒத்தேற்புரையை வழங்கினாரோ அவரே அதிலிருந்து எவ்வித பலனையும் பெற முடியாது. அதாவது தான் கூறிய ஒத்தேற்புரையே தனக்குச் சாதகமாக மெய்ப்பிக்க முடியாது. இதை அனுமதித்தால், வழக்கு தொடுக்கும் முன்னால் சில விஷயங்களை ஒத்தேற்றிக் கொண்டது போல் சாட்சியங்களை தயார் செய்து கொண்டு, ஒரு சாதகமான வழக்கையே ஒவ்வொரு வழக்காடியும் அமைத்துக் கொள்வதற்கான அபாயம் உள்ளது.

எடுத்துக்காட்டாக, A என்பவருக்கும் B என்பவருக்கும் இடையே உள்ள பிரச்சனை, ஒரு குறிப்பிட்ட ஆவணம் போலியானதா இல்லையா என்பது. அது உண்மையானதென்று A உறுதி கூறுகிறார். போலியானதென்று B உறுதி கூறுகிறார்.

இங்கு மேற்படி பொது விதியின்படி, ஆவணம் உண்மையான தென்று B மெய்ப்பிக்கலாம். அவ்வாறே போலியானதென்று B கூறிய ஒப்புதலுரையை, அவருக்கு எதிராக உண்மையானதென்று A மெய்ப்பிக்கலாம். ஆனால் அந்த ஆவணம் உண்மையானதென்று தாமே சொன்ன உரையை A மெய்ப்பிக்க முடியாது. அதேபோல், போலியான தென்று Bயும் தமக்குச் சார்பாக மெய்ப்பிக்க முடியாது.

ஆனால் மேற்கண்ட பொதுவிதிக்கு சில விதிவிலக்குகளானது (exceptions) அதே 21 வது பிரிவிலேயே கூறப்பட்டுள்ளன. அதன்படி, ஒருவர் தான் கூறிய ஒத்தேற்புரைகளை, அவருக்கு ஆதரவாக அவரோ அல்லது அவரது பிரதிநிதியோ மெய்ப்பிக்கலாம். அவை.

விதிவிலக்குகள் (Exceptions):

விதிவிலக்கு - 1:

ஓர் ஒத்தேற்புரையைப் புரிந்தவர் மரணமடைந்திருப்பின், 32வது பிரிவின் படி மூன்றாம் தரப்பினர்களுக்கிடையில் அது தொடர்புடையதாக இருக்கும் என்ற தன்மையைப் பெற்றிருக்கும்போது, அதனைச் செய்கின்ற நபர் அல்லது அவரது சார்பாக மெய்ப்பிக்கலாம்.

எடுத்துக்காட்டாக, (i) A என்பவர் ஒரு கப்பலின் தலைவர். அவர் மீது அந்தக் கப்பலைக் கைவிட்டுச் சென்றதற்காக கப்பல் உரிமையாளர் தொடுத்த வழக்கில் விசாரணை நடத்தப்படுகிறது.

உரிய தடத்தினின்றும் விலகி அந்தக் கப்பல் செலுத்தப்பட்ட தென்பதைக் காட்ட கப்பல் உரிமையாளரால் சாட்சியம் அளிக்கப்படுகிறது.

இந்நிலையில், A தம்மால் அலுவல் நடப்பு முறையில் பராமரித்து வரப்பட்ட புத்தகம் ஒன்றைத் தாக்கல் செய்கிறார். அந்தப் புத்தகத்தில் அந்தக் கப்பலில் இருக்கும்போது, ஒவ்வொரு நாளும் அவரால் குறித்து வைக்கப்பட்ட நாட்குறிப்புகள் உள்ளன. அதில் அந்தக் கப்பல் உரிய தடத்தினின்றும் விலகிச் செலுத்தப்படவில்லை என்று குறித்துள்ளது. இந்த உரைகளை A தனக்காதரவாக மெய்ப்பிக்கலாம். ஏனெனில் அவர் இறந்து விட்டிருந்தால், **32வது பிரிவின் 2–வது** கூறின்படி, மூன்றாம் தரப்பினர்களிடையே அவ்வுரைகள் சாட்சியமாக ஏற்கத்தக்கனவாக இருக்கும் என்பதுதான். மேற்படி எடுத்துக்காட்டில் கப்பல் உரிமை யாளருக்கும் அக்கப்பலின் காப்பீட்டாளருக்கும் (insurance company) இடையே வழக்கு எழுந்திருப்பின் (மூன்றாம் தரப்பினர்கள்), அக்கப்பல் தலைவரின் கவனக்குறைவாலோ அல்லது வேறு காரணங்களாலோ அக்கப்பல் கைவிடப்பட்டது எனும் கேள்வியில் அக்கப்பல் தலைவர் இறந்து போயிருப்பதாக வைத்துக் கொண்டால், அவரது மேற்படி நாட்குறிப்பு தொடர்புடையதாக கருதப்படும். எனவே அவர் எழுதிய அந்நாட்குறிப்பு அவருக்குச் சாதகமாக இருப்பினும், அதை அவர் மூன்றாம் தரப்பினர்களுக்கிடையேயான வழக்கில் மெய்ப்பிக்கலாம்.

(ii) கல்கத்தாவில் ஒரு குற்றத்தைப் புரிந்ததாக A என்பவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

அதே நாளில், தாம் லாகூரில் இருந்து எழுதிய ஒரு கடிதத்தை - அந்த நாளுக்கான லாகூரின் அஞ்சலக முத்திரை கொண்ட கடிதத்தை - அவர் தாக்கல் செய்கிறார். அந்தக் கடிதம் எழுதப்பட்ட தேதியைப் பற்றிய உரை சாட்சியமாக ஏற்கத்தக்கதாகும். மேற்படி அவரது சொந்தக் கடிதத்தையே, குற்றம் நடந்த இடத்தில் தாம் அப்பொழுது இல்லை என்பதைக் காட்டும் பொருட்டு, A தனக்கு ஆதரவாக மெய்ப்பிக்கலாம். ஏனெனில் A மரணமடைந்திருந்தால் அந்தக் கடிதம் 32வது பிரிவின் 2வது கூறின்படி சாட்சியமாக ஏற்கத்தக்கதாக இருக்கும் என்பதுதான். மேலும் இது [**பிரிவு 11(1)-ன்** கீழ் 'அலிபி' சாட்சியத்தின்படியும் தொடர்புடைய பொருண்மையாகும்.]

விதிவிலக்கு - 2:

எந்த மனநிலையேனும் அல்லது உடல் நிலையேனும் இருந்த காலத்தில் அல்லது அதற்குச் சற்று முன்பு அல்லது பின்பு, அத்தகைய உடல் நிலையின் உண்மைப் பற்றி - அது தொடர்புடையதாக அல்லது பிரச்சனையில் உள்ளதாக இருப்பினும் - செய்யப்படும் உரையொன்று -

ஓர் ஒத்தேற்புரையில் அடங்கி இருப்பதோடன்றி, அந்த உரை

பொய்யாயிருத்தல் அரிது என்பதைக் காட்டும் நடத்தையும் அதனை ஒட்டி நிகழ்ந்திருக்கும் போது, அந்த ஒத்தேற்புரையைச் செய்தவரால் அல்லது அவர் சார்பாக மெய்ப்பிக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக, (i) திருட்டுப் பொருள்களை, அவை திருடப் பட்டவையென்று தெரிந்தே பெற்றுக் கொண்டதாக, A என்பவர் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது.

தனக்கு திருட்டுப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் இல்லை என்பதை மெய்ப்பிக்க, மேற்படி A, தான் அப்பொருட்களை அவற்றின் மதிப்புக்குக் குறைவாக விற்பனை செய்ய மறுத்ததை மெய்ப்பிக்க முன்வருகிறார்.

அவரது மேற்படி உரை ஒரு ஒத்தேற்புரையாகும். இது அதன் விலைக்கும் குறைவாக விற்க மறுத்த அவரது மனநிலை மற்றும் அதனுடன் இணைந்த அவரது மேற்படி நடத்தையைக் காட்டுகின்றது. எனவே, ஒப்புதலுரையை தனக்கு ஆதரவாக அவர் மெய்ப்பிக்கலாம். உண்மையான வலியால் அவதிப்படுபவரை விட, அவ்வாறு நடிப்பவனின் நடத்தை வித்தியாசமானதாக இருக்கும். எனவே ஒருவனது நடத்தையை எடை போட்டால், அவன் கூறும் உரையில் உள்ள உண்மை புலனாகும்.

(ii) கள்ள நாணயம் என்று தமக்குத் தெரிந்த கள்ள நாணயத்தை மோசடியாகத் தம் வசத்தில் வைத்திருந்ததாக A என்பவர் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

அந்த நாணயம் கள்ள நாணயமா இல்லையா என்ற அய்யம் தமக்கு ஏற்பட்டதால், அதனைப் பரிசீலிக்குமாறு நிபுணர் ஒருவரைத் தாம் கேட்டதாகவும் அவர் அதனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அதனை மெய்யானதென்று கூறியதாகவும் மெய்ப்பிக்க அவர் முன் வருகிறார்.

இதற்கு முன் சென்ற எடுத்துக்காட்டில் சொன்ன காரணங்களின் அடிப்படையில் மேற்படி உரையை A மெய்ப்பிக்கலாம்.

விதிவிலக்கு - 3:

ஓர் ஒத்தேற்புரையானது, ஒத்தேற்புரை என்ற நிலையில் அல்லாது மற்றப்படி தொடர்புற்றதாக இருக்குமானால், அதைச் செய்தவராலும் அல்லது அவர் சார்பாகவும், அந்த உரை மெய்ப்பிக்கப்படலாம்.

37. "Oral admissions as to contents of a document are not relevant". Comment. ('ஒரு பத்திரத்தின் உள்ளடக்கம் பற்றிய வாய்மொழி ஒத்தேற்புரை தொடர்பற்றவையாகும்'. விமர்சிக்க)

(அல்லது)

When are oral admission as to contents of document relevant?

(பத்திரத்தின் உள்ளடக்கங்கள் பற்றிய வாய்மொழி ஒத்தேற்புரையானது எப்பொழுது தொடர்புடையவையாகும்?)

பிரிவு 22 கூறுவதாவது:

பிரிவு 22 ஆனது, வாய்மொழி ஒத்தேற்புரைகளின் தொடர்புடைமை பற்றி கூறுகிறது. உதாரணமாக, ஒரு பத்திரத்தின் உள்ளடக்கங்கள் பற்றிய வாய்மொழி ஒத்தேற்புரையானது தொடர்புடையதல்ல.

ஏனெனில் ஒரு பத்திரத்தை மெய்பிக்க, அப்பத்திரத்தை தலைநிலைச் சாட்சியமான மூலப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அப்படி தாக்கல் செய்யாமல் அப்பத்திரம் குறித்து வாய்மொழிச் சாட்சியம் அளிக்க முடியாது. அது தொடர்பற்றவையாகும். எனவே வாய்மொழி ஒத்தேற்புரையும் தொடர்புற்றவையாகும். சில சமயங்களில் அம்மூலப் பத்திரமே உண்மையானதா என்ற வினா எழும்பொழுது, **பிரிவு 65ன்** படி அப்பத்திரம் குறித்த சார்நிலைச் சாட்சியத்தை (Secondary evidence - பத்திரத்தின் போட்டோ நகல்) அளிக்கலாம். அப்பொழுது அது குறித்த வாய்மொழிச் சாட்சியமானது தொடர்புடையதாகும். சுருங்கக்கூறின் பின்வரும் இரண்டு சூழ்நிலைகளின் கீழ் ஒரு பத்திரத்தின் உள்ளடக்கம் பற்றிய வாய்மொழி ஒத்தேற்புரையானது தொடர்புடையதாகும்.

i) அப்பத்திரத்தின் உள்ளடக்கங்களை மெய்ப்பிக்க முன்வருபவர் அது பற்றி தமக்கு (பிரிவு 65ன் கீழ்) சார்நிலை சாட்சியமளிக்க (Secondary evidence) உரிமையுண்டு என்று காட்டும்பொழுது, அல்லது

ii) தாக்கல் செய்யப்பட்ட பத்திரம் உண்மையானதா என்ற வினா எழும்பொழுது.

38. Under what circumstances is an admission in a civil case irrelevant? When can documents marked 'without prejudice' be admissible in evidence? (உரிமையியல் வழக்கொன்றில் எச்சூழ்நிலைகளின்கீழ் ஒத்தேற்புரையானது தொடர்பற்றதாகும்? 'பாதகமின்றி' என குறிக்கப்பட்ட ஆவணங்கள் சாட்சியமாக எப்பொழுது அனுமதிக்கப் படும்?)

(அல்லது)

Admission without prejudice - Write short notes. (பாதகமின்றி ஒத்தேற்பு - சிறு குறிப்பு வரைக.)

உரிமையியல் வழக்கின் ஒத்தேற்புரையானது தொடர்பற்றதாகக் கூடிய சூழ்நிலைகள் [பிரிவு 23]:

சாட்சிய சட்டத்தின் 23வது பிரிவின்படி, உரிமையியல் வழக்கொன்றில் ஒத்தேற்புரையானது பின்வரும் சூழ்நிலைகளில் தொடர்பற்றதாகிறது. அவை,

(i) செய்யப்படும் ஒத்தேற்புரை தொடர்பாக சாட்சியம் ஏதும் அளிக்கப்படக் கூடாது என்ற வெளிப்படையான நிபந்தனையின் பேரில் அந்த ஒத்தேற்புரையானது செய்யப்பட்டிருந்தால்; அல்லது

(ii) அதைப்பற்றி சாட்சியம் கொடுக்கப்படக்கூடாது என்று தரப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒப்புக்கொண்டார்கள் என்று நீதிமன்றம் ஊகிக்கக்கூடிய சூழ்நிலைகளின்கீழ் அந்த ஒத்தேற்புரையானது செய்யப்பட்டிருந்தால்.

பாதகமின்றி ஒத்தேற்பு (Admission without prejudice):

சில சமயங்களில் கடிதங்களில் ரகசியமான விஷயங்களோ அல்லது வேறு ஏதேனும் முனைவுகளோ (offer) எழுதப்படும்பொழுது, அதை எழுதுபவருக்கு எவ்வித 'பாதகமுமின்றி' (without prejudice) என்று குறிப்பிடப்பட்டு எழுதப்படுவதுண்டு. இதன் பொருள் யாதெனில் அக்கடிதத்தில் உள்ள ரகசியமான விஷயங்களையோ அல்லது வேறு ஏதேனும் முனைவுகளையோ, அதை எழுதியவருக்கு விரோதமாக பயன்படுத்தக் கூடாது என்பதேயாகும். அதாவது அது குறித்த சாட்சியமானது அனுமதிக்கப்படாது (not admissible) அல்லது தொடர்புடையதாகாது (not relevant).

உதாரணமாக, வழக்கொன்று நிலுவையில் இருக்கும்பொழுது, வழக்கின் ஒரு தரப்பினர் அவ்வழக்கை சமாதானமாக முடித்துக் கொள்ளும் பொருட்டு, சில விஷயங்களை ஒத்தேற்றுக்கொண்டு முனைவு செய்து எதிர்தரப்பினருக்கு கடிதமொன்றை எழுதுகிறார். அக்கடிதத்தில் 'பாதகமின்றி' (without prejudice) என தலைப்பிடப்பட்டிருந்தால், அது 'பாதகமின்றி ஒத்தேற்பு' எனப்படும். இங்கு எதிர்தரப்பினர் சமாதானத் திற்காக முனைவு செய்யப்பட்ட அவ்விஷயங்களை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், அவற்றிற்கு எவ்விளைவும் கிடையாது; அவற்றை (அக்கடிதத்தை) சமாதானத்திற்கு வந்த அத்தரப்பாளருக்கு எதிரான ஒரு சாட்சியமாக எதிர்தரப்பினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது.

மேற்கண்டது போன்ற தகவல் தொடர்புகளுக்கு, **பிரிவு 23** ஆனது பாதுகாப்பளிக்கிறது. ஏனெனில் 'பாதகமின்றி' என குறிப்பிடப் பட்டிருந்தால், மேற்படி பிரிவின்படி ஒரு வெளிப்படையான நிபந்தனை யாகும்.

ஆனால், பாதகமின்றி குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தை வழக்கின் ஒரு தரப்பினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அதை எழுதிய மறுதரப்பினர் ஏற்றுக்கொண்டுவிட்டால், மேற்படி வெளிப்படையான நிபந்தனை தளர்த்தப்பட்டுவிட்டதாக (waived) அல்லது விட்டுக்கொடுத்துவிட்டதாக கருதப்படும். அக்கடிதத்தை ஒரு சாட்சியமாக எடுத்துக்கொள்ளலாம்.

- o -

21 குற்ற ஏற்புரை [Confession]

39. What do you mean by confession? State the provisions of the Indian Evidence Act as to confession. (குற்ற ஏற்புரை என்பதால் நீவிர் அறிவது என்ன? குற்ற ஏற்புரை குறித்து இயற்றிய சாட்சிய சட்டத்தின் வகைமுறைகளைக் கூறுக.)

(அல்லது)

State the provisions of the Indian Evidence Act, 1872 relating to confession. (இந்திய சான்றியல் சட்டத்தில் (1872) குற்ற ஏற்புரை சம்பந்தப்பட்டவைகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Elucidate the laws relating to confession under Indian Evidence Act. (இந்திய சாட்சியச் சட்டத்தில், குற்ற ஏற்புரையைப் பற்றி கூறப்பட்டுள்ள சட்டத்தினை தெளிவாக்குக.)

(அல்லது)

What are the provisions embodied in the Evidence Act regarding Confession? Explain. (குற்ற ஏற்புரை குறித்து சாட்சிய சட்டத்தில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் யாவை? விளக்குக.)

குற்ற ஏற்புரை (Confession) - விளக்கம்:

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தாம் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் கூறும் உரையைக் **'குற்ற ஏற்புரை'** என்கிறோம். உரிமையியல் வழக்குகளில் ஒத்தேற்புச் செய்தவருக்கு எதிராக 'ஒத்தேற்புரை' பயன்படுகிறது. குற்றவியல் வழக்குகளில் குற்ற ஏற்புச் செய்தவருக்கு எதிராகக் 'குற்ற ஏற்புரை' பயன்படுகிறது.

குற்ற ஏற்புரையின் வரையறை குறித்த கருத்துக்கள்:

குற்ற ஏற்புரை குறித்து இந்திய சாட்சிய சட்டமானது **24 முதல் 30 வரையுள்ள பிரிவுகளின்** வழியே விளக்குகிறது. ஆனால் குற்ற ஏற்புரையின் வரையறை (Definition) இச்சட்டத்தில் எங்கும் சொல்லப்பட வில்லை.

அறிஞர் ஸ்டீபனைப் பொறுத்தவரை, "ஒரு குற்ற ஏற்புரை என்பது, குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரால், தன்னால்தான் அக்குற்றம் செய்யப்

பட்டது என்ற ஊகத்தை குறிப்பாக உணர்த்தும் வகையில் எந்நேரத்திலும் செய்யப்படும் ஒத்தேற்புரையே ஆகும்"[1] என்கிறார்.

ஆனால் **Pakala Narayanaswami v. Emperor**[2] என்ற வழக்கில் பிரிவு கவுன்சில் செய்த முடிவு மேற்படி ஸ்டீபனின் கருத்துடன் இணைந்து போகவில்லை. ஒரு குற்ற ஏற்புரையில் இரண்டு வகையான பொருண்மைகள் காணப்படலாம். அதாவது சில பொருண்மைகள் குற்றத்தை ஒத்துக்கொள்ளும் வகையிலும் (inculpatory), சில பொருண்மைகள் குற்றச்சாட்டிலிருந்து விடுபடவைக்கும்படியும் (exculpatory) இருக்கலாம். [உதாரணமாக – சுங்க இலாகாவினால் ஒரு லாரி கைப்பற்றப்பட்டு அதன் உரிமையாளர் மீது வழக்கு போடப்பட்டது. அதில் தனது லாரியில் சரக்குகள் ஏற்றப்பட்டது என்னவோ உண்மைதான்; ஆனால் அவை கடத்தல் சரக்குகள் என்பது தனக்குத் தெரியாது, என்று கூறுகிறார். இது ஒரு குற்ற ஏற்புரையாக முடியாது. ஏனெனில் மேற்படி உரையில் முதல் கூற்று குற்றத்தை ஒத்துக் கொள்வது போலவும், இரண்டாவது கூற்று குற்றத்திலிருந்து விடுபடுவது போலவும் உள்ளது. - **Veera Ibrahim v. State of Maharashtra**[3]. அதில் குற்றச்சாட்டிலிருந்து விடுபட வைக்கும் பொருண்மைகளில் ஏதேனும் உண்மையென மெய்ப்பிக்கப்பட்டால், அக்குற்றமே குற்ற ஏற்புரை வழங்கியவரால் செய்யப்பட்டிருக்கக்கூடுமோ என்ற சந்தேகத்தை உண்டு செய்யும். சந்தேகத்தின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிக்க இயலாது. எனவே ஒரு உரையில் முழுக்க முழுக்க குற்றத்தை ஒத்துக் கொண்ட பொருண்மைகள் மட்டுமே இருக்கும்பொழுதுதான், அது குற்ற ஏற்புரை என்றாகிறது, என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Palvinder Kaur v. State of Punjab[4] என்ற வழக்கிலும் மேற்படி கருத்து வலியுறுத்தப்பட்டது. குற்ற ஏற்புரையை ஒரு நீதிமன்றம் முழுக்க (whole) கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் (அதனை முழுக்க நம்ப வேண்டும்) அல்லது அதனை கவனிக்காமல் விட்டுவிட வேண்டும். இதற்கு மாறாக, அக்குற்ற ஏற்புரையில் உள்ள குற்றத்தை ஒத்துக் கொள்ளும் பகுதியை மட்டுமே எடுத்துக் கொண்டு, குற்றச்சாட்டிலிருந்து விலகிச் செல்லக் கூடிய பகுதியை நிராகரித்து, தண்டனை வழங்க முடியாது.

Hanumant v. State of M.P.[5] என்ற வழக்கிலும் மேற்கண்டவாறு உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால்,

1. "A Confession is an admission made at any time by a person charged with a crime, stating or suggesting the inference that he committed the crime".
2. AIR 1939 PC 47
3. AIR 1976 SC 1167
4. AIR 1952 SC 334
5. AIR 1952 SC 343

Nishi Kant Jha v. State of Bihar[1] என்ற வழக்கில் சிறிது மாறுபட்ட தீர்ப்பை உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி, ஒருவன் தனது நண்பனை ரயிலில் வரும்பொழுது கொன்று விட்டான். பிறகு தன் உடைகள் மீது படிந்திருந்த ரத்தக்கறையை, ரயில் ஸ்டேஷன் அருகில் உள்ள ஆற்றில் கழுவிக் கொண்டிருந்தபொழுது, அவ்வூர் மக்களால் பிடிபட்டு கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டான். அவனது உடையில் பட்டிருந்த ரத்தம், அவனது இறந்து போன நண்பனின் ரத்தத்தோடு ஒத்திருந்தது. மேலும் அவனிடமிருந்த ரத்தம் தோய்ந்த காகிதங்கள், கத்தி ஆகியவையும் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில், தான் அவ்வாறு ரத்தக்கறை படிந்த உடைகளை கழுவிக் கொண்டிருந்ததை நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டான். ஆனால் அந்த ரத்தத்திற்கான காரணத்திற்கு இரண்டு முரண்பட்ட உரைகளைக் கூறினான். முதலாவது கூற்றின்படி, ரயில் பெட்டியில் இரண்டு நபர்களுக்கிடையே சண்டை நடந்தது. அதில் ஒருவன் மற்றொருவனைக் கொன்று விட்டான். அப்போது அவனைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டபோது, தன் உடைகள் மீதும் ரத்தம் தெறித்து விட்டதாக கூறினான். மற்றொரு கூற்றின்படி, ஒருவன் தன்னை கொள்ளை அடிக்க வந்ததாகவும், அவன் தன்னை காயப்படுத்தியதால் ஏற்பட்ட ரத்தம் என்றும் கூறினான். ஆனால், உயர் நீதிமன்றம் குற்றத்திலிருந்து விடுபட முயற்சிக்கும் மேற்படி கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளாமல் அவனுக்கு தண்டனை வழங்கியது. அதை எதிர்த்து அவன் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்தான். அங்கும் அவனுக்கு உயர் நீதிமன்றம் விதித்த தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஏனெனில் அவனது மேற்கண்ட கூற்றுகளில் இரத்தக்கறை படிந்த உடைகளை தான் கழுவிக் கொண்டிருந்ததை ஒத்துக் கொண்டது குற்றத்தை ஒப்புக்கொள்ள விழைவது (Inculpatory) போன்றதாகும். ஆனால் இரத்தத்திற்கான காரணத்தை கூறும் மற்ற இரு உரைகள் குற்றத்திலிருந்து விடுபட முயற்சிக்கும் (Exculpatory) உரைகளாகும். எனவே, இதனை இதற்கு முந்தய உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி, ஒரு முழு குற்ற ஏற்புரையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் குற்றத்தை ஒப்புக் கொள்ள விழையும் உரைக்கு உறுதியூட்டும் வகையில், அதாவது தொடர்புடைய ரத்தம் அவனது நண்பனின் ரத்தத்தை ஒத்திருந்தது, தொடர்புடைய கத்தியை அவனிடமிருந்து கைப்பற்றியது, அவனது முன்னுக்குப்பின் முரணான உரைகள் போன்று எண்ணிறைந்த சாட்சியங்கள் இருந்தன. எனவே, குற்றத்திலிருந்து விடுபட முயற்சிக்கும் உரைகளை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. அதாவது குற்ற ஏற்புரையில் குற்றத்தை ஒப்புக் கொள்வதாக முயற்சிக்கும் உரையை ஏற்றுக் கொண்டு அவனுக்கு தண்டனை வழங்கியது. ஆனால் இதனைக் கொண்டு இதற்கு முன் கண்ட வழக்குகளில் எழுந்த விதியை இவ்வழக்கின் முடிவு தள்ளி விட்டது (Overruled) எனக் கருதலாகாது. இவ்வழக்கின் முடிவு,

1. (1969) S.C.R 1033

அவ்வழக்குகளின் முடிவைக் காட்டிலும் சற்றே மாறுபட்டதாகும். ஒரு குற்ற ஏற்புரையில் குற்றத்தை ஒத்துக் கொள்ள விழையும் உரைக்கு தக்க சாட்சியங்கள் இருப்பின், அதைக் கொண்டு மட்டுமே குற்றஞ் சாட்டப் பட்டவரைத் தண்டிக்கலாம்; குற்றத்திலிருந்து விடுபட முயற்சிக்கும் உரைகளை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை, என்பதே மேற்படி வழக்கில் கூறப்பட்ட விதியாகும். முன்னர் கூறிய வழக்குகளில் அப்படிப்பட்ட சாட்சியங்கள் ஏதும் அரசு தரப்பினருக்கு கிட்டாததால், குற்ற ஏற்புரையை முழுக்க நிராகரிக்க வேண்டியதாகி விட்டது (Rejecting the confession as a whole).

மேற்படி வழக்கின் முடிவு **Keshoram v. State of Assam**[1] வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது.

குற்ற ஏற்புரை - இரு வகைகள்:

குற்ற ஏற்புரை இரு வகைப்படும். அவை,

i) நீதிமன்ற குற்ற ஏற்புரை (Judicial Confession):

குற்ற ஏற்புரை ஒன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது நீதிமன்றத்திலோ அளிக்கப்பட்டால், அது 'நீதிமுறைக் குற்ற ஏற்புரை' எனப்படும்.

ii) நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை (Extra Judicial Confession):

குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லாத நபரிடமோ அல்லது நீதிமன்றத்திற்கு வெளியிலோ கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை, 'நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை' எனப்படும்.

குற்ற ஏற்புரை குறித்து இந்திய சாட்சிய சட்டத்தின் வகைமுறைகள்:

இந்திய சாட்சிய சட்டத்தின் **24 முதல் 30 வரையுள்ள பிரிவுகள்**, குற்ற ஏற்புரை குறித்து விளக்குகிறது. அவற்றை சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

1) தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி மூலமாக விளைவிக்கப்படும் குற்ற ஏற்புரை குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் எப்போது தொடர்பற்றது. (பிரிவு 24): இப்பிரிவு, அதிகாரத்தில் உள்ள நபர் ஒருவர், குற்றஞ் சாட்டப்பட்டவரை தூண்டியோ அல்லது அச்சுறுத்தியோ அல்லது வாக்குறுதி ஏதேனும் கொடுத்தோ அவரிட மிருந்து குற்ற ஏற்புரை பெற்றால், அது குற்ற வழக்கு நடவடிக்கையில் தொடர்பற்றதாகும், எனக் கூறுகிறது. (Confession caused by inducement, threat or promise, when irrelevent in a criminal proceeding).

1. AIR 1978 SC 1096

2) காவல் அலுவரிடம் கொடுக்கப்பட்ட குற்ற ஏற்புரை (பிரிவு 25): இப்பிரிவு, ஒரு காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை எதுவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது, எனக் கூறுகிறது. (Confession to a Police Officer)

3) காவல்துறையின் பாதுகாவலில் இருக்கும் குற்றஞ் சாட்டப் பட்டவரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை (பிரிவு 26): காவல் துறையின் பாதுகாவலில் உள்ள குற்றஞ் சாட்டப்பட்டவரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை அவருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது. ஆனால் அவ்வுரை ஒரு குற்றவியல் துறை மாஜிஸ்ட்ரேட்டின் நேரடி முன்னிலையில் செய்யப்பட்டிருப்பின், மெய்ப்பிக்கப்படலாம். **(Confession by the accused in custody of Police)**

4) குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து பெற்ற தகவல் (பிரிவு 27): குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு காவல் துறையின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்டதாக, பொருண்மை எதையேனும் பற்றி சாட்சியம் கொடுக்கப்படுகிறபோது, அத்தகைய தகவலில் எந்த அளவு, அத்தகவலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைக்கு சந்தேகத்திற்கிடமின்றி தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவு தகவலை, அது குற்ற எற்புரையாக ஆனாலும் சரி அல்லது இல்லையென்றாலும் சரி, மெய்ப்பிக்கலாம். (Information received from accused).

5) தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி இவற்றால் ஏற்பட்ட மன உணர்ச்சிகள் நீங்கியதற்கு பின்பு அளிக்கப்படும் குற்ற ஏற்புரை தொடர்புடையது என பிரிவு 28 கூறுகிறது, (Confession made after removal of impression caused by inducement, threat or promise is relevant.)

6) மற்றப்படி தொடர்புற்றதாகவுள்ள குற்ற ஏற்புரையானது ரகசியமாக வைக்கப்படும் என்ற வெறும் வாக்குறுதியினால் மட்டும் தொடர்பற்றதாகாது, என பிரிவு 29 கூறுகிறது. (Confession otherwise relevant does not become irrelevant by mere promise of secrecy)

7) கொடுக்கின்றவரையும் ஒரே குற்றத்திற்காக சேர்ந்தரணை யாக விசாரணை செய்யப்பட்டு வரும் மற்றவர்களையும் பாதிக்கக் கூடியதும் மெய்பிக்கப்பட்டதுமான குற்ற ஏற்புரையை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் குறித்து பிரிவு 30 கூறுகிறது. (Consideration of proved confession affecting person making it and others jointly under trial for the same offence).

முடிவுரை:

குற்ற ஏற்புரை குறித்த மேற்படி ஒவ்வொரு சட்டப் பிரிவும் மிக மிக முக்கியம் வாய்ந்ததாகும். ஒவ்வொன்றைக் குறித்தும் உச்ச நீதிமன்றம் பல

முறை பல வழக்குகளில் விளக்கம் கொடுத்துள்ளது. [விரிவாக அடுத்து வரும் வினாக்களில் காண்போம் - ஆசிரியர்.]

40. What confessions cannot be proved against an accused person? (குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக எவ்வித குற்ற ஏற்புரைகள் சான்றுறுதியாக ஏற்றுக் கொள்ள முடியாது?)

(அல்லது)

"Certain confessions are not admissible against the person accused of any offence." Comment ("குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக சில குற்ற ஏற்புரைகள் கொள்ளத் தக்கதல்ல" - விமர்சிக்கவும்)

(அல்லது)

a) What is Confession?
b) When does confession become irrelevant?

அ) குற்ற ஏற்புரை என்றால் என்ன?
ஆ) குற்ற ஏற்புரை எப்போது தொடர்பற்றதாகும்?

முன்னுரை:

சாட்சிய சட்டத்தின் 24 முதல் 26 வரையுள்ள பிரிவுகள் மேற்படி கேள்விக்கு விடை பகர்கின்றன. அஃதாவது, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக எப்பொழுது குற்ற எற்புரையானது மெய்பிக்கப்படுதல் ஆகாது என்று கூறுகிறது. விரிவாக பின்வருமாறு காண்போம்.

பிரிவு 24 கூறுவதாவது:

குற்றஞ் சாட்டப்பட்டவர் மீதுள்ள குற்றச்சாட்டு சம்பந்தமாக, அதிகாரத்திலுள்ள ஒருவரால் (person in authority) செய்யப்படும் தூண்டுதல் (Inducement), அச்சுறுத்தல் (Threat) அல்லது வாக்குறுதியால் (Promise) அக்குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவரிடமிருந்து குற்ற ஏற்புரை பெறப் பட்டிருப்பதாகவும் அதனால் குற்றஞ் சாட்டப்பட்டவர் தனக்கு அனுகூலம் (Wordly benefit) ஏதும் விளையுமென அல்லது வரக்கூடிய தீமை (Wordly disadvantage) தடுக்கப்படுமென்றோ உத்தேசிக்கும் அளவிற்கு அத் தூண்டுதலோ, அச்சுறுத்தலோ அல்லது வாக்குறுதியோ போதுமான தென்றும் நீதிமன்றத்திற்கு தோன்றினால், அவ்வுரை குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் தொடர்பற்றதாகும். அதனை அக்குற்றஞ் சாட்டப் பட்டவருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படக்கூடாது.

மேற்படி பிரிவின் உட்கூறுகள் (Ingredients):

மேற்படி பிரிவின்படி, ஒரு குற்ற ஏற்புரை எப்பொழுது தொடர்பற்றது என்றால்:

1. அக்குற்ற ஏற்புரை தூண்டுதலின் பேரிலோ, அச்சுறுத்தியோ அல்லது வாக்குறுதி ஒன்றைக் கொடுத்ததனாலோ பெறப்பட்டிருக்க வேண்டும்;
2. மேற்படி தூண்டுதல் முதலியவை அதிகாரத்தில் உள்ள ஒரு நபரினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்;
3. மேற்படி தூண்டுதல் முதலியவை குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர் மீதான குற்றச்சாட்டு சம்பந்தமாக இருக்க வேண்டும்;
4. இதனால் தனக்கு அனுகூலம் (benefit) ஒன்று கிட்டுமென்றோ அல்லது தீங்கு (disadvantage) ஒன்றை தவிர்க்கலாமென்றோ குற்றஞ் சாட்டப்பட்டவர் உத்தேசிக்கும் அளவிற்கு, மேற்படி தூண்டுதல் முதலியவை அமைந்திருக்க வேண்டும்.

மேற்படி நான்கு உட்கூறுகளையும் பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போம்.

1. தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி (Inducement, threat or promise):

ஒரு குற்ற ஏற்புரையானது தன்னிச்சையாகவும் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் செய்யப்பட வேண்டும் **(Free and Voluntary).**

R. v. Thompson[1] - இவ்வழக்கில், ஒரு குற்ற ஏற்புரையானது மனச்சாட்சி உறுத்தியதின் பேரிலும் (remorse), செய்த குற்றத்திற்கு ஈடு செய்யும் (reparation for the crime) விருப்பத்துடனும் செய்யப்பட்டிருப்பின் அது அனுமதிக்கத்தக்கது; ஆனால் அதே குற்ற ஏற்புரை அதிகாரத்தில் உள்ள ஒரு நபரால் நம்பிக்கையூட்டப்பட்டதனாலோ (hope), அச்சுறுத்தப்பட்டோ (fear) அல்லது தூண்டப்பட்டோ (excited) பெறப்பட்டிருப்பின், அது அனுமதிக்கத்தக்கதல்ல, என்று கூறப்பட்டது.

மேற்கண்டவாறு தூண்டுதலின் பேரிலோ அல்லது அச்சுறுத்தலினாலோ, வாக்குறுதியை நம்பியோ செய்யப்படும் குற்ற ஏற்புரை தன்னிச்சையானதாக இருக்க முடியாது; எதற்கோ பயந்து அல்லது எதையோ நம்பி கொடுக்கப்பட்டதாகத்தான் இருக்கும். மேற்படி தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி எப்படி அமையும் என்பதை பின்வரும் வழக்குகள் கூறுகின்றன.

R. v. Thompson[2] வழக்கில், "பொருட்களை ஒளித்து வைத்துள்ள இடத்தை எனக்கு கூறு; நான் உனக்கு சாதகமாக செயல்படுகின்றேன்" என்று குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் மாஜிஸ்ட்ரேட் கூறியது, வாக்குறுதியில் அடங்கும்.

---

1. (1893) 2 Q.B. 12
2. (1783) 1 Leach 291

R. v. Cooley[1] என்ற வழக்கில், "நீ உண்மையைக் கூறாவிடில் உனக்கு பல கஷ்டங்கள் விளையும்; அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்" என்று கூறியது அச்சுறுத்தல் என்பதில் அடங்கும்.

R. v. Parratt[2] என்ற வழக்கில், ஒரு கப்பல் கேப்டன் அக்கப்பலில் பணிபுரியும் ஒரு கப்பல் தொழிலாளியிடம், "நீ சொல்லாவிட்டால், உன்னை போலீசிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று கூறியது, அச்சுறுத்தலில் அடங்கும்.

R. v. Westlake[3] என்ற வழக்கில் "மைக்கேல் பூத் வழக்கில் உன்னுடைய தொடர்பு குறித்து வெளிப்படையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதற்கு உனக்கு அதிக வாய்ப்பை நான் வழங்குகிறேன்". என்று குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கூறிப் பெற்ற குற்ற ஏற்புரை, ஒரு மறைமுகமான அச்சுறுத்தல் அல்லது தூண்டுதலை உள்ளடக்கியுள்ளது, எனக் கூறப்பட்டது.

Pyarelal Bhargava v. State of Rajasthan[4] என்ற வழக்கில், ஒரு தூண்டுதல் செய்யப்பட்டு, அத்தூண்டுதலின் சாரம்சம் குற்றஞ் சாட்டப் பட்டவரை சென்று அடையாத சூழ்நிலையில் அவர் ஏதேனும் குற்ற ஏற்புரை செய்திருந்தாலும், அது தூண்டுதலினாலே செய்யப்பட்டதாகவே கருதப்படும் என்றும்; எனவே அக்குற்ற ஏற்புரை அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டது.

மேற்கண்டவாறு செய்து பெற்ற குற்ற ஏற்புரைகள் தொடர்புடைய தாகாது; அதைச் செய்தவருக்கு எதிராகவும் மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது. ஒரு குற்ற ஏற்புரையானது குற்றஞ் சாட்டப்பட்டவரால் தன்னிச்சையாகவும் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் செய்யப்பட்டது, என்பதை நிரூபிக்க வேண்டியது, குற்ற வழக்கிடும் அரசு தரப்பினரைச் சார்ந்ததாகும்.

2. அதிகாரத்திலுள்ள நபர் (Person in Authority):

இரண்டாவது உட்கூறின்படி, மேற்படி தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதியானது அதிகாரத்திலுள்ள ஒரு நபரால் செய்யப்பட வேண்டும். எனவே 'அதிகாரத்திலுள்ள நபர்' என்ற பதத்தில் யாரெல்லாம் அடங்குவர் என்ற வினா இங்கு எழுவது இயற்கையே. பொதுவாக அரசு அதிகாரிகளை (Government Officials) அதிகாரத்திலுள்ள நபர்கள் என அழைக்கலாம். "மாஜிஸ்ட்ரேட்டுகள், அவர்களது காரியதரிசிகள், பிண ஆய்வு அதிகாரிகள் (Coroners), போலீஸ் கான்ஸ்டேபிள்கள், வார்டன் மற்றும் கைதிகளை பாதுகாப்பில் வைத்திருக்கும் அதிகாரிகள்,

1. 10 Cox. C.C. 536
2. (1831) 4 C. & P. 570
3. (1879) Crim. L.R. 652
4. AIR 1963 SC 1094

சோதனையிடுபவர்கள், அரசு தரப்பு வழக்குரைஞர்கள், குற்ற வழக்கு தொடுப்பவர்கள் ஆகியோர் அதிகாரத்திலுள்ள நபர்களாக கருதப்படுவர் என **ஆசிரியர் Cockel** கூறுகிறார்.

சில சமயங்களில் தனிநபர் கூட அதிகாரத்திலுள்ளவராக ஆகலாம். ஒரு தொழிலாளிக்கு அவனது முதலாளி அதிகாரத்திலுள்ள நபர் ஆவார். ஒரு கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் அல்லது நாட்டாமை ஆகியோரும் அதிகாரத்திலுள்ள நபர்களாகவே கருதப்படுவர்.

Kansa Bchera v. State of Orissa[1] என்ற வழக்கில், போலீசாரிடம் காட்டிக் கொடுக்க மாட்டேன் என ஊர் பஞ்சாயத்து தலைவர் அளித்த வாக்குறுதியின் பேரில், நான்கு வருடங்களுக்கு முன்பு நடந்த கொலையை ஒருவன் ஒத்துக் கொண்டது, தொடர்பற்றதாகும், என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதிகாரத்திலுள்ள நபரால் மட்டுமே தூண்டுதல் செய்யப்பட வேண்டுமென்பதில்லை. அதிகாரத்தைக் காட்டும் சூழ்நிலைகள் இருந்தாலே போதும். **உதாரணமாக,**

R. v. Cleary[2] என்ற வழக்கில், ஒரு காவல் நிலையத்தில் இரண்டு காவலர்கள் முன்பு உண்மையைக் கூறினால் தூக்கிலிருந்து உனக்கு விடுதலை கிடைக்கும் என்று ஒரு தகப்பனார் தூண்டியதின் பேரில் அவரது மகன் அளித்த வாக்குமூலம் தொடர்பற்றது எனக் கூறப்பட்டது.

3. மேற்படி தூண்டுதல் முதலியவை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்ததாக இருக்க வேண்டும் (Inducement, threat or promise should be in reference to the charge):

தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதியானது குற்றஞ் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும். **உதாரணமாக,** "நீ உண்மையை ஒத்துக் கொண்டால், உன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்திலிருந்து விடுதலை பெறலாம்" எனத் தூண்டி குற்ற ஏற்புரை பெற்றால், அது அக்குற்றச்சாட்டு குறித்ததாகும். எனவே அக்குற்ற ஏற்புரை தொடர்பற்றதாகும். ஆனால், இதற்கு மாறாக, கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவனை, அவ்வூர் பஞ்சாயத்துதாரர்கள் அவனை சாதியிலிருந்து விலக்கி வைத்து விடுவதாக அச்சுறுத்தியதின் பேரில், அவன் அக்கொலைக் குற்றத்தை ஒத்துக் கொண்டது, ஒரு குற்ற ஏற்புரையாகும். இது அக் கொலை வழக்கில் ஒரு தொடர்புடைய சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்: **[Empress v. Mohan Lal]**[3]

---

1. AIR 1987 SC 1507
2. (1964) 48 Cr. App. R. 116 (C.A.)
3. (1881) ILR 4 All. 46

4. குற்ற ஏற்புரையினால் அனுகூலம் கிட்டும் என்று உத்தேசித்தல் (Benefit of Temporal Nature):

குற்ற ஏற்புரை வழங்குவதன் மூலம், அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனக்கு அனுகூலம் ஏதும் விளையுமென்றோ அல்லது தனக்கு வரக்கூடிய தீங்கு ஏதும் தடுக்கப்படுமென்றோ உத்தேசிக்கும் (நம்பும்) அளவிற்கு மேற்படி தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி அமைந்திருத்தல் வேண்டும். அந்த அனுகூலமோ அல்லது தீமையோ உலகினர் அனைவரும் முறையே பொதுவாக பெற விரும்புவதாகவோ அல்லது தவிர்க்க விரும்புவதாகவோ இருத்தல் வேண்டும். (Wordly or temporal nature)

பிரிவு 25 கூறுவதாவது:

ஒரு காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையானது அதைக் கொடுத்த குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக மெய்பிக்கப் படக்கூடாது, என மேற்படி பிரிவு 25 கூறுகிறது. இக்குற்ற ஏற்புரை சாட்சியத்தில் தொடர்பற்றதாகும். [விரிவாக வினா எண் (41)ல் காண்க.]

பிரிவு 26 கூறுவதாவது:

காவல் துறையின் பாதுகாப்பில் (Police custody) இருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை அவருக்கு விரோதமாக மெய்பிக்கப்படுதல் கூடாது, என பிரிவு 26 கூறுகிறது. ஆனால் இதே ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொடுக்கப்பட்டால், அதை அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம்.

காவல் அதிகாரியிடம் கொடுத்தாலும் (Confession to Police Officer) மெய்ப்பிக்கக்கூடாது **(பிரிவு25);** காவல்துறையின் பாதுகாவலில் (Whilst in the custody of Police officer) உள்ள பொழுது கொடுத்தாலும் அக்குற்ற ஏற்புரை மெய்பிக்கப்படுதல் கூடாது. இதற்கு அடிப்படை நாம் அனைவரும் அறிந்ததே. ஒரு காவல் அதிகாரியிடம் ஒருவன் குற்ற ஏற்புரை கொடுத்திருந்தால், அது அவனே வலிய கொடுத்ததாக இருக்க முடியாது. காவலர்களின் [illegible] உதைக்கு பயந்தும், சித்தரவதையிலிருந்து தப்பிக்கவும் கொடுத்தாகவே இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். மேலும் விரிவாக வினா எண் (41)ல் காண்க.

பிரிவு 28 கூறுவதாவது - பிரிவு 24க்கு விதிவிலக்கு:

முன்கண்ட 24வது பிரிவில் கூறப்பட்ட தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி தொடர்பான உணர்வுகள் ஒருவனது மனதிலிருந்து முழுவதுமாக நீங்கிவிட்டது என நீதிமன்றத்திற்கு தோன்றினால், அதன் பின்னர் அவன் கொடுக்கும் குற்ற ஏற்புரை தொடர்புடையதாகும். அதாவது, அவன் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் குற்ற ஏற்புரை செய்கின்றான் என்று பொருளாகும்.

பிரிவு 29 கூறுவதாவது - பிரிவு 24க்கு விதிவிலக்கு:

ஒரு குற்ற ஏற்புரை வழங்கப்பட்டு, அதுவும் தொடர்புடையதாக இருந்து, பின்னர் தான் வழங்கிய குற்ற ஏற்புரை ரகசியமாக வைக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தினால்தான், அவ்வாறு தான் குற்ற ஏற்புரை வழங்கியதாக கூறினாலும், அதை மட்டுமே காரணமாகக் கொண்டு அக்குற்ற ஏற்புரை தொடர்பற்றதாகாது. அதாவது, "நீ வழங்கும் குற்ற ஏற்புரை ரகசியமாக வைக்கப்படும்" என வாக்குறுதி கொடுத்ததின் பேரில் கொடுக்கப்பட்ட குற்ற ஏற்புரை பின்னர் பகிரங்கமாக வெளிப்படுத்தப் பட்டாலும், அக்குற்ற ஏற்புரை வழங்கியவர் அது மேற்படி காரணத்தால் (கொடுத்த வாக்குறுதி மீறியதால்) தொடர்பற்றதாகி விட்டது எனக் கூற முடியாது.

41. "No Confession made to a Police Officer shall be proved as against a person accused of any offence" - State the exception to the above rule. ("ஒரு காவல் துறை அதிகாரியிடம் ஏதேனும் ஒரு குற்றத்திற்காகக் குற்றம் சாட்டப்பெற்றவருக்கு எதிராக அளிக்கப்பட்ட குற்ற ஏற்புரை எதுவும் நிருபிக்கப்பட வேண்டியதில்லை" - மேற்கூறப்பட்ட விதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள விலக்குகளை விவரிக்க.)

(அல்லது)

"A Confession under to a Police Officer is irrelevant". Comment and state the exceptions. ("ஒரு காவல் அதிகாரியிடம் கொடுக்கும் குற்ற ஏற்புரை தொடர்புடையதாகாது." விதிவிலக்குகளுடன் விவரி.)

(அல்லது)

When, if at all, can a Confession made by a person in Police Custody be proved against him? (எப்போது காவல் நிலையத்தின் பாதுகாப்பில் இருக்கும் நபர் ஒருவரினால் கொடுக்கப்பட்ட குற்ற ஏற்புரை அந்த நபருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம்?)

(அல்லது)

What information received from a person accused of an offence in the custody of a Police Officer, may be proved? (ஒரு காவல்துறை அலுவலரின் பாதுகாப்பிலிருப்பவரும் குற்றஞ்சாட்டப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெறப்பட்ட எந்தச் சங்கதி மெய்ப்பிக்கப்படலாம்?)

(அல்லது)

State the rules of Evidence relating to the relevancy of the Confession made to a Police Officer in the presence of a Judicial Magistrate. (ஒரு நீதித்துறை நடுவர் முன்னிலையில் காவல் அதிகாரி ஒருவரிடம் கொடுக்கப்பட்ட குற்ற ஏற்புரையின் தொடர்புடைமை குறித்த சான்றுச் சட்ட விதிகளைக் கூறுக.)

(அல்லது)

Discuss the validity of Confession to the Police. Show how far they are admissible in evidence. (காவல் துறை அலுவலரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரைகளின் செல்லும் தன்மையை ஆராய்க. அவைகள் எந்த அளவுக்கு சான்றாக அனுமதிக்கத் தக்கவை என்பதைக் காட்டுக.)

முன்னுரை:

சாட்சிய சட்டத்தின் 24 முதல் 26 வரை உள்ள சட்டப் பிரிவுகள் ஒரு காவல்துறை அலுவலரிடமோ அல்லது காவல்துறையின் பாதுகாப்பில் உள்ள பொழுதோ குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரால் செய்யப்படும் குற்ற ஏற்புரையானது மெய்பிக்கப்படுதல் ஆகாது என்று கூறுகிறது. இதை சென்ற வினாவிலேயே கண்டோம். ஆனால் தற்பொழுது மேற்படி வினாக்களைப் பொறுத்தவரை, மேற்கண்டவாறு ஒரு குற்ற ஏற்புரை கொடுக்கப் பட்டிருந்தாலும் எச்சூழ்நிலைகளில் அவை குற்றஞ் சாட்டப் பட்ட நபருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படலாம் என்பதை விளக்கும் முகமாக பின்வருமாறு விடை அமைகிறது. அதாவது மேற்படி பிரிவுகளுக்கு விதிவிலக்குகளைக் கூறுகிறது.

பிரிவு 25ன்படி,

ஒரு காவல் துறை அதிகாரியிடம் கொடுக்கப்டும் குற்ற ஏற்புரை எதுவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவருக்கு எதிராக மெய்பிக்கப்படுதல் கூடாது, என்று பிரிவு 25 கூறுகிறது.

ஏன் மெய்ப்பிக்கக்கூடாது?

பொதுவாக குற்ற ஏற்புரை என்பது தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும், யாருடைய தூண்டுதலின்றியும் செய்யப்பட வேண்டும். ஆனால் ஒரு குற்ற ஏற்புரை காவல்துறை அலுவலரிடம் கொடுக்கப் பட்டுள்ளது என்று கூறுமிடத்து, அது மேற்கண்டவாறு தன்னிச்சையாக கொடுக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது. ஏனெனில் காவல்துறையினர் அதிகாரத்திலுள்ள நபர்கள். அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டவரை அடித்து, உதைத்து, சித்ரவதைப்படுத்தி அக்குற்ற ஏற்புரையை பெற்றிருப்பதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது. அடி உதைக்கு பயந்து செய்யாத குற்றத்தையும் ஒப்புக் கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படலாம். எனவே அவ்வுரையை அக்குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக மெய்பிக்கக்கூடாது என சட்டம் விதிக்கிறது. தற்பொழுது ஒரு காவல் துறை அலுவலர் என்பவர் யார், அவரிடம் கொடுக்கப்படுவது குற்ற ஏற்புரைதானா என்பது தெரிந்து கொள்வது அவசியம். முதலாவதாக காவல் துறை அலுவலர்கள் (Police Officer) என்பவர்கள் சாதாரணமாக நாம் நடைமுறையில் காண்பவர்கள் ஆவர். ஆனால் சில சமயங்களில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 173ன்கீழ் குற்றப் பத்திரிக்கை (Charge Sheet) தாக்கல் செய்ய அதிகாரம் படைத்த அலுவலர்களும் காவல்துறை

அதிகாரிகளாகவே கருதப்படுவர் என **Shakarlal v. Asst Collector of Customs**[1] வழக்கில் கூறப்பட்டது.

State of Punjab v. Barkatram[2] என்ற வழக்கில் சுங்க இலாகாதுறை அதிகாரிகள் (Customs Officers) காவல்துறை அலுவலர்கள் ஆகமாட்டார்கள் எனக் கூறப்பட்டது. ஏனெனில், அவர்கள் காவல்துறையினர் போல் புலன் விசாரணை செய்ய அதிகாரம் பெற்றிருந்தாலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 173ன் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யும் அதிகாரம் படைத்தவர்கள் அல்லர். எனவே, அவர்களிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையை குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம்.

Raja Ram Jaiswal v. State of Bihar[3] என்ற வழக்கில் காவல்துறை அதிகாரிகள் (Excise Officer) ஒரு காவல்துறை அலுவலராக கருதப்படுவார் என்று கூறப்பட்டது. ஏனெனில் அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 173ன் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யும் அதிகாரம் படைத்தவர்கள்.

ஒரு அலுவலர் காவல்துறையினரா என்பதைக் கண்டறிய, அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 133ன் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் படைத்துள்ளவரா என்பதை அறிந்து கொண்டாலே போதும், என மேற்படி வழக்குகள் கூறுகின்றன.

Emperor v. Har Piari[4] என்ற வழக்கில், காவல்துறை அலுவலரிடம் நேரடியாக கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையை மட்டுமே மெய்ப்பித்தல் கூடாது என்று கூறப்பட்டது. காவல்துறை அலுவலர் அருகில் நின்று கொண்டிருக்கும்பொழுது, காவல்துறை சாராத பிறிதொரு நபரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை ஏற்புடையதே. அதை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம். அது தன்னிச்சையாக செய்யப்பட்ட ஒன்றாகவே கருதப்படும். ஆனால் அந்த மேற்படி நபர் காவல் துறையினரின் ரகசிய ஒற்றராக (Secret Agent) இருப்பின், அவரிடம் கொடுத்த குற்ற ஏற்புரை செல்லாது.

இரண்டாவதாக, கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையின் தன்மை பற்றியதாகும்.

Sita Ram v. State[5] என்ற வழக்கில் ஒருவன், தனது மனைவியைக் கொன்று தனது குற்ற ஏற்புரையை ஒரு தாளில் அவன் கைப்பட எழுதி அம்மனைவியின் பிணத்தருகில் வைத்திருந்தான். இக்குற்ற ஏற்புரை

1. 1986 SCD 385
2. AIR 1962 SC 276
3. AIR 1964 SC 828
4. AIR 1926 All. 737
5. 1966 Supp. S.C.R. 265

தொடர்புடையதே என உச்ச நீதிமன்றம் கூறியது. ஏனெனில் இது காவல்துறை அலுவலரிடம் செய்யப்படவில்லை.

குற்றத்தை ஒத்துக் கொள்ளும் வண்ணம் இருப்பவையே குற்ற ஏற்புரையாகும். **உதாரணமாக, Queen Empress v. Jagrup**[1] என்ற வழக்கில் ஒருவன் தான் ஒரு கொலையை கண்ணால் பார்த்ததாக கூறுகின்றான். இது குற்ற ஏற்புரையாகாது. ஆனால் அது அவன் அந்த இடத்தில் கொலையின் பொழுது இருந்ததற்கு அவனுக்கெதிரான ஒரு சாட்சியமாகும்.

மூன்றாவதாக ஒரு குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவர் குற்றத்தை ஒத்துக் கொண்டு அளிக்கும் உரை மட்டுமே குற்ற ஏற்புரையாகும். குற்றமே சாட்டப்படாமல் இருப்பவர்கள் அளிக்கும் உரைகள் குற்ற ஏற்புரையாகாது.

Ramesh Chandra Mehta v. State of West Bengal[2] என்ற மற்றொரு வழக்கில், தன்மீது குற்றஞ்சாட்டப்படுவதற்கு முன்பே ஒருவன் காவல்துறை அலுவலரிடம் அளிக்கும் குற்ற ஏற்புரையும் மெய்பித்தல் கூடாது; தொடர்புடையதாகாது எனப்பட்டது.

பிரிவு 26ன்படி:

இனி அடுத்து பிரிவு 26ஐக் காண்போம். இதற்கு பிறகு மேற்படி இண்டு பிரிவுகளுக்குண்டான விதிவிலக்குகளை காணல் சாலச் சிறந்தது. பிரிவு 26ன்படி காவல் துறையின் பாதுகாவலில் (Police Custody) இருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை அவருக்கு விரோதமாக மெய்ப்பிக்கப்படுதல் கூடாது; ஆனால் இதே ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொடுக்கப்பட்டால், அதை அக்குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம்.

முன்கண்ட பிரிவு 25ன்படி, ஒரு காவல்துறை அலுவலரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை மெய்ப்பிக்கப்படுதல் கூடாது. அவ்வாறே பிரிவு 26ன்படி காவல்துறையின் பாதுகாவலில் இருக்கும்பொழுது குற்றஞ் சாட்டப்பட்டவரால் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரையும் மெய்ப்பிக்கப்படுதல் கூடாது. ஆக இரண்டு பிரிவுகளுமே காவல் துறையினரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரைகள் மெய்ப்பிக்கப்படுதல் கூடாது எனக் கூறுகிறது. ஆனால் மேற்படி பிரிவு 26க்கு ஒரு விதிவிலக்கு **(exception)** உண்டு. அதன்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் காவல் துறையின் பாதுகாவலில் இருந்தாலும், அவர் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உடனடி முன்னிலையில் குற்ற ஏற்புரை வழங்குவராயின் அதை மெய்பிக்கலாம். அதை சாட்சியத்தின் ஒரு பகுதியாக அனுமதிக்கலாம். அக்குற்ற ஏற்புரை தொடர்புடையதாகும்.

1. ILR 1885 7 All. 646
2. AIR 1970 SC 940

முன்கண்ட பிரிவு 25ல் ஒரு காவல்துறை அலுவலர் என்பதில் யாரெல்லாம் அடங்குவர் எனக் கண்டோம். அவ்வாறே இந்த பிரிவு 26ல் கண்டுள்ள 'காவல்துறை பாதுகாவல்', 'மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் குற்ற ஏற்புரை', ஆகியவற்றின் பொருளை இங்கு அறிந்து கொள்ளல் நலம்.

i) காவல்துறை பாதுகாவலில் (Police Custody):

M. Rawthor Ismile v. State[1] - என்ற வழக்கில் காவல்துறை பாதுகாப்பு, என்பது அதன் உண்மையான கருத்தில், குற்றஞ்சாட்டப் பட்டுள்ள நபரின் நடவடிக்கைகள் நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ காவல்துறையினரின் கண்காணிப்பின் கீழ் தடுக்கப்பட்டோ அல்லது கட்டுப்படுத்தப்பட்டோ இருத்தல் ஆகும் எனக் கூறப்பட்டது.

மேற்கண்டதிலிருந்து காவல்துறை பாதுகாப்பு என்பது பரந்த பொருளில் கூறப்பட்டிருப்பதை அறியலாம். அதாவது ஒருவரை நேரடியாக ஒரு குற்றத்திற்காக கைது செய்து (actual arrest) பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டுமென்பதில்லை. ஒரு வீட்டிலோ அல்லது ஒரு திறந்த வெளியிலோ கூட அல்லது ஒரு பயணத்தின்பொழுதோ கூட காவலில் வைப்பதும், காவல்துறை பாதுகாப்பு என்றே கூறப்படும் சிறைச்சாலையின் நான்கு சுவர்களுக்குள் இருப்பதே, காவல்துறை பாதுகாப்பு என பொருள் கொள்ள வேண்டியதில்லை. எனவே அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் செய்யப்படும் குற்ற ஏற்புரைகளையும் மெய்பித்தல்கூடாது; அவை தொடர்பற்றவையாகும்.

ii) மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் குற்ற ஏற்புரை (Confession in the Presence of Magistrate):

இதனை பிரிவு 26க்கான ஒரு விதிவிலக்கு எனக் கூறலாம். இதன்படி ஒருவர் காவல்துறை பாதுகாவலில் உள்ளபொழுது, அவர் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உடனடி முன்னிலையில் குற்ற ஏற்புரை வழங்கு வாராயின், அதை மெய்ப்பிக்கலாம். அக்குற்ற ஏற்புரை செல்லத் தக்கதாகும். ஏனெனில் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஒரு குற்ற ஏற்புரை கொடுக்கப் படும்பொழுது அது தன்னிச்சையானதாகவும், சுதந்திரமாகவும் செய்யப் பட்டதாகவும், நம்பத்தகுந்ததாகவும் உள்ளது. அப்பொழுது காவல் துறையினரின் சித்ரவதை கிடையாது.

உடனடி முன்னிலை (immediate presence) என்பது, எங்கு குற்ற ஏற்புரை வழங்கப்படுகிறதோ அதே அறையிலேயே, அந்த இடத்திலேயே மாஜிஸ்ட்ரேட் இருத்தல் வேண்டும். அடுத்த அறையில் மாஜிஸ்ட்ரேட் அமர்ந்து கொண்டு பிறிதொரு அறையிலிருந்து குற்றஞ் சாட்டப் பட்டவரால் குற்ற ஏற்புரை வழங்கப் பட்டால், அது மீண்டும் சித்ரவதைக்கு

1. 1982 Cr.L.J. 2102

பயந்து கொடுப்பதாக கருதப்பட்டு, அக்குற்ற ஏற்புரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **[Zwing Lee Aviel v. State of M.P.]**[1]

விதிவிலக்கு (Exception) - பிரிவு 27ன்படி:

முன்கண்ட 25 மற்றும் 26 ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் பொதுவாக பிரிவு 27 ஆனது ஒரு விதிவிலக்கை கூறுகின்றது. அதன்படி, குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு ஒரு காவல் அலுவலரின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் (information) விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மை (discovery of fact) எதையேனும் பற்றிச் சாட்சியம் அளிக்கப்படும்போது, அத்தகைய தகவலில் எந்த அளவு, அத்தகவலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைக்கு அய்யத்திற் கிடமின்றிச் சம்பந்தம் உடையதாக இருக்கின்றதோ, அந்த அளவுத் தகவலை - அது ஒரு குற்ற ஏற்புரையாக ஆனாலும் சரி இல்லையென்றாலும் சரி - மெய்ப்பிக்கலாம்.

இந்திய சாட்சியச் சட்டமானது இரண்டு சூழ்நிலைகளில் காவல் துறையினரிடம் வழங்கப்படும் குற்ற ஏற்புரையை சாட்சியமாக அனுமதிக்கலாம் என்று கூறுகிறது. முதலாவதாக, பிரிவு 26ன்படி ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உடனடி முன்னிலையில் அளிக்கப்படுவது; இதை முன்னரே கண்டோம். இரண்டாவதாக, மேற்படி பிரிவு 27ன்படி காவல்துறை பாதுகாவலில் உள்ள பொழுது குற்றஞ் சாட்டப்பட்டவரால் ஒரு உரையானது, அக்குற்றம் சம்பந்தமுடைய பொருண்மை ஒன்றைக் கண்டுபிடிக்க வழிவகுக்கும்பொழுது அவ்வுரை சாட்சியத்தில் ஏற்புடைய தாகின்றது. (Statement leads to the discovery of a fact connected with the Crime.)

பிரிவு 27ன் செயல்பாட்டிற்கு தேவையான காரணிகள் (Factors):

a) கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மையானது (Fact) அக்குற்றம் தொடர்புடையதாக இருக்க வேண்டும்;

b) பொருண்மை என்பது அக்குற்றம் தொடர்பான கருப் பொருளைக் (Material Object) குறிப்பிட வேண்டும். உதாரணமாக, கொலை செய்யப் பயன்படுத்திய கத்தி அல்லது ஆயுதம், இரத்தக்கறை படிந்த உடைகள் முதலானவை;

c) குற்றஞ் சாட்டப்பட்டவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் அப்பொருண்மை கண்டுபிடிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்;

d) அக்கூற்றை கூறுபவர் ஏதேனும் குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டவராக இருக்க வேண்டும்;

1. AIR 1954 SC 15

e) அக்கூற்றை காவல்துறையின் பாதுகாவலில் உள்ள பொழுது கூறியிருக்க வேண்டும்.

பிரிவு 26 மற்றும் பிரிவு 27 - ஒரு கண்ணோட்டம்:

பிரிவு 26ன்படி, ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உடனடி முன்னிலையில் அளிக்கப்படும் குற்ற ஏற்புரை முழுவதையும் அப்படியே மெய்ப்பிக்கலாம். ஆனால் மேற்படி பிரிவு 27ன்படி, குற்றஞ் சாட்டப்பட்ட நபரிடமிருந்து பெறப்பட்ட தகவலில் எது அக்குற்றம் சம்பந்தப்பட்ட ஒரு பொருண்மையை கண்டுபிடிக்க உதவுகிறதோ அப்பொருண்மை குறித்த தகவலை மட்டும் மெய்ப்பிக்கலாம் என்று கூறுகிறது. இப்பிரிவின் எல்லை குறித்து விவாதிக்கப்பட்ட மிக முக்கியமான வழக்குகள் வருமாறு.

மிக முக்கியமான வழக்குகள்:

Sukhan v. Emperor[1]

இவ்வழக்கில், ஒரு சிறுவனைக் கொன்றதற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர் பின்வருமாறு உரைத்தார். அஃதாவது, "நான் அச்சிறுவனின் கையிலிருந்த வளையலை கழற்றினேன்; பின் அவனை கிணற்றில் தள்ளினேன்; அவ்வளையல்களை அலாவுதீனிடம் அடகு வைத்தேன்" என்று கூறினார். அவ்வளையல்கள் அலாவுதீனிடமிருந்து மீட்கப்பட்டன. தற்பொழுது பிரச்சனை என்னவென்றால், மேற்கண்ட உரையில், "நான் அச்சிறுவனின் கையிலிருந்து வளையல்களை கழற்றினேன்" என்பது பிரிவு 27ன் கீழ் அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும். பெருவாரியான தீர்ப்புப்படி அவ்வுரை அனுமதிக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் அவ்வுரையிலிருந்து பெறப்பட்ட தகவலானது எந்தப் பொருண்மையையும் கண்டுபிடிக்க வழிவகுக்கவில்லை. எனவே அவ்வுரையை மெய்ப்பிக்கப்பட முடியாது.

Bhika v. R. [2]

இவ்வழக்கு குற்றஞ் சாட்டப்பட்டவர் தான் ஒரு கொலை செய்து விட்டதாக உரைப்பது பிரிவு 27ன் கீழ் வராது. ஏனெனில் அது அவ்வுரை எப்பொருளையும் கண்டறிய வழிவகுக்கவில்லை என தலைமை நீதிபதி **Beaumont** அவர்கள் கூறினார்.

ஆனால் பின்வரும் வழக்கில் மேற்படி பிரிவு 27ற்கு கொடுக்கப்பட்ட கடுமையான பொருள் விளக்கங்கள் பயன்படுத்தப்படவில்லை. பரந்த பொருளில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால், கருப்பொருளை கண்டறிய உதவும் வாசகங்களை துண்டிக்காமல் அக்குற்ற ஏற்புரை

1. 10 Lahore 283 1929
2. 1943 B 458

முழுவதையும் (Whole statement) அப்படியே கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும், எனக் கூறப்பட்டது.

Athappa Goundan v. Emperor[1]

இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட நபர் பின்வருமாறு கூறியதை காவல் அலுவலர் குறித்துக் கொண்டார். அஃதாவது, தானும் தன்னுடன் சேர்ந்து குற்றஞ் சாட்டப்பட்டவரும் S என்ற நபரை வாயில் துணியைத் திணித்தும், கழுத்தைக் கயிராலும் கையாலும் சுற்றி அழுத்திக் கொன்றதாகவும், மேலும் அன்றிரவு ரூ.2/- கொடுத்து இரண்டு பாட்டில்கள் கள்ளச் சாராயம் வாங்கிக் குடித்ததாகவும், காலியான பாட்டில்களையும், கயிறு மற்றும் S வாயில் திணித்த துணி ஆகியவற்றை அதே வீட்டின் சுற்றுச் சுவருக்குள் ஒரு சாணி மேட்டில் புதைத்து வைத்ததாகவும், கூறினார். மேற்கூறப்பட்ட பொருட்கள் அனைத்தும் கண்டறியப்பட்டன. மேற்படி உரையில், முதல் பகுதியை (அதாவது வாயில் துணி திணித்து கழுத்தை கையாலும், கயிற்றாலும் நெரித்து கொன்ற உரையை) அனுமதிக்கக்கூடாது என்றும், ஏனெனில் அவை எப்பொருண்மைகளையும் கண்டறிய உதவவில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது. ஆனால், இதனை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், குற்றத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட கருப்பொருள்களான மேற்படி துணி, கயிறு, பாட்டில்கள் ஆகியவை குற்றஞ் சாட்டப்பட்டவரின் கூற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், அவ்வுரை முழுவதையுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. அதாவது முழுத் தகவலையும் அக்குற்றஞ் சாட்டப் பட்டவரின் பொறுப்பு நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு அனுமதிக்க வேண்டும் எனப்பட்டது. ஆனால் பின்வரும் மேலும் மிக முக்கியமான வழக்கில் மேற்கூறப்பட்ட கருத்து தள்ளப்பட்டது (Overruled). மாறாக முன்கூறப்பட்ட Sukhan வழக்கில் எடுத்துரைக்கப்பட்ட தீர்ப்பு பின்பற்றப்பட்டது. அவ்வழக்கு வருமாறு:

Pulukuri Kottaya v. Emperor[2]

முழுத் தகவலையும் குற்ற ஏற்புரையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆதப்ப கவுண்டன் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை, இவ்வழக்கில் பிரிவி கவுன்சில் நிராகரித்து விட்டது. பொருண்மைகளை (கருப் பொருளை) கண்டறிய உதவும் உரைகளை மட்டுமே மெய்ப்பிக்கலாம் என்று **Sukhan** வழக்கில் லாகூர் உயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பே இவ்வழக்கில் பின்பற்றப்பட்டது. வழக்கின் விவரங்கள் வருமாறு:

இவ்வழக்கில், ஒரு கிராமத்தில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே

1. ILR 1939 Mad. 965
2. AIR 1947 PC 67

நடந்த கலவரத்தில் பலர், கலகத்திற்காகவும் கொலை குற்றத்திற்காகவும் குற்றஞ் சாட்டப்பட்டனர். அவர்களில் சிலருக்கு மரண தண்டனையும் சிலருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து பின்வரும் அடிப்படையில் அவர்கள் பிரிவி கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்தனர். அதாவது குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் சிலர் கூறிய உரைகள் பிரிவுகள் 26 மற்றும் 27க்கு முரணாக அனுமதிக்கப்பட்டுள்ளன என்பது அந்த அடிப்படைகளில் ஒன்றாகும். அத்தகைய உரைகளில் குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு நபர் கூறியதாவது, "14 தினங்களுக்கு முன்னர், நானும் புலுகுரி கோட்டையய்யாவும் எனது கோஷ்டி ஆட்களும் சிவய்யா மற்றும் சிலருக்காக காத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது அங்கு வந்த சிவய்யா மற்றும் சுப்பையா ஆகியோரை அடித்துக் கொன்றோம். எனது கோஷ்டியைச் சார்ந்த ராமய்யா என்பவருக்கு கையில் அடிப்பட்டது. அவனது கையில் கோடாலி இருந்தது. கை அடிப்பட்டதினால் அக்கோடாலியை என்னிடம் கொடுத்தான். நான் அக்கோடாலியையும் எனது குச்சியையும் என்னுடைய கிராமத்தில் உள்ள வைக்கோல் போரில் (rick) மறைந்து வைத்து உள்ளேன். நீங்கள் வருவீர்களேயானால், அவற்றை நான் உங்களுக்கு காண்பிக்கின்றேன். மேற்கண்ட அனைத்தையும் நாங்கள் புலுகுரி கோட்டையய்யாவின் தூண்டுதலினால்தான் செய்தோம்." என்று கூறினார். அப்பொருட்கள் அந்த இடங்களிலிருந்து கைப்பற்றப்பட்டன. மேற்கண்ட உரையில், "நான் அக்கோடாலியையும் எனது குச்சியையும் என்னுடைய கிராமத்தில் உள்ள வைக்கோல் போரில் மறைத்து வைத்து உள்ளேன். நீங்கள் வருவீர்களேயானால் அவற்றை நான் உங்களுக்கு காண்பிக்கின்றேன்" என்ற வாசகங்களைத் தவிர பிற வாசகங்கள் சாட்சியத்தில் அனுமதிக்கப்படவில்லை. இதேபோல் குற்றம் சாட்டப் பட்டுள்ள மற்றொரு நபர், "நான் சிவய்யாவை கோடாலியால் வெட்டிக் கொன்றேன். அதை எனது கிராமத்தில் உள்ள வீட்டின் கொல்லைப் புறத்தில் மறைத்து வைத்துள்ளேன். அந்த இடத்தை நான் உங்களுக்கு காட்டுகின்றேன்" என்று கூறினார். இதில் "நான் சிவய்யாவை கோடாலி யால் வெட்டிக் கொன்றேன்" என்ற உரை அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் கருப்பொருட்களை கண்டறிய உதவும் தகவலை மட்டுமே மெய்பிக்கலாம் என பிரிவு 27 கூறியுள்ளது நிலை நிறுத்தப் பட்டது. மேலும் குற்றஞ் சாட்டப்பட்டவர் அக்கொலைக்குச் சம்பந்தப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தை அறிந்துள்ளதனாலே, அவர் தந்த ஏற்புரை குற்ற ஏற்புரை ஆகாது என பிரிவி கவுன்சில் கூறியது. எனவே மேற்படி வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்கள் அளித்த உரையின் பேரில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனை ரத்து செய்யப்பட்டு அவர்களுக்கு விடுதலை வழங்கப்பட்டது.

இவ்வாறு மேற்படி வழக்கில் விடுதலைத் தீர்ப்பு கூறப்பட்டவுடன், ஆதப்ப கவுண்டர் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை மட்டுமே அடிப்படை யாகக் கொண்டு பிற வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு

வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்து அத்தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென சென்னையில் வழக்கறிஞர்கள் பலர் போராட்டம் செய்தனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

இதற்குப்பின் எழுந்த பல்வேறு வழக்குகளிலும் சென்னை உயர்நீதிமன்றம் புலுகுரி கோட்டையா வழக்கில் விளைந்த தீர்ப்பையே பின்பற்றியது.

Public Prosecutor v. Oor Goundan and another[1]

இவ்வழக்கில் A மற்றும் B ஒரு கொலைக்காக குற்றஞ் சாட்டப் பட்டனர். அவர்களில் A கொடுத்த உரையின் பேரில் ஒரு கத்தியை காவல் துறையினர் கைப்பற்றினர். அவ்வுரை பின்வருமாறு. "புதைப்பதற்கு முன்னர், அக்கத்தியால் அப்பிணத்தின் வயிற்றை அறுத்தேன். அப்பிணத்தின் இடுப்பில் ஒரு வெள்ளி அருணாகொடியைக் கண்டேன். அதை எடுத்து Bயிடம் கொடுத்தேன். கொலை செய்யப் பயன்படுத்திய அக்கத்தியை பின்னர் எனது கரும்புத் தோட்டத்தில் புதைத்தேன். நீங்கள் என்னுடன் வந்தால் அதை நான் உங்களுக்கு எடுத்துக் கொடுக்கின்றேன்". இதில் சாட்சியமாக அனுமதிக்கப்பட்ட உரையின் ஒரே பகுதி யாதெனில், " கத்தியை நான் எனது கரும்புத் தோட்டத்தில் புதைத்து வைத்துள்ளேன். என்னுடன் வந்தால் அதை தங்களுக்கு எடுத்துத் தருகின்றேன்" என்பதேயாகும். மற்றவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அக்கத்தியையும் அக்கொலையையும் சம்பந்தப்படுத்தும் அளவிற்கு பொருண்மைகள் ஏதும் கண்டறியப்படவில்லை.

உச்ச நீதிமன்றமும் **State of U.P. v. Deoman Upadhaya**[2] என்ற வழக்கில் பிரிவு 27ன் அரசியலமைப்பு செல்லுதன்மை குறித்து ஆராய்ந்தது. இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் தான் ஒருவனைக் கொன்றதாகவும், அதன்பிறகு சில உரைகளையும் கூறினார். இதில் தான் ஒருவனைக் கொன்றதாக கூறும் உரையை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அவனது பிற உரைகளையும் அதனடிப்படையில் கண்டறியப் பட்ட கருப்பொருட்களையும் வைத்துப் பார்த்தால் அவனுக்கும் அக்கொலைக்கும் உள்ள சம்பந்தம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவானதால், அவனது தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது. பிரிவு 27 அரசியலமைப்பற்றது என உயர் நீதிமன்றம் கூறியதை உச்ச நீதிமன்றம் நீக்கியது.

Basanti v. State of H.P.[3] என்ற வழக்கில், கொடுக்கப்பட்ட தகவலின் மூலம் கண்டறியப்பட்ட கருப்பொருட்கள் இறந்து

1. AIR 1948 Mad. 242
2. AIR 1960 SC 1125
3. 1967 3 S.C.C. 227

போனவனுடனோ அல்லது அக்குற்றத்துடனோ எவ்வாறு சம்பந்தம் கொண்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்றால், அந்த தகவல் தொடர்பான சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவுரை:

வழக்குகளை சொல்லிக்கொண்டே போனால் அதன் பட்டியல் நீண்டு கொண்டே போகும். குற்ற ஏற்புரை என்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருவன் குற்ற ஏற்புரையை கொடுத்து விட்டதாலேயே அவனைக் குற்றவாளி என அவ்வளவு எளிதாக கூறிவிட முடியாது. அவற்றை மெய்ப்பிக்கும் பொறுப்பு அரசு தரப்பினருக்கு உள்ளது. இதையே முன்கண்ட 25 முதல் 27 வரையிலான பிரிவுகள் ஓயாது சொல்கின்றன.

42. Under what circumstances the confession of an accused is admissible against the co-accused. (ஒரு குற்றவாளியின் குற்ற ஏற்புரை எந்தச் சூழ்நிலைகளில் உடன் குற்றவாளிக்கு எதிராக கொள்ளத் தக்கதாகும்?)

(அல்லது)

Discuss the evidentiary value of the confession of a co-accused in a joint trial. (ஒரு கூட்டு வழக்கில் இணையாகக் குற்றம் சுமத்தப் பட்ட ஒருவருடைய குற்ற ஏற்புரைக்கு உரிய சான்றின் மதிப்பினை விவாதிக்க.)

(அல்லது)

Explain briefly the differences between the testimony of an accomplice and confession of a co-accused (உடன் குற்றவாளியின் சான்றுரைக்கும் உடன் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரைக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Confession of a co-accused - Write short notes. (உடன் குற்றம் சுமத்தப்பட்டவரின் குற்ற ஏற்புரை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட குற்றஞ் சாட்டப்பட்ட நபர்கள் விசாரிக்கப்படும்பொழுது அவர்கள் உடன் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் (Co-accused) எனப்படுவர். **[Vinayak v. State of Maharastra[1]]**. அவர்களில் ஒருவன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்து

1. (1984) 4 S.C.C. 441

ஒத்துக்கொண்டு குற்ற ஏற்புரை வழங்கலாம்; அதற்கு தடையேதுமில்லை; மேலும் அது அவனுக்கெதிரான ஒரு வலுவான சாட்சியமாகும். ஆனால் அவன் தனது குற்றத்தை மட்டுமல்லாது அவனது மற்ற உடன் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் செய்த குற்றத்தைப் பற்றியும் கூறி குற்ற ஏற்புரை வழங்கினால், அது உடன் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரை (Confession of a co-accused) எனப்படும். தற்பொழுது, இவ்வாறு வழங்கப் படும் குற்ற ஏற்புரை மற்ற குற்ற ஏற்புரை வழங்காத குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக எந்த அளவிற்கு சான்றியல் மதிப்பு கொண்டுள்ளது என்பதே இங்கு எழும் வினாவாகும். இதற்கு வழிகாட்டும் முகமாக இந்திய சாட்சிய சட்டத்தின் **30வது பிரிவானது,** மேற்கண்டவாறு வழங்கப்படும் குற்ற ஏற்புரை இதர உடன் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகவும் தொடர்புடையதாகும் என்று கூறுகிறது.

பிரிவு 30 கூறுவதாவது:

அதாவது, பிரிவு 30-ன்படி, ஒரு குற்றவழக்கில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் மீது ஒரே குற்றத்திற்காகவும், கூட்டாகவும் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் பொழுது குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் தற்ற ஏற்புரை வழங்கினால், அது, அதை வழங்கியவரையும், குற்றம் நடக்கும்பொழுது அவருடன் இருந்த உடன் குற்றஞ் சாட்டப் பட்டவர்களையும் கட்டுப்படுத்தும்.

பிரிவு 30ன் முக்கிய கூறுகள் (Ingredients):

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கூட்டாக விசாரிக்கும் பொழுது;
2. ஒரே குற்றத்திற்காக அவர்கள் விசாரிக்கப்படும் பொழுது;
3. அவர்களில் ஒருவர் கொடுக்கும் குற்ற ஏற்புரை அவரையும் மற்றவர்களையும் பாதிக்கும் பொழுது;
4. அந்த மாதிரியான குற்ற ஏற்புரை விசாரணையில் உறுதிப்படுத்தப்படும் பொழுது;

அக்குற்ற ஏற்புரையை அதைக் கொடுப்பவருக்கு பாதகமாக எவ்வாறு நீதிமன்றம் கவனத்தில் கொண்டதோ அவ்வாறே அவருடன் இருந்த ஏனைய உடன் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாகவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். (may take into consideration).

உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரையின் சான்றியல் மதிப்பு (Evidentiary value of the Confession of Co-accused):

மேற்கூறிய பிரிவு 30ன்படி, நீதிமன்றம் உடன் குற்றஞ் சாட்டப் பட்டவரின் குற்ற ஏற்புரையை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமலும் இருக்கலாம். ஆங்கில வார்த்தையான 'may' என்பது, இங்கு நீதிமன்றத்திற்

குரிய தன்விருப்புரிமை அதிகாரத்தைக் (Discretionary Power) குறிப்பிடுகின்றது. முக்கிய வழக்கு வருமாறு:

Kashmira Singh v. State of M.P.[1]

இவ்வழக்கில் உடன் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரையை மற்ற சாட்சியங்களுக்கு உதவிகரமாக உள்ள ஓர் சாட்சியமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. வழக்கின் பொருண்மைகள் வருமாறு.

மேற்படி வழக்கில் காஷ்மீராசிங் அரிசி கொள்முதல் செய்யும் துணை ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார். அவரும் மற்றொரு ஆய்வாளரும் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட அரிசி ஆலையில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் அரிசியை மெருகூட்டினர். இதனை உணவு அதிகாரி, துணை ஆணையருக்கு அறிவித்து அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தார். இதனால் அவர்கள் இருவரும் உணவு அதிகாரிக்குச் சரியான பாடம் புகட்டப் போவதாக இரண்டு மூன்று முறை கூறியதைச் சிலர் கேட்டிருந்தனர். 6 மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், உணவு அதிகாரியின் மகனின் பிணம் பையில் கட்டப்பட்டு கிணறு ஒன்றில் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. காஷ்மீராசிங், அவனது சகோதரன் குருதயாள், அவனது மச்சினன் பிரித்பால், குருபச்சன் ஆகியோரின் மீது சதி மற்றும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. குருபச்சன் தன்னையும் காஷ்மீரா சிங்கையும் இணைத்து குற்ற ஏற்புரை வழங்கினார். இவ்வழக்கில் குருபச்சனுக்கும், காஷ்மீராசிங்கிற்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. குருபச்சன் தூக்கிலிடப்பட்டார். காஷ்மீராசிங் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொண்டார். உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் காஷ்மீரா சிங்கிற்கு எதிராக சாட்சியங்கள் அதிகம் கிடையாது என்றும், உறுதியூட்டப்படாத உடன் குற்றஞ்சாட்டப்பட்ட குருபச்சனின் குற்ற ஏற்புரையை ஆதாரமாகக் கொண்டு, ஒரு மனிதனின் சுதந்திரமும், வாழ்வும், உயிரும், நியாயமற்ற முறையில் பறிக்கப்படுதல் கூடாது என்று கூறியது.

Bhulani Sahu v. The King[2]

முன்கண்ட காஷ்மீரா வழக்கிற்கு முன்பே பிரிவு கவுன்சிலானது, நீதிமன்றம் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரையை வைத்து மட்டுமே தீர்ப்புரை வழங்கக்கூடாது என்றும், தண்டனை அளிக்க அது மட்டுமே அடிப்படையில்லை என்றும் வழக்கின் ஏனைய சாட்சியங்களை உறுதிப்படுத்த மட்டுமே உடன் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்புரையை பயன்படுத்த வேண்டுமென்றும் தீர்ப்பு கூறியது.

1. A.I.R. 1952 S.C. 159
2. A.I.R. 1949 P.C. 257

வேறுபாடுகள்:

உடன் குற்றஞ் சாட்டப் பட்டவரின் குற்ற ஏற்புரை (Confession of Co-accused)	உடன் குற்றவாளியின் சாட்சியம் (Testimony of an Accomplice)
1. இது நீதிமன்றத்திற்குள்ளும் அல்லது வெளியேயும் கொடுக்கப்படலாம்.	இது நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில் கொடுக்கப்படுவது.
2. நீதிமன்றத்திற்கு வெளியில் கொடுக்கப்படும் பொழுது சத்தியப் பிரமாணம் செய்விக்கப்படுவதில்லை. அதாவது, "சத்தியமாக நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை" என்று பிரமாணம் செய்யப்படுவதில்லை.	இங்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கப்படுவதால், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்படுகிறது.
3. இதைக் குறுக்கு விசாரணை மூலமாகச் சோதிக்க முடியாது.	இதைக் குறுக்கு விசாரணை மூலமாகச் சோதிக்க முடியும்.
4. இதை ஒரு சாட்சியமாக நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், இது சாட்சியமொருவரின் வாக்குமூலமல்லாததால் சாட்சியத்தின் வரையறைக்குள் வருவதில்லை.	இது நீதிமன்றத்தில் சாட்சியொருவரால் கொடுக்கப்படும் சட்டமுறைச் சாட்சியமாகும். எனவே இதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
5. இது முறைப்படியான சாட்சியமாகாததால், இதனடிப்படையில் ஒரு குற்றத் தீர்ப்பை பகர முடியாது. இதனை மட்டுமே நம்பி அளிக்கப்படும் குற்றத் தீர்ப்பு முழுவதும் சட்ட முரணானதாகும்.	இது குற்றத் தீர்ப்புக்கு அடிப்படையாக இருக்க முடியும். உறுதியூட்டப்படாத உடன் குற்றவாளியின் சாட்சியத்தின் அடிப்படையில் குற்றத் தீர்ப்புரைப்பது சட்ட முரணானதன்று என பிரிவு 133 திட்டவட்டமாகக் கூறுகிறது.
6. வழக்கிலுள்ள பிற தனித்த சாட்சியத்தினை உறுதியூட்ட மட்டுமே இது பயன்படுத்தப் படுகிறது. எனவே இதனை	இது முதன்மையான சாட்சியமாகும். இதனை உறுதியூட்ட பிற சாட்சியங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

முதன்மையான (main) சாட்சியம் எனக் கூற முடியாது. பிற சாட்சியங்களை அடிப் படையாகக் கொண்டே நீதிமன்றம் தீர்ப்பு எழுதுகிறது.	
7. இது குறித்து பிரிவு 30 கூறுகிறது.	இது குறித்து பிரிவு 133 கூறுகிறது.

43. Retracted Confession - Write short notes. (பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரை - சிறு குறிப்பு வரைக.)

பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரையை, மாற்றப்பட்ட குற்ற ஏற்புரை என்றும் வழங்கலாம்.

இதுபற்றி இந்திய சாட்சிய சட்டம் எதுவும் கூறவில்லை. குற்ற ஏற்புரை வழங்கப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், அக்குற்ற ஏற்புரையை அதை வழங்கியே குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மறுக்கலாம் அல்லது தான் தவறுதலாக குற்ற ஏற்புரை வழங்கி விட்டதாக கூறலாம். இவ்வாறு மறுத்துக் கூறுவதே பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரை எனப்படும்.

இக்குற்ற ஏற்புரை ஏற்கனவே வழங்கப்பட்ட குற்ற ஏற்புரையின் சாட்சிய மதிப்பைக் குறைக்காது. ஏனெனில் குற்றஞ் சாட்டப்பட்டவர் தூண்டுதல் மூலமோ, அச்சுறுத்தல் மூலமோ அல்லது வாக்குறுதி மூலமோ அல்லாமல் தானாகவே குற்ற ஏற்புரையை வழங்கிய பின்னர் அதை மறுத்தால், நீதிமன்றம் அதை ஏற்காமல் அக்குற்றவாளிக்குத் தண்டனை வழங்க முடியும்.

ஆனால் பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரையை உறுதிப்படுத்தும் வண்ணம் வேறு தனிச் சாட்சியங்கள் ஏதேனும் இருப்பின், நீதிமன்றம் அவற்றைக் கவனத்தில் கொண்டு பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரையை ஏற்றுக் கொள்ளலாம் என **Shri Shail Nagesh Pare v. State of Maharashtra**[1] வழக்கில் கூறப்பட்டது. ஏற்கனவே வழங்கப்பட்ட குற்ற ஏற்புரை தன்னிச்சையாக அல்லாமல் கட்டாயத்தின் பேரில் வழங்கப் பட்டிருக்கும் எனக்கூறி, அதனை நிரூபித்து, பிறகு மீண்டும் குற்ற ஏற்புரையை மாற்றிக் கொடுத்தால், அதை நீதிமன்றம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஆனால் அவ்வாறு மாற்றப்பட்ட குற்ற ஏற்புரை இம்முறை தன்னிச்சையாக (Voluntary) வழங்கப்பட்டதா என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று **Pyare Lal Bhargava v. State of Rajasthan**[2] எனும் வழக்கில் கூறப்பட்டது.

1. (1985) 2 S.C.C. 341
2. A.I.R. 1963 SC 1094

State of U.P. v. Boola Singh[1] என்ற வழக்கில், பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரையானது, பிற தனிச் சூழ்நிலைகளினால், போதுமான அளவிற்கு உறுதியூட்டப்பட்டால்தான் அதை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும், அது குற்ற ஏற்புரையில் கூறப்பட்டுள்ள முக்கியமான சம்பவங்களைப் பொறுத்த வரையிலான பொதுவான உறுதியூட்டலாக (General Corroboration) இருந்தால் போதுமானது என உச்ச நீதிமன்றம் கூறியது.

State of Maharashtra v. Madhukar Keshav Maity[2] என்ற வழக்கில் பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரையில் கூறப்பட்ட பல்வேறு இடங்களிலி ருந்து கடத்தப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டதால் (Discovery), அக்குற்ற ஏற்புரையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

44. What is extra- judicial Confession? When is it admissible in evidence? (நீதிமன்றத்திற்குப் புறத்தேயான குற்ற ஏற்புரை என்றால் என்ன? அது எப்பொழுது சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது?)

(அல்லது)

Extra - Judicial Confession - Write in short notes. (நீதிமன்றத்திற்கு வெளியே கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

குற்ற ஏற்புரையில் இருவகை உண்டு என முன்னரே கண்டோம். அவை 1. நீதிமன்ற குற்ற ஏற்புரை 2. நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை.

1. நீதிமன்ற குற்ற ஏற்புரை (Judicial Confession):

குற்ற ஏற்புரை ஒன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது நீதிமன்றத்திலோ அளிக்கப்பட்டால், அது நீதிமுறைக் குற்ற ஏற்புரை எனப்படும்.

Majhi v. State of Orissa[3] என்ற வழக்கில் "பொருத்தமான மனநிலையில் தன்னிச்சையாக ஒரு நபரால், ஒரு தீர்ப்பாயத்தின் முன்பு அளிக்கப்படும் குற்ற ஒப்புதலுரையே" நீதிமன்ற குற்ற ஏற்புரை எனப் பொருள்படும் எனக் கூறப்பட்டது.

குற்றவியல் வழக்கு நடைமுறையில், வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பாக, குற்றஞ் சாட்டப்பட்டவரிடம் நீதிபதியானவர்,

1. A.I.R. S.C. 1770
2. A.I.R. 1980 S.C. 1224
3. A.I.R. 1951 Orissa 168 (F.B.)

"நீ குற்றத்தை ஒத்துக் கொள்கிறாயா?" **(Do you plead guilty?)** என வினவுவார். குற்றஞ் சாட்டப்பட்டவர் "குற்றத்தை ஒத்துக் கொள்கிறேன்" எனக் கூறினால், அது குற்ற ஏற்புரை எனப்படும். நுணுகிக் கூறுவதெனில், அது நீதிமன்ற குற்ற ஏற்புரையாகும். (Judicial Confession). இது அக்குற்றஞ் சாட்டப்பட்டவருக்கெதிரான மிக வலுவான சாட்சியமாகும். இதன் அடிப்படையில் அவரை நீதிபதி தண்டிக்கலாம்.

2. நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை (Extra Judicial Confession):

குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லாத நபரிடமோ அல்லது நீதிமன்றத்திற்கு வெளியிலோ கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை, நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை எனப்படும். காவல் அதிகாரியிடம் கூறப்படும் குற்ற ஏற்புரையும் மேற்கண்ட வகையைச் சார்ந்ததே.

Majhi v. State of Orissa[1] என்ற வழக்கில் (முன் சென்ற பத்தியில் கண்ட வழக்கு), "குற்றமொன்றிற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர், நீதிபதி அல்லது மாஜிஸ்ட்ரேட் அல்லாத பிற நபர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது எவ்வித வலுக்கட்டாயமுமில்லாமல் தன்னிச்சையாக அவர்களிடம் அளிக்கும் குற்ற ஏற்புரையே, நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை எனப் பொருள்படும்" எனப்பட்டது.

State of Punjab v. Bhajan Singh[2] என்ற வழக்கில், நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரையானது மிக வலுக்குறைந்த சாட்சியமாகும் (Very weak piece of evidence) எனப்பட்டது.

நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரையை எப்பொழுது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளலாம்?

Gaya Prasad v. State[3] என்ற வழக்கில் நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை ஒன்றை சாட்சியமாக அனுமதிப்பதற்கு முன்பு பின்வரும் மூன்று அம்சங்களை நீதிமன்றமானது கருத்தில் கொள்ள வேண்டும் எனப்பட்டது. அவை,

"'நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரையை மிகக் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் அணுக வேண்டும்; மேலும் அக்குற்ற ஏற்புரை வழங்கியவரை அதனைக் கொண்டு தண்டிப்பதாக இருப்பின், அரசு தரப்பானது பின்வருவனவற்றை நிரூபிக்க வேண்டும்.

i) முதலில் அப்படிப்பட்டதொரு குற்ற ஏற்புரையானது செய்யப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டும்,

1. AIR 1951 Orissa 168 (F.B.)
2. AIR 1975 SC 258
3. AIR 1957 All. 459

ii) இரண்டாவதாக அது தன்னிச்சையாகவும் யாருடைய தூண்டுதலுமில்லாமல் கொடுக்கப்பட்டது;

iii) மூன்றாவதாக, அது மெய்யானது என்பதை நிரூபிக்க வேண்டும்

மேலும் அக்குற்ற ஏற்புரையை தனிப்பட்ட பிற சாட்சியங்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (must be corroborated by independent evidence).

State of U.P. v. M.K. Anthony[1] என்ற வழக்கில், தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளை தாம்தான் கொன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டவர், தமது நண்பரிடம் குற்ற ஏற்புரை அளித்தார். இது நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏனெனில் அந்த நண்பரே, தம்மிடம் வழங்கப்பட்ட குற்ற ஏற்புரையை உறுதியூட்டும் (Corroboration) வண்ணம் சாட்சியளித்தார்.

45. Distinguish between Admission and Confession.

வேறுபடுத்துக ஒத்தேற்புரை மற்றும் குற்ற ஏற்புரை.

ஒத்தேற்புரை (Admission)	குற்ற ஏற்புரை (Confession)
1. சாட்சிய சட்டத்தின் 17 முதல் 31 வரையிலான பிரிவுகள் ஒத்தேற்புரையைப் பற்றிக் கூறுகின்றன.	சாட்சிய சட்டத்தின் 24 முதல் 30 வரையிலான பிரிவுகள் குற்ற ஏற்புரையைப் பற்றிக் கூறுகின்றன.
2. ஒத்தேற்புரையை ஒரு மரத்திற்கு ஒப்பிடலாம். (Admission is a genus.)	குற்ற ஏற்புரையை அம்மரத்தில் உள்ள ஒரு கிளைக்கு ஒப்பிடலாம் (Confession is a species of Admission).
3 'ஒத்தேற்புரை' என்பது ஒரு வழக்கில் உள்ள தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மை பற்றிய ஊகம் எதனையும் குறிப்பினால் உணர்த்தக்கூடிய உரையாகும்.	'குற்ற ஏற்புரை' என்பது குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தாம் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் கூறும் உரையாகும்.
4. ஒத்தேற்புரையானது, பெரும்பாலும் உரிமையியல் வழக்குகளில் பயன்படுத்தப்	குற்ற ஏற்புரையானது, குற்றவியல் வழக்குகளில் மட்டுமே பயன் படுத்தப்படுகிறது.

1.(1985) 1 S.C.C. 505

பட்டாலும் சில சமயங்களில் குற்றவியல் வழங்குகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.	
5. ஒத்தேற்புரையானது அறுதியான சான்றுறுதியாகாது. (not a conclusive proof)	இங்கு குற்றஞ் சாட்டப்பட்டவர் தம்மிச்சையாக முன்வந்து குற்ற ஏற்புரை கொடுத்தால் அது ஒரு அறுதியான சான்றுறுதியாகும்.
6. ஒத்தேற்புரையானது பொதுவாக அதைக் கொடுப்பவருக்கு பாதகமாக அமையும். சில சமயங்களில் பிரிவு 21-ன்படி அதைக் கொடுப்பவருக்கு சாதகமாகவும் அமையும்.	குற்ற ஏற்புரையானது எப்பொழுதும் அதைக் கொடுப்பவருக்கு எதிராகவே அமையும்.
7. ஒரு வழக்கிலுள்ள பல பிரதிவாதிகளில் ஒருவர் கொடுக்கும் ஒத்தேற்புரையானது, மற்ற பிரதிவாதிகளுக்கு எதிரான ஒரு சாட்சியமாக அமையாது.	இங்கு பிரிவு 30ன்படி, கூட்டாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் செய்யும் குற்ற ஏற்புரையானது மற்ற உடன் குற்றவாளிகளுக்கெதிரான ஒரு சாட்சியமாக பயன்படுத்தப்படும்.
8. ஒத்தேற்புரையானது தானாகவும் கொடுக்கப்படலாம் அல்லது வலுக்கட்டாயத்தின் பேரிலும் கொடுக்கப்படலாம். இப்படித்தான் கொடுக்கப்பட வேண்டும் என கடுமையான வரையறை கிடையாது.	குற்ற ஏற்புரையானது, யாருடைய தூண்டுதலும் வற்புறுத்தலும் இல்லாமல் தம்மிச்சையாக கொடுக்கப்பட வேண்டும். இதற்கு முரணாக கொடுக்கப்பட்டால், அக்குற்ற ஏற்புரை அனுமதிக்கப்டத் தக்கதல்ல.
9. ஒத்தேற்புரையானது முன்னரே கண்டபடி, தீர்வுதரு அல்லது தீர்வுதவு பொருண்மை பற்றிய ஊகம் எதனையும் குறிப்பினால் உணர்த்தக்கூடிய உரையாகும். எனவே இதனை நேரடியான ஒத்துக் கொள்ளல் எனக்கூற முடியாது. ஆகவே, இதனை வலுவற்ற சாட்சியமாகவே கொள்ள வேண்டும்.	குற்ற ஏற்புரையானது, குற்றஞ் சாட்டப்பட்டவரால் அவர் செய்த குற்றத்தைப் பற்றி அவர் நேரடியாக ஒத்துக் கொள்ளுதலாகும். எனவே, வலுவான சாட்சியமாகும்.
10. ஒரு வழக்கில் உள்ள தரப்பினரின் முகவர் அல்லது மேலாளர்	குற்ற ஏற்புரையை குற்றஞ் சாட்டப்பட்டவர் மட்டுமே

போன்றவர்களால் ஒத்தேற்புரையானது வழங்கப்படலாம். அவ்வரை முதல்வரையும் கட்டுப்படுத்தும்

11. ஒத்தேற்புரைகள் அனைத்தும் குற்ற ஏற்புரைகள் ஆகாது. **(All Admissions are not Confessions)**

கொடுக்க வேண்டும். அவருடைய முகவர் அல்லது மேலாளர் போன்றவர்களால் அது கொடுக்கப்பட முடியாது.

குற்ற ஏற்புரைகள் அனைத்தும் ஒத்தேற்புரைகளே **(All Confessions are Admissions).**

- o -

22 சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் [Statements by Persons who cannot be called as witnesses]

சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் - எப்பொழுது தொடர்புடையவை?

46. Summarise the Provisions of the Evidence Act relating to the statements by persons who cannot be called as witnesses. (சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகளைப் பற்றிய சாட்சிய சட்டத்தின் பிரிவுகளை சுருங்கக் கூறுக.)

(அல்லது)

"Evidence may be given of statements made by a person who is not actually called before the Court." Explain with illustrations. ("நீதிமன்றத்தின் முன்னர் அழைக்கப்பட முடியாத நபர்கள் செய்யும் உரைகளுக்கு சாட்சியம் அளிக்கப்படலாம்". எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக.)

(அல்லது)

State the cases in which statements of persons who cannot be called as witness are relevant. (சாட்சியாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் தொடர்புற்றவையாக உள்ள சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the relevancy of the statements made by persons who cannot be called as witnesses to the Court. (நீதிமன்றத்திற்கு சாட்சிகளாக அழைக்க முடியாதவர்களின் வாக்குமூலங்களின் தொடர்பைப் பற்றி விளக்குக.)

முன்னுரை:

சாட்சிகளாக நீதிமன்றத்தின் முன்னர் அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் (வாக்குமூலங்கள்) எப்பொழுது தொடர்புடைய தாகிறது என்பதைப்பற்றி சாட்சிய சட்டத்தின் 32வது பிரிவு கூறுகிறது.

சாதாரணமாக, சாட்சியாக நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு, சாட்சிக் கூண்டேறி, நேரடியாக சாட்சி சொல்பவர்களின் உரைகளே தொடர்புடையதாகும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படும். எனவேதான் கேள்விநிலைச் சாட்சியம் (hearsay evidence) ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. யாருடைய கூற்று நம்புவதற்குரியதாக கருதப்படுகிறதோ அவரை

முறைப்படி விசாரணை மற்றும் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம், வழக்குப் பொருண்மைகளின் சரிநுட்பம் மற்றும் நம்பத்தகு தன்மை குறித்து வாய்மொழியான சாட்சியங்களைப் பெறும் பொருட்டு அவரை நீதிமன்றத்திற்கு நேரடியாக அழைத்தல் வேண்டும். இதைத்தான் 60வது பிரிவானது, வாய்மொழிச் சாட்சியமானது நேரடியாக இருத்தல் வேண்டும் (Oral evidence must be direct) என மறைமுகமாக கூறுகிறது. எனினும் சில விலக்கான சந்தர்ப்பங்களில், வாய்மொழி சாட்சியமானது நேரடியாக இல்லாமலும் இருக்கலாம். (அதாவது சாட்சிகளை நீதிமன்றத்திற்கு அழைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கலாம்.)

அவ்விதிவிலக்கான (exceptions) சந்தர்ப்பங்களை பிரிவு 32 பின்வருமாறு கூறுகின்றது. இவற்றை **"கேள்விநிலைச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதல்ல"** எனும் பொது விதிக்குள்ளான விதிவிலக்கு களாகவும் கொள்ளலாம்.

பிரிவு 32 கூறுவதாவது:

பிரிவு 32ன்படி, மரணம் அடைந்தவர், கண்டுபிடிக்க முடியாதவர், சாட்சியம் கொடுக்கும் திறனற்றவர் அல்லது அளவுக்கு மிஞ்சிய செலவு செய்தாலன்றி அல்லது அளவுக்கு மீறிய கால விரயம் செய்தாலன்றிக் கிடைப்பதற்கு அரியவர்கள் ஆகியோர் தீர்வதவு பொருண்மைகள் குறித்து எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ செய்த உரைகள் பின்வரும் சூழ்நிலைகளில் தொடர்புடையவையாகும்.

1. இறப்பதற்கான காரணம் (relates to cause of death) [பிரிவு 32 (1)]:

மரணத்தின் வாயிலில் உள்ளவர், தன் சாவுக்கு காரணம் அல்லது எந்த விவகாரம் தன் சாவுக்கு காரணமாக அமைந்தது என்பதனை வெளியிடுகின்றார் என வைத்துக் கொள்வோம். இந்நிலையில், இறந்த மனிதரின் இறப்புக்கு காரணம் என்ன என்ற வினா எழும்பொழுது, அவர் இறுதியாக கூறிய அவ்வுரைகள் தொடர்புடையவையாகும்.

உதாரணமாக, A என்பவர் B என்பவரைக் கொலை செய்தாரா என்ற கேள்வியில், இறப்பதற்கு முன் தன்னுடைய சாவிற்கான காரணம் குறித்து B கூறிய உரைகள் தொடர்புடையவையாகும்.

2. அலுவல் நடப்பு முறை தொடர்பாக (made in course of business) [பிரிவு 32 (2)]:

ஒரு நபர் தன்னுடைய அலுவல் நடப்பு முறையின்பொழுது, அதற்கெனவே வைத்திருக்கும் பதிவேடுகளில் பதியும் போது அவை தொடர்புடையவையாகின்றன.

உதாரணமாக, (i) A என்பவரின் பிறந்த தேதி என்ன என்பது கேள்வி. அலுவல் நடப்பு முறையில் ஒழுங்காக வைத்து வரப்பட்ட, இறந்துபோன

அறுவை மருத்துவர் ஒருவருடைய நாட்குறிப்பில் ஒரு குறிப்பிட்ட நாளன்று அவர் Aயின் தாய்க்கு மருத்தவம் பார்த்ததாகவும் ஓர் ஆண் குழந்தையைப் பெறும்போது தாம் அவருக்குப் பிரசவம் பார்த்ததாகவும் குறிப்பிடுகின்ற ஒரு பதிவு தொடர்புடையதாகும்.

ii) ஒரு குறிப்பிட்ட நாளில் A என்பவர் கல்கத்தாவில் இருந்தாரா என்பது கேள்வி. அலுவல் நடப்பு முறையில் ஒழுங்காக வைத்து வரப்பட்ட, இறந்து போன ஒரு ஸொலிஸிட்டரின் (Solicitor) நாட்குறிப்பில் (diary) அந்த ஸொலிஸிட்டர் Aவுடன் ஒரு குறிப்பிட்ட அலுவல் பற்றி கலந்தாலோசனை செய்வதற்காக கல்கத்தாவிலுள்ள குறிப்பிட்ட இடமொன்றில் குறிப்பிட்ட நாளில் Aவுடன் இருந்தார் என்ற உரை தொடர்புடையதாகும்.

iii) ஒரு குறிப்பிட்ட நாளில் பம்பாய்த் துறைமுகத்திலிருந்து கப்பலொன்று புறப்பட்டதா என்பது கேள்வி. அந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்திய வணிக நிறுவனத்தின் உறுப்பினராக இருந்து இறந்துபோன ஒருவர், லண்டனில் உள்ள எந்த வாடிக்கையாளர்களுக்கு சரக்கு அனுப்பி வைக்கப்பட்டதோ, அந்த வாடிக்கையாளர்களுக்கு, பம்பாய்த் துறைமுகத்திலிருந்து கப்பல் ஒரு குறித்த தினத்தில் புறப்பட்டது என்று எழுதிய கடிதம் ஒன்று தொடர்புடையதாகும்.

3. எழுதிக் கொடுத்தவரின் நலனிற்கு விரோதமாக செய்யப்படும் உரை (Statements against interest of maker) [பிரிவு 32 (3)]:

செய்யப்படும் உரையானது அதைச் செய்கின்றவரின் பண சம்பந்தமான நலனிற்கு அல்லது உடைமை சம்பந்தமான நலனிற்கு விரோதமானதாக இருக்கும்போது அல்லது அவ்வுரை உண்மையாயிருப்பின் அது அவரை ஒரு குற்ற வழக்கிற்கோ அல்லது இழப்பீட்டிற்கான உரிமையியல் வழக்கிற்கோ ஆளாக்கும் அல்லது ஆளாக்கியிருக்கும் எனும் பொழுது அவ்வுரை தொடர்புடையதாகும்.

அதாவது ஒருவர் கூறிய அல்லது எழுதிய உரை அவரது நலனிற்கே விரோதமாக இருக்கும் பொழுது, அது தொடர்புடையதாகும்.

உதாரணமாக, குறிப்பிட்ட நிலத்திற்குரிய வாடகை 'A' என்பவருக்குச் செலுத்தப்பட்டதா என்பது கேள்வி. தாம் 'A'யின் கணக்கில் வாடகையைப் பெற்றுக் கொண்டுவிட்டதாகவும், அதை 'A'யின் உத்திரவை எதிர்பார்த்து வைத்திருந்ததாகவும், மேற்படி 'A'க்கு மரணமடைந்த அவருடைய முகவர் எழுதிய கடிதம் தொடர்புடையதாகும். இதில் மேற்படி 'A'க்கு விரோதமாக அவ்வுரை உள்ளது. (முகவர் செய்தாலும் முதல்வர் செய்ததாகவே கருதப்படும்). அக்கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், 'A'க்கு வாடகை செலுத்தப்பட்டுவிட்டது என்பது நிரூபணமாகி விடும்.

4. பொது உரிமை, வழக்கம் அல்லது பொது நலனிற்குரிய விஷயங்கள்

பற்றிக் கருத்து தெரிவிக்கும் போது (gives opinion as to public right or custom or matters of general interest) [பிரிவு 32 (4)]:

இறந்துபோனவரின் அல்லது சாட்சியாக அழைக்கப்பட முடியாதவரின் பொது உரிமை, வழக்கம் அல்லது பொது நலனிற்குரிய விஷயங்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் வண்ணம் இருப்பின், அது தொடர்புடையதாகும். ஆனால் அவ்வுரை மேற்படி பொது உரிமை அல்லது வழக்கம் ஆகியவை சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் ஏதும் தோன்றுவதற்கு முன்பாக செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

உதாரணமாக, ஒரு வழக்கில் பாதை பொதுவானதா இல்லையா என்ற கேள்வி எழுந்த பொழுது, அது குறித்து இறந்துபோன கிராமத்து தலைவர் செய்த கூற்று தொடர்புடையதாகும்.

5. உறவு முறை சம்பந்தமாக (relates to existence of relationship) [பிரிவு 32 (5)]:

சாட்சியாக அழைக்கப்பட முடியாதவரின் கூற்று, திருமணம், தத்தெடுப்பு அல்லது இரத்த சம்பந்தப்பட்ட உறவை நிர்ணயிக்கத்தக்கதாக இருக்கும்போது அது தொடர்புடையதாகும். ஆனால் அவ்வுறவை அறிந்து கொள்வதற்கு அவ்வுரையைச் செய்கின்றவருக்கு விசேஷ வாய்ப்பு இருந்து, அது குறித்து தகராறு ஏதும் எழுப்பப்படுவதற்கு முன்னமேயே அந்த உரை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

உதாரணமாக, 'A' என்பவர் தமமுடைய மகன்தான் என்று இறந்துபோன 'B' என்னும் தந்தை செய்த உரை தொடர்புடையதாகும்.

6. குடும்ப காரியங்கள் தொடர்பாக ஒரு உயிலோ அல்லது ஆவணத்திலோ செய்யப்பட்டுள்ள கூற்று (made in will or deed relating to family affairs) [பிரிவு 32 (6)]:

அக்கூற்றானது திருமணம், தத்தெடுப்பு அல்லது இரத்த சம்பந்தத்தால் இறந்தவர்களுக்கிடையே நிலவிய உறவை நிலைநாட்டுவதாக இருக்கும்போது இறந்தவர்களின் குடும்ப காரியங்கள் பற்றிய உயிலில் அல்லது ஆவணத்தில் செய்யப்பட்ட போதும் அல்லது குடும்ப வம்சாவழியில் (pedigree), கல்லறைக் கல்லில் (tombstone), குடும்ப உருவப்படத்தில் (family portrait) அல்லது வழக்கமாக எழுதப்படும் வேறு பொருளில் அவ்வுரை செய்யப்பட்டிருந்தாலும், தொடர்புடையதாகும். ஆனால் மேற்கண்ட குடும்ப காரியங்கள் தொடர்பாக தகராறு ஏதும் எழுவதற்கு முன்பாக அவ்வுரை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

உதாரணமாக, A என்பவரும் B என்பவரும் திருமணம் ஆனவர்களா, எப்பொழுது என்பது கேள்வி. Bயின் இறந்துபோன தந்தையாகிய C என்பவர் தம்முடைய மகளுக்கும்(B), Aக்கும் ஒரு குறிப்பிட்ட

தேதியில் திருமணம் நடந்தது என்று ஒரு குறிப்பேட்டில் (குடும்ப காரியங்கள் பற்றிய ஆவணம்) செய்த ஒரு பதிவு தொடர்புடையதாகும்.

7. பிரிவு 13(a) ல் கூறப்பட்ட நடவடிக்கைக்கு தொடர்பான ஆவணத்தில் (document relating to transaction mentioned in sections 13(a) [பிரிவு 32 (7)]:

அந்த உரையானது பிரிவு 13 (a) ல் கூறப்பட்டுள்ள நடவடிக்கை எதற்கேனும் சம்பந்தப்பட்ட ஆவணம், உயில் அல்லது வேறு பத்திரம் எதிலேனும் அடங்கியிருக்கும் போது.

8. பல்வேறு நபர்களின் உணர்ச்சி வெளிப்பாடு (Feelings of several persons) [பிரிவு 32 (8)]:

அந்த உரையானது பற்பல ஆட்களால் செய்யப்பட்டு, பிரச்சனையிலுள்ள விஷயத்திற்கு தொடர்பான அவர்களுடைய உணர்ச்சிகளை அல்லது மனதில் பட்டவற்றை அது வெளியிட்ட போது.

உதாரணமாக, ஒரு கடையின் ஜன்னலில் பலர் காண வைக்கப்பட்ட வண்ணந்தீட்டிய ஒரு கேலிச் சித்திரம் மூலமாக வெளியிடப்பட்ட எழுத்து வழி அவதூறு ஒன்றிற்காக A என்பவர் B என்பவர் மீது வழக்கிடுகிறார். கேலிச்சித்திரத்திற்கும் அதன் மூலம் அவதூறுக்கு இலக்கான பாத்திரத்திற்கும் உருவ ஒற்றுமை இருக்கிறதா என்பது கேள்வி. பார்வையாளர் கூட்டம் இந்த அம்சங்களைப் பற்றிச் சொல்லுகிற குறிப்புரைகள் மெய்பிக்கப்படலாம்.

47. State the rules of Evidence relating to the relevancy of the statements made in the course of business. (அலுவல் நடப்பு முறையின் பொழுது செய்யப்பட்ட வாக்குமூலங்களின் தொடர்புடைமை குறித்து சான்றுச் சட்ட விதிகளைக் கூறுக.)

(அல்லது)

State the rules of evidnece relating to the proof of statements made in the course of business. (வியாபாரத்தின்போது செய்யப்பட்ட வாக்குமூலங்களை நிருபணம் செய்வதற்கான சான்றுச் சட்ட விதிகளைக் கூறுக.)

[முந்திய வினாவில் இரண்டாவது எண் கொண்ட பத்தியைக் காணவும்.]

மரண வாக்குமூலம் (Dying Declaration) - எப்பொழுது தொடர்புடையது?

48. Define dying declaration. Explain the rule regarding dying declaration. (மரண வாக்குமூலத்தை வரையறை செய்க. மரண வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்வது குறித்த விதியினை விளக்கிக் கூறவும்.)

(அல்லது)

State the essentials of a valid dying declaration. Discuss its evidentiary value. (ஒரு செல்லத்தகு மரண வாக்குமூலத்தின் முக்கிய கூறுகளைக் கூறுக. அதன் சான்று மதிப்பினை ஆராய்க.)

(அல்லது)

What is dying declaration? Mention the grounds on which dying declaration are admitted in evidence. If a person making a dying declaration happens to live, can the declaration be admitted in Evidence? (மரண வாக்குமூலம் என்றால் என்ன? சாட்சியத்தில் மரண வாக்குமூலங்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரணங்களைக் குறிப்பிடுக. மரண வாக்குமூலம் கொடுப்பவர் பிழைப்பின், வாக்குமூலம் சாட்சியத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா?)

(அல்லது)

What is a dying declaration? Under what circumstances is it relevant? (மரண வாக்குமூலம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் அது தீர்வினையாக உள்ளது?)

(அல்லது)

What is a dying declaration? What are the conditions subject to which it is admitted in evidence? (மரண வாக்குமூலம் என்றால் என்ன? எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அது சாட்சியத்தில் ஏற்கப்படலாம்?)

(அல்லது)

State the law in England and under the Indian Evidence Act regarding admissibility of dying declarations. (மரண வாக்குமூலங்களின் ஏற்புத்தன்மை பற்றி இந்தியச் சாட்சிய சட்டத்திலும் இங்கிலாந்தில் உள்ள சட்டத்திலும் உள்ளவற்றைக் கூறுக.)

(அல்லது)

Dying declaration - Write short notes. (மரண வாக்குமூலம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What is 'Dying Declaration?' Explain the conditions under which dying declaration are admissible? (மரண வாக்குமூலம் என்றால் என்ன? எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் மரண வாக்குமூலங்கள் ஏற்கப்படுகின்றன என்பதனை விவரிக்க.)

முன்னுரை:

மரணத்தின் வாசலில் இருக்கும் மனிதன் தன்னுடைய மரணத்திற்கு காரணம் என்ன அல்லது எந்த விவகாரம் தன்னுடைய மரணத்திற்கு காரணமாக அமைந்தது என்பது பற்றி கூறும் வாக்கு மூலமே (கூற்று)

மரண வாக்குமூலம் எனப்படுகிறது. இறந்தவரை சாட்சியாக நேரில் நீதிமன்றத்தில் அழைக்கமுடியாது. எனவே அவரது மரண வாக்குமூலமானது **பிரிவு 32 (1)ன்படி** ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது குறித்து சென்ற வினாவிலேயே 1வது எண் கொண்ட பத்தியில் கண்டோம். இனி அதனை விரிவாகப் பின்வருமாறு காண்போம்.

மரண வாக்குமூலம் - வரையறை:

இறக்கும் தருவாயில் உள்ள ஒருவர், தன்னுடைய சாவிற்கு காரணமானதைப் பற்றியோ அல்லது தன்னுடைய சாவிற்கு அமைந்த சூழ்நிலைகளைப் பற்றியோ எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ கூறும் உரையே, மரண வாக்குமூலம் எனப்படும்.

மரண வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அடிப்படை:

பொதுவாக நீதிமன்றத்தில் கொடுக்கப்படும் வாய்மொழிச் சாட்சியம் நேரடியாக இருத்தல் வேண்டும் **[பிரிவு 60]**. ஆனால் இறக்கும் தருவாயில் உள்ள ஒருவர் கொடுக்கும் வாக்குமூலமானது நீதிமன்றத்தில் நேரடியாக கொடுக்கப்படுவதல்ல. எனினும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் இறக்குந்தருவாயில் உள்ள ஒருவன் பொய் கூறமாட்டான் என்ற அனுமானமேயாகும். இதையே **Mathew Arnold** என்ற அறிஞர், "**இறந்து கொண்டிருக்கும் மனிதனின் உதட்டில் உண்மை உட்கார்ந்து இருக்கிறது**". **(Truth sits on the lips of dying man)** என வருணிக்கிறார். எனவேதான் மரண வாக்குமூலத்திற்கு சாட்சிய சட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மரண வாக்குமூலத்தை கேட்டறிந்த ஒருவர் மூலம் மெய்ப்பிக்க வேண்டும். கேட்டறிந்தவர் கூறும் சாட்சியம் கேள்விநிலைச் சாட்சியமாகும் (Hearsay Evidence). பொதுவாக கேள்விநிலை சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையென்றாலும் மரண வாக்குமூலமானது இதற்கு ஒரு விதிவிலக்காக அமைகிறது.

மரண வாக்குமூலம் எப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகிறது? (Admissibility) அல்லது ஒரு செல்லத்தகு மரண வாக்குமூலத்தின் முக்கியக் கூறுகள் (Essentials of a valid dying declaration):

பிரிவு 32 (1)ன்படி, மரண வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். ஆனால் அதற்கு பின்வரும் சில நிபந்தனைகள் (Conditions) பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

i) அவ்வாக்குமூலமானது மரணமடைந்தவரால் (மரணத்தை எதிர்நோக்கி இருந்தவரால்) செய்யப்பட்டிருக்க வேண்டும்;

ii) அவர் தன்னுடைய மரணத்திற்கான காரணத்தையே அல்லது சூழ்நிலைகளையோ அதில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

iii) அந்நபரின் சாவிற்கு காரணம் என்ன என்று வினா எழும்பியிருக்க வேண்டும்.

மரண வாக்குமூலத்தின் அமைப்பு (Form of the dying declaration):

மரண வாக்குமூலமானது எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியானதாகவோ இருக்கலாம். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எந்தவொரு வடிவமும் கிடையாது. மரண வாக்குமூலத்தை யார் முன்னரும் கொடுக்கலாம். ஒரு மாஜிஸ்ட்ரேட் அல்லது காவல் அதிகாரி அல்லது தனிப்பட்ட நபர் ஆகிய எவர் முன்பும் மரண வாக்குமூலம் கொடுக்கப்படலாம். தக்க அதிகாரிகளின் முன்பு கொடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக, மரண வாக்குமூலத்தை நிராகரிக்க முடியாது.

Muniappan v. State of Madras[1]

மேற்படி வழக்கில், அரசனிடம் கொடுத்தாலும் சரி அல்லது ஆண்டியிடம் கொடுத்தாலும் சரி; காவல் அதிகாரியிடம் கொடுத்தாலும் சரி அல்லது மாஜிஸ்ட்ரேட்டிடம் கொடுத்தாலும் சரி சட்டப்பிரிவில் உள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகியிருப்பின், ஒரு மரண வாக்குமூலம், மரண வாக்குமூலமே எனப்பட்டது.

மேலும் இறக்குந்தருவாயில் உள்ளவர் பேச இயலாத சூழ்நிலையில் இருப்பின், தன்னுடைய கொலைக்கு காரணமானவரை அல்லது பொருளை சைகைகள் அல்லது அசைவுகள் (signs and gestures) மூலமும் அடையாளம் காட்டலாம். இது வாய்மொழி மரண வாக்குமூலத்தின் பாற்பட்டதே

Alisandari (Alias Chandrasekhar) v. King[2]

இவ்வழக்கில் கேள்விகளுக்கு வாய் திறந்து பதில் சொல்ல முடியாத நிலையில், மரணத்தின் வாசலில் இருக்கும் நபரால் செய்யப்பட்ட சைகைகள் மற்றும் அசைவுகளும், வாய்மொழியாக அளிக்கப்பட்ட மரண வாக்குமூலமாகவே கருதப்படும் எனப்பட்டது.

Abdullah v. Queen Empress[3]

மேற்படி வழக்கில், மரணத்தை எதிர்நோக்கியுள்ள ஒருவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு அவர் சைகைகள் மூலம் அளித்த பதில்களையும், வாய்மொழி உரைகளாக பதிவு செய்யப்பட வேண்டும் எனப்பட்டது.

மரண வாக்குமூலம் கொடுப்பவரிடத்தில் கேட்கப்பட்ட

1. AIR 1962 S.C. 1252
2. LR 1937 A.C. 220
3. ILR 7 All. 385

கேள்விகளையும், பெறப்பட்ட விடைகளையும் முடிந்த மட்டும் எப்படி கேட்கப்பட்டதோ அதே போலவும், எப்படி பெறப்பட்டதோ அதே போலவும் எழுத்தில் வடித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் மரண வாக்குமூலம் பற்றிய ஆழ்ந்த உட்கருத்தினையும், உட்பொருளையும் நீதிமன்றம் வழக்கில் பொருத்தி நல்ல முடிவிற்கு வர ஏதுவாகும். ஆனால் சில சமயங்களில், மரணமடைந்தவர் கூறிய அதே சொற்களை மரண வாக்குமூலத்தில் கொண்டுவர முடிவதில்லை. அப்பொழுது அச்சொற்களையொத்த வேறு சொற்களை பயன்படுத்தலாம். ஆனால் அச்சொற்களுக்கு பொருள் விளக்கமோ அல்லது விரிவுரையோ அளிக்கக்கூடாது. அவற்றைக் கொண்ட மரண வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படாது.

Shrinath v. The State[1]

இவ்வழக்கில் காவலதிகாரி இந்தியில் கேள்வி கேட்டு பதிலையும் இந்தியிலேயே பெற்றார். ஆனால் அதை ஆங்கிலத்தில் பதிவு செய்து கொண்டார். பின்னர் அதற்கு இந்தியில் பொருள் விளக்கமளித்தார். இப்படி செய்து எழுதப்பட்ட மரண வாக்குமூலத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் மரணமடைந்தவன் கூறியது அதே பொருளிலேயே எழுதப்படவில்லை.

சுருங்கக்கூறின், மரண வாக்குமூலமென்பது வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது சைகைகள் அல்லது அசைவுகள் வடிவிலோ இருக்கலாம். அது ஒரு மாஜிஸ்ட்ரேட், காவலதிகாரி அல்லது ஒரு தனிநபர் முன்போ கொடுக்கப்படலாம். மரண வாக்குமூலத்தின் அமைப்பு அல்லது அது பதிவு செய்யப்பட்ட விதமானது, அதன் சான்று மதிப்பை அளவிடுவதற்கு தேவையற்றதாகும்.

மரண வாக்குமூலம் எப்பொழுது செய்யப்படலாம்?

பொதுவாக மரணத்தின் வாசலில் இருப்பவர் கொடுக்கும் வாக்குமூலமே மரண வாக்குமூலமாகிறது. ஆனால், மரணத்தை உண்டாக்கக்கூடிய அளவிற்கான காயத்தைப் (மரண அடி) பெற்ற பின்தான், ஒருவர் கொடுக்கும் உரை மரண வாக்குமூலமாகிறது எனக் கொள்ள முடியாது. அப்படிப்பட்ட காயத்தை பெறுவதற்கு முன்பாகவே, தனக்கு இதனால் மரணம் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை பற்றி உரைப்பதும், அவரது மரணத்திற்கு பின்னர், மரண வாக்குமூலமாக கருதப்படும். உதாரணமாக, பின்வரும் முக்கியமான வழக்குகளைக் பார்ப்போம்.

Ranjit Singh v. State[2]

இவ்வழக்கில் கணவன் கொலை செய்யப்பட்டான். கொலை

1. 59 Bom. LR 221
2. AIR 1952 H.P. 81

நடப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு அவனுக்கும் அவனது மனைவிக்குமிடையே எழுந்த பிரச்சனைகள் குறித்தும், ஆரோக்கியமான தாம்பத்திய வாழ்க்கை இல்லை என்பது குறித்தும், அதற்குண்டான காரணங்கள் குறித்தும் அவன் எழுதிய கடிதங்கள், மனைவியின் கள்ளக் காதலன் வருகை குறித்து நாட்குறிப்பில் அவன் எழுதிய குறிப்புகள் ஆகிய அனைத்தும் அவனது மரணத்திற்கான காரணம் குறித்து எழுந்த வினாவிற்கு தொடர்புடைய பதில்கள் ஆயின. மனைவி மீதும், அவள் கள்ளக் காதலன் மீதும் குற்ற வழக்கு தொடரப்படும்போது அவை அக்கணவனின் மரண வாக்குமூலமாயின. இங்கு கொலை நடப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட உரைகள் மரண வாக்குமூலங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்து மரணத்திற்கு காரணமான காயத்தை பெற்ற பின் மரணத்தின் வாயிலில் நின்று உரைத்தால்தான், அது மரண வாக்குமூலமாகும் என்பது அடிபட்டுப் போய்விடுகிறது.

Pakala Narayanaswamy v. King Emperor[1]

இறந்துபோன நுக்கராஜி என்பவர் பிதாபுரத்தில் உள்ள தோட்டத்தில் பியூன் உத்தியோகம் பார்த்து வந்தார். குற்றஞ் சாட்டப்பட்டவர் பிர்ஹம்பூர் என்னுமிடத்தில் வாழ்பவர்; பிதாபுரம் தோட்ட திவானின் மருமகன் ஆவார். 1936ல் மேற்படி குற்றஞ் சாட்டப்பட்டவரும் அவரது மனைவியும் பிதாபுரம் தோட்டத்திற்கு வருகை தந்த பொழுது, மேற்படி நுக்கராஜியிடமிருந்து அவர் ரூ3000/- கடனாகப் பெற்றார். இந்நிலையில் 1937 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20ம் தேதியன்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் மனைவியிடமிருந்து நுக்கராஜிவுக்கு கடிதமொன்று வந்தது. அதில் தாங்கள் வாங்கியிருந்த கடனை திரும்ப பெற்றுக்கொள்ளும் பொருட்டு நுக்கராஜிவை தங்கள் இடமான பிர்ஹம்பூருக்கு அழைத்திருந்தனர். நுக்கராஜி மார்ச் 21ம் தேதியன்று பிர்ஹம்பூருக்கு கிளம்புவதற்கு முன்னர், தனது மனைவியிடம் அக்கடிதத்தைக் காட்டி, தான் பிர்ஹம்பூருக்கு சென்று கொடுத்த கடனை குற்றஞ் சாட்டப்பவரிடமிருந்து வசூல் செய்து கொண்டு வருவதாகக் கூறினார். ஆனால் அதற்கடுத்த நாள் அதாவது மார்ச் 22ம் தேதி நுக்கராஜியின் உடல் பூரி ரெயில் நிலையத்தில் உள்ள ஒரு ரயில் 'கம்பார்ட்மெண்டில்' ஒரு தகரப் (டிரங்க்) பெட்டியில் கண்டெடுக்கப் பட்டது. அவரது உடல் ஏழு துண்டுகளாக வெட்டப்பட்டு, அதில் வைக்கப்பட்டிருந்தது. குற்றஞ் சாட்டப்பட்டவர் கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் பொழுது, நுக்கராஜி பிர்ஹம்பூருக்கு கிளம்புவதற்கு முன்னர், தனது மனைவியிடம் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு கொடுத்த கடனை வசூல் செய்து கொண்டு வருவதாக கூறிய உரை, அவரது மரண

1. AIR 1939 P.C. 47

வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ளலாமா என்ற வினா எழுந்தது. இது தொடர்பாக பிரிவு கவுன்சிலானது, "சாட்சிய சட்டத்தின் 32(1) வது பிரிவின்படி மேற்படி கூற்றை மரண வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ளலாம்; அக்கூற்று மரணத்திற்கான காரணம் எழுவதற்கு முன்பு செய்யப் பட்டதாகவோ அல்லது தான் கொல்லப்பட்டு விடுவோம் என்ற எதிர்பார்ப்புக்குண்டான காரணம் ஏதும் எழுவதற்கு முன்பாக செய்யப் பட்டதாகவோ இருந்தாலும், அதுவும் மரண வாக்குமூலமாகவே ஏற்றுக் கொள்ளப்படும்" என்று கூறியது.

மரணத்திற்கு எது காரணமோ அது குறித்துதான் மரண வாக்குமூலம்:

மரண வாக்குமூலம் கொடுப்பவர் தனது மரணத்திற்கான காரணத்தை விளம்புகிறார். அக்காரணம் மெய்ப்பிக்கப்படவில்லையெனில், அது குறித்த மரண வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதைப் பின்வரும் வழக்கு விளக்கும்.

Moti Singh v. State of U.P.[2]

இவ்வழக்கில் இரண்டு துப்பாக்கி குண்டுகளால் காயமடைந்தவர் மருத்துவமனையில் இருக்கும்போது மரண வாக்குமூலம் கொடுத்தார். ஆனால் மருத்துவமனையை விட்டுச் சென்ற 20 நாட்களுக்குப் பின்னரே மரணமடைந்தார். குற்றஞ் சாட்டப்பட்டவரை மேல்முறையீட்டில் விடுதலை செய்த உச்ச நீதிமன்றம் மரண வாக்குமூலம் எப்போது செல்லத்தக்கது என்று கூறி இக்குறிப்பிட்ட வழக்கில் அது செல்லாததற்கு காரணம் என்னவென்றும் கூறியது. அதன்படி, "ஒரு நபரின் மரணம் வழக்கெழுவினாவாக இருக்கும்போது அவரின் மரணம் பற்றிய அவரது வாக்குமூலம் மட்டும் தொடர்புடையதாகின்றது. எனவே ஏற்புடையது மாகிறது. இவ்வழக்கில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்ததால் ஏற்பட்ட காயங்களினால்தான் அவர் இறந்தார் என்பது மெய்ப்பிக்கப்படவில்லை. எனவே அக்கூற்று மரண வாக்குமூலம் ஆகாது. ஆகவே ஏற்புடையது மாகாது எனப்பட்டது.

மரண வாக்குமூலத்தின் சான்று மதிப்பு (Evidentiary value):

மரண வாக்குமூலத்தின் சான்று மதிப்பு குறித்து பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருவனைத் தண்டிக்கலாம். ஆனால், பின்வரும் வழக்கில் மாறுபட்ட கருத்து கூறப்பட்டது.

Ram Nath Madho Prasad v. State of Madhya Pradesh[2]

இவ்வழக்கில் பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்படாத, மரண

1. AIR 1964 SC 900
2. AIR 1953 SC 420

வாக்குமூலத்தை மட்டும் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவரை தண்டித்தல் கூடாது என்றும், ஏனெனில், மரண வாக்குமூலமானது சத்தியப் பிராமணத்தின் அடிப்படையில் செய்யப்படுவதில்லையென்றும், அவர் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லையென்றும், அச்சமயத்தில் அவர் உடல் மற்றும் மனரீதியாக குழப்பத்தில் இருப்பதால், தன்னுடைய கற்பனையையும் கலந்து வாக்குமூலம் கொடுக்கலாம் என்றும் கூறப்பட்டது.

State v. Kanchan Singh[1]

இவ்வழக்கில் உறுதியூட்டப்படாத மரண வாக்குமூலத்தை நம்புதல் கூடாது என்பது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதல்ல என்று **அலகாபாத் உயர்நீதிமன்றம்** கூறியது.

In Re Gurusami Tevar[2]

சென்னை உயர் நீதிமன்றமானது, எப்பொழுது மரண வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்வது என்பது தொடர்பாக கடுமையான விதிகளை நிர்ணயம் செய்வது இயலாதது என்று கூறியது. மரண வாக்குமூலத்தை நம்புவதும் நம்பாததும் சூழ்நிலைகளைப் பொறுத்ததேயாகும். வேறு சாட்சியங்களை நம்புவதற்கு எத்தகு விதிமுறைகள் பின்பற்றப் படுகின்றனவோ அவைதான் மரண வாக்குமூலத்திற்கும் பின்பற்றப்பட வேண்டும். மரண வாக்குமூலத்தை நம்புவதும் நிராகரிப்பதும் முழுக்க முழுக்க நீதிமன்றத்தின் கையில்தான் உள்ளது. ஆனால் எப்பொழுது மரண வாக்குமூலத்தை உண்மையென்று நம்பிவிட்டதோ, அதனடிப்படையில் சம்பந்தப்பட்டவருக்கு தண்டனை வழங்குவதில் தடையேதுமில்லை. எனவே இதனை வலுக்குறைத்த சாட்சியமாக கொள்ளமுடியாது.

Khushal Rao v. State of Bombay[3]

இவ்வழக்கில் மரண வாக்குமூலத்தின் சான்று மதிப்பு குறித்து உச்ச நீதிமன்றமானது சில கருத்துகளைத் தெரிவித்தது. அவை மரண வாக்குமூலத்தின் நம்பகத் தன்மை குறித்து இருந்த பல்வேறு கருத்து மாறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது எனலாம். வழக்கின் பொருண்மைகள் வருமாறு.

நாக்பூரில் தொழிலாளர்களிடையே இரண்டு வர்க்கத்தினர் இருந்தனர். அவர்களுக்குள் அடிக்கடி அடி-தடி மோதல் ஏற்படும். அப்படி ஒருநாள் மோதல் ஏற்பட்ட பொழுது, பாபூலால் என்பவன் கடுமையாக தாக்கப்பட்டான். அவன் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான். வழியில் தன்னை நான்கு பேர்கள் தாக்கியதாகவும்,

1. 1954 All. 153
2. I.L.R. 1940 Mad. 170
3. AIR 1958 S.C. 22

அதில் ஒருவன் கௌசல் என்றும் மற்றொருவன் பெயர் துக்காராம் என்றும் கூறினான். அருகிலிருந்த டாக்டர் அவன் கூறியதையே உடனடியாக குறித்துக் கொண்டார். அவர் மீண்டும் கேட்டபொழுது அப்பெயர் களையே கூறினான். பின்னர் ஒரு காவலதிகாரி அவனைக் கேள்வி கேட்டபொழுதும், அப்பெயர்களையே மீண்டும் கூறினான். வாக்குமூலம் கூறத் தகுதியான உடல்நிலையில் இருப்பதாக டாக்டர் சான்றளித்த பிறகு, மாஜிஸ்ட்ரேட் அவரிடம் கேள்வி கேட்டபொழுதும், மேற்கூறியதையே கூறினான். அடுத்த நாள் அவன் இறந்துவிட்டான். மேற்படி மரண வாக்குமூலத்தின் அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட கௌசல் மற்றும் துக்காராம் கைது செய்யப்படுவதற்கு முன் தலைமறைவானதின் அடிப்படையிலும், கீழ் நீதிமன்றமானது கௌசலுக்கு மரண தண்டனையும் விதித்தது. மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றமானது துக்காராமை விடுதலை செய்தது. ஏனெனில் மரண வாக்குமூலத்தில் துக்காராம் 'டெலி ' (Teli) வகுப்பை சார்ந்தவனாக கூறப்பட்டிருந்தான். ஆனால் நீதிமன்றத்தின் முன்னர் ஆஜர் படுத்தப்பட்ட துக்காராமோ, 'கோழி" (Kohli) வகுப்பைச் சார்ந்தவன். மேலும் 'டெலி' வகுப்பைச் சார்ந்த துக்காராம் என்ற பெயருடையவர்கள், அவ்வட்டாரத்தில் நான்கு பேர்கள் உள்ளனர். இக்குழப்பத்தினால் துக்காராம் விடுதலை செய்யப்பட்டான். ஆனால் கௌசலுக்கு கீழ் நீதிமன்ற தூக்குதண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இதை எதிர்த்து அவன் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தான். ஆனால் உச்ச நீதிமன்றமும் அவனுக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஊர்ஜிதம் செய்து, மரண வாக்குமூலத்தை நம்புவது தொடர்பாக பின்வரும் கருத்தினைக் கூறியது.

1. பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட்டாலொழிய மரண வாக்குமூலம் ஒன்றை மட்டுமே கொண்டு தண்டித்தல் கூடாது என்று முடிவான சட்ட விதி ஏதுமில்லை. அதாவது மரண வாக்குமூலம் எல்லா நேரங்களிலும் உறுதியூட்டப்பட வேண்டுமென்பதில்லை.

2. ஒவ்வொரு வழக்கும் அவ்வழக்கின் பொருண்மைகளைப் பொறுத்தும், எச்சூழ்நிலைகளில் மரண வாக்குமூலம் வழங்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டு மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

3. பிற சாட்சியங்களை விட மரண வாக்குமூலத்தை ஒரு வலுக்குறைந்த சாட்சியமாக கருதக்கூடாது.

4. தகுதி வாய்ந்த மாஜிஸ்ட்ரேட்டால், கேள்வி-பதில் அமைப்பில் மரண வாக்குமூலம் அளிப்பவர் கூறிய அதே சொற்களையே இயன்றவரை பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை நம்பலாம்.

5. மரண வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை பரிசோதித்தறிய, நீதிமன்றமானது பல்வேறு சூழ்நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக, வாக்குமூலம் கொடுக்க திறனற்றவராக உள்ளரா? அவரது

வாக்குமூலம் பிற சூழ்நிலைகளுடன் இறுதிவரை பொருந்தி வருகிறதா? வாக்குமூலம் உடனடியாக கொடுக்கப்பட்டதா? காலந்தாழ்ந்திருப்பின் எதனால்? யாரையாவது குற்றவாளியென கைகாட்டும்படி அவர் தூண்டப்பட்டுள்ளாரா?

இக்கருத்துகள் அனைத்தையும் மேற்படி வழக்கில் மரண வாக்குமூலம் அளித்தவரின் உரை கொண்டிருந்தது. எனவே, உச்ச நீதிமன்றம் கௌசலுக்கு அளிக்கப்பட்டிருந்த தூக்குதண்டனையை ஊர்ஜிதம் செய்தது.

மரண வாக்குமூலத்தை எங்ஙனம் மெய்ப்பிப்பது? (How to be proved)

i) ஒரு மரண வாக்குமூலமானது மாஜிஸ்ட்ரேட் ஒருவரால் பதிவு செய்யப்பட்டால், அவரையே நீதிமன்றத்திற்கு ஒரு சாட்சியாக அழைத்து மெய்ப்பிக்க வேண்டும். (அவர் அவ்வழக்கை விசாரிக்கும் மாஜிஸ்ட் ரேட்டாக இருத்தல் கூடாது.)

ii) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164 மற்றும் 364 பிரிவுகளின் படி குற்றஞ் சாட்டப்பட்டவர் முன்னிலையிலேயே, மரண வாக்கு மூலமானது மாஜிஸ்ட்ரேட் ஒருவரால் பதிவு செய்யப்பட்டால், அதை மெய்ப்பிக்க சாட்சியம் எவரையும் ஆஜர்படுத்த வேண்டியதில்லை.

iii) எழுத்துவடிவில் மரண வாக்குமூலமானது எழுதப்படவில்லை யெனில், யாரிடம் அவ்வாக்குமூலம் செய்யப்பட்டதோ அவரால் அல்லது யார் அவ்வாக்குமூலத்தைக் கேட்டாரோ அவரால் மெய்ப்பிக்கப்படலாம்.

மரண வாக்குமூலம் கொடுப்பவர் பிழைப்பின்?

சில சமயங்களில் மரண வாக்குமூலம் கொடுத்தவர் பிழைத்து விடுவதுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அம்மரண வாக்குமூலத்தை **பிரிவு 32(1)**ன்கீழ் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் அதனை **பிரிவு 157**ன்கீழ் குற்றமுறையீடுபவரின் கூற்றை உறுதியூட்டும் ஒரு சாட்சியமாக பயன்படுத்தலாம்.

இந்திய மற்றும் இங்கிலாந்து சட்டத்தில் உள்ள வேறுபாடுகள்:

மரண வாக்குமூலம் தொடர்பான இந்திய சாட்சிய சட்டமானது, இங்கிலாந்து சாட்சிய சட்டத்திலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. அவ்வேறுபாடுகள் வருமாறு.

i) இந்திய சட்டத்தின்படி, மரண வாக்குமூலமானது உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இரண்டு வழக்குகளிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். ஆனால் ஆங்கிலச் சட்டத்தின்படி, குற்றவியல் வழக்குகளில் மட்டுமே மரண வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும்.

ii) இந்திய சட்டத்தின்படி இறக்கும் தருவாயிலிருப்பவரும் அல்லது தனக்கு விரைவில் இறப்பு நிகழப் போவதாக நம்புகிறவரும் மரண வாக்குமூலம் கொடுக்கலாம். ஆனால் ஆங்கில சட்டத்தின்படி, இறக்கும் தருவாயிலிருப்பவர் உண்மையில் இறக்கக்கூடிய அபாயத்தில் இருந்து அதன் விளைவாக உடனடியாக மரணம் சம்பவிக்கலாம் என்ற நிலையில் இருக்கும் பொழுது செய்யப்படும் உரை மட்டுமே மரண வாக்குமூலமாக கருதப்படும்.

iii) இந்திய சட்டத்தின்படி தனக்கு மரணம் நேர்வதற்கான சூழ்நிலை உள்ளது என்பதை அறியாமல் ஒருவர் கொடுக்கும் உரையும், மரண வாக்குமூலமே. **(பாகால நாராயண ஸ்வாமி வழக்கு)** ஆங்கில சட்டத்தின்படி, தனது உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை உள்ளதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

முடிவுரை:

"மரண வாக்குமூலமானது ஏற்றுக் கொள்ளக்கூடியது" என்பது ***nemo morituru pro-sumitur mentiri*** என்ற இலத்தீன் முதுமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். அதாவது, **"இறப்பவன், வாயில் பொய்யுடன் இறைவனை சந்திப்பதில்லை" (a man will not meet his maker with a lie in his mouth)** என்று பொருளாகும். எனவே சாட்சிய சட்டத்தில் மரண வாக்குமூலம் முக்கியமானதாக கருதப்படுகின்றது.

முந்திய அல்லது பிந்திய நீதிமுறை நடவடிக்கையில் சாட்சியம் - எப்பொழுது தொடர்புடையது?

49. When is evidence given by a witness in a judicial proceeding relevant in a subsequent judicial proceeding? (நீதிமுறை நடவடிக்கை ஒன்றில் ஒரு சாட்சியினால் கொடுக்கப்பட்ட சாட்சியம் பின்னர் வரும் ஒரு நீதிமுறை நடவடிக்கையில் எப்பொழுது தொடர்புற்றதாகும்?)

முன்னுரை:

சாட்சியச் சட்டத்தின் 33வது பிரிவானது எச்சூழ்நிலைகளில் நீதிமுறை நடவடிக்கை ஒன்றில் ஒரு சாட்சியினால் கொடுக்கப்பட்ட சாட்சியம் பின்னர் வரும் ஒரு நீதிமுறை நடவடிக்கையில் தொடர்புடையதாகும் என்று விளக்குகிறது.

பிரிவு 33ன்படி அச்சூழ்நிலைகள்:

நீதிமுறை நடவடிக்கையொன்றில் அல்லது சட்டத்தால் சாட்சியம் எடுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரது முன்னிலையில், ஒருவர் சாட்சியம் அளிக்கிறார். அப்படிச் சாட்சியம் அளித்தவர் இறந்து விட்டார் என்ற நிலையிலும், கண்டுபிடிக்கப்பட முடியாத நிலையிலும், சாட்சியம்

கூறுவதற்குச் சக்தியற்றவராக இருக்கும் போதும் அல்லது அவர் சாட்சியம் அளிக்க வருகை தர முடியாதபடி எதிர்தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போதும் அல்லது வழக்கின் சூழ்நிலையை ஒட்டி நீதிமன்றம் நியாயமற்றதென்று கொள்ளும் அளவுக்குக் கால தாமதமோ, செலவோ இன்றி, அவரது வருகையினைப் பெற முடியாது என்ற நிலையிலும், பின்னர் வரும் ஒரு நீதிமுறை நடவடிக்கையில் அல்லது அதே நீதிமுறை நடவடிக்கையின் பிந்தியதொரு கட்டத்தில் அவர் முந்திய நீதிமுறை நடவடிக்கையில் அளித்த சாட்சியத்தை தொடர்புடையதாக உண்மையை மெய்ப்பிக்கும் நோக்கில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அந்த நீதிமுறை நடவடிக்கை ஒரே தரப்பினருக்கிடையே அல்லது அவர்களது உரிமை பிரதிநிதிகளுக்கிடையே இருந்திருக்க வேண்டும்; நீதிமுறை நடவடிக்கையில் எதிர் தரப்பினருக்குக் குறுக்கு விசாரணை செய்யும் உரிமையும் வாய்ப்பும் இருந்திருக்க வேண்டும். மேலும் பிரச்சனையில் உள்ள கேள்விகள் முதல் நீதிமுறை நடவடிக்கையில் இருந்ததுபோலவே இரண்டாவது நடவடிக்கையிலும் சாராம்சத்தில் ஒரே தன்மை உடையவையாக இருக்க வேண்டும்.

- o -

23 நீதிமன்றங்களின் தீர்ப்புகள் - எப்பொழுது தொடர்புடையவை? [Judgments of Courts - When relevant?]

50. Discuss the relevancy of judgments under the Evidence Act. State how far the judgment of a Civil Court is relevant in a criminal proceedings and judgment of a Criminal Court relevant in a civil proceedings. (சான்று சட்டத்தின் கீழ் நீதிமன்ற தீர்ப்புகளின் தொடர்புடைமை பற்றி ஆராய்க. ஒரு குற்றவியல் நடவடிக்கையில், ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பும், ஒரு உரிமையியல் வழக்கில் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பும் எம்மட்டில் தொடர்புற்றதாகும் என்பதை விவரிக்கவும்.)

(அல்லது)

When are judgments of courts relevant in civil and criminal procedings? (உரிமை இயல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளில் எப்பொழுது நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தீர்வினைவாகலாம்?)

(அல்லது)

Distinguish between judgment in rem and judgment in personam. Explain the rules regarding relevancy of judgments. (உலகெதிர் நீதிமுறைத் தீர்ப்பையும் ஆள் எதிர் நீதிமுறைத் தீர்ப்பையும் வேறுபடுத்திக் காட்டுக. நீதிமுறைத் தீர்ப்புகளின் பொருத்தம் குறித்த விதிகளை விளக்கவும்.)

(அல்லது)

State the circumstances under which judgments of Courts of justice are relevant? (நீதிமன்றங்களின் தீர்ப்புகள் எந்தச் சூழ்நிலைகளில் தீர்வினைவாக உள்ளன என்பதை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Distinguish between Judgment in rem and judgment in personam. (வேறுபடுத்திக் காட்டுக: மன்று சுட்டிய தீர்ப்பு மற்றும் நபர் சுட்டிய தீர்ப்பு)

முன்னுரை:

ஒரு தீர்ப்பானது அது முந்தியதாக இருப்பினும் அல்லது பிந்தியதாக இருப்பினும், பொதுவாக எந்த ஒரு வழக்கிலும் அல்லது நீதிமுறை நடவடிக்கையிலும் தொடர்புடையது ஆகாது. உதாரணமாக, உற்பத்தியாளர் ஒருவர் தரங்குறைந்த பொருட்களை வழங்கினார் என்பதற்காக அவர் மீது A என்பவர் தொடுத்த வழக்கில், அதற்கு அவர் பொறுப்பல்ல என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதற்கடுத்து B என்பவர்,

மீண்டும் அதே உற்பத்தியாளர் மீது அதே மாதிரியான தரங்குறைந்த பொருட்களை வழங்கினார் என்பதற்காக வழக்கொன்றை தொடுத்தார். இங்கு மேற்படி உற்பத்தியாளர் தன்மீது தொடுக்கப்பட்ட முதல் வழக்கில், தான் பொறுப்பாளி அல்ல என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, இந்த பிந்திய வழக்கில் சுட்டிக்காட்டி தப்பித்துக் கொள்ளமுடியாது. ஏனெனில் முந்திய வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு பிந்திய வழக்கில் தொடர்பற்றதாகும். ஒவ்வொரு வழக்கும் அதற்குண்டான பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட வேண்டுமே ஒழிய, முந்திய வேறு வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அல்ல. இக்கோட்பாட்டைத்தான் சாட்சியச் சட்டத்தின் **43வது பிரிவு** வலியுறுத்துகிறது. அதன்படி, சட்டத்தால் அவ்வாறு விளம்பப் பட்டாலொழிய, தீர்ப்புகள் தொடர்புடையவை ஆகாது. **ஆனால் 40, 41 மற்றும் 42 வது பிரிவுகள்** மேற்படி கோட்பாட்டிற்கு சில விதிவிலக்குகளைத் தருகின்றன. முதலில் பிரிவு 43ஐக் காண்போம்.

பிரிவு 43 கூறும் கோட்பாடு:

பிரிவுகள் 40, 41 மற்றும் 42ல் இடம் பெறாத மற்றத் தீர்ப்புகள், உத்திரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் தொடர்புடையதல்ல. ஆனால் அத்தீர்ப்புகள், உத்திரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் தீர்வுதரு பொருண்மையாகவோ அல்லது இச்சட்டத்தின் வேறெந்த சட்ட வகைமுறையின்படியேனும் தீர்வுதவு பொருண்மையாக இருப்பின், தொடர்புடையதாகும்.

எடுத்துக்காட்டாக, தங்கள் ஒவ்வொருவரையும் இழிவு படுத்தும் வகையில் எழுத்துவழி அவதூறு இழைத்தற்காக A என்பவரும் B என்பவரும் தனித்தனியாக C என்பவர் மீது வழக்குத் தொடுகின்றார். எழுத்துவழி அவதூறு எனக் கூறப்பட்ட பொருள் உண்மையே (அதாவது அது அவதூறு அல்ல; உண்மை நிலையே) என்று ஒவ்வொரு வழக்கிலும் C கூறுகிறார். ஆனால் C உண்மையென்று சொன்ன வாதத்தை மெய்ப்பிக்கத் தவறிவிட்டார் என்ற அடிப்படையில் இழப்பீட்டுக்காக அவருக்கு எதிராக தீர்ப்பாணை ஒன்றை A பெறுகிறார். இந்தப் பொருண்மை (தீர்ப்பாணை) B மற்றும் C ஆகியவர்களுக்கிடையே தொடர்பற்றதாகும். ஏனெனில் B மற்றும் Cக்கு இடையிலான அவதூறு வழக்கை, அவ்வழக்கிற்கே உரிய பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டும். Cக்கு எதிராக Aக்கு கிடைத்த தீர்ப்பாணை இவ்வழக்கிற்கு தொடர்பற்றதாகும்.

The Duches of Kingston' s Case[1]

இவ்வழக்கில் DK என்பவள் மீது முதல் கணவன் உயிருடன் உள்ள

1. (1776) 168 E.R. 175.

பொழுதே மற்றொரு ஆடவனை மணம் முடித்த இருதுணை மணக் குற்றத்திற்காக குற்றவழக்கு இடப்பட்டது. ஆனால் முதல் கணவனுடன் தனக்கு திருமணமே நடக்கவில்லை என்றும், தான் இரண்டாவது கணவன் என்று கூறப்படும் அம்மற்றொரு ஆடவனை மணக்கும்பொழுது ஒரு கன்னி என்றும் வேறொரு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றைக் காட்டி வாதம் புரிந்தாள். ஆனால் அத்தீர்ப்பு மேற்படி இருதுணை மணக்குற்ற வழக்கு நடவடிக்கையில் தொடர்பற்றது என்றும், அரசு தரப்பினர் முதல் கணவன் உயிருடன் உள்ள பொழுது DK இரண்டாம் மணம் புரிந்தாள் என மெய்பிக்க எவ்வித தடையுமில்லை என்றும், மேற்படி வழக்கை விசாரித்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விதிவிலக்குகள் (Exceptions):

தீர்ப்புகள் தொடர்பற்றவை என்னும் மேற்படி பொதுக் கோட்பாட்டிற்கு சாட்சிய சட்டம் சில விதிவிலக்குகளை பிரிவுகள் 40, 41 மற்றும் 42ன் வழியாக வகுத்துள்ளது. அவ்விதிவிலக்குகளின்படி தீர்ப்புகள் தொடர்பு உடையவையாகும். இனி அவற்றை பின்வருமாறு காண்போம்.

1) இரண்டாவது வழக்கினை தடை செய்யும் வகையில் முந்தய தீர்ப்பின் தொடர்புடைமை - பிரிவு 40ன்கீழான விதிவிலக்கு:

சாட்சியச் சட்டத்தின் இப்பிரிவு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 11வது பிரிவை அடியொற்றி அமைந்ததாகும். அப்பிரிவு **முன் தீர்ப்புத் தடை (Res judicate)** என்பதைப் பற்றிக் கூறுகிறது. அதன்படி, முன்னரே ஒரு தரப்பினரிடையே வழக்குத் தொடரப்பட்டு, அதை ஒரு முறையான நீதிமன்றம் விசாரித்து, அவ்வழக்கின் பொருண்மைகளின் மீது தீர்ப்பு வழங்கியிருந்தால், அதே பொருண்மையின் மீது, அதே தரப்பினரிடையே, அதே நீதிமன்றத்தில் மீண்டும் இரண்டாவது முறையாக வழக்கொன்றைத் தொடுக்கவோ அல்லது அவ்வழக்கை விசாரிக்கவோ சட்டம் அனுமதிப்பதில்லை. இதுவே முன்தீர்ப்புத் தடை எனப்படுகிறது. இவ்வாறு தடை செய்யப்படாவிட்டால், ஒரு வழக்கிற்கு முடிவே இருக்காது. எனவே இதை அடிப்படையாகக் கொண்டு **பிரிவு 40** சாட்சிய சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதெனில் அது மிகையன்று. அப்பிரிவின்படி,

"ஒரு நீதிமன்றம் ஓர் உரிமையியல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா அல்லது ஒரு விசாரணையை நடத்த வேண்டுமா என்ற கேள்வி எழும்பொழுது, அத்தகைய உரிமையியல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதையோ அல்லது அத்தகைய ஒரு விசாரணையை நடத்துவதையோ சட்டப்படி தடுக்கும் ஏதாவதொரு தீர்ப்பின், உத்திரவின் அல்லது தீர்ப்பாணையின் உண்மை ஒரு தொடர்புடைய (தீர்வுதவு) பொருண்மையாகும்".

எனவே முந்தய உரிமையியல் வழக்குத் தீர்ப்பானது அதை ஒத்த

இரண்டாவது வழக்கை தடை செய்வதில் மேற்கண்ட விதத்தில் தொடர்புடையதாக உள்ளது.

இவ்விதிவிலக்கு குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 300ன்படி, தகுதியான ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் ஒரு முறை தண்டனைத் தீர்ப்போ அல்லது விடுதலைத் தீர்ப்போ அளிக்கப்பட்டால், அதே பொருண்மைகளின் மீது அதே குற்றத்திற்காக மீண்டும் வழக்குத் தொடர்வதற்கு சட்டம் அனுமதிப்பதில்லை. அம்மாதிரியான சூழ்நிலைகளில், அதே குற்றத்திற்கான இரண்டாவது வழக்கு நடவடிக்கையில் அவர், தான் ஏற்கனவே அக்குற்றத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டதாக விடுதலைத் தீர்ப்பை (Autro fois acquit) சுட்டிக்காட்டலாம் அல்லது தண்டனை அளிக்கப்பட்டு விட்டதாக தண்டனைத் தீர்ப்பை (Autro fois convict) ஆதாரமாகக் காட்டலாம். அத்தீர்ப்புகள் யாவும் தொடர்புடையவையே.

2. உயிலியல் முதலிய அதிகார வரம்பில் பகரப்படும் தீர்ப்புகளின் தொடர்புடைமை - பிரிவு 41 கூறும் விதிவிலக்கு:

மேற்படி பிரிவை விரிவாகக் காணும் முன்னர் தீர்ப்பின் இரு வகைகளைக் காணுதல் அவசியம். அதன்படி,

i) மன்று சுட்டிய தீர்ப்பு அல்லது உலகிற்கு உணர்த்தும் தீர்ப்பு (Judgment in rem):

தீர்ப்புகளின் தொடர்புடைமை பொறுத்து அது இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் வகை மன்று சுட்டிய தீர்ப்பு என்பதாகும். இதன்படி, ஒரு நபரின் தகுநிலையை (அல்லது அந்தஸ்த்தை - Status) விளம்பும் தீர்ப்பு மன்று சுட்டிய தீர்ப்பாகும். உதாரணமாக, ஒருவன் நொடிப்பு நிலை (insolvant) அடைதலென்பது, அவனது தகுநிலையாகும். இதை ஒரு நீதிமன்றம் தீர்ப்பாக விளம்பும்போது, அது உலகில் உள்ள அனைவருக்கும் பொதுவானதாகும். அவரது தகுநிலை பிரச்சனையாக உள்ள வழக்கு ஒவ்வொன்றிலும் அத்தீர்ப்பு தொடர்புடையதாகும். சுருங்கக்கூறின் ஒருவனது தகுநிலையை விளம்பும் தீர்ப்பு மன்று சுட்டிய தீர்ப்பாகும்; பிந்திய வழக்குகளில் தொடர்புடையதாகும்.

ii) நபர் சுட்டிய தீர்ப்பு (Judgment in Personam):

இது மன்று சுட்டிய தீர்ப்புக்கு நேர் எதிரானதாகும். இது இரு தரப்பினர்களிடையே ஒரு ஒப்பந்தம் தொடர்பாகவோ அல்லது தீங்கியல் தொடர்பாகவோ எழும் உரிமை வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்பாகும். இத்தீர்ப்பு அவ்வழக்குகளில் தரப்பினராக உள்ளவர்களையும் அவர்களது பிரதிநிதிகளையும் மட்டுமே கட்டுப்படுத்தும். எனவே இது நபர் சுட்டிய தீர்ப்பு எனப்படுகிறது. இவ்வாறு ஒரு தனிப்பட்ட நபரை மட்டும் கட்டுப்படுத்துவதால், பிந்திய வழக்குகளிலோ அல்லது நடவடிக்கை

களிலோ மேற்படி நபர் சுட்டிய தீர்ப்பு தொடர்பற்றதாகும் (not relevant).

முதலாவதாகக் கண்ட மன்று காட்டிய தீர்ப்பைத்தான் (in rem) **பிரிவு 41** தொடர்புடையது என கூறுகிறது. அதன்படி ஒரு தீர்ப்பானது உயிலியல், மணவியல், கூட்டாண்மை, நொடிப்பியல் அதிகார வரம்பை செலுத்துங்கால், ஒரு நபரின் தகுநிலையை விளம்பும் வண்ணம் பிறப்பிக்கப்பட்டிருந்தால், அது பிந்திய வழக்குகளில் தொடர்புடைதாகும். விரிவாக சட்டப்பிரிவு வருமாறு.

பிரிவு 41ன்படி:

தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றம், உயிலியல் (Probate), மணவியல் (Matrimonial), கடலியல் (Admiralty) அல்லது நொடிப்பியல் (Insolvancy) அதிகார வரம்பைச் செலுத்துங்கால், சட்டபூர்வமான தகுதி எதையேனும் எவருக்கேனும் கொடுத்தோ அல்லை எவரிடமிருந்தேனும் எடுத்தோ அல்லது எவரேனும் அத்தகைய தகுதிக்கு உரிமையுடையவரென்று விளம்பியோ பிறப்பிக்கும் முடிவான தீர்ப்பு, உத்திரவு அல்லது தீர்ப்பாணை ஆகியவை பிந்திய வழக்குகளில் தொடர்புடையதாகும்.

மன்று சுட்டிய தீர்ப்புக்கும் நபர் சுட்டிய தீர்ப்புக்கும் உள்ள வேறுபாடு (Distinction between Judgment in rem and personam):

மன்று சுட்டிய தீர்ப்பு என்பது குறிப்பிட்ட அதிகார வரம்பு படைத்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பாகும். இது வழக்கு தரப்பினரை மட்டுமல்லாமல் உலகனைவரையும் கட்டுப்படுத்தும். உதாரணமாக, ஒருவர் நொடிப்பு நிலையரென, நொடிப்பியல் அதிகார வரம்பு படைத்த நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும் தீர்ப்பு.

ஆனால் நபர் சுட்டிய தீர்ப்பு என்பது வழக்கின் இரு தரப்பினர்களை மட்டுமே கட்டுப்படுத்தும் வண்ணம் பகரப்படும் தீர்ப்பாகும். உதாரணமாக, பாகப்பிரிவான வழக்கில், பாகம் பிரித்து நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு.

3. 41வது பிரிவில் குறிப்பிடப்படாத தீர்ப்புகளின் தொடர்புடைமை - பிரிவு 42ன் படியான விதிவிலக்கு:

41வது பிரிவில் குறிப்பிடப்படாத மற்றத் தீர்ப்புகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் விசாரணைக்குத் தொடர்புடைய ஒரு பொதுத்தன்மை வாய்ந்த விஷயங்களுக்குச் (matters of public nature) சம்பந்தமுடையவையாக இருப்பின், அவை தொடர்புடையதாகும்.

பொதுமக்களை பாதிக்கும் விஷயங்கள் அனைத்தும் பொதுத் தன்மை வாய்ந்த விஷயங்களே ஆகும். உதாரணமாக, ஆற்றில் படகு விடும் உரிமை, பொதுப் பாதையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. இவை குறித்து ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, பின்னர் அது தொடர்பாக எழும் வழக்கில் தொடர்புடையதாகும்.

தீர்ப்புகளின் சான்று மதிப்பு (Evidentiary Value of Judgments):

பொதுவாக தீர்ப்புகள் பிந்தய வழக்களில் தொடர்பற்றவை. ஆனால் மேற்படி விதிவிலக்கான சூழ்நிலையில் தொடர்புடையவை ஆகின்றன. அச்சமயங்களில் தீர்ப்புகளின் சான்று மதிப்பு மேலோங்கி நிற்கிறது. ஆனால் அதைக் குலைக்கவும் சாட்சிய சட்டமே பிரிவு 44ன் வாயிலாக வழி வகுத்துள்ளது. அதாவது, "40, 41 அல்லது 42வது பிரிவின்படி தொடர்புடையதாக உள்ளதும், எதிர்த் தரப்பினரால் மெய்ப்பிக்கப் பட்டதுமான தீர்ப்பு, உத்திரவு அல்லது தீர்ப்பாணை எதுவும், அதை வழங்குவதற்குத் தகுதிவாய்ந்திராத ஒரு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது என்றோ (Court of incompetent jurisdiction) அல்லது மோசடி (by fraud) அல்லது வஞ்சகக் கூட்டால் (by collusion) பெறப்பட்டது என்றோ, வழக்குத் தரப்பினர் மெய்ப்பிக்கலாம்."

மேற்கண்டவாறு மெய்ப்பித்துவிட்டால், அத்தீர்ப்பே உடைந்து விடும். எனவே, பிந்தய வழக்குகளில் தொடர்பற்றதாகிவிடும்.

உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு குற்றவியல் வழக்கிலும் குற்றவியல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு உரிமையியல் வழக்கிலும் தொடர்பாகும் விதம்:

பிரிவு 41 மற்றும் 42ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பு, குற்றவியல் வழக்குகளுக்கு தொடர்புடையதாகும். மேற்படி இரண்டு பிரிவுகளின் கீழும் அத்தீர்ப்பு வரவில்லையெனில், அது தொடர்புடைய தாகாது. ஏனெனில் பிரிவு 40 பொருந்தாது. பிரிவு 40ன் செயல்படுதன்மை, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 11வது பிரிவையும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 300வது பிரிவையும் சார்ந்து அமைந்துள்ளது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 11 முன் தீர்ப்புத் தடை (Res judicata) பற்றியும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் - பிரிவு 300 விடுதலைத் தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

பிரிவுகள் 41 மற்றும் 42 ஆகியவை குற்றவியல் வழக்குகளுக்கு பொருந்தி வராது. எனவே, தொடர்புடையதாக்க முடியாது. ஒரு குற்றவியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பிரிவு 40ன் படி மற்றொரு குற்றவியல் வழக்கிற்கு மட்டுமே பொருந்தும்; உரிமையியல் வழக்கிற்குப் பொருந்தாது. அதாவது உரிமையியல் வழக்கில் முன்தீர்ப்புத் தடையாக செயல்படாது.

- o -

24 கருத்துச் சாட்சியம் - எப்பொழுது தொடர்புடையது? [Opinion Evidence - When relevant?]

51. State the rules regarding the relevancy of opinions of third persons. (மூன்றாம் நபர் கருத்துக்களின் தீர்விளைவு சார்ந்த விதிகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What is meant by 'opinion evidence'? How far opinion evidence is relevant under the Indian Evidence Act? (கருத்துச் சாட்சியம் என்றால் என்ன? இந்தியச் சான்றுச் சட்டத்தின் கீழ் கருத்துச் சாட்சியம் எந்த அளவுக்குப் பொருந்தும்?)

(அல்லது)

State the exceptions to the rule that opinion evidence is not admissible. (கருத்துரை சாட்சியம் கொள்ளத்தக்க சாட்சியமில்லை என்னும் விதிக்கு உள்ள விதிவிலக்குகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Opinion is not ordinarily regarded as evidence. Why? State the exceptions to the rule of exclusion. (சாதாரணமாக கருத்தானது ஒரு சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஏன்? இந்த விதிக்கான விதிவிலக்குகளைக் கூறுக.)

(அல்லது)

Proof of handwriting - Write short notes. (கையெழுத்துச் சான்றுறுதி - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

How can a signature be proved under Evidence Act? (சாட்சிய சட்டத்தின் கீழ் ஒரு கையெழுத்தை எப்படி மெய்ப்பிக்க முடியும்?)

முன்னுரை:

பொதுவாக நீதிமன்றத்தில் வழக்குக்குச் சம்பந்தமில்லாத மூன்றாவது நபரின் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இது ஒரு பொதுவிதியாகும். சாட்சிகள் தாங்களே நேரில் பார்த்தவைகளையோ அல்லது தங்களுக்கு தெரிந்த பொருண்மைகளையோ மட்டுமே சாட்சிக் கூண்டில் உரைத்தல் வேண்டும். இதற்கு மாறாக அவர்கள் தங்களது சொந்த கருத்துக்களையோ[1] (opinion) அல்லது நம்பிக்கைகளையோ கூறுதல் கூடாது. இது நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1. அபிப்ராயம் என்றும் கூறலாம்.

ஏனெனில், அக்கருத்துக்கள் குழப்பத்தை உண்டு செய்யலாம். வழக்கில் உண்மையை கண்டறிய முடியாமல் போகலாம்.

ஆனால் மேற்படி பொதுவிதிக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. வழக்கைத் தீர்க்கும் நீதிபதி, சட்டத் துறையில் வல்லுநர். ஆனால் அவர் புகைப்படத் துறையிலோ, மருத்துவத் துறையிலோ, கலை, அறிவியல் அல்லது மொழி சார்ந்த துறையிலோ வல்லுநரல்ல அல்லது அனைத்தும் அறிந்த சகலகலா வல்லுநரும் அல்ல. எனவே ஒரு குறிப்பிட்ட துறை அல்லது விஷயம் சார்ந்த வழக்கொன்றில் முடிவுக்கு வர ஒரு வல்லுநரின் உதவியோ அல்லது மூன்றாம் நபரின் உதவியோ தேவைப்படும்பொழுது, மேற்படி பொதுவிதி தளர்த்தப்படுகின்றது. அவர்களின் கருத்துக்கள் சாட்சியமாக நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதனால் நீதிமன்றத்தின் நேரமும் பணியும் மிச்சமாகின்றன. அத்தகு விதிவிலக்கான சூழ்நிலைகளை இந்திய சாட்சிய சட்டமானது **45 முதல் 51 வரையிலான பிரிவுகளின்** வழியே கூறுகின்றது.

விதிவிலக்குகள்:

1. வல்லுநர் கருத்து (Expert Opinion) - பிரிவு 45:

அயல்நாட்டுச் சட்டம், அறிவியல், கலை, கையெழுத்து அல்லது கைரேகை ஆகிய துறைகளில் சிறப்பாக தேர்ச்சி பெற்றுள்ளவர்களின் கருத்துக்கள் தொடர்புடையவையாகும். அத்தகையவர்கள் **வல்லுநர்கள் (experts)** என அழைக்கப்படுகின்றனர். [விரிவாக அடுத்த வினாவில் காண்க.]

2. வல்லுநர்களின் கருத்துக்கள் பற்றி தெளிவு தரும் பொருண்மைகள் (Facts bearing upon opinions of Experts) - பிரிவு 46:

வல்லுநர்களின் கருத்துக்கள் தொடர்புடையவையாக இருந்தாலும், அதே முடிவானதல்ல. எனவே அதை மறுக்கலாம் (rebutt) அல்லது உறுதியூட்டலாம் (corroborate). இவ்வாறு வல்லுநரின் கருத்தை மறுத்தோ அல்லது உறுதிப்படுத்தியோ கூறப்படும் பொருண்மைகளும் தொடர்புடையதேயாகும். எனவே இவை வல்லுநர்களின் கருத்து பற்றி தெளிவு தரும் பொருண்மைகள் எனப்படுகின்றன.

3. கையெழுத்து பற்றிய கருத்து (Opinion as to handwriting) - பிரிவு 47:

நீதிமன்றம் ஆவணம் ஏதேனும் எவரால் எழுதப்பட்டது அல்லது கையொப்பமிடப்பட்டது என்பது பற்றி ஒரு கருத்துக்கு வர வேண்டியிருக்கும்போது, அது எவரால் எழுதப்பட்டதாக அல்லது கையொப்பமிடப்பட்டதாக உத்தேசிக்கப்படுகிறதோ, அவரது கையொழுத்தோடு பழக்கப்பட்டுள்ள (acquainted with the handwriting) எவரேனும், அது அவரால் எழுதப்பட்டது அல்லது கையொப்பமிடப் பட்டது என்றோ

அல்லது அது அவரால் எழுதப்படவில்லை அல்லது கையொப்பமிடப் படவில்லை என்றோ சொல்லும் கருத்து ஒரு தொடர்புடைய (தீர்வுதவு) பொருண்மையாகும்.

'கையெழுத்தோடு பழக்கப்பட்டுள்ளவர்' என்பதில் பின்வரும் நபர்கள் அடங்குவர்.

i) அந்நபர் எழுதுவதை பார்த்து பழக்கப்பட்டவர்;

ii) தாம் எழுதிய ஆவணங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அந்நபர் எழுதிய ஆவணங்களைப் பெற்றிருப்பவர்; (உதாரணம்: அந்நபரின் பதில் கடிதங்களைப் பெற்றவர்.)

iii) சாதாரண அலுவல் நடப்பு முறையில் அந்நபரால் எழுதப்பட்ட ஆவணங்களைப் பெற்றிருப்பவர்; (உதாரணம்: அந்நபரின் கடிதங்களை அலுவல் முறையில் கோப்பிட்டு வைக்கும் எழுத்தர்.)

Fakhruddin v. State of Madhya Pradesh[1]

இவ்வழக்கில் கையெழுத்தானது யார் முன்னிலையில் இடப் பட்டதோ, அந்நபர் அதை, தன் முன்னிலையில் இடப்பட்டது என்று கூறினாலே போதும்; அக்கையெழுத்தை மெய்ப்பிக்க சாட்சியங்கள் ஏதும் தேவையில்லை என உச்ச நீதிமன்றம் கூறியது.

P.M.Das v. Central Bank[2]

இவ்வழக்கில், வாதி இரண்டாவது காசோலை புத்தகம் (Cheque Book) கோரி விண்ணப்பச் சீட்டில் தன் முன்னர் கையெழுத்திட்டார் என்று சாட்சி ஒருவர் அளித்த சாட்சியம் ஒன்றே வாதியின் கையொப்பத்தை மெய்ப்பிப்பதற்கு போதுமானது, என கல்கத்தா உயர் நீதிமன்றம் கூறியது.

கையெழுத்தை மெய்ப்பிக்கும் முறைகள் (Modes of proving handwriting):

பின்வரும் முறைகளில் ஒருவரது கையெழுத்து மெய்ப்பிக்கப் படலாம்:

i) அதை எழுதியவரே சாட்சியம் அளிப்பதன் மூலம்;

ii) கையெழுத்து நிபுணர் (வல்லநர்) மூலம் **(பிரிவு 45)**

iii) ஒருவரின் கையெழுத்தோடு பழக்கப்பட்டுள்ளவர் மூலம் **(பிரிவு 47)** (கையெழுத்தோடு பழக்கப்பட்டவர் என்பதில் யாரெல்லாம் அடங்குவர் என இவ்வினாவிலேயே முன்பே கண்டுள்ளோம்.)

iv) நீதிமன்றமே அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்தினை வேறு ஆவணத்தில் உள்ள அக்குறிப்பிட்டவரின் கையெழுத்துடன் ஒப்பிட்டு சரிபார்ப்பதன் மூலம் **(பிரிவு 73)**

1. AIR 1967 SC 1326
2. AIR 1978 Cal. at p.64

4. பிரிவு 47-A. - இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்து குறித்த கருத்து எப்பொழுது தொடர்புடையது? (Opinion as to digital signature - when relevant?)

எவரேனும் ஒரு நபரின் இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்து குறித்து நீதிமன்றம் ஒரு கருத்தை உருவாக்க வேண்டியிருக்கும் பொழுது, இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்துச் சான்றிதழ் அளித்த சான்று அலுவலரின் கருத்து ஒரு 'தீர்வுதவு பொருண்மையாகும். (அதாவது, தொடர்புடைய பொருண்மையாகும்)[1]

5. உரிமை அல்லது வழக்கம் பற்றிய கருத்து (Opinion as to existence of Right or Custom) - பிரிவு 48:

நீதிமன்றம் பொது வழக்கம் அல்லது உரிமை ஏதொன்றின் உண்மை பற்றி ஒரு கருத்துக்கு வரவேண்டியயிருக்கும்போது, அதன் உண்மை பற்றி அறிந்திருக்கக் கூடியவர்கள் கூறும் கருத்துக்கள் தொடர்புடைவையாகும். **உதாரணமாக,** ஊர்ப் பொதுக் கிணற்றில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்துதல் ஒரு பொது உரிமையாகும். இவ்வுரிமை பற்றி அறிந்துள்ள அக்கிராமத் தலைவர் கூறும் கருத்து தொடர்புடையதாகும்.

6. வழக்காறுகள், கோட்பாடுகள் முதலியவை பற்றிய கருத்துகள் (Opinion as to Usages, Tenents etc) - பிரிவு 49:

நீதிமன்றம் i) மக்கட்குழு அல்லது குடும்பம் ஏதொன்றின் வழக்காறுகளையும் கோட்பாடுகளையும் பற்றியோ, அல்லது ii) சமய அல்லது அறக்கட்டளை ஏதொன்றின் அமைப்பையும் ஆட்சியையும் பற்றியோ, அல்லது iii) குறிப்பிட்ட மாவட்டங்களிலோ, அல்லது குறிப்பிட்ட வகுப்புகளைச் சார்ந்த மக்களாலோ பயன்படுத்தப்படும் சொற்கள் அல்லது குழுவுக் குறிகளின் பொருளைப் பற்றியோ ஒரு கருத்துக்கு வர வேண்டியிருக்கும்போது, அவற்றை அறிவதற்குச் சிறப்பான வாய்ப்புப் பெற்றுள்ளவர்களின் கருத்துகள் தொடர்புடைய பொருண்மைகளாகும்.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் நடக்கும் வியாபாரத்தில்[1] பயன்படுத்தப்படும் ஒரு குழப்பமான சொல்லுக்கு,

1. மேற்படி பிரிவு 47-A, 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்ப சட்டத்தால், இந்திய சாட்சியத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.
2. திருச்சி பர்மா பஜாரில் உள்ள கடைகளில் வாடிக்கையாளர் யாரேனும் வெளிநாட்டுப் பொருட்கள் வாங்க வருவாரானால், அப்பொருளின் விலை நிர்ணயம் குறித்து மட்டும் கடைக்காரர்கள் (தமிழர்கள்) பர்மா மொழியில் பேசிக்கொண்டு, பிறகு அவ்வாடிக்கையாளரிடம் அவருக்குப் புரியும் மொழியில் விலையைத் தெரிவிப்பர். இங்கு விலை குறித்த அப்பர்மா சொல்லில் குழப்பம் ஏற்பட்டால், நீண்ட நாட்களாக அவ்விடத்தில் சிறப்பாக வியாபாரம் செய்து வரும் ஒரு வியாபாரியின் கருத்து தொடர்புடையதாகும்.

அவ்வூரில் சிறப்பான முறையில் வியாபாரம் செய்து வரும் ஒரு வியாபாரி கூறும் கருத்து, தொடர்புடையதாகும்..

7. உறவுமுறை பற்றிய கருத்து (Opinion on Relationship) - பிரிவு 50:

நீதிமன்றம், ஒருவருக்கு மற்றொருவரிடமுள்ள உறவுமுறை பற்றி ஒரு கருத்துக்கு வர வேண்டியிருக்கும்போது, அக்குடும்பத்தின் ஒரு உறுப்பினர் என்ற வகையிலோ அல்லது அந்த விஷயத்தைப் பற்றி அறிவதற்குச் சிறப்பான வாய்ப்புப் பெற்றுள்ள எவரேனும் அத்தகைய உறவுமுறையின் உண்மை பற்றி நடத்தையின் மூலம் வெளிப்படுத்தும் கருத்து, ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்.

எடுத்துக்காட்டாக, 1) Aக்கும் Bக்கும் திருமணம் ஆயிற்றா என்பது கேள்வி. அவர்கள் வழக்கமாகவே அவர்களது நண்பர்களால் கணவனும் மனைவியுமாகவே வரவேற்று நடத்தப்பட்டனர் என்னும் பொருண்மை தொடர்புடையதாகும்.

2) A என்பவர் B என்பவருக்கு முறைப்படி பிறந்த மகனா என்பது கேள்வி. A எப்போதுமே குடும்பத்தின் உறுப்பினர்களால் அத்தகைய வராகவே நடத்தப்பட்டார் என்னும் பொருண்மை தொடர்புடையதாகும்.

8. கருத்திற்கான ஆதாரங்கள் (Grounds of Opinion) - பிரிவு 51:

உயிருடன் உள்ள எவரது கருத்தேனும் தொடர்புடையதாக இருக்கும் போதெல்லாம், அத்தகைய கருத்துக்கு அடிப்படையான ஆதாரங்களும் தொடர்புடையவையாகும்.

எடுத்துக்காட்டாக, வல்லுநர் ஒருவர் தம்முடைய கருத்திற்கு வருவதற்கு ஏதுவாகத் தாம் செய்த சோதனைகளைப் பற்றி விவரிக்கலாம்.

இச்சோதனைகளைக் கொண்டு அவ்வல்லுநர் கூறிய கருத்து எந்த அளவிற்கு உண்மையானது அல்லது நம்பகத் தன்மை வாய்ந்தது என்ற கருத்திற்கு நீதிமன்றம் வர இயலும். எனவே அச்சோதனைகளும் தொடர்புடையதாக கருதப்படுகின்றன.

வல்லுநர் கருத்து சாட்சியம் (Expert opinion evidence)

52. Who is an Expert? Discuss the relevancy of expert opinion evidence. (வல்லுநர் என்பவர் யார்? வல்லுநரின் கருத்துச் சாட்சியத்தின் தொடர்புடைமை பற்றி ஆராய்க.)

(அல்லது)

Who is an Expert? When is his opinion relevant? (வல்லுனர் என்பவர் யார்? எப்போது அவர் அபிப்ராயம் தீர்வினைவாகும்?)

(அல்லது)

The importance of the expert evidence - Write short notes. (வல்லுநர் சாட்சியத்தின் முக்கியத்துவம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

பொதுவாக மூன்றாம் நபர்களின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. ஆனால் இதற்கு விதிவிலக்குகள் உண்டு. அதன்படி வல்லுநர்களின் மற்றும் பிற மூன்றாம் நபர்களின் சாட்சியம் **பிரிவு 45 முதல் 51 வரையில்** தொடர்புடையவையாகின்றன. இவற்றையெல்லாம் நாம் சென்ற வினாவிலேயே கண்டோம். இனி வல்லுநர் என்பவர் யார், அவரது சாட்சியம் எவ்விதங்களில் தொடர்புடையதாகிறது என்பதை விரிவாக பின்வருமாறு காண்போம்.

வல்லுநர் என்பவர் யார்?

பொதுவாக ஒரு வல்லுநர் என்பவர், ஒரு குறிப்பிட்ட துறையில் தெளிந்த அறிவு பெற்றுள்ளதன் வாயிலாக, அதில் வரும் பிரச்சனைகளுக்கு கருத்து கூறும் அளவிற்கு சிறப்பான தேர்ச்சி பெற்றவர் ஆவார்.

வல்லுநர் சாட்சியத்தின் முக்கியத்துவம் (Importance):

[சென்ற வினாவின் முன்னுரைப் பகுதியில் காண்க.]

வல்லுநருக்கு பிரிவு 45 கூறும் விளக்கம்:

பின்வரும் ஐந்து வகையான துறைகளில் (ஏதேனும் ஒனறில்) சிறப்பான தேர்ச்சி (specially skilled) பெற்றுள்ளவர்கள், வல்லுநர்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

i) அயல் நாட்டுச் சட்டம் (Foreign Law)

ii) அறிவியல் (Science)

iii) கலை (Art)

iv) கையெழுத்தின் தனித்தன்மை குறித்தவற்றில் (identity of Handwriting)

v) விரல் பதிவுகளின் தனித்தன்மை குறித்தவற்றில் (identity of Finger Impressions)

வல்லுநர் கருத்துகள் (Expert Opinions):

மேற்படி துறைகள் குறித்து வல்லுநர்கள் கூறும் கருத்து, வல்லுநர் கருத்துகள் எனப்படுகின்றது. அவை சம்பந்தப்பட்ட வழக்கில் தொடர்புடைய பொருண்மைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

சட்டப்பிரிவு 45 கூறும் எடுத்துக்காட்டுகள்:

a) A என்பவரின் மரணம் நஞ்சினால் விளைவிக்கப்பட்டதா என்ற கேள்வியில், A இறந்திருப்பது எந்த நஞ்சினால் என்று உத்தேசிக்கப் படுகிறதோ அந்த நஞ்சினால் உண்டாக்கப்படும் அறிகுறிகள் பற்றி வல்லுநர்கள் (மருத்துவ நிபுணர்) கூறும் கருத்துகள், தொடர்புடையவை ஆகும்.

b) ஒரு குறிப்பிட்ட பத்திரம் A என்பவரால் எழுதப்பட்டதா என்பது கேள்வி. Aவினால் எழுதப்பட்டிருப்பதாக மெய்பிக்கப்படும் மற்றொரு பத்திரம் தாக்கல் செய்யப்படுகிறது. இரண்டு பத்திரங்களும் ஒரே ஆளால் எழுதப்பட்டனவா அல்லது வெவ்வேறு ஆட்களால் எழுதப்பட்டனவா என்னும் கேள்விகளைப் பற்றிய வல்லுநர்களின் (கையெழுத்து நிபுணர்) கருத்துகள் தொடர்புடையவையாகும்.

Abdul Rahman v. State of Mysore[1]

இவ்வழக்கில் தங்கத்தின் தூய்மையை (Purity) பற்றி தங்க நகை செய்யும் தொழில்ரீதியான தங்கநகை ஆசாரி ஒருவர் கூறும் கருத்து, வல்லுநர் கருத்தாகும்; அத்தங்கத்தின் தூய்மை குறித்த பிரச்சனையில் அக்கருத்து தொடர்புடைய பொருண்மையாகும், என்று நீதிமன்றம் கூறியது. அந்த ஆசாரிக்கு தங்கம் குறித்த முறைப்படியான கல்வியறிவு இல்லையெனினும், அவரது அனுபவம் ஒன்றே போதும் என்பது மேற்படி வழக்கில் நிலைநாட்டப்பட்டது.

R. v. Oaklay[2]

இவ்வழக்கில் ஒரு விபத்து எப்படி நடந்திருக்கலாம் என்பது குறித்து அனுபவம் மிக்க சாலைப் போக்குவரத்துக் காவலர் ஒருவர் கூறும் கருத்து, வல்லுநர் கருத்தென்றும் அது தொடர்புடையது என்றும் கூறப்பட்டது.

Kishan Singh v. Singh[3]

இவ்வழக்கில் காது கேளாதோர் மற்றும் வாய் போசாதோர் பள்ளியின் முதல்வர், அத்தகு குறைகளைப் பற்றி சான்று கொடுப்பதற்கு ஏற்ற வல்லுநர் ஆவார் என்று கூறப்பட்டது.

வல்லுநர் கருத்துகளின் தொடர்புடைமை (Relevancy of Expert Opinion):

இனி பிரிவு 45ன்படி ஒவ்வொரு துறையிலும் வல்லுநர் கருத்துகள் எப்படி தொடர்புடையவையாக உள்ளன என்பதை பின்வருமாறு காண்போம்.

1. (1972) Cr. L. J. 407
2. (1979) K.T.R. 417
3. A.I.R. 1953 P & H 373

i) வெளிநாட்டுச் சட்டத்தில் (Foreign Law):

பொதுவாக நம்நாட்டு நீதிமன்றங்களில் வெளிநாட்டு சட்டக் கோட்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் எழுவதில்லை. அப்படி வெளிநாட்டு சட்டத்தின் கீழ் பிரச்சனையொன்றை முடிவு செய்ய வேண்டிய நிலை நீதிமன்றத்திற்கு எழும்பொழுது, அது அவ்வெளிநாட்டுச் சட்டத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் உதவியை நாடுகிறது. அவர்கள் கூறும் கருத்துக்களை தொடர்புடைய பொருண்மைகளாக ஏற்றுக் கொள்கிறது.

Aziz Bano v. Mohamad Ibrahim Hussain[1]

இவ்வழக்கில் எது வெளிநாட்டுச் சட்டம் என்பது குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன்படி வெளிநாட்டில் இயற்றப்பட்டிருந்தாலும், இந்தியாவில் அமலில் இருக்கும் ஒரு சட்டம், வெளிநாட்டுச் சட்டமாகாது என்று கூறப்பட்டது. இதில் திருமணம் குறித்த ஷியா சட்டம், இந்தியாவில் அமலில் உள்ள ஒரு (உள்நாட்டு) சட்டமாகும் என்றும், எனவே அது ஒரு வெளிநாட்டுச் சட்டமாகாது என்றும், ஆகவே அச்சட்டத்திற்கு நீதிமன்றங்கள்தாம் பொருள் விளக்கம் தர வேண்டுமேயொழிய, வல்லுநர்கள் அல்ல என்றும் அலகாபாத் நீதிமன்றம் கூறியது.

ii & iii) அறிவியல் மற்றும் கலை சார்ந்த விஷயங்கள் (Matters of Science or Art):

அறிவியல் மற்றும் கலை சார்ந்த விஷயங்கள் குறித்து எழும் வினாக்கள் அனைத்திற்கும் வல்லுநர் கருத்து தொடர்புடையதாகும். அறிவியல் மற்றும் கலையை மிக நுட்பமான பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சாதாரண மனிதன் ஒப்பிட்டுப்பார்க்க இயலாததும், சிறப்பான அறிவு, திறமை, தேர்ச்சி அல்லது அனுபவத்தால் மட்டுமே அறியக்கூடிய அனைத்தையும் அறிவியல் மற்றும் கலை என்ற பதங்களின் கீழ் அடக்கலாம்.

Jaya Mala v. Govt of J & K[2]

இவ்வழக்கில் கதிர் வீச்சு சோதனை (Radiological examination) மூலம் வயதை நிர்ணயம் செய்து வழங்கிய கருத்து, அறிவியல் சார்ந்த வல்லுநர் கருத்தாகும், எனப்பட்டது.

iv) & v) கையெழுத்து மற்றும் கைரேகையின் தனித்தன்மை குறித்தவற்றில் (Identity of Handwriting or Finger Impressions):

ஒருவரின் கையெழுத்து அல்லது கைரேகையின் தனித்தன்மையின்

1. I.L.R. 1975 47 All. 823
2. AIR 1982 S.C. 1297

அடிப்படையில் வழக்கொன்றை தீர்மானிக்க வேண்டியிருக்கும் பொழுது, அத்துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள நபரின் சாட்சியத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம். மேற்படி துறைகளில் நிபுணத்துவம் உள்ள நபர்களைத் தவிர, அக்கையெழுத்தோடு அல்லது ரேகையோடு பழக்கப்பட்ட வேறு நபர்களின் சாட்சியத்தையும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும்.

கையெழுத்து பற்றிய வல்லுநர் கருத்து முடிவானதல்ல. நீதிமன்றம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாது. அது பிற நேரடியான சாட்சியங்களாலோ அல்லது சூழ்நிலைச் சாட்சியங்களாலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும், என **Sashi Kumar v. Subodh Kumar**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் கைரேகை பற்றிய வல்லுநர் கருத்து உறுதியூட்டப்பட வேண்டியதில்லை.

வல்லுநர் சாட்சியமளிக்கும் விதம்:

வல்லுநர் நீதிமன்றத்திற்கு நேரில் வந்து வாய்மொழியாக சாட்சியமளித்தல் வேண்டும். அவரது அறிக்கையோ அல்லது சான்றிதழோ சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

வல்லுநர் கருத்தின் மதிப்பு (Value of Expert Opinion):

சாட்சிய சட்டமானது வல்லுநர் கருத்து தொடர்புடையது என்று கூறுகிறதேயொழிய அதை எந்த அளவிற்கு நம்பலாம் என்று கூறவில்லை. ஏனெனில் வல்லுநர் கருத்தானது,

i) முழுக்க முழுக்க முடிவானதல்ல. அதில் தவறு ஏற்பட வாய்ப்புண்டு. ஏனெனில் வல்லுநரும் ஒரு மனிதரே. கடவுளல்ல.

ii) வல்லுநர் திட்டமிட்டே தவறான கருத்தைக் கூறலாம்.

iii) வல்லுநர், தன்னை யார் கருத்து கூற அழைக்கிறார்களோ அவர்களுக்கு ஆதரவாகக் கருத்துக் கூறலாம்.

மேற்கண்ட காரணங்களால் வல்லுநர் கருத்தின் நம்பக மதிப்பு குறைகிறது. எனவே அவை பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட வேண்டியுள்ளது.

இதையே சாட்சிய சட்டம் மறைமுகமாக, வல்லுநர் கருத்துக்களை மறுத்தோ அல்லது உறுதியூட்டியோ சுட்டிக் காட்டப்படும் பொருண்மைகளும் தொடர்புடையவையே என **பிரிவு 46**ன் வழியே கூறுகிறது. இதனால் வல்லுநர் கருத்து முடிவானதல்லவென்றும், அதை மறுத்தும் அல்லது உறுதியூட்டியும் சாட்சியங்கள் அளிக்கப்படலாம் என்பதும், அச்சாட்சி யங்கள் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாகும் என்பதும் தெளிவாகிறது.

1. AIR 1964 S.C. 529

மேலும் **பிரிவு 51**ன்படி, வல்லுநர் ஒருவர் எதனடிப்படையில் (grounds) கருத்து கூறினாரோ, அந்த அடிப்படையும் ஒரு தொடர்புடைய பொருண்மையாகும். அடிப்படையை விளக்காத எந்தவொரு வல்லுநர் கருத்திற்கும் சாட்சிய மதிப்பில்லை. எனவே அந்த அடிப்படையை மறுக்கும் வண்ணமோ அல்லது உறுதியூட்டும் வண்ணமோ வல்லுநரிடம் குறுக்கு விசாரணை செய்வதன் மூலம், அவரது கருத்தின் நம்பகத் தன்மையையோ அல்லது அவரது வல்லுநர் தகுதியையோ அறியலாம்.

- o -

25 வழக்குத் தரப்பினர்களின் குண இயல்பு - எப்பொழுது தொடர்புடையது? [Character of Parties - When relevant?]

53. Discuss the rules relating to relevancy of character of parties and witness in a) Civil and b) Criminal Proceedings. [(அ) உரிமை வழக்கு மற்றும் (ஆ) குற்ற வழக்கு நடவடிக்கைகளில் தரப்பனர்களின் குணயியல்பு; மற்றும் சாட்சிகளின் குணயியல்பு தொடர்புடமை பற்றிய விதிகளை ஆராய்க.]

(அல்லது)

Discuss the relevancy of character in Civil and Criminal cases. (உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் குண இயல்பின் தீர்வினையை கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Explain the cases in which character of a person may be relevant. (எந்த நிகழ்கூறுகளில் நபர் ஒருவரின் பண்பு தீர்வினைவாகும் என்பதை விளக்குக.)

(அல்லது)

A Civil Court is not concerned with the character of a party to a case - Comment (ஒரு உரிமை இயல் நீதிமன்றத்திற்கு வழக்கின் ஒரு தரப்பினரின் குணயியல்பு பற்றி சம்பந்தமில்லை - விவரிக்கவும்)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 52 முதல் 55 வரையிலான பிரிவுகள் **தரப்பினர்களின் (parties)** குண இயல்பு எப்பொழுது தொடர்புடையது என்று கூறுகின்றன. அவற்றில் 52 மற்றும் 55 வது பிரிவுகள் உரிமையியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்பு பற்றியும், 53 மற்றும் 54 வது பிரிவுகள் குற்றவியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்பு பற்றியும் கூறுகிறது. இது தவிர சாட்சிகளின் **குண இயல்பு (Character of witness)** குறித்து பிரிவுகள் 146(3), 153, 155 ஆகியவை கூறுகின்றன. விரிவாக பின்வருமாறு காண்போம்

குண இயல்பு (Character) - விளக்கம்:

குண இயல்பு என்பது பொதுவாக ஒரு மனிதனின் நன்மதிப்பைக் (Reputation) குறிப்பதாகும். சாட்சிய சட்டத்தின் 55வது பிரிவின் கீழுள்ள விளக்கத்தின்படி, 'குணஇயல்பு' எனும் சொல், ஒருவர் எடுத்திருக்கின்ற

நற்பெயர் மற்றும் அவரது இயல்பான போக்கு ஆகிய இரண்டையுமே உள்ளடக்கும்.

நன்மதிப்பு அல்லது நற்பெயர் (Reputation): ஒரு மனிதனின் நன்மதிப்பு அல்லது நற்பெயர் என்பது, அம்மனிதன் மீது மற்றவர்கள் கொண்டுள்ள நல்லெண்ணம் அல்லது அவரைப் பற்றி உயர்வாக மற்றவர்கள் என்ன பேசுகிறார்களோ அது அம்மனிதனின் நற்பெயர் எனப்படும்.

இயல்பான போக்கு (Disposition): ஒருவருடைய செயல்கள், அவருடைய உள்மனதையும், உட்கருத்தையும், இயற்கையான மனப் பாங்கையும் காட்டினால், அது அவரது இயல்பான போக்கு எனப்படும்.

தரப்பினர்களின் மற்றும் சாட்சிகளின் குண இயல்பு (Character of Parties and Witness):

வழக்கில் உள்ள தரப்பினர்களின் குணவியல்புகளுக்கும் சாட்சிகளின் குணவியல்புகளுக்கும் வேறுபாடுண்டு.

சாட்சிகளின் குண இயல்பு (Character of Witness): பிரிவுகள் 146 (3), 153 மற்றும் 155 ஆகியவை சாட்சிகளின் குணவியல்புகளைப் பற்றிக் கூறுகின்றது. இப்பிரிவுகளின்படி சாட்சிகள் வழக்கின் தரப்பினராக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவர்களுடைய குணவியல்பு எப்பொழுதுமே தொடர்புடையவையாகும். ஏனெனில் அவர்களுடைய குணவியல்பு அவர்களுடைய நாணயத்தைப் பாதிப்பதாக உள்ளது.

வழக்கின் தரப்பினர்களின் குணவியல்பு (Character of Parties): பிரிவுகள் 52 முதல் 55 வரை வழக்கின் தரப்பினர்களின் குணவியல்பு களைப் பற்றிக் கூறுகின்றது. பொதுவாக வழக்குகளில் அதன் தரப்பினர்களின் குணவியல்பு தொடர்புடைய பொருண்மைகள் ஆகாது. ஏனெனில் நீதிமன்றத்தின் பணி வழக்கை விசாரிப்பதே தவிர, வழக்காடிகளின் குணவியல்புகளைப் பற்றியல்ல. எனினும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் தரப்பினர்களின் குணவியல்பு தொடர் புடைய பொருண்மையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இது உரிமையியல் வழக்குத் தரப்பினர்களின் குணவியல்பு என்றும் குற்றவியல் வழக்குத் தரப்பினர்களின் குணவியல்பு என்றும் பிரிக்கப்பட்டு, தொடர் புடைமை பற்றிக் கூறப்படுகின்றது. முதலில் உரிமையியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்பு எவ்வாறு தொடர்புடையதாக உள்ளது என்பதைக் காண்போம்.

a) உரிமையியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்பு (Character of Parties in Civil Cases) [பிரிவுகள் 52 & 55]:

பிரிவு 52ன்படி, உரிமையியல் வழக்குகளில் ஒரு தரப்பினரின் குண

இயல்பைப் பற்றி கூறும் சாட்சியம் தொடர்புடையது ஆகாது. எனவே 'ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு வழக்கின் ஒரு தரப்பினரின் நடத்தையைப் பற்றி சம்பந்தமில்லை' என்று கூறப்படுகிறது. ஆனால் இப்பொதுவிதிக்கு, விதிவிலக்குகள் உண்டு. அதன்படி அத்தரப்பினரின் குண இயல்பைக் குறித்தே அவ்வழக்கு இருக்குமானால் தொடர் புடையதாகும்.

உதாரணமாக, ஒருவர் கவனக்குறைவாக வாகனம் ஓட்டி சேதம் விளைவித்ததால், அவர் மீது நஷ்டஈடு கோரி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. இங்கு அந்நபர் இப்படித்தான் கவனக்குறைவாக வாகனம் ஓட்டும் பழக்கமுடையவர் என்று அவரது குண இயல்பைச் சுட்டிக் காட்டும் வண்ணம் சாட்சியமளித்தால், அது தொடர்புடையதாகாது.

ஆனால் ஒரு உரிமையியல் வழக்கில் தரப்பினரின் குண இயல்பே பிரச்சனைகுரியதாக இருப்பின், அது குறித்த பொருண்மைகள் தொடர் புடையதாகும்.

உதாரணமாக, 1957ஆம் ஆண்டின் இந்துக்கள் தத்தெடுத்தல் மற்றும் ஜீவனாம்ச சட்டம் (Hindu Adoptions and Maintenance Act) **பிரிவு 18ன்படி,** ஒரு இந்துப் பெண் கற்பு நெறி பிறழாமல் இருக்கும் பொழுதுதான், அவள் தன் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற முடியும். இங்கே பிரச்சனைக் குரிய பொருண்மை என்னவென்றால், அவள் கற்புடையவளா என்பதே. அதாவது இங்கு அப்பெண்ணின் குண இயல்பே (கற்பு நெறியே) பிரச்சனைக்குரியதாக உள்ளது. எனவே அவளது நல்ல அல்லது தீய இயல்பைக் குறித்த பொருண்மைகள் தொடர்புடையதாகும். அது குறித்த சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரிவு 55ன்படி, உரிமையியல் வழக்குகளில் எவரது குண இயல்பேனும், அவர் பெற வேண்டிய இழப்பீட்டுத் தொகையைப் பாதிப்பதாக இருக்கிறது என்ற பொருண்மையானது தொடர்புடையதாகும்.

அதாவது, ஏதேனும் வழக்கில் வாதியானவர் இழப்பீடு பெற வேண்டியிருந்து, அவ்விழப்பீட்டுத் தொகை அவ்வாதியின் குண இயல்பினால் பாதிக்கப்படுவதாக இருப்பின், அக்குண இயல்பு தொடர்புடையதாகும். இது பெரும்பாலும் அவதூறு கூறியமைக்காக (defamation) அல்லது ஆட்கடத்தலுக்காக (kidnapping) அல்லது வன்புணர்ச்சிக்காக அல்லது திருமண வாக்குறுதியை மீறியமைக்காக (Breach of promise of marriage) இழப்பீடு கோரி தொடுக்கப்படும் வழக்குகளில் வாதியின் இழிந்த குண இயல்பைச் சுட்டிக் காட்டுவதில் பயனாகிறது. இதனால் அவர் பெறும் இழப்பீட்டுத் தொகை குறையும் (பாதிக்கப்படும்).

உதாரணமாக, தமக்கு அளிக்கப்பட்ட திருமண வாக்குறுதியை மீறி மற்றொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு விட்டான் என்பதற்காக

நஷ்டஈடு கோரி அப்பெண் (வாதி), வாக்குறுதி அளித்தவன் மீது உரிமையியல் வழக்கு தொடர்கிறாள். இங்கு அப்பெண் ஏற்கனவே மணமானவள் என்று அவளது தீய இயல்பை காட்டும் பொருண்மைகளை அந்த ஆடவன் முன் வைக்கலாம். இது தொடர்புடையதாகும். ஏனெனில், இதனால் அப்பெண் கோரும் இழப்பீட்டுத் தொகை குறையும் அல்லது அவளது வழக்கே தள்ளுபடியாகும்.

மற்றொரு உதாரணத்தின்படி, தம்மை வன்புணர்வு செய்தான் என்பதற்காக ஒரு பெண் நஷ்டஈடு கோரி வழக்கு தொடுக்கிறாள். அவ்வன்புணர்ச்சிக்கு அப்பெண்ணும் ஆதரவளித்தாள் அல்லது அதற்கு எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்ற அவளது குண இயல்பைக் காட்டும் சாட்சியங்கள் அனுமதிக்கத்தக்கதாகும். ஏனெனில், இதனால் அவர் கோரும் இழப்பீட்டுத் தொகை குறையும்.

b) குற்றவியல் வழக்குகளில் தரப்பினர்களின் குண இயல்பு (Character of Parties in Criminal Cases) [பிரிவுகள் 53 & 54]:

குற்றவியல் வழக்குகளில் ஒருவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படும் வரை அவர் நிரபராதியே; குற்றவாளியல்ல, என நீதிமன்றம் அனுமானிக்கிறது. எனவே நல்ல குண இயல்பு உடையவர் என்பதை சாட்சியமாக சமர்ப்பிக்கலாம்.

இதைத்தான் **பிரிவு 53,** குற்ற வழக்கு நடவடிக்கைகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர் நற்குணம் (Good Character) உடையவர் என்ற பொருண்மை தொடர்புடையதாகும், என்று கூறுகிறது.

ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் நற்குணம் குறித்து அளிக்கப்படும் சாட்சியத்தை நீதிமன்றம் ஒரு வலுவற்ற சாட்சியமாகவே எடுத்துக் கொள்கிறது. அவரது குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படும் பொழுது, அந்நற்குணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

இதேபோல் **பிரிவு 54ன்படி,** குற்றவழக்கு நடவடிக்கைகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர் தீயகுணம் (Bad Character) உடையவர் என்னும் பொருண்மையானது, தொடர்பற்றதாகும் (irrelevant). ஆனால் அது பின்வரும் சந்தர்ப்பத்தில் தொடர்புடையதாகிறது:

i) ஒருவரது தீயகுணமே அவ்வழக்கின் பிரச்சனையாக இருப்பின்;

ii) குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு முந்தய வழக்கில் தண்டனைத் தீர்ப்பு ஏதும் வழங்கப்பட்டிருப்பின்.

சாட்சிகளின் குண இயல்பு (Character of Witness):

பிரிவு 146(3), 153 மற்றும் 155 ஆகியவை சாட்சிகளின் குண இயல்பு எப்பொழுது தொடர்புடையதாகிறது என்று குறிப்பிடுகின்றன.

பிரிவு 146 (3)ன்படி, சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்யும் போது அவரது குண இயல்பினைச் சோதிக்கக் கூடிய கேள்விகளைக் கேட்டு, அவரது நாணயத்தை அசைக்கலாம். சாட்சி நாணயமற்று இருந்தால் அவர் கொடுக்கும் சாட்சியங்கள் அவ்வளவு வலுவுடையதாக இருக்க முடியாது. எனவேதான் நல்லவர்கள் என்று போற்றப்படுபவர் களைக் கொண்டுதான் சாட்சியமளிக்கப்பட வேண்டும் என குற்றவியல் நடைமுறைச் சட்டமும் கூறுகிறது.

பிரிவு 153ன்கீழ், சாட்சிகளின் நாணயத்தை குறுக்கு விசாரணை மூலம் சோதிக்கலாம். சாட்சி ஏற்கனவே தண்டனைத் தீர்ப்புப் பெற்றவராக இருந்தால், தகுந்த ஆதாரங்களின் மூலம் அதனை மெய்ப்பிக்கலாம்.

பிரிவு 155ன்படி, சாட்சிகளின் குணவியல்பினைக் குறை காண முடியும். அதாவது சாட்சிகள் இலஞ்சம் பெற்றுக் கொண்டும், தூண்டப்பட்டும், தவறான நோக்கத்துடனும் சாட்சி சொல்ல வரலாம் என்பதால், அவர்களுடைய குண இயல்பினைக் குறுக்கு விசாரணையின் மூலம் சோதிக்கலாம்.

இதுவரை . . .

இந்திய சாட்சிய சட்டத்தின் முதல் பகுதி **(Part I)** பொருண்மைகளின் தொடர்புடைமை (Relevancy of Facts) பற்றி பல தலைப்புகளின் கீழ் கூறியதை இதுகாறும் கண்டோம். இனி மெய்ப்பித்தல் (on proof) பற்றி இரண்டாவது பகுதி **(Part II)** கூறுவதை பின்வருமாறு காண்போம்.

பகுதி - II
மெய்ப்பித்தல் பற்றி [On Proof]

26 நீதிமுறை கவன ஏற்பும் மெய்ப்பிக்கத் தேவையில்லாத பொருண்மைகளும் [Judicial Notice and Facts which need not be proved]

54. What are the facts of which a Court is bound to take judicial notice? (ஒரு நீதிமன்றத்தினால் நீதிமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய பொருண்மைகள் யாவை?)

(அல்லது)

Enumerate the facts which need not be proved. (மெய்ப்பிக்கப்பட வேண்டாத பொருண்மைகள் எவையெனக் குறிப்பிடுக.)

(அல்லது)

Enumerate the facts of which the court must take judicial notice. (நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பொருண்மைகளைக் கூறுக.)

(அல்லது)

"Facts judicially noticeable need not be proved" - Explain with list of such facts. ("நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத்தக்க பொருண்மைகளை நிருபிக்க வேண்டிய அவசியமில்லை" - அவ்வாறான பொருண்மையைப் பட்டியலுடன் விளக்குக.)

(அல்லது)

"What a party admits need not be proved". Does it apply in the case of accused person also. ("ஒருவர் ஒத்தேற்றுக்கொண்டதை மெய்ப்பிக்கத் தேவையில்லை" இக்கூற்று குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பொருத்துமா?)

(அல்லது)

Judical notice - Write short notes. (நீதிமுறை துணிவேற்பு - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

பொதுவாக ஒரு வழக்கின் அனைத்து பொருண்மைகளும் வாய்மொழி அல்லது ஆவணச் சாட்சியத்தின் மூலம் மெய்ப்பிக்கப்பட

வேண்டும். ஆனால் இப்பொதுவிதிக்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு. அதன்படி சில பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. அவை சாட்சிய சட்டத்தின் **56 முதல் 58 வரையுள்ள பிரிவுகளின்** வழியாக IIIவது அத்தியாயத்தின் (Chapter III) கீழ் கூறப்பட்டுள்ளது.

i) **பிரிவு 56ன்படி,** சில பொருண்மைகளை நீதிமன்றம் நீதிமுறையில் அப்படியே கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். (Judicial notice). அவற்றை மெய்ப்பிக்க வேண்டியதில்லை. அத்தகு பொருண்மைகள் யாவை என **பிரிவு 57** கூறுகிறது.

ii) **பிரிவு 58ன்படி,** தரப்பினர்களால் நீதிமன்றத்தால் ஒத்துக் கொள்ளப்பட்ட பொருண்மைகளை மெய்ப்பிக்க வேண்டியதில்லை (Facts admitted need not be proved).

நீதிமுறையில் கவன ஏற்பு (Judicial Notice) - விளக்கம்:

சில பொருண்மைகள் இருப்பதையோ அல்லது உண்மையான தென்பதையோ எவ்விதமான நிரூபணமும் கோராமல் அப்படியே நீதிமன்றங்கள் கவனத்திற்கு எடுத்து கொள்வதே, "நீதிமுறையில் கவன ஏற்பு" அல்லது "நீதிமுறைத் துணிவேற்பு" எனப்படுகிறது.

பிரிவு 56 கூறுவதாவது:-

இதைத்தான் **பிரிவு 56 ஆனது,** நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய எந்தப் பொருண்மையும் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை என்று கூறுகிறது.

உதாரணமாக, ஒரு வருடத்திற்கு 12 மாதங்கள் உள்ளது என்ற பொருண்மை மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை. இது நீதிமன்றம், நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பொருண்மை யாகும். அதற்கான நிரூபணத்தைக் கோரக்கூடாது. இது போன்று எப்பொருண்மைகளை நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று **பிரிவு 57** பின்வருமாறு கூறுகிறது.

நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருண்மைகளின் பட்டியல் (List) - பிரிவு 57:

1. இந்திய நாட்டின் எல்லைக்குள் அமலிலுள்ள சட்டங்கள் அனைத்தும்;
2. இங்கிலாந்து பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அனைத்து பொதுச் சட்டங்களும்;
3. இந்தியத் தரைப்படை, கப்பற்படை அல்லது வான்படைக்கான ஒழுங்கு முறை விதிகள்;
4. இங்கிலாந்து பாராளுமன்றம், இந்திய அரசியல் நிர்ணய சபை, இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபை ஆகியவற்றின் நடப்பு முறைகள் (Course of Proceedings);

5. இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தின் அவ்வப்போதைய முடியரசின் பதவி ஏற்பும் அவரது கையொப்பமும்;
6. இங்கிலாந்து நீதிமன்றங்கள் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய முத்திரைகள் (Seals); இந்திய நீதிமன்றங்களின் முத்திரைகள்; கடலியல் அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றங்கள் (Admirality) மற்றும் ஆவண எழுத்துப் பதிவாளரின் (Notories Public) முத்திரைகள்; இங்கிலாந்து பாரளுமன்ற சட்டம் ஒன்றினாலோ அல்லது இந்திய அரசின் சட்டம் ஒன்றினாலோ எவரேனும் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள முத்திரைகள்;
7. மாநிலத்தில் பொதுப்பதவி வகிக்கின்றவர்களின் பதவியேற்பும் அவர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள், பணிகள் மற்றும் கையொப்பங்கள்.
8. இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அரசு அல்லது முடியரசு ஒவ்வொன்றின் உளதாம் தன்மை (existence), பெயர் மற்றும் நாட்டுக் கொடி;
9. காலத்தின் பிரிவுகள், உலகின் புவியியல் பிரிவுகள் மற்றும் அதிகார பூர்வமான அரசிதழில் (Officical Gazette) அறிவிக்கப்பட்ட பொது விழாக்கள், நோன்புகள் மற்றும் விடுமுறைகள்;
10. இந்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட நில எல்லைகள்;
11. இந்திய அரசுக்கும், வேறெந்த அரசு அல்லது மக்கட்களுக்குமிடையே நடந்த பூசல்களின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் முடிவு;
12. நீதிமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் பெயர்கள்; மற்றும் வழக்குரைஞர்கள், அட்டார்னிகள், பிராக்டர்கள் (Proctors), வக்கீல்கள், வழக்குரைஞர்கள் மற்றும் நீதிமன்றத்தின் முன் ஆஜராகவோ, செயற்படவோ சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மற்றவர்களின் பெயர்கள்;
13. நிலத்தின் மீது அல்லது கடலில் செல்லுவதற்குரிய பாதை குறித்த விதி.

மேற்குறிப்பிட்ட பொருண்மைகள் குறித்தும், மேலும் பொது வரலாறு, இலக்கியம், அறிவியல் மற்றும் கலை தொடர்பான பொருண்மைகள் குறித்தும், நீதிமன்றம் நீதிமுறையில் கவனம் எடுத்துக் கொள்வதற்காக, தக்க புத்தகங்களின் அல்லது ஆவணங்களின் உதவியை நாடலாம். அவற்றைப் படித்தறிந்து ஒரு முடிவிற்கு வரலாம்.

யார் ஒரு விஷயத்தை (பொருண்மை) நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென கோருகிறாரோ, அவர் அப்படிப்பட்ட உதவும் புத்தகங்கள் அல்லது ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்க வேண்டும். தவறினால் நீதிமன்றம் அவ்விஷயத்தை நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள மறுக்கும்.

Onkarnath v. Delhi Administration[1]

இவ்வழக்கில் பிரிவு 57ன் கீழ் கூறப்பட்டுள்ள பொருண்மைகளின் பட்டியல் முழுமையானதல்ல என்றும், எனவே பொருத்தமான சூழ்நிலைகளில் நீதிமன்றமே பொருண்மைகளை நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், வாக்கெடுப்பு நாள், பிரபலமானவரின் இறப்பு தேதி, நாட்டை உலுக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மெய்ப்பிக்கக் கோருதல் கூடாது என்றும், அவற்றை நீதிமுறையில் அப்படியே கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், **உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திர சூட் (பின்னர் தலைமை நீதிபதி)** கூறினார்.

Masoom Alam v. Union of India[2]

இவ்வழக்கில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே போரானது உண்மையில் 1971 ஆம் வருடம் டிசம்பர் 3 ஆம் தேதி தொடங்கி இரு வாரங்கள் நீடித்தது என்பதை, பிரிவு 57ன்கீழ் நீதிமுறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருண்மையாகும், என்று கூறப்பட்டது.

ஒத்தேற்றுக் கொள்ளப்பட்ட பொருண்மைகள் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை (Facts admitted need not to be proved) - பிரிவு 58:

வழக்கு நடவடிக்கை எதிலும் அதற்குரிய தரப்பினர்களோ, அவர்கள் முகவர்களோ, கேள்வியின்போது ஒத்துக் கொள்ள உடன்படுகிற பொருண்மை எதுவும், அல்லது கேள்விக்கு முன்பு, அவர்கள் கையொப்பமிட்டு எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ள அவர்கள் உடன்படுகின்ற பொருண்மை எதுவும், அல்லது அந்த நேரத்தில் அமலிலுள்ள வாதுரை விதி எதன்படியேனும் தங்கள் வாதுரைகள் மூலம் அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கொள்ளப்படும் பொருண்மை எதுவும் அந்த வழக்கு நடவடிக்கை எதிலும் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை.

ஆனால், ஒத்தேற்றுக் கொள்ளப்பட்ட பொருண்மைகளை அத்தகைய ஒத்தேற்புரைகளின் மூலம் அல்லாமல் வேறு விதமாக மெய்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் தன் விருப்பம் போல் கோரலாம். ***(பிரிவு 58)***

நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒரு தரப்பினரோ, அவர்களின் முகவர்களோ வழக்கெழு வினாவின் போது வழங்கும் ஒத்தேற்புரைகளும், விசாரணையின் போது எழுத்துமூலமாக கையொப்பமிட்டு வழங்கும் ஒத்தேற்புரைகளும் பொருண்மைகளும், எதிர் தரப்பினரால் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை.

1. 1977 2 S.C. 614
2. 1973 S.C.C. 551 at pp. 9-10

ஒத்தேற்புரையானது, ஒத்துக் கொள்ளப்பட்ட பொருண்மைக்கு அறுதியான நிரூபணம் (Conclusive proof) ஆகாது. எனவே, அவற்றை வேறு வழிகளில் மெய்ப்பிக்க வேண்டுமென நீதிமன்றம் தன் விருப்பத்தின் பேரில் கோரலாம்.

ஆனால் அதே சமயத்தில் ஒத்தேற்புரையை ஆதாரமாகக் கொண்டு தீர்ப்பு வழங்குவதற்கு மேற்படி பிரிவு 58 தடை எதையும் விதிக்கவில்லை. இது பின்வரும் வழக்கில் கூறப்பட்டது.

Mahendra Munilal Nanavathi v. Sushila Nanavathi[1]

இவ்வழக்கில் எதிர் மனுதாரரான மனைவி கொடுத்த எதிர் வழக்குரையிலும் (Written Statement) சத்தியப் பிராமணத்திற்கு பின்னர் கொடுத்த சாட்சியத்திலும் மனுதாரரான கணவனைத் திருமணம் செய்து கொள்ளும் முன்னரே தான் கருவுற்று இருந்ததாகக் கூறும் பொருண்மையை ஒத்துக் கொண்டார். அதனை ஆதாரமாகக் கொண்டே விசாரணை (கீழ்) நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியது. இதில் தவறேதுமில்லை என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு மேற்படி பிரிவு 58 பொருந்துமா?

குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒத்தேற்றுக் கொள்வது என்பது அவர் தனது குற்றத்தை ஏற்று 'குற்ற ஏற்புரை' (Confession) அளிப்பதேயாகும். எனவே அவற்றை மெய்ப்பித்தே ஆக வேண்டும். பிரிவு 58ன்படி ஒத்தேற்றுக் கொண்டதை மெய்ப்பிக்கத் தேவையில்லை என்று கூற முடியாது. ஆகவே குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பிரிவு 58 பொருந்தாது.

- o -

1. AIR 1965 S.C. 364

27 வாய்மொழிச் சாட்சியம் (Oral Evidence)

வாய்மொழிச் சாட்சியம்

55. "Oral evidence must, in all cases, be direct." Explain ("எல்லா நிகழ்வுகளிலும் வாய்மொழி சாட்சியம் நேர்முகமானதாக இருத்தல் வேண்டும்." விளக்குக.)

(அல்லது)

"Oral evidence, must in all cases whatever, be direct." Explain the rule and mention the exception. ("வாய்மொழிச் சாட்சியம் எல்லா சந்தர்ப்பங்களிலும், எப்படிப்பட்டதாக இருப்பினும் அது நேரடியானதாகவே இருக்க வேண்டும்". இவ்விதியை விளக்கி, அதன் விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain fully the rule that oral evidence must in all cases, be direct. Is there any exception to the rule? (வாய்மொழி சாட்சியம் எல்லா நிகழ்வுகளிலும் நேரடியானதாக இருக்க வேண்டும் என்ற விதியை முழுவதும் விளக்குக. இவ்விதிக்கு விதிவிலக்குகள் ஏதேனும் உண்டா?)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் IVவது அத்தியாயம் (Chapter IV) வாய்மொழி சாட்சியம் பற்றிக் கூறுகிறது. சாட்சியங்களில் வாய்மொழி சாட்சியமென்றும், ஆவண சாட்சியமென்றும் இருவகை உண்டு. அவற்றில் வாய்மொழி சாட்சியத்தைப் (Oral) பற்றி சாட்சிய சட்டத்தின் **59 மற்றும் 60வது பிரிவுகள்** கூறுகின்றன. விரிவாக பின்வருமாறு காண்போம்.

வாய்மொழி சாட்சியம் மூலம் மெய்ப்பித்தல் - பிரிவு 59:

பிரிவு 59ன்படி, ஆவணங்களின் **அல்லது மின்னியக்க பதிவேடுகளின் (electronic records)**[1] உள்ளடக்கங்கள் தவிர எல்லா பொருண்மைகளையும் வாய்மொழி சாட்சியம் மூலம் மெய்பிக்கலாம்.

ஆவணங்களின் உள்ளடக்கத்தை ஏன் வாய்மொழி சாட்சியத்தின் மூலம் மெய்பிக்க வேண்டியதில்லை என்றால், அந்த ஆவணத்தையே ஒரு சிறந்த சாட்சியமாக (best evidence) நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதன் மூலம் அதன் உள்ளடக்கங்களை மெய்ப்பித்து விடலாம். இதற்காக தனியாக

1. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்ப சட்டத்தால் மேற்படி மின்னியக்க பதிவேடுகள் எனும் சொற்கள் சேர்க்கப்பட்டது.

வாய்மொழிச் சாட்சியம் கொடுக்கப்பட வேண்டியதில்லை. அதாவது அந்த ஆவணமே தன்னைப் பற்றி பேசுகின்றது.

வாய்மொழிச் சாட்சியம் நேரடியானதாக இருத்தல் வேண்டும் (Oral evidence must be direct) - பிரிவு 60:

சாட்சியங்களில் இரு பெரும் பிரிவுகள் உள்ளன. அவை 1. நேரடி அல்லது மூலச் சாட்சியம் (Direct or original evidence) 2. கேள்வி நிலைச் சாட்சியம் (Hearsay evidence).

அவற்றில் நேரடிச் சாட்சியமென்பது ஒருவர் தான் நேரடியாகக் கண்டதை (seen) அல்லது நேரடியாகக் கேட்டதை (heard) அல்லது புலன்களால் நேரடியாக உணர்ந்ததை (perceived by sense) அவரே கூறுதலாகும். இதனடிப்படையில் வாய்மொழிச் சாட்சியம் நேரடியாகவே இருத்தல் வேண்டும் என்று சட்டம் உரைக்கிறது. அதாவது பிறர் கண்டதை, கேட்டதை அல்லது உணர்ந்ததைக் கூறும் வண்ணம் வாய்மொழிச் சாட்சியம் அளிக்கப்படல் கூடாது. (அப்படிக் கூறினால் அது கேள்விநிலைச் சாட்சியமாகும்.) இதைத்தான் **பிரிவு 60** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

1. ஒரு பொருண்மை பார்க்கும்படியாக இருக்கும் பொழுது (could be seen) அது சம்பந்தமாக சாட்சி கூறுபவர், "நான் அதைப் பார்த்தேன்" என்று அவரே கூற வேண்டும்.

2. ஒரு பொருண்மை கேட்கும்படியாக இருக்கும் பொழுது (could be heard) அது சம்பந்தமாக சாட்சி கூறுபவர், "நான் அதைக் கேட்டேன்" என்று அவரே கூற வேண்டும்.

3. ஒரு பொருண்மை புலன்களால் உணரும்படி இருக்கும் பொழுது (could be perceived), அது சம்பந்தமாக சாட்சி கூறுபவர், "நான் அதை உணர்ந்தேன்" அல்லது "நான் உணரும் வகையில் அது இருந்தது" என்று அவரே கூற வேண்டும்.

விதிவிலக்குகள் (Exceptions):

வாய்மொழி சாட்சியம் நேரடியாக இருத்தல் வேண்டும் என்ற விதிக்கு, இரண்டு விதிவிலக்குகள் பிரிவு 60லேயே கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி,

1. பொதுவாக விற்பனைக்கு வைக்கப்படும் ஆய்வு நூல் (treatise) எதிலேனும் தெரிவிக்கப்பட்ட வல்லுநர் கருத்துகளையும் (Opinion of experts), அத்தகைய கருத்துக்களை கொள்வதற்கு அடிப்படையாகவுள்ள ஆதாரங்களையும் (ground), அந்த நூலை எழுதிய நூலாசிரியரே நேரடியாக வாய்மொழிச் சாட்சியமளிப்பதன் மூலமாக மெய்ப்பித்தல் வேண்டும்.

ஆனால் அந்நூலாசிரியர் இறந்துவிட்டிருந்தால் அல்லது கண்டு பிடிக்கப்பட முடியாதவராக இருந்தால் அல்லது சாட்சியம் கொடுக்கத் திறனற்றவராக ஆகியிருந்தால் அல்லது நியாயமானதென்று நீதிமன்றம் கருதும் அளவுக்குத் தாமதமோ, செலவோ இல்லாமல் ஒரு சாட்சியாக அவர் தருவிக்கப்பட முடியாமலிருந்தால், அத்தகைய ஆய்வு நூல்களையே தாக்கல் செய்வதன் மூலம் மெய்ப்பிக்கலாம்.

2. மேலும், வாய்மொழிச் சாட்சியமானது ஒரு ஆவணமல்லாத ஏதேனும் ஒரு பருப் பொருளின் (material thing) உண்மையை அல்லது நிலையை சுட்டுமானால், நீதிமன்றம் தாம் பொருத்தமென நினைத்தால், தன் ஆய்வுக்காக அந்த பருப் பொருளையே தன்முன் கொண்டு வந்து வைக்குமாறு கோரலாம்.

முடிவுரை:

நீதிமன்றத்தில் எப்பொழுதும் சிறந்த சாட்சியத்தையே (best evidence) சமர்ப்பித்தல் வேண்டும் என்பது சாட்சிய சட்டத்தின் அடிப்படை விதி. அதனடிப்படையில் நேரடி சாட்சியத்தின் (direct evidence) பாற்பட்ட வாய்மொழிச் சாட்சியமானது சிறந்த சாட்சியமாகும். இதில் ஒருவர் தானே நேரடியாக பார்த்ததை, கேட்டதை, உணர்ந்ததை கூறுகிறார். ஆனால் இதற்கு நேர்மாறானது கேள்விநிலைச் சாட்சியமாகும் (Hearsay evidence). விரிவாக அடுத்து வரும் வினாவில் காண்போம்.

கேள்விநிலைச் சாட்சியம் (Hearsay Evidence)

56. What is hearsay evidence? When is it admissible under Indian Evidence Act? (கேள்விநிலைச் சான்று என்பது என்ன? சாட்சிய சட்டத்தின் கீழ் அது எப்போது கொள்ளத்தக்கது?)

(அல்லது)

Hearsay evidence - Write short notes. (கேள்விநிலைச் சாட்சியம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

"Hearsay evidence is no evidence." Comment. ("கேள்விநிலைச் சாட்சியம் ஒரு சாட்சியமாகாது" - விமர்சிக்க.)

கேள்விநிலைச் சாட்சியம் - விளக்கம்:

ஒருவர் தானே நேரடியாக பார்த்ததை, கேட்டதை அல்லது புலன்களால் உணர்ந்ததை கூறும் சாட்சியம், நேரடிச் சாட்சியம் (Direct or Original evidence) எனப்படும். அதாவது ஒரு சம்பவம் பற்றி, சாட்சியானவர் தானே நேரில் பார்த்திருக்க வேண்டும் அல்லது கேட்டிருக்க வேண்டும் அல்லது புலன்களால் உணர்ந்திருக்க வேண்டும். இதற்கு மாறாக,

சாட்சியானவர் அச்சம்பவத்தை தானே நேரில் பார்க்காமல், கேட்காமல் அல்லது உணராமல், வழக்கில் உள்ள பொருண்மைகளைப் பற்றி பிறர் (மூன்றாம் நபர்) மூலம் கேட்டுத் தெரிந்து அதைச் சாட்சியமாகக் கூறினால், அது கேள்விநிலைச் சாட்சியமாகும். அதாவது இவ்வகைச் சாட்சியம் சாட்சியின் சொந்த அறிவின் (Personal knowledge) அடிப்படையில் அமைவதில்லை. இது இடையிலுள்ளவர் வழியாக வந்த செய்திகளை (second hand information) அடிப்படையாகக் கொண்டதாகும்.

எடுத்துக்காட்டு:

A என்பவர் B என்பவரைத் தடியால் அடிக்கின்றார். இதை C என்பவர் நேரில் பார்க்கின்றார். மேலும் D என்பவர் Bயின் கூச்சலைக் கேட்கின்றார். E என்பவர், மேற்படி A கையில் தடியுடன் ஓடியதைப் பார்க்கின்றார். மேற்படி சம்பவத்தில், இந்திய சாட்சிய சட்டத்தின்படி, C, D மற்றும் E ஆகியோர் நேரடிச் (மூலச்) சாட்சியமாக கருதப்படுவார்கள். ஏனெனில் இவர்கள் அனைவரும் தாங்களே நேரடியாக மேற்படி சம்பவத்தின் பொருண்மைகளைத் தெரிந்து கொண்டவர்கள் ஆவர்.

இதில் X என்பவர் C என்பவர் மூலம் மேற்கண்ட சம்பவத்தைத் தெரிந்து கொண்டால், அவர் (X) சாட்சியமாக வரும்பொழுது தன்னிடம் C என்பவர் என்ன கூறினாரோ அதையே திருப்பிக் கூறுவார். இவ்வாறு பிறர் கூறியதை (இடையிலுள்ளவர்கள் வழியாக வந்த செய்தியை) திருப்பிப் கூறுவதென்பது கேள்விநிலைச் சாட்சியமாகும்.

கேள்விநிலைச் சாட்சியத்தை நீதிமன்றம் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை? - காரணங்கள் வருமாறு:

1. கேள்வி நிலைச் சாட்சியம், சாட்சியின் சொந்த அறிவின் அடிப்படையில் அமைவதில்லை.
2. கேள்விநிலைச் சாட்சியம் சத்தியப் பிராமணத்தின் பேரில் அளிக்கப் படுவதில்லை. அதாவது சாட்சி நீதிமன்றத்தால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு, சாட்சியம் பெறப்படுவதில்லை.
3. கேள்விநிலைச் சாட்சியமென்பது ஒரு வதந்தியே. எனவே வதந்திகளைக் கேட்பதால் நீதிமன்றத்தின் நேரம் வீணடிக்கப்படுகிறது.
4. இச் சாட்சியத்தை குறுக்கு விசாரணை (Cross-examination) செய்ய முடியாது.
5. ஒரு செய்தி பற்றிக் கேள்விப்படும் பொழுது அதைத் தவறாகப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.
6. இவ்வகைச் சாட்சியம் கூறும் சாட்சிக்கு தாம் கூறும் சாட்சியத்தில் தனிப்பட்ட பொறுப்பு ஏதும் கிடையாது. எனவே கேட்டறிந்த செய்தியை கூட்டியோ அல்லது குறைத்தோ சொல்வதற்கு வாய்ப்புள்ளது.

7. இவ்வகைச் சாட்சியத்தை அனுமதித்தால், வலுவான ஆதாரம் தேவைப்படும் வழக்குகளுக்கும் சாதாரணமான சாட்சியமளித்தாலே போதும் என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

விதிவிலக்குகள்:

"கேள்விநிலைச் சாட்சியம் ஒரு சாட்சியமாகாது" என்றாலும், அதற்கு சில விதிவிலக்குகளை சாட்சியச் சட்டம் வகுக்காமலில்லை. ஏனெனில் சில சமயங்களில் கேள்விநிலைச் சாட்சியம் என்ற பெயரில் நம்பகமான சில சாட்சியங்களும் ஏற்றுக் கொள்ளப்படாமல் விட்டுவிடப்படுகின்றது. இதைத் தவிர்க்கும் பொருட்டு பின்வரும் விதிவிலக்குகளைச் சாட்சியச் சட்டம் அங்கீகரிக்கின்றது.

1. **ஒன்றிய செயல் (Res Gestae)** *(பிரிவு 6)*: ஒருவர் கூறிய உரையை மற்றொருவர் மூலமாக மெய்ப்பிக்கலாம். ஆனால் அவ்வுரை அப்பிரச்சனையின் ஒரு பகுதியாக அமைய வேண்டும். அதாவது ஒன்றிய செயலாக இருக்க வேண்டும். (இதை ஆரம்ப அத்தியாயத்திலேயே கண்டுள்ளோம்)

2. **ஒத்தேற்புரையும் குற்ற ஏற்புரையும் (Admission and Confession):** உரிமையியல் வழக்குகளில் ஒரு பொறுப்பை ஒத்துக் கொள்வதோ அல்லது குற்றவியல் வழக்குகளில் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வதோ நீதிமன்றத்திற்கு வெளியே எனும் பொழுது, யார் முன்பு அவ்வுரைகள் செய்யப்பட்டதோ, அவர் சாட்சியமளிப்பதின் வாயிலாக அவ்வுரைகள் மெய்ப்பிக்கப்படலாம்.

3. **பிரிவு 32ன் கீழான உரைகள் (Statements relevant under Sec. 32):** பிரிவு 32ன் கீழ் அனுமதிக்கப்படும் உரைகள் அனைத்தும் பெரும்பாலும் இறந்து போனவர்களாலோ அல்லது சாட்சிகளாக அழைக்கப்பட முடியாதவர்களாலோ செய்யப்பட்டவையாகும். அவர்களது உரைகளை எவர் கேட்டனரோ, அவர்கள் சாட்சியமளிப்பதன் மூலம் மெய்ப்பிக்கலாம்.

4. **பொது ஆவணங்களில் காணப்படும் உரைகள் (Statements in Public Doucments):** பாராளுமன்ற சட்டங்கள், அலுவலக ரீதியான புத்தகங்கள், பதிவேடுகள் போன்ற பொது ஆவணங்களில் உள்ள வரையறைகளை மெய்ப்பிப்பதற்கு அவற்றையே நீதிமன்றத்தின் முன்னர் தாக்கல் செய்தால் போதும். மேலும் அவ்வாவணங்களின் உரைகள் தொடர்பாக கேள்வி நிலைச் சாட்சியமும் அனுமதிக்கப்படலாம்.

Octanious Steel Co. v. Endogram Tea Co.,[1] என்ற வழக்கில் C.B.I. விசாரித்த சில ஆவணங்களை மெய்ப்பிப்பதற்கு கேள்விநிலைச் சாட்சியத்தை கல்கத்தா உயர் நீதிமன்றம் அனுமதித்தது.

5. முந்தய வழக்குகளில் வழங்கப்பட்ட சாட்சியம் **(Evidence in**

1. AIR 1980 Cal. 83

former proceedings): பிரிவு 33ன்படி முந்தய வழக்கில் சாட்சியமளித்தவர் இறந்து விட்டிருந்து அல்லது காணாமல் போயிருந்து மீண்டும் அதே தரப்பினர்களுக்கிடையே எழும் பிந்தய வழக்கில் அவரது சாட்சியமானது மற்றொரு சாட்சியால் மெய்ப்பிக்கப்படலாம்.

6. **ஆய்வு நூலில் தெரிவிக்கப்பட்ட வல்லுநர் கருத்துகள் (Statement of Experts in Treatises):** பிரிவு 60ன் கீழான உள்வாசகத்தின்படி, ஆய்வு நூலில் தெரிவிக்கப்பட்ட வல்லுநர் கருத்துகளை அந்நூலாசிரியரே மெய்ப்பித்தல் வேண்டும். அவர் இறந்து விட்டிருப்பின் அல்லது காணாமல் போயிருப்பின், அந்த ஆய்வு நூல்களையே தாக்கல் செய்வதன் மூலம் மெய்ப்பிக்கலாம்.

- o -

28 ஆவண சாட்சியம் [Documentary Evidence]

தலைநிலை அல்லது முதல்தரச் சாட்சியம் (Primary Evidence)

57. What is primary and secondary evidence? (தலைநிலைச் சான்று மற்றும் சார்நிலைச் சான்று என்றால் என்ன?)

(அல்லது)

"The contents of a document must be proved by the document itself" - Examine the validity of this statement. ("ஒரு ஆவணத்தின் உள்ளடக்கங்களை அந்த ஆவணத்தின் மூலமே மெய்ப்பிக்க வேண்டும்" - இக்கருத்தின் செல்லுத்தன்மையை ஆராய்க.)

முன்னுரை:

இந்திய சாட்சியச் சட்டத்தின் Vவது அத்தியாயம் (Chapter V) ஆவண சாட்சியத்தைப் (Documentary evidence) பற்றிக் கூறுகின்றது. அதில் **61 முதல் 66 வரையுள்ள சட்டப் பிரிவுகள்** தலைநிலைச் சாட்சியம் மற்றும் சார்நிலைச் சாட்சியம் பற்றிக் கூறுகிறது. இவற்றை விளக்கமாக அறிவதற்கு முன்பு, முதலில் ஆவண சாட்சியத்தின் விளக்கத்தை இங்கு சற்று நினைவு கூறல் நலம்.

ஆவண சாட்சியம் - விளக்கம்:

சாட்சியச் சட்டத்தின் 3வது பிரிவின்படி, வழக்கின் பொருண்மை குறித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபடும் அனைத்து ஆவணங்களுமே பொதுவாக ஆவண சாட்சியங்கள் எனப்படும். இத்தகைய ஆவணத்தை வைத்திருக்கும் ஒருவர் தானாகவோ அல்லது நீதிமன்ற ஆணைக்குட் பட்டோ அவற்றை நீதிமன்ற ஆய்விற்காகச் சமர்பிக்கலாம். இவ்வாறு ஆவணங்கள் மூலம் அளிக்கப்படும் சாட்சியமே 'ஆவண சாட்சியம்' எனப்படுகிறது.

ஆவணத்தை எவ்வாறு மெய்ப்பிக்கலாம்? (பிரிவு 61):

ஒரு ஆவணத்தின் உள்ளடக்கங்களை (Contents) தலைநிலைச் சாட்சியம் மூலமாகவோ அல்லது சார்நிலைச் சாட்சியம் மூலமாகவோ மெய்ப்பிக்கலாம், என **பிரிவு 61** கூறுகிறது. தலைநிலை மற்றும் சார்நிலைச் சாட்சியத்தின் விளக்கம் வருமாறு.

தலைநிலைச் சாட்சியம் (Primary Evidence) [பிரிவு 62]:

ஒரு ஆவணத்தை சாட்சியமாக நீதிமன்ற ஆய்வுக்காக முன்னிலைப்படுத்த வேண்டும் பொழுது, அந்த ஆவணத்தையே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதாவது, அதன் அசலையே (Original) சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அசல் ஆவணமே, தலைநிலைச் சாட்சியம்[1] என **பிரிவு 62** கூறுகிறது. (Primary evidence means the document itself produced for inspection of the Court.)

விளக்கம் 1: ஒரு ஆவணம் பல்வேறு பகுதிகளாக (several parts) எழுதிக் கொடுக்கப்படலாம். அப்பொழுது, அந்த ஒவ்வொரு பகுதியும் அந்த ஆவணத்தின் தலைநிலைச் சாட்சியமாகும்.

உதாரணமாக, ஒரு ஆவணத்தில் பல நபர்கள் சம்பந்தப்படலாம். அந்நிலையில் அந்த ஒவ்வொரு நபரும் அந்த ஆவணத்தின் ஒரு பாதியைப் பெற விரும்பினால், அந்த ஆவணம் பல பிரதிகளாக எழுதப்பட்டு, அனைத்து பிரதிகளிலும் அந்த அனைத்து நபர்களும் கையெழுத்திட வேண்டும். இவ்வாறு எழுதப்பட்ட ஒவ்வொரு பிரதியும் தலைநிலைச் சாட்சியமேயாகும்.

ஒரு ஆவணம் எதிர் பிரதியோடு (Counterpart) எழுதிக் கொடுக்கப் பட்டு, ஒவ்வொரு எதிர் பிரதியும் தரப்பினர்களில் ஒருவரால் மட்டுமோ அல்லது ஒரு சிலரால் மட்டுமோ எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த ஒவ்வொரு எதிர் பிரதியும் அதனை எழுதிக் கொடுத்துள்ள தரப்பினர்களுக்கு எதிரான தலைநிலைச் சாட்சியமாகும்.

உதாரணமாக, Aயும் Bயும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். ஒவ்வொருவருக்கும் அவ்வொப்பந்தப் பத்திரத்தின் ஒரு பிரதி வேண்டுமென்பதால், அது மொத்தம் இரு பிரதிகளாக எழுதப்படுகின்றது. A வைத்துக் கொள்ள விரும்பும் பிரதியில் Bயும் B வைத்துக் கொள்ள விரும்பும் பிரதியில் Aயும் கையெழுத்திட்டு அவற்றைப் பரிமாறிக் கொள்கின்றனர். இங்கு அந்த இரு பிரதியும் ஒன்றுக்கொன்று எதிர் பிரதியாகும். எனவே, A கையெழுத்திட்ட பிரதி Bக்கு எதிராகவும், B கையெழுத்திட்ட பிரதி Aக்கு எதிராகவும் தலைநிலைச் சாட்சியமாகும். அங்ஙனம் யார் கையெழுத்திடவில்லையோ அவர்களுக்கு எதிராக அது **பிரிவு 63 (4)** ன்படி சார்நிலைச் சாட்சியமாகும் (Secondary evidence). அதாவது B கையெழுத்திடாத பிரதியை Aக்கு எதிராக, Bயே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது அவருக்கு (Bக்கு) எதிராக சார்நிலைச் சாட்சியமாகும்.

விளக்கம் 2: அச்சடிப்பது (Printing) கல்லச்சு அடிப்பது (lithography) அல்லது புகைப்படம் எடுப்பது போன்ற ஒரே விதமான செய்முறையால் (Uniform process), பற்பல ஆவணங்கள் தயாரிக்கப்படும் பொழுது, அவை

1. இதனை முதல்தரச் சாட்சியம் என்றும் அழைப்பர்.

ஒவ்வொன்றும் மற்றவற்றின் உள்ளடக்கத்துக்கு தலைநிலைச் சாட்சியமாகும். ஆனால் அவையனைத்தும் பொதுவான, ஒரு மூலத்தின் (Common original) நகல்களாக இருக்கும்பொழுது, அவை அம்மூலத்தின் உள்ளடக்கத்துக்கு தலைநிலைச் சாட்சியம் அல்ல. (சார்நிலைச் சாட்சியமாகும்).

எடுத்துக்காட்டாக, விளம்பர அட்டைகள் (Placards) பலவற்றை ஒருவர் தம் வசம் வைத்துள்ளார். அவை அனைத்தும் ஒரு மூலத்திலிருந்து ஒரே காலத்தில் **அச்சடிக்கப்பட்டவை.** எனவே அந்த விளம்பர அட்டைகளில் ஏதேனுமொன்று, மற்றொரு அட்டையின் உள்ளடக்கத்திற்கு தலைநிலைச் சாட்சியமாகும். ஆனால் அவற்றில் எதுவுமே அந்த விளம்பரத்தை உருவாக்குவதற்காக உண்டாக்கப்பட்ட மூலத்தின் உள்ளடகத்திற்கு தலைநிலைச் சாட்சியமாகாது. (ஆனால் சார்நிலைச் சாட்சியமாகும்.)

சார்நிலைச் சாட்சியம் (Secondary Evidence) [பிரிவு 63]:

நீதிமன்ற ஆய்வுக்கு அசல் (மூல) ஆவணத்தை சமர்பிக்க முடியாத பொழுது, தக்க காரணங்களைக் கூறி, அந்த அசல் ஆவணத்திற்குப் பதிலாக சமர்பிக்கப்படும் ஆவணங்களே சார்நிலைச் சாட்சியமாகும்.[1] அத்தகு சாட்சியம் 5 வகைப்படும் என பிரிவு 63 கூறுகிறது. அவை வருமாறு

1) சான்றளிக்கப்பட்ட நகல்கள் (Certified Copies);
2) இயந்திரச் செய்முறைகளால் (Mechanical Processes) அசல் ஆவணத்திலிருந்து தயாரிக்கப்பட்ட நகல்களும்; அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட நகல்களும்;
3) அசலிலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட நகல்கள் (Copies made from or compared with the original);
4) ஆவணங்களின் எதிர்ப் பிரதிகள் (Counterparts) அவற்றை எழுதிக் கொடுக்காத தரப்பினர்களுக்கெதிராக;
5) ஒரு ஆவணத்தை நேரில் கண்டறிந்துள்ளவர் எவராலும் அதன் உள்ளடக்கத்தைப் பற்றி அளிக்கப்படும் வாய்மொழி விபரங்கள்.

எடுத்துக்காட்டுகள்: 1. நகலெடுக்கும் இயந்திரத்தினால் (Copying Machine) எடுக்கப்பட்ட நகல், அசலிலிருந்து எடுக்கப்பட்டது என்று காட்டப்படுமானால், அந்த இயந்திரத்தால் எடுக்கப்பட்ட கடிதத்தின் நகலுடன் ஒத்துப் பார்க்கப்பட்ட நகலொன்று, அக்கடிதத்தின் உள்ளடக்கத்திற்கு சார்நிலைச் சாட்சியமாகும்.

2. நகலொன்றிலிருந்து பார்த்தெழுதப்பட்ட, ஆனால் அதற்குப் பின்பு அசலுடன் ஒத்துப்பார்க்கப்பட்ட நகலொன்று சார்நிலைச் சாட்சியமாகும்.

1. இதனை இரண்டாந்தரச் சாட்சியம் என்றும் அழைக்கலாம்.

சார்நிலை அல்லது இரண்டாந்தரச் சாட்சியம் (Secondary Evidence)

58. What is secondary evidence? When is secondary evidence admissible to prove the contents of documents? (சார்நிலைச் சான்று என்றால் என்ன? ஆவணங்களின் உட்பொருள்களை மெய்ப்பிக்க சார்நிலைச் சான்று எப்போது கொள்ளத் தக்கதாக இருக்கிறது?)

(அல்லது)

State the circumstances in which secondary evidence is admissible. (சார்நிலைச் சான்று எந்த சூழ்நிலைகளில் கொள்ளத் தகுதி உடையனவாக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுக.)

முன்னுரை:

இந்திய சாட்சியச் சட்டத்தின் 64வது பிரிவு, ஆவணங்கள், தலைநிலை சாட்சியம் மூலமாகவே மெய்ப்பிக்கப்படல் வேண்டும், என்று கூறுகிறது. அதாவது ஒரு ஆவணத்தை மெய்ப்பிப்பதற்கு அதன் அசலையே சமர்பிக்க வேண்டும். எனினும் இப்பொதுவிதிக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவற்றின் கீழ் (தலைநிலை சாட்சியங்கள் இல்லாத பொழுது சார்நிலைச் சாட்சியங்கள் (Secondary Evidence) அளிக்கப்படலாம். (சார்நிலைச் சாட்சியத்தின் விளக்கத்தை சென்ற வினாவிலேயே கண்டுள்ளோம்.) அத்தகு விதிவிலக்கான சூழ்நிலைகளை பிரிவு 65 கூறுகிறது.

சார்நிலை சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படும் சூழ்நிலைகள் (பிரிவு 65):

பிரிவு 65ன்படி, பின்வரும் 7 சூழ்நிலைகளில் ஆவணமொன்றின் உண்மை (existence) , நிலை (condition) அல்லது உள்ளடக்கம் (contents) பற்றி சார்நிலை சாட்சியம் அளிக்கப்படலாம். அவை,

a) யாருக்கு விரோதமாக அந்த ஆவணம் பயன்படுத்தப்படுமோ அந்த நபரே அந்த ஆவணத்தின் அசலை வைத்திருப்பதாகத் தோன்றும் பொழுது;

b) யாருக்கு எதிராக அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் பயன்படுத்தப் படுமோ அவரே எழுத்து மூலமாக அந்த ஆவணத்தின் உள்ளடக் கங்களை ஏற்றுக்கொண்டுள்ளதாக மெய்ப்பிக்கப்படும் பொழுது;

c) அசல் ஆவணமானது அழிந்து போயிருக்கும்போது அல்லது தொலைந்து போயிருக்கும்போது;

d) அசல் ஆவணத்தை எளிதாக எடுத்துச் செல்ல முடியாத பொழுது;

e) அசல் ஆவணமானது பிரிவு 74 ன்படி ஒரு பொது ஆவணமாக இருக்கும் பொழுது;

f) அசல் ஆவணமே சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வகையில் சான்றளிக்கப் பெற்ற நகலாக (Certified copy permitted by this Act) இருக்கும் பொழுது;

g) அசல் ஆவணங்களானவை, நீதிமன்றத்தில் வசதியாக ஆய்வு செய்யப்பட முடியாதபடி ஏராளமான கணக்குகளையோ அல்லது வேறு ஆவணங்களையோ கொண்டிருந்து மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மையானது மொத்த தொகுதியின் பொதுவான விளைவாக (General result of the whole collection) இருக்கும் பொழுது.

மேற்கண்டவற்றில் (a), (c) மற்றும் (d) ஆகிய சூழ்நிலைகளில் ஆவணத்தின் உள்ளடக்கங்கள் பற்றிய எந்த சார்நிலைச் சாட்சியமும் ஏற்கத்தக்கதாகும் (admissible). (b)யின் கீழான சூழ்நிலையில், எழுத்துமூலமான ஏற்புரை (Written admission) ஏற்கத்தக்கதாகும். (e) மற்றும் (f) சூழ்நிலைகளில், ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட ஒரு நகல் ஏற்கத்தக்கதாகுமேயொழிய, வேறு எந்த விதமான சார்நிலைச் சாட்சியமும் ஏற்கத்தக்கது ஆகாது.(g)யின் கீழான சூழ்நிலையில், ஆவணங்களை ஆய்வு செய்திருக்கின்றவரும், அத்தகைய ஆவணங்களை ஆய்வு செய்வதில் தேர்ச்சி பெற்றுள்ளவருமான எவரும் அவற்றிலிருந்து பொதுவாக பெறப்படுவது என்ன என்பது பற்றிச் சாட்சியம் கொடுக்கலாம். மின்னியக்க பதிவேடுகள் தொடர்பான சாட்சியம் குறித்து சிறப்பு வகைமுறைகளை பிரிவுகள் 65-A மற்றும் 65-B விளக்குகின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் 2000–ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும்.

தலைநிலை மற்றும் சார்நிலைச் சாட்சியம் - வேறுபாடுகள்

59. Distinguish between primary evidence and secondary evidence. State the circumstances in which secondary evidence is admissible.
(முதல்நிலைச் சான்றையும் இரண்டாந்தரச் சான்றையும் வேறுபடுத்திக் காட்டுக. இரண்டாந்தரச் சான்று எந்த சூழ்நிலைகளில் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதைக் கூறுக.

(அல்லது)

Distinguish between Primary evidence and Secondary evidence.

தலைநிலைச் சாட்சியம் (Primary evidence)	சார்நிலைச் சாட்சியம் (Secondary evidence)
1. இந்திய சாட்சிய சட்டத்தின் 62வது பிரிவு இதனை வரையறுக்கிறது.	இந்திய சாட்சிய சட்டத்தின் 63வது பிரிவு இதனை வரையறுக்கிறது.
2. இங்கு ஒரு ஆவணத்தை நீதிமன்ற சாட்சியமாக	இங்கு அவ்வாறில்லை. அந்த ஆவணத்திற்கு பதிலாக, அதன்

ஆய்வுக்காக முன்னிலைப்படுத்த வேண்டும் பொழுது, அந்த ஆவணத்தையே நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதாவது அதன் அசலையே சமர்பித்தல் வேண்டும்.	சான்றளிக்கப்பட்ட நகல் அல்லது அசலிலிருந்து ஒப்பிட்டுப் பார்க்கப் பட்ட நகல்கள் போன்றவற்றை சமர்ப்பிக்கலாம்.
3. இச்சாட்சியம் அப்படியே நீதிமன்றத்தால் ஏற்கப்படும்.	இங்கு அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தலைநிலை சாட்சியம் கிடைத்திடாத பொழுது மட்டுமே பிரிவு 63 மற்றும் 65ன் கீழ் ஏற்றுக்கொள்ளப்படும்.
4. இச்சாட்சியத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பொழுது, எதிர் தரப்பினருக்கு ஆட்சேபணை செய்ய உரிமை ஏதுமில்லை.	இங்கு அத்தகு உரிமை உண்டு. சார்நிலைச் சாட்சியத்தை எதிர்த் தரப்பினர் ஆட்சேபிக்கலாம்.
5. இச்சாட்சியம் சிறந்த சாட்சிய மாகும்.	

சான்றொப்பமிட வேண்டிய ஆவணத்தை நிரூபித்தல்

60. Describe the mode of proof of a document which requires attestation in law. (சட்டப்படி கையெழுத்திட்டு உறுதியளிக்க வேண்டிய ஆவணத்தை நிரூபிக்க வேண்டிய முறையை விவரி.)

(அல்லது)

Attestation - Write short notes. (சான்றொப்பம் - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

'Attestation' என்ற ஆங்கில சொல்லானது தமிழில் **'கையெழுத்திட்டு உறுதியளித்தல்'** எனப்படும். இது சுருக்கமாக **'சான்றொப்பமிடல்'** என அழைக்கப்படுகிறது. இவ்வாறு சான்றொப்பம் தேவைப்படும் ஆவணங்களை எவ்வாறு நிரூபிக்க வேண்டுமென்று இந்திய சாட்சிய சட்டத்தின் **68 முதல் 72 வரையுள்ள பிரிவுகள்** விளக்குகின்றன. விரிவாக பின்வருமாறு.

சான்றொப்பமிடப்பட வேண்டுமென்று சட்டத்தால் கோரப்படும் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை நிரூபித்தல் (பிரிவு 68):

ஒரு ஆவணமானது சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டியதாய் இருக்குமானால், குறைந்த பட்சம், சான்றொப்பமிட்ட ஒரு சாட்சியையாவது, அவர் உயிருடனும் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் வசித்து வருபவராகவும், சாட்சியமளிக்க திறனுடையவராகவும் இருப்பின், அந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதை நிரூபிக்கும் பொருட்டு ஆஜர் படுத்த வேண்டும். தவறினால், அந்த ஆவணத்தை ஒரு சாட்சியமாக பயன்படுத்த முடியாது.

சான்றொப்பமிட்ட சாட்சி எவரையும் கண்டுபிடிக்க இயலாத பொழுது நிரூபணம் (பிரிவு 69):

சான்றொப்பமிட்ட அத்தகைய சாட்சி எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லையானால், (இறந்து விட்டிருந்தாலோ அல்லது நீதிமன்ற அதிகாரவரம்பை விட்டு வெளியில் வசித்து வந்தாலோ) (i) சான்றொப்ப மிட்ட சாட்சிகளில் குறைந்த பட்சம் ஒருவரது சான்றொப்ப மேனும் அவரது கையெழுத்தில் இருக்கிறதென்றும், (ii) அந்த ஆவணத்தை எழுதிக் கொடுத்தவரின் கையொப்பம் அவரது கையெழுத்தில் இருக்கிறது என்றும் பிற சாட்சிகளால் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

சான்றொப்பமிடப்பட்ட ஆவணத்திற்குரிய தரப்பினர் எழுதிக் கொடுத்தாக ஏற்றுக் கொள்ளுதல் (பிரிவு 70):

ஒரு ஆவணம் சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டியுள்ளது. அச்சமயத்தில் அந்த ஆவணத்தை எழுதிக் கொடுத்தவர் அதைத் தாமே எழுதிக் கொடுத்ததாகச் செய்யும் ஏற்புரையானது (admission) அது எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதற்கு, அவரைப் பொறுத்தமட்டில் போதுமான நிரூபணம் ஆகும்.

எழுதிக் கொடுக்கப்பட்டதை சான்றொப்பமிட்ட சாட்சி மறுக்கும்போது, நிரூபணம் எவ்வாறு? (பிரிவு 71):

சான்றொப்பமிட்ட சாட்சி ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை மறுப்பாரானால் அல்லது நினைவு கூறவில்லையானால், அது எழுதிக் கொடுக்கப்பட்டதை மற்ற சாட்சியத்தால் நிரூபிக்கலாம்.

சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டியதல்லாத ஆவணத்தை நிரூபித்தல் (பிரிவு 72):

சட்டப்படி சான்றொப்பமிடப்பட வேண்டியதல்லாத, ஆனால் சான்றொப்பமிடப்பட்ட ஒரு ஆவணத்தை, அது சான்றொப்பமிடப் படாதது போன்றே நிரூபிக்கலாம்.

61. Tape recorded Evidence - Write short notes. (நாடாவில் பதிவு செய்யப்பட்ட சாட்சியம் - சிறு குறிப்பு வரைக.)

ஆவணம் (Document) என்பது எழுத்தால், எண்களால் அல்லது குறிகளால் ஒரு பொருண்மை குறித்து விளக்கப்பட்டுள்ள விஷயத்தை உள்ளடக்கியதாகும். நீதிமன்றம், தானே படிக்கும் வகையிலும் பார்க்கும் வகையிலும் உள்ள எழுத்து வடிவிலான குறிப்புகளை உள்ளடக்கியதும் ஆவணமேயாகும். அந்த வகையில் ஒரு இயந்திரக் கருவியினால் மனிதனின் குரல் அல்லது சப்தங்கள் பதிவு செய்யப்பட்டதை ஒரு ஆவணமாகக் கருத இயலுமா? உதாரணமாக ஒலிநாடாப் பெட்டி (Tape record) ஒன்று நீதிமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படுகிறது. அதிலிருந்து நீதிமன்றம் ஒரு பொருண்மையை படிக்கவோ அல்லது பார்க்கவோ முடியாது. இதனால் அப்பெட்டியை இயக்கி வைக்க வேண்டியுள்ளது. அப்பொழுதுதான், அதிலுள்ள ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட சொற்களை நீதிமன்றம் கேட்க முடிகிறது. எனவேதான் ஒலிநாடா பதிவுகளை ஆவணங்களுக்குச் சமானமாக கருத முடிவதில்லை. ஆனால், ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ள சாட்சியங்கள், வாய்மொழிச் சாட்சியத்திற்கு ஒப்பாக கூறப்படுகின்றது. இவ்வகைச் சாட்சியம் பெரும்பாலும் ஆவண சாட்சியத்துடன் சேர்ந்ததாகவே கருதப்படுவதால், அதற்குண்டான சாட்சிய சட்ட விதிகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும்.

Presidential Election Case[1] - இவ்வழக்கில் ஒலிப்பதிவு நாடா சாட்சியத்தின் தொடர்புடைமை குறித்து கூறப்பட்டது. அதன்படி ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்ட பேச்சு வார்த்தைகள் (சம்பாஷணைகள்) சாட்சியமாக அனுமதிக்கத்தக்கதே. ஆனால் i) அவை வழக்கெழு பிரச்சனையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். ii) அந்நாடாவில் பதிவாகி உள்ள குரல் அடையாளம் காட்டப்பட வேண்டும். iii) அப்பதிவு எதுவும் அழிக்கப்படவில்லை என்பதன் மூலமாக அந்நாடாவில் பதிவாகி உள்ள பேச்சுவார்த்தைகளின் சரிநுட்பம் மெய்ப்பிக்கப்பட வேண்டும். அதாவது அந்நாடாவில் பதிவாகி உள்ள பேச்சுவார்த்தை அழிக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது சேதப்படுத்தப் பட்டுள்ளதாகவோ முரண்பாடான சாட்சியங்கள் ஏதும் காட்டப் பட்டிருத்தல் கூடாது.

ஆனால் இதற்கும் ஒரு படி மேலாக தற்பொழுது எழும் வழக்குகளில், ஒலிப்பதிவு நாடா, அத்தகைய ஒலிப்பதிவிற்குப்பின் பொறுப்பான நபரிடம் பத்திரமாக இருந்தது (Proper Custody) என்பது மெய்ப்பிக்கப்படல் வேண்டும், என்று கூறப்படுகின்றது.

Ram Singh v. Col. Ram Singh[2] - என்ற வழக்கில் துணை ஆணையாளர் ஒலிப்பதிவு நாடாவை தன்னுடைய சுருக்கெழுத்தரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். இது முறையான பாதுகாப்பாகாது என்றும், ஒலிப்பதிவு நாடாவின் நம்பகத் தன்மையை குறைக்கவல்லது, என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

1. (1970) 2 S.C.C. 340
2. (1985 Supp. S.C.C. 611

29 பொது ஆவணங்கள் [Public Documents]

பொது ஆவணங்களும் தனியார் ஆவணங்களும் - மெய்ப்பிக்கும் முறைகள்

62. Explain the term 'Public Documents' and the manner in which they may be proved. ('பொது ஆவணங்கள்' என்னும் சொற்கூற்றையும், அவை எந்த முறையாக மெய்ப்பிக்கப்படலாம் என்பதனையும் விளக்குக.)

(அல்லது)

Define Document. Distinguish between private documents and public documents. (ஆவணம் என்பதனை வரையறு. தனியார் ஆவணங்கள் மற்றும் பொது ஆவணங்களை வேறுபடுத்திக் காண்க.)

(அல்லது)

How are public documents proved? (பொது ஆவணங்கள் எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகின்றன?)

(அல்லது)

Distinguish between the 'Public Documents' and 'Private documents'. How are 'Public documents' proved? ('பொது ஆவணங்கள்' மற்றும் 'தனியார் ஆவணங்கள்' வேறுபடுத்துக. பொது ஆவணங்கள் எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகின்றன?)

(அல்லது)

What is a public document? How it can be proved? (ஒரு பொது ஆவணம் என்றால் என்ன? எவ்வாறு இதனை மெய்ப்பிக்க முடியும்?)

(அல்லது)

Public documents - Write short notes. (பொது ஆவணங்கள் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஆவணங்கள் இரு வகைப்படும். அவை (1) பொது ஆவணங்கள் (2) தனியார் ஆவணங்கள். இவை குறித்தும், இவற்றின் மெய்ப்பித்தல் குறித்தும் இந்திய சாட்சிய சட்டத்தின் 74 முதல் 78 வரையுள்ள பிரிவுகள் விளம்புகின்றன. விரிவாக வருமாறு.

ஆவணம் (Document) - வரையறை:

பொது மற்றும் தனியார் ஆவணங்களின் வரையறையைக்

காண்பதற்கு முன்னர், நாம் 'ஆவணம்' என்பதின் வரையறையைக் காணல் இங்கு அவசியமாகும். இந்திய சாட்சியச் சட்டத்தின் **3-வது பிரிவில்** இதற்கான வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

"ஆவணம்" என்பது, ஏதேனுமொரு விஷயத்தைப் பதிவு செய்யும் நோக்கத்தோடு பயன்படுத்தக் கருதப்படும் அல்லது பயன்படுத்தப்படலாகும் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறிகள் மூலமாகவோ, அத்தகைய முறைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை மூலமாகவோ, ஏதேனும் ஒரு பொருளின் மீது வெளியிடப்பட்ட அல்லது வரையப்பட்ட அந்த விஷயம் என்று பொருள்படும்.

எடுத்துக்காட்டுகள்: 1. எழுத்திலிருப்பது ஒரு **ஆவணமாகும்;** அச்சடிக்கப்பட்ட கல்லச்சு முறையில் தயாரிக்கப்பட்ட (lithographed) அல்லது புகைப்படமெடுக்கப்பட்ட சொற்கள் ஆவணமாகும். 2. புவிப்படம் (map) அல்லது அமைப்புப்படம் (plan) ஒரு ஆவணமாகும். 3. உலோகத்தகடு (metal plate) அல்லது கல்லின் (stone) மீது பொறிக்கப்பட்ட (inscription) எழுத்து ஒரு ஆவணமாகும். 4. கேலிச்சித்திரம் (caricature) ஒரு ஆவணமாகும்.

பொது ஆவணங்கள் (Public Documents) - பிரிவு 74 கூறும் வரையறை:

அரசுத் துறை அதிகாரத்தின் கீழ் அதன் செயல்வழி முறைகளோடு இணைந்த ஆவணங்களே பொது ஆவணங்கள் எனப்படுகின்றன. இதன் அடிப்படையில், பின்வரும் ஆவணங்கள் பொது **ஆவணங்களென பிரிவு 74** கூறுகிறது. அவை,

1. (i) இறைமை கொண்ட அரசு அதிகாரத்தின் (Sovereign authority) கீழ் இயற்றப்பட்ட ஆவணங்கள் (**அதாவது** பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் போன்ற இறைமை கொண்ட அரசு அதிகாரத்தின் கீழ் இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் விதிகளைத் தாங்கிய பதிவேடுகள், அவசர ஆணைகள், அரசிதழ்கள் ஆகியவை)

(ii) அரசு அதிகாரம் பெற்ற குழுக்கள் (official bodies) மற்றும் தீர்ப்பாயங்களின் (Tribunals) செயல்பாடுகள் அல்லது அவற்றின் பதிவேடுகள். (**உதாரணமாக,** மாநகராட்சியின் பிறப்பு - இறப்பு பதிவேடுகள், தேர்தல் தீர்ப்பாயத்தின் பதிவேடுகள் போன்றவை)

(iii) இந்தியாவில் எந்த ஒரு பகுதியை அல்லது காமன்வெல்த்தை அல்லது ஓர் வெளி நாட்டைச் சேர்ந்த சட்டமன்றத்துறை, நீதித்துறை மற்றும் நிருவாகத்துறைப் பொது அலுவலர்களின் (Public Offiers) செயல்பாடுகள் அல்லது அவற்றின் பதிவேடுகள். [**உதாரணமாக,** சொத்து பேணுநர் (Official Assignee), அரசு பொறுப்பாண்மையர் (Official trustee) போன்ற பொது அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த பதிவேடுகள்]

2. பொது அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் ஆவணங்களும், பொது ஆவணங்களேயாகும். (**உதாரணமாக,** நிறுவனப் பதிவாளரிடம் (Registrar of Companies) பதிவு செய்யப்பட்ட ஒரு தனியார் நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளும் பொது ஆவணங்களே.)

தனியார் ஆவணங்கள் (Private Documents) - பிரிவு 75 கூறும் வரையறை:

மேற்கண்ட பிரிவு 74ல் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் தவிர மற்றவை யாவும் தனியார் ஆவணங்களே என பிரிவு 75 கூறுகிறது. (உதாரணமாக கிரய ஒப்பந்தம், குத்தகை ஒப்பந்தம், பாகப் பிரிவினைப் பத்திரம் போன்று)

பொது ஆவணங்கள் மற்றும் தனியார் ஆவணங்கள் - வேறுபாடு:

மேற்கண்ட இரண்டு ஆவணங்களும், மெய்ப்பிக்கும் முறையின் அடிப்படையில் வேறுபடுகின்றன. தனியார் ஆவணங்களை மெய்ப்பிக்கும் முறை குறித்து **61 முதல் 73 வரையுள்ள பிரிவுகள்** விவரிக்கின்றன. பொது ஆவணங்களை மெய்ப்பிக்கும் முறையை **76 முதல் 78 வரையுள்ள பிரிவுகள்** விளக்குகின்றன. விரிவாக வருமாறு.

பொது ஆவணங்கள் மெய்ப்பிக்கப்படும் முறை:

பொது ஆவணங்கள் மெய்ப்பிக்கப்படும் முறை குறித்து அறிவதற்கு முன்பு, பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் குறித்து அறிந்து கொள்வது அவசியம்.

பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் (Certified copies of Public documents) (பிரிவு 76):

பொது ஆவணங்களை பொது மக்கள் பார்வையிடலாம். அந்த ஆவணத்தின் நகலொன்று தேவைப்படுமானால், தக்க கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில், அது வழங்கப்படலாம். அப்படி வழங்கப்படும் நகலின் கீழ், அப்பொது ஆவணத்தை பாதுகாத்து வரும் பொது அலுவலர், 'உண்மை நகல்' (true copy) என எழுதி சான்றளிக்க வேண்டும். அவரது பெயர், பதவி மற்றும் சான்றளிக்கப்பட்ட தேதி ஆகியவற்றை குறிப்பிட்டு, அவரும் அடிக்கையொப்பமிட வேண்டும். அலுவலக முத்திரை (seal) வைக்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு சான்று அளிக்கப்பட்டு தரப்படும் நகல்கள், சான்றளிக்கப்பட்ட நகல்கள் எனப்படுகின்றன. இனி இவற்றின் மெய்ப்பித்தல் குறித்து பின்வருமாறு காண்போம்.

பொது ஆவணங்கள் - 2 வகைகளில் மெய்ப்பித்தல்:

1. பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை தாக்கல் செய்வதன் மூலம், அப்பொது ஆவணங்களை மெய்ப்பிக்கலாம். **(பிரிவு 77)**

2. மற்ற பொது ஆவணங்களை பின்வருமாறு மெய்ப்பிக்கலாம். *(பிரிவு 78)*

i) மத்திய அல்லது மாநில அரசுத் துறைகள் எவற்றாலும் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகள் அல்லது அறிவிக்கைகளை – முறையே அந்தந்த துறைகளின் தலைவர்களால் சான்றளிக்கப்பட்ட பதிவுக் கோப்புகள் மூலமாகவும் அல்லது அத்தகைய ஏதேனுமோர் அரசினால் அச்சிடப் பட்டதாக தோன்றும் ஆவணம் மூலமாகவும்;

ii) சட்டமன்றங்களின் நடவடிக்கைகளை (Proceedings of the Legislatures) – முறையே அந்தந்த மன்றங்களின் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகள் (Journals) மூலமாகவும் அல்லது வெளியிடப்பட்ட சட்டங்கள் அல்லது சுருக்கக் குறிப்புகள் (abstracts) மூலமாகவும் அல்லது சம்பந்தப்பட்ட அரசின் உத்திரவால் அச்சிடப்பட்டதாக தோன்றும் நகல்கள் மூலமாகவும்;

iii) மாட்சிமை தங்கிய அரசினரால் அல்லது பிரிவி கவுன்சிலால் அல்லது அரசியாரின் அரசுத்துறை எதனாலும் பிறப்பிக்கப்பட்ட பகிரங்க அறிக்கைகள், உத்திரவுகள் அல்லது ஒழுங்கு முறை விதிகளை – இலண்டன் அரசிதழில் அடங்கியுள்ள அல்லது அரசியாரின் அச்சகத்தாரால் அச்சடிக்கப்பட்டதாகத் தோன்றும் நகல்கள் அல்லது எடுகுறிப்புகள் (extracts) மூலமாகவும்;

iv) ஓர் வெளிநாட்டின் நிர்வாகத் துறைச் செய்கைகள் அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளை – அவர்களது அதிகாரத்தில் வெளியிடப்படும் அல்லது பொதுவாக ஏற்கப்படும் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகள் மூலமாகவும் அல்லது அந்நாட்டு முத்திரையின் கீழ் சான்றளிக்கப்பட்ட ஒரு நகலின் மூலமாகவும் அல்லது அதற்கு மத்தியச் சட்டம் எதிலேனும் அளிக்கப்படும் அங்கீகாரத்தின் மூலமாகவும்;

v) ஓர் வெளிநாட்டிலுள்ள வேறு எவ்வகையான பொது ஆவணங்களை – அசலின் மூலமாக அல்லது அசலைச் சட்டப்படியான பாதுகாப்பில் கொண்டுள்ள அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நகல் மூலமாக அல்லது வெளிநாட்டுச் சட்டத்துக்கு இணங்க அந்த ஆவணத்தின் தன்மை மெய்ப்பிக்கப்படுவதன் பேரிலும்.

M. Din v. Kesm Singh[1]

இவ்வழக்கில், ஒரு ஆவணம் பிரிவு 74ன்கீழ் 'பொது ஆவணம்' என்று கூறப்பட வேண்டுமெனில், அது ஒரு பொது அலுவலரால் அவரது அலுவல் பணிகளைச் செய்து தயாரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) ஆவணம் என்று காட்டப்பட வேண்டுமென்றும், அந்த ஆவணம் ஒரு பொது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது என்ற பொருண்மை மட்டுமே அதனை ஒரு பொது ஆவணமாக்காது என்றும், கூறப்பட்டது.

1. 1928 Lah. 640

30 ஆவணங்கள் பற்றிய துணிபுகள் [Presumptions as to Documents]

ஆவணங்களைப் பற்றிய பல்வேறு துணிபுகள்

63. Describe the presumptions as to documents in evidence. (சான்றாகத் தரப்படும் ஆவணங்களைப் பற்றிய துணிபுகளை விவரிக்கவும்.)

(அல்லது)

State briefly the legal presumptions as to documents produced in evidence. (சான்றாகத் தரப்படும் ஆவணங்களைப் பற்றிய சட்ட ரீதியான துணிபுகளைச் சுருக்கமாக எடுத்துரைக்க.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 79 முதல் 90 வரையுள்ள பிரிவுகள் ஆவணங்களைப் பற்றிய துணிபுகளைப்[1] பற்றிக் கூறுகின்றன. இவற்றினை இரண்டு விதமாக வகைப்படுத்தலாம். அவை பின்வருமாறு.

ஆவணத் துணிபுகள் - இரண்டு விதம்:

(1) 79 முதல் 85 வரையுள்ள பிரிவுகளின் கீழ் மற்றும் 89வது பிரிவின் கீழும் ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால், அந்த ஆவணத்தில் உள்ள பொருண்மைகளை உண்மையானது என்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். அதாவது அத்துணிபுகளை, தானே மறுப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அந்த ஆவணம் பொய்யானது என எதிர்தரப்பாளர் மெய்ப்பித்துவிட்டால், மேற்படி துணிபு அடிபட்டுப் போய்விடும்.

(2) 86 முதல் 88 வரையுள்ள பிரிவுகளின் கீழும் மற்றும் 90வது பிரிவின் கீழும் ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால், அந்த ஆவணத்தில் உள்ள பொருண்மைகளை உண்மையென்று நீதிமன்றம் துணிபு கொள்ளலாம் அல்லது துணிபு கொள்ளாமலும் இருக்கலாம். அதாவது அத்துணிபுகளை மறுப்பதற்கு நீதிமன்றத்திற்கு தன்விருப்புரிமை அதிகாரம் உண்டு. நீதிமன்றம் மேற்படி துணிபை எடுக்கும் பொழுது அந்த ஆவணம் பொய்யானது என நிரூபிக்கவும், அத்துணிபை எடுக்காத பொழுது அந்த ஆவணம் உண்மையானது என நிரூபிக்கவும் வழக்குத் தரப்பினர்களுக்கு உரிமை உண்டு.

---

1. துணிபை 'அனுமானம்' என்றும் அழைப்பர்.

இனி மேற்கண்ட இரண்டு விதங்களில் எத்தகு ஆவணங்கள் வருகின்றன என்பதை பின்வருமாறு காண்போம்.

(1) நீதிமன்றம் பின்வருபவைகளை உண்மையானது என துணிபு கொள்ள வேண்டும் [Shall Presume]:

1) சட்டப்படி எழுதிக் கொடுக்கப்பட்டதும், மத்திய அல்லது மாநில அரசு அலுவலரால் சான்றளிக்கப்பட்டதுமான நகலை (certified copy), உண்மையானதென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 79)**

2) நீதிமன்ற நடவடிக்கையில் அல்லது சாட்சியம் எடுக்க சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு ஒரு சாட்சியால் கொடுக்கப்பட்ட சாட்சியத்தின் குறிப்புரை (memorandum) அல்லது குற்றவியல் துறை நடுவர் அல்லது நீதிபதி முன்பு கைதி அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட நபரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் (உரை) அல்லது குற்ற ஏற்புரை, ஆகியவற்றைத் தாங்கிய ஆவணம் உண்மையானதென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 80)**

3) அரசு வெளியிடும் அரசிதழ்கள் (Gazette) அல்லது செய்தித் தாள்கள் அல்லது நாடாளுமன்றத்தின் சட்டத்தின் நகல்கள் ஆகியவை உண்மையானதென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 81)** இவ்வாறே மின்னியக்க வடிவிலான அரசிதழ்களையும் உண்மையான தென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும் என்று புதிய **பிரிவு 81-A**[1] கூறுகிறது.

4) முத்திரை அல்லது கையொப்பத்தின் நிரூபணம் இல்லாமலேயே இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தில் சாட்சியமாக ஏற்கத்தக்கதாகவுள்ள ஆவணங்களை உண்மையானதென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 82)**

5) மத்திய அரசின் அல்லது ஏதேனுமொரு மாநில அரசின் அதிகாரத்தின் பேரில் தயாரிக்கப்பட்டதாக தோன்றும் புவிப்படங்கள் (Maps) அல்லது அமைப்புப் படங்கள் (Plans) ஆகியவை, அவ்வாறே தயாரிக்கப்பட்டவையென்றும் துல்லியமானவையென்றும் நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 83)**

6) ஏதேனுமொரு நாட்டு அரசாங்க அதிகாரத்தின் பேரில் அச்சடிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட அந்நாட்டு சட்டங்கள் தொகுப்புகள் (Collection of laws) மற்றும் அந்நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்பறிக்கைகள் (Report of Decisions) அடங்கிய புத்தகம் உண்மையான தென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 84)**

---

1. இப்பிரிவு, 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்ப சட்டத்தால் மேற்படி பிரிவு 81-A புதிதாக சேர்க்கப்பட்டதாகும்.

7) ஓர் பகர அதிகார ஆவணமாகவும் (Power of Attorney), ஒரு நோட்டரி பப்ளிக் அல்லது நீதிமன்றம், இந்திய துணைத் தூதர் அல்லது மத்திய அரசின் பிரதிநிதி எவரின் முன்பேனும் எழுதிக் கொடுக்கப்பட்டு, அவரால் உறுதி ஒப்பமிடப்பட்டிருப்பதாகவும் (authenticated) தோன்றும் ஆவணம் ஒவ்வொன்றும் அவ்வாறே எழுதிக் கொடுக்கப்பட்டு, உறுதி ஒப்பமிடப்பட்டதாக நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 85)**

8) கொடுக்குமாறு கோரியும் (Called for) தாக்கல் செய்யுமாறு அறிவிப்புக் கொடுத்தற்குப் பின்பும் தாக்கல் செய்யப்படாத ஆவணம் ஒவ்வொன்றும், சட்டம் கோரும் முறையில், சான்றொப்பமிடப்பட்டு, வில்லை ஒட்டப்பட்டு (stamped), எழுதிக் கொடுக்கப்பட்டது என்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். **(பிரிவு 89)**

(2) நீதிமன்றம் பின்வருபவைகளை உண்மையானது என துணிபு கொள்ளலாம் (அல்லது கொள்ளாமலும் இருக்கலாம்). [May Presume]:

1) வெளிநாட்டு நீதித்துறை பதிவேடுகளின் சான்றளிக்கப்பட்டநகலை உண்மையானதென்று நீதிமன்றம் துணிவு கொள்ளலாம். **(பிரிவு 86).**

2) ஒரு வழக்கின் தீர்வுதரு பொருண்மை அல்லது தொடர்புடைய பொருண்மையை நிரூபிப்பதற்காக புத்தகங்கள், புகைப்படங்கள் அல்லது விளக்க அட்டவணைப் படங்கள் அடிக்கடி தாக்கல் செய்யப்படுவதுண்டு. அப்பொழுது, மேற்கண்ட புத்தகம் முதலானவை யாரால், எப்பொழுது, எந்த இடத்தில் எழுதப்பட்டது அல்லது வெளியிடப்பட்டது என்று அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அவரால் அப்பொழுது, அந்த இடத்தில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டதாக நீதிமன்றம் துணிபு கொள்ளலாம். **(பிரிவு 87)**

3) ஒருவர் அனுப்பிய தந்திச் செய்தி, அவர் தந்தி அலுவலகத்தில் எழுதிக் கொடுத்த தந்தி செய்தியை ஒத்தது என நீதிமன்றம் துணிபு கொள்ளலாம். **(பிரிவு 88).** இது **மின்னியக்க செய்திகளுக்கும் (electronic messages)** பொருந்தக் கூடியதாகும். **(பிரிவு 88-A[1])**

4) ஒரு ஆவணம் 30 ஆண்டு காலம் தொன்மை வாய்ந்தது என்றால், அது உண்மையானதென நீதிமன்றம் துணிபு கொள்ளலாம். **(பிரிவு 90)**
(விரிவாக அடுத்த வினாவில் காண்க.)

தொல்லாவணமும் (Ancient Document) அதன் துணிபும்

64. Ancient documents - Write short notes. (தொல்லாவணங்கள் - சிறு குறிப்பு வரைக,)

1. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் மேற்படி பிரிவு 88-A புதிதாக சேர்க்கப்பட்டதாகும்.

(அல்லது)

Presumption as to documents thirty years old - Write short notes. (30 ஆண்டு ஆவணங்களை சார்ந்த துணிபு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

How should ancient documents be proved? (தொல்லாவணங்கள் எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகின்றன?)

(அல்லது)

"Documents thirty years old are said to prove themselves." Explain its meaning and application. ("முப்பது ஆண்டுகால ஆவணங்கள் தம்மைத்தாமே நிரூபித்துக் கொள்கின்றன" - இதன் பொருளையும் பயன்பாட்டையும் விளக்குக.)

தொல்லாவணம் - விளக்கம்:

ஒரு ஆவணம் 30 ஆண்டு காலத்திற்கு முந்தியதாக இருப்பின் அது 'தொல்லாவணம்' (Ancient document) எனப்படுகிறது. அதன் உள்ளடக்கங்கள் அனைத்தும் உண்மையானவையென நீதிமன்றம் துணிபு கொள்ளலாம். (May presume). துணிபு கொண்டே ஆக வேண்டும் என்பது கட்டாயமானதல்ல (Not Shall Presume). துணிபு கொள்வதும் கொள்ளாமல் இருப்பதும் நீதிமன்றத்தின் தன்விருப்புரிமைக்குட்பட்டதாகும். இத்தகு ஆவணங்களின் துணிபு குறித்து பிரிவு 90 கூறுகிறது.

பிரிவு 90ன் நோக்கம்:

மேற்படி பிரிவின் நோக்கம் யாதெனில் தொன்மையான ஆவணங்களை நம்பியுள்ள நபர்கள் தத்தம் வழக்குகளை நிரூபிக்க அந்த ஆவணங்களை எளிதாக பயன்படுத்திக் கொள்வதற்கு வழிவகை செய்தலேயாகும். மேலும் இப்பிரிவு, ஆவணங்கள் எழுதியவரின் கையெழுத்து, எழுதிக் கொடுக்கப்பட்ட முறை மற்றும் சான்றொப்பம் குறித்து பல ஆண்டுகள் கழித்தும் தக்கமுறைப்படி நிரூபித்தல் வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்துகிறது. சுருங்கக்கூறின், 30 ஆண்டுகளைக் கடந்த ஆவணம் தன்னைத்தானே நிரூபித்துக் கொள்ளும் (said to prove themselves). அதை உறுதியூட்ட வேறு சாட்சியங்கள் தேவையில்லை.

பிரிவு 90 - என்ன கூறுகிறது.?

பிரிவு 90ன்படி, ஒரு ஆவணம் உருவாகி 30 ஆண்டுகளாகி இருக்கிறது என்றும், அது முறையான பாதுகாப்பிலிருந்து (proper custody) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் நிரூபிக்கப்படும் பொழுது, அந்த ஆவணத்தின் பகுதிகள் ஒவ்வொன்றும், அதை உருவாக்கியவர்தான், அவர் கைப்பட எழுதியதாகவும், அந்த ஆவணம்

முறையாக எழுதப்பட்டது என்றும், அது முறையாக சான்றொப்பம் இடப்பட்டது என்றும் நீதிமன்றம் துணிபு கொள்ளலாம்.

பிரிவு 90ன்படி துணிபு கொள்ள தேவையான நிபந்தனைகள் (அல்லது) தொல்லாவணங்களை நிரூபிக்கும் விதம்:

1. சம்பந்தப்பட்ட ஆவணம், அது எழுதப்பட்ட நாளிலிருந்து 30 ஆண்டுகளைக் கடந்ததாக இருக்க வேண்டும்.

2. அந்த ஆவணம் முறையான பாதுகாவலிலிருந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கண்ட கூறுகளை நிரூபித்து விட்டால், ஒரு ஆவணம் தொல்லாவணமாகி விடும். விரிவாக பின்வருமாறு.

1. 30 ஆண்டு காலம் (30 Years Old) - விளக்கம்:

Anderson v. Weston[1] என்ற வழக்கில் ஒரு ஆவணம் 30 ஆண்டு காலம் கடந்து விட்டது என்பதை தரப்பினர்கள் சாட்சி கூண்டேறி சாட்சியம் அளிக்கத் தேவையில்லை; அந்த ஆவணத்தில் 30 ஆண்டு காலத்திற்கு முன்பான தேதி குறிப்பிடப்பட்டிருந்தாலே போதும்; அதை அந்த ஆவணத்தின் நிரூபணமாக நீதிமன்றம் (மறுப்பு ஏதும் இல்லாத பட்சத்தில்) ஏற்றுக் கொள்ளலாம் எனக் கூறப்பட்டது.

மேற்படி வழக்கின் பொருண்மைகளாவன: ஒரு மாற்றுச் சீட்டின் (Bill of Exchange) அடிப்படையில் வழக்கொன்று தொடரப்பட்டது. அதில் ஒரு தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. இதைத்தவிர, அம்மாற்றுச் சீட்டின் வயதைச் (age of the document) சுட்டிக் காட்டுவதற்கு வேறு சாட்சியங்கள் கிடையாது. எனவே அம்மாற்றுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தேதியே அதன் வயதை நிர்ணயிக்கும் முகப்புத் தோற்ற சாட்சியமாகும் (Prima facie evidence) எனப்பட்டது.

2. முறையான பாதுகாவல் (Proper Custody) - விளக்கம்:

பிரிவு 90ன் கீழுள்ள விளக்கப் பகுதியானது முறையான பாதுகாவல் எது என்பதை விளக்குகிறது. அதன்படி, "ஆவணங்கள் எந்த இடத்திலும் (Place) எவருடைய கவனிப்பிலும் (care) இயல்பாக (naturally) இருக்குமோ, அந்த இடத்திலும் அவரது கவனிப்பிலும் இருக்குமானால், அந்த ஆவணங்கள் முறையான பாதுகாவலில் இருப்பதாக கூறப்படும்".

எடுத்துக்காட்டுகள்: (1) A என்பவர் நீண்ட காலமாக ஒரு நிலத்தை ஆண்டனுபவித்துக் கொண்டு வருகிறார். அதற்குத் தமக்குள்ள பாத்தியதைகளைக் காட்டுகின்ற, அந்த நிலம் சம்பந்தமான ஆவணங்களத் தம் பாதுகாப்பிலிருந்து அவர் தாக்கல் செய்கிறார். இது முறையான பாதுகாவலாகும்.

1. (1840) 9 L.J.C. p.194

(2) அடமானம் பெற்ற நிலத்திற்கான ஆவணங்களை A தாக்கல் செய்கிறார். இது முறையான பாதுகாவலாகும்.

(3) B என்பவரின் உறவினரான A என்பவர் பாதுகாப்புக்காக Bயினால் தம்மிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்த Bயின் அனுபவத்தில் உள்ள நிலங்கள் சம்பந்தமான ஆவணங்களைத் தாக்கல் செய்கிறார். இந்த பாதுகாப்பு முறையான பாதுகாப்பாகும்.

Darshan Singh v. Prabhu Singh[1] என்ற வழக்கில் ஒரு தாயார் தன் குடும்ப விவகாரங்கள் தொடர்புடைய ஆவணமொன்றை தாக்கல் செய்கிறார். இது முறையான பாதுகாவல் எனப்பட்டது.

Narayan Amma v. Padmanabha Pillai[2] என்ற வழக்கில் நிலத்தீர்வை அலுவலகத்திலிருந்து நிலத் தீர்வை பதிவேடு தாக்கல் செய்யப்பட்டது. இது முறையான பாதுகாவல் எனப்பட்டது.

முடிவுரை:

ஒரு ஆவணம் 30 ஆண்டு காலம் ஆகியிருந்து அது முறைப்படியான பாதுகாவலிலிருந்து தாக்கல் செய்யப்படும் பொழுது, அந்த ஆவணம் உண்மையானது என்ற துணிபு எழுகிறது. இப்படிப்பட்ட ஆவணங்கள் வழக்குத் தரப்பினர்களின் நிரூபணச் சுமையைக் குறைக்கிறது. நிரூபிக்க வேண்டியதெல்லாம் (i) அந்த ஆவணம் 30 ஆண்டுகளுக்கு முந்தியது. (ii) முறையான பாதுகாவலிலிருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுபோல் 5 ஆண்டுகள் ஆகிய மின்னியக்க பதிவேடுகள் குறித்த துணிபையும் புதிய பிரிவு 90-A[3] கூறுகிறது.

- o -

1. A.I.R. 1948 All. 67
2. A.I.R. 1957 Trav.Co. 245
3. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்ப சட்டத்தால் மேற்படி பிரிவு 90-A புதிதாக சேர்க்கப்பட்டதாகும்.

31 ஆவண சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் ஒதுக்கப்படுதல் [Exclusion of Oral Evidence by Documentary Evidence]

ஆவண சாட்சியம் வாய்மொழி சாட்சியத்தை ஒதுக்கும் சூழ்நிலைகள்

65. Write an explanatory note on the circumstances under which oral evidence is excluded by documentary evidence. (ஆவணச் சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் விலக்கப்படுகின்ற சூழ்நிலைகள் குறித்து ஒரு விளக்கக் குறிப்பு தருக.)

(அல்லது)

"What is in writing shall only be proved by writing" - Discuss the statement and state the exceptions if any to this rule. ("எழுத்து மூலம் உள்ளவற்றை எழுத்து மூலமாகவே நிரூபிக்க வேண்டும்". இக்கூற்றினை விவாதித்து, இவ்விதிக்கு விதிவிலக்குகள் உண்டானால் கூறுக.)

(அல்லது)

"Oral evidence cannot be admitted to vary the contents of a document" - Elucidate and state the exception, if any. ("ஆவணமொன்றின் உள்ளடக்கத்தை மாற்றுவதற்கு வாய்மொழி சாட்சியத்தை அனுமதிக்க முடியாது" - இக்கூற்றினை விளக்கி, இதற்கு விதிவிலக்குகள் இருப்பின் அவற்றினை எடுத்தெழுதுக.)

முன்னுரை:

இந்திய சாட்சியச் சட்டத்தின் 6வது அத்தியாயம் (Chapter VI) ஆவணச் சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் விலக்கப்படுதலைப் பற்றிக் கூறுகின்றது. 91 மற்றும் 92வது பிரிவுகள் இது பற்றி விளம்புகின்றன விரிவாக வருமாறு.

அடிப்படைக் கருத்து:

அனைத்து வழக்குகளிலும் சிறந்த சாட்சியத்தையே (best evidence) சமர்ப்பிக்க வேண்டும் என்பது சாட்சிய சட்டத்தின் அடிப்படை விதிகளுள் ஒன்று. ஒரு ஆவணத்தில் கூறப்பட்டுள்ள பொருண்மைகளை நிரூபிப்பதற்கு, அந்த ஆவணமே சிறந்த சாட்சியமாகும். எனவே அந்த ஆவணத்தையே தாக்கல் செய்வதன் மூலமாகவோ அதாவது தலைநிலைச் சாட்சியம் (Primary) மூலமாகவோ அல்லது சார்நிலைச் சாட்சியம்

(Secondary) மூலமாகவோ நிரூபிக்கலாம். எழுத்து வடிவில் உள்ளவற்றை எழுத்து வடிவிலேயே நிரூபிக்க வேண்டும். (What is in writing, shall only be proved by writing.) அதற்கு வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படக் கூடாது. இதைத்தான் பிரிவு 91 & 92 பின்வருமாறு கூறுகிறது. அவற்றில் பிரிவு 91ஐ முதலில் காண்போம்.

பிரிவு 91 கூறுவதாவது:

ஓர் ஒப்பந்தம், கொடை (grant) அல்லது சொத்தைப் பற்றிய பிற ஏற்பாட்டின் (any other disposition of property) ஷரத்துகள் ஒரு ஆவண வடிவில் எழுதப்படும் பொழுது, அச்ஷரத்துகளை நிரூபிப்பதற்கு அந்த ஆவணத்தையே சாட்சியமாக சமர்ப்பிக்க வேண்டும். அல்லது அதற்கு சார்நிலைச் சாட்சியத்தை அளிக்கலாம். வேறெந்த சாட்சியமும் கொடுக்கப்படல் கூடாது.

மேற்படி பிரிவு ஒரு ஒப்பந்தம், கொடை அல்லது சொத்தை பற்றிய பிற ஏற்பாட்டின் ஷரத்துகள் அடங்கிய ஆவணத்தை மட்டுமே குறிப்பிடுகிறது. இவற்றிற்குத்தான் அந்த ஆவணத்தையே சாட்சியமாக தாக்கல் செய்ய வேண்டும். இவை தவிர வேறு வகையான ஆவணங்களுக்கு அந்த ஆவணங்களையே தாக்கல் செய்ய வேண்டுமென்பதில்லை. அதற்கு வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படலாம். இதனை மேற்படி பிரிவு 91 தடுக்க முடியாது. **[பிரிவு 91 விளக்கம் 3].**

எடுத்துக்காட்டாக, Bயால் செலுத்தப்பட்ட பணத்திற்கு அவருக்கு ரசீது ஒன்றை A தருகிறார். இங்கு பணம் கொடுத்ததைப் பற்றி வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படுகிறது. இச்சாட்சியம் அனுமதிக்கத்தக்கதே. **[பிரிவு 91 எடுத்துக்காட்டு (e)].** ஏனெனில் மேற்படி பிரிவு 91ல் கூறப்பட்ட ஒப்பந்தம், கொடை அல்லது சொத்தின் பிற ஏற்பாட்டின் கீழ் மேற்படி ரசீது வரவில்லை.

Chandrawati v. Lakshmi Chand[1]

இவ்வழக்கில் ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தின் உள்ளடக்கங்களை நிரூபிப்பதற்கு வாய்மொழி சாட்சியம் அளிக்கப்பட்டது. ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் பாகப் பிரிவினை பத்திரம் என்பது மேற்படி பிரிவு 91ன் படி சொத்தைப் பற்றிய பிற ஏற்பாட்டின் கீழ் வருகிறது. மேலும் அப்பத்திரம் முறைப்படி பதிவு செய்யப்படவில்லை.

Taburi Sahai v. Jhunjhunwala[2]

இவ்வழக்கில், ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்வதற்காக எழுதப்பட்ட ஆவணம், பிரிவு 91ன்படி ஒரு ஒப்பந்தம் ஆகாது

1. A.I.R. 1988 Del. 13
2. A.I.R. 1967 S.C. 106

எனப்பட்டது. எனவே அத்தத்தெடுப்பை நிரூபிப்பதற்கு மேற்படி தத்தெடுப்பு ஆவணம் மட்டுமில்லாமல், வேறு எந்த சாட்சியங்களையும் (வாய்மொழி) சமர்ப்பிக்கலாம், என்று கூறப்பட்டது.

பிரிவு 92 கூறுவதாவது:

வாய்மொழி உடன்படிக்கை பற்றிய சாட்சியம் ஒதுக்கப்படுதல் (Exclusion of evidence of oral agreements) குறித்து பிரிவு 92 கூறுகிறது. அதன்படி,

ஓர் ஒப்பந்தம், கொடை அல்லது சொத்தைப் பற்றிய பிற ஏற்பாட்டின் ஷரத்துகள் (terms) ஒரு ஆவண வடிவில் எழுதப்பட்டு அச்ஷரத்துகள் பிரிவு 91ல் கூறப்பட்டுள்ளபடி நிரூபிக்கப்பட்டிருந்தால், அவற்றை முரண்படுத்தவோ (Contradict), மாற்றவோ (Vary) அல்லது அவற்றுடன் சேர்க்கவோ (Add) அல்லது கழிக்கவோ (Substract) நோக்கங்கொண்டு செய்யப்படும் வாய்மொழி உடன்படிக்கை அல்லது உரை எதையும் பற்றிய சாட்சியம் எதுவும் அந்த ஆவணத் தரப்பினர் களுக்கிடையே அனுமதிக்கப்படாது.

வேறுவிதமாக கூறப்போனால், மேற்படி ஆவணங்களின் ஷரத்துகளை தகுநிலைப்படுத்த[1] (Qualify) வாய்மொழி சாட்சியம் ஏதும் அளிக்கப் படலாகாது, என்பதே மேற்படி பிரிவு 92 ன் நோக்கமாகும். ஆனால், இப்பிரிவு வாய்மொழி (உடன்படிக்கை உண்டு என்று வாய்மொழி) சாட்சியம் அளிப்பதிலிருந்து அந்த ஆவணத் தரப்பினர்களை மட்டுமே தடுக்கிறது. அவர்களைத் தவிர வேறு தரப்பினர்கள் அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் குறித்து வாய்மொழி சாட்சியம் அளிக்கலாம். **(Vishwanathan v. Abdul Wajid[2]).** அதுபோல், அந்த ஆவண ஷரத்துகளை முரண்படுத்தாத, மாற்றாத, அதனுடன் சிலவற்றை சேர்க்காத அல்லது கழிக்காத வாய்மொழி உடன்படிக்கைகளுக்கு சாட்சியம் அளிப்பதை மேற்படி பிரிவு தடுக்கவில்லை. **(Veeraswami v. Narayanan[3])**

எடுத்துக்காட்டுகள் (Illustrations):

பிரிவு 92ன்கீழ் மொத்தம் 10 எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டை மட்டும் இங்கு காண்போம்.

(1) கல்கத்தாவிலிருந்து கிளம்பும் கப்பல்களுக்கு காப்பீட்டு பத்திரமொன்று வழங்கப்படுகிறது. அக்கப்பல்களில் ஒன்று செல்லும் வழியில் காணாமற் போய்விடுகிறது. அக்கப்பல் மேற்படி காப்பீட்டு

1. தகுநிலைப்படுத்தல் - முரண்படுத்தும், மாற்றும், சேர்க்கும் அல்லது அழிக்கும் செயல்களாக இங்கு பொருள் கொள்ள வேண்டும்.
2. A.I.R. 1968 S.C. 1
3. A.I.R. 1949 P.C. 32

பத்திரத்திலிருந்து வாய்மொழியாக விலக்கப்பட்டுவிட்டது என்று நிரூபிக்க முடியாது.

(2) ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுப்பதாக எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று உள்ளது. அந்த குறிப்பிட்ட நாள் பின்னர் ஏற்பட்ட ஒரு வாய்மொழி உடன்படிக்கை மூலம் மாற்றப்பட்டு விட்டதாக நிரூபிக்கப்பட முடியாது.

பிரிவு 92க்கு விதிவிலக்குகள் (Exceptions) - 6 வகை:

பிரிவு 92ன்கீழ் 6 வகையான விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பங்களில் வாய்மொழி உடன்படிக்கை பற்றிய (வாய்மொழி) சாட்சியம் அளிக்கப்படலாம். அவை வருமாறு.

1) ஒரு ஆவணத்தை செல்லாததாக்கக்கூடிய காரணிகளான மோசடி, மிரட்டுதல், சட்ட விரோதத்தன்மை, உரிய முறையில் எழுதிக் கொடுக்கப் படாமை, ஒப்பந்தத் தகுதியின்மை, மறுபயன் இல்லாமை ஆகியவற்றை வாய்மொழிச் சாட்சியம் மூலம் நிரூபிக்கலாம்.

2) எந்த விஷயத்தைப் பற்றி ஒரு ஆவணம் மௌனமாக (silent) இருக்கிறதோ மற்றும் எந்த விஷயம் அதன் ஷரத்துக்களுக்கு முரணானதாக இல்லையோ அந்த விஷயம் பற்றி தனியாக வாய்மொழி உடன்படிக்கை உள்ளது என்பதை சாட்சியமளித்து நிரூபிக்கலாம்.

3) அத்தகைய ஒப்பந்தம், கொடை அல்லது சொத்து சம்பந்தமான ஏற்பாடு எதன்படியேனும் ஏதாவதொரு கடப்பாட்டைப் பிறப்பிப்பதற்கு முன் நிபந்தனையாக அமையும் தனித்த வாய்மொழி உடன்படிக்கை எதையும் சாட்சியமளித்து நிரூபிக்கலாம்.

4) அத்தகைய ஒப்பந்தம், கொடை அல்லது சொத்து சம்பந்தமான ஏற்பாடு, சட்டத்தின்படி எழுத்தில் இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாவணம் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய சந்தர்ப்பத்தைத் தவிர, அந்த ஒப்பந்தம், கொடை ஆகியவற்றை ரத்து செய்யவோ அல்லது மாறுதல் செய்யவோ ஏற்பட்ட தனிப்பட்ட பிந்தய வாய்மொழி உடன்படிக்கை உள்ளது என்பதை சாட்சியமளித்து நிரூபிக்கலாம்.

5) ஒரு வழக்காறு அல்லது வழக்கத்தின்படி சில உரிமைகள் அல்லது கடப்பாடுகள் ஒரு ஒப்பந்தத்துடன் வழக்கமாகவே இணைக்கப் பட்டிருக்கும்பொழுது, அந்த வழக்காறு அல்லது வழக்கம் பற்றி வாய்மொழிச் சாட்சியம் அளிப்பதன் மூலமாக நிரூபிக்கலாம்.

6) சூழ்ந்திருக்கும் பொருண்மைகளுக்கு ஒரு ஆவணத்தின் வாசகம் எந்த முறையில் தொடர்புடையது என்பதைக் காட்டுகின்ற எந்தப் பொருண்மையும் வாய்மொழி சாட்சியத்தால் நிரூபிக்கப்படலாம்.

முடிவுரை:

ஒரு ஆவணத் தரப்பினர்கள் அந்த ஆவண ஷரத்துக்களை மாற்றியமைக்கும் வண்ணம் உள்ள உடன்படிக்கை பற்றி வாய்மொழிச் சாட்சியமளிக்கக் கூடாது என்பதே மேற்படி 91மற்றும் 92வது பிரிவுகளின் அடிப்படை அம்சமாகும். ஆனால் **99வது பிரிவானது,** ஒரு ஆவணத்தில் தரப்பினர்களாக இல்லாத மூன்றாவது நபர்கள், அந்த ஆவணச் ஷரத்துகளை மாற்றும் வண்ணம் வாய்மொழிச் சாட்சியமளிக்கலாம் என்று கூறுகிறது.

வெளிப்படை மற்றும் உட்கிடை பொருள் மயக்கம் (Patent and Latent Ambiguity)

66. What are latent and patent ambiguities? When can such ambiguties be cleaned up? (வெளிப்படை மற்றும் உட்கிடை பொருள் மயக்கங்கள் எவை? அவ்வித பொருள் மயக்கங்கள் எப்போது தெளிவாக்கப் படலாம்?)

(அல்லது)

Explain 'latent ambiguity' and 'patent ambiguity' and bring out the distinction between them. ("உட்கிடை தேற்றமின்மை" மற்றும் "வெளிப்படை தேற்றமின்மை" இவைகளை விளக்கி, அவைகளிடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Distinguish between
Patent ambiguity and Latent ambiguity.

வேறுபடுத்துக:
வெளிப்படையான மற்றும் மறைந்துள்ள ஐயப்பாடு

(அல்லது)

Explain how far oral evidence is admissible to clear ambiguities in documents. (எப்பொழுது வாய்மொழிச் சாட்சியம் ஆவணங்களில் உள்ள தெளிவற்ற நிலையை நீக்குவதற்கு ஏற்கப்படுமென்பதை விளக்குக.)

(அல்லது)

Latent ambiguity - Write short notes. (உட்கிடை பொருள் மயக்கம் - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Patent ambiguity - Write short notes. (வெளிப்படை பொருள் மயக்கம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஆவணங்களின் பொருள் மயக்கம் இரு வகைப்படும். அவை

(1) வெளிப்படையான பொருள் மயக்கம் (Patent ambiguity) (2) உட்கிடையாள பொருள் மயக்கம் (Latent ambiguity). சாட்சிய சட்டத்தின் **93 மற்றும் 94வது பிரிவுகள்** வெளிப்படையான பொருள் மயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. **95 முதல் 98 வரையுள்ள பிரிவுகள்** உட்கிடையான பொருள் மயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

வெளிப்படையான பொருள் மயக்கம் (Patent ambiguity) – விளக்கம்:

ஒரு ஆவணத்தை மேலோட்டமாகப் படிக்கும் பொழுதே, அதிலுள்ள பொருள் தெளிவின்மை அல்லது குறைபாடு படிப்பவருக்குக் வெளிப்படையாக தெரிந்து விட்டால், அது வெளிப்படையான பொருள் மயக்கம் எனப்படும்.

இந்த வெளிப்படையான பொருள் மயக்கத்திற்கு விளக்கமளிக்கும் வகையிலோ அல்லது அதிலுள்ள குறைப்பாட்டை தீர்க்கும் வகையிலோ எவ்வித புறநிலை சாட்சியமும் (Extrinsic evidence) கொடுக்கப்படுதல் கூடாது. இதனை பிரிவு 93 மற்றும் 94 மேலும் விரிவாக எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது. அவை வருமாறு.

பிரிவு 93 கூறுவதாவது:

ஒரு ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட வாசகமானது பார்த்த மாத்திரத்திலேயே அய்யத்திற்குரியதாகவோ அல்லது குறைபாடுள்ள தாகவோ இருக்கும் போது, அதன் பொருளைத் தெளிவாக்கும் பொருட்டு அல்லது அதன் குறைபாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு சாட்சியம் எதுவும் அளிக்கப்படுதல் கூடாது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் தன்னுடைய குதிரையை "ரூ.1000/-க்கோ அல்லது ரூ.1,500/-க்கோ" Bக்கு விற்பனை செய்வதாக ஒரு ஆவணத்தில் எழுதிக் கொடுத்திருந்தால், இதில் A எந்த விலைக்குத் தனது குதிரையை Bக்கு விற்க உள்ளார் என்பதைச் சரியாகக் கணிக்க முடியாது. இவ்வகையான பொருள் தெளிவின்மைக்கே வெளிப்படையான பொருள் மயக்கம் என்று பெயர். இவ்வெளிப்படையான பொருள் தெரிவின்மையை தீர்க்கும் பொருட்டு எச்சாட்சியமும் அளிக்கப்படக்கூடாது.

பிரிவு 94 கூறுவதாவது:

ஆவணமொன்றில் பயன்படுத்தப்படும் வாசகமானது, தானே தெளிவானதாக இருக்கும் போதும், சூழ்ந்திருக்கும் பொருண்மைகளின் மீது துல்லியமாக அது இயங்கும் போதும், அது அத்தகைய பொருண்மைகளின் மீது இயங்க வேண்டும் என்று கருதப்படவில்லை என்று காட்டுவதற்கு சாட்சியம் கொடுக்கப்படுதல் ஆகாது.

மேற்படி பிரிவு பொருள் மயக்கத்தை உண்டு செய்யக்கூடிய விதத்தில் சாட்சியம் அளிக்கப்படக்கூடாது என்று மறைமுகமாகக் கூறுகிறது.

அதாவது ஆவணத்தில் ஒன்றைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் பொழுது, அதற்கு முரணாக அய்யப்பாட்டை விளைவிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கப்படல் கூடாது. பின்வரும் எடுத்துக்காட்டு இதனை மேலும் தெரிவிக்கும்.

எடுத்துக்காட்டாக, "100 ஏக்கர்கள் கொண்ட ராம்பூரிலுள்ள எனது தோட்டத்தை" என்று குறிப்பிட்டு, ஆவணம் மூலமாக Bக்கு A விற்பனை செய்கிறார். 100 ஏக்கர்கள் கொண்ட தோட்டம் ராம்பூரில் Aக்கு இருக்கிறது. ஆவண வாசகம் மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே இதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, விற்பனை செய்யக் கருதப்பட்ட தோட்டமானது வேறோர் இடத்தில் (உதாரணமாக பல்ராம்பூரில்) அமைந்ததும் வேறோர் அளவினைக் (உதாரணமாக 10 ஏக்கர்) கொண்டதுமான ஒன்று என்று பொருள் மயக்கம் தரும் வகையில் சாட்சியம் அளிக்கப்படக் கூடாது.

உட்கிடைப் பொருள் மயக்கம் (Latent ambiguity) - விளக்கம்:

ஒரு ஆவணத்தைப் படிக்கும் பொழுது தெளிவாகப் பொருள் விளங்குவது போல் தோன்றி, ஆனால் அதனைச் செயல்படுத்தும் பொழுது சிக்கல் ஏற்பட்டால் அவ்வகை ஆவணத்தில் உட்கிடைப் பொருள் மயக்கம் உள்ளது எனலாம். ஏனெனில் அந்த ஆவணத்தை எழுதியவர், தெளிவான எண்ணத்தில் எழுதியிருக்கலாம். ஆனால் அதனைச் செயல்படுத்தும் பொழுது அது சிக்கலைத் தோற்றுவிக்கலாம். இந்த வகையான பொருள் மயக்கத்தை நீக்குவதற்கு வாய்மொழிச் சாட்சியம் அளிக்கப்படலாம். விரிவாக எடுத்துக் காட்டுகளுடன் அடுத்து வரும் பத்திகளில் காண்க.

பொருள் மயக்கத்தை நீக்க வாய்மொழி சாட்சியம் எப்பொழுது அளிக்கப்படலாம்?

வெளிப்படையான (Patent) பொருள் மயக்கத்தை நீக்க அல்லது தீர்க்க, வாய்மொழிச் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படாது. அந்த ஆவணத்தின் பிற பகுதிகளில் என்ன கூறப்பட்டுள்ளதோ, அதை மட்டும் கருத்தில் கொண்டு, அந்த பொருள் மயக்கத்தை நிவர்த்திக்க நீதிமன்றம் முயலலாம். இதைத் தவிர வேறு சாட்சியங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது.

ஆனால் உட்கிடையான (Latent) பொருள் மயக்கத்தை நீக்க வாய்மொழிச் சாட்சியம் (Oral or Parole evidence) அளிக்கப்படலாம். அத்தகு சூழ்நிலைகள் குறித்து பிரிவு 95 முதல் 98 வரை குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:

பிரிவு 95 கூறுவதாவது:

ஒரு ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட வாசகமானது தானே

தெளிவாக இருந்து, ஆனால் சூழ்ந்திருக்கும் பொருண்மைகளைக் குறித்த மட்டில் பொருள் தராததாக இருக்கும்போது, அது ஒரு தனிப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டது என்பதைக் காட்ட சாட்சியம் கொடுக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக, "மதுரையிலுள்ள எனது வீட்டை" என்று குறிப்பிட்டு ஆவணம் மூலமாக Bக்கு A விற்பனை செய்கிறார். Aக்கு மதுரையில் வீடு எதுவும் இல்லை; ஆனால் அவருக்கு வத்தலகுண்டில் ஒரு வீடு இருந்தது என்றும், அந்த ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட பொழுது அது Bயின் அனுபவத்தில் இருந்தது என்றும் தெரிய வருகிறது. அந்த ஆவணம் வத்தலகுண்டில் உள்ள வீடு சம்பந்தப்பட்டது என்பதைக் காட்ட மேற்படி பொருண்மைகள், சாட்சியம் மூலம் மெய்ப்பிக்கப்படலாம்.

பிரிவு 96 கூறுவதாவது:

பயன்படுத்தப்பட்ட வாசகமானது பல்வேறு ஆட்களில் ஒருவரை அல்லது பல்வேறு பொருட்களில் ஒன்றை குறிக்கும் எண்ணத்தோடு பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்று தோன்றுமளவிற்கு பொருண்மைகள் இருக்கும் பொழுது, அவர்களில் எவர் அந்த நபர் அல்லது அப்பொருட்களில் எது அந்தப்பொருள் என்பதைக் காட்டுவதற்கு சாட்சியம் அளிக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக, "எனது வெள்ளைக் குதிரையை" என்று குறிப்பிட்டு ரூ.1000/-க்கு Bக்கு விற்பனை செய்ய A உடன்படுகிறார். Aக்கு இரண்டு வெள்ளைக் குதிரைகள் இருக்கின்றன. விற்கக் கருதியது, அவற்றுள் எது என்பதைக் காட்டும் பொருண்மைகள் பற்றி சாட்சியம் அளிக்கப்படலாம்.

பிரிவு 97 கூறுவதாவது:

பயன்படுத்தப்பட்ட வாசகத்தின் ஒரு பகுதி, சூழ்ந்திருக்கும் பொருண்மைகளின் ஒரு தொகுப்புடனும், பிறிதொரு பகுதி சூழ்ந்திருக்கும் பொருண்மைகளின் மற்றொரு தொகுப்புடனும் பொருந்தி, ஆனால் மொத்த வாசகமானது அவற்றில் எந்தத் தொகுப்புடனுமே சரியாகப் பொருந்தாமல் இருக்கும்போது, அவ்விரண்டில் எந்தத் தொகுப்புடன் பொருந்தும் கருத்தோடு அது பயன்படுத்தப்பட்டது என்பதைக் காட்ட சாட்சியம் அளிக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக, "Z என்பவரின் அனுபவத்திலுள்ள X என்னுமிடத்திலுள்ள எனது நிலத்தை" என்று குறிப்பிட்டு A என்பவர் Bக்கு அந்நிலத்தை விற்பனை செய்ய உடன்படுகிறார். X என்னும் இடத்தில் Aக்கு நிலம் இருக்கிறது. ஆனால் அது Z என்பவரின் அனுபவத்தில் இல்லை; அதேபோல் Aயின் மற்றொரு நிலம் Zன் அனுபோகத்தில் இருக்கிறது. ஆனால் அது X என்னும் இடத்தில் இல்லை. விற்பனை

செய்யக் கருதியது எந்நிலம் என்பதைக் காட்டுகின்ற பொருண்மைகளைப் பற்றி சாட்சியம் அளிக்கப்படலாம்.

பிரிவு 98 கூறுவதாவது:

தெளிவற்ற அல்லது சாதாரணமாகப் புரியும்படி இல்லாத எழுத்துகள்; அயல்நாட்டு, வழக்கொழிந்த, தொழில் நுட்ப, வட்டார மற்றும் மாகாணச் சொற்றொடர்கள்; ஒரு தனிப்பட்ட பொருளில் பயன் படுத்தப்படும் சுருக்கக் குறியீடுகள் மற்றும் சொற்கள் ஆகியவற்றின் பொருளைக் காட்டுவதற்காகச் சாட்சியம் கொடுக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக, "என்னுடைய மாதிரிகள் (Models)" என்று குறிப்பிட்டு A என்ற சிற்பி, B என்பவருக்கு விற்பனை செய்ய உடன் படுகிறார். மாதிரிப் படிவங்களையும், மாதிரிப் படிவங்களைச் செய்யும் கருவிகளையும் A வைத்திருக்கின்றார். அவற்றில், விற்பனை செய்யக் கருதியது எதை என்பதைக் காட்டச் சாட்சியம் கொடுக்கப்படலாம்.

வேறுபாடுகள்:

வெளிப்படையான பொருள் மயக்கம் (Patent ambiguity)	**உட்கிடையான பொருள் மயக்கம் (Latent ambiguity)**
1. ஒரு ஆவணத்தின் வாசகங்கள், பார்த்த மாத்திரத்திலேயே வெளிப்படையாக தோன்றும் அய்யப்பாடுகள் அல்லது குறைகளை கொண்டிருந்தால் அது வெளிப்படையான பொருள் மயக்கம் எனப்படுகிறது.	ஒரு ஆவணத்தின் வாசகங்களை படிக்கும்பொழுது தெளிவாக பொருள் விளங்குவது போல் தோன்றினாலும், அதனைச் செயல்படுத்தும் பொழுது சிக்கல் ஏற்பட்டால், அது உட்கிடையான பொருள் மயக்கம் எனப்படுகிறது.
2. இவ்வகை பொருள் மயக்கத்தை தீர்க்க புறநிலைச் சாட்சியம் ஏதும் அளிக்கப்படக்கூடாது. அந்த ஆவணத்தின் பிற பகுதிகளைக் கொண்டே அதை நிவர்த்திக்க நீதிமன்றம் முயலலாம்.	இவ்வகை பொருள் மயக்கத்தை தீர்க்க வாய்மொழிச் சாட்சியம் அளிக்கப்படலாம்.
3. இது குறித்து பிரிவுகள் 93 & 94 கூறுகிறது.	இது குறித்து 95 முதல் 98 வரையிலான பிரிவுகள் கூறுகின்றன.

இதுவரை ...

இதுவரை, ஏப்பொருண்மைகளை, எப்படி மெய்ப்பிக்க வேண்டும் என்பதைப்பற்றி இந்திய சாட்சிய சட்டத்தின் **IIவது பகுதி (Part II) "மெய்ப்பித்தல் பற்றி" (on proof)** எனும் தலைப்பின் கீழ் கூறியதைக் கண்டோம். இனி சாட்சிய சட்டத்தின் **IIIவது பகுதியைக் (Part III)** காண உள்ளோம். அதில் **"சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும்" (Production and Effect of Evidence)** பற்றி விளக்கப்பட்டுள்ளது. அதாவது பொருண்மைகளை மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் உள்ளது, சாட்சிகளின் தகுதி, சாட்சிகளை விசாரித்தல் உள்ளிட்ட பல விபரங்கள் அப்பகுதியின் கீழ் கூறப்பட்டுள்ளன.

பகுதி - III. சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும் [Production and Effect of Evidence]

32 மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பு [Burden of Proof]

மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பின் விளக்கமும் விதிகளும்

67. What is meant by burden of proof? It is said that the burden of proof may shift in the course of a suit or prosecution. Explain with illustrations. (மெய்ப்பிக்கும் சுமை என்றால் என்ன? உரிமை வழக்கு அல்லது குற்ற வழக்கு நடப்பிலிருக்கையில் மெய்ப்பிக்கும் சுமை இடம் மாறலாம் என்று சொல்லப்படுகிறது. இக்கூற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

State the rules relating to the burden of proof. (மெய்ப்பிக்கும் பொறுப்பு சம்பந்தமான விதிகளை எடுத்துரைக்க.)

(அல்லது)

Explain the principles governing burden of proof. (மெய்ப்பிக்கும் சுமை சம்பந்தமான கோட்பாடுகளை விளக்குக.)

(அல்லது)

Burden of proof (மெய்ப்பிக்கும் சுமை) - Write short notes.

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் ஏழாவது அத்தியாயம் **(Chapter VII)** 'மெய்ப்பிக்கும் சுமை' பற்றி 101 முதல் 114 வரையுள்ள பிரிவுகளின் வழியாக கூறுகின்றது. அவற்றை விரிவாகப் பின்வருமாறு காண்போம்.

மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பு (Burden of Proof) - விளக்கம்:

வழக்கு தொடுத்துவிட்டால் மட்டும் போதாது; அதில் வெற்றிபெற

அவ்வழக்கின் பொருண்மைகளை வழக்கு தாக்கல் செய்தவர் மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு நிலையில் உள்ளார். இப்படிப்பட்ட பொறுப்பே **'மெய்ப்பிக்கும் சுமை'** அல்லது **'மெய்ப்பிக்கும் பொறுப்பு'** எனப் படுகிறது. இப்பொறுப்பு உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இரு தரப்பட்ட வழக்குகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

மெய்ப்பிக்கும் பொறுப்பு - இரு விதம்:

1. ஒருவரது வழக்கின் பொருண்மைகளை மெய்ப்பிக்கும் பொறுப்பு (the burden of proving the facts of one's case). இது குறித்து **பிரிவு 101** கூறுகிறது.

2. வழக்கின் ஆரம்பத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட கட்டத்திலோ சாட்சியமளிக்கும் பொறுப்பு (the burden of introducing evidence at the beginning, or at any particular stage of the case). இது குறித்து **பிரிவு 102** கூறுகிறது.

மீதமுள்ள **103லிருந்து 112 வரையிலுள்ள பிரிவுகள்** மெய்ப்பிக்கும் பொறுப்பு குறித்த சில தனிப்பட்ட விதிகளைக் (Specific rules) கூறுகிறன.

மேற்கண்டவற்றைக் குறித்து விரிவாகப் பின்வருமாறு காண்போம்.

பிரிவு 101 கூறுவதாவது - முதல் விதம்:

ஒருவரது வழக்கின் பொருண்மைகளை அவரே மெய்ப்பித்தல் வேண்டும். (He who asserts, must prove). நாம் தொடுத்த வழக்கை நாம்தான் மெய்ப்பிக்க வேண்டும். இவ்வாறு மெய்ப்பிக்காவிட்டால் நமது வழக்கு தள்ளுபடியாகிவிடும். எனவேதான் சிறந்த வழக்கறிஞர்கள், ஒரு வழக்கில் எத்தகு பொருண்மைகளை மெய்ப்பிக்க முடியுமோ அத்தகு பொருண்மைகளை மட்டும் குறிப்பிட்டு தாவாவை அல்லது மனுவை வரைவர். மெய்ப்பிக்க முடியாத பொருண்மைகளை கூறிவிட்டு, அதற்குபின் வழக்கு விசாரணையின் பொழுது அதனை மெய்ப்பிக்க சாட்சியங்களைத் தேடிக் கொண்டிருக்க முடியாது. இதைத்தான் **பிரிவு 101** சட்ட மொழியில் பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

"சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும் பற்றி எந்த நீதிமன்றமேனும் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எவரேனும் கோரி, அது அவர் கூறுகிற பொருண்மைகளின் உண்மையைப் பொறுத்திருக்குமேயானால், அவரே, அந்தப் பொருண்மைகளின் உண்மையை மெய்ப்பித்தல் வேண்டும்.

ஒருவர் எந்தப் பொருண்மையின் உண்மையையேனும் மெய்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கும்போது, **மெய்ப்பிக்கும் சுமை (அல்லது) பொறுப்பு** அவரையே சார்ந்திருப்பதாகச் சொல்லப்படும்".

சுருங்கக்கூறின், எந்த நபர் நீதிமன்றம் ஒரு பொருண்மையினை நம்ப வேண்டுமென்று விரும்புகின்றாரோ, அந்த நபரே அதை மெய்ப்பிக்கின்ற பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்:

1) ஒரு குற்றத்திற்காக B யைத் தண்டிக்க வேண்டுமென A நீதிமன்றத்தைக் கோருகிறார். இதற்கு, B செய்த குற்றத்தை A மெய்ப்பித்தல் வேண்டும்.
2) B அனுபவிக்கும் நிலத்தில் தமக்கு உரிமை உண்டு என A விளம்புகிறார். அவ்வாறு தீர்ப்பு கொடுக்குமாறு நீதிமன்றத்தை வேண்டுகிறார். இங்கு அவ்வாறு உரிமையுண்டு எனும் பொருண்மையை A மெய்ப்பித்தல் வேண்டும்.

பிரிவு 101ன்கீழ் மெய்ப்பிக்கும் பொறுப்பு இடம் மாறுமா?

பிரிவு 101ன்படி, யார் ஒரு பொருண்மையை கூறுகின்றாரோ, அவரே அதனை மெய்ப்பித்தல் வேண்டும். எனவே மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரிடத்திலேயே நின்றுவிடுகிறது. அதாவது மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரையேச் சார்ந்தது. எதிர்தரப்பினருக்கு மாறுவதில்லை (does not shift).

W.R. Colliery v. Bihar State Co-op. Marketing Union[1]

இவ்வழக்கில் வாதியானவர் நிலக்கரியை பிரதிவாதிக்கு விற்றார். அந்நிலக்கரியின் எடையைப் பொறுத்து அதன் விலை நிர்ணயிக்கப்படும் என வாதி கூறினார். ஆனால் பிரதிவாதியோ, நிலக்கரியின் அளவைப் பொறுத்தே விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கூறினார். உடனே வாதி வழக்கைத் தொடர்ந்தார். மேற்படி விலை நிர்ணய முறை குறித்து இருதரப்பினர்களாலும் சரியான சாட்சியங்களை சமர்பிக்க இயலவில்லை. எனினும் வழக்கைத் தொடுத்த வாதியே அவரது வழக்கை (அதாவது எடையின் அடிப்படையில் விலை என்பதை) மெய்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.

பிரிவு 102 கூறுவதாவது - இரண்டாவது விதம்:

ஒருவர் தொடுத்த வழக்கை அவரே மெய்ப்பித்தல் வேண்டும் என்பது பிரிவு 101ன் சாராம்சமாகும். அவ்வாறு அவர் மெய்ப்பித்துவிட்டால், அவர் வழக்கில் வெற்றி பெற்றுவிடுவார். அவர் கோரிய நிவாரணம் அவருக்கு கிடைத்து விடும். ஆனால் இங்கு அவரது வழக்கை எதிர்த்து எதிர்தரப்பினர் ஏதேனுமொரு வாதத்தை முன் வைத்தால், அது குறித்த பொருண்மைகளை அவ்வெதிர் தரப்பினரே மெய்ப்பித்தல் வேண்டும். அதாவது இங்கு மெய்ப்பிக்கும் பொறுப்பானது வழக்கைத் தொடுத்தவரிடமிருந்து எதிர்தரப்பினருக்கு இடம் மாறுகிறது (Burden of proof shifts). இதைத்தான் **பிரிவு 102** ஆனது பொதுவாக பின்வருமாறு

1. AIR 1978 Pat. 57

சற்று மெருகூட்டி **"மெய்ப்பிக்கும் பொறுப்பு எவரைச் சார்ந்தது"** என்ற தலைப்பின் கீழ் கூறுகிறது. அதன்படி,

"உரிமை வழக்கு அல்லது நடவடிக்கையொன்றில் மெய்ப்பிக்கும் பொறுப்பானது, இருதரப்பிலுமே சாட்சியம் எதுவும் கொடுக்கப்பட வில்லை என்றால் எவர் தோற்றுப்போய்விடுவாரோ அவரைச் சார்ந்திருக்கும்".

அதாவது இதனை **"சாட்சியமளிக்கும் பொறுப்பு"** என்றும் கூறலாம். வாதி தனது வழக்கை மெய்ப்பிக்க சாட்சியங்களை சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் அவர் வழக்கில் தோற்றுப் போய்விடுவார். எனவே மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. வாதி சாட்சியங்களை சமர்ப்பித்து விட்டால், அவர் வெற்றி பெற்று விடுவார். எனவே வாதியின் வழக்கிற்கு எதிரான பொருண்மைகளை பிரதிவாதி தக்க சாட்சியமளித்து மெய்ப்பிக்க வேண்டும். இங்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு பிரதிவாதியைச் சார்ந்தது. இவ்வாறு பிரிவு 102ன் கீழ் மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியிடமிருந்து பிரதிவாதிக்கு மாறுகிறது (shifts). பின்வரும் எடுத்துக் காட்டுகளையும் வழக்குகளையும் கண்டால் மேலும் தெளிவாகும்.

எடுத்துக்காட்டுகள்:

1. Aயின் அனுபவத்தில் சில நிலங்கள் இருக்கின்றன. அந்நிலங்கள் தமக்குச் சொந்தமானவையென B என்பவர் A மீது வழக்கிடுகிறார். தனக்கு Aயின் தகப்பனார் அந்நிலங்களை உயில் மூலம் கொடையாக அளித்து விட்டதாக B கூறுகிறார். இங்கு இருதரப்பினராலும் சாட்சியங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே Bயின் வழக்கு தோற்றுவிடும். மேற்படி Aக்கே அந்நிலங்கள் சொந்தமாகிவிடும். எனவே வழக்கில் தோற்றுப் போய்விடும் நிலையில் உள்ள Bதான், அவரது வழக்கை மெய்ப்பிக்கும் பொறுப்புடையவர்.

2. ஒரு ஆவணத்தின் (Bond) கீழ் வரவேண்டிய கடனுக்காக A என்பவர் Bயின் மீது வழக்கிடுகிறார். ஆவணம் எழுதிக் கொடுத்ததை B ஒத்துக் கொள்கிறார். ஆனால் அது மோசடியால் பெறப்பட்டது எனக் கூறுகிறார். இதை A மறுக்கிறார். இரு தரப்பினராலும் சாட்சியங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லையெனில் A தான், அவ்வழக்கில் வெற்றி பெறுவார். ஏனெனில் A செய்த மோசடி Bயால் மெய்ப்பிக்கப்படவில்லை. இதனால், B அவ்வழக்கில் தோற்றுப்போய்விடுவார். எனவே A செய்த மோசடியை மெய்ப்பிக்கும் பொறுப்பு Bயையேச் சார்ந்ததாகும்.

பிரிவு 102ன் கீழ் மெய்ப்பிக்கும் பொறுப்பு இடம் மாறுமா?

நாம் ஏற்கனவே கண்டதுபோல் மெய்ப்பிக்கும் பொறுப்பு இப்பிரிவின் கீழ் மாறக்கூடியதாகும். இதனை மெய்ப்பிக்கும் பொறுப்பு மாறாது என்பதற்குண்டான விதிவிலக்குகளாகக் கொள்ளலாம். இவ்வாறு

உரிமை அல்லது குற்ற வழக்கு நடப்பிலிருக்கையில் மாறக்கூடிய பொறுப்பு குறித்து மேற்படி பிரிவு 102 தவிர பிரிவுகள் 103 , 106 முதல் 111 மற்றும் 114 மேலும் குறிப்பாக கூறுகிறது. அவற்றை பின்னர் காண்போம்.

Syed Abdul Hassan Karimulla v. Razik Husain[1]

இவ்வழக்கில் ஒரு கையொப்பமானது, சம்பந்தப்பட்ட பிரதிவாதியினுடையதுதான் என வாதியால் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் அப்பிரதிவாதியோ தான் கையொப்பமிட்ட ஆவணத்தின் உள்ளடக்கங்களை தவறாக புரிந்து கொண்டு விட்டதால், அவ்வாறு கையொப்பமிட்டுவிட்டதாக கூறுகிறார். இதனை மெய்ப்பிக்கும் பொறுப்பு அப்பிரதிவாதியினுடையதே ஆகும்.

மெய்ப்பிக்கும் பொறுப்பு குறித்த சாட்சிய சட்டத்தின் தனி விதிகள் (Specific Rules of Burden of Proof) [பிரிவுகள் 103லிருந்து 112 வரை]:

பிரிவு 103 கூறுவதாவது:

ஒரு குறிப்பிட்ட பொருண்மையை (Particular fact) நீதிமன்றம் நம்ப வேண்டும் என யார் விரும்புகிறாரோ அவரே அக்குறிப்பிட்ட பொருண்மையை மெய்ப்பிக்கும் பொறுப்புடையவர்.

எடுத்துக்காட்டாக, A மீது திருட்டுக் குற்றத்திற்காக B வழக்குத் தொடுகிறார். தான் திருடியதை Cயிடம் A ஒப்புக்கொண்டுள்ளார், என்பதை நீதிமன்றம் நம்ப வேண்டுமென B விரும்புகிறார். எனவே மேற்படி ஒப்புதலுரையை (admission) மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு Bயைச் சார்ந்ததாகும். அதேபோல் அத்திருட்டுச் சமயத்தில், தான் வேறொரு இடத்தில் இருந்தேன் என்பதை நீதிமன்றம் நம்ப வேண்டுமென A விரும்புகிறார். அவர் அதை மெய்ப்பித்தல் வேண்டும்.

Kamini v. Purna Chandra[2] - இவ்வழக்கில் ஒரு பெண் அவளது மாமனார் மாமியாரால் கொடுமைப்படுத்தப்பட்டாள். இதனால் அவ்வீட்டைவிட்டு வெளியேறி, தனது நகைகளையும், பிற பொருட்களையும் திரும்பத் தரக்கோரி தனது மாமனார், மாமியார் மீது வழக்கிட்டாள். அந்நகைகளையும், பொருட்களையும் அவள் வீட்டை விட்டு வெளியேறும்பொழுது தன்னுடனேயே எடுத்துக் கொண்டுச் சென்று விட்டாள், என மேற்படி மாமனார், மாமியார் வாதம் புரிந்தனர். இக்குறிப்பிட்ட பொருண்மையை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அந்த மாமனார், மாமியாரையே சாரும் என நீதிமன்றம் கூறியது.

பிரிவு 104 கூறுவதாவது:

1. AIR 1987 Bom. 60
2. AIR 1987 Orissa 134

ஒரு பொருண்மையை மெய்ப்பிக்க வேறெந்த தொடர்புடைய பொருண்மையையாவது மெய்ப்பிக்க வேண்டியது அவசியமானால், யார் அதற்குண்டான சாட்சியத்தை கொடுக்க விரும்புகின்றாரோ, அவரே அத்தொடர்புடைய பொருண்மையையும் மெய்ப்பித்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, Bயின் மரண வாக்குமூலத்தை மெய்ப்பிக்க A விரும்புகிறார். இங்கு அதற்குத் தொடர்புடைய பொருண்மையான Bயின் மரணத்தை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு Aயைச் சார்ந்ததாகும்.

பிரிவு 105 கூறுவதாவது:

குற்றம் எதையேனும் செய்ததாக ஒருவர் குற்றஞ் சுமத்தப்படும்போது, அந்த வழக்கை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பொது விதிவிலக்குகளின் (Exceptions) கீழ் கொண்டுவர முடியுமென்று அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கூறினால், அவ்விதிவிலக்கு சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளின் உண்மையை மெய்ப்பிக்கும் பொறுப்பு அந்நபரையே சார்ந்ததாகும்.

மற்றபடி அத்தகைய சூழ்நிலைகள் இல்லையென்றே நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, 1. கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட A என்பவர், புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால் (விதிவிலக்கான சூழ்நிலை) அச்செய்கையின் தன்மையைத் நாம் அறிந்திருக்கவில்லை என்று சொல்கிறார். அதை மெய்ப்பிக்கும் பொறுப்பு Aயைச் சார்ந்ததாகும்.

2. கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட A என்பவர் திடீரென்றும் கடுமையாகவும் ஆத்திரமூட்டப்பட்டதால், தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தியைத் தாம் இழந்து விட்டதாகச் சொல்கிறார். அதை மெய்ப்பிக்கும் பொறுப்பு Aயைச் சார்ந்ததாகும்.

பிரிவு 106 கூறுவதாவது:

எந்தப் பொருண்மையேனும் எவரேனுமொருவரின் அறிவுக்கு மட்டுமே சிறப்பாகத் தெரிந்திருக்கும்போது அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும்.

எடுத்துக்காட்டாக, பயணச் சீட்டில்லாமல் இருப்புப்பாதைப் பயணம் செய்ததாக A குற்றஞ்சாட்டப்படுகிறார். தாம் ஒரு பயணச் சீட்டை வைத்திருந்தார் என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும்.

பிரிவு 107 கூறுவதாவது:

ஒரு மனிதர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்ற கேள்வி எழுந்து, முப்பதாண்டு காலத்திற்குள் அவர் உயிருடன்

இருந்தார் என்று காட்டப்படும்போது, அவர் இறந்து விட்டார் என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவ்வாறு உறுதியாக உரைப்பவரையே சார்ந்ததாகும்.

பிரிவு 108 கூறுவதாவது:

ஒரு மனிதர் உயிருடன் இருக்கின்றாரா அல்லது இறந்து விட்டாரா என்ற வினா எழுந்து, அவர் உயிருடன் இருந்தால் அவரைப் பற்றி இயல்பாக அறிந்திருக்கக் கூடியவர்கள் ஏழாண்டு காலத்திற்கு அவரைப் பற்றிக் கேள்விப்படவில்லையென்று மெய்ப்பிக்கும் பொழுது, அவர் உயிருடன் இருக்கிறார் என்று யார் உறுதியாக உரைக்கின்றாரோ அவரே அதனை மெய்ப்பிக்க வேண்டும்.

பிரிவு 109 கூறுவதாவது:

இரு தரப்பினர்களிடையேயான உறவுமுறை பற்றிய வழக்கில், அந்த உறவுமுறையில் அவர்கள் இருக்கவில்லையென்றோ அல்லது அந்த உறவு முறை அவர்களுக்கிடையே அற்றுப் போய் விட்டது என்றோ மெய்ப்பிக்கும் பொறுப்பு, யார் அவ்வாறு உறுதியாகக் கூறுகின்றாரோ, அவரையே சார்ந்ததாகும். (எ.கா.) முதல்வர் - முகவர், நிலத்தின் உரிமையாளர் - குத்தகையர்; கூட்டாளிகள்.

பிரிவு 110 கூறுவதாவது:

ஒருவர் தாம் அனுபவத்தில் வைத்து வரும் ஒரு பொருளுக்கு உரிமையாளரா என்ற வினா எழும்போது, அவர் உரிமையாளர் இல்லை என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு யார் அப்படி அவரை உரிமையாளர் இல்லையென்று கூறுகின்றாரோ அவரையேச் சார்ந்ததாகும்.

பிரிவு 111 கூறுவதாவது:

தரப்பினர்களில் ஒருவர் மற்றவருடைய தீவிர நம்பிக்கைக்குரியவராக இருக்கும்பொழுது, அவர்கள் இருவருக்கிடையே நிகழ்ந்த ஒரு நடவடிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, அவ்வாறு தீவிர நம்பிக்கை கொண்டவரையே சார்ந்ததாகும்.

பிரிவு 112 கூறுவதாவது:

மண வாழ்க்கையில் பிறந்த மகவு முறைப்படியானது என்பதற்கு முடிவான நிரூபணம் (அல்லது) அறுதியான சான்றுறுதி பற்றி பிரிவு 112 கூறுகிறது. (இதை விரிவாக வினா எண் (64) ல் காண்போம்)

பிரிவு 113 கூறுவதாவது:

நாட்டின் ஆள்நில எல்லை கொடையாக (cessation of territory) அளிக்கப்பட்டதை மெய்ப்பித்தல் பற்றி பிரிவு 113 கூறுகிறது. இவ்வாறு

அளிக்கப்பட்டது அரசிதழில் வெளிவந்து விட்டாலே, அது மேற்படி நிகழ்ச்சிக்கு ஒரு அறுதியான சான்றுறுதியாகும்.

பிரிவு 113 - A[1] கூறுவதாவது

ஒரு பெண் திருமணமாகி 7 வருடங்களுக்குள் தற்கொலை செய்து கொண்டாள் எனும் பொழுதும், அவளது கணவன் மற்றும் உறவினரால் அவள் கொடுமைப்படுத்தப்பட்டாள் எனும் பொழுதும், அவளது தற்கொலையை அவளது கணவனும் உறவினரும் தூண்டிவிட்டதாக அனுமானிக்கலாம்.

பிரிவு 114 கூறுவதாவது:

குறிப்பிட்ட பொருண்மைகளின் உண்மையை நீதிமன்றம் துணிபு கொள்ளலாம் என **பிரிவு 114** கூறுகிறது. இச்சந்தர்ப்பங்களில் மெய்ப்பிக்கும் பொறுப்பு எதிர்தரப்பினருக்கு மாறுகிறது. மேலும் நீதிமன்றம் தக்கதென தேர்ந்தெடுக்கும் தரப்பினர் மீது மெய்ப்பிக்கும் பொறுப்பை சுமத்த, அதற்கு தன்விருப்புரிமை உண்டு.

பிரிவு 114-A[2] கூறுவதாவது:

இந்திய தண்டனைச் சட்டம் **பிரிவு 372ன்** கீழ் வன்புணர்வு (rape) வழக்குகளில், பெண்ணின் அனுமதியின்றி வன்புணர்வு செய்யப்பட்டதா என்ற வினா எழுகையில், வன்புணர்விற்கு தான் சம்மதிக்கவில்லை என அப்பெண் சாட்சியமளித்தால், அவள் வன்புணர்ச்சிக்கு சம்மதிக்கவில்லை என்றே நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

முடிவுரை:

யார் வழக்கிடுகிறாரோ அவரே மெய்ப்பித்தல் வேண்டும் என்பது அடிப்படை விதி (பிரிவு 101). இங்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு தரப்பினருக்கு தரப்பினர் மாறுவதில்லை. ஆனால் இதற்கு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. மேற்கண்ட பிரிவுகளில் 102, 103, 106 முதல் 111 மற்றும் 114 ஆகியவற்றில் மெய்ப்பிக்கும் பொறுப்பு தக்கபடி இடம் மாறுகிறது. (Burden of Proof shifts on the other side.)

68. State the rules of Evidence Act regarding the suicide of married women. (மணமான பெண்ணின் தற்கொலை தொடர்பாக சாட்சிய சட்டத்தின் விதிகளைக் குறிப்பிடுக.)

1. இப்பிரிவு வரதட்சணைக் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க 26-12-1983ம் தேதியில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தின் வாயிலாக இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது.
2. பெருகி வரும் வன்புணர்வு வழக்குகளை மையமாகக் கொண்டு, திருத்தச் சட்டத்தால் மேற்படி பிரிவு சாட்சியச் சட்டத்தில் புகுத்தப்பட்டது.

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 113-A மற்றும் 113-B ஆகிய பிரிவுகள் மணமான பெண்ணின் தற்கொலை பற்றி குறிப்பிடுகிறது.

பிரிவு 113-A கூறுவதாவது:

பெண் ஒருத்தியால் செய்துகொள்ளப்பட்ட தற்கொலைக்கு அவளுடைய கணவன் அல்லது அவளுடைய கணவனின் உறவினர்கள் உடந்தையா என்ற கேள்வி எழும்போது, அவள் திருமணமானதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு உள்ளாக அவள் தற்கொலை செய்து கொண்டாளென்றும், அவளுடைய கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் அவளைக் கொடுமைக்கு உள்ளாக்கினார்கள் என்றும் காண்பிக்கப்பட்டால், சம்பவத்தின் (வழக்கின்) மற்ற எல்லா சூழ்நிலை களையும் கருத்தில் கொண்டு அவளுடைய தற்கொலைக்கு அவளுடைய கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் உடந்தையாயிருந்ததாக அனுமானிக்கலாம்.

விளக்கம்:

இந்தியத் தண்டனைச் சட்டம் (1860-ன் 45வது) பிரிவு 498(அ)வில் உள்ளது போன்று 'கொடுமை'க்கு இந்தப் பிரிவின் நோக்கத்திற்காகப் பொருள் கொள்ள வேண்டும்.

பிரிவு 113-B கூறுவதாவது:

ஒருவர் வரதட்சணைக்காக ஒரு பெண்ணின் மரணத்தை விளைவித்தாரா என்ற கேள்வி எழும்போது அவளுடைய மரணத்திற்கு முன்பு அந்தப் பெண்ணிடம் வரதட்சணை எதையும் கேட்டு, அதற்காக அவள் தொந்திரவுக்கு அல்லது கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாள் என்று காண்பிக்கப்பட்டால், அந்த மனிதர் அந்த வரதட்சணைச் சாவை ஏற்படுத்தியிருக்கிறார் என்று அனுமானிக்க வேண்டும்.

விளக்கம்:

இந்தியத் தண்டனைச் சட்டம் (1860-ன் 45வது) பிரிவு 304(ஆ)-வில் உள்ளது போன்ற பொருள் 'வரதட்சணைச் சாவிற்கு' இந்தப் பிரிவின் நோக்கத்திற்கும் கொள்ள வேண்டும்.

நிரபராதி மற்றும் இறந்துபட்டவர் குறித்த அனுமானங்கள்

69. How the following is proved?

a) Presumption as to innocence and death.

b) Presumption as to legitimacy of child.

கீழ்வருவன எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகின்றது?

a) நிரபராதி, இறந்துபட்டவர் என்பதின் அனுமானங்கள்.

b) குழந்தை ஒன்றின் முறைப்படி பிறப்புக் குறித்த அனுமானம்.

(a) (i) நிரபராதி (Innocent) என்பதின் அனுமானங்கள்:

"குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவன் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவன் நிரபராதியே; குற்றவாளியல்ல" என்பது குற்றவியல் வழக்குகளின் அடிப்படை அனுமானமாகும். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவன் செய்த குற்றத்தை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அரசு தரப்பினரைச் சார்ந்ததாகும். அக்குற்றத்தின் ஒவ்வொரு உட்கூறுகளையும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவன் புரிந்துள்ளதாக மெய்ப்பிக்க வேண்டும். இது பின்வரும் முக்கியமான வழக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Woolmington v. Director of Public Prosecution[1]

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவன் ஒருவனைக் கொன்றுள்ளான் என்று மெய்ப்பித்தால் மட்டும் போதாது; அது கொலைக் குற்றமென்பதற்கு அதன் ஒவ்வொரு உட்கூறுகளையும் (ingredients) அரசு தரப்பினர் மெய்ப்பிக்க வேண்டும்; அதாவது அக்கொலைக்கான கருத்து, உள்நோக்கம், குற்றத்திற்கான செயல்பாடு முதலியவை. மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றம் செய்துள்ளான் என அரசு தரப்பினர்தான் மெய்ப்பிக்க வேண்டுமேயொழிய, தான் குற்றம் புரியவில்லையென்று (நிரபராதியென்று) குற்றஞ்சாட்டப்பட்டவன் மெய்ப்பிக்கத் தேவையில்லை. இதற்கு மாறாக, அரசு தரப்பினரின் குற்றச்சாட்டில் தனது குற்றம் குறித்து ஒரு சிறு சந்தேகத்தை கிளப்பினாலே போதும்; அது அரசு தரப்பினரின் வழக்கையே ஆட்டிவிடும். சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டு (benefit of doubt) குற்றஞ்சாட்டப்பட்டவன் விடுதலை செய்யப்படுவான். எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவன், தான் நிரபராதி என மெய்ப்பிக்கத் தேவையில்லை; அவன் மீதான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படும் வரை அவன் நிரபராதியே என்ற அனுமானம் உள்ளது. இவ்வாறு பிரபுக்கள் சபை மேற்படி வழக்கில் கூறியது.

(ii) இறந்துபட்டவர் (Death) என்பதின் அனுமானங்கள்:

[முந்திய வினாவின் விடையில் கூறப்பட்டுள்ள பிரிவு 107 மற்றும் 108-அய்க் காண்க.]

(b) குழந்தை ஒன்றின் முறைப்படி பிறப்புக் குறித்த அனுமானம்:

[அடுத்த வினாவில் காண்க.]

1. (1935) A.C. 462

முறைமணப் பிறப்பு குழந்தை குறித்த அனுமானம்

70. Discuss in the light of decided cases, the nature and scope of the presumption of legitimacy of children born during coverture. (மண வாழ்வில் பிறந்த மகவு, முறைப்படியானது என்ற அனுமானத்தின் தன்மையையும், அளாவுகையையும் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் ஆராய்க.)

(அல்லது)

What is the conclusive proof of legitimacy? (முறைமணப் பிறப்பின் அறுதியான சான்றுறுதி என்ன?)

(அல்லது)

Presumption regarding legitimacy of a child - Write short notes. (குழந்தை ஒன்றின் முறைப்படி பிறப்புக் குறித்த அனுமானம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சியச் சட்டத்தின் 112வது பிரிவு ஒரு குழந்தை முறைமணப் பிறப்பில் பிறந்ததுதானா என்பதை எவ்வாறு அனுமானிப்பது அல்லது அதற்கான அறுதியான சான்றுறுதியை எவ்வாறு அறிவது என்பதற்கு விடை பகர்கிறது. அப்பிரிவில் இரண்டு நிலைகள் கூறப்பட்டுள்ளன. அந்நிலைகளில் பிறக்கும் குழந்தைகள் முறை மணப்பிறப்பில் பிறந்த குழந்தைகளாகவே அனுமானிக்கப்பட வேண்டும் என மேற்படி பிரிவு 112 வலியுறுத்துகிறது. அவ்விரண்டு நிலைகள் வருமாறு.

பிரிவு 112ன் கீழான இரண்டு நிலைகள்:

1. முறையாகத் திருமணம் நடைபெற்ற தம்பதிகளுக்கு, அவர்களுடைய திருமண வாழ்க்கையில், பிறந்த குழந்தை முறைமணப் பிறப்பு குழந்தையாகும்; அல்லது

2. திருமண முறிவு ஏற்பட்டு (dissolution of marriage), மனைவி மறு திருமணம் செய்து கொள்ளாத நிலையில், அத்திருமண முறிவு தேதியிலிருந்து 280 நாட்களுக்குள் ஒரு குழந்தை பிறந்தால், அது அவளுடைய திருமண முறிவிற்கு முன்பிருந்த கணவனின் முறைமணப் (சட்டப்படியான) பிறப்பு குழந்தையாகும்;

ஆனால் இவை ஒரு நிபந்தனைக்குட்பட்டது. அதாவது, மேற்கண்ட இரண்டு நிலைகளிலும் தம்பதிகளில் ஒருவருக்கொருவர், குழந்தை கருத்தரிக்கும் காலத்தில் உறவு கொள்ளும் வாய்ப்பில்லை என்பதாக சாட்சியம் ஏதும் காட்டப்படக் கூடாது. அப்பொழுதுதான் அக்குழந்தை அக்கணவனின் முறைமணப் பிறப்பு குழந்தை என்பதற்கு அறுதியான

சான்றுறுதி ஏற்படும். ஒருவேளை அக்கணவன், குழந்தை கருத்தரிக்க ஆரம்ப காலத்தில், மனைவியுடன் உடலுறவு ஏதும் கொள்ளவில்லை (Non-access) என்பதாக சாட்சியம் ஏதும் காட்டுவாரெனில், அக்குழந்தை அவரது முறைமணப் பிறப்பில் பிறந்த குழந்தை என்ற அனுமானத்திற்கு இடமில்லாது போய்விடும். அதாவது, அது அக்கணவனின் முறைமணப் பிறப்பு குழந்தையாகாது. சுருங்கக்கூறின் கணவனும் மனைவியுமாக சேர்ந்து வாழாத சமயத்தில் பிறந்த குழந்தை என்று சாட்சியங்கள் காட்டப்படும் வரை, அக்குழந்தை முறைமணப் பிறப்பு குழந்தையே என்று அனுமானித்தல் வேண்டும்.

இது பொது நியதியின் (Public Policy) அடிப்படையில் அமைந்த அனுமானமாகும். முரண்பாடான கருத்துக்கள் ஏதும் நிரூபிக்கப்படாத வரை, முறையான திருமணத்தின் விளைவாக பிறந்த குழந்தைகள் அனைத்துமே, முறைமணப் பிறப்பு குழந்தைகளாகவே கருதப்பட வேண்டும் என்பது பொது நியதியாகும். இதைத்தான் பிரிவு 112 மேற்கண்டவாறு சட்ட மொழியில் கூறியுள்ளது. இனி முடிவான வழக்குகளைக் கண்டால், இது மேலும் தெளிவாகும்.

முடிவான முக்கிய வழக்குகள்:

N.N. Pahari v. Ram Govind Pahari[1]

குழந்தை கருவுற்றிருக்கும் காலத்தில் கணவன் உடலுறவு கொள்ள இயலாத உடல் நிலையில் இருந்தான்; ஆகவே பிறந்துள்ள குழந்தை அக்கணவனுடையதல்ல என்று மேற்படி வழக்கில் செய்யப்பட்ட வாதத்தை பிரிவி கவுன்சில் ஏற்றுக் கொள்ளவில்லை. இச்சுவையான வழக்கில், கணவன் இறந்து 280 நாட்களுக்குள் குழந்தை பிறந்தது. அக்குழந்தை கருத்தரிக்க ஆரம்பத்த காலத்தில் கணவன் உடலில் பருக்களும் கொப்புளங்களும் (Carbuncle) ஏற்பட்டு, அதனால் 14 நாட்களில் இறந்து விட்டான், என்பதாக (அதாவது அக்குழந்தைக்கு வேறு ஒருவன் காரணம் என்பதைக் காட்ட) சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் அச்சாட்சியங்களை பிரிவி கவுன்சில் நிராகரித்து விட்டது. ஏனெனில், குழந்தை கருத்தரித்ததிலிருந்து 14 நாட்கள் வரை அக்கணவன் அம்மனைவி யுடன் ஒன்றாக வாழ்ந்து வந்தான். மேலும் உடலுறவு கொள்வதை முற்றிலும் தடுக்குமளவிற்கு அக்கொப்புளங்கள் இருந்தன என்பதைக் காட்ட சாட்சியங்கள் ஏதும் சமர்பிக்கப்படவில்லை. எனவே, அக்கணவன் அம்மனைவியுடன் உறவு கொள்ளவில்லை எனும் வாதம் ஏற்றுக் கொள்ளப்படாதென்றும், அக்குழந்தை அக்கணவனின் முறைமணப் பிறப்புக் குழந்தையே என்றும் பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

Sethu v. Palani[2]

இவ்வழக்கில் ஒரு குழந்தை, திருமணமாகி ஓரிரு நாட்களிலோ

1. (1901) 29 IA 17
2. I.L.R. (1925) 49 Mad. 523

அல்லது ஓரிரு மணிநேரங்களிலோ பிறந்தாலும் முறைமணப் பிறப்பினதாகவே அனுமானிக்கப்படும் எனக் கூறப்பட்டது. வித்தியாசமான இவ்வழக்கின் பொருண்மைகளின் படி, ஒரு பெண் **அக்டோபர், 1903ல்** S என்பவரை மணந்தார். **ஜீன், 1904ல்** அந்த S என்பவரை விவகாரத்து செய்துவிட்டு **ஜூலை 1904ல்** T என்பவரை இரண்டாவது கணவராக அப்பெண் மணந்தார். **அதே வருடம் (1904) செப்டம்பர்** மாதத்தில் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தாள். அதாவது குழந்தை கருத்தரித்ததோ S என்பவருடன் (முதல் கணவருடன்) வாழும் போது; ஆனால் குழந்தை பிறந்ததோ இரண்டாவது கணவருடன் வாழும் பொழுது. அக்குழந்தை இரண்டாவது கணவரின் முறைமணப் பிறப்பு குழந்தையென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஏனெனில், அக்குழந்தை கருவுற்றிருந்தபொழுது (அதாவது முதல் கணவனுடன் அப்பெண் வாழும் பொழுது) தான், அப்பெண்ணுடன் உறவு கொள்ளவில்லை என்பதை இரண்டாவது கணவன் மறுத்து சாட்சியங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் இதற்கு மாறாக, முதல் கணவனுடன் அப்பெண் வாழும்பொழுதே, இரண்டாவது கணவன் அவளுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தான் என்பது நிரூபிக்கப்பட்டது. எனவே ஒரு பெண் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு விட்டாலே, அவளை மற்றொருவன் தீண்டியிருக்க வாய்ப்பில்லை என்று அனுமானிக்கவியலாது என்றும், மேற்படி வழக்கைப் பொறுத்த வரை, திருமணம் முடிந்து சில நாட்களிலேயே குழந்தை பிறந்திருந்தாலும், அது இரண்டாவது கணவனின் முறைமணப் பிறப்பு குழந்தையேயாகும் என்றும், நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதை நீதிபதி தேவதாஸ் தனது தீர்ப்பில் குறிப்பிடுகையில், ஒருவர் **ஒரு பெண் கருவுற்றிருக்கிறாள் என்பதை அறியாமல்** அவளை திருமணம் செய்து கொண்டிருந்து, குழந்தையும் பிறந்து விட்டால், குழந்தை கருவுற்றிருந்த காலத்தில் தனக்கும் அப்பெண்ணுக்கும் உடலுறவு ஏதும் ஏற்படவில்லை என்பதை தக்க ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டி, அக்குழந்தையை தனதில்லை என நிரூபிக்கலாம். ஆனால் **ஒரு பெண் கருவுற்றுள்ள விஷயத்தை அறிந்தே** அவளை திருமணம் செய்து கொண்டிருந்து, உடனே குழந்தையும் பிறந்து விட்டால், அது அவனது முறைமணப் பிறப்பு குழந்தையாகவே கருதப்படும். ஆனால் குழந்தை உண்டாகியிருக்கும் காலத்தில் அப்பெண்ணுடன் உடலுறவு கொள்ள வில்லை என்பதை அவன் மெய்ப்பித்தால், அது அவனது குழந்தையென அனுமானிக்கவியலாது, என்று கூறுகிறார்.

Chilukuri Venkateshwarlu v. Venkatanarayan[1]

ஒரு குழந்தை தனதில்லை என்று கூறுபவன் அக்குழந்தை கருவுற்றிருந்த காலத்தில் அதன் தாயுடன் உறவு கொள்ளவில்லை என்பதை தெளிவாக நிரூபிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில்

1. (1954) SCR 424

கூறியது. வழக்கின்படி, தனது இரண்டாவது மனைவியை தனியாக சிறு வீட்டில் குடி வைத்திருந்ததாகவும், அதன் பின்னர் அவளை எட்டிக்கூடப் பார்க்கவில்லையென்றும், அதனால் அவ்விரண்டாவது மனைவிக்கு பிறந்துள்ள குழந்தைக்கு தான் காரணமல்லவென்றும், கணவன் வாதிட்டான். ஆனால் குழந்தை கருவுற்றிருக்கும் காலத்தில் அவளைத் தேடி அக்கணவன் பல முறை வந்து போனது இரண்டாவது மனைவியின் சார்பில் மெய்ப்பிக்கப்பட்டது. எனவே குழந்தை கருவுற்றிருக்கும் காலத்தில் உறவு கொள்ளவில்லை என்ற கணவனது வாதம் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அக்குழந்தை அவனது முறைமணப் பிறப்புக் குழந்தையாகவே அனுமானிக்கப்பட்டது.

Ram Kishan v. Savitri Devi[1]

கணவன், மனைவியை விட்டுப் பிரிந்து மூன்று வருடங்கள் கழித்து விவாகரத்து ஏற்படுகிறது. மனைவி தனியாக கிராமத்தில் அவளது வீட்டில் வசிக்கிறாள். இந்நிலையில் அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இது அக்கணவனின் முறைமணப் பிறப்பு குழந்தையாகாது என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Chandramathi v. F. Balan[2]

இவ்வழக்கில் கணவனுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (Vasectomy operation) செய்த பிறகும், மனைவி கருத்தரித்தாள். ஆனால் இக்கருத்தடை ஒன்றையே காரணமாகக் கொண்டு பிறக்கும் குழந்தைக்கு அக்கணவன் தகப்பனல்ல என்று கூற முடியாது என கேரளா உயர் நீதிமன்றம் கூறியது. ஏனெனில் அக்கருத்தடை அறுவை சிகிச்சை நேர்த்தியாக செய்யப்பட்டது என்பதற்கோ அல்லது குழந்தை கருவுற்றிருந்த காலத்தில் கணவனும் மனைவியும் உறவு கொள்ளவில்லையென்பதற்கோ சாட்சியங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே அக்குழந்தை கள்ளத் தொடர்பால் பிறந்தது, என்ற அக்கணவனின் வாதத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்து, அக்குழந்தை அவனதுதான் என தீர்ப்பு வழங்கியது.

Chirutha Kutty v. Subramaniam[3]

இவ்வழக்கில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட கணவனின் விந்துக்கள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, அதில் உயிரணுக்கள் இல்லை என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இந்த அறிக்கை மட்டுமே குழந்தை முறைமணப் பிறப்பில் பிறந்தது என்று அனுமானத்தை சிதைத்துவிடாது என கேரளா உயர் நீதிமன்றம் கூறியது. ஏனெனில் விந்து பரிசோதனை சரியான முறையில் செய்யப்படவில்லை, என்று விசாரணையில் தெளிவானது.

1. A.I.R. 1982 Del. 458
2. A.I.R. 1982 Kerala 68
3. A.I.R. 1987 Kerala 5

முடிவுரை:

மேற்கண்ட பிரிவு 112ஐயும், அதன் கீழான வழக்குகளையும் பார்க்கையில், முறைமணப் பிறப்பு குழந்தை என்று கூறுவதற்கு உள்ள ஒரே தெளிவான வழி யாதெனில், மனைவி கருவுற்ற காலத்தில், கணவன் அவளுடன் உடலுறவு கொண்டிருக்கக் கூடாது. இதைக் கணவன் நிரூபிக்கும் பொழுது, அக் குழந்தை அவனுக்கு முறைமணப் பிறப்பில் பிறக்காத குழந்தையென்று முடிவு செய்யப்படும். இதை பெரும்பாலும் பின்வரும் இரு வழிகளில் கணவன் நிரூபிக்கலாம். அவை, (1) கணவன் தொடர்ந்து தண்டனைத் தீர்ப்புப் பெற்று சிறையில் இருந்தாலோ அல்லது தொடர்ந்து வெளிநாட்டில் இருந்தாலோ அல்லது தொடர்ந்து இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தாலோ; (2) கணவன் மனைவியுடன் வாழும் பொழுது அவன் ஆண்மையற்றவனாக (Impotent) இருந்தாலோ.

33 முரண்தடை [Estoppel]

71. Discuss the principles of Estoppel as laid down in the Evidence Act 1872. (மறுப்புத்தடை பற்றிய கோட்பாடுகளை இந்தியச் சாட்சியச் சட்டம் 1872-ல் கூறியுள்ளபடி ஆய்வு செய்க.)

(அல்லது)

Discuss the principle of 'Estoppel'. Distinguish between Estoppel by record and Estoppel by deed. ('முரண்தடை' கோட்பாட்டை விவாதிக்கவும். பதிவிதம் மூலம் முரண்தடை, ஆவணம் மூலம் முரண்தடை ஆகியவற்றை ஒன்றுக்கொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Explain the Doctrine of Estoppel. Can there be Estoppel against a minor? (முரண்தடைக் கோட்பாட்டை விவரிக்கவும். உரிமை வயது வராதோர் ஒருவருக்கு எதிராக முரண்தடை சாத்தியமா?)

(அல்லது)

Discuss briefly the Doctrine of Estoppel. (முரண்தடைக் கோட்பாடு குறித்து சுருக்கமாக விவாதிக்க.)

(அல்லது)

Estoppel - Write short notes. (முரண்தடை - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the Doctrine of Estoppel and distinguish it from Res Judicata. (முரண்தடைக் கோட்பாட்டை விளக்குக. அதனை முன்தீர்ப்புத் தடையினின்று வேறுபடுத்துக.)

(அல்லது)

Distinguish between Estoppel and Waiver.

வேறுபடுத்திக் காட்டுக.
முரண்தடை மற்றும் உரிமை விடுப்பு.

(அல்லது)

Distinguish Estoppel and Presumption

வேறுபடுத்துக.
முரண்தடை மற்றும் அனுமானம்.

முன்னுரை:

ஒருவர் தனது பேச்சு மற்றும் செயல்களுக்குக் கட்டுப்பட்டவர். ஒருமுறை ஒன்றைப் பேசிவிட்டு, பின்னர், தான் அவ்வாறு பேசவில்லை என்று முரண்பாடாக கூறுவதை சட்டம் அனுமதிப்பதில்லை. இது செயல்களுக்கும் பொருந்தும். இதைத்தான் இந்திய சாட்சிய சட்டமானது தனது **8வது அத்தியாயத்தின் (Chapter VIII) கீழ் சற்று விரிவாக 'முரண்தடை'** எனும் தலைப்பில் மூன்று பிரிவுகளின் வழியாகக் கூறுகிறது. அதில் **பிரிவு 115,** முரண்தடைக்கான வரையறையும், **116 & 117 ஆகிய பிரிவுகள்** சில குறித்த வகை சூழ்நிலைகளில் முரண்தடை பற்றியும் குறிப்பிடுகின்றன.

'முரண்தடை' எனும் சொல்லின் தோற்றம் (Origin):

'Estoppel' எனும் ஆங்கில சொல், ***'Estoup'*** எனும் ஃபிரென்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் **'வாயை மூடு' (Shut the mouth)** என்பதாகும். இதனை பின்வரும் பத்திகளைக் காண்கையில் மேலும் தெளிவாகும்.

முரண்தடை - பொது விளக்கம்:

சமுதாயத்தில் ஒருவர் மீது மற்றொருவருக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இதுவே சமுதாய வாழ்வு ஏற்றமுற அமைவதற்கு அடிப்படையாகும். ஒருவர் கூறுவதை நம்பி மற்றொருவர் அதன்படி நடக்கின்றார். அவ்வாறு நடந்தவருக்கு ஊறு விளைந்தால், அந்த ஊறு விளைவித்தவரை 'ஏமாற்றியவர்' என்று சட்டம் கொள்கிறது.

உதாரணமாக, ஒருவர் ஒரு வீடு தமக்குச் சொந்தமானது என்று பொய்யாகக் கூறி, அதை மற்றொருவருக்கு விற்கின்றார். அவரது கூற்றை நம்பி மற்றொருவர் அவ்வீட்டை விலை கொடுத்து வாங்குகிறார். அதற்குப் பின் அந்த வீட்டின் உண்மையான சொந்தக்காரர் இந்த உரிமை மாற்றம் செல்லாது எனக் கோரி ஒரு வழக்கினை இடுகிறார். இந்த வழக்கில் இந்த வீடு தம்முடையதெனப் பொய்யாகக் கூறி விற்றவர், வீட்டில் தமக்கு ஏதும் பாத்தியமில்லை என்று நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதைச் சட்டம் தடை செய்கிறது. இதுவே 'முரண்தடை' (Estoppel) எனப்படுகிறது.

மற்றொரு உதாரணத்தில், ஒருவர் இரயிலில் தமது வியாபார சரக்குகளை அனுப்ப வருகிறார். அச்சமயத்தில் அவற்றின் மதிப்பு ரூ.1,000/- என்று படிவத்தில் குறிப்பிடுகிறார். ஆனால் எதிர்பாரதவிதமாக சரக்குகள், செல்லும் வழியில் தொலைந்துவிடுகிறது எனக் கொள்வோம். இப்பொழுது அவர் அதிக ஈட்டுத்தொகை பெறும் பொருட்டு அச்சரக்குகளின் மதிப்பு ரூ. 10,000/- எனக் கூற முடியாது. இங்கு முரண்தடை எழுகிறது.

சுருங்கக்கூறின், ஒருவர், ஒரு காரியத்தை உண்மையானது என்று மற்றொருவரை நம்ப வைத்து, அதன்படி நடக்கச் செய்து, அதற்கு பின், அது பொய்யானது என்று நீதிமன்றத்தில் அவர் சாட்சியமளிப்பது பொது நியதிக்கு மாறானதாகும். எனவே 'முரண்தடைக் கோட்பாடு' சாட்சியச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

முரண்தடைக்கு காரணமான முதுமொழி (Maxim):

'Allegans Contraria non est audiendus' என்ற சட்ட முதுமொழியின் அடிப்படையில் அமைந்ததே முரண்தடைக் கோட்பாடாகும். அதன் பொருள் யாதெனில், **"முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவரின் கூற்றை கேளாதே"** ("A Person alleging contradictory facts should not be heard").

முரண்தடை - எச்சட்டத்திற்கு பொருந்தும்?

முரண்தடை உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும். குற்றவியல் நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது.

முரண்தடை சாட்சிய சட்டம் பிரிவு 115 கூறும் வரையறை:

ஒருவர் மற்றொருவரைத் தம் கூற்றினாலோ, செயலாலோ, செய்யாமையினாலோ, ஒன்று உண்மை என்று வேண்டுமென்றே நம்பும்படிச் செய்து அல்லது நம்புவதற்கு இடங்கொடுத்து, அந்நம்பிக்கையின் பேரில் மற்றவரைச் செயல்படச் செய்கின்றார் என்று கொள்வோம். அவ்வாறு நம்பி நடந்தவர் அல்லது அவரது பிரதிநிதி நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதி இவர்களுக்கிடையே ஏற்படுகின்ற உரிமையியல் வழக்கில் அல்லது நடவடிக்கையில் - நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதி நம்ப வைத்த அவ்விஷயத்தை உண்மை அல்லவென மறுக்கலாகாது. இதுவே முரண்தடைக் கோட்பாடு எனப்படுகிறது.

ஒரு முறை உண்மை என்று ஏற்றுக் கொள்ளுமாறு பேசியதை பின்நாளில் மறுத்துப் பேச சட்டம் அனுமதிப்பதில்லை. இதுவே முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

பிரிவு 115ன் உட்கூறுகள் (Ingredients):

1. நபர் ஒருவர் தன் கூற்று, செயல் அல்லது செய்யாமையால் (declaration, act or omission) ஒரு விஷயத்தை உண்மையான அறிவித்திருக்க (representation) வேண்டும்.
2. அந்த அறிவித்தல் வாயிலாக அவர் பிறிதொருவரை அவ்விஷயம் உண்மையானதென வேண்டுமென்றே நம்ப வைத்திருக்க வேண்டும். (Intentionally caused to belive)
3. அந்த பிறிதொரு நபர், மேற்படி நம்பிக்கையின் அடிப்படையில்

செயல்பட்டிருக்க வேண்டும் (act upon such belief).

4. இந்நிலையில் நம்ப வைத்தவருக்கும், நம்பியவருக்கும் இடையில் மேற்படி விஷயம் குறித்து உரிமையியல் வழக்கு ஏதேனும் எழுந்தால், அதில் நம்ப வைத்தவர் தாம் அவ்விஷயத்தை உண்மையாதென கூறவில்லை என மறுத்தல் அனுமதிக்கப்படாது.

எடுத்துக்காட்டு (Illustration):

A என்பவர் குறிப்பிட்ட நிலம் தமக்குச் சொந்தமானது என்று பொய்யாக B என்பவரை வேண்டுமென்றே நம்புமாறு செய்து, அதன்மூலம் அதை வாங்குமாறும், அதற்காகத் தொகை செலுத்துமாறும் Bயைத் தூண்டுகிறார்.

ஆனால் அந்த நிலத்திற்கு மேற்படி A பின்னர் உரிமையாளர் ஆகிறார். அந்நிலம் விற்பனை செய்யப்பட்ட காலத்தில், அதில் தமக்கு பாத்தியதை எதுவும் இருந்ததில்லை என்னும் காரணத்தின் பேரில், அந்த விற்பனையை இரத்து செய்ய A முற்படுகிறார். இங்கு, நிலத்தை விற்ற காலத்தில் அதில் தனக்கு எவ்வித பாத்தியதையுமில்லை என A மெய்ப்பிக்க முயல்வதை சாட்சிய சட்டம் அனுமதிப்பதில்லை. இதுவே முரண்தடை எனப்படுகிறது. வேறுவிதத்தில் கூறுவதென்றால், ஒருவர், ஒரு குறிப்பிட்ட நிலம் தனக்குச் சொந்தமானது என பொய்யாக கூறி அதை மற்றொருவருக்கு விற்கிறார். உண்மையில் அச்சமயத்தில் அவர் அந்நிலத்திற்கு உரிமையாளரே கிடையாது. ஆனால் பின்னர் வாரிசுரிமை அடிப்படையில் அந்நிலங்களுக்கு மேற்படி நபர் உண்மையிலேயே உரிமையாளராகி விடுகிறார். தற்பொழுது தாம் முன்பு செய்த விற்பனையை எப்படியாவது ரத்து செய்து, அந்நிலத்தை தனக்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென துடிக்கிறார். எனவே தாம் அந்நிலத்தை விற்பனை செய்த காலத்தில் அதில் தனக்கு எவ்வித பாத்தியதையும் கிடையாது; எனவே அவ்விற்பனை செல்லாது என்று முன்கூறியதை மறுத்துக் கூறுகிறார். இதை முரண்தடைக் கோட்பாட்டின்படி நீதிமன்றம் அனுமதிக்காது.

அடிப்படை வழக்கு:

Pickard v. Sears[1]

மேற்படி வழக்குதான் **பிரிவு 115க்கு அடித்தளமாக விளங்கும் முக்கியமான வழக்காகும்.** இவ்வழக்கில், B என்பவர் Cயிடம் கடன் வாங்கியிருந்தார். அக்கடனை வசூலிக்கும் பொருட்டு Bமீது வழக்கு தொடுத்து, அவரது சொத்துக்களை ஜப்தி (attach) செய்ய C வருகிறார். அப்பொழுது Aயின் சில அசையும் சொத்துக்கள் (இயந்திரம்) Bயின் வசமிருந்தன. அவற்றையும் C ஜப்தி செய்து கொண்டு போய் விட்டார். ஜப்தியின் பொழுது அருகிலிருந்த மேற்படி A என்பவரோ அதற்கு எவ்வித

1. (1837) 6 Ad. & E.L. 469

ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக, அச்சொத்துக்கள் Bக்கு சொந்தமானதே என்று வேண்டுமென்றே C நம்பும்படி நடந்து கொண்டார். ஜப்தி செய்த சொத்துக்களை C ஏலத்தில் விற்க முயன்றார். அப்பொழுது அதிலுள்ள சில அசையும் சொத்துக்களுக்கு (இயந்திரம்) தாம்தான் உரிமையாளர்; B அல்ல என்றும், எனவே அவை தமக்குத் திருப்பித் தரப்பட வேண்டுமென்றும் மேற்படி A நீதிமன்றத்தில் வழக்கிட்டார். ஆனால் முரண்தடைக் கோட்பாட்டின்படி இவ்வாறு A மாற்றிக் கூறுவதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் தாமே ஒன்றை வேண்டுமென்றே (wilfully causes another to believe) மற்றவர் நம்பும்படிச் செய்துவிட்டு, பின்னர் அதை மாற்றிக் கூற இயலாது, என நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

தொடர்புடைய சில வழக்குகள்:

Sarat Chunder Dey v. Gopal Chunder Laha[1] - இவ்வழக்கில் ஒரு விஷயத்தை அறிவித்தலானது (representation) எவ்வழியிலும் இருக்கலாம் என்று கூறப்பட்டது. ஒரு விஷயத்தை மற்றொருவர் உண்மையென நம்பும் வண்ணம் செய்யப்படும் எந்த ஒரு செயலும் அறிவித்தலில் அடங்கும் என்றும், இதைத்தான் பிரிவு 115 ஆனது ஒருவர் தன் கூற்று, செயல் அல்லது செய்யாமை (declaration, act or ommission) மூலம் அறிவித்தல் செய்யப்படலாம் என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது. இவ்வழக்கில் ஒருவர் தனது நடத்தை மூலம் ஒரு விஷயத்தை உண்மையென மற்றொருவர் நம்பும்படி அறிவித்தார். (Representation by conduct). அதை பின்னர் அவர் மறுத்துக் கூறிய பொழுது, பிரிவி கவுன்சில் முரண்தடைக் கோட்பாட்டின் படி அனுமதிக்கவில்லை.

Abdul Wahid v. Union of Tndia[2] - இவ்வழக்கில் நிலத்தின் சுவாதீனம் கோரி அரசாங்கத்திற்கெதிராக உரிமையியல் வழக்கொன்று தொடரப் பட்டது. (Suit against the Government for recovery of possession). அதில் சாதாரணமான நீதிமன்றக் கட்டணம் (Court-fee) என்னவோ, அது கட்டப்பட்டது. ஆனால் அரசாங்கமோ, நிலத்தின் மதிப்பு ரூ.20 இலட்சமாகும்; எனவே அதற்கொப்ப நீதிமன்றக் கட்டணம் கட்டப்பட வேண்டுமென்று என வாதம் புரிந்தது. வழக்கு தொடுத்த வாதிகளும், ரூ.20 இலட்சத்திற்கான நீதிமன்ற கட்டணத்தை கட்டிவிட்டனர். ஆனால், வழக்கின் பிறிதொரு கட்டத்தில், அந்நிலத்தின் மதிப்பு ரூ.20 இலட்சமல்ல என அரசாங்கம் வாதம் புரிந்தது. இதனை, முரண்தடைக் கோட்பாட்டின்படி, டெல்லி உயர் நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. **"தவளை தன் வாயால் கெட்டது"** என்பதைப் போல அரசாங்கமே நிலத்தின் மதிப்பு ரூ.20 இலட்சம் எனக் கூறிவிட்டு, பின்னர் அவ்வளவு பெறாது என்று மறுத்துக் கூறியதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

1. (1891 -92) 19 I.A. 203
2. AIR 1982 Delhi 290

சில குறித்தவகை முரண்தடைகள்:

இந்திய சாட்சியச் சட்டம் **பிரிவு 116** மற்றும் **117**ன் கீழ் சில குறித்த வகை முரண்தடைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு.

பிரிவு 116ன்படி வாடகைக்கு குடியிருப்பவர்களும் (Tenant) சொத்தின் அனுபவத்தில் உள்ளவர்களிடமிருந்து உரிமம் பெற்றவர்களும் (Licensee of person in possession) தாங்கள் வசிக்கும் சொத்தின் உரிமையாளருக்கு வாடகைக் காலம் ஆரம்பிக்கும் காலத்தில் அச்சொத்தில் எவ்வித பாத்தியதையுமில்லை என்று மறுத்துக் கூறியதை சட்டம் அனுமதிப்பதில்லை. அதாவது ஒருவரை தான் வாடகைக்கு குடியிருக்கும் நிலத்தின் உரிமையாளராக ஏற்றுக் கொண்ட பிறகு, அவர் அந்நிலத்தின் உரிமையாளரல்ல என்று மறுத்துக் கூறுவதை சட்டம் தடுக்கிறது.

பிரிவு 117ன்படி மாற்றுச் சீட்டொன்றை ஏற்றுக் கொண்ட (acceptor of a bill of exchange) எவரும், அத்தகைய சீட்டை எழுதிக் கொடுக்க அல்லது அதற்கு மேற்குறிப்பு எழுத, அதை எழுதிக் கொடுத்தவருக்கு அதிகாரம் இருந்ததில்லை என்பதை மறுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். இது ஒப்படை பெறுநர் (Bailee) அல்லது உரிமம் பெறுநருக்கும் (Licensee) பொருந்தும்.

முரண்தடையின் பல்வேறு வகைகள் (Different kinds of Estoppel):

ஆங்கிலச் சட்டத்தின் படி முரண்தடை மூன்று வகைப்படும். அவை இந்தியச் சாட்சிய சட்டத்திலும் பொருத்தமான இடங்களில் எடுத்தாளப் பட்டுள்ளன. அவ்வகைகளைக் குறித்து பின்வருமாறு விரிவாகக் காண்போம்.

1. பதிவேடு (பதிவிதழ்) அல்லது தீர்ப்புரையால் எழும் முரண்தடை (Estoppel by Record or Judgment):

ஒரு வழக்கானது தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றத்தால் இறுதியாக விசாரிக்கப்பட்டு தீர்ப்புரை கொடுக்கப்பட்டுவிட்டால், அவ்வழக்குத் தரப்பினர்கள் மீண்டும் அவ்வழக்கைக் குறித்து விவாதிப்பது அனுமதிக்கப்படுவதில்லை. அதாவது அத்தீர்ப்புரை (பதிவேடு) சம்பந்தப்பட்ட தரப்பினர்களை மீண்டும் அவ்வழக்கை புதிதாக கிளருவதிலிருந்து தடுக்கிறது. இது **'முன் தீர்ப்புத் தடை' (Res judicata)** என சிறப்பாக அழைக்கப்படுகிறது. இம் முரண்தடையானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு11லும் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 40லும் எடுத்தாளப்பட்டுள்ளது.

2. பத்திரத்தால் எழும் முரண்தடை (Estoppel by Deed):

ஆங்கில நாட்டுச் சட்டப்படி, ஒருவர் ஒரு பத்திரத்தில்

கையெழுத்திட்டு, அதில் தன் முத்திரையைப் பதித்து, அதை சம்பந்தப்பட்ட மறுதரப்பினரிடம் கொடுத்து விட்டால், அப்பத்திரத்தில் உள்ள பொருண்மைகளை அவரால் பின்பு மறுக்க முடியாது. **இந்திய சாட்சிய சட்டம்** இதனை **ஒப்புதலுரை (admission)** என்று கூறுகிறது. **பிரிவு 31ன்படி,** ஒப்புதலுரைகள் முரண்தடையாக செயல்படும்; ஆனால் அவை அறுதியான சான்றுறுதியாகாது. மேலும் **பிரிவு 115ம்** இப்படிப்பட்ட முரண் தடைகளுக்குப் பொருந்தும்.

3. செயலினால் எழும் முரண்தடை (Estoppel by Conduct or Estoppel in *pais*):

இவ்வகையான முரண்தடையில் ஒரு நபர் தனது சொல்லாலோ அல்லது செயலாலோ ஒரு விஷயத்தை உண்மையென நம்புமாறு மற்றொருவரைத் தூண்டி, அவரை அந்நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுமாறு வைத்திருக்க வேண்டும். அதன் பின்னர் தான் அவ்வாறு சொல்லவில்லையென்றோ அல்லது செயல்படவில்லையென்றோ, அவர் மறுத்துக் கூறுவதை சட்டம் அனுமதிப்பதில்லை. இவ்வகையான முரண்தடை (i) ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை வாயிலாகவோ, அல்லது (ii) சொல் மற்றும் செயலால் ஒருவரைத் தவறாகத் தூண்டுவதாலோ எழலாம். இப்படிப்பட்ட செயல்வழி முரண்தடையைத்தான், இந்திய சாட்சிய சட்டத்தின் 115 முதல் 117 வரையுள்ள பிரிவுகள் குறிப்பிடுகின்றன. அவற்றில், பிரிவுகள் 116 மற்றும் 117 ஆகியவை ஒப்பந்தம் வாயிலான முரண்தடை பற்றிக் கூறுகின்றன.

செயலினால் எழும் முரண்தடையை மேலும் சில வகைகளாகப் பிரிக்கலாம். அவை சுருக்கமாக வருமாறு.

a) சான்றொப்பம் வழியான முரண்தடை (By Attestation): Aயும் Bயும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் C சான்றொப்பம் இடுகிறார். இதற்குப் பின்னர், அவர் அந்த ஒப்பந்தம் A, Bயால் செய்து கொள்ளப்பட வில்லையென்றோ அல்லது அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் தனக்கு தெரியாதென்றோ மறுத்துக் கூற முடியாது. இதுவே சான்றொப்பம் வழியான முரண்தடை எனப்படுகிறது.

b) மௌனத்தால் எழும் முரண்தடை (Estoppel by Silence): எங்கே ஒரு நபர் பேச வேண்டிய கட்டாயம் உள்ளதோ, அங்கே அவர் பேசாது மௌனமாக இருப்பின், தான் பேச வேண்டிய விஷயம் குறித்து தனது சம்மதத்தை தெரிவித்துவிட்டார் என்றே பொருள். **மௌனம் - சம்மதம்.** எனவே அவ்விஷயத்தை மறுத்து சாட்சியமளிக்க சட்டம் தடுக்கிறது.

c) தேர்வு நிலை முரண்தடை (Estoppel by Election): இவ்வகையும் தரப்பினர்களின் செயலால் எழும் முரண்தடையாகும். பல்வேறு உரிமைகளில் அல்லது நிவாரணங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விட்டு,

பின்னர் தாம் அதனைத் தேர்ந்தெடுக்கவில்லை என மறுத்துக் கூற முடியாது. எதைத் தேர்ந்தெடுத்தாரோ, அதற்கு அவர் கட்டுப்பட்டவராவார்.

d) சம்மதத்தால் எழும் முரண்தடை (Estoppel by Acquiesence or Assent): ஒரு விஷயம் குறித்து தனது சம்மதத்தை தெரிவித்த பிறகு, அதை மறுத்து கூற சட்டம் அனுமதிப்பதில்லை. உதாரணமாக, Bக்கு சேர்ந்த நிலத்தில் A குடியிருக்கிறார். அதை அந்த A-வே விற்க முனைகிறார். இது Bக்கு மிக நன்றாகவேத் தெரியும். ஆனால் அதற்கு எவ்வித ஆட்சேபணையும் B செய்யவில்லை. இந்நிலையில் A அந்நிலத்தை Cக்கு விற்றுவிடுகிறார். இவ்விற்பனையை B மறுக்க முடியாது. ஏனெனில் அனைத்தும் அறிந்து கொண்டு, எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் B இருந்து விட்டதால், அவ்விற்பனைக்கு B சம்மதித்துவிட்டதாகவே சட்டம் கருதும்.

e) கவனக்குறைவால் எழும் முரண்தடை (Estoppel by Negligence): கவனமுடன் ஒரு செயலைச் செய்ய வேண்டிய கடமை ஒரு நபருக்கு இருந்து, அதில் அவர் கவனக் குறைவாக செயல்படும் பொழுது, மேற்கண்ட முரண்தடை எழுகிறது.

முரண்தடை, முன் தீர்ப்புத் தடை - வேறுபாடுகள்:

முரண்தடை (Estoppel)	முன் தீர்ப்புத் தடை (Res judicata)
1. இது சாட்சிய சட்டத்தின் ஒரு பிரிவாகும்.	இது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அமைவதாகும்.
2. இங்கு ஒருவர் ஒரு காரியத்தை உண்மையானது என்று மற்றொரு வரை நம்ப வைத்து, அதன்படி நடக்கச் செய்து, அதற்குப்பின், அது பொய்யானது என்று அவர் சாட்சியமளிப்பது தடை செய்யப் படுகிறது.	இங்கு தக்க அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இறுதியாக விசாரிக்கப் பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட பின், அதே வழக்கு குறித்து மீண்டும் அதே தரப்பினர்கள் வழக்கு தொடர்வது தடை செய்யப் படுகிறது.
3. இதன் நோக்கம், ஒருவரை அவரது சொல்லுக்கும் செயலுக்கும் கட்டுப் படுத்துவதாகும். இடத் திற்குத் தகுந்தாற்போல் நாக்கை புரட்டிப் போட்டு பேசுவதையோ அல்லது செயல்படுவதையோ இது தடுக்கிறது.	இதன் நோக்கம், வழக்குகளுக்கு என்றுமே ஒரு முடிவு இருக்க வேண்டுமென்பதேயாகும். தீர்ப்பு கொடுக்கப்பட்ட வழக்கையே கிளறிக் கொண்டிருந்தால், தேங்கிக் கிடக்கும் வழக்கை எப்பொழுது தீர்ப்பது?

4. முரண்தடை,தரப்பினர்களின் வாயை மூடுகிறது. (shuts the mouth of a Party).	முன் தீர்ப்புத்தடை, நீதிமன்றங்களின் அதிகார வரம்பை கட்டுப்படுத்துகிறது. (ousts the jurisdiction of the Court).
5. இதில் பல வகைகள் உள்ளன.	இங்கு அப்படிப்பட்ட வகைகள் இல்லை.
6. இது குறித்து சாட்சிய சட்டத்தின் 115 முதல் 117 வரையிலான பிரிவுகள் குறிப்பிடுகின்றன.	இது குறித்து உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 11வது பிரிவு கூறுகிறது.
7. சுருங்கக்கூறின் ஒரு விஷயத்தை ஒரு சமயத்தில் ஒரு விதமாகவும் பிறிதொரு சமயத்தில் பிறிதொரு விதமாகவும் மாற்றிக் கூறுவது இங்கு தடுக்கப்படுகிறது.	சுருங்கக்கூறின், ஒரே விஷயத்தை அடுத்தடுத்த வழக்குகளில் மீண்டும் மீண்டும் கூறுவது இங்கு தடுக்கப்படுகிறது.

முரண்தடை, உரிமை விடுப்பு - வேறுபாடுகள்:

முரண்தடை (Estoppel)	உரிமை விடுப்பு (Waiver)
1. இங்கு, ஒருவர் ஒரு காரியத்தை உண்மையானது என்று மற்றொரு வரை நம்ப வைத்து, அதன்படி நடக்கச் செய்து அதற்குப்பின், அது பொய்யானது என்று அவர் சாட்சியமளிப்பது தடை செய்யப்படுகிறது.	இங்கு ஒரு உரிமை விட்டுக் கொடுக்கப்படுகிறது. அதாவது ஒரு சட்ட உரிமை தெரிந்தே கைவிடப்படுகிறது. அல்லது தளர்த்தப்படுகிறது.
2. முரண்தடை ஒரு வழக்கு மூலத்தை (Cause of action) உருவாக்காது.	உரிமை விடுப்பு, ஒரு வழக்கு மூலத்தை உண்டாக்கலாம்.
3. யார் கூறினாரோ அல்லது செய்தாரோ அவரைப் பொறுத்துதான் முரண்தடை.	இங்கு ஒரு முதல்வருக்காக அவரது உரிமைகளை அவரது முகவர் விட்டுக் கொடுக்கலாம்.

முரண்தடை, அனுமானம் - வேறுபாடுகள்:

முரண்தடை (Estoppel)	அனுமானம் (Presumption)
1. ஒன்றை உண்மை எனக் கூறி விட்டு, பிறகு அது பொய் என மெய்ப்பித்தல் இங்கு தடுக்கப் படுகிறது.	இங்கு உண்மையென ஏற்கப்பட்ட அல்லது மெய்ப்பிக்கப்பட்ட ஒரு பொருண்மையிலிருந்து மற்றொரு பொருண்மை ஊகிக்கப்படுகிறது.
2. இங்கு யார் முன்னுக்குப்பின் முரணாக கூறுகிறாரோ அவரே அதை மெய்ப்பிப்பதிலிருந்து தனிப்பட்ட விதத்தில் தடுக்கப் படுகிறார்.	இங்கு ஒரு பொருண்மையை யார் மெய்ப்பித்தாலும், அதிலிருந்து மற்றொரு பொருண்மையை ஊகிக்கலாம்.
3. முரண்தடை, உரிமையியல் வழக்கு களுக்கு மட்டுமே பொருந்தும்.	அனுமானம், உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இருவகை வழக்குகளுக்கும் பொருந்தும்.
4. முரண்தடை மூன்று வகைப்படும். அவை 1) தீர்ப்புரை 2) பத்திரம் 3) செயல் மூலமான முரண்தடை.	அனுமானம் இரு வகைப்படும். அவை 1) பொருண்மைத் துணிபு 2) சட்டத் துணிபு.

முரண்தடை, ஒத்தேற்புரை - வேறுபாடுகள்:

முரண்தடை (Estoppel)	ஒத்தேற்புரை (Admission)
1. முன் கூறியதை மறுத்துக் கூற சட்டம் தடை செய்வதே முரண்தடையாகும்.	தீர்வுதரு பொருண்மை அல்லது தீர்வுதவு பொருண்மை குறித்த ஊகம் எதனையும் குறிப்பால் உணர்த்தக்கூடிய உரையே, ஒத்தேற்புரையாகும்.
2. முரண்தடையானது தீர்ப்புரைக்கு அடிப்படையாக அமையாது.	ஒத்தேற்புரை, ஒரு தீர்ப்புரையின் அடித்தளமாக விளங்கலாம்.
3. சம்பந்தப்பட்ட தரப்பினர்களை மட்டுமே முரண்தடை கட்டுப் படுத்துகிறது. வெளியாட்கள், முரண்தடையால் எவ்வித பலனையும் பெற இயலாது.	ஒருவரது ஒத்தேற்யுரையை, வெளியாட்களும் (Strangers) தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. முரண்தடையானது அறுதியானதாகும்.	ஒத்தேற்புரை முரண்தடையாக செயல்படலாம். ஆனால் இது அறுதியானதல்ல. ஒத்தேற்புரைக்கு முரணாகவும் சாட்சியமளிக்கலாம்.

இளவருக்கு எதிராக முரண்தடை சாத்தியமா? (Can there be Estoppel against minor?)

இளவருக்கு எதிராக முரண்தடை சாத்தியமில்லை. அதாவது முரண்தடைக் கோட்பாடு இளவர்களுக்குப் பொருந்தாது. முரண்தடையில், ஒரு விஷயத்தை உண்மையானதென மற்றொருவர் நம்பும்படி கூறுபவர், உரிமை வயதடைந்தவராக (Major), சட்டப்படி ஒப்பந்தம் செய்யத் தகுதி படைத்தவராக இருத்தல் வேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி, இளவர் ஒருவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம், இல்லாநிலையதாகிவிடும். எனவே இதை மீறி முரண்தடை செயல்பட முடியாது.

இளவர் ஒருவர் தான் உரிமை வயது அடைந்தவர் என பொய்யுரைத்து, அதனை மற்றொருவரை நம்பச் செய்து, அவருடன் ஓர் ஒப்பந்தம் செய்து, பின்னாளில் உண்மையாக அவர் உரிமை வயதை அடைந்த பின், தான் முன்பு செய்த ஒப்பந்தம் செல்லாது என்று கூறி வழக்குத் தொடுத்தால், அதை முரண்தடையின் கீழ் தடுக்க முடியாது. அதாவது மேற்படி இளவர் அவ்வாறு முன்னுக்குப் பின் முரணாக கூறலாம். ஆனால் அவ்வாறு பொய்யுரைத்தால் பெற்ற பலனை திருப்பித் தருமாறு நீதிமன்றம் அந்த இளவருக்கு உத்திரவிடலாம்.

Jagar Nath v. Lalta Prasad[1] - என்ற வழக்கில் இளவர் பொய்யுரைத்ததின் அடிப்படையில் நட்டம் அடைந்த தரப்பினர், அதை அந்த இளவரிடமிருந்து ஈடு செய்து கொள்ள தகைமை நெறியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டார்.

முடிவுரை:

எதையும் பேசலாம்; எப்படியும் பேசலாம்; பேசியதையே மாற்றியும் பேசலாம் என்ற மனப்பாங்கை கொண்டவர்களுக்கு முரண்தடை குறித்த சாட்சிய சட்டத்தின் விதிகள் சவுக்கடிகளாக செயல்படும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

- o -

1. 1908 31 All. 21

34 சாட்சிகள் [Witnesses]

சாட்சிகளின் தகுதி மற்றும் கட்டாயப்படுத்தப்படும் தன்மை (Competancy and Compellability of Witnesses)

72. State the law relating to competancy and compellability of witnesses. (சாட்சிகளின் தகுதி, கட்டாயப்படுத்தப்படும் தன்மை இவை குறித்த சட்டத்தை விளக்குக.)

(அல்லது)

Distinguish between competancy and compellability of witness. (சாட்சிகளின் தகுதிக்கும், கட்டாயப்படுத்தப்படுதலுக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்க.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் ஒன்பதாவது அத்தியாயம் **(Chapter IX)** *'சாட்சிகள் பற்றி'* குறிப்பிடுகின்றது. அவற்றில் *118* முதல் *134* வரையிலான பிரிவுகள் உள்ளன. இவ்வனைத்துப் பிரிவுகளையும் சாட்சிகளின் தகுதி மற்றும் சாட்சிகளின் கட்டாயப்படுத்தப்படும் தன்மை என்ற தலைப்புகளின் கீழ் பிரிக்கலாம். விளக்கமாக வருமாறு.

சாட்சிகளின் தகுதி (Competancy of Witness):

ஒரு சாட்சி தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளைப் புரிந்து கொண்டு, அதற்கு பகுத்தறிவிற்குகந்த பதில்களை அளித்தால், அவர் சாட்சியமளிக்கத் தகுதி படைத்தவராவார். இத்தகுதி குறித்து **பிரிவுகள் *118* லிருந்து *120* வரையிலும் மற்றும் பிரிவு *133*ம்** கூறுகின்றன.

பிரிவு *118*[1] ஆனது, கேள்விகளைப் புரிந்து கொண்டு பதிலளிக்கத் தெரியாத நபர்கள் தவிர அனைவரும் சாட்சியமளிக்கத் தகுதியானவர்களே, எனக் கூறுகிறது. **பிரிவு *119*[2]** ஆனது, வாய்பேச முடியாத ஊமைச் சாட்சி, எழுத்து மற்றும் சைகை மூலம் சாட்சியமளிக்கத் தகுதி படைத்தவர் எனக் கூறுகிறது. **பிரிவு *120*** ஆனது, உரிமையியல் வழக்கு நடவடிக்கைகள் அனைத்திலும் வழக்கிற்குரிய தரப்பினர்களும் அல்லது அத்தரப்பினர் எவரொருவரின் கணவன் அல்லது மனைவியும் தகுதி வாய்ந்த சாட்சியே என்று கூறுகிறது. அதுபோல், எவரேனுமொருவர் மீதுள்ள குற்ற வழக்கு நடவடிக்கைகளில், முறையே அத்தகையவரின் கணவர் அல்லது மனைவி

1. விரிவாக அடுத்த வினாவில் காண்க.
2. விரிவாக அடுத்த வினாவில் காண்க.

ஒரு தகுதி வாய்ந்த சாட்சியாக இருப்பார். **பிரிவு 133**[1] ஆனது குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கெதிராக ஒரு உடன் குற்றவாளி தகுதி வாய்ந்த சாட்சியாவார், என்று கூறுகிறது.

சாட்சிகளின் கட்டாயப்படுத்தப்படும் தன்மை (Compellability of Witness):

சாட்சிகளின் தகுதிக்கும், சாட்சிகளின் கட்டாயப்படுத்தப்படும் தன்மைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. சாட்சிகளின் தகுதியில், கேள்விகளைப் புரிந்து பதிலளிக்கும் திறனுடையவர் சாட்சியமளிக்கத் தகுதியானவர் எனப்படுகிறார். அதாவது, இங்கு ஒருவர் சாட்சியமளிக்க தகுதி பெற்றுள்ளார். ஆனால், சாட்சிகளின் கட்டாயப்படுத்தப்படும் தன்மையில், ஒரு சாட்சி சாட்சியமளிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார். அதாவது அவரது சாட்சியம் பொதுநலனின் அடிப்படையிலோ அல்லது வழக்கில் தக்க நீதி நல்கிடுவதற்கு இன்றியமையாததாகவோ இருக்கலாம். அச்சமயத்தில் அவரைச் சாட்சியமளிக்கும்படி கட்டாயப்படுத்தலாம்.

ஆனால் அதே பொதுநலனின் அடிப்டையில் அல்லது நீதியின் அடிப்டையில் சில விதிவிலக்கான சூழ்நிலையில், அவரை அவ்வாறு சாட்சியமளிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது. இதனை சட்டத்தால் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமை எனக் கூறலாம். எத்தகு விஷயங்கள் குறித்து ஒருவரை சாட்சியமளிக்கக் கட்டாயப்படுத்த முடியாதோ, அவ்விஷயங்கள் காப்புடைச் செய்திகள் (Privileged communication) எனப்படுகின்றன. இது குறித்து **121லிருந்து 132 வரையுள்ள பிரிவுகள்** குறிப்பிடுகின்றன.

பிரிவு 121ன்படி, ஒரு நீதிபதி அல்லது குற்றவியல் துறை நடுவரை பின்வருவன குறித்து எழும் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு கட்டாயப் படுத்தக்கூடாது. (i) நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக அவரது நடத்தைப் பற்றி, அல்லது (ii) நீதிபதி எனும் முறையில் நீதிமன்றத்தில் அவரது அறிவுக்கு எட்டிய விஷயத்தைப்பற்றி, ஆனால் அவரது முன்னிலையில் நிகழ்ந்த வேறு விஷயங்களைப் பற்றி அவர் விசாரிக்கப்படலாம்.

பிரிவுகள் 122 முதல் 129 வரை வினா எண் (68) ல் விவாதிக்கப்பட்டுள்ளது. அவற்றை இரத்தினச் சுருக்கமாக இங்கு குறிப்பிட்டால் போதும்.

பிரிவு 130ன்படி, ஓர் உரிமை வழக்கில் தரப்பினர் அல்லாத சாட்சி எவரும், எந்தச் சொத்துக்கேனும் அவருக்குள்ள பாத்தியதை ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படக் கூடாது. **பிரிவு 131ன்படி,** பத்திரங்களைத் தம்வசம் வைத்திருக்கின்ற எவரும், அவையே மற்றொருவரது வசம் இருக்குமானால், அவற்றைத் தாக்கல் செய்ய

1. விரிவாக வினா எண் (75) ல் காண்க

மறுப்பதற்கு அந்த மற்றவர் உரிமையுடையவராயிருக்கும் போது, அவற்றைத் தாக்கல் செய்யப் பின்சொன்னவர் சம்மதித்தாலன்றி அப்பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுதல் கூடாது. [அதாவது ஒரு பத்திரத்திற்கு ஒருவர் உரிமையாளர், ஆனால் அது மற்றொருவர் வசம் உள்ளது. இந்நிலையில் அதன் உரிமையாளர் சம்மதித்தாலன்றி, அப்பத்திரத்தை தம் வசம் வைத்திருப்பவர் தாக்கல் செய்ய முடியாது. அவ்வாறு தாக்கல் செய்யும்படி அவரைக் கட்டாயப்படுத்த முடியாது.] **பிரிவு 132ன்படி,** சில கேள்விகளுக்கு பதில் சொல்வதால் குற்றத்திற்கு உள்ளாக நேரும் (incriminating questions) என்னும் காரணத்தின் பேரில், அதற்கு பதில் சொல்லும் பொறுப்பிலிருந்து ஒரு சாட்சி விடுவிக்கப்பட மாட்டார்.

குழந்தை மற்றும் ஊமை சாட்சியம்

73. Write a brief essay on evidence of a child and a dump witness. (குழந்தை மற்றும் ஊமை சாட்சியத்தைப் பற்றி சுருக்கமான கட்டுரை வரைக.)

(அல்லது)

Explain the following terms: (a) Child witness; (b) Dump witness. (கீழ்கண்ட சொற்களை விளக்குக: (அ) குழந்தை சாட்சியம் (ஆ) ஊமை சாட்சியம்.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தில் குழந்தை சாட்சியம் பற்றி **பிரிவு 118ம்,** ஊமை சாட்சியம் பற்றி பிரிவு 119ம் கூறுகின்றது. விரிவாக வருமாறு.

அ) குழந்தை சாட்சியம் (Child Witness):

இந்திய சாட்சிய சட்டத்தின் 118வது **பிரிவு** குழந்தை சாட்சியம் பற்றி நேரடியாக குறிப்பிடவில்லை. இதற்கு மாறாக, **எவர் சாட்சி சொல்லலாம் (Who may testify)** என்று குறிப்பிடுகின்றது. அதன்படி கேட்கும் கேள்விகளை புரிந்து கொண்டு, அதற்கு பகுத்தறிவுக்கு உகந்த பதில்களைக் கொடுக்கத் திறனுடைய எவரும் சாட்சி சொல்ல தகுதியுடையவர்களே. ஆனால் இளமைப் பருவம் (tender years), வயது மூப்பு அடைந்த நிலை (extreme old age), உடல் நோய் அல்லது மனநோய் (disease) போன்ற காரணங்களால் ஒருவர், கேட்கும் கேள்விகளை புரிந்து கொள்ளவோ அல்லது தக்க பதில்களை கொடுக்கவோ திறனற்றவராக உள்ளார் என நீதிமன்றம் கருதுமாயின், அவர் சாட்சி சொல்ல தகுதியற்றவராவார்.

அதாவது சாட்சி சொல்ல இரண்டு தகுதிகள் வேண்டும். 1. கேட்கும் கேள்விகளை புரிந்து கொள்ளுதல்; 2. அதற்கு பகுத்தறிவிற்கு உகந்த

பதில்களை அளித்தல். எனவே ஒரு குழந்தை, கேட்கும் கேள்விகளை புரிந்து கொண்டு பகுத்தறிவிற்கு உகந்த பதில்களை அளித்தால், அதன் சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

சுருங்கக்கூறின், ஒருவருக்கு சாட்சி சொல்லத் தகுதியென்பது அவருடைய வயதை வைத்து முடிவு செய்யப்படுவதில்லை. அவர் கேள்விகளை புரிந்து கொண்டு பதிலளிக்கும் ஆற்றலின் அடிப்படையில் தான், அவருடைய சாட்சியமளிக்கும் தகுதி நிர்ணயிக்கப்படுகிறது. இதனடிப்படையில் குழந்தைச் சாட்சியம் ஏற்புடையதே.

Mohamde Sugal v. The King[1] - இவ்வழக்கில் 10 வயதுடைய சிறுமி, கேள்விகளை புரிந்து கொண்டு சாதூர்யமாக, எவ்வித தயக்கமுமில்லாமல் பதிலளித்தாள். எனவே ஒரு கொலை வழக்கில் அவள் கொடுத்த சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் சாட்சி சொல்வதற்கு முன் செய்விக்கப்படும் சத்தியப் பிரமாணத்தின் பொருள் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை (அதாவது சத்தியம் செய்தலின் உள்ளர்த்தம்). இருந்தாலும் கேள்விகளை புரிந்து கொண்டு பதிலளிக்கும் திறமை இருப்பதால், சத்தியப் பிரமாணத்தின் பொருளை அறிந்து கொள்ளாமல் இருந்ததை நீதிமன்றம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஆ) ஊமைச் சாட்சியம் (Dumb Witness) :

இந்திய சாட்சிய சட்டத்தின் **119வது பிரிவு**, பேச இயலாதவராக உள்ள உமையரின் சாட்சியத்தை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளலாமென்று கூறுகின்றது. இத்தகைய நபர் நீதிமன்றத்தின் முன் எழுத்தின் மூலமாகவோ அல்லது சைகைகளின் மூலமாகவோ சாட்சி அளிக்கலாம். அவ்வாறு அளிக்கப்படும் சாட்சி வாய்மொழிச் சாட்சியத்திற்கு ஒப்பாகும்.

ஊமையர் தன்னுடைய சாட்சியத்தை சைகைகள், பாவனைகள், முத்திரை முகபாவங்கள் மூலமாகத் தெரிவிக்கலாம். படித்தவராக இருந்தால், அவர் எழுத்து மூலமாகச் சாட்சியம் அளிக்கலாம். ஆனால் எழுத்து அல்லது சைகை மூலமான சாட்சியம், எதுவாக இருப்பினும், அது திறந்த நீதிமன்றத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் சாட்சியத்தை ஊமையரின் வாய்மொழிச் சாட்சியமாக நீதிமன்றம் கருத வேண்டும், என மேற்படி பிரிவு 119 பணிக்கிறது.

காப்புடைச் செய்திகள் (Privileged Communications)

74. What are Privileged Communications? State the circumstances under which the privilege can be claimed by a witness. (காப்புடைச் செய்திகள் யாவை? எந்த சூழ்நிலைகளில் காப்புடைமையை ஒரு சாட்சி

1. (1945) 48 B.L.R. 138

கோர முடியும் என்பதை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What are Privileged Communications? Discuss the provisions under Indian Evidence Act, 1872. (காப்புடையச் செய்திகள் என்பவை யாவை? இந்திய சான்றுச் சட்டம் 1872-ல் அதைப்பற்றி உள்ள வழிவகைகளை விவாதி).

(அல்லது)

Explain in detail the privileged communications under the Indian Evidence Act. (இந்திய சான்றுச் சட்டத்தின் கீழ் காப்புடைச் செய்திகளைப் பற்றி விவரமாக விளக்குக.)

(அல்லது)

Explain the nature of Privileged Communications under the Indian Evidence Act. (இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் காப்புடைய செய்திகளின் தன்மையை விவரிக்கவும்.)

(அல்லது)

Enumerate the categories of privileged witnesses and explain the scope of each privilege. (காப்புடைய சாட்சிகளின் வகைகளைக் குறிப்பிடுக. அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய காப்புடைமையின் அளாவுகையை விளக்குக.)

(அல்லது)

Discuss how far the law protects communications between spouses and during marriage. (கணவன் மனைவியாக இருக்கும் போது அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் ஏற்பட்ட செய்தித் தொடர்புகளுக்குச் சட்டம் எவ்வாறு பாதுகாப்பு அளிக்கிறது?)

(அல்லது)

"Communications during marriage between the husband and wife are privileged" - Comment. ("மண வாழ்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான செய்தித் தொடர்புகள் காப்புடையது". விவரிக்கவும்.)

(அல்லது)

Privileged Communications - Write short notes. (காப்புடையச் செய்திகள் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Professional Communications - Write short notes. (தொழில் தொடர்பான செய்திகள் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 122 முதல் 129 வரையிலான பிரிவுகள்

'காப்புடைச் செய்திகள்' பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றை விரிவாகக் காண்பதற்கு முன்னர், **'காப்புடைச் செய்திகள்'** எனும் பதத்தின் விளக்கத்தை முதலில் அறிந்து கொள்வோம்.

காப்புடைச் செய்திகள் (Privileged Communications) - விளக்கம்:

பொதுவாக கேட்ட கேள்விக்கு உரிய பதிலளிக்க வேண்டியது சாட்சியின் கடமையாகும். ஆனால் சில சிறப்பான சூழ்நிலைகளில் அவ்வாறு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகு சிறப்பான சூழ்நிலைகளுக்கு அடிப்படையாக விளங்கும் செய்திகளே **'காப்புடைச் செய்திகள்'** ஆகின்றன. அதாவது, அச்செய்திகள் தொடர்பாக சாட்சியிடம் கேள்விகள் கேட்கப்பட்டால், அவர் அதற்கு பதில் கூற மறுக்கலாம். இதற்கு அவருக்கு சாட்சிய சட்டத்தின்படி உரிமை உண்டு. சுருங்கக்கூறின் அத்தகு செய்திகளைப் பற்றி சாட்சியளிக்குமாறு அச்சாட்சியை கட்டாயப்படுத்தக்கூடாது. (Should not be compelled). இது பொது நலனின் அடிப்படையில் சாட்சிய சட்டத்தில் சேர்க்கப்பட்ட விதியாகும். அத்தகைய காப்புடைச் செய்திகள் மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. அவை வருமாறு.

காப்புடைச் செய்திகளின் வகைகள்:

1. மண வாழ்வில் எழும் செய்திகள் (Matrimonial Communications) **[பிரிவு 122]**.
2. அரசு அலுவல் தொடர்பான செய்திகள் (Official Communications) **[பிரிவு 124]**.
3. தொழில் தொடர்பான செய்திகள் (Professional Communications) **[பிரிவு 126]**.

1. மண வாழ்வில் எழும் செய்திகள் (Matrimonial Communications):

இரு மணங்களின் இணைப்பே திருமணம். இல்லற வாழ்வு இனிதே செல்ல, தம்பதிகளில் ஒருவர் மற்றொருவர் மீது கொள்ளும் நம்பிக்கைதான் அதற்கு ஆதாரம். அந்த நம்பிக்கைதான் அந்தரங்கமாகிறது. அந்தரங்கம் என்றுமே புனிதமானது. அங்கு ஒளிவு-மறைவென்பதே கிடையாது. எனவே கணவன், மனைவியிடமோ அல்லது மனைவி, கணவனிடமோ எதையும் ஒளிக்காமல் எல்லாவற்றையும் வெளிப்படையாக கூறலாம்; ஆயிரம் இரகசியங்கள் பேசிக் கொள்ளலாம். அவற்றையெல்லாம் சந்திக்கு இழுக்க சட்டம் அனுமதிப்பதில்லை. அதாவது மண வாழ்வில் கணவன் மனைவியிடம் தெரிவித்த செய்தியையோ அல்லது மனைவி கணவனிடம் தெரிவித்த செய்தியையோ வெளிப்படுத்துமாறு அவர்களை கட்டாயப்படுத்தக்கூடாது. இதைத்தான் பிரிவு 122 **'மணவாழ்க்கையின் போது பரிமாறிக் கொண்ட செய்திகள்' (Communications during marriage)** என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

"மணம் செய்து கொண்டிருக்கின்ற எவரும், எவருடன் அவர் மணம் செய்து கொண்டிருக்கின்றாரோ, அவரால் மண வாழ்க்கையில் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட செய்தி எதையும் வெளிப்படுத்துமாறு கட்டாயப் படுத்துதல் ஆகாது".

Ramachandra Shankershet v. Emperor[1] - இவ்வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு இரு மனைவிகள். அதில் ஒருத்தி கொலை நடந்த இடத்தில் இருந்திருக்கிறாள். எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவன் தனது மேற்படி மனைவியிடம் கூறிய சில உரைகளை, அம்மனைவியைக் கொண்டே நிரூபிக்க அரசு தரப்பினர் (Prosecution side) முயன்றார். கொலை நடந்த இடத்தில் அவள் இருந்ததால், அக்கொலை பற்றி சாட்சியமளிக்க அவளுக்கு முழுத் தகுதியுண்டு. ஆனால் அக்கொலை குறித்து அவளது கணவன் கூறிய உரைகளை நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு அவளைக் கட்டாயப்படுத்த முடியாது. ஏனெனில் பிரிவு 122ன்படி அவ்வுரைகள் காப்புடைச் செய்திகளாகின்றன. எனவே அவற்றை சாட்சியமாக எடுத்துக் கொள்ள இயலாது.

Ram Bharosey v. State of U.P.[2] - இவ்வழக்கில் கணவன் மீது பக்கத்து வீட்டுப் பெண்மணியை கொன்று விட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. அவரது மனைவி ஒரு சாட்சியாக நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டாள். விசாரணையில் தனது கணவன் தனக்கு நகைகளை கொடுக்கப்போவதாக கூறினார், என அவள் சாட்சியமளித்தாள். மேலும் அவள், "அதிகாலையில் எங்கே போனீர்கள்?" என்று தனது கணவரிடம் கேள்வி கேட்டதாகவும் அதற்கு அவன், "கொலை நடந்த பக்கத்து வீட்டிற்கு நகைகளுக்காக போயிருந்தேன்" என்று பதிலளித்ததாகவும் அவள் சாட்சியமளித்தாள். மேற்படி உரையாடல், கணவன்தான் நகைகளுக்காக அக்கொலையை செய்திருப்பான் என்ற ஊகத்தை அதிகமாக்கினாலும், மேற்படி பிரிவு 122ன்படி அதை தொடர்பற்றதாக உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது பிரிவு 122ன்படி அவ்வுரையாடலை சாட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது.

விதிவிலக்குகள் (Exceptions):

மணவாழ்க்கையின் போது நடைபெறும் செய்திப் பரிமாற்றங்களை வெளிப்படுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது என பிரிவு 122 கூறுகிறது. ஆனால் இதற்கு விதிவிலக்குகள் உண்டு. அச்சந்தர்ப்பங்களில், அச்செய்தி களை வெளியிடுமாறு கட்டாயப்படுத்தலாம். அவ்விதிவிலக்குகள் வருமாறு.

1. **செய்திகளைத் தவிர்த்த செயல்கள் (Acts apart from Communications):** தன் கணவன் தன்னிடம் என்ன சொன்னான் என்பதை

1. A.I.R. 1933 Bom. 153
2. A.I.R. 1954 S.C. 704

மனைவி கூற வேண்டியதில்லை. ஆனால் அச்சமயத்தில் எப்படி நடந்து கொண்டான் அல்லது செயல்பட்டான் என்பதைக் குறித்து கேள்விகள் கேட்க்கப்பட்டால், அதற்கு அவள் பதிலளித்தே ஆக வேண்டும்.

நாம் முன்கண்ட **Ram Bharosey v. State of U.P.**[1] வழக்கில் பக்கத்துவீட்டு பெண்மணியின் நகைகளுக்காக கொலை செய்ததாக கணவன் மீது குற்றம் சாட்டப்பட்டது. இங்கு அக்கணவன் தனது மனைவியிடம் கூறிய உரைகளை நீதிமன்றம் பிரிவு 122ன்படி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அச்சமயத்தில் அக்கணவனின் செயல்கள் குறித்து மனைவி அளித்த சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது, கொலை நடந்த சமயத்திற்கு பிறகு, அக்கணவன் வீட்டின் கூரையிலிருந்து இறங்கி வந்ததையும், சம்பந்தமில்லாமல் கால்நடைத் தீனி வைத்துள்ள அறைக்குச் சென்று, அங்கே குளித்ததையும், பின்னர் அதே உடைகளையே அணிந்து கொண்டு வந்து தம்மிடம் நகைகளைக் கொடுத்ததையும் பற்றி மனைவி சாட்சியமளித்தாள். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதே என நீதிமன்றம் கூறியது.

2. மூன்றாவது நபர்களின் சாட்சியம் **(Evidence by third persons):** ஒரு மூன்றாவது நபர் முன்னிலையில் கணவன் மனைவிக்கிடையே நடந்த உரையாடல்களை அல்லது செய்திப் பரிமாற்றங்களை, அவரைக் கொண்டே மெய்ப்பிக்கலாம். அதாவது ஒரு செய்தி எப்பொழுது காப்புடையதாக ஆகிறது என்றால், அது கணவன் - மனைவிக்கிடையே நடக்கும் பொழுதுதான். அதைக் கேட்ட மூன்றாம் நபர்களுக்கு பொருந்தாது.

Queen - Empress v. Donoghue[2] என்ற வழக்கில் கணவன் தனது மனைவிக்கு கடிதம் எழுதினான். இது புலனாய்வின் பொழுது காவல்துறை அலுவ்லர் ஒருவரின் கையில் சிக்கியது. இங்கு அக்கடிதத்தின் உள்ளடக்கம் பற்றி சாட்சியமளிக்க மனைவி கட்டாயப்படுத்தப்பட முடியாது. ஆனால் அக்கடிதத்தை கண்ட காவல்துறை அலுவலர் அது பற்றி சாட்சியமளித்தார். இது ஏற்றுக் கொள்ளத் தக்கதே என நீதிமன்றம் கூறியது..

Appu v. State[3] - இவ்வழக்கில் ஒரு கணவன், தன் மனைவி மற்றும் வெளியாட்கள் மூவர் முன்னிலையில், குற்ற ஏற்புரை (Confession) அளித்தார். இதை அம்மூவர் மூலம் மெய்ப்பிக்கலாமே தவிர மனைவியின் மூலமாக முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

3. காப்புரிமையை விட்டுக் கொடுத்தல் **(Waiver of Privilege):** காப்புடைச் செய்தியை தம்பதிகளில் ஒருவர், அதைக்கூறிய மற்றொருவரின் அல்லது அவரது பிரதிநிதியின் சம்மதத்தோடு வெளிப்படுத்தலாம்; சாட்சி

1. A.I.R. 1954 S.C. 704
2. I.L.R. (1899) 22 Mad. 1
3. A.I.R. 1971 Mad. 194

கூறலாம். இதுவே விட்டுக் கொடுத்தல் எனப்படுகிறது.

4. தம்பதிகளிடையிலான குற்றவியல் அல்லது உரிமையியல் வழக்குகள் (Crimes or Suits between married persons): தம்பதி களிடையே உரிமையியல் வழக்கு ஒன்று எழுந்திருக்கும் பொழுதோ அல்லது தம்பதிகளில் ஒருவருக்கு எதிராக மற்றொருவர் குற்றம் ஏதேனும் புரிந்து அதற்காக குற்றம் புரிந்த தரப்பினர் மீது குற்ற வழக்கு இடப்பட்டிருக்கும் போதோ, அவர்களில் ஒருவர் மற்றொருவரிடம் கூறிய செய்திகளை நீதிமன்றத்தில் சாட்சியமாக கூறலாம். தம்பதிகளே விரோதிகளாகும் பொழுது, காப்புடைச் செய்திகளுக்கு என்ன வேலை?

2. அரசு அலுவல் தொடர்பான செய்திகள் (Official Communications):

பொது அலுவலர் ஒருவரிடம் தெரிவிக்கப்பட்ட அலுவலக இரகசியங்களை வெளிப்படுத்துமாறு அவரை கட்டாயப்படுத்த முடியாது. அப்படிக் கட்டாயப்படுத்தப்பட்டால், அதை வெளிப்படுத்த மறுக்கும் உரிமை அப்பொது அலுவலருக்கு உண்டு. ஏனெனில் அலுவலக இரகசியங்களை வெளிப்படுத்துவது பொதுமக்களின் நலத்திற்கு ஊறு விளைவிப்பதாக அமையும். இதைத்தான் **பிரிவு 124** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

"பொது அலுவலரிடம் அலுவல் முறையில் தெரிவிக்கப்பட்ட அந்தரங்கமான விஷயங்களை (Official Confidence) வெளியிடுவதன் மூலம் அது பொதுமக்களின் நலத்தை பாதிக்குமென, அவர் நினைத்தால், அவற்றை வெளியிடுமாறு அவர் கட்டாயப்படுத்தக் கூடாது.

இதேபோல் **பிரிவு 123ம், 125ம்** அரசு தொடர்பான சில தகவல்களுக்கு காப்புரிமை அளிக்கிறது.

பிரிவு 123ன்படி, அரசாங்க விஷயங்கள் தொடர்பாக வெளியிடப்படாத அலுவல பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட சாட்சியம் எதையும், சம்பந்தப்பட்ட துறையின் தலைமையலுவலரின் அனுமதியுடன் அல்லாமல், கொடுப்பதற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டாது. அத்தலைமை அலுவலர் அவ்வனுமதியைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமலுமிருக்கலாம்.

பிரிவு 125ன்படி, குற்றவியல் துறை நடுவர் அல்லது காவல்துறை அலுவலர் எவரும், குற்றம் ஏதேனும் செய்யப்பட்டது பற்றிய தகவல் எதையும் எங்கிருந்து தாம் பெற்றார் என்று சொல்லுமாறு கட்டாயப்படுத்தப்படுதல் கூடாது. மேலும் வருவாய்த் துறை அலுவலர் (Revenue Officer) எவரும், பொது வருவாய்க்கெதிராகக் குற்றம் ஏதேனும் செய்யப்பட்டது பற்றிய தகவல் எதையும் தாம் எங்கிருந்து பெற்றார் என்று சொல்லுமாறு கட்டாயப்படுத்தப்படுதல் கூடாது.

3. தொழில் தொடர்பான செய்திகள் (Professional Communications):

ஒரு வழக்கறிஞர், தமது கட்சிக்காரரால் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட செய்தி எதையும் வெளிப்படுத்தக் கூடாது. எப்படி கணவன்-மனைவிக்கிடையான உறவு அந்தரங்கமானதோ, அப்படியே ஒரு வழக்கறிஞர் மற்றும் கட்சிக்காரருக்கிடையிலான உறவும் அந்தரங்க மானதாகும். எனவே, ஒரு கட்சிக்காரர், தனக்காக ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொண்டு வாதாட விரும்பும்போது அவர்கள் பரிமாறிக் கொள்ளும் செய்திகள் அந்தரங்கமானவை. இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டியவை. தனது வழக்கறிஞர், அவரது வாதத் திறமையால் தம்மை எப்படியும் காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், தம்மைப்பற்றிய இரகசியங்கள் அனைத்தையும் கட்சிக்காரர், அவரிடம் வெளியிடுகின்றார். எனவே ஒரு கட்சிக்காரர், தனது வழக்கறிஞரிடம் வாய்மொழியாகவும் பத்திரங்கள் வழியாகவும் என்னென்ன செய்திகள் அறிவித்துள்ளார் என்பதை வெளியிடுமாறு அவ்வழக்கறிஞரை கட்டாயப் படுத்த முடியாது. அதேபோல் வழக்கறிஞர் தனது கட்சிக்காரருக்கு அளித்த ஆலோசனைகளையும் வெளிப்படுத்துமாறு அவரைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் இவ்வாறு வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட கட்சிக்காரரே சம்மதம் (consent) தெரிவித்திருந்தால், அவ்வழக்கறிஞர் அச்செய்திகளை வெளியிடலாம்.

ஆனால் இது பின்வரும் செய்திகள் எதனையும் வெளியிடுவதிலி ருந்து காக்காது. அதன்படி, (1) சட்ட விரோதமான நோக்கம் எதையும் நிறைவேற்றும் வகையில் கட்சிக்காரர் தம்மிடம் தெரிவித்த செய்தி; (2) வழக்கறிஞராக அமர்த்தப்பட்டுள்ளபொழுது, அவரால் கவனிக்கப்பட்ட குற்றம் அல்லது மோசடி குறித்த பொருண்மைகள்; இவற்றைக் குறித்து ஒரு வழக்கறிஞர் சாட்சியமளிக்கலாம்.

மேற்கண்டவாறு **பிரிவு 126** கூறுகிறது. அதில் கூறப் பட்டுள்ள இரண்டு **எடுத்துக்காட்டுகளைக்** கண்டால், இது மேலும் தெளிவாகும்.

(i) A எனும் கட்சிக்காரர் B எனும் தனது வழக்கறிஞரிடம், "நான் சிருஷ்டனைக் (forgery) குற்றம் செய்துள்ளேன்; எனக்காக நீங்கள் எதிர் வழக்காட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று கூறுகிறார். குற்றவாளியென்று தெரிந்த ஒரு மனிதனுக்காக வழக்காடுவது குற்றமான நோக்கமன்று. ஆதலால், இந்தச் செய்தியை வெளிப்படுத்துமாறு அவ்வழக்கறிஞரை கட்டாயப்படுத்த முடியாது.

(ii) A எனும் கட்சிக்காரர் B எனும் தனது வழக்கறிஞரிடம், "சிருஷ்டனை செய்யப்பட்ட ஆவணத்தை பயன்படுத்தி, சொத்தின் அனுபவத்தைப் பெற விரும்புகிறேன்; எனவே அந்த ஆவணத்தின் மீது வழக்கிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று

கூறுகிறார். இங்கு ஒரு குற்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் மேற்படி செய்தி இருப்பதால், அதை அவ்வழக்கறிஞர் வெளிப்படுத்தலாம். காப்புரிமை கிடையாது.

இப்படிப்பட்ட தொழில்முறைச் செய்திகள் பற்றிய மேலும் சில விதிகளை பிரிவுகள் 127, 128 மற்றும் 129 தெரிவிக்கிறது.

பிரிவு 127ன்படி, முன்கூறிய 126வது பிரிவின் வகைமுறைகள் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள் மற்றும் பணியாளர்கள் மீதும் இயங்கும். அதாவது அவர்களும் வழக்கறிஞர்களைப் போலவே, கட்சிக்காரர்களால் தம்மிடம் தெரிவிக்கப் பட்ட செய்தியின் இரகசியத்தைக் காக்கக் கடமைப்பட்டவர்கள்.

பிரிவு 128ன்படி, ஒரு உரிமை வழக்குக்குரிய தரப்பினர் எவரேனும் தாமே முன் வந்தோ அல்லது வேறு விதமாகவோ அவ்வழக்கில் சாட்சியம் கொடுப்பாரானால், அதன் மூலம் அவர் 126வது பிரிவில் கூறப்பட்டுள்ள படி, செய்திகளை வெளிப்படுத்துவதற்கு சம்மதம் அளித்திருப்பதாக கருதக்கூடாது.

பிரிவு 129ன்படி, ஒருவர் தனக்கும் தனது தொழில்முறை சட்ட ஆலோசகருக்குமிடையே நிகழ்ந்த இரகசிய செய்திகளை நீதிமன்றத்தில் வெளியிடுமாறு அவரைக் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. (முன்கண்ட பிரிவு 126 ஒரு வழக்கறிஞரை அவ்வாறு இரகசியச் செய்திகளை வெளியிடக்கூடாது எனக் கூறுகிறது. ஆனால் இந்த 129வது பிரிவு ஒரு கட்சிக்காரரை அவ்வாறு வெளியிடக்கூடாது எனக் கூறுகிறது.)

உடன் குற்றவாளியும் அவரது சாட்சியமும்

75. Who is an accomplice? Is he a competent witness? (உடன் குற்றவாளி என்பவன் யார்? அவன் ஒரு தகுதி வாய்ந்த சாட்சியம் ஆவானா?)

(அல்லது)

Who is an "accomplice"? How far his statement is relevant and admissible? ("உடன் குற்றவாளி" என்பவர் யார்? அவரின் வாக்குமூலம் எந்த அளவிற்கு தொடர்புடையது மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கது?)

(அல்லது)

Discuss the reliability on the evidence given by accomplice. (உடன் குற்றவாளியால் கொடுக்கப்பட்ட சான்றின் நம்பத்தகு தன்மை பற்றி விவாதிக்க.)

(அல்லது)

"An accomplice is unworthy of credit unless he is corroborated in material particulars" Comment. ("மூலப் பொருள் தொடர்பாக

உறுதிப்படுத்தப் பட்டிருந்தாலொழிய உடந்தையாளர் நம்பிக்கைக்கு அருகதை அற்றவர்.' கருத்துரை கொடு.)

(அல்லது)

"A conviction can be based on the uncorroborated testimony of an accomplice" - Discuss. ("ஒரு உடன் குற்றவாளியின் வலியுறுத்தப்படாத சான்றின் அடிப்படையில் தண்டனை வழங்கலாம்" ஆராய்க.)

(அல்லது)

Accomplice - Write short notes. (உடன் குற்றவாளி - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

The evidence of an accomplice - Write short notes. (உடன் குற்றவாளியின் சாட்சியம் - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Testimony of Approver - Write short notes. (குற்றமேற்ற சான்றுரையரின் சாட்சியம் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Who is an accomplice? Whether he shall be a competent witness against an accused person? (உடன் குற்றவாளி என்பவர் யார்? அவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சான்று பகரும் தகுதியான சான்றுரையாக கருதப்படுவாரா?)

(அல்லது)

Explain briefly the differences between the testimony of an accomplice and confession of a co-accused. (உடன் குற்றவாளியின் சான்றுரைக்கும் உடன் குற்றஞ் சாட்டப்படுபவரின் குற்ற ஏற்புரைக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை சுருக்கமாக விளக்குக.[1])

உடன் குற்றவாளி (Accomplice) - விளக்கம்:

பலரால் ஒரு குற்றம் புரியப்படும் பொழுது, அதில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் உடன் குற்றவாளி எனப்படுவர். பல சதிகாரர்கள் ஒன்று சேர்ந்து மிக நுணுக்கமாக திட்டம் தீட்டி, எவ்வித சாட்சியத்திற்கும் இடம் கொடுக்காமல் குற்றங்களைக் கொடூரமாக புரிவதுண்டு. அச்சமயத்தில், அக்குற்றத்திற்கு எவ்வித தடயமோ அல்லது சாட்சியமோ காவல் துறையினருக்கு எளிதில் கிடைப்பதில்லை. எனவே குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் ஒருவரை, மற்ற குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சாட்சி சொல்லுமாறும், அதற்காக அவருக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்பதாகவும் கூறி அவரை ஒரு சாட்சியாக

1. இவ்வேறுபாடுகளை 'குற்ற ஏற்புரை' (Confession) என்ற அத்தியாயத்திலேயே கண்டுள்ளோம்.

காவல் துறையினர் மாற்றுகின்றனர். இப்படிப்பட்ட சாட்சியே **'உடன் குற்றவாளி' (Accomplice)** அல்லது **'குற்றமேற்ற சாட்சி' (Approver)** எனப்படுகிறார். இவர் தன்னுடன் இணைந்து குற்றம் புரிந்தவர் களுக்கெதிராக அரசு தரப்பினருக்கு ஆதரவாக சாட்சியளிப்பார். இங்கு தற்பொழுது எழும் கேள்விகள் யாதெனில், மேற்கண்டவாறு ஒரு உடன் குற்றவாளி அளிக்கும் சாட்சியத்தை எந்த அளவுக்கு நம்பலாம்? அச்சாட்சியத்தின் மதிப்பு என்ன? அதனடிப்படையில் அவருடன் இணைந்து குற்றம் புரிந்தவர்களை தண்டிக்கலாமா? உடன் குற்றவாளி ஒரு தகுதியுடைய சாட்சிதானா?

இதற்கு இந்திய சாட்சிய சட்டத்தின் **133வது பிரிவும் 114வது பிரிவின் கீழான** (b) எடுத்துக்காட்டும் விடை பகர்கின்றன. அப்பிரிவுகள் பின்வருமாறு.

பிரிவு 133 கூறுவதாவது:

ஒரு உடன் குற்றவாளி தகுதியுடைய சாட்சியே; அவரது சாட்சியத்தின் பேரில் நீதிமன்றம் ஒருவனைத் தண்டிக்கலாம்; உடன் குற்றவாளியின் வாக்குமூலம் பிற சாட்சியங்களால், உறுதியூட்டப் **படவில்லையென்பதால்** மட்டுமே, அத்தண்டனையை சட்டத்திற்கு மாறானது எனக் கூறமுடியாது, என பிரிவு 133 கூறுகிறது.

பிரிவு 114 கீழான எடுத்துக்காட்டு (b) கூறுவதாவது:

முக்கியமான விவரங்களில் உடன் குற்றவாளி ஒருவரின் வாக்குமூலம் உறுதியூட்டப்பட்டாலன்றி, அவர் நம்பத் தகுதியற்றவர், என்று நீதிமன்றம் அனுமானிக்கலாம்.

மேற்படி இரண்டு சட்டப் பிரிவுகளுக்கும் இடையிலான முரண்பாடு:

மேலெழுந்த வாரியாகக் கண்டால், மேற்படி இரண்டு சட்டப் பிரிவுகளுக்கும் இடையே முரண்பாடு இருப்பதாக தோன்றும். எனவே அவற்றை முதலில் தீர்த்து வைக்க வேண்டியது அவசியமாகும். பிரிவு 133ன் படி, உறுதியூட்டப்பட்டாத உடன் குற்றவாளியின் சாட்சியத்தைக் கொண்டு உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தண்டிக்கலாம். ஆனால், அச்சாட்சியும், அக்குற்றத்தில் பங்கு கொண்ட ஒரு குற்றவாளிஸே. எனவே அவரை முற்றிலும் நம்பவியலாது. இதற்கு வழிகாட்டும் வண்ணம்தான் பிரிவு 114ல் (b) எனும் எடுத்துக்காட்டு சேர்க்கப்பட்டது. அதன்படி உடன் குற்றவாளியின் வாக்குமூலத்தை (சாட்சியத்தை) நம்பத்தகாதது என நீதிமன்றம் அனுமானிக்கலாம். அவ்வாக்கு மூலத்தை பிற தனிச் சாட்சியங்களால் உறுதியூட்டும்படி கோரலாம். ஆனால் மேற்படி பிரிவு 114, அவ்வாறு **'அனுமானிக்கலாம்' (may presume)** என்று கூறுகிறதேயொழிய அப்படியே **'அனுமானித்துக் கொள்ள வேண்டும்' (shall presume)** என நீதிமன்றத்தை பணிக்கவில்லை. எனவே உடன்

குற்றவாளியின் சாட்சியத்தை நீதிமன்றம் தன்விருப்புரிமை அதிகாரத்தின் படி நம்பலாம் அல்லது நம்பாமலும் இருக்கலாம். எனவே மேற்படி இரு பிரிவுகளுக்குமிடையே முரண்பாடு ஏதுமில்லையென **Dadu v. State of Maharastra**[1] எனும் வழக்கில் நீதிபதி சந்திரசூட் அவர்களால் கூறப்பட்டது.

உடன் குற்றவாளியின் வாக்குமூலம் - சான்றியல் மதிப்பு:

என்னதான் 133வது பிரிவு உறுதியூட்டப்படாத உடன் குற்றவாளியின் சாட்சியத்தைக் கொண்டு நீதிமன்றங்கள் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம் என்று கூறினாலும், அதை அப்படியே பின் பற்றுவதில் உயர் நீதிமன்றங்களிடையே பல கருத்து வேறுபாடுகள் இருந்தன.

Mahadeo v. King[2] என்ற வழக்கிலும் **Bhuboni Sahu v. The King**[3] என்ற வழக்கிலும் பிரிவி .கவுன்சில் பின்வருமாறு கூறியது. அதன்படி, "உடன் குற்றவாளியின் உறுதியூட்டப்படாத சாட்சியத்தின் அடிப்படையில் செயல்படுவது சட்டத்திற்கு மாறானது ஆகாது. ஆனால் அதே சமயத்தில், உலகனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது அறிவின்படியும், சட்ட நியதியின்படியும், உடன் குற்றவாளியின் சாட்சியம், முக்கிய விபரங்களில் உறுதியூட்டப்படாத பொழுது, அதை அடிப்படையாகக் கொண்டு தண்டிப்பது பாதுகாப்பற்றதாகும்"

பிரிவி கவுன்சிலின் மேற்படி தீர்ப்பிற்கு பிறகு இந்திய உயர் நீதிமன்றங்கள் அனைத்தும், உறுதியூட்டப்படாத வாக்குமூலத்தை உடன் குற்றவாளியின் வாக்குமூலத்தைக் கொண்டு ஒரு தண்டனைத் தீர்ப்பை வழங்கலாம் என்று சட்டம் கூறினாலும், தனிப்பட்ட சாட்சியங் களால் உறுதியூட்டும்படி கோரிப் பெறுவதே மிகப் பாதுகாப்பானதாகும் என்று கருத்து தெரிவித்தது.

Kashmira Singh v. State of Madhya Pradesh[4] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றமும் இதையொட்டி பின்வரும் கருத்தைத் தெரிவித்தது. அதன்படி, உடன் குற்றவாளியின் உறுதியூட்டப்படாத வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு தண்டனைத் தீர்ப்பை வழங்கலாம். ஆனால் நீதிபதி அதற்குண்டான எச்சரிக்கை விதியை மனதில் கொண்டு செயல்பட வேண்டும், எனப்பட்டது.

எனவே, உடன் குற்றவாளியின் உறுதியூட்டப்படாத ஒரு வாக்கு மூலத்தை வலுவிழந்த சாட்சியமென்றே (Weak evidence) கொள்ள வேண்டும்.

1. (1977) 3 S.C.C at pp. 74-75)
2. 1936
3. (1949) 76 IA 147 : (1949) 51 Bom. L.R. 955
4. 1952 SCR 526

முடிவுரை:

உடன் குற்றவாளியின் உறுதியூட்டப்படாத வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தண்டனைத் தீர்ப்பை வழங்கலாம்; அது சட்டத்திற்கு மாறானது ஆகாது என **பிரிவு 133** திட்டவட்டமாக கூறினாலும், நீதிமன்றங்கள் அவ்வாறு செயல்படுவதை பொது நியதியின் அடிப்படையில் விரும்புவதில்லை. எனவே அவ்வாக்குமூலம் பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட வேண்டுமென கோருகின்றன. அதுவே பாதுகாப்பானதுமாகும் என்றும் குறிப்பிடுகின்றன.

- o -

35 சாட்சிகளை விசாரித்தல் [Examination of Witnesses]

முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணை

76. Explain the following terms:

a) Examination in Chief
b) Cross Examination
c) Re-examination.

கீழ்கண்ட சொற்களை விளக்குக.

அ) முதல் விசாரணை
ஆ) குறுக்கு விசாரணை
இ) மறு விசாரணை

(அல்லது)

Discuss in detail the examination of witnesses in chief, cross examination and the method of impeaching the credibility of the witnesses. (சாட்சிகளை விசாரணை செய்வது தொடர்பாக முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் சாட்சிகளின் நற்பெயரை பழித்தல் முறை குறித்து விவாதிக்கவும்.)

(அல்லது)

Explain the various kinds of examination of witness under Indian Evidence Act. (இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் பல்வேறு சாட்சி விசாரணைகளை விளக்குக.)

(அல்லது)

What is the object of cross examination? What question may be lawfully asked during cross examination? (குறுக்கு விசாரணை செய்வதன் நோக்கம் என்ன? குறுக்கு விசாரணையின் போது சட்டப்படியாக எத்தகைய கேள்விகளை கேட்க இயலும்?)

(அல்லது)

Distinguish between
Cross Examination and Re-examination.

வேறுபடுத்திக் காட்டுக.
குறுக்கு விசாரணையும் மறு விசாரணையும்

(அல்லது)

Explain briefly the benefits of cross-examination. (குறுக்கு

விசாரணையின் நன்மைகளை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Cross examination - Write short notes. (குறுக்கு விசாரணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Re- Examination - Write short notes. (மறு விசாரணை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் **10வது அத்தியாயமாவது (Chapter X)** சாட்சிகளை விசாரித்தல் பற்றி (Examination of witnesses) **135**லிருந்து **166 வரையுள்ள பிரிவுகளின்** வழியாகக் கூறுகின்றது. அவற்றில் **137வது பிரிவு** முதல், குறுக்கு மற்றும் மறு விசாரணை (Chief, Cross and Re-examination) பற்றி வரையறுக்கிறது. விளக்கமாக வருமாறு.

சாட்சிகளை விசாரித்தல் (Examination of witnesses) - விளக்கம்:

சாட்சிய சட்டத்தில் சாட்சிகளை விசாரித்தல் என்பது முக்கிய அங்கம் வகிக்கிறது. சாட்சிகளிடம் கேள்விகள் கேட்டு அவர்களிடமிருந்து உரிய பதில்கள் பெறுவதே, சாட்சிகளை விசாரித்தல் எனப்படுகிறது. சாட்சிகள் மேடைப் பேச்சாளர்களைப் போல் சொற்பொழிவாற்ற அனுமதிக்கப்படுவதில்லை;[1] மாறாக கேட்ட கேள்விகளுக்கு தகுந்த அவையடக்கத்துடன் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள். அப்பதில்களும் வழக்குப் பொருண்மைகளுக்கு தொடர்புடையதாக (relevant facts) இருத்தல் வேண்டும். சரியான விதத்திலும் கவனமாகவும் சாட்சிகளை விசாரித்தால், அவர்களிடமிருந்து எளிதில் உண்மையை கரந்து விடலாம். மேலும் அவர்களது சாட்சியத்தை எந்த அளவிற்கு நம்பலாம் என்பதும் புலப்படும். இவ்வாறு சாட்சிகளை விசாரிக்கும் முறையை ஒழுங்குபடுத்தும் முகமாக, மூவகை விசாரணை நிலைகள் சாட்சியச் சட்டத்தால் கூறப்பட்டுள்ளன. அவை a) முதல் விசாரணை b) குறுக்கு விசாரணை c) மறு விசாரணை. இவற்றை சற்று விரிவாக அடுத்து வரும் பத்திகளில் காண்போம்.

a) முதல் விசாரணை [Examination - in - Chief]:

பிரிவு 137ன்படி, ஒரு சாட்சி அவரை அழைக்கும் தரப்பினரால் விசாரிக்கப்படும் போது, அது அவரது முதல் விசாரணை எனப்படும்.

எத்தரப்பினர் தங்களுக்கு ஆதரவாக ஒருவரை சாட்சி சொல்ல

1. தற்பொழுது பல திரைப்படங்களிலும் நீதிமன்றக் காட்சியின் பொழுது கதாநாயகன் சாட்சிக் கூண்டேறி உணர்ச்சி பொங்க வசனம் பேசுவதும், அதை நீதிபதி கதைபோல் கேட்பதும், சாட்சிய சட்டத்தின் நியதிகளுக்கு அப்பாற்பட்டது.

அழைக்கின்றாரோ, அத்தரப்பினரே அச்சாட்சியை முதலில் விசாரிக்க வேண்டும். இதுவே முதல் விசாரணை எனப்படுகிறது. வழக்கு குறித்து அச்சாட்சிக்கு தெரிந்த அனைத்து பிரதான பொருண்மைகளையும் அவரிடமிருந்து வெளிக் கொண்டு வருவதே, முதல் விசாரணையின் நோக்கமாகும். இவ்வாறு முதலில் விசாரிப்பது, ஒரு வழக்கில் வாதி - பிரதிவாதி ஆகிய இருவருக்கும் பொருந்தும். மேற்படி, முதல் விசாரணை மூலம் சாட்சிகளை விசாரிக்கும் பொழுதுதான், அவர்களை விசாரிக்கும் தரப்பினர் வழக்கில் தங்களுக்குச் சாதகமாக உள்ள பொருண்மைகளை நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்ட முடியும். ஆனால் வழக்கிற்கு தொடர்புடைய பொருண்மைகளைப் (relevant facts) பற்றிய கேள்விகள் மட்டுமே முதல் விசாரணையில் கேட்கப்பட வேண்டும். பொதுவாக, விடையமை வினாக்களை[1] (Leading questions) கேட்க அனுமதிக்கப் படுவதில்லை.

b) குறுக்கு விசாரணை (Cross Examination):

பிரிவு 137ன்படி, ஒரு சாட்சி எதிர்த் தரப்பினரால் விசாரிக்கப்படும் போது அது அவரது குறுக்கு விசாரணை, எனப்படும்.

முதல் விசாரணை முடிந்த பின், எதிர்த் தரப்பினருக்கு அச்சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்படும். எதிர்தரப்பினர் ஒரு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். அதாவது முதல் விசாரணை போன்று கட்டாயமாக இவ்விசாரணையை மேற்கொள்ள வேண்டியதில்லை. குறுக்கு விசாரணை செய்வதும் செய்யாமலிருப்பதும், முதல் விசாரணையில் சாட்சி கூறிய வாக்கு மூலங்களையும், வழக்கின் பொருண்மைகளையும் பொறுத்த எதிர்தரப்பினரின் விருப்பமாகும். குறுக்கு விசாரணை செய்தே தீர வேண்டும் என்ற சட்டப்படியான கட்டாயம் ஏதும் எதிர்தரப்பினருக்கு கிடையாது. குறுக்கு விசாரணையில் விடையமை வினாக்கள் கேட்கப் படலாம்.

குறுக்கு விசாரணையின் நோக்கம் (அல்லது) பலன்:

சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதன் மூலம் அவரது வாக்குமூலத்தில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதை அறியலாம். அதாவது முதல் விசாரணையில் கூறிய பதில்களுக்கு முரண்பட்ட வகையில், அவரிடமிருந்து பதில்களைப் பெற்று அச்சாட்சியின் வாக்குமூலத்தை நம்ப முடியாது என நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையே, குறுக்கு விசாரணை ஆகும். ஆனால் அவ்வாறு முரண்பட்ட பதில்களைப் பெறுமளவிற்கு சமயோசிதமாக கேள்விகளைக் கேட்க வேண்டும். இது வழக்குரைஞரின் திறமையைப் பொறுத்தது.

---

1. விடையமை வினாக்களின் விளக்கத்தை வினா எண் (77) ல் காண்க.

ஒரு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லையென்பதால், அவர் முதல் விசாரணையில் கூறிய வாக்குமூலத்தை நீதிமன்றம் அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எந்த கட்டாயமும் கிடையாது; முதல் விசாரணையில் கூறப்பட்ட பதில்களே ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாக நீதிமன்றத்திற்கு தோன்றினால், அச்சாட்சிகளை நீதிமன்றம் நம்பத் தேவையில்லை. இவ்வாறு **Juwar Singh v. State of M.P.**[1] வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், சாட்சி பேசுவது உண்மையா, பொய்யா என்பதை அளவிட்டுக் காட்டும் அளவுகோலாக குறுக்கு விசாரணை நிகழ்கிறது. முதல் விசாரணையிலேயே முன்னுக்குப் பின் முரணாக சாட்சி உளறிவிட்டால், குறுக்கு விசாரணை அவசியமில்லை. எனவே, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை யென்பதால், முதல் விசாரணையில் சாட்சி கூறியது அனைத்தும் உண்மையென நீதிமன்றம் அனுமானிக்க முடியாது.

குறுக்கு விசாரணையில் வழக்கறிஞரின் பங்கு:

குறுக்கு விசாரணை செய்தலென்பது ஒரு கலை. திறமையான குறுக்கு விசாரணையால் பல வழக்குகள் திசை மாறியதுண்டு. திறமையாக எவ்வாறு குறுக்கு விசாரணை செய்வது என்பதற்கு விதிகளை வகுக்க முடியாது. அது வழக்கறிஞரின் புத்தி சாதுர்யத்திலும், நீண்ட கால குறுக்கு விசாரணை அனுபவத்திலும் அடங்கியுள்ளது.

குறுக்கு விசாரணைக்கு மேற்கண்ட சிறப்பு இருப்பினும், அதில் அபாயங்களும் இல்லாமலில்லை. ஏனெனில் குறுக்கு விசாரணையென்பது இருபக்கமும் கூர்முனை கொண்டதொரு ஆயுதமாகும். (Double edged weapon). அதை தக்கமுறையில் பயன்படுத்தி எதிரியை வீழ்த்துவதற்கு திறமையும், அனுபவமும், தக்க பயிற்சியும் வேண்டும். தவறினால் ஆயுதத்தை எடுத்தவனையே அது குத்திவிடும். திறமையற்ற வழக்கறிஞர்கள் பலரும், குறுக்கு விசாரணை செய்வதை தங்களது பிறப்புரிமையாகக் கருதி, தேவையற்ற கேள்விகள் பலவற்றை கேட்கும் பொழுது சாட்சிகள் கூறும் பதில்களால் வழக்கின் போக்கு குழம்பும். இது குறுக்கு விசாரணை செய்யும் தரப்பினரின் வழக்கிற்கே உலை வைக்கக்கூடும். எனவே, குறுக்கு விசாரணையில் இக்கேள்வி கேட்டால் சாட்சியால் நிச்சயம் பதிலளிக்க முடியாது அல்லது முரணாக பதிலளிப்பான் என்பதற்கு வலுவான அடிப்படை இருந்தாலொழிய, தீவிரமான குறுக்கு விசாரணை மேற்கொள்வதை தவிர்த்தல் நலம்.

3. மறு விசாரணை (Re-Examination):

பிரிவு 137ன்படி, ஒரு சாட்சி குறுக்கு விசாரணைக்குப் பின்பு அவரை

1. A.I.R. 1981 S.C. 373

அழைத்த தரப்பினரால் விசாரிக்கப்படும் போது, அது அவரது மறு விசாரணை எனப்படும்.

எத்தரப்பினர் சாட்சியைத் தங்களுக்கு ஆதரவாக அழைத்து வந்து முதல் விசாரணை செய்தனரோ, அத்தரப்பினரே மீண்டும் (எதிர் தரப்பினரால் குறுக்கு விசாரணை முடிந்த பின்னர்) அச்சாட்சியை செய்யும் விசாரணையே, மறு விசாரணை எனப்படும். சுருங்கக்கூறின் முதல் விசாரணை செய்தவரே, மீண்டும் அச்சாட்சியை விசாரித்தால் மறு விசாரணையாகும். இவ்விசாரணைகளையும் கட்டாயமாக செய்ய வேண்டுமென்பதில்லை. இது தரப்பினரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

சாட்சி குறுக்கு விசாரணையின் போது தங்களுக்குப் பாதகமாகவோ அல்லது தெளிவில்லாமலோ கூறிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தவே, தரப்பினர் இவ்விசாரணையை மேற்கொள்வர். ஆனால் அதே சமயத்தில் புதிய பொருண்மைகளைப் பற்றி, அதாவது முதல் விசாரணையில் கேட்கப்படாத பொருண்மைகளைப் பற்றி, இவ்விசாரணையில் எதுவும் கேட்கக் கூடாது. ஆனால், நீதிமன்றம் அனுமதித்தால் புதிய பொருண்மைகள் பற்றியும் கேட்கலாம். அவ்வாறு புதிய பொருண்மை களைப் பற்றி கேட்கும் பொழுது, அவற்றைப் பொறுத்து, எதிர்தரப்பினர் அச்சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய சட்டம் அவர்களை அனுமதிக்கிறது. **[பிரிவு 138 பத்தி 3].**

விசாரணைகளின் வரிசைமுறை (Order of Examination):

இது பற்றி 138வது பிரிவின் முதல் பத்தி கூறுகின்றது. அதன்படி, முதலில் சாட்சிகள் முதல் விசாரணையும், பின்பு (எதிர்தரப்பினர் அவ்வாறு விரும்புவாரானால்) குறுக்கு விசாரணையும், அதற்குப் பின்பு (அவரை அழைக்கின்ற தரப்பினர் அவ்வாறு விரும்புவாரானால்) மறு விசாரணையும் செய்யப்படுதல் வேண்டும்.

எப்பொருண்மைகள் குறித்து விசாரணை:

138வது பிரிவின் இரண்டாவது பத்திபடி, முதல் விசாரணையும் குறுக்கு விசாரணையும் தொடர்புடைய பொருண்மைகள் (relevant facts) சம்பந்தப்பட்டனவாக இருத்தல் வேண்டும். ஆனால், முதல் விசாரணையில் சாட்சி வாக்குமூலம் கொடுத்த பொருண்மைகள் தொடர்புடையதாக மட்டுமே, குறுக்கு விசாரணை அமைந்திருக்க வேண்டுமென்பதில்லை. முதல் விசாரணையில் கேட்கப்படாத, வேறு தொடர்புடைய பொருண்மைகள் பற்றியும் குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப் படலாம்.

வேறுபாடுகள்:

குறுக்கு விசாரணை (Cross Examination)	மறு விசாரணை (Re-Examination)
1. ஒரு சாட்சி எதிர்த்தரப்பினரால் விசாரிக்கப்படும் பொழுது, அது அவரது குறுக்கு விசாரணை எனப்படும்.	ஒரு சாட்சி குறுக்கு விசாரணைக்குப் பின்பு அவரை அழைத்த தரப்பினரால் விசாரிக்கப் படும் பொழுது, அது அவரது மறு விசாரணை எனப்படும்.
2. முதல் விசாரணையின் பொழுது சாட்சி கூறியதை முரண் படுத்தவும், அவரது வாக்கு மூலத்தில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது என்பதை நீதிமன்றத்திற்கு சுட்டிக் காட்டவுமே குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.	குறுக்கு விசாரணையின் பொழுது சாட்சி தெளிவில்லாமல் எதை யேனும் கூறியிருந்தால், அதை தெளிவுபடுத்தும் பொருட்டு மறு விசாரணை மேற்கொள்ளப் படுகிறது.
3. விடையமை வினாக்கள் கேட்கப்படலாம்.	இதில், பொதுவாக விடையமை வினாக்கள் கேட்கப்படக் கூடாது.

விடையமை வினாக்கள் (அல்லது) விடை பொதி வினாக்கள்

77. What are leading questions? State when such questions may or may not be put to witness. (விடையமை வினாக்கள் என்றால் என்ன? ஒரு சாட்சியிடத்தில் எப்பொழுது இத்தகைய வினாக்கள் போட இயலும், போட இயலாது என்பதை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

When may leading questions be put in (a) Examination-in-Chief (b) Re-Examination. [(அ) முதல் விசாரணையின் போதும், (ஆ) மறு விசாரணையின் போதும், எப்போது விடை பொதி வினாக்கள் கேட்கப்படலாம்?]

(அல்லது)

Leading question (விடைபொதி வினா) - Write short notes.

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 141 முதல் 143 வரை உள்ள பிரிவுகள் விடையமை வினாக்களைப் பற்றிக் கூறுகின்றன. விரிவாக வருமாறு.

விடையமை வினாக்கள் (Leading Questions) - பிரிவு 141:

கேள்வி கேட்பவர் என்ன பதிலை எதிர்பார்த்து கேள்வி கேட்கின்றாரோ, அதற்குத் தக்கவாறு கேட்கப்போகும் கேள்வியிலேயே பதிலையும் புகுத்திக் கேட்பதுதான் **'விடையமை வினா'** எனப்படுகிறது. அதாவது விடையை வினாவிலேயே அமைத்து வினவுதல் எனக்கூறலாம்.

இதைத்தான் **பிரிவு 141** சட்ட மொழியில் பின்வருமாறு வரையறுக்கிறது. அதன்படி, "வினவுகிற ஒருவர் தாம் பெற விரும்புகிற அல்லது எதிர்பார்க்கிற விடையை குறிப்பால் உணர்த்தும் எந்த வினாவும் விடையமை வினா எனப்படும்."

உதாரணமாக, ஒரு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு நிற்பவர் மற்றொருவரைக் குத்திக் கொலை செய்து விட்டார் என்பது வழக்கு. இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர் சாட்சியாக விசாரிக்கப் படுகிறார். அவரிடம் விரும்பும் விடையை பெறும் பொருட்டு பின்வருமாறு கேள்விகள் கேட்க்கப்படுகின்றன.

கேள்வி : குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவரைக் கத்தியால் குத்தினார் அல்லவா?
பதில் : ஆம்.
கேள்வி : பிறகு அவர் ஓடிவிட்டார் அல்லவா?
பதில் : ஆம்.

இவ்வாறு சாட்சி இதைத்தான் பதிலாகக் கூற வேண்டும் என்று தூண்டுவது போல் வினாவிலேயே விடை அமைத்துக் கேட்கப்படுவதே விடையமை வினாக்கள் எனப்படுகின்றன. விடைபொதித்து வினா கேட்க்கப்படுவதால் இதனை **'விடை பொதி வினா'** என்றும் அழைக்கலாம்.

இப்படிப்பட்ட விடையமை வினாக்களை எல்லாவிதமான விசாரணையிலும் கேட்க முடியாது. ஏனெனில் விரும்பும் விடைகளைப் பெற்று விட்டால், வழக்கின் உண்மை நிலையை எப்படிக் கண்டறிவது? சாட்சியின் வாக்குமூலத்தை எப்படி மதிப்பிடுவது? எனவே விடையமை வினாக்களை எப்பொழுது கேட்கக்கூடாது அல்லது கேட்கலாம் என்பதற்குண்டான வழிவகைகளை பிரிவுகள் 142 மற்றும் 143 முறையே கூறுகின்றது. அவை குறித்து பின்வருமாறு காண்போம்.

விடையமை வினாக்களை எப்பொழுது கேட்கக்கூடாது? - பிரிவு 142:

பிரிவு 142ன்படி, எதிர்த்தரப்பினரால் ஆட்சேபணை தெரிவிக்கப் படும் பொழுது, முதல் விசாரணையிலும் (Examination - in - cheif), மறு விசாரணையிலும் (Re- Examination) நீதிமன்ற அனுமதி பெறாமல், விடையமை வினாக்களை கேட்க்கக்கூடாது.

இதற்கு முன் சென்ற பத்தியில் கூறியதே காரணம். அதாவது சாட்சி அவரை அழைத்து வந்தவருக்கே சாதகமாக இருப்பார் என்பது பொதுவான அனுமானமாகும். மேலும் விடையமை வினாக்களை கேட்கும் பொழுது, சாட்சி எளிதாக 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதிலைக் கூறுவார். எனவே வழக்கின் உண்மை நிலையை நீதிமன்றம் சரியாக கணிக்க இயலாது என்பதாலும், சாட்சிகளின் துணை கொண்டே ஒரு வழக்கின் பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்பதாலும், இவ்வகை வினாக்களை முதல் விசாரணையிலும் மறு விசாரணையிலும் சாட்சியிடம் கேட்பதற்கு நீதிமன்றம் அனுமதிப்பதில்லை.

ஆனால் முதல் விசாரணையில் சில பொருண்மைகளை அறிமுகப் படுத்தவோ (introductory) அல்லது ஆட்சேபிக்கப்படாத (Undisputed) அல்லது போதிய அளவில் மெய்ப்பிக்கப்பட்ட (Sufficiently proved) விஷயங்கள் குறித்தோ விடையமை வினாக்கள் கேட்கப்படலாம். இதனை நீதிமன்றம் அனுமதிக்கும்.

விடையமை வினாக்கள் எப்பொழுது கேட்கப்படலாம்? - பிரிவு 143:

பிரிவு 143ன்படி, விடையமை வினாக்கள் குறுக்கு விசாரணையில் கேட்கப்படலாம்.

குறுக்கு விசாரணையில் மட்டும் விடையமை வினாக்களை கேட்பதற்கு சாட்சிய சட்டம் ஏன் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் அனுமதித்துள்ளது என்ற வினா இங்கு எழுந்தால் அதில் வியப்பேதுமில்லை. அதாவது குறுக்கு விசாரணை என்பதே, முதல் விசாரணையின்போது சாட்சியால் மறைக்கப்பட்டிருக்கக்கூடிய பொருண்மைகளை வெளிக் கொண்டு வருவதேயாகும். சாட்சி நம்பத்தகாதவர் என்றும், அவர் கூறும் சாட்சியம் நம்பத்தகாதது என்றும் நீதிமன்றம் ஏற்கும் வண்ணம் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் மூலம் மெய்ப்பிக்கலாம். இதன் மூலம்தான் வழக்கின் உண்மையை வெளிக் கொண்டுவர முடியும். எனவேதான் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்போது விடையமை வினாக்களை கேட்கலாம் என்ற உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

முந்திய உரைகளைப் பற்றி குறுக்கு விசாரணை செய்தல்

78. State the rules regarding cross-examination of a witness with reference to his previous statements. (சாட்சி ஒருவரின் முந்திய உரைகளைப் பற்றிய குறுக்கு விசாரணைக்கான விதிகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Can witness be cross-examined as to his previous statement in writing? If so, discuss. (ஒரு சாட்சி அவருடைய முந்தய எழுத்து மூலமான

உரைகளைப்பற்றி குறுக்கு விசாரணை செய்யப்பட முடியுமா? ஆமெனில், விவாதிக்க.)

சாட்சிய சட்டத்தின் **145வது பிரிவு** மேற்படி வினாவிற்குண்டான விடையைப் பகர்கின்றது. பொதுவாக சாட்சி ஒருவரால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்களைப் பற்றியும் அதன் உள்ளடக்கங்களைப் பற்றியும் அவரிடம் கேள்விகள் கேட்கப்படுவதற்கு முன்னர், அந்த ஆவணங்களை அவரிடம் காண்பிக்க வேண்டும். ஆனால் பிரிவு 145ன்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்பொழுது, அவரால் அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்ட முந்தய உரைகள் அடங்கிய ஆவணங்களை அவரிடம் காண்பிக்க வேண்டியதில்லை. ஆனால் அந்த எழுத்தைக் கொண்டு அவரை முரண்படுத்தக் கருதினால் (Contradict), அவ்வெழுத்துகள் அடங்கிய பகுதி அவரிடம் காண்பிக்கப்படுதல் வேண்டும். அதாவது அப்பகுதிக்கு அவரது கவனம் ஈர்க்கப்படுதல் வேண்டும். இப்பிரிவின் முக்கிய நோக்கம் யாதெனில், சாட்சியின் நினைவாற்றலை சோதித்தல் மற்றும் அவரது முந்திய எழுத்துவடிவிலான உரைகளை முரண்படுத்துதல் ஆகும். எழுதியது உண்மையாக இருந்தால், செய்வதும் அதைப்போலவே வெளிவரும்; பொய்யாக இருப்பின், குறுக்கு விசாரணையில் வெட்ட வெளிச்சமாகி விடும் என்பதே மேற்படி பிரிவின் அடிப்படை அம்சமாகும்.

குறுக்கு விசாரணையில் எத்தகு கேள்விகள் கேட்கப்படலாம்?

79. What questions can be put in cross-examination? When can a witness be compelled to give answer? (குறுக்கு விசாரணையில் எத்தகு கேள்விகள் கேட்கப்படலாம்? பதிலளிக்கும்படி எப்பொழுது ஒரு சாட்சியைக் கட்டாயப்படுத்தலாம்?)

முன்னுரை:

சாட்சிய சட்டத்தின்படி, ஒரு குறுக்கு விசாரணையில் சாட்சியிடம் பின்வருபவைபற்றி கேள்விகளை கேட்கலாம். இதை விடையமை வினாக்களாகவும் கேட்கலாம்.

1) தொடர்புடைய பொருண்மைகள் பற்றி;
2) அவரால் எழுதப்பட்ட முந்தய உரைகளைப் பற்றி;
3) அவருடைய நாணயத்தை பாதிக்கும் பொருண்மைகளைப் பற்றி.

ஆனால் இவைத் தவிர பின்வருபவை பற்றியும் கேள்விகள் கேட்கப்படலாம் **என பிரிவு 146 கூறுகிறது. 147 மற்றும் 148வது பிரிவுகள்** சாட்சியை பதிலளிக்கும்படி கட்டாயப்படுத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது. விரிவாக வருமாறு.

குறுக்கு விசாரணையில் கேட்கப்படக்கூடிய கேள்விகள் - பிரிவு 146:

மேற்கண்ட கேள்விகளைத் தவிர பின்வருவனவற்றிற்காக குறுக்கு விசாரணையில் சாட்சியிடம் கேள்விகள் கேட்கப்படலாம். அவை,

1) அவரது வாய்மையை சோதிக்கவோ;
2) அவர் யார் என்பதையும், வாழ்க்கையில் அவரது நிலை என்ன என்பதையும் கண்டுபிடிக்கவோ; அல்லது
3) அவருடைய குண இயல்புகள் (Character) கேடானவை என்று காட்டி அவருடைய நாணயத்தைக் குலைக்கவோ முனையும் கேள்விகளை குறுக்கு விசாரணையில் கேட்கலாம்.

பதிலளிக்குமாறு சாட்சி எப்பொழுது கட்டாயப்படுத்தப்படலாம்?

பிரிவு 147ன்படி, "மேற்படி கேள்வி எதுவும் உரிமையியல் வழக்கு அல்லது நடவடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்திற்குத் தொடர்புடையதாக இருக்குமானால், 132வது பிரிவின் வகைமுறைகள் அவற்றின் மீது இயங்குதல் வேண்டும்."

பிரிவு 132 என்ன கூறுகிறதென்றால், ஒரு உரிமையியல் வழக்கிலோ அல்லது குற்றவியல் வழக்கிலோ வழக்கெழு பிரச்சனைக்கு தொடர்புடையதாக உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி சாட்சியைக் கட்டாயப்படுத்தலாம். எனவே பிரிவு 132ல் கூறப்பட்டுள்ளவாறு பிரிவு 142ன்கீழ் சாட்சிகளை பதிலளிக்குமாறு கட்டாயப்படுத்தலாம்.

ஆனால் எப்பொழுது ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டுமென்பதையும், அதற்கு சாட்சி எப்பொழுது பதிலளிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென்பதையும் தீர்மானிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திடம் உள்ளது என பிரிவு 148 கூறுகிறது. [இது குறித்து அடுத்த வினாவில் விரிவாகக் காண்க.]

முறையற்ற குறுக்கு விசாரணை

80. Discuss the relevant provisions of the Indian Evidence Act which are intended to protect a witness against improper cross-examination. (முறையற்ற குறுக்கு விசாரணைக்கு எதிராக சாட்சியைப் பாதுகாக்க சாட்சிய சட்டத்தின் தொடர்புடைய சட்டப் பிரிவுகளை விவாதிக்க.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 148 முதல் 152 வரையிலான பிரிவுகள், குறுக்கு விசாரணையில் சாட்சியிடம் முறையற்ற வினாக்கள் கேட்கப் படுவதிலிருந்து அவரைப் பாதுகாக்கின்றது. ஒவ்வொரு சட்டப்பிரிவும் பின்வருமாறு.

பிரிவு 148 கூறுவதாவது:

குறுக்கு விசாரணையில் சாட்சியிடம் முறையற்ற கேள்விகளைக் கேட்கும் பொழுது, நீதிமன்றம் அக்கேள்விகளைத் தடுத்து விடும். ஏனெனில் குறுக்கு விசாரணையில் சாட்சியின் நம்பகத்தன்மையைத்தான் சோதிக்க வேண்டுமேயல்லாமல், அவரிடம் வழக்கிற்குத் தேவையற்ற கேள்விகளைக் கேட்கக் கூடாது. வழக்கிற்குத் தொடர்பில்லாத கேள்விகளைக் கேட்கும் பொழுது, அக்கேள்விகளுக்குச் சாட்சியைப் பதிலளிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது.

பின்வரும் கருத்துக்களை கவனத்தில் கொண்டே நீதிமன்றம் குறுக்கு விசாரணையில் வினாக்களை அனுமதிக்கும்:

1) குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள், சாட்சி வாக்குமூலம் கொடுக்கும் விஷயத்தில் அவரது நம்பகத் தன்மையை அசைக்குமளவிற்கு இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட கேள்விகள் முறையானதாகும்.

2) கேள்விகள் சாட்சி வாக்குமூலம் கொடுக்கும் விஷயத்தில் அவரது நம்பகத் தன்மையை அசைக்காத அளவிற்கு காலத்தால் மிகப் பழமையான சம்பவங்களைப் பற்றியதாக இருத்தல் கூடாது. அது முறையற்ற கேள்வியாகும்.

3) சாட்சியின் நம்பகத் தன்மைமையின் முக்கியத்துவத்திற்கும், அவரது சாட்சியத்தின் முக்கியத்துவத்திற்குமிடையே பெருமளவில் முரண்பாடு இருக்குமளவிற்கு கேள்விகள் கேட்கப்படக்கூடாது. இது ஒரு முறையற்ற கேள்வியாகும்.

4) சாட்சி பதில் சொல்ல மறுப்பதிலிருந்து, அவர் அதற்கு பதில் அளித்திருந்தால், அது அவருக்கு பாதகமாக அமையும் என நீதிமன்றம் ஊகிக்கலாம்.

பிரிவு 149 கூறுவதாவது:

மேற்படி 148வது பிரிவில் குறிப்பிடப்பட்டபடியான கேள்வி எதற்கும், நியாயமான காரணங்கள் இருப்பதாக, அக்கேள்வி கேட்கின்றவர் நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்ட வேண்டும் என்றும், இல்லையென்றால் அக்கேள்விகள் அனுமதிக்கப்படாது என்றும் **பிரிவு 149** கூறுகிறது. அதாவது கேட்கும் கேள்விக்கு தக்க ஆதாரம் இருக்க வேண்டும்.

பிரிவு 150 கூறுவதாவது:

மேற்படி கேள்விகள் நியாயமான ஆதாரங்கள் இல்லாமல் கேட்கப்பட்டது என்று ஒரு நீதிமன்றம் கருதுமானால், அக்கேள்வியை கேட்ட வழக்கறிஞர் எந்த உயர் நீதிமன்றத்தின் கீழ் தொழிலாற்றி

வருகின்றாரோ, அந்த உயர் நீதிமன்றத்திற்கு வழக்கின் சூழ்நிலை குறித்து அந்நீதிமன்றம் அறிக்கை அனுப்பலாம்.

பிரிவு 151 கூறுவதாவது:

கேவலமானதாகவும், பழிச்சாட்டுவதாகவும் உள்ள (Scandalous questions) கேள்விகளை நீதிமன்றம் தடைசெய்யலாம். [விரிவாக அடுத்த வினாவில் காண்க.]

பிரிவு 152 கூறுவதாவது:

நிந்திக்கக் கருதி (insult) அல்லது தொந்தரவு (annoy) கொடுக்கக் கருதி கேட்கப்படுவதாகத் தோன்றும் கேள்வி எதையும் நீதிமன்றம் தடை செய்யலாம்.

பழிதூற்றும் கேள்வி

81. Scandalous question - Write short notes. (பழிதூற்றும் கேள்வி - சிறு குறிப்பு வரைக.)

இது குறித்து பிரிவு 151 பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, நீதிமன்றம், கேவலமானவையென்றோ (Indecent) அல்லது பழித்தூற்றுவன வென்றோ (Scandalous) தான் கருதும் கேள்விகள் அல்லது விசாரணைகள் (inquiries) அனைத்தையும் தடை செய்யலாம்.

இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்படுவதனால், அது வழக்குப் பிரச்சனையை சற்று தெளிவுபடுத்தக்கூடும் என்ற நிலை இருந்தாலும் கூட அக்கேள்விகள் கேட்கப்படுவதை நீதிமன்றம் அனுமதிப்பதில்லை.

ஆனால், அவை தீர்வுதரு பொருண்மைகளுக்குச் சம்பந்தமுடையவை யாகவோ அல்லது தீர்வுதரு பொருண்மைகள் இருந்தனவா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு தேவையாக இருக்கும் பொழுதோ, கேட்கப்படலாம். இதை நீதிமன்றம் அனுமதிக்கும்.

82. Exclusion of Evidence to contradict answers to questions testing veracity - Write short notes. (வாய்மையை சோதிக்கின்ற கேள்வி களுக்கான பதில்களை முரண்படுத்தும் சாட்சியம் ஒதுக்கப்படுதல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் 153வது பிரிவானது, சாட்சியின் வாய்மையைச் சோதிப்பதற்காக அவருடைய நாணயத்தைப் பாதிக்கும் கேள்விகள் கேட்டு அதற்கு அவர் பதில் சொல்லும்பொழுது, அவருடைய பதிலை முரண்படுத்துவதற்காக சாட்சியம் தருதல் கூடாது; ஆனால் அவர்

பொய் சாட்சியம் கொடுத்ததற்குப் பின்னர் அவர் மீது வழக்குத் தொடரலாம், என்று கூறுகிறது.

சட்டப்பிரிவு 153 கூறும் விதி:

சாட்சியின் குண இயல்பு கேடானதென்று காட்டி, அதன்மூலம் அவரது நாணயத்தைப் பாதிக்க முனையும் அளவுக்கு மட்டுமே பரிசீலனைக்குத் தொடர்புற்றதாகவுள்ள கேள்வி ஏதேனும் அவரிடம் கேட்கப்பட்டிருந்து, அவர் அதற்கு பதில் சொல்லியிருந்தபோது, அவரது பதிலை முரண்படுத்துவதற்கு சாட்சியம் எதுவும் கொடுக்கப்படுதல் ஆகாது; ஆனால் அவர் பொய்யாகப் பதில் சொல்வாரானால், பொய் சாட்சியம் கொடுத்ததாக அதற்குப் பின்பு அவர் மீது குற்ற வழக்குத் தொடரலாம்.

மேற்படி விதிக்கு விதிவிலக்குகள்:

1. எந்தக் குற்றத்திற்காகவேனும் முன்னமேயே தண்டிக்கப் பட்டிருக்கின்றாரா, என்று சாட்சி ஒருவரிடம் கேட்கப்பட்டு, அவர் அதை மறுதலிப்பாரானால், அவரது முந்தைய தண்டனையைப் பற்றி சாட்சியம் கொடுக்கப்படலாம்.

2. சாட்சி ஒருவரின் நடுவு நிலைமையை தாக்க முனையும் கேள்வி ஏதேனும் அவரிடம் கேட்கப்பட்டு குறிப்பாகச் சொல்லப்பட்ட அந்த பொருண்மைகளை மறுதலித்து அவர் அதற்கு பதில் அளிப்பாரானால், அவரை முரண்படுத்தலாம்.

எடுத்துக்காட்டுகள்:

(அ) நிறுவனப் பங்குகளை வாங்க உத்தரவாதம் அளிப்பவர் (Underwriter) ஒருவருக்கெதிரான ஒரு கோரிக்கை, மோசடியானது என்னும் காரணத்தின்பேரில் எதிர்க்கப்படுகிறது.

முந்தைய ஒரு நடவடிக்கையில், மோசடியான கோரிக்கை ஒன்றை அவர் செய்தாரா என்று கோரிக்கையாளர் கேட்கப்படுகிறார். அதை அவர் மறுதலிக்கிறார். அத்தகைய ஒரு கோரிக்கையை அவர் செய்யத்தான் செய்தார் என்பதைக் காட்ட சாட்சியம் அளிக்கப்படுகிறது. இந்தச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதன்று.

(ஆ) நேர்மையின்மைக்காக (மோசடி) ஒரு பதவியிலிருந்து சாட்சியொருவர் நீக்கப்பட்டாரா என்று அவர் கேட்கப்படுகிறார். அதை அவர் மறுதலிக்கிறார். நேர்மையின்மைக்காக அவர் நீக்கப்பட்டார் என்பதைக் காட்ட சாட்சியம் அளிக்கப்படுகிறது. இந்தச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதன்று.

(இ) ஒரு குறிப்பிட்ட நாளன்று 'ஆ' என்பவரை லாகூரில் தாம் பார்த்ததாக 'அ' கேட்கப்படுகிறார். அதை அவர் மறுதலிக்கிறார். அந்த

நாளில் 'அ' கல்கத்தாவில் இருந்தார் என்று காட்ட சாட்சியம் அளிக்கப்படுகிறது. இந்தச் சாட்சியமானது, அவரது நாணயத்தைப் பாதிக்கும் ஒரு பொருண்மையின் பேரில் 'அ'வை முரண்படுத்துவது என்ற வகையில் அல்லாமல், ஆனால் குறிக்கப்பட்ட நாளில் 'அ' லாகூரில் காணப்பட்டார் என்று சொல்லப்படும் பொருண்மையை முரண் படுத்துவது என்னும் வகையில் அனுமதிக்கத்தக்கதாகும். இந்தச் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் சாட்சியின் மறுதலிப்பு பொய்யானதாக இருந்தால், பொய்ச் சாட்சியம் கொடுத்ததாக அவர் குற்றஞ் சாட்டப் பட்டிருக்கலாம்.

(ஈ) 'அ' என்பவருக்கெதிராகச் சாட்சியம் கொடுக்கும் 'ஆ' என்பவரிடம், 'அ'வின் குடும்பத்துக்கும் 'ஆ'வின் குடும்பத்துக்கும் இடையே பரம்பரைப் பகைமை இருந்ததில்லையா என்று கேட்கப்படுகிறது. அவர் அதை மறுதலிக்கிறார். அக்கேள்வி அவரது நடுவு நிலைமையைத் தாக்க முனைகிறது என்னும் காரணத்தின் பேரில் அவரை முரண்படுத்தலாம்.

பிறழ் சாட்சி

83. Hostile witness - Write short notes. (பிறழ் சாட்சி - சிறு குறிப்பு வரைக.)

'பிறழ் சாட்சி' என்பதற்கு நேரடியான வரையறையை சாட்சிய சட்டம் தரவில்லை. ஆனால் பிரிவு 154 மறைமுகமாக கூறுகிறது.

தம்மை சாட்சி கூற நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த தரப்பினருக்கு எதிராக நீதிமன்ற விசாரணையின் போது சாட்சியமளிக்கும் சாட்சியே, பிறழ் சாட்சி எனப்படுவர். அதாவது எத்தரப்பினர் தம்மை சாட்சியாக அழைத்து வந்தனரோ அவருக்கே விரோதமாக முறை பிறழ்ந்து சாட்சியமளிக்கப்படும் சாட்சி, பிறழ் சாட்சியாகும். எனவே பிறழ் சாட்சி கூறும் சாட்சியத்தை உடைக்க, எத்தரப்பினர் அவரை அழைத்து வந்தனரோ, அத்தரப்பினரே அச்சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். இதை நீதிமன்ற அனுமதியுடன்தான் செய்ய முடியும்.

இதைத்தான் பிரிவு 154 ஒரு சாட்சி கூறும் சாட்சியம் அவரை அழைத்து வந்த தரப்பினருக்கு எதிராக இருக்குமேயானால், அவரை, அழைத்த அத்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கலாம், என்று கூறுகிறது.

Sat Paul v. Delhi Administration[1] என்ற வழக்கில் ஒரு அலுவலரை இலஞ்சம் வாங்கும் குற்றத்திற்காக கையும் களவுமாக பிடிக்க பொறி வைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து இலஞ்சம் வாங்கியவுடன்,

1. A.I.R. 1976 S.C. 303

அவரை இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர். இதற்கு இருவர் சாட்சிகளாக அரசு தரப்பினரால் அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் அரசு தரப்பினருக்கு ஆதரவாக சாட்சியமளிப்பதற்கு பதிலாக, இலஞ்சக் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருக்கு ஆதரவாக சாட்சியமளித்தனர். எனவே நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பினரே முறைபிறழ்ந்த தங்களது சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தனர்.

ஒரு சாட்சியை பிறழ் சாட்சி என அறிவித்து, அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிப்பதற்கு முன், அச்சாட்சியின் நடை, உடை, பாவனை, பதிலளிக்கும் விதம், அவரது முந்தய முரண்பாடான வாக்குமூலங்கள் அல்லது அவரிடமிருந்து உண்மையை வரவழைக்க அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது நீதியின் பார்வையில் அவசியம் என்ற சூழ்நிலை ஆகியவற்றை நீதிபதி தம் கருத்தில் கொள்ள வேண்டுமென மேற்கண்ட வழக்கில் நீதிபதி சர்காரியா கூறியுள்ளார்.

சாட்சியின் நாணயத்தை தாக்குதல்

84. Impeaching the credit of a witness - Write short notes. (சாட்சியின் நாணயத்தை இழிந்துரைத்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are the ways in which the credit of a witness may be impeached? (ஒரு சாட்சியின் நாணயம் எந்த வழிகளில் தாக்கப்படலாம்?)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் **155வது பிரிவின்படி** சாட்சியொருவரின் நாணயம் பின்வரும் வழிகளில், எதிர்த்தரப்பினராலோ அல்லது நீதிமன்ற அனுமதியுடன் அவரை அழைத்து வந்த தரப்பினராலோ தாக்கப்படலாம்:

1. அச்சாட்சி நாணயமற்றவர் என வேறொரு சாட்சி அளிக்கும் சாட்சியத்தின் மூலமாக;
2. சாட்சிக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது அல்லது தம் சாட்சியத்தைக் கொடுக்க வேறெந்த ஊழல் வழியிலேனும் அவர் தூண்டப்பட்டிருக்கின்றார் என்பதை நிரூபிப்பதன் மூலமாக;
3. சாட்சியின் சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்று நிரூபிப்பதன் மூலமாக;
4. வன்புணர்ச்சிக்காகவோ அல்லது கற்பழிக்க முயன்றதற்காகவோ ஒருவர் மீது குற்ற வழக்குத் தொடரப்படும்போது, குற்றவழக்குத் தொடுக்கும் பெண் பொதுவாகவே ஒழுக்கங்கெட்டவர் என்று காட்டப்படலாம்.

விளக்கம்: வேறொரு சாட்சியை நாணயமற்றவர் என்று

விளம்புகின்ற ஒரு சாட்சி, முதல் விசாரணையில், தாம் அவ்வாறு நம்புவதற்கான காரணங்களைக் கொடுக்காமலிருக்கலாம்; ஆனால் குறுக்கு விசாரணையில் தமது காரணங்களைக் கூறுமாறு அவர் கேட்கப்படலாம்; மற்றும் அவர் கொடுக்கின்ற பதில்கள், பொய்யானவையாயிருந்தால், பொய்யான சாட்சியம் கொடுத்ததற்காக அதற்குப் பின்பு அவர் மீது குற்றஞ்சாட்டப்படலாமென்ற போதிலும், அந்தப் பதில்கள் முரண்படுத்தப்படுதல் ஆகாது.

எடுத்துக்காட்டுகள் 1. A என்பவருக்கு விற்பனை செய்து ஒப்படைக்கப்பட்ட சரக்குகளின் விலைக்காக A யின் மீது B என்பவர் வழக்கிடும் பொழுது A என்பவரிடம் சரக்குகளை ஒப்படைத்தாக C கூறுகின்றார். முந்தய ஒரு சந்தர்ப்பத்தில் C என்பவர் தாம் Aயிடம் அச்சரக்குகளை ஒப்படைக்கவில்லையென்று கூறினார் என்பதைக் காட்ட சாட்சியம் அளிக்கப்படுகிறது. இந்தச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதாகும்.

2. B என்பவரின் கொலைக்காக Aமீது குற்றஞ்சாட்டப்படுகிறது. இறக்கும்போது, எந்தக் காயத்தால் தாம் இறந்தாரோ அந்தக் காயம் Aயினால் தமக்கு ஏற்பட்டது என்று B இறக்குத்தருவாயில் விளம்பியதாக C கூறுகிறார்.

முந்தய ஒரு சந்தர்ப்பத்தில் அந்தக் காயம் Aயினால் ஏற்பட்டதென்றோ அல்லது அவர் முன்னிலையால் ஏற்பட்டதென்றோ கிடையாதென C கூறினார் என்பதைக் காட்ட சாட்சியம் அளிக்கப்படுகிறது. இந்தச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதாகும்.

மேற்கண்ட இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் சாட்சியின் நாணயம் பிறிதொரு சாட்சியாலும், முந்தய உரைகளின் முரண்பாடான தன்மையாலும் தாக்கப்படுகிறது.

நினைவைப் புதுப்பித்தல்

85. Refreshing memory - Write short notes. (நினைவாற்றலை புதுப்பித்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

State the rules regarding refreshing memory (நினைவைப் புதுப்பித்துக் கொள்ளுதல் குறித்த விதிகளைக் குறிப்பிடுக.)

முன்னுரை:

மனிதனின் மூளை ஒரு கணிப்பொறி அல்ல. அனைத்து விஷயங்களையும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. சாதாரணமாக ஒரு சாட்சி தனது நினைவில் என்ன உள்ளதோ, அதிலிருந்து சாட்சியமளிக்கின்றான். ஆனால் மனிதனுக்கு மறதி ஏற்படுவது சகஜம். எனவே சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஒரு முறை பார்த்து, அது

குறித்து அவன் தனது நினைவைப் புதுப்பித்துப் கொண்டு சாட்சியமளிக்க சட்டம் வகை செய்கிறது. இதுவே **'நினைவைப் புதுப்பித்தல்'** எனப்படுகிறது. சாட்சிய சட்டத்தின் **159 வது பிரிவு** சில விதிகளைக் குறிப்பிடுகின்றது. அவை வருமாறு.

நினைவைப் புதுப்பித்துக் கொள்ளுதல் தொடர்பான விதிகள்:

சாட்சிய சட்டத்தின் 159வது பிரிவு 'நினைவைப் புதுப்பித்துக் கொள்ளுதல்' தொடர்பாக சில விதிகளைக் கூறுகின்றது. அதன்படி ஒரு சாட்சி பின்வரும் நான்கு வழிகளில் தனது நினைவைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

1) சாட்சியே எழுதிய குறிப்பு: ஒரு நடவடிக்கை நடந்த சமயத்தில் சாட்சி அந்நடவடிக்கை பற்றித் தானே எழுதி வைத்த குறிப்பினைப் பார்த்து நினைவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அப்படி எழுதி வைக்கப்பட்ட குறிப்பு எந்த ஒரு ஆவணமாகவும் இருக்கலாம். ஆனால் அது, அந்த நடவடிக்கை நடந்த; காலத்திலோ அல்லது அந்நடவடிக்கை மனதில் பசுமையாக இருந்திருக்கக் கூடிய சமயத்திலோ அச்சாட்சியால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2) சாட்சி அல்லாத மற்றவர் எழுதிய குறிப்பு: சாட்சி அல்லாத மற்றொருவரால் எழுதப்பட்ட குறிப்பை, அந்நடவடிக்கை நிகழ்ந்த காலத்திலோ அல்லது அந்நடவடிக்கை நினைவில் பசுமையாக இருந்திருக்கக் கூடிய காலத்திற்குள்ளோ, அச்சாட்சியால் படிக்கப் பட்டிருந்து, அது சரியானதென்று அவருக்குத் தெரிந்திருந்தால், அந்தக் குறிப்பை அவர் மீண்டும் பார்த்து தனது நினைவைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

3) ஆவணத்தின் நகல்: சாட்சி ஒருவர் ஆவணம் எதையேனும் பார்வையிடுவதன் மூலம் தம் நினைவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கும் பொழுது, அவர், நீதிமன்ற அனுமதியுடன் அத்தகைய ஆவணத்தின் நகலொன்றைப் பார்வையிடலாம். ஆனால் அந்த ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படாததற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்று நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்பட வேண்டும்.

4) வல்லுநர் கருத்து: வல்லுநர் ஒருவர் தொழில்முறை ஆய்வு நூல்களைப் பார்வையிடுவதன் மூலம் தனது நினைவைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

நினைவைப் புதுப்பித்தல் தொடர்பான சில கூடுதல் சட்டப் பிரிவுகள்:

பிரிவு 160ன்படி, சாட்சி ஒருவருக்கு பொருண்மைகளைப் பற்றி குறிப்பாக நினைவில் இல்லையென்றாலுங்கூட, அந்தப் பொருண்மைகள் ஆவணத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டன என்று அவருக்கு

நிச்சயமாகத் தெரிந்தால், மேற்கண்ட 159வது பிரிவில் சொல்லப் பட்டுள்ளபடியான ஆவணம் எதிலேனும் சொல்லப்பட்ட பொருண்மை களைப் பற்றியும் கூட அவர் வாக்குமூலம் கொடுக்கலாம்.

முன்கண்ட 159 மற்றும் 160 வது பிரிவில் குறிப்பிடப்பட்ட எழுத்து எதுவும், எதிர்த்தரப்பினர் அதைக் கோரினால், தாக்கல் செய்யப்பட்டு அவருக்குக் காட்டப்படுதல் வேண்டும். அத்தகைய தரப்பினர், தாம் விரும்பினால், அதன் பேரில் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யலாம். இவ்வாறு **பிரிவு 161** கூறுகிறது.

நீதிமன்ற வினாக்கள்

86. Court questions - Write short notes. (நீதிமன்ற வினாக்கள் - சிறு குறிப்பு வரைக.)

இது குறித்து சாட்சிய சட்டத்தின் **165வது பிரிவு** கூறுகிறது. அதன்படி, தொடர்புடைய பொருண்மைகளைக் கண்டுபிடிப்பதற்காகவோ அல்லது அவற்றைப் பற்றி முறையான நிரூபணத்தைப் பெறுவதற்காகவோ, ஒரு சாட்சியிடமோ அல்லது வழக்கின் ஒரு தரப்பினரிடமோ எக்கேள்வியையும் கேட்பதற்கு நீதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கேள்வி எவ்வடிவத்திலும் இருக்கலாம்; எப்பொழுது வேண்டுமானாலும் கேட்கப்படலாம். அக்கேள்வி தொடர்புடைய அல்லது தொடர்பில்லாத பொருண்மை ஒன்றைப் பற்றிக் கூட சம்பந்தமுடையதாக இருக்கலாம். இப்படிப்பட்ட கேள்விகளை ஆட்சேபிக்க எத்தரப்பினருக்கும் உரிமை கிடையாது. மேலும் இக்கேள்விக்கு சாட்சி அளிக்கும் பதிலைப் பொறுத்து, நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் அவரை குறுக்கு விசாரணை செய்யவும் முடியாது.

ஆனால் 121 முதல் 131 வரையுள்ள பிரிவுகளின்படி, கேள்விகளுக்கு பதில் சொல்ல மறுக்கவும் அல்லது ஆவணங்களை தாக்கல் செய்ய மறுக்கவும் சாட்சிகளுக்கு உரிமையுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி கேள்வி எதற்கும் பதில் சொல்லுமாறு அல்லது ஆவணத்தை தாக்கல் செய்யுமாறு சாட்சியை கட்டாயப்படுத்த நீதிபதிக்கு அதிகாரம் கிடையாது. அல்லது எந்தக் கேள்வியை வேறெவரேனும் கேட்பது 148வது அல்லது 149வது பிரிவின்படி முறையற்றதாக இருக்குமோ அந்தக் கேள்வி எதையும் நீதிபதி கேட்கக் கூடாது.

Nellore v. Ramana Reddy[1] என்ற வழக்கில், "ஒவ்வொரு குற்றவியல் வழக்கு விசாரணையும், உண்மையைத் தேடிக் கண்டுபிடிக்க புறப்பட்ட ஒரு கடற்பயணமாகும். அப்பயணத்தின் பொழுது ஒவ்வொரு கட்டத்தையும், உண்மையைக் கண்டுபிடித்து நீதியை நிலைநாட்டும் பொருட்டு, ஆராய வேண்டியது நீதிபதியின் கடமையாகும். இதன்

1. I.L.R. 1972 A.P. 683

பொருட்டே பிரிவு 165ன்படி சாட்சிகளிடம் கேள்விகளைக் கேட்க நீதிபதிகளுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரம் மிகவும் பரந்து விரிந்ததாகும். நீதிபதி, தான் விரும்பும் எக்கேள்வியையும், எவ்வடிவத்திலும், எக்காலத்திலும், எச்சாட்சியிடமும் அல்லது எத்தரப்பினரிடமும், தொடர்புடைய பொருண்மை பற்றியோ அல்லது தொடர்பற்ற பொருண்மை பற்றியோ கேட்குமளவிற்கு பரந்த எல்லை கொண்டதாகும்" என்று **ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம்** கூறியது. ஆனால் பின்வரும் வழக்கில் நீதிபதியின் கேள்வி கண்டனத்திற்கு ஆளானது.

Ram Chandra v. State of Haryana[1] - இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சிகள் இருவர் தாங்கள் முன்பு கூறிய உரைகளுக்கு ஒத்ததாக சாட்சியமளிக்கவில்லை. முன்னுக்குப் பின் முரணாக உரைத்தனர். இங்கு உண்மைகளைக் கூறாவிட்டால், பொய்யுரைத்த குற்றத்திற்காக தண்டிப்பேன் என நீதிபதி அச்சாட்சிகளை மிரட்டி சில கேள்விகளைக் கேட்டார். இது பிரிவு 165ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீறிய செயலாகும் எனக் கூறப்பட்டு அந்நீதிபதி கண்டிக்கப்பட்டார்.

- o -

1. AIR 1981 SC 1036

36 சாட்சியங்களை முறையற்ற விதத்தில் அனுமதித்தலும் நிராகரித்தலும் [Improper Admission and Rejection of Evidence]

87. Effect of improper admission and rejection of evidence (தகுதியற்ற ஒத்தேற்பின் விளைவும், சான்றினை புறக்கணித்தலும்) - Write short notes.

(அல்லது)

"The improper admission or rejection of evidence shall not be ground of itself for a new trial". Explain and comment. ("சாட்சியத்தை முறையற்ற விதத்தில் அனுமதித்தலும் அல்லது நிராகரித்தலும் மட்டுமே ஒரு புதிய வழக்கு விசாரணைக்கு காரணமாக அமையாது". விளக்கம் தந்து விமர்சிக்க.)

(அல்லது)

De Novo Trial - Write short notes. (புத்துரு விசாரணை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய சாட்சிய சட்டத்தின் **பதினொன்றாவது அத்தியாயம் (Chapter XI),** சாட்சியத்தை முறையற்ற விதத்தில் அனுமதித்தலையும் நிராகரித்தலையும் பற்றி **பிரிவு 167**ன் வாயிலாக பின்வருமாறு கூறுகிறது.

சாட்சியத்தை முறையற்ற விதத்தில் அனுமதித்தல் மற்றும் நிராகரித்தல்:

ஒரு சாட்சியமானது முறையற்ற விதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது அல்லது நிராகரிப்பட்டுள்ளது என்பதை மட்டும் காரணமாகக் காண்பித்து, ஒரு வழக்கில் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றுமாறு கோரக்கூடாது, என்பதே **பிரிவு 167** கூறும் பொது விதியாகும். அதாவது, சாட்சியத்தை முறையற்ற விதத்தில் அனுமதித்தலும் அல்லது நிராகரித்தலும் மட்டுமே புதிதாக வழக்கு விசாரணையை நடத்த வேண்டும் என்பதற்கு காரணமாக அமையாது. மேலும் அளிக்கப்பட்ட தீர்ப்பை மாற்றுவதற்கும் காரணமாக அமையாது.

மேற்படி பிரிவின் நோக்கம் யாதெனில், ஒரு சாட்சியமானது முறையற்ற விதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது அல்லது நிராகரிக்கப் பட்டுள்ளது எனும் அடிப்படையில் ஏற்கெனவே வழங்கப்பட்ட தீர்ப்பை மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் மாற்றியமைத்துக் கூறுதல் கூடாது.

சரியான நீதி வழங்கப்பட்டுவிட்டதாக தோன்றும் பொழுது நுணுக்கமாள ஆட்சேபணைகளை அனுமதிக்கக் கூடாது என்பதே பிரிவு 167 வலியுறுத்தும் கருத்தாகும்.

i) ஒரு வழக்கின் முடிவை நியாயப்படுத்த போதுமான சாட்சியங்கள் இருக்கும்பொழுதும், மற்றும் ii) நிராகரிக்கப்பட்ட சாட்சியம் பெறப்பட்டிருந்தால் அது அவ்வழக்கின் முடிவை மாற்றியிருக்காது எனும் பொழுதும், ஒரு சாட்சியம் முறையற்ற விதத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நிராகரிக்கப்பட்டிருந்தாலும், அதை மட்டுமே காரணமாகக் காண்பித்து புதிய வழக்கு விசாரணையைக் கோர முடியாது. மேலும் தீர்ப்பை மாற்றியளிக்கும்படி மேல் முறையீடும் செய்ய முடியாது. இத்தகு புதிய வழக்கு விசாரணையே **De Novo Trial** எனப்படுகிறது. இது **புத்துரு வழக்கு விசாரணை** என்றும் கூறப்படுகிறது.

ஆனால் i) ஒரு வழக்கின் முடிவை நியாயப்படுத்த போதுமான சாட்சியங்கள் இல்லாத சமயத்தில் முறையற்ற விதத்தில் சாட்சியம் அனுமதிக்கப்பட்டிருந்தாலோ; அல்லது ii) நிராகரிக்கப்பட்ட சாட்சியம் பெறப்பட்டிருந்தால் வழக்கின் முடிவு மாறியிருக்கும் எனும் பொழுதோ, நீதிமன்றம் புதிய வழக்கு விசாரணைக்கு உத்திரவிடலாம். ஏற்கனவே வழங்கிய தீர்ப்பையும் மாற்றிக் கொடுக்கலாம். மேற்படி பிரிவு உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இரு தரப்பு வழக்குகளுக்கும் பொருந்தும்.

- o -

பிரச்சனைகளும் தீர்வுகளும்

[Problems and Solutions]

சூழ்நிலைச் சாட்சியம்

[Circumstantial Evidence]

1. 'A' is accused of B's murder by shooting. 'C' swears that he saw a revolver in A's possession shortly after B's death. Discuss the nature of evidence.

'அ' என்பவர் 'ஆ' என்பவரை சுட்டுக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. 'ஆ'வின் மரணத்திற்கு சற்று பின்னர் 'அ'வின் உடைமையில் துப்பாக்கி ஒன்றைத் தான் பார்த்ததாக 'இ' என்பவர் உறுதியோடு சான்றளிக்கிறார். இச்சான்றின் தன்மையை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் 'இ' என்பவர் அளித்த சாட்சியம் 'சூழ்நிலைச் சாட்சியம்' (Circumstantial Evidence) ஆகும். 'அ' என்பவர் 'ஆ'வைச் சுட்டுக் கொலை செய்வதை நேரடியாக நான் பார்த்தேன் என்று 'இ' சொன்னால், அது நேர்நிலை சாட்சியம் (Direct Evidence) ஆகும். ஆனால், இங்கு 'ஆ'வின் மரணத்திற்குப் பிறகு, 'அ'வின் உடைமையில் துப்பாக்கி ஒன்றை தான் பார்த்ததாக 'இ' என்பவர் அளிக்கும் கூற்று நேரடியானது அல்ல. எனினும் குற்றம் நிகழ்ந்திருக்கும் சூழ்நிலைகளை எடுத்துக் கூறும் விதத்தில் உள்ளது. அதாவது, அத்துப்பாக்கியால் 'அ' என்பவர் 'ஆ'வைச் சுட்டுக் கொன்றிருப்பார் என்ற பிரச்சனையிலுள்ள சங்கதியை மெய்ப்பிக்க உதவக் கூடியதால் 'இ' கூறியது சூழ்நிலைச் சாட்சியமாகும். *(மேலும் விரிவாக வினா எண் 6-ல் காண்க.)*

கேள்வி நிலைச் சாட்சியம்

[Hearsay Evidence]

2. 'A' has given evidence that 'A' heard that a murder had taken place. Discuss the nature of evidence.

'அ' என்பவர் கொலை ஒன்று நடந்ததை தான் கேட்டதாக சான்றளிக்கிறார். சான்றின் தன்மையை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர், கொலை ஒன்று நடந்ததை தான் கேட்டதாக சான்றளிக்கிறார். இச்சான்று கேள்விநிலைச் சாட்சியாகும் (Hearsay Evidence). இச் சாட்சியத்தை அனுமதிக்கவியலாது.

ஒரு சாட்சி தன்னுடைய புலன்களால் (own senses) நேரடியாகக் கண்டதை அல்லது கேட்டதை கூறுவது, மூலச் சாட்சியமாகும் (Original Evidence). ஆனால் சாட்சியானவர் தன்னுடைய புலன்களால் நேரடியாகக் காணாததை அல்லது கேட்காததை கூறுவது, கேள்விநிலைச் சாட்சியமாகும்.

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர், கொலை ஒன்று நடந்ததை தான் நேரடியாக பார்த்ததாக கூறியிருந்தால், அது மூலச் சாட்சியமாகும். ஆனால் தான் கேட்டதாக கூறுகிறார். அதாவது கொலை ஒன்று நடந்துள்ளதாக தன்னிடம் பிறர் தெரிவித்ததை கேட்டதாக கூறுகிறார். எனவே 'அ'வின் சாட்சியம் கேள்வி நிலைச் சாட்சியமாகும்.

சங்கதிகளின் (பொருண்மைகளின்) தொடர்புடைமை
[Relevancy of Facts]

3. State and explain the relevant fact in the following:

(a) 'A' is accused to fradulently delivering to another person a counterfeit coin, which at the time when he delivered it, he knew to be conterfeit. The fact is that at the time of its delivery, 'A' was in possession a number of other pieces of counterfeit coins.

(b) The question is whether 'A' was the legitimate son of 'B'. The fact is that 'A' was always treated as such by members of the family.

கீழ்க்கண்டவைகளில் தொடர்புற்ற சங்கதிகளை எடுத்துக்கூறி விளக்குக.

(அ) கள்ள நாணயம் என்று அறிந்திருந்தும் அதை மற்றொருவருக்கு அப்படிக் கள்ள நாணயம் என்று அறிந்திருந்த நிலையில் மோசடியாகக் கொடுத்ததாக 'அ' என்பவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. அப்படிக் கொடுக்கும் நேரத்தில், வேறு பல கள்ள நாணயங்கள் 'அ' வைத்திருந்தார் என்னும் சங்கதிகள்.

(ஆ) 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு முறைப்படி பிறந்த மகனா என்பது கேள்வி. 'அ' எப்போதும் குடும்பத்தின் உறுப்பினர்களால் அவ்வாறே நடத்தப்பட்டார் என்னும் சங்கதி.

தீர்வுகள்:

(அ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 14வது பிரிவின் கீழான (ஆ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 14 ஆனது, மனநிலை, உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வுநிலையின் உண்மைகளைக் காட்டுகின்ற சங்கதிகள், தொடர்புடைய சங்கதிகள் என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'அ' கள்ள நாணயத்தை, அது கள்ள நாணயம் என்று அறிந்தே மோசடியாக மற்றொருவருக்கு கொடுக்கும் பொழுது, வேறு பல கள்ள நாணயங்களை அவர் தம்வசம் வைத்திருந்தார் என்னும் சங்கதி தொடர்புடையதாகும். ஏனெனில், கள்ள நாணயம் என்று தெரிந்தே அதை வைத்திருந்த 'அ'வின் மனநிலையின் உண்மையை மேற்படி சங்கதி காட்டுவதால், தொடர்புடையதாகிறது.

மேலும் கள்ள நாணயமென்று தெரிந்தே அதை உண்மையான நாணயம் போல இன்னொருவருக்குக் கொடுத்ததற்காக 'அ' முன்னமேயே தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்னும் சங்கதியும் தொடர்புடையதே. (மேற்படி பிரச்சனைக்கு இப்பத்தி அவசியமில்லாது போனாலும், 14வது பிரிவில் கூறப்பட்டுள்ள மேற்படி (ஆ) என்ற எடுத்துக்காட்டின் பிற்பகுதியாக கொடுக்கப்பட்டுள்ள மேற்படி பத்தியையும் மாணவர்கள் தெரிந்து கொள்வது நல்லது என்ற வகையில் அப்படியே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது – ஆசிரியர்.)

(ஆ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 50வது பிரிவின் கீழான (ஆ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி பிரிவு 50ஆனது, உறவுமுறை பற்றிய கருத்து எப்போது தொடர்புடையது என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், 'அ' எப்போதுமே, குடும்பத்தின் உறுப்பினர்களால் 'ஆ'-விற்கு முறைப்படி பிறந்த மகனாகவே நடத்தப்பட்டார் என்ற சங்கதி தொடர்புடையதாகும்.

எவ்வாறென்றால் பிரிவு 50ன்படி அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் 'அ'-விற்கும் 'ஆ'-விற்கும் உள்ள உறவுமுறையின் உண்மை பற்றி, தங்களது நடத்தையின் வாயிலாக 'அ' என்பவர் 'ஆ'-விற்கு முறைப்படி பிறந்த மகனாக நடத்தப்பட்டார் என்னும் சங்கதி தொடர்புடையதாகும்.

4. State and explain the relevant fact in the following:

(a) The question is, whether 'A' murdered 'B'. The facts were marks on the ground produced by a struggle at the place where murder was committed.

(b) 'A' is accused of receiving stolen goods knowing them to be stolen. It is proved that he was in possession of a particular stolen article. The fact is that at the same time, he was in possession of many other stolen articles.

(c) 'A' is accused of burning down his house in order to obtain money for which it is insured. The facts are that 'A' lived in several houses successively each of which he insured in each of which fire occured, and after each of which fires, 'A' received payment from a different insurance office.

(d) The question is whether 'A' robbed 'B'. The facts are after 'B' was robbed, 'C' said in A's presence, the police are coming to look for the man who robbed 'B' and that immediately afterwards 'A' ran away.

கீழ்கண்டவைகளில் தொடர்புள்ள சங்கதிகளை எடுத்துக்கூறி விளக்கு:

(அ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரை கொலை செய்துவிட்டார் என்பது பிரச்சனையில் உள்ள சங்கதியாகும். கொலை நடந்த இடத்தில் இருவருக்கும் ஏற்பட்ட சண்டையின் விளைவாக நிலத்தில் பதிந்திருந்த தடங்கள் எனும் சங்கதிகள்.

(ஆ) திருட்டுப் பொருள் என்று அறிந்தே களவாடப்பட்ட பொருளை 'அ' வாங்கி வைத்திருக்கிறார் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ளார். அவர் ஒரு குறிப்பிட்ட திருட்டுப் பண்டத்தைத் தம் வசம் வைத்திருந்தார் என்பது நன்கு மெய்ப்பிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் தம் வசம் வேறு பல திருட்டுப் பண்டங்களை 'அ' வைத்திருந்தார் என்ற சங்கதி.

(இ) காப்பீடு செய்யப்பட்டுள்ள தன் வீட்டை, காப்பீட்டுப் பணத்தைப் பெறுவதற்காக எரித்து அழித்ததாக 'அ' என்பவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. 'அ' அடுத்தடுத்து பல்வேறு வீடுகளில் வசித்து வந்தார். அந்த வீடுகள் ஒவ்வொன்றும் காப்பீடு செய்யப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் தீப்பிடித்து அழிய அப்படி ஏற்பட்ட ஒவ்வொரு தீ விபத்துக்குப் பிறகும் வெவ்வேறு காப்பீட்டு அலுவலகங்களில் இருந்து 'அ' பணம் பெற்றார் எனும் சங்கதிகள்.

(ஈ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரைக் கொள்ளையடித்தார் என்பது கேள்வி. கொள்ளையடிக்கப்பட்ட பிறகு கொள்ளையடித்த ஆளைத் தேடிக் கொண்டு காவலர் வருகின்றனர் என்று 'அ'-வின் முன்னிலையில் 'இ' என்பவர் கூறினார். அதைக் கேட்டவுடன் 'அ' அங்கிருந்து ஓடி விட்டார் என்னும் சங்கதிகள்.

தீர்வுகள்:

(அ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரை கொலை செய்துவிட்டார் என்பது பிரச்சனையில் உள்ள சங்கதி (பொருண்மை). இங்கு கொலை நடந்த இடத்தில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையின் விளைவாக நிலத்தில் பதிந்து இருந்த தடங்கள், தொடர்புடைய சங்கதிகள் ஆகும்.

மேற்படி பிரச்சனை, சாட்சிய சட்டம் **7-வது பிரிவின் கீழான (ஆ)** என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி 7-வது பிரிவு, பிரச்சனையில் உள்ள சங்கதிகள் நிகழ்ந்த தருணமாக அல்லது அவற்றின் காரணமாக அல்லது விளைவாக உள்ள சங்கதிகள் தொடர்புடைய சங்கதிகள் என்று கூறுகிறது. இங்கு 'அ'-விற்கும் 'ஆ'-விற்கும் இடையே ஏற்பட்ட சண்டையின் விளைவாக நிலத்தில் பதிந்திருந்த தடங்கள் பிரச்சனையில் உள்ள சங்கதியின் விளைவாக ஏற்பட்ட சங்கதி ஆகும். எனவே தொடர்புடையதாகும்.

(ஆ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **14-வது பிரிவின் கீழான (அ)** என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 14-ஆனது பின்வருமாறு கூறுகிறது. அதாவது, உட்கருத்து, அறிவு, நல்லெண்ணம், அசட்டை, குறிப்பிட்ட ஆள் எவரிடமேனும் விருப்பு அல்லது வெறுப்பு போன்ற மனநிலையின் உண்மையைக் காட்டுகின்ற, அவரது உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வுநிலையில் உண்மையைக் காட்டுகின்ற சங்கதிகள் தொடர்புற்றவையாகும். அத்தகைய மனநிலை, உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மை பிரச்சனையில் உள்ள சங்கதியாக அல்லது தொடர்புடைய சங்கதியாக இருக்கும்போது, என்று மேற்படி பிரிவு 14 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் வேறு பல திருட்டுப் பண்டங்களை தம் வசம் 'அ' வைத்திருந்தார் என்னும் சங்கதியானது தொடர்புடையதாகும். இது அவர் தம்வசம் வைத்திருந்த எல்லா பண்டங்களும், அவை ஒவ்வொன்றும், திருடப்பட்டவையென்று அவருக்குத் தெரிந்திருந்தது என்பதைக் காட்ட முனைகிறதென்னும் வகையில் தொடர்புற்றதாக உள்ளன. அதாவது பண்டங்களை 'அ' திருடப்பட்டவை என்பதை அறிந்தே அவர் வைத்திருந்தார் என்பது அவரது மனநிலையின் உண்மையை காட்டுவதால் அச்சங்கதி தொடர்புடைய சங்கதியே.

(இ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **15-வது பிரிவின் கீழான (அ)** என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி பிரிவு 15-ன் படி, ஒரு செய்கை தற்செயலானதா அல்லது உட்கருத்தோடு செய்யப்பட்டதா, அல்லது குறிப்பிட்ட அறிவோடு செய்யப்பட்டதா என்ற கேள்வி எழும்போது அதைப் போன்ற நிகழ்ச்சிகள் சேர்ந்த ஒரு தொடரின் பகுதியாக அத்தகைய செய்தி அமைந்திருந்து, அந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் அந்த செய்கையை செய்தவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்னும் சங்கதி தொடர்புடையதாகும்.

மேற்படி பிரச்சனையில் 'அ' இதற்கு முன்பு வசித்த வீடுகள் ஒவ்வொன்றும் தீப்பிடித்து எரிந்தன என்பதும் அதன் பிறகு வெவ்வேறு காப்பீட்டு அலுவலகங்களிலிருந்து அவ்வீடுகளுக்கு உண்டான பணத்தைப் பெற்றார் என்பதுமாகிய சங்கதிகள் தொடர்புடையதாகும். இது அந்த நிகழ்ச்சிகள் தற்செயலானவை அல்ல என்பதை காட்டமுனையும் வகையில் தொடர்புடையதாக உள்ளன, என்பதே தீர்வு.

(ஈ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 8-வது பிரிவின் கீழான *(ஊ)* என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி பிரிவு 8-ன்படி பிரச்சனையில் உள்ள எந்தவொரு சங்கதிக்கான அல்லது தொடர்புற்ற எந்தவொரு சங்கதிக்கான உள்நோக்கத்தையோ முன்னேற்பாட்டையோ மற்றும் முந்தைய அல்லது பிந்தைய நடத்தையையோ காட்டும்; அல்லது அமைக்கும் சங்கதி எதுவும் தொடர்புற்றதாகும்.

மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவர் 'ஆ' என்பரைக் கொள்ளையடித்த பிறகு கொள்ளையடித்த ஆளைத் தேடிக்கொண்டு காவலர் வருகின்றனர் என்று 'அ'-வின் முன்னிலையில் 'இ' என்பவர் கூறினார், என்ற சங்கதியும்; அதைக் கேட்டவுடனேயே 'அ' அங்கிருந்து ஓடிவிட்டார் என்ற சங்கதியும் தொடர்புடையதாகும். ஏனெனில் அப்படி 'அ' ஓடியது, அவர்தான் 'ஆ'வை கொள்ளையடித்துள்ளார் என்ற அவரது முந்தைய நடத்தையை சுட்டிக் காட்டுகிறது.

5. 'A' says to 'B' that the police are coming after the man who committed robbery in the next street. At that time, 'X' was standing near them. On hearing the statement made by 'A', 'X' walks away speedily from the place. Whether the statement made by 'A' and the conduct of 'X' are relevant to the case against 'X'?

பக்கத்து தெருவில் கொள்ளைக் குற்றம் செய்தவரைப் பிடிக்க போலீஸ் வருவதாய், 'அ' என்பவர் 'ஆ'விடம் கூறுகிறார். அவர்கள் பக்கத்தில் 'இ' இருந்தார். 'அ'வின் கூற்றினைக் கேட்டதும் 'இ' விரைவாய் அந்த இடத்திலிருந்து நகர்ந்து விடுகிறார். 'அ'வின் கூற்றும் 'இ'-யின் நடத்தையும் 'இ'க்கு எதிரான வழக்கில் தொடர்புடையதா?

தீர்வு:

தொடர்புடையதே. விரிவான விளக்கத்திற்கு பிரச்சனை எண் 4-ன் கீழான (ஈ) தீர்வில் காணவும்.

6. The question is whether 'A' owes 'B' Rs.10,000, The facts that 'A' asked 'C' to lend him money and that 'D' said to 'C' in 'A's presence and hearing "I advise you not to trust 'A' for he owes 'B' Rs.10,000" and that 'A' went away without making any answer. Among the above facts which are relevant?

'ஆ'விற்கு 'அ' ரூ.10,000 திரும்பச் செலுத்தக் கடன்பட்டவரா என்பது வினா. கீழ்வரும் பொருண்மைகளில் எவை இவ்வினாவிற்கு தொடர்புடையவையாகும்? 'அ', 'இ'-யிடமிருந்து கடன் கோருகிறார். 'அ'வின் முன்னிலையில் 'அ'-வுக்கு கேட்கும் வண்ணம் 'இ'-யிடம் 'ஈ' கூறுவதாவது - "நான் உன்னை அறிவுறுத்துவது யாதெனில் நீ 'அ'-வை

நம்பக் கூடாது. ஏனெனில் 'அ' ஏற்கெனவே 'ஆ'விற்கு ரூ.10,000 திரும்பத் தர கடமைப்பட்டவர்". இக்கூற்றினைக் கேட்ட 'அ' பதில் ஏதும் கூறாமல் சென்று விடுகிறார்.

தீர்வு:

மேற்படி பிரச்சனை இந்திய சாட்சிய சட்டத்தின் 8-வது பிரிவின் கீழான எடுத்துக்காட்டு (g)-யை அப்படியே அடியொற்றியதாகும்.

இந்த எடுத்துக்காட்டின்படி, பிரச்சனையில் கண்ட பொருண்மைகளில், "நான் உன்னை அறிவுறுத்துவது யாதெனில் நீ 'அ'வை நம்பக் கூடாது. ஏனெனில் 'அ' ஏற்கனவே 'ஆ'விற்கு ரூ.10,000 திரும்பத் தர கடமைப் பட்டவர்" என்று 'அ'வின் முன்னிலையில் அவர் கேட்கும்படி செயல்பட்ட பொருண்மையும், இதனைக் கேட்ட 'அ' பதில் ஏதும் கூறாமல் சென்று விடுகிறார் என்ற பொருண்மையும், 'ஆ'விற்கு 'அ' ரூ. 10,000 திரும்பச் செலுத்தக் கடன்பட்டவரா எனும் வினாவிற்கு தொடர்புடையதாகும்.

ஏனெனில் மேற்படி பொருண்மைகள் 'அ', 'ஆ'-விடமிருந்து கடன் வாங்கியதற்கு தொடர்புடைய நடத்தையாக உள்ளது. அதாவது 'அ'-வின் நடத்தையை (conduct) பாதிக்கக்கூடிய வாக்குமூலங்களாக (கூற்றுகள்) உள்ளன. இது பிரிவு 8-ன் இரண்டாவது விளக்கத்திற்கு உட்பட்டு வருகிறது. அவ்விளக்கம் பின்வருமாறு கூறுகிறது. அதாவது, "ஒரு நபரின் நடத்தை தொடர்புடையதாக உள்ள பொழுது, அந்த நபரிடம் அல்லது அவர் முன்னிலையில் அவர் கேட்கும்படி, அந்த நடத்தையை பாதிக்கின்ற வகையில் சொல்லப்பட்ட வாக்குமூலங்கள் தொடர்புடையதாகும். (பிரிவு 8 குறித்த விரிவான விளக்கத்திற்கு வினா எண்.27-ல் (c) எனும் தலைப்பில் காணவும்.)

7. The question is whether A was robbed. Discuss whether the following facts are relevant:

(a) shortly after the robbery, 'A' made a complaint relating to the offence. The circumstances under which and the terms in which the complaint was made.

(b) 'A' said that he had been robbed without making any complaint.

'அ' என்பவர் கொள்ளையடிக்கப்பட்டாரா என்பது கேள்வி. பின்வரும் சங்கதிகள் தொடர்புற்றவையா என்பதை விவாதிக்க:

(அ) கொள்ளை நடந்த உடனேயே அக்குற்றம் சம்பந்தமாக 'அ' என்பவர் முறையீடு செய்துகொண்டார். அந்த முறையீடு எந்த சூழ்நிலையில் செய்யப்பட்டது, என்ன வாசகத்தைக் கொண்டிருக்கிறது என்னும் சங்கதிகள்.

(ஆ) முறையீடு எதுவும் கொடுக்காமலேயே தாம் கொள்ளையடிக்கப் பட்டதாக 'அ' என்பவர் சொன்னார் என்னும் சங்கதி.

தீர்வு:

மேற்படி பிரச்சனை சாட்சிய சட்டம் பிரிவு 8ன் கீழான (k) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 8 என்ன கூறுகிறது என்பதை நாம் சென்ற பிரச்சனையில் கண்டுள்ளோம்.

மேற்படி பிரச்சனையில் (அ)-வில் கூறப்பட்டுள்ள சங்கதிகளே தொடர்புடையதாகும். அதாவது, சொல்லப்பட்ட கொள்ளை நடந்த உடனேயே அக்குற்றம் சம்பந்தமாக அவர் முறையீடு (complaint) செய்து கொண்டார் என்னும் சங்கதியும் அந்த முறையீடு எந்தச் சூழ்நிலையில் செய்யப்பட்டது, எந்த வாசகத்தை கொண்டிருந்தது என்னும் சங்கதியும் தொடர்புடைய சங்கதிகளாகும். ஏனெனில் பிரிவு 8ன் வாசகங்களின்படி மேற்படி சங்கதிகள் கொள்ளையடிக்கப்பட்ட 'அ'வின் பிந்தைய நடத்தைகளைக் காட்டுகிறது.

ஆனால், அதே சமயத்தில் மேற்படி பிரச்சனையில் (ஆ)-வில் கூறப்பட்ட சங்கதி தொடர்புடையதல்ல. ஏனெனில் அச்சங்கதி 32வது பிரிவின் (1)வது கூற்றின்படி ஒரு மரண வாக்குமூலம் என்னும் வகையில், அல்லது 157வது பிரிவின்படி ஒரு உறுதியூட்டும் சாட்சியம் என்னும் வகையில் தொடர்புடையதாக இருந்தாலும், அது மேற்படி பிரிவு 8ன்படி நடத்தை என்னும் வகையில் ஒரு தொடர்புடைய சங்கதியல்ல.

8. State and explain the relevant facts in the following:

(a) The question is, whether 'A' and 'B' were married. The fact is that they were usually received and treated by their friends as husband and wife.

(b) 'A' has obtained a decree for the possession of land against 'B'. 'C', B's son murders 'A' in consequence.

(c) 'A' is accused of fradulently delivering to 'B' a counterfeit rupee. The facts are that, soon before or soon after the delivery to 'B', 'A' delivered counterfeit rupees to 'C', 'D' and 'E'.

(d) 'A' is tried for the murder of 'B' by intentionally shooting him dead. The fact is that 'A' on other occasions shot at 'B'.

கீழ்க்கண்டவைகளில் தொடர்புற்ற சங்கதிகளை எடுத்துக்கூறி விளக்குக:

(அ) 'அ' என்பவருக்கும் 'ஆ' என்பவருக்கும் திருமணம் ஆகியுள்ளதா என்பது கேள்வி. அவர்கள் வழக்கமாகவே அவர்களது நண்பர்களால் கணவனும் மனைவியுமாக வரவேற்று நடத்தப்பட்டனர் எனும் சங்கதி.

(ஆ) 'ஆ' என்பவரிடமிருந்து நிலத்தின் அனுபோகத்தை பெறுவதற்கான தீர்ப்பாணை ஒன்றினை 'அ' என்பவர் பெற்றிருக்கிறார். அதன் விளைவாக 'ஆ'வினுடைய மகனான 'இ' என்பவர் 'அ'வைக் கொலை செய்கிறார்.

(இ) 'ஆ' என்பவருக்கு கள்ள ரூபாய் ஒன்றை மோசடியாகக் கொடுத்ததாக 'அ' என்பவர் குற்றம் சுமத்தப்படுகிறார். 'ஆ'-க்குக் கொடுப்பதற்குச் சற்று முன்பு அல்லது பின்பு 'அ' கள்ள ரூபாய்களை 'இ', 'ஈ', மற்றும் 'உ' ஆகியோருக்குக் கொடுத்தார் எனும் சங்கதிகள்.

(ஈ) 'ஆ'-வைக் கொல்ல வேண்டுமென்ற உட்கருத்துடன் அவரைப் பார்த்துச் சுட்டதாக 'அ'-வின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. 'அ'-வின் உட்கருத்தை மெய்ப்பிப்பதற்காக அவர் இதற்கு முன்பு 'ஆ'வைப் பார்த்துச் சுட்டிருக்கிறார் எனும் சங்கதி.

தீர்வுகள்:

(அ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 50வது பிரிவின் கீழான (அ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 50 ஆனது உறவுமுறை பற்றிய கருத்து எப்போது தொடர்புடையது, என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவருக்கும் 'ஆ' என்பவருக்கும் திருமணம் ஆயிற்றா என்பது கேள்வி. இங்கு அவர்கள் வழக்கமாகவே அவர்களது நண்பர்களால் கணவனும் மனைவியுமாகவே வரவேற்று நடத்தப்பட்டனர் என்னும் சங்கதி தொடர்புடையதாகும்.

எவ்வாறென்றால், பிரிவு 50ன்படி, நீதிமன்றம் ஒருவருக்கு மற்றொருவரிடமுள்ள உறவுமுறை பற்றி ஒரு கருத்துக்கு வரவேண்டியிருக்கும்போது, அக்குடும்பத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையிலோ மற்றபடியோ, அந்த விஷயத்தைப் பற்றி அறிவதற்குச் சிறப்பான வாய்ப்புப் பெற்றுள்ள எவரேனும், அத்தகைய உறவுமுறையின் உண்மைப் பற்றி, நடத்தையின் மூலம் வெளிப்படுத்தும் கருத்து, ஒரு தொடர்புற்ற சங்கதியாகும்.

மேற்படி பிரச்சனையில் 'அ' மற்றும் 'ஆ'க்குமிடைய நடந்த திருமணத்தையோ அல்லது அவர்களது கணவன்-மனைவி உறவு முறையையோ அவர்களது நண்பர்கள் அறிவதற்குச் சிறப்பான வாய்ப்புப் பெற்றுள்ளவர்கள்; எனவே அவர்கள் தங்கள் நடத்தையின் வாயிலாக 'அ' மற்றும் 'ஆ'வை கணவன் மனைவியுமாகவே வரவேற்று நடத்தினர் என்னும் சங்கதி, தொடர்புடைய சங்கதியாகும்.

(ஆ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 43வது பிரிவின் கீழான (ஈ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 43 ஆனது, 40 முதல் 42 வரை குறிப்பிடப்பட்டவையல்லாத மற்றத் தீர்ப்புகள் முதலியவை எப்போது தொடர்புடையவை என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், 'ஆ'-வின் நிலத்தின் அனுபோகத்தைப் பெறுவதற்கான தீர்ப்பாணையொன்றை 'அ' என்பவர் பெற்றிருக்கின்றார் என்பதில் மேற்கண்டவாறு தீர்ப்பாணை பெற்றிருக்கும் சங்கதி, குற்றமொன்றிற்கான 'அ'-வின் உள்நோக்கத்தை காட்டக்கூடிய வகையில், தொடர்புடைய சங்கதியாகும். **(மேலும் விரிவாக வினா எண் 50-ல் பிரிவு 43 கூறும் கோட்பாட்டைப் பார்க்கவும்.)**

(இ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **15வது பிரிவின் கீழான (இ)** என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி 15வது பிரிவானது, ஒரு செய்கை தற்செயலானதா அல்லது உட்கருத்தோடு செய்யப்பட்டதா என்ற பிரச்சனையைத் தெரிவிக்கும் சங்கதிகள் தொடர்புடையவை ஆகும்.

மேற்படி பிரச்சனையில், 'ஆ'-க்கு அவ்வாறு கள்ள ரூபாய் கொடுப்பதற்கு சற்று முன்பு அல்லது சற்று பின்பு 'அ' கள்ள ரூபாய்களை 'இ', 'ஈ' மற்றும் 'உ' ஆகியோருக்குக் கொடுத்தார் என்னும் சங்கதிகள், 'ஆ'-க்கு கொடுத்தது தற்செயலானது அல்ல; கள்ளரூபாய் என்று அறிந்து மோசடியான உட்கருத்துடன் கொடுக்கப்பட்டது என்பதைக் காட்டும் வகையில், ஒரு தொடர்புடைய சங்கதியாகும்.

(ஈ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **14வது பிரிவின் கீழான (ஐ)** என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி 14வது பிரிவானது, மனநிலை, உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டுகின்ற சங்கதிகள் தொடர்புடையதாகும் என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'அ'வின் உட்கருத்தைக் காட்டுவதற்காக 'அ' முன்னமேயே 'ஆ'வைப் பார்த்துச் சுட்டிருக்கிறார் என்ற சங்கதி 'அ'-வின் மனநிலையை, அதாவது 'ஆ' மீது அவருக்குள்ள வெறுப்புணர்ச்சியைக் காட்டுவதால் தொடர்புடைய சங்கதியாகும்.

9. A is tried for the murder of B by intentionally shooting him dead. The fact is that A was in the habit of shooting at people with intent to murder them. Is this fact relevant?

சுட்டுக் கொல்லும் உட்கருத்தோடு B என்பவரைச் சுட்டுக் கொலை செய்ததாகச் A என்பவர் விசாரணை செய்யப்படுகிறார். கொலை செய்யும் உட்கருத்துடன் A ஆட்களைப் பார்த்துச் சுடும் பழக்கம் உடையவராக இருந்தார் என்பது தீர்வினையானதா ?

தீர்வு:

இப்பிரச்சனை இந்திய சாட்சிய சட்டத்தின் 14-ஆவது பிரிவின் கீழான (o) எனும் எடுத்துக்காட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். பிரிவு 14-ஆனது கருத்து, அறிவு, நன்னம்பிக்கை, கவனக்குறைவு, அஜாக்கிரதை, குறிப்பிட்ட நபர் எவரிடமேனும் வெறுப்பு அல்லது

விருப்பு போன்ற மன நிலையின் உண்மையைக் காட்டுகின்ற அல்லது உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டுகின்ற பொருண்மைகள் தொடர்புடையவையே என்று கூறுகிறது. ஆனால் இப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள 'முதல் விளக்கம்தான்' (Explana-tion 1) நமது மேற்படி பிரச்சனைக்கு விடை பகர்வதாக அமைந்துள்ளது. அதன்படி, தொடர்புடைய மனநிலையின் உண்மையைக் காட்டுவதால் தொடர்புற்றதாக உள்ள ஒரு பொருண்மை, அந்த மனநிலையின் உண்மையைப் பொதுவான வகையிலல்லாமல், ஆனால் பிரச்சனையிலுள்ள குறிப்பிட்ட விடயம் சம்பந்தப்பட்ட வகையில் இருப்பதாகக் காட்டுதல் வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் கொலை செய்யும் உட்கருத்துடன் A ஆட்களைப் பார்த்துச் சுடும் பழக்கம் உடையவராக இருந்தார் எனும் பொருண்மையானது, A-யின் மனநிலையின் உண்மையைப் பொதுவான வகையில் இருப்பதாகக் காட்டுகிறதே தவிர, A என்பவர் B என்பவரை இதற்கு முன் சுட்டிருக்கிறார் என்று குறிப்பிட்ட வகையில் காட்ட வில்லை. எனவே பொதுவான தன்மை கொண்ட "கொலை செய்யும் கருத்துடன் A ஆட்களைப் பார்த்துச் சுடும் பழக்கம் உடையவராக இருந்தார்" எனும் பொருண்மை, A என்பவர் B என்பவரை சுட்டுக் கொலை செய்தார் என்பதற்கு தொடர்புடையதல்ல. அதாவது தீர்வினையானதல்ல என்பதே இங்கு தீர்வு. (மேலும் விளக்கங்களுக்கு பக்கம் 97-இல் பார்க்க.)

10. A sues B for damages done by B's dog which B knew to be ferocious. The dog had previously bitten X, Y and Z and they all made complaints to B. State and explain the relevant facts.

தம் நாய் கொடூரமானதென்று B-க்குத் தெரியும். அவரது நாயால் ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி அவர் மீது A வழக்குத் தொடர்கிறார். அந்த நாய் இதற்கு முன் X, Y, Z ஆகியோரைக் கடித்து உள்ளது. அது பற்றி B-யிடம் முறையீடு செய்திருக் கிறார்கள். தொடர்புள்ள நிகழ்மைகளை கூறி விளக்குக.

தீர்வு:

இப்பிரச்சனை இந்திய சாட்சிய சட்டத்தின் 14-ஆவது பிரிவின் கீழான (c) எனும் எடுத்துக்காட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். பிரிவு 14-ஆனது கருத்து, அறிவு, நன்னம்பிக்கை, கவனக்குறைவு, அஜாக்கிரதை, குறிப்பிட்ட நபர் எவரிடமேனும் வெறுப்பு அல்லது விருப்பு போன்ற மன நிலையின் உண்மையைக் காட்டுகின்ற அல்லது உடல்நிலை அல்லது உடலில் ஏற்படும் உணர்வு நிலையின் உண்மையைக் காட்டுகின்ற பொருண்மைகள் தொடர்புடையவையே என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் தனது நாய் கொடூரமானதென்று B-க்குத் தெரியும். மேலும் அது ஏற்கனவே X, Y, Z ஆகியோரைக் கடித்துள்ளது. அது பற்றி அவர்கள் B-யிடம் முறையீடும் செய்துள்ளார்கள். எனவே அந்த நாய் மற்றவர்களைக் கடிக்கக் கூடியது என்பது B-யின் தெரிகைக்கு (knowledge) உட்பட்டது.

எனவே இங்கு அந்த நாய் X, Y, Z ஆகியோரைக் கடித்துள்ளது; அது பற்றி அவர்கள் B-யிடம் முறையீடு செய்துள்ளார்கள் எனும் பொருண்மைகள், அந்த நாயால் ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி A என்பவர் B-யின் மீது தொடர்ந்த வழக்கில் தொடர்புடையதாகும் என்பதே தீர்வு.

11. State and explain the relevant facts in the following:

(a) The question is whether 'A' robbed 'B'. The facts are that shortly before the robbery, 'B' went to a fair with money in his possession and that he showed it to third persons.

(b) 'A' is tried for the murder of 'B'. The facts are that, 'A' murdered 'C' is known to 'B' and that 'B' had tried to extort money from 'A' by threatening to make his knowledge public.

(c) The question is whether 'A' committed crime at Calcutta on a certain day. The fact is that day 'A' was at Lahore.

கீழ்கண்டவைகளில் தொடர்புற்ற சங்கதிகளை எடுத்துக்கூறி விளக்குக:

(அ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரைக் கொள்ளையடித்தார் என்பது பிரச்சனையில் உள்ள சங்கதி. கொள்ளை அடிக்கப்படுவதற்குச் சற்று முன்பு பணத்தை எடுத்துக் கொண்டு 'ஆ' சந்தைக்குப் போனார்; தாம் பணம் வைத்திருக்கும் சங்கதியை மற்றவரிடம் குறிப்பிட்டார் என்ற சங்கதிகள்.

(ஆ) 'ஆ' என்பவரை கொலை செய்ததாக 'அ' என்பவரின் பேரில் விசாரணை நடக்கிறது. 'அ' இதற்கு முன் 'இ' என்பவரைக் கொலை செய்தார். இந்த சங்கதி 'ஆ'-க்குத் தெரிந்திருந்தது; தனக்கு தெரிந்ததை மற்றவர்களிடம் கூறிவிடுவேனென்று அச்சுறுத்தி 'அ'-விடம் பணம் பறிப்பதற்கு 'ஆ' முயற்சி செய்து வந்தார் என்ற சங்கதிகள்.

(இ) 'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட நாளில் கல்கத்தா நகரில் குற்றமொன்றை புரிந்தாரா என்பது கேள்வி. அந்த குறிப்பிட்ட நாளில் லாகூரில் இருந்தார் என்ற சங்கதி.

தீர்வுகள்:

(அ) இப்பிரச்சனை சாட்சியச் சட்டத்தின் 7-ஆம் பிரிவின் கீழான (அ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி பிரிவு 7-ஆனது, பிரச்சனையிலுள்ள சங்கதிகள் நிகழ்ந்த தருணமாக அல்லது அவற்றின்

காரணமாக அல்லது விளைவாக உள்ள சங்கதிகள் தொடர்புடைய சங்கதிகளாகும், என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், கொள்ளையடிக்கப்படுவதற்குச் சற்று முன்பு பணத்தை எடுத்துக் கொண்டு 'ஆ' சந்தைக்குப் போனார்; தாம் பணம் வைத்திருக்கும் சங்கதியை மற்றவரிடம் குறிப்பிட்டார் என்ற சங்கதிகள், பிரச்சனையிலுள்ள சங்கதியான 'அ' என்பவர் "ஆ' என்பவரைக் கொள்ளையடித்தாரா என்பது நிகழ்ந்த தருணத்தில் எழுந்தவையாக இருப்பதால், அவை தொடர்புடைய சங்கதிகளாகும்.

(ஆ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **8ஆவது பிரிவின் கீழான** *(அ)* என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். பிரிவு 8-ஆனது பிரச்சனையிலுள்ள எந்த ஒரு சங்கதிக்கான உள்நோக்கம், முன்னேற்பாடு மற்றும் முந்திய அல்லது பிந்திய நடத்தை ஆகியவை குறித்த சங்கதிகள் தொடர்புடைய சங்கதிகள் என்று குறிப்பிடுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'அ' இதற்கு முன் 'இ' என்பவரைக் கொலை செய்தார்; இந்தச் சங்கதி 'ஆ'க்குத் தெரிந்திருந்தது; தனக்குத் தெரிந்திருந்ததை மற்றவர்களிடம் கூறிவிடுவேனென்று அச்சுறுத்தி 'அ'-விடம் பணம் பறிப்பதற்கு 'ஆ' முயற்சி செய்து வந்தார் என்ற சங்கதிகள் அனைத்தும் தொடர்புடைய சங்கதிகளே. ஏனெனில் 'அ', தான் 'இ'-யை கொலை செய்த விஷயத்தை வெளியில் சொல்லி விடுவதாக தன்னை 'ஆ' அச்சுறுத்தி பணம் பறிப்பதற்கு முயற்சி செய்து வருவதால் அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும், என்பதே 'அ' என்பவர் 'இ'-யைக் கொலை செய்ததற்கான உள்நோக்கமாகும் (உட்கருத்தாகும்). இங்கு பிரச்சனையிலுள்ள சங்கதியின் உள்நோக்கம் தெளிவாகத் தெரிவதால், உள்நோக்கம் குறித்த அச்சங்கதிகள் தொடர்புடைய சங்கதிகளாகும். **(மேலும் விரிவாக வினா எண் 27-ல் காண்க).**

(இ) இப்பிரச்சனை சாட்சிய சட்டத்தின் **11வது பிரிவின் கீழான** *(அ)* என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மற்றபடி தொடர்புற்றவையாக இல்லாத சங்கதிகள் எப்போது தொடர்புற்றவையாக ஆகின்றன என பிரிவு 11 குறிப்பிடுகிறது.

'அ' என்பவர் குறிப்பிட்ட நாளில் கல்கத்தாவில் குற்றமொன்றைச் செய்தாரா என்ற கேள்வியில் அந்த நாளன்று 'அ' லாகூரில் இருந்தார் என்னும் சங்கதி தொடர்புடையதாகும்.

எவ்வாறெனில், சம்பந்தப்பட்ட நாளில் 'அ' லாகூரில் இருந்தார் என்னும் சங்கதி, அந்த நாளில் அவர் கல்கத்தாவில் குற்றமொன்றைச் செய்திருப்பார் என்பதை அசத்தியமாக்கும் அளவுக்கு இல்லாவிட்டாலும், அந்தச் செய்கையை பெரிதும் நிகழ்த்தற்கரியதாக்கும் அளவுக்குத் தொலைவான ஓரிடத்தில் (அக்குற்றம் செய்யப்பட்ட காலத்திற்கண்மையில்) 'அ' இருந்தார், என்னும் சங்கதி தொடர்புடையதாகும்.

இது 'வேற்றிடவாதம்' **(Alibi)** எனப்படுகிறது. (மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள வினா எண் 30–ல் காண்க).

9. A is tried for the murder of B by poison. The fact is that before the death of B, A procured similar that which was administered to B. Is this fact relevant?

B என்பவரை நஞ்சிட்டுக் கொலை செய்ததாக A என்பவர் மீது விசாரணை நடைபெறுகிறது. B மரணமடைவதற்கு முன்பு, அவருக்கு இடப்பட்டது போன்ற நஞ்சினை A முயற்சி செய்து பெற்றார் என்பது தீர்வினையானதா ?

தீர்வு:

சாட்சிய சட்டத்தின் 8-ஆவது பிரிவின்படி, தீர்வுதரு பொருண்மைக்கான அல்லது தீர்வுதவு பொருண்மைக்கான உட்கருத்தை அல்லது முன்னேற்பாட்டை காட்டும் அல்லது உருவாக்குகின்ற பொருண்மைகள் தொடர்புடையவை ஆகும்.

மேற்படி பிரச்சனை, பிரிவு 8-இன் கீழான (c) எனும் எடுத்துக் காட்டை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். இதன்படி B என்பவரை நஞ்சிட்டுக் கொலை செய்ததாக A என்பவர் மீது நடைபெற்ற விசாரணையில், B மரணமடைவதற்கு முன்பு, அவருக்கு இடப்பட்டது போன்ற நஞ்சினை A முயற்சி செய்து பெற்றார் என்பது தொடர்புடையது ஆகும். ஏனெனில் இங்கு சம்பந்தப்பட்ட நஞ்சை A முயற்சி செய்து பெற்றார் என்பது B-யை அந்த நஞ்சைக் கொண்டு கொல்வதற்கான முன்னேற்பாட்டைக் காட்டுகிறது. எனவே இதை மெய்ப்பிப்பதற்காக அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதாகும். (மேலும் விளக்கங்களுக்கு பக்கம் எண்கள். 76 மற்றும் 77-இல் காண்க.)

12. 'A' prosecutes 'B' for adultery with 'X', who is A's wife. B denies that 'X' is A's wife, but the court convicts 'B' for adultery. Afterwards 'X' is prosecuted for bigamy in marrying B during A's life time. X says that she was never A's wife. Whether the judgment against B is relevant in this case?

'B' என்பவர் தனது மனைவி 'X'யிடம் பிறன்மனை புணர்ந்ததாக 'X'-இன் கணவர் 'A', 'B' மீது வழக்கிடுகிறார். 'X' என்பவள் 'A'இன் மனைவி அல்ல என்று 'B' கூறுகிறார். ஆனாலும் பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்காக 'B' என்பவர் தண்டிக்கப்படுகிறார். பின்னர் 'A' என்பவர் தனது மனைவி 'X', 'B'யினை தான் உயிருடன் இருக்கும் போதே 'இருமணம்' செய்து கொண்டதாக வழக்கு போடுகிறார். அவ்வழக்கில் தான் ஒருபோதும் 'A'இன் மனைவி அல்ல என 'X' கூறுகிறார். இந்த வழக்கிற்கு, 'B' மீது கூறப்பட்ட முந்தைய தீர்ப்புரை தொடர்புடையதா?

தீர்வு:

இப்பிரச்சனையில் 'B'-க்கு எதிராக கூறப்பட்ட முந்தைய தீர்ப்புரை தொடர்புடையதல்ல. இதற்கான காரணங்களை நாம் பின்வருமாறு படிப்படியாக ஆராய வேண்டும். அவை:-

1. இப்பிரச்சனைக்கு விடை பகரும் பிரிவு 43-அய் முதற்கண் நாம் காணுதல் அவசியம். அதன்படி, பிரிவுகள் 40, 41 மற்றும் 42-இல் இடம் பெறாத மற்றத் தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் தொடர்புடையதல்ல. ஆனால் அத்தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் தீர்வுதரு பொருண்மையாகவோ, சாட்சியச் சட்டத்தின் வேறெந்த சட்ட வகைமுறையின் படியேனும் தீர்வுதவு பொருண்மையாக இருப்பின், தொடர்புடைய தாகும்.

2. தற்போது மேற்கண்ட பிரிவுகள் 40, 41 மற்றும் 42-இல் இடம் பெற்றுள்ள தீர்ப்புரைகள் எப்படி மேற்படி பிரச்சனைக்குப் பொருந்தாது என்பது பற்றி காண வேண்டும்.

3. முதலில், பிரிவு 40-இன்படி, இரண்டாவதாக தொடுக்கப்பட்ட உரிமை வழக்கை அல்லது வழக்கு விசாரணையை தடை செய்வதாக முந்தைய வழக்கில் தீர்ப்புரை வழங்கப்பட்டிருப்பின், அவை தொடர்புடைய தாகும். நமது மேற்படி பிரச்சனையில் அப்படித் தடை செய்யும் வண்ணம் தீர்ப்புரை ஏதும் பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்காக 'A' என்பவர், 'B' என்பவர் மீது தொடுத்த வழக்கில் வழங்கப்படவில்லை.

4. இரண்டாவதாக, பிரிவு 41-இன்படி, தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றம் உயிலியல், மணவியல், கடலியல் அல்லது நொடிப்பியல் அதிகாரவரம்பைச் செலுத்துங்கால், சட்டப்பூர்வமான தகுதி எதையேனும் எவருக்கேனும் கொடுத்தோ அல்லது எவரிடமிருந்தேனும் எடுத்தோ அல்லது எவரேனும் அத்தகைய தகுதிக்கு உரிமை உடையவரென்று விளம்பியோ பிறப்பிக்கும் முடிவான தீர்ப்புரை, உத்தரவு அல்லது தீர்ப்பாணை பிந்தய வழக்குகளில் தொடர்புடைய தாகும். மேற்படி பிரச்சனையில் கூறப்படும் முந்தைய தீர்ப்புரையில் அப்படிப்பட்ட விளம்புகை ஏதும் நீதிமன்றத்தால் கூறப்பட வில்லை. பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்காக 'B' என்பவருக்கு தண்டனைதான் வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பிரிவும் பொருந்தாது.

5. மூன்றாவதாக, பிரிவு 42-இன்படி, முன்சென்ற 41-ஆவது பிரிவில் குறிப்பிடப்படாத மற்றத் தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் விசாரணைக்குத் தொடர்புடைய ஒரு பொதுத் தன்மை வாய்ந்த விடயங்களுக்குச் சம்மந்தமுடையனவாக இருப்பின், அவை தொடர்புடையதாகும். மேற்படி பிரச்சனையில்

அத்தகு பொதுத்தன்மை வாய்ந்த தீர்ப்புரை ஏதும் பகரப்பட வில்லை. மாறாக தனியொரு மனிதனுக்கு சம்மந்தப்பட்டதாகும். எனவே இப்பிரிவும் பொருந்தாது.

6. எனவே பிரிவு 43-இன்படி மேற்படி பிரச்சனையில் வழங்கப் பட்டுள்ள தீர்ப்புரை, பிரிவுகள் 40, 41 மற்றும் 42-இன் கீழான தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகளின் வரம்பிற்குள் இடம் பெறவில்லை என்பது தெளிவு. மேலும் பிரிவுகள் 41, 42 ஆகியன உரிமையியல் வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். எனவே, தற்போது பிரிவு 43-இன் இரண்டாவது பகுதியின் வரம்பிற்குள் மேற்படி பிரச்சனை வருகிறதா என்பதை கவனிக்க வேண்டும். அதன்படி, அத் தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் தீர்வுதரு பொருண்மையாகவோ, சாட்சியச் சட்டத்தின் வேறெந்த சட்ட வகைமுறையின்படியேனும் தீர்வுதவு பொருண்மையாக இருப்பின், தொடர்புடையதாகும். ஆனால் அத்தீர்ப்புரைகள் முதலியன நமது பிரச்சனைக்கு முற்றிலும் பொருந்தாத நிலையில் உள்ளதால், அவை ஒரு தீவுதரு பொருண்மையாக (fact in issue) இல்லை. அதுபோல் சாட்சியச் சட்டத்தின் வேறெந்த பிரிவின்படி ஒரு தீர்வுதவு பொருண்மையாகவும் (relevant fact) இல்லை. எனவே 'B'-க்கு எதிராக கூறப்பட்ட முந்தைய தீர்ப்புரையானது, 'A' என்பவர் தனது மனைவி 'X', 'B'-யினை தான் உயிருடன் இருக்கும் போதே 'இருமணம்' செய்து கொண்டதாக தொடுக்கும் பிந்தய வழக்கிற்கும், அதில் தான் ஒரு போதும் 'A'-இன் மனைவி அல்ல என 'X' கூறுவதற்கும் தொடர்புடையதல்ல என்பதே முடிவான தீர்வாகும்.

மேற்படி பிரச்சனை பிரிவு 43-இன் கீழான (b) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும்.

13. A prosecutes B for stealing a cow from him. B is convicted. A afterwards, sues C for the cow, which B had sold him before his conviction. Whether the judgment against B is relevant in this case?

தனது பசுவை திருடியதாக 'அ' என்பவர், 'ஆ' என்பவர் மீது வழக்கு தொடர்கிறார். 'ஆ' தண்டிக்கப்படுகிறார். பசுவிற்காக அ என்பவர் இ மீது வழக்கு தொடர்கிறார். 'ஆ'விற்கு தண்டனை வழங்கு முன் 'ஆ' அதனை 'இ' என்பவரிடம் விற்றுள்ளார். ஆ என்பவருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்புரை தொடர்புடையதா?

தீர்வு:

இப்பிரச்சனை பிரிவு 43-இன் கீழான (c) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். பிரிவு 43-இன்படி முந்தய

வழக்கின் தீர்ப்புரைகள், உத்தரவுகள், தீர்ப்பாணைகள் எவ்வாறு மற்றொரு வழக்கிற்கு பொருந்தும் என்பதையும், எவ்வாறு பொருந்தாது என்பதையும் நாம் சென்ற பிரச்சனைக்கான தீர்வில் விரிவாகக் கண்டோம். எனவே அதன்படி மேற்படி பிரச்சனையில் 'அ'-வின் பசுவைத் திருடியதாக 'ஆ' என்பவருக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புரை பிரிவுகள் 40, 41 மற்றும் 12-இன் வரம்பிற்குள் இடம் பெறவில்லை. மேலும் அவை சாட்சியச் சட்டத்தின் வேறு வகைமுறைகளின் கீழ் தீர்வுதரு பொருண்மையாக அல்லது தீர்வுதவு பொருண்மையாக இல்லை. ஏனென்னில், அப்பசு திருடப்பட்டது என்பது 'இ' என்பவருக்குத் தெரியாது. ஏனெனில் 'ஆ'விற்கு தண்டனை வழங்கப்படும் முன்னர் அவர் அதனை 'இ'-க்கு விற்றுள்ளார். எனவே இது பொருண்மைகளின் தொடர்புடைமை பற்றி இந்திய சாட்சியச் சட்டம் கூறும் 6 முதல் 55 வரையிலான பிரிவுகளுக்குள் வரவில்லை. இதனால் 'ஆ' எதிராக வழங்கப்பட்ட தீர்ப்புரை 'இ' எதிரான வழக்கில் தொடர்புடையதல்ல என்பதே தீர்வு.

ஒத்தேற்புரை [Admission]

14. 'A' undertook to collect rent for 'B'. 'B' sued 'A' for not collecting rent due from 'C'. 'A' denied that rent was due from 'C' to 'B'. Can a statement by 'C' that he owed 'B' rent is admissible?

'ஆ' என்பவருக்காக வாடகை வசூலிப்பதற்கு 'அ' என்பவர் பொறுப்பேற்கிறார். 'இ' யமிருந்து வாடகை வசூலிக்கத் தவறியதாக 'அ' மீது 'ஆ' வழக்கு தொடுக்கிறார். 'இ'-இடமிருந்து வாடகை நிலுவையை 'அ' மறுக்கிறார். இச்சூழலில் " 'ஆ'-விற்கு நான் வாடகை பாக்கி தர வேண்டியுள்ளது' என 'இ' அளிக்கும் வாக்குமூலம் ஏற்கப்படக் கூடியதா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை பிரிவு 19-ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.

பிரிவு 19-ன்படி, "உரிமை வழக்கிற்குரிய தரப்பினர் எவருக்கேனும் எதிராக எவர்களது நிலை அல்லது கடப்பாடு மெய்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளதோ, அவர்களால் செய்யப்படும் உரைகளானவை, அவர்களால் அல்லது அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் உரிமை வழக்கொன்றில் அத்தகைய நிலை அல்லது கடப்பாடு சம்பந்தமாக அத்தகையவர்களுக்கெதிராக அவை தொடர்புற்றவையாக இருப்பதோடு, அவற்றைச் செய்கின்றவர் அத்தகைய நிலையைக் கொண்டிருக்கும் போதோ, அத்தகைய கடப்பாட்டிற்கு உட்பட்டிருக்கும் போதோ அவை செய்யப்படுமானால் ஒத்தேற்புரைகளாகும்,"

மேற்படி பிரிவின் சாரம்சம் யாதெனில், உரிமை வழக்கிற்குரிய தரப்பினருக்கெதிராக எவர்களது நிலை அல்லது கடப்பாடு மெய்ப்பிக்கப் பட வேண்டுமோ அவர்கள் ஒத்தேற்புரை செய்யலாம். அது ஏற்கப்படக் கூடியதே. (Admission can be made by persons whose position must be proved as against party to suit. The said admission are admissible.)

பிரிவு 19-ன் கீழான எடுத்துக்காட்டு பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி, 'B' என்பவருக்காக வாடகைகளை வசூலிக்கும் பொறுப்பை, 'A' என்பவர் மேற்கொள்கிறார். 'C' என்பவரிடமிருந்து 'B'-க்கு வர வேண்டிய வாடகையை வசூலிக்காததற்காக 'A' மீது 'B' வழக்கிடுகிறார். அந்த வாடகை 'C'-யிடமிருந்து 'B'-க்கு வர வேண்டியதில்லை என்று 'A' மறுக்கிறார்.

'B'-க்கு தம்மிடமிருந்து வாடகை செல்ல வேண்டியுள்ளது, என்று 'C' செய்யும் வாக்குமூலம் ஒத்தேற்புரையாகும் (admission); மற்றும் 'C'-யிடமிருந்து 'B'-க்கு வாடகை செல்ல வேண்டியிருந்தது என்பதை 'A' மறுப்பாரானால், 'A'-க்கு எதிராக அந்த வாக்குமூலம் ஒரு தீர்வுதவு பொருண்மையாகும். (அதாவது தொடர்புடைய பொருண்மையாகும்.)

எனவே மேற்படி பிரிவு 19 மற்றும் அதன் கீழான எடுத்துக் காட்டின்படி, 'C' செய்யும் வாக்குமூலம் ஒத்தேற்புரையாகும். அது ஏற்கப்படக் கூடியதேயாகும். மேலும் 'C'-யிடமிருந்து 'B'-க்கு வாடகை செல்ல வேண்டியிருந்தது என்பதை 'A' மறுப்பாரானால், 'C'-க்கு எதிராக அந்த வாக்குமூலம் ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்.

15. 'A' sold a camel to 'B'. When 'B' asked 'A' about the soundness of the camel, 'A' said, "Go and ask 'C'; 'C' knows all about it". State the nature of the statement given by 'C' and how far is it admissible in evidence.

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு ஒட்டகத்தை விற்றார். ஒட்டகத்தின் ஆரோக்கியத்தைப் பற்றி 'ஆ' கேட்டதற்கு, 'அ' என்பவர், " 'இ'-அய்க் கேளுங்கள்; 'இ'-க்கு இதைப் பற்றி எல்லாம் தெரியும்" என்றார். 'இ'-யினுடைய வாக்குமூலத்தின் தன்மையையும், அது சாட்சியமாக எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்பதையும் எடுத்துக் கூறுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனை இந்திய சாட்சிய சட்டத்தின் 20-வது பிரிவின் கீழான எடுத்துக்காட்டை அடியொற்றியதாகும்.

பிரிவு 20-ன்படி, "உரிமை வழக்கிற்குரிய தரப்பினரால், வழக்கில் உள்ள விஷயத்தைப் (matter in dispute) பற்றி, மற்றொருவரிடம் இருந்து தெரிந்து கொள்ள வெளிப்படையாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட

நபர்களால் செய்யப்படும் வாக்குமூலங்கள், ஒத்தேற்புரைகளாகும்" (Admissions by persons expressly referred to by party to suit).

மேற்படி பிரச்சனையின்படி, ஒட்டகத்தின் ஆரோக்கியத்தைப் பற்றி, 'ஆ' கேட்டதற்கு, 'அ' என்பவர் " 'இ'-யைக் கேளுங்கள்; 'இ'-க்கு இதைப் பற்றியெல்லாம் தெரியும்" என்று கூறுகிறார். அதாவது இங்கு பிரிவு 20-ன்படி, ஒட்டகத்தைப் பற்றிய விபரங்களைச் சொல்ல 'அ' என்பவர் 'இ'-க்கு வெளிப்படையாக பொறுப்பு ஒப்படைத்துள்ளார். எனவே, 'இ'-யினுடைய வாக்குமூலம், ஒட்டகத்தை விற்ற 'அ'-வின் சார்பான ஒத்தேற்புரை ஆகும். 'இ' கூறுவது 'அ'-வின் ஒத்தேற்புரை என்ற அளவில், சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். (மேலும் விரிவாக தெரிந்து கொள்ள வேண்டுமெனில், வினா எண் 35-ல் "யார் ஒத்தேற்புரையைச் செய்யலாம்" என்ற தலைப்பின் கீழ் வரும் (vii) பத்தியைக் காணவும்.)

16. The question between 'A' and 'B' is whether a certain document is forged or not. 'A' affirms that it is genuine and 'B' affirms that it is forged. Whether 'A' can prove a statement by himself that the document is genuine and by 'B' that the document is forged?

'அ'-வுக்கும் 'ஆ'-வுக்குமிடையே கேள்வி யாதெனில் ஒரு குறிப்பிட்ட ஆவணம் பொய்யாவணமா இல்லையா என்பதாகும். அந்த ஆவணம் உண்மையானதே என 'அ'-வும் பொய்யானதே என 'ஆ'-வும் உறுதியாகக் கூறுகின்றனர். அந்த ஆவணம் உண்மையானது என 'அ'-வும் அல்லது பொய்யானது என 'ஆ'-வும் தங்களது வாக்குமூலங்களின் மூலமாக மெய்ப்பிக்க இயலுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை பிரிவு 21-ன் கீழான எடுத்துக்காட்டு (a)-யை அப்படியே அடியொற்றியதாகும். அதன்படி A-யோ, B-யோ முறையே தங்களது வாக்குமூலங்களை தங்களது சார்பாக மெய்ப்பிக்க இயலாது. (விரிவான விளக்கத்திற்கு வினா எண் 36-ல் "ஒத்தேற்புரை மெய்ப்பிக்கப் படல் குறித்த பொது விதி" எனும் தலைப்பின் கீழ் காண்க.)

குற்ற ஏற்புரை [Confession]

17. An accused person makes the following statement to the police. "I will show you where I have hidden my share from the bank robbery." State precisely which portion of the above statement is admissible as evidence.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவலரிடம் கீழ்க்கண்டவற்றை கூறுகிறார். பாங்கு கொள்ளையில் என்னுடைய பங்கை எங்கு ஒளித்து

வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் காண்பிக்கிறேன்". மேற்கூறியவற்றில் எந்தப்பகுதி சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை சுருக்கமாக எடுத்துக் கூறுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனை குற்ற ஏற்புரையின் (Confession) பாற்பட்டதாகும். குற்ற ஏற்புரைகளைப் பற்றி சாட்சிய சட்டத்தின் 24 முதல் 30 வரையிலான பிரிவுகள் கூறுகின்றன.

மேற்படி பிரச்சனையில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவலரிடம் குற்ற ஏற்புரை அளிப்பதாக உள்ளது. பிரிவு 25 ஆனது ஒரு காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை எதுவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ள நபருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படுதல் ஆகாது, என்று கூறுகிறது.

ஆனால் பிரிவு 27ன்படி, குற்றஞ்சாட்டப்பட்டு காவல் துறையின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்டதாக பொருண்மை எதையேனும் பற்றி சாட்சியம் கொடுக்கப்படுகிறபோது, அத்தகைய தகவலில் எந்த அளவு, அந்த தகவலின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைக்கு சந்தேகத்திற் கிடமின்றி தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவு தகவலை அது குற்ற ஏற்புரையாக ஆனாலும் சரி அல்லது இல்லையென்றாலும் சரி, மெய்ப்பிக்கலாம்.

மேற்படி பிரச்சனையில், குற்றம் சாட்டப்பட்டவர், 'பாங்கு கொள்ளையில் என்னுடைய பங்கை எங்கு ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் காண்பிக்கிறேன்' என்று காவலரிடம் கூறுகிறார். இங்கு பிரிவு 25ன்படி, காவல் அலுவலரிடம் அளித்த குற்ற ஏற்புரை செல்லாது. ஆனால் பிரிவு 27ன்படி, குற்றஞ் சாட்டப்பட்ட நபரிடமிருந்து காவல்துறையினரால் பெறப்பட்ட தகவலில் எது அக்குற்றம் சம்பந்தப்பட்ட ஒரு பொருண்மையை கண்டுபிடிக்க உதவுகிறதோ அப்பொருண்மை குறித்த தகவலை மட்டும் செய்ப்பிக்கலாம். மேற்படி பிரச்சனையில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் செய்ததாகக் கூறும் கொள்ளையை சாட்சியமாகக் கொள்ளமுடியாது. ஆனால், அக் கொள்ளையில் தனது பங்கை எங்கு ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதைக் காட்டுவதாகக் கூறும் பகுதியை சாட்சியமாக எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் அத்தகவல் அக்கொள்ளைக் குற்றத்தை அவர் செய்திருப்பார் என்ற ஒரு பொருண்மையை கண்டுபிடிக்க உதவி செய்கிறது. எனவே அப் பொருண்மை குறித்த அத்தகவலை மட்டும் சாட்சியமாகக் கொண்டு மெய்ப்பிக்கலாம் என்பதே தீர்வு.

இது குறித்து பல வழக்குகள் வினா எண் 41-ல் விவாதிக்கப் பட்டுள்ளது. எனவே விரிவாக அறிந்து கொள்ள அவ்வினாவைக் காணவும்.

18. The brother of the accused visits the accused in the jail. The accused writes a letter to his father confessing the crime. The letter was entrusted to the brother to be handed over to the father. The jail authorities search the brother and recover the letter. Is the letter admissible in evidence?

குற்றம் சாட்டப்பட்டவருடைய சகோதரர் சிறைச்சாலைக்குச் சென்று குற்றம் சாட்டப்பட்டவரை பார்வையிடுகிறார். குற்றம் சாட்டப் பட்டவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு தன்னுடைய தகப்பனாருக்குக் கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதம் தகப்பனாருக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று சகோதரரிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறைச்சாலை அதிகாரிகள் சகோதரரைச் சோதித்து அந்தக் கடிதத்தைக் கைப்பற்றினார்கள். அந்த கடிதத்தை சான்றாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

தீர்வு:

மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் 26-வது பிரிவின்படி ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உடனடி முன்னிலையில் அளிக்கப்படும் குற்ற ஏற்புரையைத்தான், அதை அளிப்பவருக்கு எதிராக மெய்ப்பிக்கலாம். மேலும் குற்ற ஏற்புரை அளிக்கப்படுவதால், அவர் செய்த குற்றம் தொடர்பாக அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குற்ற ஏற்புரை அளிப்பவருக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். மேற்படி பிரச்சனையிலோ அப்படி எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. மேலும் அக்குற்ற ஏற்புரையானது மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் செய்யப்படவில்லை. எனவே அக்குற்ற ஏற்புரையானது விளைவுகளை அறிந்து தன்னிச்சையாக சாட்சிய சட்ட நடைமுறைகளின்படி செய்யப் படவில்லை. எனவே அக்குற்ற ஏற்புரை அடங்கிய அக்கடிதத்தை ஒரு சான்றாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே மேற்படி பிரச்சனைக்கு தீர்வு ஆகும். *(மேலும் விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டுமெனில் வினா எண்கள் 39 மற்றும் 40-அய்க் காணவும்.)*

19. The accused left a letter recording his confession near the dead body of his victim with the intention of being seen by the police officer. What is the nature of the statement? Whether it is relevant?

குற்றம் சாட்டப்பட்டவர் தான் கொலை செய்யப்பட்டவரின் உடலருகே குற்ற ஏற்புரையை பதிவு செய்து கடிதம் ஒன்றை காவல் துறை அலுவலர் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வைக்கின்றார். அக்கூற்றின் தன்மை என்ன? அது தொடர்புடையதுதானா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையின் பொருண்மைப்படி, காவல்துறை அலுவலர் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வைக்கப்பட்ட குற்ற ஏற்புரைக்

கடிதம் சாட்சியச் சட்டம் பிரிவு 25ன்படி செல்லத்தக்கதல்ல. மேலும் அது தொடர்புடையதல்ல. *(விரிவாக வினா எண் 47ல் காண்க.)*

20. The accused was charged with the murder of his daughter-in-law with whom he was always quarrelling, was on the day of the murder going out of the home, saying "I have finished her and with her the daily quarrels". Explain the nature of the statement.

தன்னுடன் எப்பொழுதும் சண்டையிடும் தன் மருமகளை கொன்றதற்காக குற்றம் சாட்டப்பட்டவரின் மீது வழக்கு தொடரப் பட்டது. கொலை நடந்த அன்று வீட்டை விட்டு செல்லும்போது "நான் அவளைத் தீர்த்துக்கட்டி விட்டேன் மற்றும் அதனுடன் தினசரி சண்டையையும்". இக்கூற்றின் தன்மையை ஆராய்க.

தீர்வு:

இப்பிரச்சனை **Sahoo v. State of U.P.**[1] என்ற வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றியதாகும்.

மேற்படி வழக்கில் குற்ற ஏற்வுரையின் வடிவம் (Form of Confession) தொடர்பான பிரச்சனை ஏற்பட்டது.

பொதுவாக ஒரு குற்ற ஏற்புரையானது எவ்வடிவத்திலும் இருக்கலாம். குற்ற ஏற்புரை நீதிமன்றத்தில் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு வழக்கப்பட்டால் அது 'நீதிமன்ற குற்ற ஏற்புரை' **(Judicial Confession)** எனப்படும். அதே நீதிமன்றத்திற்கு வெளியே வழங்கப்பட்டால், அது 'நீதிமன்றத்திற்கு புறத்தேயான குற்ற ஏற்புரை' **(Extra Judicial Confession)** எனப்படும். ஒருவர் தனக்குத்தானே பேசியதுகூட குற்ற ஏற்புரையாகக் கருதப்படலாம். அது மற்றொருவரால் கேட்கப் பட்டிருப்பின், அவரை ஒரு சாட்சியாக விசாரிக்கலாம்.

இக்கருத்தைத்தான் மேற்படி வழக்கின் தீர்ப்பும், மேற்படி பிரச்சனையையும் பிரதிபலிக்கிறது.

மேற்படி வழக்கில் 'நான் அவளைத் தீர்த்துக்கட்டிவிட்டேன் மற்றும் அதனுடன் தினசரி சண்டையையும்' என்ற கூற்று சாட்சிய சட்டப்படி ஒரு தொடர்புடைய குற்ற ஏற்புரையே. அதை பிறிதொரு நபரிடம் சொல்லவில்லை என்ற காரணத்திற்காக ஒரு குற்ற ஏற்புரைக்கு தொடர்பில்லாது போய்விட்டது என்று சொல்லவியலாது, என்று கூறப்பட்டது.

எனவே, மேற்படி வழக்கின்படி, அக்கூற்று குற்ற ஏற்புரையே (ஏற்புரைக்கு தொடர்புடையதே) என்பதுதான் மேற்படி பிரச்சனைக்குத் தீர்வாகும்.

1. A.I.R. 1966 S.C. 40

21. 'A' is on trial for the murder of 'C'. There is evidence to show that 'C' was murdered by 'A' and 'B' and 'B' said "'A' and I murdered 'C'". Whether the statement could be considered by the court against 'A' also?

'இ' என்பவரை கொலை செய்ததாக 'அ' என்பவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். 'இ'-யை 'அ'-வும் 'ஆ'-வும் கொலை செய்தார்கள் என்பதைக் காட்டுவதற்கு சான்று இருக்கிறது. "நானும் 'அ'-வும் சேர்ந்து 'இ'-யை கொலை செய்தோம்" என 'ஆ' கூறுகிறார். இக்கூற்றை 'அ'-வுக்கு எதிராகவும் நீதிமன்றம் எடுத்துக் கொள்ளலாமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம், பிரிவு 30-யும் அதன் கீழான இரண்டு எடுத்துக்காட்டுகளையும் முதற்கண் கவனித்தல் வேண்டும்.

பிரிவு 30-ன்படி, ஒரு குற்ற வழக்கில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் மீது ஒரே குற்றத்திற்காகவும், கூட்டாகவும் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் பொழுது, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் குற்ற ஏற்புரை (Confession) வழங்கினால், அது, அதை வழங்கியவரையும், குற்றம் நடக்கும் பொழுது அவருடன் இருந்த உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் கட்டுப்படுத்தும்.

இரண்டு எடுத்துக்காட்டுகள்: (a) 'இ' என்பவருடன் கொலைக்காக 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் கூட்டாக (jointly) விசாரணை செய்யப் படுகின்றனர். " 'அ'-வும் நானும் 'இ'-யைக் கொலை செய்தோம்" - என்று 'அ' சொன்னதாக மெய்ப்பிக்கப்படுகிறது. இந்த குற்ற ஏற்புரையினால் ஏற்படுகின்ற விளைவை 'ஆ'-க்கு எதிராக நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

(b) 'இ' என்பவரின் கொலைக்காக 'அ' என்பவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். 'அ' மற்றும் 'ஆ' ஆகியவர்களால் 'இ' கொலை செய்யப்பட்டார் என்பதற்கு சாட்சியும் இருக்கிறது. அப்பொழுது " 'அ'-வும் நானும் 'இ'-யை கொலை செய்தோம்" என்று ஆ கூறுகிறார்.

'ஆ'-வின் இந்த வாக்குமூலத்தை 'அ'-க்கு பாதகமாக நீதிமன்றத்தில் கருத்தில் எடுத்துக் கொள்ளலாகாது. ஏனெனில் 'ஆ' என்பவர் 'அ'-வுடன் சேர்ந்து கூட்டாக விசாரணை செய்யப்பட்டு வரவில்லை என்பதுதான்.

நமது மேற்படி பிரச்சணை மேற்படி பிரிவு 30-ன் கீழாக நாம் கண்ட எடுத்துக்காட்டு (b)-யை அப்படியே அடியொற்றியதாகும். எனவே, அதன்படி, 'ஆ'-வின் வாக்குமூலத்தை (கூற்றை) 'அ'-வுக்கு எதிராகவும் நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாகாது என்பதே தீர்வு.

சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் வாக்குமூலங்கள் (அல்லது) உரைகள் [Statements by persons who cannot be called as witnesses]

22. In a suit to recover possession of immovable property, 'A' tendered in evidence a horoscope and he said that it had been given to him by his mother and had been seen by other members of the family, 'A' was unable to say by whom the horoscope was written. Is the horoscope admissible in evidence?

அசையாச் சொத்தின் உடைமையைத் திரும்பப் பெறுவதற்கான வழக்கொன்றில் 'அ' என்பவர் அவருடைய தாயாரால் தனக்கு கொடுக்கப்பட்டதும் மேலும் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களால் பார்த்திருக்கப்பட்டதுமான ஒன்று என்று கூறி ஜாதகக்குறிப்பொன்றை சாட்சியமாக கொடுத்தார். அந்த ஜாதகக் குறிப்பு எவரால் எழுதப் பட்டது என்று 'அ' என்பவரால் சொல்லமுடியவில்லை. அந்த ஜாதகக் குறிப்பு சாட்சியமாகக் கொள்ளத்தக்கதாகுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் ஜாதகக் குறிப்பை எவர் எழுதினார் என்று 'அ'-வால் சொல்ல இயலவில்லை. ஏனெனில் அந்த ஜாதகக் குறிப்பு அவருக்கு அவரது தாயாரால் வழங்கப்பட்டது. மேலும் அந்த ஜாதகக் குறிப்பு குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களால் பார்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொதுவாக அந்த ஜாதகக் குறிப்பை எழுதியவரைக் கொண்டுதான், அதை மெய்ப்பிக்க வேண்டும். ஆனால், அவர் யாரென்று தெரியாத சூழ்நிலையில், சாட்சிய சட்டத்தின் பிரிவு 32ன்படி சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் எப்போது தொடர்புடையன என்று கவனிக்க வேண்டியுள்ளது.

அதன்படி, 32வது பிரிவின் 5வது கூறில் **[Section 32(5)]** கண்டுள்ளவாறு, சாட்சியாக அழைக்கப்பட முடியாதவரின் கூற்று திருமணம், தத்தெடுப்பு அல்லது இரத்த சம்பந்தப்பட்ட உறவை நிர்ணயிக் கத்தக்கதாக இருக்கும்போது, அது தொடர்புடையதாகும். ஆனால் அவ்வுறவை அறிந்து கொள்வதற்கு அவ்வுறவைச் செய்கின்றவருக்கு விசேஷ வாய்ப்பு இருந்து, அது குறித்து தகராறு ஏதும் எழுப்பப்படுவதற்கு முன்னமேயே அந்த உரை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பிரச்சனையானது, மேற்கண்ட பிரிவு 32(5)க்கு சரியாகப்

பொருந்துகிறது. மேற்படி பிரச்சனையில் கண்ட ஜாதகக்குறிப்பு தாம் யாருக்குப் பிறந்தோம் என்ற இரத்த சம்பந்தப்பட்ட உறவை நிர்ணயிக்கத் தக்கதாக உள்ளது. மேலும் அந்த ஜாதகக் குறிப்பை எழுதியவர், இன்னாருக்கு இன்னார் பிறந்தார் என்பதை அறியும் விசேஷ வாய்ப்பு பெற்றவராக உள்ளார். மேலும் ஜாதகக் குறிப்பு, பெரும்பாலும், பிறந்த உடனேயே கணிக்கப்பட்டுவிடுவதால், அச்சமயத்தில் தகராறு ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. பிறந்து வளர்ந்த பின்னர்தானே சொத்தின் உடைமையை திரும்பப் பெற 'அ' வழக்கிட்டுள்ளார். எனவே அந்த ஜாதகக் குறிப்பை ஒரு சாட்சியாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இது குறித்த தீர்ப்புகள் ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் வித்தியாசப்படுகின்றன. அத்தீர்ப்புகள் தொடர்பான வழக்குகள் வருமாறு:

Ram Narain Kallia v. Monace Bibee[1] என்ற வழக்கில், ஜாதகக் குறிப்பை எழுதிய நபரின் பெயர் அறியப்படவில்லையானால், அதை ஒரு சான்றாக அனுமதிக்க முடியாது, எனப்பட்டது.

Choat Hooi v. Khan Seni Bee[2] என்ற வழக்கில் ஜாதகக் குறிப்பை அல்லது பிறந்த நாள் புத்தகத்தை ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ளலாம் என்று பிரிவி கவுன்சில் கூறியது.

Ramanathan Chetty v. Murugappa Chetty[3] என்ற வழக்கில், இறந்துபோன ஒருவரால் தயாரிக்கப்பட்ட ஜாதகக் குறிப்பானது, அவர் அதில் விசேஷ அறிவு பெற்றிருக்கிறார் மற்றும் அவரது கையெழுத்து மெய்ப்பிக்கப்பட்ட ஒன்று என்னும் பட்சத்தில் சான்றாக அனுமதிக்கத் தக்கதாகும், என்று கூறப்பட்டது.

Secretary to Govt., Home Dept., v. Hari Rao[4] என்ற வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் ஒருபடி மேலே போய், ஜாதகக் குறிப்பானது சம்பந்தப்பட்ட நபர் பிறந்த பொழுது எழுதப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்றும், அது பின்னர் எழுதப்பட்டதாக இருப்பினும் அதில் கண்ட உரைகள் பிரிவு 32(5)ன்படி அனுமதிக்கத்தக்கதே என்று கூறியது.

23. There is a letter written by a woman since deceased describing her conversation with a third person saying that he had told her that among his revolutionary friends the accused was one. Is the letter admissible against the accused in the trial?

1. (1883)9 Cal.613
2. 3 IC 637 1915 PC 45
3. 33 IC 969
4. A.I.R. 1978 Mad. 42 at P. 43

குற்றம் சாட்டப்பட்டவர் அவரது புரட்சிகரமான நண்பர்களுள் அவரும் ஒரு நபர் என்று அவர் தன்னிடம் கூறினதாக ஒரு பெண்மணி (தற்பொழுது உயிரோடில்லாதவர்) மூன்றாம் நபருடன் தான் நடத்திய உரையாடலை விவரித்து எழுதிய கடிதத்தில் இருந்தது. குற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அக்கடிதத்தினை அனுமதிக்கலாமா?

தீர்வு:

மேற்படி கடிதத்தை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமதிக்கலாம். இப்பிரச்சனையில் தன்னுடைய புரட்சிகரமான நண்பர்களுள், குற்றஞ்சாட்டப்பட்டவரும் ஒருவர் என ஒரு மூன்றாவது நபர், பெண்மணி ஒருவரிடம் சொன்ன உரையை விவரித்து அப் பெண்மணி கடிதமொன்றை எழுதி வைக்கிறார். பின் இறந்து விடுகிறார். இக்கடிதமானது பிரிவு 32ன்படி தொடர்புடையதாகும். ஏனெனில் பிரிவு 32ன்படி சாட்சிகளாக நீதிமன்றத்தின் முன்னர் அழைக்கப்படமுடியாத நபர்களின் (இறந்துபோனவர்கள், கண்டுபிடிக்கப்பட முடியாதவர், சாட்சியம் கொடுக்கும் திறனற்றவர் அல்லது அதிக பொருள் மற்றும் நேரச் செலவு செய்வதின் பேரில் கிடைக்கக் கூடியவர்) சாட்சியங்கள் தொடர்புடையதாகும், என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் உயிருடன் இருந்தபோது அப்பெண்மணி கடிதம் ஒன்றை எழுதி வைக்கிறார். அதில் தன்னுடைய புரட்சிகரமான நண்பர்களுள் குற்றஞ்சாட்டப்பட்டவரும் ஒருவர், என மூன்றாவது நபர் ஒருவர் தம்மிடம் குறிப்பிட்டதாக எழுதி இருந்தார். எழுதியவர் தற்பொழுது இறந்துவிட்டபடியால், அது பிரிவு 32ன்படி தொடர்புடைய தாகும். அக்கடிதத்தை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமதிக்க லாம். இது கேள்விநிலைச் சான்றுக்கு (Hearsay Evidence) விதிவிலக்காகும். **(மேலும் விரிவாக வினா எண் 46-ல் காண்க.)**

மரண வாக்குமூலம் [Dying Declaration]

24. In a prosecution for murder, evidence is sought to be given of signs made by the deceased in answer to questions put to him regarding the persons who caused the fatal injuries. Is this evidence admissible?

கொலைக் குற்றத்திற்காகத் தொடரப்பட்ட ஒரு வழக்கில், மரணம் விளைவித்த காயங்களை யார் உண்டாக்கினார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் இறந்து போனவர் காட்டிய சைகைகளைச் சாட்சியமாக அளிக்க எத்தனிக்கப்படுகிறது. இந்த சாட்சியம் கொள்ளத் தக்கதா?

தீர்வு:

சாட்சிய சட்டத்தின் 32(1)வது பிரிவின்படி இறக்கும் தருவாயில் உள்ள ஒருவர், தன்னுடைய சாவிற்கு காரணமானதைப்பற்றியோ அல்லது தன்னுடைய சாவிற்கு காரணமாக அமைந்த சூழ்நிலைகளைப் பற்றியோ எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ கூறும் உரையே, மரண வாக்குமூலம் எனப்படும்.

பொதுவாக மரண வாக்குமூலமானது எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியானதாகவோ இருக்கலாம். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எந்தவொரு வடிவமும் கிடையாது.

Muniappan v. State of Madras[1] என்ற வழக்கில் இறக்குந் தருவாயில் உள்ளவர் பேச இயலாத சூழ்நிலையில் இருப்பின், தன்னுடைய கொலைக்கு காரணமானவரை அல்லது பொருளை சைகைகள் அல்லது அசைவுகள் (signs and gestures) மூலமும் அடையாளம் காட்டலாம். இது வாய்மொழி மரண வாக்குமூலத்தின் பாற்பட்டதே, என உச்ச நீதிமன்றம் கூறியது.

அதுபோல **Alisandari (Alias) Chandrasekhar v. King**[2] மற்றும் **Abdullah v. Queen Empress**[3] என்ற முந்தைய வழக்குகளிலும் இறக்குந் தருவாயில் உள்ள ஒருவர் செய்த சைகைகளும் அசைவுகளும் வாய் மொழியாக சமர்ப்பிக்கப்பட்ட மரண வாக்குமூலமாகவே கருதப்படும் எனப்பட்டது.

எனவே, மேற்படி பிரச்சனையில் மரணம் விளைவித்த காயங்களை யார் உண்டாக்கினார்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இறந்து போனவர் காட்டிய சைகைகள் அவரது மரண வாக்குமூலமே. இந்தச் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. *(மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் வினா எண் 48-ல் காண்க.)*

25. 'A' answers in signs to the questions put to him regarding the person who caused the fatal injuries and dies. In the prosecution for murder, are the signs given by 'A', the deceased person, admissible as evidence?

'அ' என்பவர் தனக்கு மரணம் விளைவிக்கக் கூடிய காயங்களை யார் ஏற்படுத்தினார்கள் என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சைகைகள் மூலம் விடையளித்து இறந்து விடுகிறார். கொலைக் குற்றத்திற்காக தொடரப்பட்ட வழக்கில் இறந்த 'அ' காட்டிய சைகைகள் ஏற்றுக் கொள்ளப்படுமா?

1. AIR 1962 S.C. 1252
2. LR 1937 A.C. 270
3. ILR 7 All. 385

தீர்வு:

(முந்திய பிரச்சனைக்கான தீர்வே, இப்பிரச்சனைக்கும் பொருந்தும். எனவே அதில் காணவும்.)

26. 'A' a lunatic before dying said that 'B' stabbed him. Is 'A's dying declaration admissible?

'அ' என்ற பித்தர் தான் இறக்கும்போது 'ஆ' என்பவர் தன்னை குத்தியதாக கூறினார். 'அ'வின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

தீர்வு:

மரண வாக்குமூலம் குறித்து இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32(1) கூறுகிறது. மரண வாக்குமூலம் அளிப்பவர், அதனை அளிக்கும்போது தகுதிறம் வாய்ந்த மனநிலை இருக்க வேண்டும். அதாவது நல்ல மன நிலையுடன் இருக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில் பித்து நிலையில் உள்ள 'அ' என்பவர் மரண வாக்குமூலம் அளிக்கிறார். இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஒருவர் மரண வாக்குமூலம் அளிக்கும் போது அவர் நல்ல மன நிலையில் இருந்தார் என்பதை மெய்பிக்க மருத்துவர் சாட்சியம் தேவை. எனினும் மரண வாக்குமூலம் நீதித்துறை நடுவரால் பதிவு செய்யப்படும் போது, அதை அளிக்கும் நபர் தகுதிறமுடைய மனநிலையுடன் இருக்கின்றார் என்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, முதல் நிலை வினாக்களாக, உங்களுடைய பெயர் என்ன, எங்கு இருக்கிறீர்கள், யார் உங்களைத் தாக்கியது போன்ற வினாக்களை கேட்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதற்கு அளிக்கப்படும் பதிலின் சரிநுட்பத் தன்மையைப் பொருத்து அவரது மனநிலையும் எடை போடப்படுகிறது. அப்போது மருத்துவர் சாட்சியத்தைக் கொண்டு உறுதியூட்டப்படக் கூடிய நிலை தவிர்க்கப்படுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் பித்தர் என்பது தெளிவாக உள்ளது. எனவே அவரது மரண வாக்குமூலத்தை ஏற்பதற்கில்லை என்பதே இங்கு முடியான தீர்வாகும். இதற்கு ஆதரவாக **Uka Ram v. State of Rajasthan**[1] எனும் வழக்கைச் சுட்டிக்காட்டலாம். இவ்வழக்கில், ஒரு பெண் தன் மீது வைக்கப்பட்ட தீயினால் ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறக்கும் தறுவாயில் இருந்தாள். அப்போது தன் மீது தீ வைத்தவர்கள் பற்றி வாக்குமூலம் அளிக்கிறாள். ஆனால் அவள் பித்துப் பிடித்தவள் என்பதற்கு மருத்துவ சான்றிதழ் உள்ளது. இங்கு அந்த மருத்துவ சான்றிதழைத்தான் கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர, அவள் எந்த இக்கட்டான நிலையில் மரண வாக்குமூலம் அளித்தாள் என்பதை அல்ல என்றும், எனவே அவளது மரண வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொள்ள முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

1. AIR 2001 SC 1914

சிறப்புச் சூழ்நிலைகளில் செய்யப்பட்ட உரைகள், கணக்குப் புத்தகத்திலுள்ள பதிவுகள்
[Statements made under special circumstances and entries in Book of Account]

27. 'A' sues 'B' for Rs.1,000 and shows entries in his account book, showing B to be indebted to him for that amount. Examine the relevancy and sufficiency of the entries.

'அ' என்பவர் 'ஆ' என்பவர் மீது ரூ. 1,000க்கு வழக்குத் தொடர்ந்து, இத்தொகைக்கு அவருக்கு 'ஆ' கடன்பட்டிருப்பதாகக் காட்டுகின்ற அவருடைய கணக்குப் புத்தகங்களில் உள்ள பதிவுகளைக் காட்டுகின்றார். இதன் தொடர்புடைய மேற்படி கணக்குப் பதிவுகள் போதுமானதா? ஆராய்க.

தீர்வு:

சாட்சியச் சட்டத்தின் 34வது பிரிவு, அலுவல் நடப்பு முறையில் ஒழுங்காக வைத்து வரப்பட்ட கணக்குப் புத்தகங்களின் பதிவுகள், நீதிமன்றம் விசாரிக்க வேண்டிய ஒரு விஷயத்தை அவை குறிக்கும் பொழுதெல்லாம் தொடர்புற்றவையாகும்; ஆனால் தனித்து அத்தகைய உரைகள் மட்டுமே எவர் மீதும் கடப்பாட்டைச் சுமத்துவதற்குப் போதுமான சாட்சியம் ஆகா, என்று கூறுகிறது.

எனவே மேற்படி பிரச்சனையில் கூறப்பட்டுள்ள கணக்குப் பதிவுகள் தொடர்புடையவைதான். இதில் சந்தேகம் ஏதுமில்லை. மேற்படி பிரிவின்படி அத்தகைய பதிவுகள் மட்டுமே எவருக்கெதிராகவும் ஒரு பொறுப்பை சுமத்துவதற்குப் போதுமான சாட்சியம் ஆகாது. அதை பிற சாட்சியங்களின் துணை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் (Corroborated by other evidence).

மூன்றாம் நபர்களின் கருத்துரைகள், எப்போது தொடர்புடையன?
[Opinions of third persons, when relevant]

28. The question is, wheter death of A was caused by poison. Efforts are taken to obtain the opinion of the experts as to

the symptoms produced by the poison by which A is supposed to have died. Analyse the relevancy of the experts opinion.

அ என்பவரது மரணம் நஞ்சு அருந்தியதால் ஏற்பட்டதா என்பது கேள்வி. அ என்பவருக்கு மரணம் விளைவித்ததாக கருதப்படும் நஞ்சின் அறிகுறிகள் குறித்து வல்லுநர்களின் கருத்தறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வல்லுநரின் கருத்து குறித்த தொடர்பு நிலையை ஆராய்க.

தீர்வு:

இப்பிரச்சனை பிரிவு 45-இன் கீழான (a) எனும் எடுத்துக்காட்டை ஒத்ததாகும். இங்கு அ என்பவருக்கு மரணம் விளைவித்ததாக கருதப்படும் நஞ்சின் அறிகுறிகள் குறித்து வல்லுநர்களின் கருத்தறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிரிவு 45-இன்படி வல்லுநர்களின் அக்கருத்துக்கள் 'அ' என்பவரது மரணம் நஞ்சு அருந்தியதால் ஏற்பட்டதா எனும் கேள்வியில் தொடர்புடையதே என்பது தீர்வாகும். (மேலும் மேற்படி பிரச்சனையில் வல்லுநர்களின் கருத்து குறித்த தொடர்புநிலை பற்றி விளக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. எனவே பிரிவு 45-அய் விரிவாக எழுத வேண்டும். அதற்கு இந்நூலின் பக்கம் எண். 171-இன் கீழ்ப் பகுதியில் 'வல்லுநர் கருத்துக்களின் தொடர்புடைமை' (Relevancy of Expert Opinion) எனும் தலைப்பில் உள்ளவற்றை தேர்வில் எழுதினால்தான் முழு மதிப்பெண் கிட்டும்.)

29. The question is, whether a given letter is in the handwriting of 'A', a merchant in London. 'B' is a merchant in Calcutta, who has written letters addressed to 'A' and received letters purporting to be written by him. 'C' is 'B's clerk, whose duty it was to examine and file 'B's correspondence. 'D' is 'B's broker, to whom 'B' habitually submitted the letters purporting to be written by 'A' for the purpose of advising with him thereon. Neither 'B', 'C' or 'D' ever saw 'A' write. Whether 'B' 'C' or 'D' can identify the handwriting of 'A'?

ஒரு குறிப்பிட்ட கடிதத்தில் உள்ள கையெழுத்து, லண்டனில் உள்ள வியாபாரியான 'அ' என்பவருடையதா என்பது கேள்வி. 'ஆ' என்பவர் கல்கத்தாவில் உள்ள ஒரு வியாபாரி. அவர் 'அ'வுக்கு முகவரியிட்டுக் கடிதங்கள் எழுதியிருக்கிறார் மற்றும் அவரால் எழுதப்பட்டதாகப் புலப்படுகிற கடிதங்களைப் பெற்றிருக்கின்றார். 'இ' என்பவர் 'ஆ'-வின் எழுத்தர். 'ஆ'-வின் கடிதப் போக்குவரத்தைப் பரிசீலனை செய்து கடிதங்களைக் கோத்து வைக்க வேண்டியது அவருடைய கடமை. 'ஈ' என்பவர் 'ஆ'வின் தரகர். அவரிடம் ஆலோசனை பெறும் நோக்கத்துடன் 'அ'வினால் எழுதப்பட்டதாகப் புலப்படுகிற கடிதங்களை 'ஆ' வாடிக்கையாகவே 'ஈ' கவனத்திற்கு வைத்து வந்தார். 'ஆ', 'இ' அல்லது 'ஈ'

இவர்களுள் எவரும் 'அ' எழுதியதை ஒரு போதும் பார்த்ததில்லை. 'அ'-வின் கையெழுத்தை அடையாளம் காட்டிட 'ஆ', 'இ' அல்லது 'ஈ'யால் இயலுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் கண்ட 'அ'-வின் கையெழுத்தை அடையாளம் காட்டிட 'ஆ', 'இ' அல்லது 'ஈ'யால் இயலும். இத்தீர்விற்குக் காரணங்கள் வருமாறு:-

1. இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 47 பின்வருமாறு கூறுகிறது. நீதிமன்றம் ஆவணம் ஏதேனும் எவரால் எழுதப்பட்டது அல்லது கையொப்பமிடப்பட்டது என்பது பற்றி ஒரு கருத்துக்கு வர வேண்டியிருக்கும்போது, அது எவரால் எழுதப்பட்டதாக அல்லது கையொப்பமிடப்பட்டதாக உத்தேசிக்கப்படுகிறதோ, அவரது கையெழுத்தோடு பழக்கப்பட்டுள்ள எவரேனும், அது அவரால் எழுதப்பட்டது அல்லது கையொப்பமிடப்பட்டது என்றோ அல்லது அது அவரால் எழுதப்படவில்லை அல்லது கையொப்பமிடப்படவில்லை என்றோ சொல்லும் கருத்து ஒரு தொடர்புடைய (தீர்வுதவு) பொருண்மையாகும்.

2. இப்பிரிவின் கீழ் ஓர் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 'கையெழுத்தோடு பழக்கப்பட்டுள்ளவர்' என்பதில் பின்வரும் நபர்கள் அடங்குவர். (1) அந்நபர் எழுதுவதை பார்த்து பழக்கப் பட்டவர்; (2) தாம் எழுதிய ஆவணங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அந்நபர் எழுதிய ஆவணங்களைப் பெற்றிருப்பவர்; (எடுத்துக்காட்டாக, அந்நபரின் பதில் கடிதங்களைப் பெற்றவர்); (3) சாதாரண அலுவல் நடப்பு முறையில் அந்நபரால் எழுதப்பட்ட ஆவணங்களைப் பெற்றிருப்பவர்; (எடுத்துக் காட்டாக, அந்நபரின் கடிதங்களை அலுவல் முறையில் கோப்பிட்டு வைக்கும் எழுத்தர்).

3. தற்போது மேற்படி பிரச்சனையை பிரிவு 47 மற்றும் அதன் கீழான விளக்கத்திற்கு பொருத்திப் பார்த்தால் நாம் அளித்த தீர்வு தெளிவாகும். அதாவது மேற்படி பிரச்சனையில் 'ஆ', 'இ' அல்லது 'ஈ' இவர்களுள் எவரும் 'அ' எழுதியதை ஒருபோதும் பார்த்ததில்லை. எனினும் 'ஆ' என்பவர் 'அ'-விடமிருந்து அவரது பதில் கடிதங்களைப் பெற்றுள்ளார். 'இ' என்பவர் 'ஆ'-க்கு வரும் கடிதங்களை பரிசீலித்து கோப்பிட்டுள்ள எழுத்தர். 'ஈ' என்பவர் 'அ' என்பவர் 'ஆ' எழுதும் கடிதங்களின் மீது ஆலோசனை வழங்கியவர். இவர்கள் எல்லோரும் 'அ'-வின் கையெழுத்தோடு பழக்கப்பட்டுள்ளவர்களாக உள்ளனர். எனவே 'அ'-வின் கையெழுத்தை அடையாளம் காட்டிட 'ஆ', 'இ' அல்லது 'ஈ'யால் இயலும் என்பதே திட்டவட்டமான தீர்வாகும்.

4. இப்பிரச்சனை பிரிவு 47-இன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும்.

ஆவணம் வடிவில் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், கொடைகள் அல்லது சொத்து குறித்த பிற ஏற்பாடுகளின் சரத்துகள் பற்றிய சாட்சியம்

[Evidence of terms of contracts, grants and other dispositions of property reduced to form of document]

30. 'A' gives 'B' a receipt for money paid by 'B'. Oral evidence is offered of the payment. Is this evidence admissible?

'ஆ'-வினால் செலுத்தப்பட்ட பணத்திற்காக 'அ' என்பவர் ரசீது ஒன்றை அளிக்கிறார். பணம் செலுத்தப்பட்டதைப் பற்றி வாய்மொழி சாட்சியம் அளிக்கப் படுகிறது. இச்சான்று அனுமதிக்கத்தக்கதா?

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனையில் கூறப்படும் வாய்மொழிச் சாட்சியம் அனுமதிக்கத்தக்கதே. இதற்கான காரணங்களை அறிய இந்நூலின் பக்கம் எண். 210-இல் உள்ள 'பிரிவு 91 கூறுவதாவது' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை படித்தறிக. இப்பிரச்சனை பிரிவு 91-இன் கீழான எடுத்துக்காட்டு (e) என்பதை அப்படியே அடியொற்றியதாகும்.

வாய்மொழி உடன்படிக்கை பற்றிய சாட்சியம் ஒதுக்கப்படுதல்

[Exclusion of evidence of Oral Agreement]

31. 'A' sells 'B' a horse and verbally warrants him sound. 'A' gives 'B' a paper in these words, "Bought of 'A's horse for Rs.5,000'. Can 'B' prove the verbal warranty?

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு திறம் வாய்ந்த குதிரை என்று வாய்மொழியாக உத்திரவாதமளித்து விற்கிறார். 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு தாளில் எழுத்து மூலமாக " 'அ'-வின் குதிரை ரூ.5,000க்கு வாங்கப்படுகிறது" என்று குறிப்பிடுகிறார். அவ்வாய்மொழி உத்திரவாதத்தை 'ஆ' மெய்ப்பிக்க இயலுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை இந்திய சாட்சிய சட்டத்தின் 'ஆவண சாட்சியத்தால் வாய்மொழிச் சாட்சியம் ஒதுக்கப்படுதல்' என்ற அத்தியாயத்தில் 92வது பிரிவின் 2வது விதிவிலக்கையும் அதன் கீழான **(g)** என்ற எடுத்துக் காட்டையும் ஒத்ததாகும்.

92வது பிரிவின்படி ஆவணமொன்றில் சம்பந்தப்பட்ட பிரச்சனையின் சரத்துகள் தெளிவாகக் கூறப்பட்டிருக்குமிடத்து, அவற்றை மாறுபடுத்தும் அல்லது முரண்படுத்தும் அளவிற்கு வாய்மொழிச் சாட்சியம் எதுவும் அந்த ஆவணத் தரப்பினர்களிடையே அனுமதிக்கப்படாது. ஆனால் இப்பொதுவிதிக்கு 6 விதிவிலக்குகள் உள்ளன. அவற்றில் நமது மேற்படி பிரச்சனை, பிரிவு 92ன் கீழான 2வது விதிவிலக்கின் கீழ் வருகிறது.

அதன்படி எந்த விஷயத்தைப் பற்றி ஒரு ஆவணம் மௌனமாக (silent) இருக்கிறதோ மற்றும் எந்த விஷயம் அதன் சரத்துகளுக்கு முரணானதாக இல்லையோ அந்த விஷயம் பற்றி தனியான வாய்மொழி உடன்படிக்கை உள்ளது என்பதை சாட்சியமளித்து நிரூபிக்கலாம்.

இது மேற்படி பிரிவின் கீழான (g) என்ற எடுத்துக்காட்டால் விளக்கப்படுகிறது. அதன்படி, 'அ', 'ஆ'-க்குக் குதிரையொன்றை விற்கிறார்; மற்றும் அது பழுதற்றது என்று வாய்மொழியாக உத்திரவாதமளிக்கிறார். 'அ'-விடமிருந்து குதிரையொன்று ரூ5000/-க்கு வாங்கப்பட்டது' என்னும் சொற்கள் அடங்கிய தாளொன்றை 'ஆ'-க்கு 'அ' கொடுக்கிறார். அந்த வாய்மொழி உத்திரவாதத்தை 'ஆ' மெய்ப்பிக்கலாம்.

நமது மேற்படி பிரச்சனையிலும் மேற்கண்டவாறு வாய்மொழி உத்திரவாதமளிக்கிறது. ஆனால் குதிரையின் விலையும் அது யாரால் வாங்கப்பட்டது என்பது மட்டுமே தாளில் எழுதப்பட்டுள்ளதே தவிர, குதிரை நிறம் வாய்ந்தது குறித்த உத்திரவாதம் குறித்து எதுவும் எழுதப்படவில்லை. உத்திரவாதத்தைக் குறித்து, அத்தாளில் மௌனம் சாதிக்கப்படுகிறது. எனவே 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு அக்குதிரை நிறம் வாய்ந்தது என்று வாய்மொழியாகக் கூறியதை, 'ஆ' மெய்ப்பிக்கலாம். (மேலும் விரிவாக தெரிந்து கொள்ள வினா எண் 65-ல் காண்க.)

அய்யத்திற்குரிய பத்திரத்தை விளக்கவோ, திருத்தவோ கொடுக்கப்படும் சாட்சியத்தை ஒதுக்குதல்

[Exclusion of evidence to explain or amend ambiguos document]

32. 'A' agrees in writing, to sell his house to 'B' for Rs.1,00,000 or Rs.1,50,000. Can 'A' be allowed to give evidence to show that he meant Rs.1,50,000?

'அ' தனது வீட்டை 'ஆ'-க்கு ரூ.1,00,000 அல்லது ரூ.1,50,000க்கு விற்க எழுத்து மூலம் ஒப்புக்கொள்கிறார். தான் கருதியது ரூ.1,50,000தான் என்று காண்பிக்க சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படலாமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை சாட்சிய சட்டத்தின் 93-வது விரிவின் கீழான (அ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும்.

பிரிவு 93 ஆனது, அய்யத்திற்குரிய பத்திரத்தை விளக்கவோ, திருத்தவோ வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படுதல் கூடாது, என்று கூறுகிறது.

அதன்படி, 'அ' தனது வீட்டை 'ஆ'-க்கு ரூ.1,00,000 அல்லது ரூ1,50,000க்கு விற்க எழுத்து மூலம் ஒப்புக்கொண்டு, பின் தான் கருதியது ரூ1,50,000தான் என்று காண்பிக்க சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படக் கூடாது.

33. A agreed in writing to sell a cow to B for Rs.2,000 or Rs.3,000. B wants to lead evidence to show the price as Rs.2,000. Can he do so?

ரூ.2,000 அல்லது ரூ.3,000-க்கு ஒரு பசுவை B-க்கு விற்க எழுத்து மூலம் A ஒப்புக் கொண்டார். விலை ரூ.2,000 தான் எனக்காட்ட சாட்சியம் கொடுக்க B வேண்டினார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கான தீர்வே இதற்கும் பொருந்தும்.

இரண்டு பொருண்மைத் தொகுப்புகளில் எதனுடனும் முழுவதும் சரியாகப் பொருந்தாத மொழி அவற்றுள் எந்தத் தொகுப்புடன் பொருந்துகிறது என்பது குறித்த சாட்சியம்

[Evidence as to application of language to one of two sets of facts, to neither of which the whole correctly applies]

34. 'A' agrees to sell to 'B' "My land at 'X' in the occupa-

tion of Y". 'A' has land at 'X', but not in the occupation of 'Y', and he has land in the occupation of 'Y', but it has not at 'X'. Can evidence be given of facts showing which he meant to sell?

'X' என்ற இடத்தில் 'Y' என்பவரின் வசத்தில் இருக்கும் தன் நிலத்தை 'B' என்பவருக்கு விற்க 'A' ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் 'X' என்ற இடத்தில் இருக்கும் 'A'-க்கு சொந்தமான நிலம் 'Y'-ன் வசம் இல்லை. அதே போல் 'Y'-ன் வசம் உள்ள 'A'-ன் நிலம் 'X' என்ற இடத்தில் இல்லை. எந்த நிலத்தை விற்க எண்ணி 'A' ஒப்புதல் அளித்தார் என சாட்சியம் அளிக்க இயலுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை பிரிவு 97-ன் கீழ் வரும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். அதன்படி மேற்படி பிரச்சனையில் கண்டவாறு 'A' சாட்சியம் அளிக்க இயலும். (விரிவான விளக்கத்திற்கு வினா எண் 66-ல் "பிரிவு 97 கூறுவதாவது" எனும் தலைப்பின் கீழ் காண்க.)

பத்திரங்களின் சரத்துக்களை மாற்றியமைக்கின்ற உடன்படிக்கை பற்றிய சாட்சியம் தரவல்ல நபர்கள்

[Who may give evidence of agreement varying terms of documents]

35. 'A' and 'B' execute a written agreement under which 'A' agrees to sell certain cotton to 'B' the price of which had to be paid on delivery. In a suit to recover the money by 'A', can 'B' adduce evidence of an oral agreement between them to give three months credit.

'அ'-விற்கும் 'ஆ'-விற்கும் இடையிலான எழுதப்பட்ட ஒப்பந்தப்படி 'அ' சில பருத்தி நூலை 'ஆ'-விற்கு விற்க ஒப்புக் கொண்டு அதன் விலையைப் பொருள் கொடுக்கின்றபொழுது பெற்றுக்கொள்ள ஒத்துக்கொள்கிறார். பொருளின் விலையைப் பெற 'அ' தொடுத்த வழக்கில், கிரயத் தொகையை கொடுக்க 'அ' என்பவர் 'ஆ'-விற்கு முன்ற மாத தவணை கொடுத்தார் என்ற வாய்மொழி ஒப்பந்தத்தை நிருபிக்க முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை சாட்சியச் சட்டத்தின் 99வது பிரிவின் கீழான

எடுத்துக்காட்டை ஒத்ததாகும். 99வது பிரிவானது, ஒரு பத்திரத்திற்குரிய தரப்பினர்களாகவோ, அல்லது அவர்களின் உரிமைப் பிரதிநிதிகளாகவோ இல்லாதவர்கள் அந்தப் பத்திரத்தின் ஷரத்துக்களை மாற்றியமைக்கின்ற வகையில் ஏககால உடன்படிக்கை ஒன்று இருந்தது என்பதைக் காட்ட முனைகிற சங்கதிகள் எவற்றைப் பற்றியும் சாட்சியம் கொடுக்கலாம், என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'அ'விற்கும் 'ஆ'விற்கும் இடையிலான எழுதப்பட்ட ஒப்பந்தப்படி 'அ' சில பருத்திநூலை 'ஆ'விற்கு விற்க ஒப்புக்கொண்டு அதன் விலையைப் பொருள் கொடுக்கின்ற பொழுது பெற்றுக்கொள்ள ஒத்துக் கொள்கின்றார். பொருளின் விலையைப் பெற 'அ' தொடுத்த வழக்கில் கிரயத் தொகையை கொடுக்க 'அ' என்பவர் 'ஆ'-விற்கு மூன்று மாத தவணை கொடுத்தார் என்ற வாய்மொழி ஒப்பந்தத்தை பிரிவு 99ன் வாசகங்களின்படி, அது 'அ' மற்றும் 'ஆ' சம்பந்தப்பட்ட மட்டில், அதை மெய்ப்பிக்க சாட்சியம் கொடுக்கப்படக் கூடாது. ஆனால் அவ்வாய்மொழி ஒப்பந்தமானது 'இ'-யினை பாதித்திருந்தால், அவர் அவ்வாறு ஒரு வாய்மொழி ஒப்பந்தம் இருந்ததை காட்ட முனைகிற சங்கதிகள் எதனைப் பற்றியும் சாட்சியம் கொடுத்து மெய்ப்பிக்கலாம் (நிரூபிக்கலாம்).

மெய்ப்பிக்கும் சுமை [Burden of Proof]

36. A landlord alleged against his tenant that the tenant did not repair the premises in question. The tenant pleaded that he did repair the premises. Who has to prove that the premises were not repaired? Explain the reasons.

ஒரு வீட்டின் உரிமையாளர் தனது வீட்டில் குடியிருப்பவர் வீட்டை பழுதுபார்க்கவில்லை என்று வாதிட்டார். குடியிருப்பவர் வீட்டை பழுது பார்த்ததாக வாதிட்டார். வீட்டை பழுதுபார்க்கவில்லை என்பதை யார் மெய்ப்பிக்க வேண்டும்? காரணங்களை விளக்குக.

தீர்வு:

சாட்சியச் சட்டத்தின் 101வது பிரிவு மெய்ப்பிக்கும் சுமை (Burden of Proof) பற்றி குறிப்பிடுகிறது. அதன்படி சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும் பற்றி எந்த நீதிமன்றமேனும் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எவரேனும் கோரி, அது அவர் அறைகிற சங்கதிகளின் உண்மையைப் (existence of facts which he asserts) பொறுத்திறுக்குமேயானால், அவர், அந்த சங்கதிகளின் உண்மையை மெய்ப்பித்தல் வேண்டும்;

ஒருவர் எந்தச் சங்கதியின் உண்மையையேனும் மெய்ப்பிக்க கடமைப் பட்டிருக்கும்போது மெய்ப்பிக்கும் சுமை அவரைச் சார்ந்திருப்பதாகச் சொல்லப்படும்.

தற்பொழுது மேற்படி பிரிவைக் குறித்து சற்று விவாதிப்போம். ஒரு வழக்கில் பொருண்மை மெய்ப்பித்தலானது, மெய்ப்பிக்கும் சுமையைப் பொறுத்தவரை, இரண்டு விதங்களில் குறிப்பிடலாம். அவை, ஒருவர் நேர்மறைவாக ஒரு பொருண்மையை உறுதிப்படுத்துதல் (positively affirm a fact) மற்றும் மற்றொருவர் அதை எதிர்மறையாக மறுத்தல் (negatively deny it). பொதுவாக, பொருண்மை ஒன்று இருப்பதாக நேர்மறையாக ஒருவர் அறையும் (asserts) பொழுது, அப்பொருண்மையை மெய்ப்பிக்கும் சுமை அவரிடத்தில் தான் உள்ளது. காரணம் யாதெனில், எதிர்மறையாக குறிப்பிட்டதை மெய்ப்பிப்பதைக் காட்டிலும் நேர்மறையாக குறிப்பிட்டதை மெய்ப்பிப்பது எளிது. உதாரணமாக, ஒரு வழக்கில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதா என்பது பிரச்சனை. இங்கு அவ்வாறு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்று நேர்மறையாக குறிப்பிடும் தப்பினரே, அப்பொருண்மையை (ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்ற பொருண்மையை) மெய்ப்பித்தல் வேண்டும். இதிலிருந்து பொருண்மை ஒன்றை நேர்மறையாக இருப்பதாகக் கூறும் தரப்பினரே, அதை மெய்ப்பித்தல் வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தற்பொழுது நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். மேற்படி பிரச்சனை **Soward Vs. Legatt**[1] என்ற வழக்கினை ஒத்ததாகும்.

மேற்படி பிரச்சனையில், வீட்டின் உரிமையாளர், குடியிருப்பவர் வீட்டைப் பழுது பார்க்கவில்லை என்று எதிர்மறையாகக் குறிப்பிடுகிறார். குடியிருப்பவரோ, தாம் வீட்டை பழுதுபார்த்திருப்பதாக நேர்மறையாகக் குறிப்பிடுகிறார். இங்கு மேற்படி பிரிவு 101ன்படி பார்த்தால், வீட்டை பழுது பார்த்துவிட்டதாக நேர்மறையாகக் குறிப்பிடும் அக்குடியிருப்பவரோ, அப்பொருண்மையை மெய்ப்பித்தாக வேண்டும், என்று தோன்றும். ஆனால் சரியான நிலை இதுவல்ல. ஏனெனில் ஒரு தரப்பினர் நேர்மறையாக ஒரு பொருண்மையை அறையும்பொழுது, நீதிமன்றம் அவ்வாறு சொல்லப்பட்ட பொருண்மையின் சாராம்சத்தைப் பார்க்கின்றதேயொழிய அப்பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியை அல்ல (Court looks to the substance and not the language used).

இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய **Lord Abinger C.B.** அவர்கள் கூறுகையில், மேற்படி நேர்மறை வாசகம் இலக்கண ரீதியாக சரியே தவிர, சாராம்சத்தைப் பார்க்கையில், பழுது பார்க்கப்படவில்லை என எதிர்மறையாக கூறும் தரப்பினரே அதை மெய்ப்பித்தல் வேண்டும் என்று கூறினார். இங்கு **'குடியிருப்பவர் வீட்டை பழுதுபார்க்கவில்லை' (you did not repair)** என்று வீட்டின் சொந்தக்காரர் எதிர்மறையானது போல கூறியதை, **'குடியிருப்பவர் வீட்டை பழுதடைந்து போகும்படி செய்துவிட்டார்' (you let the house become dilapilated)** என்று சற்று

1. (1836) 7 C & P. 613 : 173 E.R. 20

மாற்றினையல் அது நேர்மறையானதாக ஆகி விடுகிறது. எனவே அறையப்படும் பொருண்மைகூன உள்ளடக்கத்தைக் கொண்டே, அதை மெய்ப்பிக்கும் பொறுப்பு யாருடையது என்பதை தீர்மானிக்க வேண்டும் என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது. எனவே, 'வீடு பழுதுபார்க்கப் படவில்லை' என்ற பொருண்மையை வீட்டின் சொந்தக்காரரே மெய்ப்பிக்க வேண்டும், என்பதே மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும்.

37. 'A' desires a court to give judgement that he is entitled to certain land in the possession of 'B' by reason of facts which he asserts and which 'B' denies to be true who must prove the existence of facts?

'ஆ'-வின் உடமையிலுள்ள நிலம் தனக்கு உரிமையானது என்றும், நீதிமன்றம் தனக்கு சாதகமாக தீர்ப்பு தர வேண்டும் என்றும் 'அ' உறுதியாகக் கூறுகிறார். ஆயினும் 'ஆ' அவற்றை முழுமையாக மறுக்கிறார். இப்பொருண்மைகளை நிருபிக்க வேண்டிய கடமை யாருடையது?

தீர்வு:

இந்திய சாட்சியச் சட்டத்தின் 101-வது பிரிவு, "சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும் பற்றி எந்த நீதிமன்றமேனும் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எவரேனும் கோரி, அது அவர் கூறுகிற பொருண்மைகளின் உண்மையைப் பொறுத்திருக்குமேயானால், அவரே, அந்த பொருண்மைகளின் உண்மையை மெய்ப்பித்தல் வேண்டும்" என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'ஆ'-வின் உடமையிலுள்ள நிலம் தனக்கு உரிமையானது என்றும், நீதிமன்றம் தனக்கு சாதகமாக தீர்ப்பு தர வேண்டும் என்றும் 'அ' விரும்புகிறார். இதற்கு காரணங்களாக சில பொருண்மைகளை 'அ' கூறுகிறார். இங்கு மேற்படி பிரிவு 101-ன்படி, அப் பொருண்மைகளை அவற்றைக் கூறும் 'அ'-தான் மெய்ப்பிக்க வேண்டும் என்பதே தீர்வு.

மேற்படி பிரச்சனை பிரிவு 101-ன் கீழான எடுத்துக்காட்டு (b)-யை அப்படியே அடியொற்றியதாகும். (விரிவான விளக்கம் வேண்டுமெனில் எண் 67-ல் காண்க.)

38. 'A' sues 'B' for money due on a bond. The execution of the bond is admitted but 'B' says that it was obtained by fraud, which 'A' denies. State on whom is the burden of proof lies.

பத்திரமொன்றின் பேரில் கொடுக்கப்பட்ட ஒரு பணத்திற்காக 'ஆ' மீது 'அ' வழக்கிடுகிறார். பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டதென்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனால் அது மோசடியாகப் பெறப்பட்டது என்று மெய்ப்பிக்கும் சுமை யார் மீது உள்ளதென்பதைக் கூறுக.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இரு தரப்பினராலும் சாட்சியங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லையெனில் 'அ'-தான், அவ்வழக்கில் வெற்றி பெறுவார். ஏனெனில் 'அ' செய்த மோசடி 'ஆ'-வால் மெய்ப்பிக்கப் படவில்லை. இதனால் 'ஆ' அவ்வழக்கில் தோற்றுப் போய்விடுவார். எனவே 'அ' செய்த மோசடியை மெய்ப்பிக்கும் பொறுப்பு 'ஆ'-வையே சார்ந்ததாகும்.

மேற்படி பிரச்சனை, சாட்சியச் சட்டத்தின் 102வது பிரிவின் 2வது எடுத்துக்காட்டை ஒத்ததாகும். எனவே மேலும் விளக்கமாக வினா என்ன 67-ல் 102வது பிரிவையும், அதன் கீழான 2வது எடுத்துக் காட்டையும் கவனிக்கவும்.

39. 'A', accused of murder, alleged that, by reason of unsoundness of mind, he did not know the nature of the act. On whom the burden of proving the fact that he come within Section 84 IPC lies? Discuss with reason.

'அ' என்னும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் தன் புத்திசுவாதீனத்தால் செயலின் குற்றம் தெரியாது என்று வாதிடுகிறார். அவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 84ன்கீழ் வருவார் என்னும் மெய்ப்பிக்கும் சுமை யாருடையது? காரணங்களை விவாதிக்க.

தீர்வு:

'அ' என்னும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர் தன் புத்தி சுவாதீனத்தால் செயலின் குற்றம் தெரியாது என்றும், தாம் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 84ன் கீழ் (குற்றச் செய்கையிலிருந்து பொது விலக்கு பெறும் சூழ்நிலைகள்) விலக்கு பெறுவதாகவும் கூறினால், அவ்வாறு தாம் புத்தி சுவாதீனமற்று இருந்ததை மெய்ப்பிக்கும் பொறுப்பு 'அ'-வையே சாரும்.

ஏனெனில் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 105-ஆனது குற்றம் எதையேனும் செய்ததாக ஒருவர் குற்றஞ்சுமத்தப்படும்போது, அந்த வழக்கை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பொது விதிவிலக்குகளில் ஏதேனும் ஒன்றிற்குள் கொண்டுவருகிற அல்லது அதே சட்டத்தின் வேறெந்தப் பகுதியிலேனும், அல்லது குற்றத்திற்கு இலக்கணங் கூறுகிற எந்தச் சட்டத்திலேனும் அடங்கியுள்ள சிறப்பு விதிவிலக்கு அல்லது விலக்கு ஏதேனுமொன்றிற்குள் கொண்டுவருகின்ற சூழ்நிலைகளின் உண்மையை மெய்ப்பிக்கும் சுமை அவரையே சார்ந்தது; மற்றபடி அத்தகைய சூழ்நிலைகள் இல்லையென்றே நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

40. A client sells his property to his advocate and then brings a suit against him for settling aside the sale on the ground of

fraud. On whom the burden of proving the good faith of the transaction lies? What is the reason?

ஒரு கட்சிக்காரர் தனது சொத்தை தனது வழக்கறிஞருக்கு விற்கிறார். பின்னர் மோசடி நடந்துவிட்டது என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் அந்த விற்பனையை ரத்து செய்யக்கோரி வழக்கிடுகிறார். நன்னம்பிக்கையில் தான் விற்பனை நடைபெற்றது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு யாருடையது? அதற்கான காரணங்களை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனை சாட்சிய சட்டம் பிரிவு 111ன் கீழான (அ) என்ற எடுத்துக்காட்டை ஒத்ததாகும். மேற்படி பிரிவு 111-ஆனது, தரப்பினர்களில் ஒருவர் மற்றவருடைய தீவிர நம்பிக்கைக்குரிய நிலையில் இருக்கும்போது, தரப்பினர்களிடையே நடந்த ஒரு நடவடிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதா என்ற கேள்வி எழுமிடத்து, அந்த நடவடிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, தீவிர நம்பிக்கைக்குரிய நிலையிலிருக்கிற தரப்பினரைச் சார்ந்தது.

மேற்படி பிரச்சனையில், ஒரு கட்சிக்காரர் தனது சொத்தை தனது வழக்கறிஞருக்கு விற்பதாக காட்டப்படுகிறது. இங்கு ஒரு வழக்கறிஞர், தனது கட்சிக்காரரின் தீவிர நம்பிக்கைக்கு (trust and confidence) பாத்திரமானவர். எனவே, அவ்வழக்கறிஞர் தீவிர நம்பிக்கைக்குரிய நிலையிலுள்ளார். மேற்படி பிரச்சனையில் நடந்த விற்பனையில், மோசடி நடந்து விட்டது என்று கூறி அவ்விற்பனையை இரத்து செய்யக் கோரி அக்கட்சிக்காரர் தொடுத்த வழக்கில், அவ்விற்பனை நல்லெண்ணத் துடன்தான் (நன்னம்பிக்கையில்தான்) செய்யப்பட்டது என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு மேற்படி பிரிவு 111ன்படி அக்கட்சிக்காரரின் தீவிர நம்பிக்கையிலுள்ள அவ்வழக்கறிஞரைத்தான் சாரும், என்பதே தீர்வாகும்.

மண வாழ்க்கையில் பிறந்த குழந்தை முறைப்படியானது என்பதற்கு முழுவான நிரூபணம்
[Birth during marriage, conclusive proof of legitimacy]

41. On 1st January 1982, 'A' who is married 'W', dies. On 3rd June , 1982, 'W' marries 'B'. On 30th September 1982, a child is born to 'W'. Discuss its legitamacy.

'W' என்பவளை மணம் செய்திருந்த 'A' என்பவர் 1982-ம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்று இறந்துவிடுகிறார். 1982-ம் ஆண்டு ஜூன்

முன்றாம் நாள் 'W', 'B' என்பவரை மணம் செய்கிறார். செப்டம்பர் 30-ம் நாள் 'W' என்பவருக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அதன் முறைவழித் தன்மையை விவாதிக்கவும்.

தீர்வு:

சாட்சிய சட்டத்தின் 112வது பிரிவின்படி, முறையாக திருமணம் நடைபெற்ற தம்பதிகளுக்கு அவர்களுடைய திருமண வாழ்க்கையில், பிறந்த குழந்தை முறைமணப் பிறப்பு குழந்தையாகும்;

அல்லது திருமண முறிவு ஏற்பட்டு மனைவி மறு திருமணம் செய்து கொள்ளாத நிலையில், அத்திருமண முறிவு தேதியிலிருந்து 280 நாட்களுக்குள் ஒரு குழந்தை பிறந்தால் அது அவருடைய திருமண முறிவிற்கு முன்பிருந்த கணவனின் முறைமணப் (சட்டப்படியான) பிறப்பு குழந்தையாகும்.

மேற்படி பிரச்சனை சற்று வித்தியாசமானது. மேற்படி பிரச்சனையில் "W" என்ற பெண்ணை மணம் செய்த "A" என்பவர் 1982ம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்று இறந்து விடுகிறார். பின்னர் "W" என்ற அப்பெண் 1982ம் ஆண்டு ஜூன் மூன்றாம் நாள் "B" என்ற மற்றொரு ஆணை மணக்கிறார். செப்டம்பர் 30-ம் நாள் "W" என்பவருக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அதாவது சுமார் 117 நாளுக்குள் பிறக்கிறது. இக்குழந்தை மாறுபாடான சாட்சியம் ஏதும் காட்டப்படாதவரையில் "W"-க்கும் "B"-க்கும் பிறந்த முறைமணப் பிறப்பு குழந்தையே.

எவ்வாறென்றால், ஒரு குழந்தை பிறக்க 280 நாட்கள் எனக் கொண்டு குழந்தை பிறந்த 30-9-1982ம் தேதி வரை கணக்கிட்டால் "W" என்பவர் "A"-யுடன் வாழ்ந்த காலத்திலேயே "A"-யினால் கருவுற்றிருக்கிறார் என்றே கொள்ளவேண்டும். ஆனால் அவர் இறந்த பிறகு, குழந்தை பிறக்கும் வரை "W" மறுமணம் செய்துகொள்ளாது இருந்திருந்தால் அக்குழந்தை "W"-க்கும் இறந்துபோன "A"-க்கும் பிறந்த குழந்தையாகவே அனுமானிக்கப்படும். ஆனால் "W"-வோ "B"-யை மறுமணம் செய்து கொண்டு விடுகிறார். "W"-ம், "B"-யும் தம்பதிகளாகிவிட்ட பிறகு அவர்களிடையே உடலுறவு நடந்திருப்பதாக சட்டம் அனுமானம் கொள்ளும். இந்தச் சூழ்நிலையில், அக்குழந்தை இரண்டாவது திருமணம் நடந்து 117 நாட்களுக்குள் பிறந்ததாகக் கொண்டாலும், அது "W"-க்கும் "B"-க்கும் பிறந்த முறைமணப் பிறப்பு குழந்தையென்றே சட்டம் அனுமானம் கொள்ளும்.

ஆனால், மேற்படி "B" மேற்படி அக்குழந்தை தனக்கு பிறக்காத ஒன்று என்று, அதாவது முறைமணப் பிறப்பு குழந்தையன்று என்று சுட்டிக் காட்ட விரும்பினால், தான் "W"-யுடன் உடலுறவு ஏதும் கொள்ளாமல் தனித்து வாழ்ந்ததாகவோ அல்லது குழந்தை பிறக்கும் நிமிடம் வரை உடலுறவு கொள்ளவியலா உடல்நிலையில் இருந்ததாகவோ அல்லது ஆண்மையற்று இருப்பதாகவோ அல்லது அவள் திருமணத்தின் பொழுது கருவுற்று இருப்பது தமக்குத் தெரியாது என்றோ மெய்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி பிரச்சனை, ஒரு குழந்தை திருமணமாகி ஓரிரு நாட்களிலோ அல்லது ஓரிரு மணி நேரங்களிலோ பிறந்தாலும் முறைமணப் பிறப்பு குழந்தை என்றே அனுமானிக்கப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றம் **Sethu Vs. Palani**[1] என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பின் பாற்பட்டதாகும். *(மேலும் விரிவாக தெரிந்து கொள்ள வினா எண் 70ல் காண்க.)*

42. 'A' was born of 'B' on 17th October 1969 that is 279 days after the date of the death of B's first husband i.e. 10th January 1969. She married again on 25th February 1969 and 'A' was born during the continuance of the second marriage. Decide the paternity of 'A'.

1969ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் தேதி 'ஆ' என்பவர் தனது முதல் கணவன் இறந்த 10-1-1969 நாளினின்று 279 நாளில் 'அ'-வை ஈன்றெடுத்தார். 1969ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் தேதியில் மறுமணம் புரிந்து, அத்திருமணம் தொடர்கையில் 'அ' பிறந்தார். 'அ'-வின் தந்தை நிலையினை கணிக்கவும்.

தீர்வு:

முன்கண்ட பிரச்சனையில் கொடுக்கப்பட்ட தீர்வே, இப் பிரச்சனைக்கும் பொருந்தும்.

திருமணமான பெண் ஒருத்தியால் செய்து கொள்ளப்பட்ட தற்கொலைக்கு உடந்தை குறித்த அனுமானம்
[Presumption as to abetment of suicide by a married woman]

43. 'A' married woman committed suicide within a period of seven years from the date of her marriage. Her mother in law without the knowledge of her husband subjected her cruelty. Can there be a presumption as to abetment of suicide by husband?

திருமணமான ஏழு வருடங்களுக்குள் ஒரு பெண் தற்கொலை செய்து கொள்கிறாள். அவளுடைய கணவரின் தாய், கணவனுக்குத் தெரியாமல் அவளை துன்புறுத்தியுள்ளார். இச்சூழலில் அந்த திருமணமான பெண்ணின் தற்கொலைக்கு கணவனும் உடந்தை என அனுமானிக்க இயலுமா?

தீர்வு:

1. (1925) 49 Mad. 523

இந்திய சாட்சிய சட்டத்தின் **பிரிவு 113–A**யின்படி, "பெண் ஒருத்தியால் செய்து கொள்ளப்பட்ட தற்கொலைக்கு அவளுடைய கணவன் அல்லது அவளுடைய கணவனின் உறவினர்கள் உடந்தையா என்ற கேள்வி எழும் பொழுது, அவள் திருமணமானதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு உள்ளாக அவள் தற்கொலை செய்து கொண்டாளென்றும், அவளுடைய கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் அவளைக் கொடுமைக்கு உள்ளாக்கினார்கள் என்றும் காண்பிக்கப்பட்டால், சம்பவத்தின் (வழக்கின்) மற்ற எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு அவளுடைய தற்கொலைக்கு அவளுடைய கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் உடந்தையாயிருக்க அனுமானிக்கலாம்."

மேற்படி பிரிவில் இழையோடும் பொருள் யாதெனில், ஒரு பெண், திருமணமானதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் தற்கொலை செய்து கொண்டால், அவளது தற்கொலைக்கு அவளது கணவன் மற்றும் கணவனின் உறவினர்கள் (கணவனின் தாய், தந்தையர், சகோதரர், சகோதரிகள் ஆகியோர்) உடந்தையாக இருந்துள்ளார்கள் என நீதிமன்றம் **அனுமானிக்கலாம்.** இங்கு அப்பெண்ணை கொடுமை செய்து தற்கொலைக்கு தூண்டியது, அவளது கணவனின் தாய் அல்லது தந்தை மட்டும்தான்; கணவன் கொடுமை ஏதும் செய்யவில்லை என்ற பாகுபாடு எதையும் சட்டம் முதற்கண் காட்டுவதில்லை. திருமணமான ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டு விட்டால், அவளது கணவனையும், கணவனின் உறவினர்களையும், சட்டம் உடனே கைது செய்து காவலில் வைக்கிறது. அவர்கள் எல்லோருமே அவளது தற்கொலைக்கு உடந்தையாக இருந்துள்ளார்கள் என்று அனுமானிக்க பிரிவு 113-A மேற்கண்டவாறு அனுமதியளித்திருப்பதே இதற்குக் காரணம். வழக்கு விசாரணையின் பொழுதுதான், யாருடைய நேரடியான கொடுமையால் அப்பெண் தற்கொலை செய்து கொண்டாள், எனும் முடிவிற்கு நீதிமன்றம் வருகிறது.

எனவே, கணவனுக்கு தெரியாமல் மாமியாரின் கொடுமையால் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டால், அதற்கு அணவனும் பிரிவு 113-A யின்படி உடந்தையானவரே, என்பதுதான் மேற்படி பிரச்சனைக்கான தீர்வாகும்.

நீதிமன்றம் சில பொருண்மைகளை உண்மையானதென அனுமானிக்கலாம்
[Court may presume existence of certain facts]

44. A crime is committed by several persons. 'A', 'B' and 'C', three of the criminals are captured on the spot and kept apart from each other. Each gives an account of the crime implicating 'D'. Is it admissible?

பலர் சேர்ந்து செய்த ஒரு குற்றத்திற்காக 'A', 'B' மற்றும் 'C' ஆகிய மூவரும் சம்பவ இடத்தில் பிடிபட்டு தனித்தனியாக வைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக குற்றத்தைப் பற்றி கூறுகையில் 'D' என்பவருடன் சேர்ந்து செய்ததாய் கூறுகின்றனர். இது ஏற்புடையதாகுமா?

தீர்வு:

இந்திய சாட்சிய சட்டத்தின் 114-வது பிரிவு, நீதிமன்றம் சில பொருண்மைகளை உண்மையானதென அனுமானிக்கலாம் (Court may presume existence of certain facts) என்று கூறுகிறது.

அதன் கீழான எடுத்துக்காட்டு (b)-யானது, முக்கியமான விவரங்களில் உடன் குற்றவாளி ஒருவரின் வாக்குமூலம் உறுதியூட்டப்பட்டாலன்றி, அவர் நம்பத் தகுதியற்றவர், என்று நீதிமன்றம் அனுமானிக்கலாம்[1] என்று கூறுகிறது. அதாவது உடன் குற்றவாளி ஒருவரின் வாக்குமூலம் நம்பத் தகுதியற்றது. ஆனால் அவரது வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் முக்கியமான விபரங்கள் இருப்பின், அவரது வாக்குமூலத்தை நம்பலாம் என்பது இதன் விளக்கம். நமது மேற்படி பிரச்சனையில், பலர் சேர்ந்து செய்த ஒரு குற்றத்திற்காக பிடிபட்ட A, B. C ஆகிய மூவரும் தனித்தனியாக விசாரிக்கப்படும் பொழுது, ஒவ்வொருவரும் தாம் D-யுடன் சேர்ந்தே அக்குற்றத்தைச் செய்ததாக கூறுகின்றனர். இங்கு A, B, C ஆகியோர் உடன் குற்றவாளிகள். இவர்களின் வாக்குமூலத்தை மேற்படி பிரிவு 114 எடுத்துக்காட்டு (b)-யின்படி நம்ப முடியாது என்றாலும், அவர்கள் மூவரும் தனித்தனியாக குற்றத்தைப் பற்றிக் கூறுகையில், தாங்கள் D-யுடன் சேர்ந்தே அக்குற்றத்தை செய்ததாக ஒருமித்த கருத்தைக் கூறுகின்றனர். இவர்களது வாக்குமூலம் இவ்வாறு ஒருமித்து இருப்பதாலும், ஒருவரின் வாக்குமூலம் மற்றொருவரது வாக்குமூலத்தால் ஒரே மாதிரியாக உறுதியூட்டப் பட்டிருப்பதாலும், இவர்களுக்கிடைய மேற்கண்டவாறு ஒரே கருத்தைக் கூற வேண்டும் என்று முன் ஒப்பந்தம் ஏதும் பெரும்பாலும் இருந்திருக்க முடியாது (previous concern highly impossible) என்ற அனுமானத்திற்கு நீதிமன்றம் வரலாம். எனவே D-க்கு எதிரான A, B, C ஆகியோர் வாக்கு மூலங்கள் ஏற்புடையதே என்பதே தீர்வாகும்.

மேற்படி பிரச்சனை பிரிவு 114-ன் கீழான எடுத்துக்காட்டு (b)-யை விளக்கும் வண்ணம் இந்திய சாட்சிய சட்டத்தில் தரப்பட்ட உதாரணத்தை அப்படியே அடியொற்றியதாகும். அதை மேற்படி பிரச்சனையின் தீர்விற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டலாம். அவ்வுதாரணம் வருமாறு.

"குற்றமொன்று பல்வேறு ஆட்களால் செய்யப்படுகிறது. குற்றவாளிகளில் மூவரான A, B மற்றும் C ஆகியோர் சம்பவ இடத்திலேயே

1. The court may presume that an accomplice is unworthy of credit, unless he is corroborated in material particulars - Illustration (b) of Section 114.

பிடிக்கப்பட்டு, ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிக்கப்பட்டு வைக்கப் படுகின்றனர். D என்பவரை அக்குற்றத்தில் சம்பந்தப்படுத்தி, குற்றத்தைப் பற்றிய விபரம் ஒவ்வொருவரும் கொடுக்கின்றனர். அவர்களுக்கிடையே முன் ஒப்பந்தம் பெரும்பாலும் இருந்திருக்க முடியாது என்ற அளவுக்கு அவர்கள் கொடுக்கும் குற்றத்தைப் பற்றிய விபரங்கள் ஒன்றுக்கொன்று உறுதியூட்டப்படுகின்றன.

எனவே, A, B, C ஆகியோரின் D-க்கு எதிரான வாக்குமூலங்கள் ஏற்புடையதே என்பது ஆணித்தரமான தீர்வாகும். (மேலும் விளக்கம் வேண்டுமெனில், வினா எண் 75-ல் காண்க.)

முரண்தடை [Estoppel]

45. 'A' intentionally and falsely leads 'B' to believe that 'C' is A's wife and thereby induced 'B' to supply certain goods to her on credit. 'B' supplies goods to 'C'. 'A' refuses to pay the price of the goods, denying that 'C' is the wife. Can 'B' recover the price from 'A'?

'இ' என்பவர் 'அ'-வின் மனைவி என்று 'அ' தவறாகவும் உள் எண்ணத்துடனும் 'ஆ'-வை நம்பச் செய்கிறார். அதன்படி அவளுக்கு கடனில் சில சரக்குகளைக் கொடுக்குமாறு 'ஆ'-வைத் தூண்டுகிறார். 'ஆ'-வும் அவ்வாறே 'இ'-க்கு சரக்குகளை அளிக்கிறார். அதன் பிறகு 'இ' தனது மனைவி என்பதை மறுத்துவிட்டு 'அ' சரக்குகளின் விலையை 'ஆ'-க்கு கொடுக்க மறுக்கிறார். 'ஆ', 'அ'-விடமிருந்து விலையைப் பெற முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் 'ஆ' சரக்குகளின் விலையை 'அ'-விடமிருந்து பெற முடியும். சொன்னதை மாற்றிச் சொல்ல 'அ', சாட்சியச் சட்டத்தின் 115வது பிரிவின்படியான முரண்தடைக் கோட்பாட்டின் மூலம் தடுக்கப்படுகிறார்.

பிரிவு 115ன்படி, ஒருவர் மற்றொருவரைத் தம் கூற்றினாலோ, செயலாலோ, செய்யாமையினாலோ, ஒன்று உண்மை என்று வேண்டுமென்றே நம்பும்படிச் செய்து (intentionally caused to believe) அல்லது நம்புவதற்கு இடங்கொடுத்து, அந்த நம்பிக்கையின் பேரில் மற்றவரைச் செயல்படச் செய்கிறார் (act upon such belief) என்று கொள்வோம். அவ்வாறு நம்பி நடந்தவர் அல்லது அவரது பிரதிநிதி - நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதி இவர்களுக்கிடையே ஏற்படுகின்ற உரிமையியல் வழக்கில் அல்லது நடவடிக்கையில் - நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதி நம்ப வைத்த அவ்விஷயத்தை உண்மை அல்லவென மறுக்கலாகாது. இதுவே முரண்தடைக் கோட்பாடு எனப்படுகிறது.

அதாவது ஒரு முறை உண்மை என்று ஏற்றுக் கொள்ளுமாறு பேசியதை பின்நாளில் மறுத்துப் பேச சட்டம் அனுமதிப்பதில்லை. இதுவே முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

மேற்படி பிரச்சனையில் 'இ' என்பவர் 'அ'-வின் மனைவி என்று 'அ' தவறாகவும் உள்ளெண்ணத்துடனும் 'ஆ'-வை நம்பச் செய்கிறார் (intentionally and falsely leads 'B' to believe). அதன்படி அவருக்கு ('இ'-க்கு) கடனில் சில சரக்குகளை கொடுக்குமாறு 'ஆ'வைத் தூண்டுகிறார். 'ஆ'-வும் அவ்வாறே 'இ'-க்கு சரக்குகளை அளிக்கிறார் (act upon such belief). பின்னர் 'இ' தனது மனைவி என்பதை மறுத்துவிட்டு 'அ' சரக்குகளின் விலையை 'ஆ'-க்கு கொடுக்க மறுக்கிறார். இங்கேதான் பிரிவு 115 தனது மூக்கை நுழைக்கிறது. மேற்படி பிரிவு 115ன்படி, முன்பு 'இ'-யை தனது மனைவி என்று 'ஆ'-வை நம்பச் செய்து 'இ'-க்கு சரக்குகளை கடனில் அளிக்க 'ஆ'வைத் தூண்டி அதன் பிறகு 'இ'க்கு அளித்த சரக்குகளின் விலையை 'அ'-விடம் கேட்கும் பொழுது, 'இ' தனது மனைவி அல்ல என்று 'அ' முரண்தடைக் கோட்பாட்டின்படி கூறமுடியாது. முன்னர் தனது மனைவி என்று மற்றவரை நம்பச் செய்து, அதனால் பயனைப் பெற்றுக் கொண்டு பின்னர் பிரச்சனை என்று வரும்பொழுது தனது மனைவி அல்ல என்று முரண்பாடாகக் கூறுவதை பிரிவு 115 தடை செய்கிறது. 'ஆ', 'அ'-விடமிருந்து விலையைப் பெறலாம் என்பதே தீர்வு.

46. 'A', intentionally and falsely leads 'B' to believe that certain lands belong to 'A', and thereby induces 'B' to buy and pay for it. The land afterwards becomes the property of 'A', and 'A' seeks to set aside the sale on the ground that, at the time of the sale, he had no title. Whether he can be allowed to prove his want of title?

'ஆ' என்பவர் வேண்டுமென்றே பொய்யாக ஒரு நிலம் தன்னுடையது என்று 'ஆ' என்பவரை நம்ப வைத்து அந்த நிலத்தை வாங்கச் செய்கிறார். அந்த நிலம் பிறகு 'அ'-க்கு சொந்தமான சொத்தாகி விடுகிறது. அந்த நிலத்தை 'அ' விற்கும் போது, அச்சொத்திற்கான உரிமை மூலம் அவருக்கு இல்லை என்ற அடிப்படையில், அந்த விற்பனையை இரத்து செய்ய வேண்டுமாய் 'அ' முனைகிறார். உரிமை மூலம் இல்லாதிருத்தலை நிருபிக்க அவர் அனுமதிக்கப்படுவாரா?

தீர்வு:

சாட்சியச் சட்டத்தின் பிரிவு 115 'முரண்தடை' பற்றிக் கூறுகிறது. இதன்படி உரிமை மூலம் இல்லாதிருத்தலை நிருபிக்க 'அ' அனுமதிக்கப் படமாட்டார் என்பதே இங்கு தீர்வாகும். இப்பிரச்சனை பிரிவு 115-ன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றி அமைந்த ஒன்றாகும். இத்தீர்விற்கான காரணங்களை இந்நூலின் பக்கம் எண். 237-இல் கண்டு தேர்வில் எழுதுக.

நீதிபதிகளும் குற்றத்துறை நடுவர்களும் (மாஜிஸ்டரேட்)
[Judges and Magistrates]

47. 'A' is accused before the Court of Sessions of having given false evidence before 'B', a Magistrate. Can 'B' be asked what 'A' said?

ஒரு நடுவரான 'ஆ' என்பவர் முன் பொய்ச்சாட்சியம் கொடுத்திருப்பதாக செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் 'அ' குற்றஞ் சுமத்தப்படுகிறார். 'அ' என்ன சொன்னார் என்று 'ஆ'-ஐ வினவ முடியுமா?

தீர்வு:

நீதிபதிகளும் குற்றவியல் நடுவர்களும் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக் கூடிய தகுதி வாய்ந்த சாட்சிகளாக இருப்பினும், அவர்களுக்கு அவ்வாறு சாட்சியமளிப்பதிலிருந்து சிறப்பு விலக்குகளை சாட்சிய சட்டம் அளிக்கிறது.

சாட்சிய சட்டத்தின் 121வது பிரிவுபடி, நீதிபதி அல்லது நடுவர் எவரும், தாம் எந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் சிறப்புக் கட்டளையின் பேரில் அல்லாமல், அத்தகைய நீதிபதி அல்லது நடுவர் என்ற முறையில், நீதிமன்றத்தில் தம் சொந்த நடத்தையைப் பற்றியோ அல்லது அத்தகைய நீதிபதி அல்லது நடுவர் என்ற முறையில் நீதிமன்றத்தில் தம் அறிவுக்கு எட்டிய விஷயம் எதைப் பற்றியோ எந்தக் கேள்விகளுக்கும் பதில் சொல்லுமாறு கட்டாயப் படுத்தப்படுதல் ஆகாது; ஆனால் அவ்வாறு தாம் செயற்பட்டு வருங்கால் தம் முன்னிலையில் நிகழ்ந்திருக்கின்ற மற்ற விடயங்களைப் பற்றி அவர் விசாரிக்கப்படலாம்.

மேற்படி பிரச்சனையில் 'அ' என்ன சொன்னார் என்று 'ஆ'-வை வினவ முடியாது. ஆனால் 'ஆ'-வுடன் மேல்நிலை நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் 'அ' என்ன சொன்னார் என்பது குறித்து 'ஆ'-ஐ வினவலாம், என்பதே மேற்படி பிரச்சனைக்குத் தீர்வு.

மண வாழ்வில் பரிமாறிக் கொண்ட செய்திகள்
[Communications during marriage]

48. The accused was on trial for murdering a neighbour for the purpose of robbing some ornaments and then to present them to his wife. While presenting them to his wife he said he had gone to the middle house (where the deceased lived) to get them. Discuss the legal status of this statement.

குற்றஞ் சாட்டப்பட்டவர் பக்கத்து வீட்டுக்காரரை கொலைக் குற்றம் செய்துவிட்டு நகைகளை கொள்ளையடித்து தன் மனைவியிடம் வழங்கினார் என குற்ற விசாரணை நடைபெற்றது. நகைகளை மனைவியிடம் அளிக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர் தான் கொலை செய்யப்பட்டவர் வாழ்ந்த நடு வீட்டிற்கு சென்றதாக கூறினார். இக்கூற்றின் சட்ட நிலையை விவாதிக்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் கணவன் மனைவியிடம் கூறிய உரைகளைப் பற்றி விசாரணை நடைபெறுகிறது. இந்திய சாட்சிய சட்டத்தின் 122வது பிரிவின்படி 'மணம் செய்து கொண்டிருக்கின்ற எவரும், எவருடன் அவர் மணம் செய்து கொண்டிருக்கின்றாரோ, அவரால் மண வாழ்வில் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட செய்தி எதையும் வெளிப்படுத்துமாறு கட்டாயப் படுத்துதல் ஆகாது' என்று கூறுகிறது.

எனவே, மேற்படி பிரச்சனையில், குற்றஞ் சாட்டப்பட்ட அக்கணவன், தான் கொள்ளையடித்த நகைகளை மனைவியிடம் வழங்கும்போது, தாம், கொலை செய்யப்பட்டவர் வாழ்ந்த நடு வீட்டிற்கு சென்றதாகக் கூறினார். மேற்படி கூற்று, அக்கணவனே அக்கொலைக்கும் காரணம் என்ற ஊகத்தை ஏற்படுத்தினாலும், தன்னிடம் கூறப்பட்ட மேற்படி உரையை மனைவி சாட்சியமாக அளிப்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் இது பிரிவு 122ன் படி சட்டக் காப்புடைய செய்திகள் (Privileged Communications) ஆகும்.

மேலும் மேற்படி வழக்கு **Ram Bharosey Vs. State of U.P.**[1] என்ற வழக்கின் பொருண்மைகளை ஒத்ததாகும். இவ்வழக்கில் கணவன் மீது பக்கத்து வீட்டுப் பெண்மணியை கொன்று விட்டதாக குற்றம் சாட்டப் பட்டது. அவரது மனைவி ஒரு சாட்சியாக நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டாள். விசாரணையில் தனது கணவன் தனக்கு நகைகளை கொடுக்கப் போவதாக கூறினார், என அவள் சாட்சியமளித்தாள். மேலும் அவள், 'அதிகாலையில் எங்கே போனீர்கள்?' என்று தனது கணவரிடம் கேள்வி கேட்டதாகவும் அதற்கு அவன் 'கொலை நடந்த பக்கத்து வீட்டிற்கு நகைகளுக்காகப் போயிருந்தேன்' என்று பதிலளித்ததாகவும் அவள் சாட்சியமளித்தாள். மேற்படி உரையாடல், கணவன்தான் நகைகளுக்காக அக்கொலையை செய்திருப்பான் என்ற ஊகத்தை அதிகமாக்கினாலும், மேற்படி பிரிவு 122ன்படி அதைத் தொடர்பற்றதாக உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது பிரிவு 122ன்படி அவ்வுரையாடலை சாட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது.

49. 'A' is charged with stealing jewels from 'B'. After an improper inducement to confess by his wife 'C', 'A' gives the

1. A.I.R. 1954 S.C. 704

jewels to her and tells her "the jewels belong to 'B'". At the trial, 'C' is called in as witness by the presecution side. Can she voluntarily come forward to give evidence bearing on the confession made by 'A' to her?

'அ' என்பவர் 'ஆ'-வின் நகையை திருடி விட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டார். குற்றத்தை ஒத்துக்கொள்ளும்படி 'அ'-ன் மனைவி 'இ' செய்த முறையற்ற தூண்டுதலின் பேரில் 'அ' அந்த நகையை 'இ'-யிடம் கொடுத்து விட்டு ''அந்த நகைகள் 'ஆ'-வினுடையது'' என்று சொல் கிறார். வழக்கு விசாரணையில் 'இ' ஒரு சாட்சியாக அரசு தரப்பால் அழைக்கப்பட்டார். 'அ'-வின் மனைவி தன் கணவன் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தை கொண்டு சாட்சி சொல்ல தானாக முன்வரலாமா?

தீர்வு:

முந்தய பிரச்சனையின் தீர்வே இதற்கும் பொருந்தும். எனவே அதைக் கவனிக்கவும்.

தொழில் முறையில் தெரிவிக்கப்படும் செய்திகள்
[Professional Communications]

50. 'A', a client says to 'B', an advocate, "I wish to obtain possession of property by the use of a forged deed on which I request you to see'. Is this communication protected from disclosure?

'அ' எனும் கட்சிக்காரர் 'ஆ' எனும் தனது வழக்கறிஞரிடம், 'சிருஷ்டனை செய்யப்பட்ட ஆவணத்தை பயன்படுத்தி சொத்தின் அனுபவத்தைப் பெற விரும்புகிறேன்; எனவே அந்த ஆவணத்தின் மீது வழக்கிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறுகிறார். மேற்படி செய்தி வெளிப்படுத்தப்படுவதிலிருந்து காக்கப்பட் டதா?

தீர்வு:

'அ'-விடமிருந்து பெறப்பட்ட மேற்படி செய்தியை 'ஆ' எனும் அவரது வழக்கறிஞர் வெளிப்படுத்தலாம். இதற்கு காப்புரிமை இல்லை என்பதே இதற்கு தீர்வு.

பொதுவாக தனது கட்சிக்காரர் தன்னிடம் கூறியதை வழக்கறிஞர் ஒருவர் வெளிப்படுத்தக்கூடாது. அப்படி வெளிப்படுத்தினாலும், அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படாது, என **பிரிவு 126** 'தொழில் தொடர் பான செய்திகளின் காப்புடைமை' (Privileged Professional Communications) என்று கூறுகிறது. ஆனால் இதற்கு விதிவிலக்காக, சட்ட விரோதமான

நோக்கம் எதையும் நிறைவேற்றும் வகையில் கட்சிக்காரர் தம்மிடம் தெரிவித்த செய்தியை, வழக்கறிஞர் வெளிப்படுத்தலாம். (மேலும் விரிவாக அறிய, வினா எண் 68-ல் பிரிவு 74-ல் இரண்டாவது எடுத்துக்காட்டைக் காணவும்.)

51. An accused informed Advocate Raman that he murdered Raju and requested the Advocate to conduct his case. Later he changed his case to another Advocate. Raman wanted to disclose this communication to the court. Can he do so?

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் வழக்கறிஞர் ராமனிடம் தான் ராஜுவை கொலை செய்ததாகச் சொன்னார். மேலும் அந்த வழக்கறிஞரை தன் வழக்கை நடத்துமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் தன் வழக்கை வேறு ஒரு வழக்கறிஞரிடம் மாற்றினார். ராமன் இந்த செய்தியை நீதிமன்றத்திடம் தெரியப்படுத்த வேண்டினார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

தீர்வு:

இந்தப் பிரச்சனையில் வழக்கறிஞர் ராமன் அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் தொழில் தொடர்பான செய்திகள் (Professional Communications) எக்காலத்திலும் சாட்சியமாக அனுமதிக்கப்படுதல் ஆகாது என **பிரிவு 126** கூறுகிறது.

அதாவது, ஒரு வழக்கறிஞர் தமது கட்சிக்காரரால் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட செய்தி எதையும் வெளிப்படுத்தக் கூடாது. வழக்கறிஞர் மற்றும் கட்சிக்காரருக்கிடையிலான உறவும் தொடர்பும் அந்தரங்கமானது. எனவே, ஒரு கட்சிக்காரர், தனக்காக ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொண்டு வாதாட விரும்பும்போது அவர்கள் பரிமாறிக் கொள்ளும் செய்திகள் அந்தரங்கமானவை. இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டியவை. தனது வழக்கறிஞர் அவரது வாதத்திறமையால் தம்மை எப்படியும் காப்பாற்றிவிடுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தம்மைப்பற்றிய இரகசியங்கள் அனைத்தையும் கட்சிக்காரர் அவரிடம் வெளியிடுகின்றார். எனவே ஒரு கட்சிக்காரர், தனது வழக்கறிஞரிடம் வாய் மொழியாகவும் பத்திரங்கள் வழியாகவும் என்னென்ன செய்திகள் அறிவித்துள்ளார் என்பதை வெளியிடுமாறு அவ்வழக்கறிஞரை கட்டாயப் படுத்த முடியாது. அவர் அதைப் பற்றிக் கூறினாலும், அது சாட்சியமாக அனுமதிக்கப்படாது.

மேற்படி பிரச்சனையில், குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் வழக்கறிஞர் ராமனிடம் தான் ராஜுவை கொலை செய்ததாகக் கூறுகிறார். மேலும் அந்த வழக்கறிஞரை தன் வழக்கை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறார். பிறகு தன் வழக்கை வேறு ஒரு வழக்கறிஞரிடம் மாற்றுகிறார். இதன் பிறகு, குற்றஞ் சாட்டப்பட்டவர் தாம் ராஜுவை கொலை செய்ததாக தம்மிடம் கூறிய செய்தியை ராமன் நீதிமன்றத்தில் வெளியிட முடியுமா என்பதே கேள்வி.

பிரிவு 126ன்படி, அப்படிப்பட்ட செய்தியை எக்காலத்திலும் அதாவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ராமன் வழக்கறிஞராக இருந்த பொழுதும், பின் குற்றஞ் சாட்டப்பட்டவர் அவரை மாற்றி வேறு வழக்கறிஞரை அமர்த்திக் கொண்ட பொழுதும் வெளிப்படுத்த இயலாது. அது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல, என்பதே தீர்வு. **(மேலும் விரிவாக வினா எண் 74ல் காண்க.)**

வாய்மையை சோதிக்கின்ற கேள்விகளுக்கான பதில்களை முரண்படுத்தும் சாட்சியம் ஒதுக்கப்படுதல்

[Exclusion of evidence to contradict answers to questions testing veracity]

52. A witness is asked whether he was not dismissed from a situation for dishonesty and he denies it. Evidence is offered to show that he was dismissed for dishonesty. Discuss the admissibility of such evidence.

ஒரு குற்றம் சாட்டப்பட்டவரிடம் அவர் மோசடியான குற்றம் செய்தமைக்காக பணியிலிருந்து நீக்கப்பட்டாரா என்று கேட்கப்பட்டது. அவர் இல்லை என்று பதில் வழங்கினார். மோசடியான குற்றத்திற்கான பணி நீக்கம் செய்யப்பட்டார் என்பதற்கான சான்று அளிக்க முனைவு செய்யப்பட்டது. அந்த சான்று ஏற்றுக்கொள்ளக் கூடியதா என்பதை விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க, நாம் இந்திய சாட்சிய சட்டத்தின் **153**-வது பிரிவைக் காண வேண்டும். ஏனெனில், இப்பிரச்சனை பிரிவு 153-ன் கீழான எடுத்துக்காட்டு (b)-யை அப்படியே அடியொற்றியதாகும்.

பிரிவு 153-ன்படி, சாட்சியின் குண இயல்பு (character) கேடானதென்று காட்டி, அதன் மூலம் அவரது நாணயத்தை பாதிக்க முனையும் அளவுக்கு மட்டுமே விசாரணைக்கு தொடர்புடையதாகவுள்ள கேள்வி ஏதேனும் அவரிடம் கேட்கப்பட்டு, அவர் அதற்கு பதில் சொல்லியிருக்கும்பொழுது, அவரது பதிலை முரண்படுத்துவதற்கு சாட்சியம் எதுவும் கொடுக்கப்படுதல் ஆகாது; ஆனால் அவர் பொய்யாக பதில் சொல்வாரானால், பொய்ச் சாட்சியம் கொடுத்ததற்காக அதற்குப் பின்பு அவர் மீது குற்ற வழக்குத் தொடரலாம்.

பிரிவு 153 கூறும் மேற்படி விதிக்கு இரண்டு விதிவிலக்குகள் உள்ளன. அவை வருமாறு.

(1) எந்தக் குற்றத்திற்காகவேனும் முன்னமேயே தண்டிக்கப்பட்டிருக்கின்றாரா, என்று சாட்சி ஒருவரிடம் கேட்கப்பட்டு, அவர் அதை மறுதலிப்பாரானால், அவரது முந்தைய தண்டனையைப் பற்றி சாட்சியம் கொடுக்கப்படலாம்.

(2) சாட்சி ஒருவரின் நடுவுநிலைமையைத் தாக்க முனையும் (impeach his impartiality) கேள்வி ஏதேனும் அவரிடம் கேட்கப்பட்டு, குறிப்பாகச் சொல்லப்பட்ட அந்தப் பொருண்மைகளை மறுதலித்து அவர் அதற்கு பதில் அளிப்பாரானால், அவரை முரண்படுத்தலாம்.

எனவே, மேற்சொன்ன பிரிவு 153 கூறும் விதியை நமது பிரச்சனைக்கு நேரடியாக பொருத்திப் பார்க்கும் பொழுது பின்வரும் தீர்வு கிடைக்கிறது.

பிரச்சனையின்படி, குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவரிடம், அவர் மோசடியான குற்றம் (நேர்மையின்மை) செய்தமைக்காக பணியிலிருந்து நீக்கப்பட்டாரா என்று கேள்வி கேட்கப்படும் பொழுது, அவர் "இல்லை" என்று மறுத்து பதிலளிக்கிறார். இங்கு அவர் மோசடியான குற்றத்திற்காக பணி நீக்கம் செய்யப்பட்டார் என்பதற்கான சாட்சியம் அளிக்க முனைவு செய்யப்படுகிறது. இச்சாட்சியம், பிரிவு 153 கூறும் விதியின்படி அனுமதிக்கத்தக்கதல்ல. ஏனெனில் பிரிவு 153-ன்படி, சாட்சியின் வாய்மையை சோதிப்பதற்காக அவருடைய நாணயத்தை பாதிக்கும் கேள்விகள் கேட்டு, அதற்கு அவர் பதில் சொல்லும் பொழுது, அவருடைய பதிலை முரண்படுத்துவதற்காக சாட்சியம் தருதல் கூடாது. (வேண்டுமானால் அவர் பொய்யான பதில் கொடுத்ததற்காக, பின்னர் அவர் மீது பொய்ச்சாட்சியம் அளித்த குற்றத்திற்காக தனியாக குற்ற வழக்கிடலாம்.) [விரிவான விளக்கத்திற்கு வினா எண்.82-ல் காண்க.]

53. A affirms that on a certain day he saw B at Calcutta. A is asked whether he himself was not on that day at Bangalore. He denies it. Evidence is offered to show, that A was on that day at Bangalore. Is the evidence admissible.

இ என்பவரை ஒரு குறிப்பிட்ட தினத்தில் தாம் கல்கத்தாவில் பார்த்ததாக ஆ சாட்சியமளிக்கிறார். குறுக்கு விசாரணையில் அவரே அன்றைய தினம் பெங்களூரில் இருந்ததாக வினா எழுப்ப அவர் மறுக்கிறார். அவர் அன்றைய தினம் பெங்களூரில் இருந்ததை நிரூபிக்க சாட்சியம் கொணரப்படுகிறது. இது ஏற்புடைய சாட்சியமாகுமா?

தீர்வு:

இப்பிரச்சனை பிரிவு 153-ன் கீழான எடுத்துக்காட்டு (c)-யை அப்படியே அடியொற்றியதாகும். (பிரச்சனையில் வரும் ஊர்களின் பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன). பிரிவு 153 மற்றும் அதன் விதிவிலக்குகளை முந்தய பிரச்சனையின் தீர்வில் காணவும்.

பிரச்சனையின்படி, B என்பவரை ஒரு குறிப்பிட்ட தினத்தில் தாம் கல்கத்தாவில் பார்த்ததாக A சாட்சியமளிக்கிறார். குறுக்கு விசாரணையில் அவரே அன்றைய தினம் பெங்களூரில் இருந்ததாக வினா எழுப்ப, அவர் அதை மறுக்கிறார். அவர் அன்றைய தினம் பெங்களூரில் இருந்ததை நிரூபிக்க சாட்சியம் கொணரப்படுகிறது. இச்சாட்சியம் அனுமதிக்கத் தக்கதே.

ஏனெனில், இச்சாட்சியமானது, A-யின் நாணயத்தைப் பாதிக்கும் ஒரு பொருண்மையின் பேரில், அவரை முரண்படுத்துவது என்ற வகையில் அல்லாமல், ஆனால் ஒரு குறிப்பிட்ட தினத்தில் B என்பவர் கல்கத்தாவில் காணப்பட்டார் என்று சொல்லப்படும் பொருண்மையை முரண்படுத்துவது என்னும் வகையில் அனுமதிக்கத்தக்கதாகும். (மேலும் விரிவான விளக்கத்திற்கு வினா எண் 82-ல் காண்க.)

சாட்சியின் நாணயத்தைத் தாக்குதல்
[Impeaching credit of witness]

54. A is indicted for the murder of B. C says that B, when dying, declared that A had given B the wound of which he died. Evidence is offered to show that, on a previous occasion, C said that the wound was not given by A or in his presense. Examine the admissibility of the evidence.

'ஆ' என்பவரை கொலை செய்ததாக 'அ' என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. 'ஆ' என்பவர் மரணமடையும் போது தனக்கு 'அ' என்பவர்தான் காயம் ஏற்படுத்தியதாக தன்னிடம் கூறியதாக 'இ' என்பவர் கூறுகிறார். 'அ' என்பவர் காயம் விளைவிக்கவில்லை அல்லது தன் முன்னர் காயம் விளைவிக்கவில்லை என முன்னொரு முறை 'இ' என்பவர் கூறியதாக சான்றளிக்கப்படுகிறது. இச்சான்றின் ஏற்கத்தக்க நிலையை ஆராய்க.

தீர்வு:

இப்பிரச்சனை 'சாட்சியின் நாணயத்தை தாக்குதல்' (Impeaching the credit of a witness) எனும் தலைப்பின் கீழ் வருகிறது. இது குறித்து பிரிவு 155 கூறுகிறது. இதன் கீழான (b) எனும் எடுத்துக்காட்டே மேற்கண்டவாறு ஒரு பிரச்சனையாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சனையின்படி, 'அ' என்பவர் காயம் விளைவிக்கவில்லை அல்லது தன் முன்னர் காயம் விளைவிக்கவில்லை என முன்னொரு முறை 'இ' என்பவர் கூறியதாக அளிக்கப்படும் சாட்சியம் பிரிவு 155-இன்படி ஏற்கத் தக்கதேயாகும்.

இங்கு 'இ' என்பவரின் சாட்சியின் நாணயம் அவரது முந்தைய உரை களின் முரண்பாடான தன்மையால் தாக்கப்படுகிறது. இது அனுமதிக்கத் தக்கதே. (மேலும் விளக்கங்களுக்கு இந்நூலின் பக்கம் எண்கள். 274 மற்றும் 275-இல் உள்ளவற்றை கண்டு அவற்றைத் தேர்வில் எழுதுக.)

55. 'A' sues 'B' for the price of goods sold and delivered to 'B'. 'C' says that 'A' delivered the goods to 'B'. Evidence is offered to show that, on a previous occasions, he said that he had not delivered the goods to 'B'. Whether this evidence is admissible?

'ஆ'வுக்கு விற்பனை செய்து, உடைமை ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்களின் விலைக்காக 'அ' என்பவர் வழக்கிடுகிறார். 'ஆ'வுக்கு 'அ' பொருள்களை ஒப்படைவு செய்துவிட்டதாக 'இ' கூறுகிறார். இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில், 'ஆ'வுக்கு பொருள்களை ஒப்படைவு செய்யவில்லை என்று கூறியதாக சான்று தர முனையப் படுகிறது. அச்சான்று அனுமதிக்கத்தக்கதா?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே, இதற்கும் பொருந்தும்.

இது பிரிவு 155-இன்படி சாட்சியின் நாணயத்தை தாக்கும் வண்ணம் சாட்சியம் அளித்தல் எனப்படுகிறது. இம்மாதிரியான சாட்சியம் அனுமதிக் கத்தக்கதேயாகும். (இந்நூலின் பக்கங்கள் 274, 275 ஆகியவற்றில் காண்க.)

அண்மைக்கால முக்கிய வழக்குத்தீர்ப்பு நெறிகள்

– ஒரு பார்வை

Recent Case Laws

- A glance

அண்மைக்கால முக்கிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பு நெறிகள்

– ஒரு பார்வை

வழக்கு எண். I

கேள்விநிலைச்சாட்சியம் எப்போது ஏற்கத்தக்க சாட்சியமாகிறது?

கண்ணால் பார்க்காத கேள்விநிலைச்சாட்சியமாக இருந்தாலும், சம்பவம் தொடர்பாக ஒரே நடவடிக்கையின் பகுதியாக அமைந்த செயல்களுக்கு சாட்சியம் அளிக்கப்பட்டால் அது பிரிவு 6-இன் கீழ் 'ஒன்றிய செயல்கள்' (Res Gastae) என்ற அடிப்படையில் தொடர்புடையதே மற்றும் ஏற்கத் தக்கதே:

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (Prevention of Children from Sexual Offences Act 2012 - POCSO Act) சட்டத்தை மையமாகக் கொண்டு எழுந்த இந்த வழக்கில் பம்பாய் உயர் நீதிமன்றம் 19-01-2021 அன்று வழங்கிய தீர்ப்பு நாடு முழுவதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இதில் 12 வயது சிறுமியின் மார்பகத்தை அழுத்தியதுடன், ஆடையையும் அவிழ்க்க முயன்ற 39 வயது நபரை, போக்ஸோ சட்டத்தில் தண்டிக்க முடியாது என்றும், சிறுமியின் ஆடைக்கு மேலே கையை வைத்து மார்பகங்களை அழுத்துவது என்பது பாலியல் தாக்குதல் (sexual assault) என்ற பிரிவின் கீழ் வராது என்றும், **தோல் மீது தோல்பட்டு செய்யப்படும் அத்துமீறல்தான் பாலியல் தாக்குதல் ('Skin To Skin' contact necessary for 'Sexual Assault' under POCSO Act)** ஆகும் என்றும் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் அமர்வாயம் கூறி, குற்றஞ்சாட்டப்பட்ட நபரை போக்ஸோ சட்டத்தின் கீழ் கடும் தண்டனை விதித்து தண்டிக்காமல், அதிலிருந்து

அவரை விடுவித்து, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 354-இன் கீழ் அவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதித்து தண்டித்தது.

இந்தத் தீர்ப்பு பாலியல் குற்றங்கள் தொடர்பாக ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும் என்று மைய அரசின் தலைமை வழக்குரைஞர் கே.கே.வேணுகோபால் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டதன்பேரில் மாண்பமை இந்தியத் தலைமை நீதியரசர் பாப்டே தலைமையிலான அமர்வு, பம்பாய் உயர் நீதிமன்றத்தின் சர்ச்சைக்குரிய மேற்படி தீர்ப்புக்கு தடை விதித்து, அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்ய அனுமதித்து 27-01-2021 அன்று ஆணையிட்டது.

முக்கியமான இந்த வழக்கில் கேள்விநிலைச்சாட்சியம் (செவி வழிச் சாட்சியம்) (Hearsay Evidence) மற்றும் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 6-இன் கீழான **"ஒன்றிய செயல்கள்" (Res Gastae)** பற்றி பம்பாய் உயர் நீதிமன்றம் கூறிய கருத்துகள், இந்நூலின் பாடப் பொருளுக்கு தொடர்புடையதாக உள்ளன.

வழக்கின் பொருண்மைகள்படி, சதீஷ் ரக்டே என்ற குற்றஞ் சாட்டப்பட்ட நபர், தனது வீட்டிருகே வசித்து வரும் 12 வயது சிறுமியை கொய்யாப்பழம் தருவதாகக்கூறி தனது வீட்டின் முதல் தளத்தில் உள்ள அறைக்கு அழைத்துச் சென்று அங்கு சிறுமியின் மார்பகத்தை ஆடையுடன் சேர்த்து அழுத்தியதுடன் அவளது ஆடையையும் (சல்வார்) கழைய முற்பட்டுள்ளார். இதனால் அச் சிறுமி அழ ஆரம்பித்ததால், அவளை அறைக்குள்ளாகவே விட்டு விட்டு அறையின் கதவை வெளிப்புறத்திலிருந்து தாழிட்டு, வெளி யேறி இருக்கிறார் சதீஷ்.

இது ஒரு புறமிருக்க, மற்றொருபுறம் அச்சிறுமியை நீண்ட நேரம் காணாதததால், அவளது தாயார் அவளைத்தேடத் தொடங் கியுள்ளார். அப்போது அச்சிறுமியின் பக்கத்து வீட்டுக்காரர், அவளை சதீஷ் என்பவர் அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்ற தாகக் கூறி, அவ்வீட்டையும் அடையாளம் காட்டினார். அங்கு சென்ற சிறுமியின் தாயார் அவளது பெயரை உரக்கச் சொல்லி அழைத்திருக்கிறார். அந்த நேரம் சதீஷ் தனது வீட்டின் முதல் தளத் திலிருந்து கீழிறங்கி வருவதை பார்த்ததையடுத்து, அவரிடம் தனது மகள் எங்கிருக்கிறாள் என சிறுமியின் தாயார் கேட்க, அதற்கு தன் வீட்டில் சிறுமி இல்லை என சதீஷ் மறுத்துள்ளார். இந்தப்பதிலால் சமாதானமடையாத சிறுமியின் தாயார், சதீஷின் தரை தள வீட்டில் தேடினார். தொடர்ந்து முதல் தளத்திற்கும் சென்று தேடி னார். அங்கிருந்த அறையின் கதவு வெளிப்புறத்திலிருந்து தாழிடப்

பட்டிருப்பதைக் கண்ட அவர், அதை உடனடியாக திறந்து பார்க்கவே, அங்கு அழுதவாறு இருந்த தன் மகளைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக அவளை அங்கிருந்து மீட்டு, வெளியே வந்தவுடன், அவள் தனக்கு சதீஷ் என்ன செய்தார் என்று முன் சென்ற பத்தியில் கூறப்பட்ட சம்பவத்தை தன் தாயாரிடம் விவரித்தார். இதன் அடிப்படையில் அச்சிறுமியின் தாயார் முதல் தகவல் அறிக்கை அளித்தார். மேலும் அ.த.சா. 1-ஆக (PW-1) மேற்சொன்ன சம்பவத்தை விவரித்து நீதிமன்றத்தில் சாட்சியமும் அளித்தார்.

இந்த வழக்கின் வாதத்தின் போது அச்சிறுமியின் தாயார் சம்பவத்தை நேரில் காணாதவர் என்றும், அவர் தனது மகளை கண்டுபிடித்த பிறகு அவள் தன்னிடம் கூறியதாகச்சொல்லி ஒரு சம்பவத்தை முதல் தகவல் அறிக்கையிலும், விசாரணையின் போதும் விவரிக்கிறார் என்றும், எனவே அவர் அளித்த சாட்சியம் ஒரு கேள்விநிலைச்சாட்சியமே என்றும், அது சாட்சியச் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும் குற்றஞ்சாட்டப்பட்ட சதீஷ் தரப்பில் தீவிரமாக வாதிடப்பட்டது.

ஆனால் இந்த வாதத்தை பம்பாய் உயர் நீதிமன்றம் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 6-இன் அடிப்படையில் நிராகரித்தது.

அதாவது "**வழக்கெழு வினாவைப் பொறுத்து மட்டுமே சாட்சியம் அளிக்கப்பட வேண்டும்**" என்பது சாட்சிய சட்டம் வகுத்துள்ள பொது விதியாகும். ஒரு வழக்கில் வழக்கெழு வினா என்பது அவ்வழக்கின் மையப்பிரச்சனையாகும். அதாவது தீர்வுதரு பொருண்மையாகும் (Fact in issue). எடுத்துக்காட்டாக ஒரு கொலை வழக்கில், அப்படிப்பட்ட கொலை செய்யப்பட்டதா என்பதே வழக்கெழு வினா அல்லது தீர்வுதரு பொருண்மையாகும். எனவே அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் பொருட்டு அல்லது பொய்ப்பிக்கும் பொருட்டு சாட்சியம் அளிக்கப்படலாம். வேறு பொருண்மைகளைப் பொறுத்து சாட்சியம் அளிக்கப்படக்கூடாது. எனினும் இந்தப் பொதுவிதிக்கு சில விதிவிலக்குகளை **இந்திய சாட்சியச் சட்டம் தனது 6 முதல் 11 வரையிலான பிரிவுகளின்** வாயிலாகத் தருகிறது. அவற்றின்படி தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புடைய பொருண்மைகள் குறித்தும் சாட்சியம் அளிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், 'அ' என்பவரின் கடையில் கத்தி வாங்கினார் என்ற பொருண்மை 'குற்றஞ்சாட்டப்பட்டவர் கொலை செய்தாரா?' என்ற தீர்வுதரு பொருண்மைக்குத் தொடர்புடைய பொருண்மையாகும். எனவே

இது குறித்தும் சாட்சியம் அளிக்கப்படலாம். அது அனுமதிக்கத் தக்கதே. (இவை யாவற்றையும் நாம் இந்நூலின் பக்கம் எண். 65-இல் கண்டுள்ளோம்.)

இந்த வழக்கில் சிறுமிக்கு என்ன நடந்தது என்பதை அவளது தாயார் கண்ணால் பார்க்கவில்லை. அதாவது அச்சிறுமியின் தாயார் சம்பவத்தை நேரில் பார்க்காத சாட்சி. ஆனால் தன்னை அறைக்குள் கூட்டிச்சென்று தனக்கு சதீஷ் என்ன செய்தார் என்ற சம்பவத்தை, தான் தனது தாயாரால் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அச்சிறுமி அழுகையுடன் தனது தாயாரிடம் கூறுகிறார். இங்கு அதற்கும் முன்னதாக அச்சிறுமியை அவளது தாயார் தேடத் தொடங்கி, அவளை சதீஷ் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் என்று பக்கத்து வீட்டுக்காரர் கூறிய தகவலின் பேரில் சதீஷின் வீட்டிற்குச் சென்ற போது, அவர் வீட்டின் முதல் தளத்திலிருந்து இறங்கி வந்ததைப் பார்த்து, அவனிடம் தனது மகள் எங்கிருக்கிறாள் என்று கேட்டவுடன், தன் வீட்டில் இல்லை என்று சதீஷ் மறுத்ததை யடுத்து, சிறுமியை அந்த வீட்டின் தரை தளத்தில் அவளது தாயார் தேடியும் கிடைக்காமல், முதல் தளத்திற்குச் சென்று பார்த்த போது, அங்கிருந்த அறை வெளிப்புறத்திலிருந்து தாழிடப்பட்டிருந்ததைக் கண்டு, அதை திறந்து பார்க்கவே, அதில் அச்சிறுமி அழுத வண்ணம் இருந்ததைக் கண்டு அவளை மீட்டெடுத்து, வெளிக் கொண்டுவந்தவுடன், மேற்சொன்னவாறு அவள் தனக்கு நடந்த சம்பவத்தை தனது தாயாரிடம் விவரித்தது என அனைத்துமே தொடர்ச்சியாக ஒரே நடவடிக்கையின் பகுதியாக (forming part of same transaction) நடந்த செயல்களாக அமைந்துள்ளன. எனவே அச் சிறுமியின் தாயார் அளித்த சாட்சியம் **பிரிவு 6-இன் கீழ் 'ஒன்றிய செயல்கள்'** என்ற அடிப்படையில் தீர்வுதரு பொருண்மைக்கு தொடர்புடையதாகும் என்றும், எனவே அது ஏற்கத்தக்கதேயாகும் என்றும் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் அமர்வாயம் தெளிவு படுத்தியது.

[The learned counsel for the appellant strongly argued with regard to testimony of PW-1, she being a hearsay witness. No doubt PW-1 does not claim to have seen the incident, however, her testimony would be relevant and admissible in evidence under Section 6 of the Evidence Act. The principle of *res gestae* would be applicable, being part of the same transaction. Evidently, she went to the house of the accused searching for her daughter, she saw the accused coming down from the first floor, she inquired with the appellant - accused about her daughter, he refused

her presence, she searched for her daughter on the ground floor, she went upwards, she found the door of the room bolted from the outside, she opened the door, she found her daughter crying, she brought her daughter out of room, her daughter narrated the incident to her. All these events form the parts of the same transaction - *Paragraph 22*]

சாட்சிய சட்டத்தின் பிரிவு 6-இன்படி, "ஒரே நடவடிக்கையின் பகுதியாக அமையும் பொருண்மைகள் தீர்வுதரும் பொருண்மைக்கு (வழக்கெழு வினாவிற்கு) தொடர்புடையவையாகும். எனவே இது குறித்து அளிக்கப்படும் சாட்சியம் அனுமதிக்கத்தக்கது. [**Section 6: Relevancy of facts forming part of same transaction.-** Facts which, though not in issue, are so connected with a fact in issue as to form part of the same transaction, are relevant, whether they occurred at the same time and place or at different times and places - *Res gestae*]

சற்றே நுணுகிச்சொன்னால், தீர்வுதரு பொருண்மையோடு, உடன் நிகழ்ந்த அல்லது அதை விளக்குகிற அல்லது அதனுடன் ஒன்றிஒன்றானதாகக் கொள்ளப்படுகிற செயல்கள், செயல் தவிர்க்கைள், கூற்றுகள் ஆகிய அனைத்தும் 'ஒன்றிய செயலாகும்'.

எனவே சிறுமியின் தாயார் வழங்கிய சாட்சியத்தை, ஓர் வெற்று கேள்விநிலைச்சாட்சியம் என்று கூறி நீதிமன்றம் நிராகரித்து விடவில்லை. அது ஒரே (அதே) நடவடிக்கையின் (சம்பவத்தின்) பகுதியாக அமைந்த பொருண்மைகள் பலவற்றை பேசுகிறது. எனவே அது தீர்வுதரும் பொருண்மைக்குத் தொடர்புடையதாகும். அது குறித்து அச்சிறுமியின் தாயார் மேற்கண்டவாறு வழங்கிய சாட்சியம் ஏற்கத்தக்கதே என்று உயர் நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

12 வயது சிறுமியாக இருந்தாலும் விசாரணையின் போது கேட்கப்படும் கேள்விகளுக்குப் பகுத்தறிவுடன் பதிலளித்தால், அது ஏற்புடையதே:

இந்த வழக்கில் சதீஷ் தரப்பில் மற்றொரு முக்கிய எதிர் வாதமும் முன் வைத்து வாதிடப்பட்டது. இந்த வழக்கில் அச்சிறுமி அரசு தரப்பு சாட்சி 2-ஆக (PW-2) நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளாள். அப்போது அச்சிறுமி நீதிமன்றத்தில் எவ்வாறு நடந்து கொண்டாள், எவ்வாறு பதில் அளித்தாள், அவளது மனத் திட்பம் (Mental Capacity) எவ்வாறு இருந்தது என்பது பற்றியெல்லாம் அவளது வாக்குமூலத்தை கீழமை விசாரணை நீதிமன்றம் பதிவு செய்கையில் குறிப்பிட்டிருந்தது. இதன் அடிப்படையில் 12 வயது மட்டுமே நிரம்பிய, நுண்ணறிவற்ற ஒரு சிறுமியின் வாக்கு

மூலத்தை நீதிமன்றம் நம்புதல் ஆகாது என்றவாறு சதீஷ் தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால் இவ்வாதத்தை பம்பாய் உயர் நீதிமன்றம் நிராகரித்து தனது தீர்ப்பில் கூறுகையில், அச்சிறுமி நீதிமன்றத்தில் சான்றளிக்கும் போது நடந்து கொண்டதைக்கொண்டு அவளுக்கு அந்த அளவுக்கு மன நுண்ணறிவு (Mental Intelligence) இல்லை என்பதை உண்மை என்றே எடுத்துக்கொண்டாலும், அவளிடம் கேட்கப் பட்ட கேள்விகளுக்கு அவள் அளித்த பதில்கள் பகுத்தறிவுக்கு எட்டியவாறு இல்லை என்பதையோ, அவள் ஒரு தகுதியற்ற சாட்சி என்பதையோ கீழமை விசாரணை பதிவுருக்களில் இருந்து சதீஷ் தரப்பு வழக்குரைஞர் சுட்டிக்காட்டவில்லை என்றும், மேலும் அவள் தனது தாயாரால் கண்டெடுக்கப்பட்ட உடன், அவள் தனக்கு நேர்ந்த சம்பவத்தைப்பற்றி தனது தாயாரிடம் விவரித்துள்ளார், அதனடிப்படையில் அவளது தாயாரால் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கின் முக்கியப் பொருண்மைகளைப்பொறுத்து, அச்சிறுமியும் அவளது தாயாரும் அளித்துள்ள வாக்குமூலங்கள் ஒன்றையொன்று ஒத்துள்ளன என்றும் தெளிவுபடுத்தி, குழந்தைப்பருவத்தில் உள்ள அச்சிறுமியின் சாட்சியத்தை பரிசீலனைக்கு ஏற்புடையதாகக் கொண்டது.

[The learned counsel for the appellant also argued with regard to the mental capacity of the girl, which was observed by the learned trial Court while recording her testimony. It is true that as per demeanor of the witness, she might not have that mental intelligence, however, the learned counsel could not point out from the record that she was not a competent witness and her answers to the questions were not rational. Secondly, immediately after the incident, she narrated the incident to her mother and on that basis the First Information Report came to be lodged and on material point of facts, the testimonies of both, mother and daughter are consistent. - Paragraph 23]

இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி 1 மற்றும் 2 (தாயார் மற்றும் மகள்) கூறிய சாட்சியம், சாட்சிய சட்டப்படி நிலைக்கத் தக்கத்தல்ல, ஏற்கத்தக்கதல்ல என்று சதீஷின் தரப்பில் முன் வைக்கப் பட்ட முக்கிய வாதங்களை உயர் நீதிமன்றம், மேற்கூறிய சட்டப் பொருள் விளக்கங்களின் அடிப்படையில் நிராகரித்தது.

எனினும் நாம் ஆரம்பத்தில் கண்ட சர்ச்சைக்குரிய சில நூதன சட்டப்பொருள் விளக்கத்தின் அடிப்படையில் அவரை போக்சோ

சட்டத்தின் பிரிவு 8-லிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்து, இந்திய தண்டனைச்சட்டத்தின் கீழ் மட்டும் தண்டித்தது.

இந்நூல் அச்சேறும் சமயம், சதீஷ்-ஐ போக்சோ சட்டப்பிரிவிலிருந்து விடுதலை செய்ததை எதிர்த்து அரசு தரப்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

*Satish v. The State of Maharashtra - Criminal Appeal No. 161 of 2020 - Pushpa V. Ganediwala, J - Bombay High Court (Nagpur Bench) - **Citation : AIROnline 2021 Bom 9** decided on 19-01-2021*

வழக்கு எண். 2

ஒரு குழந்தை சாட்சியமளிக்க தகுதி வாய்ந்தது என்பதைக்கண்டறிய நீதிமன்றம் என்ன செய்ய வேண்டும்?

12 வயதிற்குட்பட்ட குழந்தை சாட்சியமளிப்பதற்கு முன்பாக உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டுமா?

இந்த வழக்கில் இந்திய சாட்சியச்சட்டத்தின் பிரிவு 118 மற்றும் 1969-ஆம் ஆண்டின் உறுதிமொழிகள் சட்டத்தின் பிரிவு 4-இன் கீழான குழந்தை சாட்சியின் தகுதிறம் (Competency of Child Witness) பற்றி சட்டப்பொருள் விளக்கமளிக்கப்பட்டது.

வழக்கின் பொருண்மைகள்படி மனைவியைக்கொலை செய்த குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்ற வழக்கு விசாரணை நடைபெற்றது. இதில் அரசு தரப்பு சாட்சி இரண்டு குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். அவர்கள் சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வந்த போது, தாங்கள் யார் முன்பாக வாக்குமூலம் அளிக்கிறோமோ அவர் யார் என்பதையே அடையாளம் கண்டு கொள்ள அவர்களால் இயலவில்லை என்ற காரணத்திற்காக, அவர்களது சாட்சியத்தைப் பதிவு செய்ய கீழமை விசாரணை நீதிபதி தடுக்கிறார்.

இந்நிலைப்பாட்டை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், இது

தவறான போக்கு என்றும், கேட்கும் கேள்விகளை புரிந்து கொண்டு ஓர் ஒழுங்கமைவுடன் முழுமையாக விடையளிக்க குழந்தையால் முடியவில்லை என்று நீதிமன்றம் கருதும் போது மட்டுமே அந்தக் குழந்தை சாட்சியமளிக்கத்தகுதியற்றதாகிறது என்றும், கேள்விகளை புரிந்து கொண்டு அதற்கு பகுத்தறிவுபூர்வமான விடைகளை ஒரு குழந்தையால் அளிக்க முடிந்தால், அது விசாரணை செய்யப்படு வதற்கு தகுதி படைத்தது என்று கருதலாம் என்றும் கூறியது.

உறுதிமொழிகள் சட்டத்தின் பிரிவு 4-இன்படி பனிரெண்டு வயதிற் குட்பட்ட குழந்தைகள் தவிர பிற எல்லா சாட்சிகளும் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியமளிக்கும் முன் உண்மையைச் சொல்வதாக உறுதிமொழி அல்லது பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், எனவே பனிரெண்டு வயதிற்குட்பட்ட குழந்தை ஒன்று சாட்சியமளிக்க தகுதிறன் படைத்தது என்று நீதிமன்றம் மன நிறைவடைந்தால், அதனை உறுதிமொழி/சத்தியப்பிரமானம் ஏதுமின்றி விசாரிக்கலாம் என்றும் கூறிய உச்ச நீதிமன்றம், இந்த வழக்கில் சாட்சியளிக்க வந்த இரண்டு குழந்தைகளின் சாட்சியத் தைப் பதிவு செய்வதற்கு முன்பாக **State of Maharashtra v. Bandu alias Daulat** என்ற வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பு நெறிக்கு இணங் கியவாறு அக்குழந்தைகளின் தகுதி பற்றி எவ்விததற்சார்பும் இன்றி புறநிலையில் நின்று மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும், இதை நட்பு நிலவும் சூழலில் அக்குழந்தைகளை வைத்து செய்ய வேண்டும் என்றும் விசாரணை நீதிபதிக்கு உச்ச நீதிமன்றம் ஏவுரைகளைப் பிறப்பித்தது.

[Competency of Child Witness section 118 of Evidence Act and section 4 of the Oaths Act, 1969:- Appellant was tried for the murder of his wife and for the commission of an offence under Section 498A of the IPC. The trial court Judge prevented the recording of evidence of PW-3 and PW-4 manifestly on an erroneous ground that the children were unable to identify the person before whom they were deposing.

It is held that a child will become an incompetent witness only if the court considers that, the child was unable to understand the questions and answer them in a coherent and comprehensible manner. If the child understands the questions put to her/him and gives rational answers to those questions, it can be taken that she/he is a competent witness to be examined. Section 4 of the Oaths Act, 1969 requires that all witnesses

except the child witnesses under the age of twelve years has to take oath or affirmation. Therefore, if the court is satisfied that the child witness below the age of twelve years is a competent witness, such a witness can be examined even without oath or affirmation. Directions given to the learned trial judge to assess objectively the capacity of the two child witnesses before recording their evidence, consistent with the law laid down in **State of Maharashtra vs. Bandu alias Daulat,** in a child friendly environment.]

*P. Ramesh v. State - Supreme Court of India - **Citation : 2020 (I) LW (Crl) 683** decided on 09.07.2019*

வழக்கு எண். 3

குழந்தைச்சாட்சியம் பற்றி சென்னை உயர் நீதிமன்றம்

மண வாழ்க்கைப் பிரச்சனை தொடர்பான வழக்குகளில் குழந்தைகள் சாட்சியமளிக்கத் தகுதியற்றவர்கள்

வழக்கின் சங்கதிகள்படி கணவன் மணமுறிவு கோரி மனைவி மீது வழக்கிடுகிறார். இவர்களுக்கு ஆணொன்றும் பெண்ணொன்று மாக இரு குழந்தைகள். வழக்கு விசாரணையின் போது கணவன் தரப்பு சாட்சியாக 11 வயதே நிரம்பிய தனது மகனை அவர் விசாரிக் கத் தலைப்படுகிறார். இதற்காக அச்சிறுவன் உளமார ஆணையிட்டு விளம்பிய சான்றுறுதி ஆணையுறுதியாவணம் (proof affidavit) ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார். அதில் அச்சிறுவன், தனது தந்தை நல்லவர் என்றும், தனது தாயார்தான் தந்தையுடன் அடிக்கடி தகராறு செய்கிறார் என்றும் பொருள்படும்படி பல்வேறு நிகழ்வுகள் குறித்து கூறியுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஆணையுறுதியாவணத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும், நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், இளவர் நிலையில் உள்ள தனது மகனை ஒரு சாட்சியாக தனது கணவன் விசாரிப்பதை அனுமதிக்கக்கூடாது என்றும் மனைவி இடைநிலை மனு ஒன்றை தாக்கல் செய்கிறார். ஆனால் குழந்தைகளை சாட்சியாக விசாரிப்பதில் சாட்சியச் சட்டத்தின்படி தடை ஏதுமில்லை என்று

கூறி கீழமை நீதிமன்றம் மனைவியின் மேற்படி மனுவை தள்ளுபடி செய்துவிடுகிறது. எனவே இதை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் மனைவி சீராய்வு மனுச்செய்கிறார்.

இதனைப்பரிசீலித்த **மாண்பமை நீதியரசர் கே.சந்துரு அவர்கள்,** குழந்தைகள் சாட்சியளிக்கத் தகுதியற்றவரல்ல என்றாலும், இத்தகு மணவாழ்க்கைப் பிரச்சனைகளில் அவர்களை ஓர் சாட்சியாக ஏற்கலாகாது, அவர்களிடமிருந்து ஆணையுறுதியாவணம் எதையும் பெறலாகாது என்று தனது ஆணையில் கூறினார். மேலும் இது குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்பு நெறிகளை தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டினார். அவற்றின்படி,-

1. குழந்தையானது சாட்சியமளிக்க தகுதியற்றது அல்ல. ஆனால் குழந்தையை விசாரிக்க அனுமதிக்கும் முன், ஓர் முதனிலை ஆய்வை நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும்.

2. குழந்தையின் சாட்சியத்தை சட்டரீதியாக ஆய்வு செய்கையில், அச்சாட்சியம் யாரேனும் சொல்லிக் கொடுத்ததை ஒப்புவிப்பது போல் உள்ளதா அல்லது அக்குழந்தை மனச் சாய்வுக்கு உள்ளாக்கப்பட வாய்ப்பு உள்ளதா என்பதையும் நீதிமன்றம் கவனிக்க வேண்டும்.

3. குழந்தையின் சாட்சியமானது பிற சாட்சியத்தால் வலுவூட்டப்பட வேண்டும்.

4. குழந்தைக்கு உறுதிமொழிப் பிரமாணம் செய்து வைத்தல் ஆகாது.

5. குழந்தை ஆணையிட்டு விளம்பச் செய்தல் ஆகாது. அதாவது ஆணையுறுதியாவணம் அளிக்கக் கோரக் கூடாது.

6. குழந்தையின் சாட்சியத்தைப் பதிவு செய்கையில் நட்பு ரீதியான சூழலை நீதிமன்றத்தில் ஏற்படுத்த வேண்டும்.

7. குழந்தையின் பாதுகாப்பு பொறுப்பு யாரிடம் இருப்பது என்ற விடயத்தில் குழந்தை கூறும் முன்னுரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கூறிய நீதியரசர், இவ்வழக்கு குழந்தையின் பாதுகாப்பு பொறுப்பு பற்றியதோ, குழந்தைக்கு எதிரான குற்ற வழக்கோ அல்ல என்றும், குழந்தை அளித்த ஆணையுறுதியாவணத்தை சாட்சியமாக ஏற்கக்கூடாது என்றும் கூறி, சீராய்வு மனுவை அனுமதித்தார்.

S. Amutha v. C.Manivanna Bhupathy - K.Chandru, J - Madras High Court - ***Citation : 2007 (2) CTC 97***

வழக்கு எண். 4

குற்ற வழக்கில் குழந்தையின் சாட்சியத்தை நீதிமன்றம் எவ்வாறு அணுக வேண்டும்?

உச்ச நீதிமன்றத்தில் எழுந்த குற்றவியல் மேல்முறையீடு ஒன்றில், கீழமை நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது சாட்சியமளித்த ஒரு சாட்சியின் வயது 12 ஆகும். 12 வயதுடையவர் கொடுத்த சாட்சியத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் வாதிடப்பட்டது.

ஒருவரைத் தகுதியுடைய சாட்சியாக தீர்மானிப்பதற்கு அவர் என்ன வயதுடையவராக இருக்க வேண்டும் என்பது பற்றி இந்திய சாட்சிய சட்டம் எதுவும் வகுத்துரைத்துக் கூறவில்லை. ஆனால் இதற்கு முரணாக ஒருவரின் இளம் வயது, தள்ளாமை, மன நோய் அல்லது வேறு நோய் காரணமாக அவரிடம் கேள்விகள் கேட்டால் அவர் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாதவராக உள்ளார் என்றோ, அவர் அக்கேள்விகளுக்கு பகுத்தறிவிற்குட்பட்ட பதில்களை தர இயலாதவர் என்றோ, இதனால் அவர் சாட்சியமளிப்பதிலிருந்து தடுக்கப்பட வேண்டியவர் என்றோ நீதிமன்றம் கருதினால், அவர் சாட்சியமளிக்க தகுதியுடையவர் அல்ல என்று **இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 118** கூறுகிறது.

எனவே கேள்விகளைப் புரிந்து கொண்டு, அதற்கு பகுத்தறிவிற்குட்பட்ட பதிலைத் தரும் அறிவாற்றல் பெற்ற ஓர் இளம் வயதுக் குழந்தையை சாட்சியமளிக்க அனுமதிக்க முடியும்.

இந்நிலைப்பாட்டை **Wheeler v. United States (159 US 523)** என்ற வழக்கில் **Brewer** எனும் நீதிபதி தெளிவாக எடுத்துரைத்துள்ளார். எனவே குழந்தையின் சாட்சியத்தை நீதிமன்றம் நிராகரிக்க வேண்டியதில்லை. மாறாக அதன் சாட்சியத்தை நீதிமன்றம் மிகவும் நுண்ணாய்ந்தறிய வேண்டும். மேலும் அதன் தரம் மற்றும் நம்பகத் தன்மை பற்றி மனநிறைவடைவதன் பேரில் மட்டுமே, அதை அடிப்படையாகக் கொண்டு ஒருவரைத் தண்டிக்க வேண்டும்.

எனவே கீழமை விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளை எக்கோணத்தில் இருந்து பார்த்தாலும் அவற்றில் குறை இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் அவற்றில் தலையிடுவ தற்கு ஏதுமில்லை. எனவே குற்றஞ்சாட்டப்பட்டவரின் மேல்முறை யீடு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

[The evidence of a child witness is not required to be rejected per se, but the court as a rule of prudence considers such evidence with close scrutiny and only on being convinced about the quality thereof and reliability can record conviction, based thereon]

Reported in www.supremecourtcaselaw.com - Case No: Criminal Appeal No. 345 of 2008 - Nivrutti Pandurang Kokate & others Appellants versus State of Maharashtra Respondent - Dt. 02-09-2008 - Dr. Arijit Pasayat and P.Sathasivam, JJ. - ***Citation: 2008 SCCL.COM 18***

வழக்கு எண். 5

கண்ணால் பார்த்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் போது கேட்கும் கேள்வி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

"கண்ணால் பார்த்த சாட்சியை" குறுக்கு விசாரணை செய்தல்:

இது ஒரு கொலை வழக்கு. இதில் சம்பவத்தை கண்ணால் பார்த்த சாட்சிகள் கொடுத்த வாக்குமூலத்தின் மெய்மை (veracity of testimony of eye-witnesses) பற்றி குறுக்கு விசாரணையில் கேள்வி ஏதும் இல்லை. எனவே இச்சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப் படையில் கீழமை நீதிமன்றங்கள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனை விதித்தன. இங்கு சம்பவ இடத்திலிருந்து சேகரிக்கப் பட்ட இரத்தம் தோய்ந்த துணிகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பதற்கும் அல்லது குற்றம் புரிய பயன்படுத்தப்பட்ட ஆயுதம் (கத்தி) மீட்கப்பட்டதா இல்லையா என்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை என்றும், கண்ணால் பார்த்த சாட்சிகளின் வாக்குமூலம் தெளிவாக இருக்கும்

போது, தண்டனைத்தீர்ப்பில் தலையிட ஏதுமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

இவ்வழக்கின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றொரு வாதத்தையும் முன் வைத்தார். அதாவது முதல் தகவல் அறிக்கை கொடுப்பதில் கால தாமதம் ஆகியுள்ளது என்றார். ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், கொலைச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து காவல் நிலையம் வெகு தூரத் தில் உள்ளது. அத்துடன் அப்போது பலத்த மழை பெய்து கொண் டிருந்தது. எனவே முதல் தகவல் அறிக்கை கொடுத்தவர் காவல் நிலையத்தை உடனடியாக அணுக இயலவில்லை. இது கால தாமதத்திற்கு போதுமான விளக்கமாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. முடிவில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து கீழமை நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்தது.

*Tama @ Tamal Mal v . State of West Bengal - S.B.Sinha and H.S.Bedi, JJ. - C.A. No. 1228 of 2007 - Dt. 11-09-2007 - Supreme Court of India - **Citation : AIR 2008 SC 12***

வழக்கு எண். 6

ஒரு வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியத்தை நீதிமன்றம் எவ்வாறு பரிசீலிக்க வேண்டும்?

ஒரு வழக்கில் அளிக்கப்படும் சாட்சியத்தை நீதிமன்றம் முழுமையாக பரிசீலிக்க வேண்டுமே தவிர, துண்டுதுண்டாக அல்லது ஒரு பகுதியாக பரிசீலித்தல் ஆகாது. இவ்வழக்கில் குறியிடப்பட்ட விற்பனை ஆவணத்தில் உள்ள வாசகங்களும், பி.சா. 1 (பிரதிவாதிதரப்பு சாட்சி 1) அளித்துள்ள வாக்குமூலமும் மூதாதை யர் சொத்தில் நடந்துள்ள பாகப்பிரிவினையை சுட்டிக்காட்டுகிறது. இத்தகு சாட்சியத்தை கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிக் கத்தவறிவிட்டது. எனவே அதன் தீர்ப்பை சட்டமுறை பிறழ்ந்த ஒன்றாக சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

[Appreciation of evidence — Evidence to be considered holistically, not in bits and pieces. Recitals in Sale Deed and testimony

of DW1 indicates partition of ancestral property. Lower Appellate Court failed to consider such evidence. Finding of Lower Appellate Court held to be perverse]

Venkatasamy v. Annamalai - Madras High Court - ***Citation : 2018 (2) CTC 649 (Mad.)***

வழக்கு எண். 7

'மோட்டிவ்' என்கிற உள்நோக்கம் பற்றி உச்ச நீதிமன்றம்

குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளியாக்க அவரது உள் நோக்கத்தை (motive) அரசு தரப்பு மெய்ப்பிக்க வேண்டிய அவசிய மில்லை. அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியத்தை ஆராயும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளில் ஒன்றே, உள்நோக்கம் இருக்கின்றதா இல்லையா என்பது. சாட்சிகளின் சாட்சியம் உண்மையானதாகவும், ஏற்புடையதாகவும் தோன்றி னால், உள்நோக்கத்தை மெய்ப்பிக்கத் தவறியது அரசு தரப்பின் வழக்கை பெரிதளவில் பாதிக்காது என்று உச்ச நீதிமன்றம் வழக்கொன்றில் விளக்கமளித்தது.

Citation: (2006) 11 SCC 323

வழக்கு எண். 8

வாதியின் வழக்கை வாதியே மெய்ப்பிக்க வேண்டும்; அவரது வழக்கை மெய்ப்பிக்கும் சுமை அவரிடமே உள்ளது

வாதி வழக்கைத் தொடுத்து தனது சாட்சிகளை விசாரித்து,. சான்றாவணங்களைக் குறிக்கிறார். ஆனால் பிரதிவாதி தனது தரப்பை மெய்ப்பிக்க சாட்சி எவரையும் விசாரிக்கவில்லை.

அதுபோல் சான்றாவணங்கள் எவற்றையும் தாக்கல் செய்யவில்லை. இதனால் தங்கள் தரப்பில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று வாதி கோருகின்றார்..

இந்நிலைப்பாட்டை இரண்டாவது மேல்முறையீட்டு நிலையில் ஆராய்ந்த சென்னை உயர் நீதிமன்றம் பின்வருமாறு கருத்துரைத்தது. அதாவது, வழக்கைத் தொடுக்கும் வாதிதான் அவரது தரப்பு வழக்கை மெய்ப்பிக்க/நிலைநிறுத்த வேண்டும். மாறாக பிரதிவாதியின் வழக்கில் உள்ள வலுவின்மையின் அடிப்படையில் வாதி தானாகவே தனது வழக்கில் வெற்றி பெற இயலாது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியது. இதற்கு ஆதரமாக உச்ச நீதிமன்றம் வழக்கொன்றில் **(AIR 2004 SC 4365)** வழங்கிய தீர்ப்பில் கண்ட நெறிகளை அது சுட்டிக்காட்டியது.

*Govindarasami Naidu v. Shanmuga Nattar and another - A.Kulasekaran, J - Madras High Court - **Citation : 2007 (2) CTC 553***

வழக்கு எண். 9

ஒருவருடைய கையொப்பத்தை மெய்ப்பிப்பது எப்படி?

வழக்கொன்றில், முதல் பிரதிவாதி காசோலையில் உள்ள தனது கையொப்பத்தை மறுக்கிறார். அக்கையொப்பம் அவருடையதுதான் என்று மெய்பிக்க வாதியின் வழக்குரைஞர், அப்பிரதிவாதி ஏற்கனவே தனது வழக்குரையதிகாரப் பத்திரத்திலும் (Vakalat), எதிர்வழக்குரையிலும் (Written statement) இட்டிருந்த கையொப்பத்துடன் காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்பு நோக்கி பார்த்தால் (comparison) அவை ஒன்றாக இருக்கும் என்றும், எனவே காசோலையில் உள்ள கையொப்பம் முதல் பிரதிவாதியுடையதுதான் என்றும் வாதுரைக்கிறார். இதை கீழமை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கிறது.

இதை எதிர்த்து பிரதிவாதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்கின்றனர். அங்கு தரப்பினர்களிடையே

முக்கிய முரண்பாட்டிற்குரியதாக உள்ள பிரச்சனைக்குரிய கையொப்பத்தை இவ்வாறு நீதிமன்றம் ஒப்பு நோக்கிப்பார்த்தல் மூலம் கண்டறிந்து முடிவுக்கு வருதல் ஆகாது என்றும், கையொப்பத்தை மெய்ப்பிக்க 'வல்லுநர் கருத்துரை' (Opinion of hand writing expert) வேண்டும் என்றும் கூறியது.

[Disputed Signature - Comparision by Court with Vakalat and written statement is not correct procedure]

*Pattabirama Reddiar and another v. Navaneetha Sundaram - K.Mohan Ram, J - Madras High Court - **Citation : 2006 (2) CTC 201***

வழக்கு எண். 10

இரண்டாம்நிலை சாட்சியம் எப்போது ஏற்புடையதாகும்?

இந்த வழக்கில் இரண்டாம்நிலை சாட்சியத்தை எப்போது ஏற்புடையதாகக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவுகள் 65 மற்றும் 66-இன் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் கருத்துரைக்கும் போது, முதல்நிலைச்சாட்சியம் அளிக்க முடியாததற்கான காரணங்களைக்காட்டும் உள்ளபடியான மற்றும் அடிப்படையான சாட்சியம் அளிக்கப்பட வேண்டும் என்றும், சாட்சியமளிக்கும் போது ஒரு பொருண்மையை ஒத்தேற்றுக் கொள்வது மற்றும் ஒரு ஆவணத்தை வழக்கு விசாரணையின் போது சான்றாவணமாகக் குறியிடுவது மட்டுமே, அது சட்டத்திற்கு இணங்கிய வகையில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது என்று கூறுவதற்கு போதுமானதாகாது என்றும் நிலைநிறுத்தியது.

[Evidence Act, 1872 — Ss. 65 and 66 — **Secondary evidence — When can be admitted :** Factual foundational evidence must be adduced showing reasons for not furnishing evidence. Mere admission in evidence and making exhibit of a document not enough as the same has to be proved in accordance with law]

*Jagmail Singh v. Karamjit Singh - Krishna Murari, J - Supreme Court of India - **Citation : (2020) 5 SCC 178** decided on 13-05-2020*

வழக்கு எண். 11

நிழற்பட சாட்சியம்

வழக்கொன்றில் சாட்சியிடம் காண்பிக்கப்படும் நிழற் படங்களை அவரே குறுக்கு விசாரணையின் போது ஒத்துக் கொண்டாலும், அதனை ஒரு சான்றாவணமாக குறியிடுவது முறையானதல்ல. நிழற்படங்களை சாட்சி எடுக்காதபோது, யார் அப்படங்களை எடுத்தாரோ அவர் வாயிலாக அல்லது யாருக்காக அப்படங்கள் எடுக்கப்பட்டனவோ அவர் வாயிலாகத்தான் அவற்றை சான்றாவணங்களாகக் குறியிடுதல் வேண்டும் என்று வழக்கொன்றில் சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

[It is not proper to mark photographs in cross examination even though the witness admits it. When the witness had not taken photograph, it is to be marked only through the person who took photograph or through person at whose instance it was taken]

P.Rama Srinivasa Rao v. Dr.N.Ragavan - R.Banumathi, J. - Madras High Court - C.R.P. No. 2446 of 2003 - Dt. 5.7.2005 - ***Citation : 2006 (2) CTC 43***

வழக்கு எண். 12

அடையாள அணிவகுப்புச்சோதனை

அடையாள அணிவகுப்புச் சோதனை என்பது குற்றத்தை கண்ணால் பார்த்த சாட்சியின் ஞாபகத்திறனை சோதிப்பதற்காக ஆகும். நீதிமன்றத்தில் அடையாளம் காட்டும் சாட்சியமும் ஏற்புடையதே.

குற்ற வழக்கின் புலனாய்வு நிலையில் குற்றஞ்சாட்டப் பட்டவரை அடையாளம் காண்பதற்காக நடத்தப்படும் அடையாள அணிவகுப்புச் சோதனை, குற்றத்தை கண்ணால் பார்த்த சாட்சியின் ஞாபகத்திறனை சோதிப்பதற்காக ஆகும். இதைக் கொண்டு யாரை

கண்ணால் பார்த்த சாட்சியாக நீதிமன்றத்தின் முன் நிறுத்தலாம் என்பதில் குற்றவழக்கிடும் தரப்பினர் (அரசு தரப்பினர்) ஒரு நல்ல முடிவுக்கு வர முடிகிறது. எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட பிறகு எவ்வளவு விரைவாகவோ அவ்வளவு விரைவாக இந்த அடையாள அணி வகுப்புச் சோதனையை நடத்த வேண்டும், என்று வழக்கொன்றில் உச்ச நீதிமன்றம் அடையாள அணிவகுப்புச் சோதனையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது.

மேலும் அடையாள அணிவகுப்புச் சோதனை என்பது புலனாய்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும் என்றும், இதை **குற்ற வியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 162** முறைப்படுத்துகிறது என்றும், ஆனால் இச்சோதனையை செய்தாக வேண்டும் என்று கட்டாயம் ஏதும் கிடையாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

புலனாய்வு நடவடிக்கைகளின் போது இச்சோதனை நடத்தப் படவில்லை, ஆனால் கண்ணால் பார்த்த சாட்சி குற்றஞ்சாட்டப் பட்டவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி சாட்சியமளிக் கிறார். இங்கு அடையாள அணிவகுப்பு நடத்தாத நிலையில், குற்றஞ் சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி உரைக்கும் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால் இதை உச்ச நீதிமன் றம் ஏற்கவில்லை. நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவரை அடை யாளம் காட்டி கண்ணால் பார்த்த சாட்சி அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதே என்று உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியது. எனினும் இச்சாட்சியம் வலுக் குறைந்ததாகும் என்றும், முன்னதாக நடத்தப்படும் அடையாள அணிவகுப்புச் சோதனை இதற்கு பலம் சேர்க்கிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

இவ்வழக்கின் சங்கதிகள்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் "பெட்ரோல் பங்க்'' ஒன்றைத் தாக்கி அங்கிருந்த ரொக்கத்தை கொள்ளையடித்துச் சென்று விடுகின்றனர். அங்கு வேலை செய்து கொண்டிருந்த பணியாள் ஒருவர் இக்குற்றம் குறித்து புகார் கொடுக்கிறார். மேலும் இவரும் மற்றொருவரும் குற்றஞ்சாட்டப் பட்டவர்களை அடையாள அணிவகுப்புச் சோதனையின் போது அடையாளம் காட்டுகின்றனர். நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கின் றனர். இவற்றை மேல்முறையீட்டு நிலையில் ஆராய்ந்த உச்ச நீதி மன்றம், இந்த அடையாள அணி வகுப்புச் சோதனையில் தேவை யான நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளன என்றும்,

சாட்சிகளின் சாட்சியத்தில் எவ்வித குறைபாடும் இல்லை என்றும் கூறி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு கீழமை நீதிமன்றம் விதித்த தண்டனையை உறுதி செய்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் மேல்முறையீடு தள்ளுபடி.

*Heera & another v. State of Rajasthan - Dr.Arijit Pasayat and D.K.Jain, JJ. - C.A. No. 1307 of 12006 - Dt. 20-06-2007 - Supreme Court of India - **Citation: AIR 2007 SC 2425***

வழக்கு எண். 13

'புரோநோட்' எனப்படும் கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ள கையொப்பத்தை பிரதிவாதி தன்னுடையதே என்று ஒத்துக்கொண்டால், அக்கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளதை பொய்ப்பிக்கும் சுமை அப்பிரதிவாதிக்கு மாறிவிடுகிறது

கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் வாதி வழக்கிடுகிறார். ஆனால் அக்கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் தனதல்ல என்று பிரதிவாதி எதிர்வழக்காடுகிறார். மேலும் தான் 1981-ஆம் ஆண்டில் வாதிக்கு ஆதரவாக கடனுறுதிச் சீட்டு ஒன்றை எழுதிக் கொடுத்ததாகவும், அதுவும் தீர்வு செய்யப்பட்டு (அதாவது கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது) என்றும், எனவே வாதியின் வழக்குப்படி தான் 1989-இல் அவருக்கு கடனுறுதிச் சீட்டு எதையும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதி சாட்டுரைக்கிறார்.

இங்கு கவனிக்கத்தக்கது என்னவென்றால், கடன் தீர்க்கப் பட்ட 1981-ஆம் ஆண்டு கடனுறுதிச்சீட்டை பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. குறுக்கு விசாரணையின் போது பிரதிவாதி முன் வைக்கும் வழக்கு யாதெனில், வாதி தன்னிடம் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு, தற்போது அதை கடனுறுதிச் சீட்டாக தயார் செய்து வழக்கிட்டுள்ளார் என்பதாகும். இந்நிலைப்

பாட்டை இரண்டாம் மேல்முறையீட்டு நிலையில் ஆராய்ந்த சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர் பி.ஜோதிமணி தனது தீர்ப்புரையில், எப்போது பிரதிவாதி தனது கையொப்பத்தை ஒத்தேற்றுக் கொள்கிறரோ, அப்போதே கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளதை பொய்ப்பிக்கும் சுமை பிரதிவாதிக்கு மாறி விடுகிறது (Once signature is admitted onus shifts to defendant to disprove the contents of instrument) என்று கூறினார்.

இங்கு பிரதிவாதி அவ்வாறு கடனுறுதிச் சீட்டை பொய்ப் பிக்கத் தவறிவிட்டார் என்று கூறிய மாண்பமை நீதியரசர், முடிவில் பிரதிவாதியின் இரண்டாம் மேல்முறையீட்டை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

Ramasamy and another v. Kamalammal and others - P.Jyothimani, J - Madras High Court - ***Citation : 2007 (4) CTC 81***

வழக்கு எண். 14

காவல்துறை வழக்கு கையேடு (Case Diary): ஒரு வழக்கில் எந்த அளவிற்குப் பயன்படுத்தலாம்? - உச்ச நீதிமன்றம்

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவுகள் 172 மற்றும் 161 மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 161 - வழக்கு கையேடு (Case Diary)- **குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்குக் கையேட்டை பயன்படுத்த உரிமையுடையவரா?**

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 172(3)-இன்படி குற்றஞ்சாட்டப்பட்டவரோ அவரது முகவர்களோ அத்தகு கையேடுகளை தருவிக்கக் கோர (call for) அல்லது பார்வையிட உரிமை பெற்றவர்கள் அல்லர். வழக்கு கையேடு முழுவதும் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு கிடைக்குமாறு செய்யப்பட்டால், அது மற்றவர்களுக்கு கடும் குந்தகமாகலாம் அல்லது காவல்துறையிடம் வாக்குமூலம் கொடுத்தவர்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பைக்கூட விளைவிக்கலாம். ஆனால், எந்த காவல் அதிகாரி அந்தக் கையேட்டை பராமரித்தரோ அவர் தனது நினைவைப்புதுப்பித்

துக் கொள்வதற்காக (to refresh his memory) அவரால் அக்கையேடு பயன்படுத்தப்பட்டால், அல்லது அத்தகு காவல் அதிகாரியின் வாக்குமூலத்தை முரண்படுத்தும் நோக்கத்திற்காக அதை நீதிமன்றம் பயன்படுத்தினால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 161 அல்லது இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 145-இன்படியான வகைமுறைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

நீதிமன்றம் அத்தகு கையேடுகளை குற்றப் புலனாய்வு காலத்தின் போது ஏதேனும் நிகழ்ந்துள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு ஒரு உதவியாக பயன்படுத்துவதற்கு தருவிக்கக் கோர அதிகாரம் படைத்ததேயன்றி, சாட்சியமாக பயன்படுத்த அல்ல. மேற்சென்ற தன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணையில் கையேடு முழுவதும் குற்றஞ்சாட்டப்பட்டவரால் பயன்படுத்தப்பட்டது, சரியெனக்கூடியதல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Sidharth v. State of Bihar - ***Citation : (2005) 12 SCC 545***

வழக்கு எண். 15

கொலை வழக்கு ஒன்றில் 'சம்பவ இடம்' பற்றி முரண்பாடான சாட்சியம் அளிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை

மனைவியை கணவன் கத்தியால் குத்தியதால் அவள் இறந்து போனாள் என்பது அரசு தரப்பு வழக்கு. கீழமை நீதிமன்றம் கணவனுக்கு தண்டனை வழங்குகிறது. இதை மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றமும் உறுதி செய்கிறது. கணவன் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்கிறான். இக்கொலையை கண்ணால் பார்த்த முக்கியச் சாட்சி, இறந்து போன அப்பெண்ணின் தந்தை (PW1) ஆவார். இவர் குறுக்கு விசாணையின் போது அளித்திருந்த வாக்கு மூலங்களை உச்ச நீதிமன்றம் தனது ஆய்விற்கு எடுத்துக்கொண்டது. அதாவது:-

இறந்து போன பெண்ணின் தந்தையை கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட கணவனின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது, அவர் தனது மனைவியின் வீட்டில் இச்சம்பவம் (கொலை) நடந்தது என்று கூறுகிறார்.

"மனைவியின் வீட்டில் சம்பவம் நடந்ததாக கூறுகிறாரே, அப்படியானால் இருவரும் தனித்தனி வீட்டில் வசிக்கின்றனரா'' எனும் அடிப்படையில் அவரை தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்த போது, அவரும் அவரது மனைவியும் (இறந்து போன பெண்ணின் தந்தை மற்றும் தாய்) கடந்த 20 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், அவர் தனது மனைவியை பார்க்கக் கூட சென்று வருவதில்லை என்றும் ஒரு முக்கியத் தகவலைக் கூறுகிறார்.

குறுக்கு விசாரணை விறுவிறுப்பான கட்டத்தை எட்டிய நிலையில், சம்பவ இடத்தைப் பற்றி அவரிடம் மற்றொரு கேள்வியை கேட்ட போது, கொலையானது தனது மனைவியின் வீட்டிற்கு முன்னால் உள்ள ஒரு சிறு சந்தில் நடந்தது என்று கூறுகிறார்.

இங்கு அப்பெண்ணின் தந்தைதான் முதல் தகவல் அறிக்கை யைக் கொடுத்துள்ளார். அதில் கூறப்பட்டவை குறித்து அவரிடம் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யும் போது, இறந்துபோன தனது மகளின் வீட்டில்தான் கொலை நடந்தது என்பதாகவே தான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் என ஒத்தேற்றுக் கொள்கிறார்.

முக்கியச் சாட்சி என்று நம்பிய அரசு தரப்பு சாட்சி (பெண்ணின் தந்தை) சம்பவ இடத்தைப் பற்றி இவ்வாறு முரண் பாடாக அளித்த வாக்குமூலங்களைப் பற்றி உச்ச நீதிமன்றம் கருத் துரைக்கையில், "தனது மனைவின் வீட்டில் கொலை நடந்தது நடந் தது என்று அரசு தரப்பு சாட்சி 1 கூறுகிறார். ஆனால் அவர் தனது மனைவி விட்டுப் பிரிந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆகிறது என்றும், அவளைப் பார்ப்பதற்குக் கூட செல்வதில்லை என்றும் கூறுகிறார். இங்கு (அவ்விருவருக்கிடையிலான) உறவுநிலை முறிந் திருக்கும் (strained relationship) போது, அவர் எப்படி அவரது மனைவியின் வீட்டில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சம்பவத்தைப் பார்த்திருக்க முடியும் எனும் கேள்வி தானாகவே எழுகிறது'' என்ற முதல் அய்யப்பாட்டை தனது தீர்ப்பில் ஆய்ந்தறிந்தது.

தொடர்ந்து உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்கையில், "அரசு தரப்பு சாட்சி 1-ஆனவர் தனது மனைவியின் வீட்டிற்கு முன்னால் உள்ள சிறிய சந்து ஒன்றில் சம்பவம் நடந்தது என்று தனது குறுக்கு விசாரணையில் கூறுகிறார். ஆனால் இது தனது மனைவியின் வீட்டில் சம்பவம் நடந்தது என்று அவர் ஏற்கனவே கூறியுள்ள வாக்கு மூலத்துடன் தெளிவாக மாறுபட்டுள்ளது'' என்ற இரண்டா வது அய்யப்பாட்டையும் தனது தீர்ப்பில் கண்டறிந்தது.

மேலும் "முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது இறந்து போனவரின் (அ.சா.1-இன் மகள்) வீட்டில் நிகழ்ந்தது என்று அவர் கூறியிருப்பது சரியே என்று ஏற்றுக் கொண்டுள்ளார். முதல் தகவல் அறிக்கையானது கணிசமான ஒரு முக்கியச் சாட்சியம் அல்ல என்றாலும், சாட்சியின் வாய்மையை (veracity) சோதித்தறிய அதைப் பயன்படுத்த முடியும். முதல் தகவல் அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதனை சரியென்று அ.சா.1 ஏற்றுக்கொண்டுள்ளார்" என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் மூன்றாவது அய்யப்பாட்டையும் சுட்டிக்காட்டியது. இங்கு அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் தனது மனைவியின் வீட்டில் நடந்தது என்கிறார். பின்னிட்டு அவரே முதல் தகவல் அறிக்கையில் கூறியது போன்று சம்பவம் இறந்து போனவர் வீட்டில் நடந்தது என்பது சரியே என்று ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார்.

"சம்பவ இடமே மெய்ப்பிக்கப்படாதிருக்கும் போது அரசு தரப்பினரின் வாதத்தை ஏற்பது உகந்ததன்று" (when the place of occurrence itself has not been established it would be not proper to accept the prosecution version) என்று உச்ச நீதிமன்றம் கூறி, அய்யப்பாட்டின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக்கி அவரை விடுதலை செய்து ஆணையிட்டது. முன்னதாக அவருக்கு ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் வழங்கியிருந்த தண்டனையை இரத்து செய்தது.

Syed Ibrahim v. State of Andra Pradesh, Arijit Pasayat and Lokeshwar Singh Panta, JJ. - Supreme Court of India - ***Citation: AIR 2006 SC 2908***

வழக்கு எண். 16

அனுமானம்

ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாக வாழ்ந்தார்கள் என்பதை எப்படி அனுமானிக்கலாம்?

இயற்கையான நிகழ்வுகள் மற்றும் தரப்பினர்களின் நடத்தை ஆகியன காட்டும் பொதுவான நடைமுறையிலிருந்து ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான திருமணத்தை அனுமானிக்கலாம் என்றும், எனினும் இந்த அனுமானத்தை மறுத்து வாதிடலாம்

என்றும், ஆனால் யார் அத்தகு உறவு ஏதும் தங்களுக்கிடையே இல்லை என்கிறார்களோ அவர் மீது தான் மேற்படி அனுமானத்தை மறுக்கும் சுமை பெரிய அளவில் உள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் வழக்கொன்றில் கூறியது.

Tulsa & Others v. Durghatiya & Others - Dr.Arijit Pasayat and P.Sathasivam, JJ. - C.A. No. 648 of 2002 - Dt. 15-01-2008 - Supreme Court of India - ***Citation : 2008 (1) CTC 773***

வழக்கு எண். 17

வாக்களர் பட்டியல் ஓர் அறுதியான சாட்சியம் அல்ல! அது செவிவழிச்சாட்சியம்!!

வாக்காளர் பட்டியலைக் கொண்டு கணவனின் இரண்டாம் திருமணத்தை மெய்ப்பிக்க இயலாது - கல்கத்தா உயர் நீதிமன்றம்

எவ்வித காரணமுமில்லாமல் மனைவி தன்னைவிட்டு பிரிந்து வாழ்கிறாள், தன்னை கைவிட்டு சென்று விட்டாள் (desertion) என்ற அடிப்படையில் கணவன் மணமுறிவு கோரி மனுச் செய்கிறார். கணவன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றும், எனவே கணவருடன் வாழ முடியாது என்றும் மனைவி குற்றஞ் சாட்டுகிறாள்.

கணவனின் இரண்டாம் திருமணத்தை மெய்ப்பிக்க, இரண்டாவது மனைவியின் பெயர் அடங்கியுள்ள வாக்காளர் பட்டியலை (voter's list) மனைவி தாக்கல் செய்கிறார். இதை கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் ஈராயம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது தனது தீர்ப்புரையில், "கணவனின் இரண்டாம் திருமணத்தை மெய்ப்பிக்க வாக்காளர் பட்டியல் ஒரு கோவையான சாட்சியம் அல்ல, வாக்காளர் பட்டியல் என்பது செவிவழிச் சாட்சியம் (hearsay evidence) ஆகும், எனவே அதை ஒரு அறுதியான சாட்சியமாக ஏற்றுக் கொள்ளவியலாது'' என்று சுட்டிக்காட்டியது. முடிவாக மண முறிவிற்கான தீர்ப்பாணையைப் பெற கணவன் உரிமையுடையவரே என்று தீர்ப்புரைத்தது.

*Smt. Raj Kumari Jaiswal v. Ramesh Kumar Jaiswal, Kalyan Jyoti Sengupta and Sanjib Banerjee, JJ. - Calcutta High Court - **Citation: AIR 2007 Cal. 94***

வழக்கு எண். 18

ஒரு பத்திரத்தை மெய்ப்பிப்பது எவ்வாறு? - கர்நாடகா உயர் நீதிமன்றம்

ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதாலேயே அதனை நீதிமன்றத்தில் மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லையா?

ஒரு பத்திரத்தில் கையொப்பம் செய்வதால் மட்டுமே அது முறைப்படி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று கொள்வதற்கில்லை. அந்தப் பத்திரத்தில் உள்ள வாசகங்களுக்கும் வரைவுரைகளுக்கும் சம்மதம் தெரிவிக்கும் முகமாக அதில் கையொப்பம் செய்யப்பட்டது என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டும். ஒருவர் ஒரு பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுத்ததை ஒத்துக் கொண்டுள்ளார் என்று மெய்ப்பிப்பது, அப்பத்திரம் முறையாக எழுதிக் கொடுக்கப்பட்டது என்று மெய்ப்பித்ததற்கு ஒப்பாகாது. ஒரு பத்திரம் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால், அப்பத்திரத்தை நீதிமன்றத்தில் மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் தளர்த்தப்பட்டதாகக் கூற முடியாது.

*N.M.Ramachandraiah & anr. v. State of Karnataka & Ors. - N.Kumar, J. - W.P.No.5168 of 2005 - Karnataka High Court - **Citation : AIR 2007 Kar.164***

வழக்கு எண். 19

பதிவு தேவைப்படும் பத்திரத்தை பதிவு இல்லாமல் சாட்சியமாக அனுமதிக்க இயலாது

பதிவுச் சட்டப்படி பதிவு தேவைப்படும் ஒரு பத்திரத்தை பதிவு

செய்யாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், அதை ஒரு சாட்சியமாக அனுமதிக்க இயலாது. ஆனால் அதை பதிவு சட்டத்தின் பிரிவு 49-இன் கீழ் உள்ள வரம்புரை வாசகத்தின்படி துணை நோக்கத்திற்காக சாட்சியமாக பயன்படுத்தலாம்.

எனினும் அத்துணை நடவடிக்கைகள், பதிவு தேவைப்படும் நடவடிக்கையிலிருந்து தனியானதாக, அதிலிருந்து பிரித்தெடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட அசையாச் சொத்தில் அத்துணை நடவடிக்கையானது உரிமை மூலம், நலன் அல்லது உரிமையை உருவாக்குவதாகவோ முடிவுறுத்துவதாகவோ இருத்தல் கூடாது. பதிவு தேவைப்படுகிறது என்ற காரணத்திற்காக ஒரு பத்திரம் எப்போது சாட்சியமாக அனுமதிக்கப்பட இயலாததாகிறதோ, அப்போதே அதிலுள்ள முக்கியமான கூறு எதுவும் துணை நோக்கத்திற்குரியதாகாது.

இவ்வழக்கில் பதிவு செய்யப்படாத வாடகைப் பத்திரத்தில் உள்ள ஒரு கூறு, வாடகைதாரரை அச்சொத்தில் இருந்து வெளியேற்ற வகை செய்தது. எனவே அது முக்கியமான கூறாகும் என்றும், அதை துணை நோக்கத்திற்குரியதாக கொள்ள இயலாது என்றும், வாடகைப் பத்திரம் பதிவு செய்யப்படாததால் அக்கூறை சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

[Document which requires to registered is not admissible in evidence but can be used as evidence of collateral purpose as provided in Proviso to Section 49 of Registration Act.

Collateral transaction must be independent of, divisible from, transaction which requires registration - Collateral transaction should be one which does not create, extinguish title, interest, right or interest, etc. in immovable property - Once document cannot be admitted in evidence for want of registration any important clause in such document cannot be collateral purpose.

Clause in lease deed enabling only named officer or his family members of Lessee occupying leased premises is important clause and could not be looked into as lease deed was not registered.]

K.B.Saha & Sons Pvt. Ltd. v. Development Consultant Ltd. - C.A.No. 5659 of 2002 - Supreme Court of India - A.K.Mathur and Tarun Chatterjee, JJ. - ***Citation : 2008 (5) CTC 260***

வழக்கு எண். 20

ஆவணத்தின் சான்று நகலை வழங்க சட்டமே வழிவகை செய்திருக்கும் போது, சான்றுறுதி அலுவலரிடம் (நோட்டரி பப்ளிக்) சான்றொப்பம் பெற்ற அதன் நிழலச்சு நகலை சாட்சியமாக அனுமதிப்பது முறையற்றது

உரிமை வழக்கொன்றின் விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்ட வாதி தரப்பு சான்றாவணங்கள் 2, 4, 7, 8, 9 (Ex. A2, A4, A7, A8, A9) ஆகியன கிரயப் பத்திரங்களின் நிழலச்சு ('ஜிராக்ஸ்') நகல்கள் ஆகும். அவை சான்றுறுதி அலுவலர் (நோட்டரி பப்ளிக்) ஒருவரால் உண்மை நகல்கள் என சான்றளிக்கப்பட்டிருந்தன. அது போல் வா.சா.ஆ. 10, 11 ஆகியன பழைய மற்றும் புதிய பட்டாவின் நிழலச்சு நகல்கள் ஆகும். இந்த ஆவணங்கள் சாட்சியமாக அனுமதிக் கப்படத்தக்கதா என்ற கேள்வி இவ்வழக்கின் இரண்டாம் மேல்முறை யீட்டின் போது சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வாயத் தின் முன் எழுந்தது. அப்போது மாண்பமை நீதியசரர் பி.ஆர்.சிவக் குமார் கூறிய சட்டப்பொருள் விளக்கம் வருமாறு:-

ஆவணங்களின் சான்று நகல்களை வழங்க சட்டம் வழி வகை செய்திருக்கும் போது, அச்சான்று நகல்கள் இரண்டாம் நிலை சாட்சியமாக நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட இயலும். ஆனால் அத்தகு நேர்வில் உரிய அதிகாரம் பெற்ற அதிகார அமைப்புகளால் வழங்கப்படும் சான்று நகல்கள் மட்டுமே அனுமதிக்கப்படத்தக்க தாகும். சான்றுறுதி அலுவலரால் சான்றொப்பம் செய்யப்பட்ட நிழலச்சு நகல்களை சாட்சியமாக அனுமதிப்பது முறையற்றதாகும். (When the law provides for the issue of certified copies in respect of documents, certified copies can be admitted as secondary evidence in proof of the contents of the documents. But in such cases, certified copies issued by competent authorities alone are admissible. Admission of xerox copies attested by notary public is improper)

இவ்வாறு கூறிய நீதியரசர், வழக்கு விசாரணையின் போது

மேற்படி ஆவணங்களை தனது தரப்பு சான்றாவணங்களாக வாதி குறியிடும் போது அவற்றை மறுதரப்பினர் (பிரதிவாதி) ஆட்சேபிக்காத காரணத்தால், அது குறித்து கீழமை நீதிமன்றங்கள் பரிசீலிக்காமல் இருந்திருக்கக் கூடும் என்றும், எனினும் இவ்விடயத்தை பரிசீலிக்க இவ்வழக்கை மீண்டும் விசாரணை நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்புவது (ரிமிட்) நியாயமானதாகவும், அவசியமானதாகவும் உள்ளது என்று கருதுவதாகவும் அவர் மேலும் கருத்துரைத்தார்.

எடுத்துக்காட்டாக கிரயப் பத்திரமொன்றின் சான்று நகலுக்கு சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து, அதற்கான கட்டணங்களை கட்டி, அதன் பதிவு நகலைப் பெற்றால், அது சாட்சியமாக அனுமதிக்கப்படத்தக்கது. மாறாக கிரயப் பத்திரத்தின் நிழலச்சு நகலை சான்றுறுதி அலுவலரிடம் உண்மை நகலென சான்றொப்பம் பெற்று தாக்கல் செய்தால், அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படாது. அவ்வாறே பட்டா, சிட்டா போன்ற வருவாய் ஆவணங்களும்.

Vaikundam Agro Tech Limited, Trivandrum rep. by General Manager v. State of Tamil Nadu rep. by District Collector, Kanyakumari District-S.A. (MD) No. 1406 of 1996 - Madras High Court, Madurai Bench - P.R.Shivakumar, J. - ***Citation : (2008) 1 MLJ 200***

வழக்கு எண். 2|

பகர அதிகாரப்பத்திரத்தின் நிரூபணத்திற்கு எது போதும் ? - கேரளா உயர் நீதிமன்றம்

பகர அதிகாரப் பத்திரத்தில் சான்றுறுதி அலுவலர் சான்றொப்பம் செய்திருந்தால் அதுவே போதும். இரண்டு சாட்சிகள் சான்றொப்பம் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை

இவ்வழக்கில் பகர அதிகாரப் பத்திரம் (பவர் ஆஃப் அட்டார்னி) தொடர்பான அனுமானம் பற்றி கேரளா உயர் நீதிமன்றத்தால் விவாதிக்கப்பட்டது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பகர அதிகாரப் பத்திரமானது சான்றுறுதி அலுவலரால் (Notary Public) அதிகாரபூர்வச் சான்றொப்பம் (authentication) செய்யப்பட்டது. ஆனால் அதில் செய்யப்பட்டிருந்த மேலொப்பம் மனநிறைவு தருவ

தாக இல்லை. மேலும் அதில் இரண்டு சாட்சிகள் சான்றொப்பமும் செய்யவில்லை.

இதையெல்லாம் சுட்டிக்காட்டி இப்பத்திரம் செல்லத்தக்க முறையில் எழுதித்தரப்படவில்லை, சான்றொப்பம் செய்யப்பட வில்லை என்று எதிர்த்தரப்பினரால் ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆனால் பகர அதிகாரப்பத்திரத்திற்கு இரண்டு சாட்சிகள் சான் றொப்பம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், வேண்டியது யாவும் அது சான்றுறுதி அலுவலரால் அதிகாரப்பூர்வமானதாக்கப் பட்டுள்ளதா என்பதே என்றும், குறிப்பாக இங்கு அவரது முத்திரை (Seal of Notary Public) பதிக்கப்பட்டுள்ளது என்றும், அவர் மேலொப் பத்தைச் சரியாகச் செய்யவில்லை என்பது ஒரு பொருட்டல்ல என்றும் கேரளா உயர் நீதிமன்றம் கூறியது.

*K.A.Pradeep v. Branch Manager, Nedungadi Bank Ltd.and others - Pius C. Kuriakose, J. - W.P. (C) No. 37043 of 2004 - Dt. 27-07-2007 - Kerala High Court-**Citation : AIR 2007 Ker. 269***

வழக்கு எண். 22

பகர அதிகாரப்பத்திரத்தின் சான்று நகலை சாட்சியமாக அனுமதிக்கலாம் - சென்னை உயர் நீதிமன்றம் சட்டப்பொருள் விளக்கம்

சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பகர அதிகாரப் பத்திரத்தின் (பவர் ஆஃப் அட்டார்னி பத்திரம்) சான்றளிக் கப்பட்ட நகலை வழக்கில் இரண்டாம் நிலைச் சாட்சியமாக அனுமதிக்க லாம் என்றும், அது இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 74(2)-ற்குண் டான பொருளின்படி ஓர் பொது ஆவணமாகும் என்றும், எனவே சாட்சிய சட்டத்தின் பிரிவு 76-இல் வகை செய்யப்பட்டவாறு அதை ஓர் சாட்சியமாக அனுமதிக்கலாம் என்றும் உரிமையியல் சீராய்வு மனு ஒன்றில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர் கே.கே. சசிதரன் பொருள் விளக்கமளித்தார்.

(Secondary evidence relating to documents - Certified copy of power of attorney which is registered document on file of sub-registrar -

Is public document within meaning of S. 74(2) of Evidence Act - Same is admissible in evidence as provided u/S. 76 of Act.)

P.K.Pandian v. Komala - C.R.P. No. 3645 of 2007 - Madras High Court - K.K. Sasidharan, J. - ***Citation : AIR 2009 Mad. 51***

வழக்கு எண். 23

உடன் குற்றவாளியின் சாட்சியத்தை அய்யப்பாட்டுடன்தான் பார்க்க வேண்டும்

உடன் குற்றவாளி (Accomplice) தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தன்னுடன் சேர்த்துக் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றச் செயலில் சிக்க வைக்கலாம் - உச்ச நீதிமன்றம்

போதைப் பொருட்கள் தடுப்பு வழக்கொன்றில் 2-ஆம் எண் குற்றஞ்சாட்டப்பட்டவராக (accused No. 2) உள்ளவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இதை ஆராய்ந்த மாண்பமை நீதியரசர்கள் எஸ்.பி.சின்ஹா மற்றும் மார்க்கண்டேய கட்ஜூ அடங்கிய ஈராயமானது பின்வரும் நிலைப்பாடுகளை கண்டறிந்தது.

அதாவது **முதற்கண்** தற்போது மேல்முறையீடு செய்திருக்கும் 2-ஆம் எண் குற்றஞ்சாட்டப்பட்டவர் வசம் போதைப் பொருட்கள் இருந்ததாக குற்றச்சாட்டு ஏதும் இல்லை. **இரண்டாவதாக** போதைப் பொருட்களை அவர் 1-ஆம் எண் குற்றஞ்சாட்டப்பட்டவர் வசம் ஒப்படைத்ததாக மட்டும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள் ளது. **மூன்றாவதாக** இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக உள்ள ஒரே சாட்சியம் யாதெனில், 1-ஆம் எண் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் மற்றும் மேல்முறையீட்டாளரின் திரும்பப் பெறப் பட்ட ஒப்புதல் வாக்குமூலம் (retracted confession). 1-ஆம் எண் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு உடன் குற்றவாளி.

இவற்றை ஆய்வு செய்த ஈராயமானது, உடன் குற்றவாளியின் சாட்சியத்தை அய்யப்பாட்டுடன்தான் பார்க்க வேண்டும் என்றும், அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தன்னுடன் சேர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றச்செயலில் சிக்க வைக்கலாம்

என்றும், எனவே மேல்முறையீட்டாளருக்கு (2-ஆம் எண் குற்றஞ் சாட்டப்பட்டவர்) அளிக்கப்பட்ட தண்டனையை அப்படியே நிலை நிறுத்துவது என்பது சரியன்று என்றும் தனது ஆணையில் கூறியது.

Francis Stanly @ Stalin Vs. Intelligence Officer, Narcotic Control Bureau, Thiruvananthapuram - Date of Decision: 14/12/2006 - Criminal Appeal No. 996 of 2006 - ***Citation : 2006 SCCL.COM 1031***

வழக்கு எண். 24

குற்றஞ்சாட்டப்பட்டவரின் முந்தைய கெட்ட நடத்தையை மெய்ப்பிக்க மற்றொரு குற்ற வழக்கின் எந்த ஆவணம் பயனாகும்?

ஒருவர் கொலைக் குற்றத்திற்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302-இன்படி குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தது.

அப்போது அவர் ஏற்கனவே மற்றொரு குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்றும், அவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 379-இன்படி திருட்டுக் குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் அவர் முதல் குற்றவாளியாக (ஏ1) காட்டப்பட்டுள்ளார் என்றும், எனவே அவரது முந்தைய குற்றப்பதிவுகளையும், கெட்ட நடத்தையையும் மெய்ப்பிக்க அக்குற்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற அறிக்கையை (சார்ஜ் சீட்) தாக்கல் செய்ய அனுமதி வழங்குமாறு கோரி அரசு தரப்பில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 311-இன்படி மனு தாக்கல் செய்யப்படுகிறது. இதை ஆராய்ந்த ஈரோடு மாவட்ட கூடுதல் நீதிமன்றம், தற்போதைய கொலை வழக்கின் விசாரணைக்கு மேற்படி ஆவணங்கள் தொடர்புடையதே என்று கூறி, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அனுமதித்து ஆணையிட்டது.

இதனால் குறையுற்ற அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த மாண்பமை நீதியரசர் எம்.ஜெயபால் தனது ஆணையில்,

"இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 54-இல், குற்றஞ்சாட்டப் பட்ட நபர் கெட்ட நடத்தை கொண்டவர் என்று சங்கதி, குற்ற வழக்கு நடவடிக்கை ஒன்றில் அடியோடு தொடர்பற்றதாகும், என்பது கண்டுள்ளது. அச்சங்கதி எப்போது தொடர்புடையது என்றால், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தான் நன்னடத்தை கொண்டவன் என்பதை மெய்ப்பிக்க சாட்சியம் அளிக்க முன்வரும்போது மட்டுமே. இங்கு காங்கேயம் காவல் நிலையத்தின் கோப்பில் உள்ள குற்ற எண். 87/2007-இன் முதல் தகவல் அறிக்கையை (குற்றஞ்சாட்டப்பட்ட வருக்கு எதிரான சான்றாவணமாக) குறியிட வேண்டி அரசு தரப்பினர் மனுச் செய்துள்ளனர். அக்குற்ற வழக்கில் குற்ற அறிக்கை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை சம்பந்தப்பட்ட நீதிமன்றம் இன்னமும் தனது பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை, மனுதாரர் (குற்றஞ்சாட்டப்பட்டவர்) அக்குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்டிருப்பின், அவருக்கு எதிராக பகரப்பட்ட தீர்ப்புரை வேண்டுமானால் அவரது கெட்ட நடத்தையை மெய்ப்பிக்கும் நோக்கத்திற்கு தொடர்புடையதாகும். எது எப்படி இருப்பினும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் கெட்ட நடத்தையை மெய்ப்பிக்க நிலுவை வழக்கு சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய அரசு தரப்பு அருகதையற்றதாகும்" என்று தெளிவுபடுத்தினார்.

முடிவில் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 311-ன் கீழ் அரசு தரப்பு தாக்கல் செய்த மனுவை கீழமை நீதிமன்றம் அனுமதித்திருப்பது, இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 54-இன் உயிரோட்டத்திற்கு எதிரானதாகும் என்று கூறி, அதன் ஆணையை இரத்து செய்து, குற்றஞ்சாட்டப்பட்டவரின் சீராய்வு மனுவை அனுமதித்து நீதியரசர் ஆணையிட்டார்.

Kanagaraj @Duraisamy@Ganesh v. The State by Inspector of Police, Arachalur Police Station, Erode Dt.- Crl.R.C. No. 590 of 2008 - Madras High Court - M.Jayapaul, J. - ***Citation : 2008 (4) CTC 283***

வழக்கு எண். 25

பிறழ்சாட்சியின் சான்றியல் மதிப்பு

பிறழ்சாட்சியின் (Hostile Witness) சான்றியல் மதிப்பைப் பற்றி

சென்னை உயர் நீதிமன்றம் குற்றவியல் மேல்முறையீடு ஒன்றில் கூறுகையில், "பிறழ்சாட்சியின் சாட்சியத்தை நீதிமன்றம் முழுமையாக நிராகரித்துவிடக்கூடாது. குற்ற வழக்கிட்டுள்ள அரசு தரப்பினருக்கு சாதகமாக அல்லது எதிர்த்து வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக பிறழ்சாட்சி கொடுத்த சாட்சியத்தின் எப்பகுதியேனும் இருப்பின், அதை நீதிமன்றம் ஆதாரமாக சார்ந்திருக்கலாம்", என்றது.

மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 164-வது பிரிவின் கீழான சாட்சிகளின் வாக்கு மூலத்தை நீதிமன்றங்கள் மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் பகுத்தராய வேண்டும் என்றும், அத்தகு வாக்குமூலங்களை கண்ணால் பார்த்த சாட்சிகளின் கூற்றை வலுவூட்டுவதற்காகவோ, முரண்படுத்துவதற்காகவோ பயன்படுத்த முடியும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது. இவ்வழக்கின் முடிவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

*Vijayan @ Jayapandian and others v. State - D.Murugesan and K.N.Basha, JJ. - C.A. No. 626 of 2007 - Dt. 06-11-2007 - Madras High Court - **Citation : 2008 (1) CTC 295***

வழக்கு எண். 26

பிறழ் சாட்சியின் வாக்குமூலத்தைக் கூட அரசு தரப்பினர் ஆதரவாகக் கொள்ள முடியும்

பிறழ் சாட்சியின் சாட்சியத்தைக் கூட அரசு தரப்பினர் தங்கள் வழக்கிற்கு ஆதரவாக எடுத்துக் கொள்ள முடியும். எப்போது?

இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் 1, 2, 4 ஆகியோர் சம்பவத்தை கண்ணால் பார்த்த சாட்சிகள் ஆவர். அதிலும் குறிப்பாக அ.த.சா. 2-ஆனவர் குற்றஞ்சாட்டப்பட்டவரால் காயமடைந்த சாட்சி ஆவார். அவர்கள் அனைவரும் தங்கள் முதல்நிலை சாட்சியத்தில் தெளிவாக வாக்குமூலம் அளித்தனர். எனினும் அவர்கள் சாட்சியமளித்த அதே நாளின் மதிய நீதிமன்ற அமர்வின் போது நடந்த குறுக்கு விசாரணையில், குற்றஞ்சாட்டப்பட்டவரை தங்களுக்கு யார் என்றே தெரியாது என்று ஒரேயடியாக மறுத்து விட்டனர். அதாவது பிறழ் சாட்சிகளாகிவிட்டனர் (பிரிவு 154).

எனினும் கீழமை விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்ட வருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் பிறழ் சாட்சி களான அரசு தரப்பு சாட்சிகள் 1, 2, 4 ஆகியோர் அளித்த சாட்சியத் தின் செல்லுந் தன்மை பற்றி வினவப்பட்டு, அதன் மீது வாதிடப் பட்டது.

அப்போது சென்னை உயர் நீதிமன்றம் சட்ட விளக்கமளிக் கையில், பிறழ் சாட்சிகளின் சாட்சியத்தைக் கூட, **அது அரசு தரப்பின் வழக்கிற்கு எந்த அளவிற்கு பக்கபலமாக நிற்கிறதோ அந்த அளவுக்கு**, அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்படலாம் என்றும், அ.த.சா. 1, 2, 4 ஆகியோர் தங்கள் சாட்சியத்தில் தாங்கள் "கேரம்போர்டு" விளையாடிக்கொண்டிருந்த இடத்திற்கு அந்தி மாலைப்பொழுதில் குற்றஞ்சாட்டப்பட்டவர் வந்து, வாய்த் தகராறு செய்தார் என்றும், பின்னிட்டு அந்தி சாய்ந்த பிறகு சுமார் 7.30 மணி அளவில் குற்றஞ் சாட்டப்பட்டவர் வந்து மீண்டும் தகராறு செய்தார் என்றும், அந்த நிகழ்வில் குற்றஞ்சாட்டப்பட்டவர் அ.த.சா. 2-இன் நெஞ்சின் மீது கத்தியால் குத்திவிட்டார் என்றும் வாக்குமூலம் அளிக்கின்றனர். அவர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஒன்றையொன்று உறுதிப் படுத்துவதாக இருந்ததோடு மட்டுமல்லாமல், அந்த மாலைப் பொழுதில் நடந்த நிகழ்வுகளை படிப்படியாக விளக்கும் முகமாக, கோவையாகவும் இருந்தது. மேலும் அவர்களது வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் வகையில் அ.த.சா 6 மற்றும் 7 அளித்த சாட்சியங் கள் இருந்தன.

எனவே அவர்கள் பிறழ் சாட்சிகளாக குறுக்கு விசாரணை யில் மாறினாலும், அவர்களது சாட்சிய வாக்குமூலங்கள் அரசு தரப்பின் வழக்கிற்கு ஆதரவாகவே உள்ளன, மேலும் அ.த.சா. 6 மற்றும் 7-இன் சாட்சியத்தால் உறுதியூட்டப்பட்டுள்ளன. எனவே குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கீழமை விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய் தது. எனினும், பத்தாண்டுகள் சிறைத்தண்டனையை ஐந்தாண்டு களாக குறைத்தது.

[Prosecution Witness turned hostile during Cross Examination - Evidentiary value of it:- P.W.s 1, 2 and 4 are eye witnesses to the occurrence, of which P.W.2 is the injured eye witness.They deposed clearly in chief examination. However, curiously, on the very same day in the afternoon session during cross examination they diametrically

taken a 'U Turn' and had deposed that they do not know the accused. Trial Court convicted the accused -Validity of their evidence is called in question in this appeal.

It is settled law that the evidence of hostile witnesses can also be relied upon by the prosecution to the extent to which it supports the prosecution version. PW 1, 2 and 4 have categorically deposed that the accused had come to the place where they were playing carrom board and had picked up a quarrel in the early part of evening and again in the later part of the evening, at about 7.30 p.m they picked up quarrel and in the course of the said transaction, the accused had stabbed P.W.2 on his chest. The testimonies of P.W.s 1, 2 and 4, corroborate each other not only on all material aspects, but their testimony is cogent and go hand-in-hand with each other detailing the happenings during the course of the evening. Their testimony is also corroborated by the evidence of PW 6 and 7. Therefore conviction imposed by the trial court is affirmed but the sentence of imprisonment of for10 years with fine is reduced to five years.]

Radha @ Radhakrishnan v. State of Tamil Nadu - M.Dhandapani, J - Madras High Court - ***Citation : CDJ 2020 MHC 1932*** *decided on 06-03-2020*

வழக்கு எண். 27

நீதிமன்றத்திற்குப்புறத்தேயான குற்ற ஏற்புரையின் சான்றியல் மதிப்பு

காவல்துறையினரிடம் அளிக்கப்படும் குற்ற ஏற்புரையானது குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை மெய்ப்பிப்பதற்குரிய அடிப்படையாகாது. இந்த வழக்கில் கொலை செய்யப்பட்டவரின் சடலம் காவல்துறையினரால் மீட்கப்படவில்லை. ஆனால் சாட்சிகளால் மீட்கப்பட்டது. காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கிருந்த தனிப்பட்ட சாட்சிகளிடம் நீதிமன்றத்திற்குப்புறத்தேயான குற்ற ஏற்புரையை வழங்கியுள்ளார். இத்தகு சாட்சியம் ஓர் வலுக்குறைந்த சாட்சியம் என்றாலும், அது பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட்டால், அதனை

குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை மெய்ப்பிப்பதற்காக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

[**Criminal Trial — Confession — Extra-judicial confession — Evidentiary value of :** Confessional statements made to police by accused, cannot be the basis to prove guilt of accused. In this case recovery of dead body not made by police but by witnesses to whom extra-judicial confessions were made by accused. Extra-judicial confession is a weak piece of evidence but, at the same time, if the same is corroborated by other evidence on record, such confession can be taken into consideration to prove guilt of accused.

*Ishwari Lal Yadav v. State of Chhattisgarh, R.Subhash Reddy, J - Supreme Court of India - **Citation : (2019) 10 SCC 437** decided on 03-10-2019*

வழக்கு எண். 28

நீதிமன்றத்திற்குப் புறத்தேயான குற்ற ஏற்புரையின் சட்ட முக்கியத்துவம்

நீதிமன்றத்திற்கு புறத்தேயான ஒப்புதல் வாக்குமூலத்தை (குற்ற ஏற்புரையை) முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடாத காரணத்தால் குற்றஞ்சாட்டப் பட்டவர் விடுதலை

இந்த இரட்டைக் கொலை வழக்கின் சங்கதிகள்படி, கான்தை, சர்கூ எனும் இருவர் காணவில்லை. அத்துடன் சீதாராம் என்பவர் வளர்த்து வந்த ஓர் ஆடும் காணவில்லை. இவர்களை காவல் துறை தேடும் போது, ஆடு மட்டும் சிக்கியது. அது பாரிலால் வீட்டில் இருந்தது. இந்த ஆடு எப்படி இங்கு வந்தது என்று காவல் துறை விசாரணை செய்த போது, நிஷார் என்பவர் தன் வீட்டில் இரவில் தங்க இடம் வேண்டும் என்று கேட்டதாகவும், அவர் அந்த ஆட்டை கொண்டு வந்திருந்தார் என்றும் பாரிலால் கூறினார்.

இதனடிப்படையில் நிஷாரிடம் காவல்துறை கேள்விகள் கேட்ட போது, அவர், "தான் ஆடுடன் சென்று கொண்டிருக்கையில், கான்தை என்பவர் தன்னை திட்டியதாகவும், இதனால் அவரை

கொன்று விட்டதாகவும், இதையடுத்து சர்கூவையும் கொன்று விட்டதாகவும்'' கூறி தான் செய்த இரட்டைக் கொலைகளை ஒப்புக் கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தான் கொலை செய்த இருவரின் சடலங்கள் கிடந்திருந்த இடத்தையும் நிஷார் சுட்டிக்காட்டினார். காவல்துறை அவற்றை மீட்டது. அடுத்த நாள் ஒரு பையாலால் என்பவர் இக்கொலைகள் குறித்து கொடுத்த தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டது. இதையடுத்து நடந்த விசாரணையின் முடிவில் கீழமை நீதிமன்றம் நிஷாருக்கு தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுமையான சாட்சியங்களின் அடிப்படையில் அமையாமல், ஊகங்களின் பேரில் அமைந்தது என்றும், தான் கொடுத்ததாக அரசு தரப்பில் கூறப்படும் நீதிமன்றத்திற்கு புறத்தேயேயான ஒப்புதல் வாக்குமூலத்திற்கு (Extra judicial confession) ஆதாரம் ஏதுமில்லை என்றும் வாதிட்டார். கொலைச் சம்பவத்திற்கு கண்ணால் பார்த்த சாட்சி யாரும் இல்லாத காரணத்தால், உயர் நீதிமன்றம் நிஷார் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தையும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கோடாலியையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

முதலில் நீதிமன்றத்திற்குப் புறத்தே கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் (காவல்துறையிடம் கொடுக்கப்பட்டதால்) பற்றி முதல் தகவல் அறிக்கையில் எந்தக் குறிப்பும் இல்லை. எனவே இதை நம்ப முடியாது. **இரண்டாவதாக** கேடாலியில் காணப்படும் இரத்தம் எவ்வகையைச் சேர்ந்தது என்பதற்கான சோதனை செய்யப்பட வில்லை. எனவே நிஷாரின் மீதான குற்றம் மெய்ப்பிக்கப்படவில்லை என்று கூறி, கீழமை நீதிமன்றத்தின் தண்டனையை இரத்து செய்து நிஷாரை விடுதலை செய்தது, உயர் நீதிமன்றம்.

இதை எதிர்த்து அரசு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனை முடிவுகளை ஏற்ற உச்ச நீதிமன்றம், நிஷார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பது உண்மையானால், அதை முதலில் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், இறந்து போன வர்களின் உடல்களும், கேடாலியும் அருகருகே கிடந்திருந்ததால், அவற்றை சாதாரணமாக தேடியிருந்தாலே கிடைத்திருக்கும், நிஷார் சொல்லித்தான் அவற்றை கண்டெடுத்தோம் என்று காவல் துறை கூறுவது ஏற்புடையதல்ல என்றும், கேடாலியில் உள்ளது

மனித இரத்தம் என்பது அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அது எந்த வகையைச் சேர்ந்தது என்பது மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், இதனால் அது கொலையுண்டவர்களின் இரத்தம் தான் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றும், எனவே உயர் நீதிமன்றம் வழங்கிய விடுதலைத் தீர்ப்பு சரியே என்றும் உச்ச நீதிமன்றம் மேலும் கூறி, அரசு தரப்பின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

*State of Madhya Pradesh v. Nisar - Dr.Arijit Pasayat and D.K.Jain, JJ. - C.A. No. 584 of 2006 - Dt.04-06-2007 - Supreme Court of India - **Citation : AIR 2007 SC 2316***

வழக்கு எண். 29

நீதிமன்றத்திற்குப்புறத்தேயான குற்ற ஏற்புரை பதிவதற்கு 'விஏஓ'-க்குள்ள அதிகாரம்

இதில் நீதிமன்றத்திற்குப் புறத்தேயான குற்ற ஏற்புரையை பதிவு செய்ய கிராம நிருவாக அலுவலருக்கு (VAO) தடை ஏதுமில்லை என்றும், எனவே அவரிடம் குற்ற ஏற்புரையை வழங்கலாம் என்றும், அத்தகு குற்ற ஏற்புரையை ஓர் வலுக்குறைந்த சாட்சியமாக கூற முடியாது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

[There is no bar for VAO to record extra judicial confession. Therefore extra judicial confession can be given before VAO and it cannot be said that such confession is a weakpiece of evidence]

*Natarajan Vs State - Madras High Court - **Citation : 2020 (1) LW (Cri) 514** decided on 13-12-2019*

வழக்கு எண். 30

எப்போது ஓர் முதல் தகவல் அறிக்கை மரண வாக்குமூலம் ஆகும்?

ஒருவரை சிலர் தாக்கியதால் அவர் படுகாயமடைந்தார். அதே

நிலையில் அவரை காவல் நிலையத்திற்குக் கூட்டிச் சென்ற போது, அவர் சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் வாய்மொழியாக எடுத் துரைக்க, அது முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்து கொள் ளப்பட்டது. இதன் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்த குற்றத்திற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 323-இன்படி குற்ற வழக்கு பதியப்பட்டது.

இந்நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த மேற்படி படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். எனவே மேற்படி வழக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304-இன்படி மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கான வழக்காக மாற்றப்பட்டது.

சங்கதிகளின் இந்தப் பின்னணியில் உச்ச நீதிமன்றம் கூறிய முக்கிய சட்டக்கருத்து யாதெனில், காயமடைந்த நபர் சம்பவம் குறித்து அவரே வாய் மொழியாக கூறியவற்றின்படி, அது எழுத்து வடிவில் பதியப்பட்டது. அது அவருக்கு படித்துக்காட்டப்பட்டு, அதில் அவர் தனது கைரேகையை இட்டுள்ளார். எனவே இது இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-இன்படி ஓர் மரண வாக்கு மூலமாக ஏற்கத்தக்கதாகும். இவ்வாறு உச்ச நீதிமன்றம் கூறியது.

Dharam Pal & Ors. v. State of U.P. - C.K.Thakker and Tarun Chatterjee, JJ. - C.A. No. 884 of 2001 - Dt. 04-01-2008 - Supreme Court of India - ***Citation : AIR 2008 SC 920***

வழக்கு எண். 31

சொல்லிக்கொடுத்ததை ஒப்புவிப்பது போல் மரண வாக்குமூலம் உள்ளதால் அதை நம்ப முடியாது — ஆயுள் தண்டனை இரத்து

கொலைக் குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கீழமை விசாரணை நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதை உயர் நீதிமன்றமும் உறுதி செய்தது. எனவே குற்றஞ்சாட்டப் பட்டவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

இதனை ஆய்ந்த மாண்பமை நீதியரசர்கள் முனைவர் அரிஜித்

பசாயத் மற்றும் ஆர்.வி.இரவீந்திரன் ஆகியோர் அடங்கிய ஈராய மானது வழக்கின் சாட்சியங்களிலிருந்து ஓர் முக்கிய விடயத்தை கண்டறிந்தது. அதாவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படுவதற்கு முழுமையான அடிப்படையாக இருந்தது, கொலையுண்டவர் அளித்த மரண வாக்குமூலமாகும். ஆனால் இந்த வாக்குமூலம் தன்னிச்சையாக, வற்புறுத்தல் ஏதும் இல்லாமல் வழங்கப்படவில்லை என்பதையும், இது மற்றவர் சொல் லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவித்ததாக உள்ளது என்பதையும் ஈராயம் தெளிவுற கண்டு கொண்டது. எனவே மரண வாக்கு மூலத்தை கீழமை நீதிமன்றங்கள் ஆதாரமாகக் கொண்டது சரியல்ல என்றும், மரண வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்று விலக்கப்படுகின்ற போது, குற்றஞ்சாட்டப்பட்டவரை கொலைக்குற்றத்தில் சம்மந்தப்படுத்த அங்கு ஏதுமில்லை என்றும் கூறி கீழமை நீதிமன்றங்களின் தண்டனைத் தீர்ப்பை இரத்து செய்து ஆணையிட்டது.

Mohan Lal and Ors Vs. State of Haryana - Criminal Appeal No.236 of 2007 - Date of Decision: 21/2/2007. - Dr. Justice Arjit Pasayat and Mr. Justice R.V. Raveendran, JJ..-Citation : 2007 SCCL.COM 168

வழக்கு எண். 32

மருத்துவரின் முன்னிலையில் கொடுக்கப்பட்ட மரண வாக்குமூலம் பற்றிய முக்கியத்தீர்ப்பு

இவ்வழக்கில் குடும்பத்தகராறின் போது மனைவியின் மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து கொன்றதாக கணவன் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட மனைவி, தனது கணவனே தன்னை இவ்வாறு கொல்ல வந்ததாக மருத்துவரின் முன்னிலையில் மரண வாக்குமூலம் கொடுக்கிறாள். அதன் இறுதியில் தனது கைரேகையும் பதிக்கிறாள். இறந்தும் போகிறாள். அக்கைரேகையை அந்த மருத் துவர் சான்றொப்பம் (அட்டஸ்டேசன்) செய்கிறார். கீழமை அமர்வு நீதிமன்றம் இந்த மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் கணவனு க்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து கணவன் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்கிறான். அங்கு புலனாய்வு அலுவலரின் முன்பு வாக்குமூலம் கொடுக்குமளவிற்கு தெளிவான மன நிலையில் இறந்து போன அந்த மனைவி இருந்தாள் என்று மருத்துவர் சான்றிதழ் அளிக்கவில்லை என்றும், மேலும் அவளுக்கு அந்த மருத்துவர் சிகிச்சையளிக்க வில்லை என்றும், எனவே அந்த மரண வாக்குமூலத்தை நம்ப முடியாது என்றும் உயர் நீதிமன்றம் கூறியது. முடிவில் கணவனை விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

எனினும் இந்தத்தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு எந்த சூழலில் மரண வாக்குமூலம் கொடுக்கப்பட்டது என்பதை உச்ச நீதிமன்றம் முழுமையாக திறனாய்வு செய்தது.

புலனாய்வு அலுவலரின் முன் மரண வாக்குமூலம் பதிவு செய் யப்படும் போதும், அதன் முடிவில் அந்த மனைவி கைரேகை இடும் போதும் மருத்துவர் உடனிருந்தார். அத்துடன் அக்கைரேகை அவளு டையதுதான் என்று அவர் அதில் சான்றொப்பமும் செய்துள்ளார். பொதுவாக இவ்வாறு சான்றொப்பம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், மருத்துவர் அவ்வாறு சான்றொப்பம் செய் துள்ளதான் வாயிலாக தன் முன்னிலையில் புலனாய்வு அலுவலரி டம் இறந்து போன மனைவி வாக்குமூலம் கொடுத்தாள் என்றும், அது புலனாய்வு அலுவலரால் சரியாகவே பதியப்பட்டது என்றும் கூற விழைந்துள்ளார். எனவே மரண வாக்குமூலம் கணவனுக்கு எதிராகவே உள்ளது.

அத்துடன் சம்பவம் நடக்கும் போது கணவனும் மனைவியும் வீட்டில் இருந்தார்கள் என்பதற்கும், சம்பவத்திற்குப் பின்னிட்டு கணவன் தலைமறைவாகிவிட்டான் என்பதற்கு சாட்சியம் உள்ளது. எனவே கணவன் வீட்டிலிருக்கும் போது மனைவியின் இறப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை அக்கணவனே விளக்க வேண்டும். இங்கு அவ்வாறு எந்த விளக்கமும் கணவன் தரப்பில் முன் வைக்கப் படவில்லை. இவை யாவும் கணவனுக்கு எதிராக உள்ளது என்று உச்ச நீதிமன்றம், முடிவில் உயர் நீதிமன்றத்தின் விடுதலைத் தீர்ப்பை இரத்து செய்து, அமர்வு நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்தது.

State of Rajasthan v. Parthu - Supreme Court of India - ***Citation: (2007) 12 SCC 754***

வழக்கு எண். 33

மரண வாக்குமூலம் விரிவாகவோ, ஒரு குறிப்பிட்ட பாணியில் பதிவு செய்யப்பட்டதாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை

தனது மரணத்திற்கான காரணம் அல்லது தனக்கு மரணம் நேர்வதற்கான சூழ்நிலை குறித்து நபர் ஒருவரால் அளிக்கப்படும் வாக்குமூலம், இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 32-இன் கீழ் தொடர்புடையதாகும். இத்தகு வாக்குமூலமானது இறந்து போன வரால் செய்யப்பட்டது என்பது மெய்ப்பிக்கப்பட்ட பிறகு, அது விரிவாக இல்லையென்றோ அல்லது அது ஒரு குறிப்பிட்ட பாணியில் பதிவு செய்யப்படவில்லையென்றோ என்ற அடிப்படையில் அதனை நீதிமன்றம் நிராகரித்தல் ஆகாது.

[Evidence Act S.32(1) — Any statement made by a person as to cause of his death or to any circumstances of transaction which resulted in his death would be relevant. Once it is proved that such statement is made by deceased then it cannot be brused aside on the basis that it is not elaborate or that it was not recorded in a particular fashion]

Jagbir Singh v. State of (NCT of Delhi) - K.M. Joseph, J - Supreme Court of India - ***Citation : (2019) 8 SCC 779 = AIR 2019 SC 432***

வழக்கு எண். 34

உறவினர்கள் அருகில் இருக்கையில் அளிக்கப்பட்ட மரண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்கலாமா?

இவ்வழக்கில் கொலை செய்யப்பட்டு இறந்து போனவரின் அருகில் அவரது உறவினர்கள் இருந்தார்கள் என்பது மட்டுமே,

அவர்கள் **சொல்லிக்கொடுத்துதான்** இறந்து போனவர் வாக்குமூலம் அளித்துள்ளார் என்ற அடிப்படையில் அவரது வாக்குமூலத்தை நீதிமன்றம் நிராகரித்தல் கூடாது என்றும், அந்த மரண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டதொரு பகுதியை கூறுவதற்கு அருகிலிருந்த உறவினர்கள் இறந்து போனவருக்கு சொல்லிக் கொடுத்தனர் அல்லது வற்புறுத்தினர் என்பதைக்காட்டுவதற்கு ஏதாவது ஆதாரம் வேண்டும் என்றும், இறந்து போனவர் தனது மரண வாக்கு மூலத்தை அளிப்பதில் உறவினர்களின் குறுக்கீடு இருந்தது என்பதைக் காட்ட சாட்சியம் இருந்தாலன்றி, உறவினர்கள் அருகில் இருந்தனர் என்ற ஒன்று மட்டுமே அந்த மரண வாக்குமூலத்தை ஏற்க இயலாத ஒன்றாக ஆக்காது என்றும் மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் அமர்வாயம் சட்ட விளக்கமளித்தது.

[Evidence Act S. 32 — Dying declaration — Tutoring Mere presence of relatives of deceased near him by itself not sufficient to reject dying declaration. There should be something on record to show that relatives of deceased had in any manner tutored or influenced deceased to give particular statement. Unless there is evidence to suggest that there was interference on part of relatives, presence of relatives itself cannot vitiate dying declaration (Para 17)]

*M.L.Tahaliyani, J - Bombay High Court - **Citation : 2016 CriLJ (NOC) 75 (Bom.) (Nagpur Bench)***

வழக்கு எண். 35

கொலை வழக்கில் சந்தேகத்திற்கிடமற்ற மருத்துவ சாட்சியமும் விரிவான சடலக்கூராய்வு அறிக்கையும் இல்லை என்றால் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை

சந்தேகத்திற்கிடமற்ற மருத்துவ சாட்சியம் மற்றும் விரிவான சடலக்கூராய்வு அறிக்கை இல்லாமல், ஒருவர் 'மரணம் விளைவிக் கும் வன்முறையால்' இறந்து போனார் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வர இயலாது. இவ்வழக்கில் இறந்து போனவர் இரண்டு மாதங்களாக

காணப்படவில்லை. அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தான் இது தொடர்பான புகாரே கொடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவரும் கைது செய்யப்பட்டார். குறிப்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர் கூறி அதன் பேரில் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் மரணம் நிகழ்ந்துள்ளது. வழக்கை சரிவர மெய்ப்பிக்க அரசு தரப்பினர் தவறிவிட்டனர். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இரத்து செய்து அவரை விடுதலை செய்வதாக சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர்கள் சி.நாகப்பன் மற்றும் டி.சுதந்திரம் அடங்கிய ஈராயம் தீர்ப்புரைத்தது.

(In absence of positive medical evidence and detailed Post Mortem Report court cannot conclude that death was caused by homicidal violence)

Perumal alias Kuttiappan v. The State - C.A. No. 573 of 2008 - Madras High Court - C.Nagappan and T.Sudanthiram, JJ. - Decided on 24.3.2009 - ***Citation : 2009(2)CTC 738***

வழக்கு எண். 36

துணிபு, அதை மறுத்துரைத்தல் மற்றும் மெய்ப்பிக்கும் சுமை பற்றி உச்ச நீதிமன்றம்

காசோலை மோசடி புகாரின் பேரிலான வழக்கு விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் காசோலையை வரைந்து கொடுத்தார் என்பது மெய்ப்பிக்கப்பட்டாலோ அல்லது அவ்வாறு வரைந்து கொடுத்ததை அவர் ஒத்துக் கொண்டாலோ, அக்காசோலை மறு பயனுக்காகவும் (consideration), கடனைத்தீர்ப்பதற்காகவும் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றே துணிபு (presumption) கொள்ளப் படும். அதாவது அனுமானிக்கப்படும்.

இத்துணிபு இப்படியே வழக்கில் நீடித்திருக்கும். ஆனால் எதுவரை என்றால், இதற்கு முரணானதை குற்றஞ்சாட்டப்பட்டவர் மெய்ப்பிக்கும் வரை. அப்படி மெய்ப்பித்துவிட்டால், இது மறைந்து விடும். எனவே இத்துணிபே சாட்சியமாகிவிடாது. ஆனால் வழக்கின் எத்தரப்பினருக்கு நன்மை தரக்கூடிய வகையில் இது இருக்கிறதோ,

அவருக்கு ஒரு முதற்தோற்ற வழக்கை (prima facie case) இது ஏற்படுத்தித் தருகிறது.

எனினும் முன் சொன்னதைப் போல் இத்தகு துணிபுகளை மறுத்துரைக்கலாம் (rebut). அதாவது செய்யப்பட்ட அனுமானம் தவறானது என மறுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் வாதிடலாம். இங்கு இவ்வாறு இத்துணிபுகளை மறுத்துரைக்க, ஒரு குற்ற வழக்கு விசாரணையில் குற்றத்தை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் புகார்தாரர் மெய்ப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதைப் போல, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது எதிர்வாதத்தை மெய்ப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. எப்போது அத்தகு மறுத்துரைக்கும் சாட்சியம் அளிக்கப்பட்டு, அது வழக்கின் எல்லா சூழ்நிலைகளையும், சாத்தியக்கூறுகளின் விஞ்சிய நிலையையும் (preponderance of probabilities) கருத்தில் கொண்டு நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிடுகிறதோ, அப்போதே வழக்கை சாட்சியங்களை கொண்டு மெய்ப்பிக்க வேண்டிய சுமை மீண்டும் காசோலை மோசடிக்காக புகார் செய்த புகார்தாரருக்கே திரும்பி விடுகிறது.

இவ்வாறு குற்றவியல் மேல்முறையீடு ஒன்றில் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஆர்.வி. இரவீந்திரன், ஜெ.எம்.பஞ்சால் கூறினர்.

Kumar Exports v. Sharma Carpets - Criminal Appeal No. 2045 of 2008- D/- 16-12-2008 - R.V.Raveendran and J.M.Panchal, JJ. - Supreme Court of India - ***Citation : 2009 (1) CTC 552***

வழக்கு எண். 37

வல்லுநரின் சாட்சியம் என்பது அறிவுரை கூறும் தன்மையுடையது மட்டுமே

இந்த வழக்கில் வல்லுநரை ஒரு சாட்சியமாக விசாரிக்காமல், அவரது கருத்துரையின் (அபிப்பிராயத்தின்) மீது எந்த நம்பிக்கை யும் வைத்தலாகாது என்றும், அவரது சாட்சியம் என்பது அறிவுரை கூறும் தன்மையுடையது மட்டுமே என்றும், அவர் ஒரு நீதிபதியாக அல்லது நடுவராக செயற்பட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது:

[Evidence Act, 1872 — Section 45 — Confession — Without examining expert as a witness, no reliance can be placed on his opinion alone. His evidence is only advisory in character. Further, he cannot act as judge or jury]

*Ramesh Chandra Agrawal v. Regency Hospital Ltd. - H Dattu, J - Supreme Court of India - **Citation : (2009) 9 SCC 709** decided on 11-09-2009*

வழக்கு எண். 38

வல்லுநரின் கருத்துரைக்கு வலுசேர்க்க அந்த வல்லுநரை ஒரு சாட்சியாக விசாரணை செய்தல் வேண்டும்

வல்லுநரின் கருத்துரையை நீதிமன்றம் அப்படியே நிராகரித்து விட இயலாது:

வல்லுநர் அளிக்கும் கருத்துரை (அபிப்பிராயம்) என்பது அறுதியான ஒன்றல்ல என்றும், வல்லுநரை நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்து மெய்ப்பிக்காவிட்டால், அவர் அளித்த கருத்துரை ஓர் வலுக்குறைந்த சாட்சியமே என்றும், எனவே அதை நீதிமன்றம் ஏற்கவோ, நிராகரிக்கவோ செய்யலாம் என்றும், ஆனால் அதே நேரத்தில் வல்லுநரின் கருத்துரையை, அதுவும் நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டிலேறி சாட்சியமளித்த வல்லுநரின் கருத்துரையை நிராகரிப்பதாக இருந்தால், அவ்வாறு செய்வதற்கான கோவையான மற்றும் மன நிறைவளிக்கும் காரணங்களை நீதிமன்றம் அளிக்க வேண்டும் என்றும் கூறிய சென்னை உயர் நீதி மன்றம், இந்த வழக்கில் வல்லுநர் அளித்த கருத்துரையை நம்பலாமா, வேண்டாமா என்பதைக் கண்டறிய அவர் அளித்த வாய் மொழிச் சாட்சியத்தை பரிசீலனை செய்ய கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒரு முயற்சிகூட செய்யவில்லை என்றும், கீழமை நீதிமன்றம் வல்லுநரின் கருத்துரையை அப்படியே நிராகரித்துவிட்டது என்றும், இது சற்றும் ஏற்புடையதல்ல என்றும் நிலைநிறுத்தியது.

[Evidence Act, 1872, Section 45 - Expert opinion – scope of –

expert opinion not final – court can accept or reject expert opinion - while rejecting opinion of expert, especially one who deposed in Court, Court must give cogent and convincing reasons for such rejection.

The Lower Appellate Court has ignored the expert opinion by citing certain judgments, wherein it has been held that expert opinion is very weak evidence unless it is proved by examination of the expert. The lower appellate court had totally overlooked the fact that the expert has been examined as DW3. It has not considered the evidence of the expert and reached a conclusion that the report of the expert is not reliable. No doubt the expert's opinion is not final and it is for the court to accept or reject the expert opinion. While rejecting the opinion of the expert that too an expert, who has deposed in court, the court must give cogent and convicting reasons for such rejection. The lower appellate court has not even attempted to examine the evidence of DW3 in order to find out whether his report could be relied upon or not. The opinion of the expert was simply brushed aside. I find that the procedure adopted by the lower appellate court is totally unconvincing.]

B.Rajeswari & another v. B.Vinayagam & 2 others - Madras High Court = ***Citation : 2020(1) CTC 515*** *decided on 06.09.2019*

வழக்கு எண். 39

கையெழுத்து பற்றி வல்லுநர் கூறும் கருத்துரை அறுதியானதா?

கையெழுத்து வல்லுநரின் உதவியின்றி பிரச்சனைக்குரிய கையெழுத்தை ஒத்தேற்றுக் கொள்ளப்பட்ட கையெழுத்துடன் நீதிபதி தனது கண்களைப் பயன்படுத்தி ஒப்பிட்டுப் பார்க்க சட்டப் படியான தடை ஏதும் கிடையாது. ஆனால் இவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும் அதிகாரத்தை நீதிமன்றம் எச்சரிக்கையுடனும், குறைந்த அளவிலும் பயன்படுத்த வேண்டும். எனினும் இதற்கு வல்லுநரின் கருத்துரையை பெறுவதே அறிவார்ந்த வழியாகும்'' என்று வழக் கொன்றில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர் எம்.வேணுகோபால் கருத்துரைத்தார்.

எனினும் கையெழுத்து வல்லுநர் கொடுக்கும் கருத்துரை அறுதியானதா, அதை அப்படியே நீதிமன்றம் கருத்தில் கொள்ள லாமா என்பது பற்றி மாண்பமை நீதியரசர் தெளிவுபடுத்துகையில், "கையெழுத்து வல்லுநரின் கருத்துரை வழக்கிற்குத் தொடர்புடை யதே தவிர, அறுதியானதல்ல. கையெழுத்து வல்லுநரின் சாட்சியம் பிற சாட்சியங்களால் உறுதியூட்டப்பட வேண்டும். இதற்கு வல்லுநர் தரும் கருத்துரையின் உதவியுடன் தனது சொந்த முடிவிற்கு வர வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும்'' என்று அவர் கூறினார்.

(Opinion of handwring expert is relavant but not conclusive. Evidence of handwriting expert is to be corroborated by other evidence. It is duty of Court to come to its own conclusion with assistance of expert opinion)

Chandran Udayar v. Kasivel - ***Citation : 2008 (3) CTC 31***

வழக்கு எண். 40

விபத்து இழப்பீடு கோரும் வழக்கில் எந்த அளவிற்கு நிரூபணம் இருந்தால் போதும்?

இயக்கவூர்தி (சாலை) விபத்து வழக்கில் நிரூபணத்தின் தர நிலை எந்த அளவிற்கு அமைந்திருந்தால் போதும் என்பது குறித்து இந்த வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது. அதன்படி, இத்தகு வழக்கு களில், அவற்றின் சங்கதிகளை ஒரு குற்றவியல் வழக்கைப் போன்று எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உரிமையியல் வழக்கைப்போன்று நம்புவதற்கு அதிகம் வாய்ப்புடைய சிறந்த சாட்சியத்தைக் கொண்டு நிரூபித்தால் போதுமானது. அதாவது ஒரு கூற்றை இயன்ற வரை சிறப்பாக மெய்ப்பித்தால் போதுமானது என்பதே இதன் விளக்கம்.

விபத்து வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் சாட்சிய சட்டத்தின் கடுமையான விதிகளோ, அல்லது குற்றவியல் வழக்கில் தேவைப் படுகிற தரநிலையிலான நிரூபணமோ, விபத்து இழப்பீட்டுக் கோரிக்கை வழக்கிற்குப்பொருந்தாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், விபத்தை கண்ணால் பார்த்த சாட்சியை

விசாரிக்கவில்லை என்பதை குற்றவியல் வழக்கைப்போன்று ஏதோ பெரிய குறைபாடாகக்கொள்ளக்கூடாது என்றும், அதற்குப் பதிலாக இழப்பீடு கோரும் மனுதாரரின் கூற்றில் பொய்யைவிட பெரும் பாலும் உண்மை உள்ளதா என்பதைக் கண்டறியும் வண்ணம் தரப்பினர்களால் முன் வைக்கப்பட்ட விடயங்களை பகுத்தாராய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

[Evidence Act –Standard of Proof in Motor Accident Claim cases:- Equally, we are concerned over the failure of the High Court to be cognizant of the fact that strict principles of evidence and standards of proof like in a criminal trial are inapplicable in MACT claim cases. The standard of proof in such like matters is one of preponderance of probabilities, rather than beyond reasonable doubt. One needs to be mindful that the approach and role of Courts while examining evidence in accident claim cases ought not to be to find fault with non-examination of some best eye-witnesses, as may happen in a criminal trial; but, instead should be only to analyze the material placed on record by the parties to ascertain whether the claimant's version is more likely than not true.]

Anita Sharma & Others v. The New India Assurance Company Limited & Another - Surya Kant, J - Supreme Court of India - ***Citation : 2020 (4) TLNJ 581 (Civil)*** *- Date of Judgment: 08.12.2020*

வழக்கு எண். 41

குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்புரை எம்.சி.ஓ.பி. வழக்கில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது?

விபத்துக்கு காரணமான வாகன ஓட்டிக்கு அச்சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருந்தாலும், அவ்விபத்தால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கும் முதற் பொறுப்பு காப்பீட்டு நிறுவனத்திற்குத்தான் உண்டு என்றும், எனினும் அதைப் பின்னிட்டு அவ்வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து வசூலித்துக் கொள்ள அக்காப்பீட்டு நிறுவனத்திற்கு உரிமை உண்டென்றும் உரிமையியல் பல்வகைப்பட்ட மேல்முறையீடு (சி.எம்.ஏ.) ஒன்றில்

சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

மேலும் இவ்வழக்கின் விசாரணை கீழமை நீதிமன்றத் தில் நடந்த போது, செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டியதற்காகவும், கவனக்குறைவாக விபத்து ஏற்படுத்தியதற்காக வும் அவ்வாகன ஓட்டி மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டுள்ள தற்கு சான்றாவணம் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டியதையும், விபத்து ஏற்படுத்தியதை யும் அவர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஒத்தேற்றுக் (admission) கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் குற்றவியல் நீதிமன்றமும் தீர்ப்புரை வழங்கியுள்ளது. இது எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் எண். 1 -ஆக (B.1) குறியிடப்பட்டது. குற்றவியல் நீதிமன்றம் வழங்கி யுள்ள இத்தீர்ப்புரை, "எம்சிஓபி" வழக்கு (இயக்கூர்தி விபத்து இழப் பீட்டுக் கோரிக்கை வழக்குகள்) விசாரணையில் தொடர்புடையதா என்பது குறித்து கருத்துரைக்கையில் நீதியரசர் பி.ஆர்.சிவக்குமார் தனது ஆணையில் பின்வருமாறு விளக்கமளித்தார். அதாவது,-

பொதுவாக, குற்றவியல் நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் உரிமையியல் வழக்குகளின் அல்லது "எம்சிஓபி" வழக்குகளின் விசாரணையில் தொடர்புடையதாகாது மற்றும் அனுமதிக்கப்படத் தக்கதுமல்ல. ஓர் குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது மற்றும் அது தண்டனையில் அல்லது விடுதலையில் முடிவுற்றுள்ளது என்பதைக் காட்டுமளவிற்கு தவிர வேறு வகையில் அத்தீர்ப்புரைகள் தொடர் புடையதல்ல.

எனினும் அத்தீர்ப்புரை எப்போது தொடர்புடையதாகிறது அல்லது அனுமதிக்கப்படத்தக்கதாகிறது என்றால், அது குற்றஞ் சாட்டப்பட்டவர் தனது குற்றத்தை ஒத்துக் கொண்டதன் பேரில் வழங்கப்பட்டதாக இருந்து, ஆனால் அதே நேரத்தில் அது குற்றவியல் நீதிமன்றத்தின் ஓர் தீர்ப்புரையாக அல்லாமல் குற்றவியல் நீதிமன்றத் தின் முன் செய்யப்பட்ட ஓர் ஒத்தேற்புரையாக தொடர்புடையதா கிறது அல்லது அனுமதிக்கப்படத்தக்கதாகிறது.

ஒத்தேற்புரை என்பது அதில் ஒத்தேற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிக்கு அது அறுதியான சான்றுறுதி அல்ல. இருந்தாலும், அது ஓர் சிறந்த சாட்சியமாகும். எத்தரப்பினருக்கு எதிராக அத்தகு ஒத்தேற் புரை வாதுரைக்கப்படுகிறதோ, அவர் அதில் ஒத்தேற்றுக் கொள்ளப் பட்டுள்ள சங்கதி பொய்யானது என்று பொய்ப்பிப்பதற்கான சாட்சியம் அளிக்கும் உரிமை பெற்றவர்.

Oriental Insurance Co. Ltd., v. Mohammed Hussain and another - C.M.A. No. 1798 of 2002 - ***Citation : 2008 (4) CTC 127.***

வழக்கு எண். 42

சூழ்நிலைச்சாட்சியம் கோவையான இல்லை ! எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை !!

கொலை வழக்கு ஒன்று சூழ்நிலைச் சாட்சியம் ஒன்றையே பெரிதும் நம்பியிருந்தது. அந்தச் சூழ்நிலைகள் வருமாறு:- (1) கொலை செய்யப்பட்டு இறந்து போனவரையும் குற்றஞ்சாட்டப்பட்டவரையும் இறுதியாக நான் பார்த்தேன் என்று அரசு தரப்பு சாட்சி ஒருவர் கூறுகிறார். (2) கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட குற்றப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (3) இரத்தக்கறை படிந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றைக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது கொலை வழக்கு பதியப்பட்டது.

மேல்முறையீட்டு நிலையில் இவ்வழக்கு உச்ச நீதி மன்றத்தின் முன் எழுந்த போது, மேற்கண்ட மூன்று சூழ்நிலைகளையும் அது ஆழ்ந்து ஆராய்ந்தது. முதலில் முதல் சூழ்நிலையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. கொலையான வரையும் குற்றஞ்சாட்டப்பட்ட வரையும் ஒன்றாகப் பார்த்ததாக கூறும் அரசு தரப்பு சாட்சிக்கு கண் பார்வை சரியாகத் தெரியாது என்பதை உச்ச நீதிமன்றம் கண்டறிந்தது. அச்சாட்சி விசாரணையின் போது தனது சாட்சியத்தில் அவ்விருவரும் வசித்த அதே கிராமத்திலேயே தானும் வசிப்பதாகவும், தன்னால் தனது கிராமத்தில் உள்ளவர் பேசும் பேச்சு ஒலியைக் கொண்டே இன்னார்தான் என்பதை அறிய முடியும் என்றும், அந்த வகையில் குற்றஞ்சாட்டப்பட்டவரை தான் அடையாளம் கண்டு கொண்டதாகவும் கூறியுள்ளார்.

இதைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், கொலையானவரின் அருகில் குற்றஞ்சாட்டப்பட்டவர் இருந்ததாகக் கூறப்படும் சமயத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார் என்பதை மெய்ப்பிக்க பிற சாட்சிகள் எவரையும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், எனவே மேற்படி அரசு தரப்பு சாட்சியத்திற்கு ஆதாரம் இல்லை என்றும் கூறி முதல் சூழ் நிலையை நிராகரித்தது.

இரண்டாதாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவாகி விட்டார் என்று அரசு தரப்பு கூறுகின்ற அதே நேரத்தில், கொலை செய்யப் பயன்படுத்திய குற்றப் பொருட்களை அவரே எடுத்துக் கொண்டு வந்து அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்து, தன்னை அவற்றுடன் கைது செய்வதற்கு உள்ளாக்கிக் கொண்டார் என்பது நம்பும்படி இல்லை என்று இரண்டாவது சூழ்நிலையையும் நிராகரித்தது. அடுத்து, இரத்தக்கறை படிந்த பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்று கூறப்படும் மூன்றாவது சூழ்நிலையை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் அதில் மனித இரத்தக் கறை ஏதும் இல்லை என்பதை கண்டறிந்தது.

முன்னதாக இவற்றின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட வரை உயர் நீதிமன்றம் விடுதலை செய்து ஆணை பிறப்பித்திருந்தது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தது சரியே என்று உச்ச நீதிமன்றம் கூறி, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது.

State of Rajasthan v. Khuma - ***Citation : (2006) 11 SCC 64***

வழக்கு எண். 43

சூழ்நிலைச்சாட்சியம் சங்கிலித்தொடர் போல் கோவையாக அமைந்துள்ளதால் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளி

மனைவியைக் கொலை செய்ததாக கணவன் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்வழக்கின் சூழ்நிலைச் சாட்சியங்கள் சங்கிலித் தொடர் போல் அமைந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் செய்த கொலையை எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் மெய்ப்பிப்ப தால், கீழமை நீதிமன்றங்கள் இரண்டும் குற்றஞ்சாட்டப்பட்டவரே கொலைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தது.

அச்சூழ்நிலைகள் வருமாறு:- (1) குற்றஞ்சாட்டப்பட்ட கணவனை கொலையான மனைவியுடன் ஒன்றாகச் சேர்ந்து பார்த்ததற்கு சாட்சியங்கள் உள்ளன. அதாவது இதனை குற்றஞ் சாட்டப்பட்டவரே தனது புகார் மனுவில் ஒத்தேற்றுக் கொண்டுள்

ளார். மேலும் தனது சகோதரரிடமும் கூறியுள்ளார். (2) தன்னையும் தனது மனைவியையும் தாக்கிவிட்டு தங்கள் வீட்டில் இருந்த நகைகளை திருடர்கள் திருடிக் கொண்டு சென்று விட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கணவன் புகார் ஒன்றை கொடுத்துள்ளார். ஆனால் அந்நகைகளை பின்னிட்டு அவரே அடகு வைத்துள்ளது நிரூபணம் ஆகியுள்ளது. எனவே கணவன் கொடுத்த புகார், பொய் யானது. (3) திருடர்கள் தம்மைத் தாக்கினார்கள் என்று அந்தப் புகாரில் குற்றஞ்சாட்டப்பட்ட கணவன் கூறியுள்ளார். ஆனால் அவரது உடலில் தாக்குதலுக்கான எந்தக் காயமும் இல்லை. இச் சூழ்நிலைகள் யாவும் சங்கிலித் தொடர் போல் அமைந்து குற்றஞ் சாட்டப்பட்டவரின் குற்றத்தை மெய்ப்பிப்பதால், அவரை கீழமை நீதிமன்றம் குற்றவாளி என்று தீர்மானித்தது சரியே என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Golusula Ellaiah v. State of A.P. ***Citation : (2006) 11 SCC175***

வழக்கு எண். 44

ஒரு உயிலில் நிலவும் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளும் அதன் நிரூபணமும்

ஒரு உயிலில் நிலவும் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் எவை?

உயில் ஒன்றின் நிரூபணம் தொடர்பான இந்த முக்கியமான வழக்கில் அது எழுதி வைக்கப்படும் பொழுது எழுகின்ற சந்தேகத் திற்கிடமான சூழ்நிலைகள் பற்றி உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாக விளக்கியது.

இந்த வழக்கின் பொருண்மைகள்படி, மூன்று தாள்களை அதாவது 5 பக்கங்களைக் கொண்டதொரு உயில் எழுதி வைக்கப் பட்டது. அவ்வுயிலை எழுதி வைத்தலில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் பல நிலவுவதாலும், அதை வாதி தெளிவாக விளக் காத காரணத்தாலும், அதனை ஏற்கக்கூடாது என்று பிரதிவாதிகள் வாதிட்டனர். கீழமை விசாரணை நீதிமன்றமானது உயிலை எழுதி வைத்ததில் மற்றும் கையொப்பம் செய்ததில் சந்தேகத்திற்கிட மான சூழ்நிலைகள் ஏதும் நிலவவில்லை என்ற அடிப்படையில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து பிரதி

வாதிகள் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் முதல் மேல்முறையீடு செய்தனர். அங்கு கீழமை நீதிமன்றத்தில் குறியிடப்பட்ட உயிலும், அதன் நிரூபணம் மற்றும் விளக்கத்திற்காக அளிக்கப்பட்ட சாட்சியமும் தீர ஆராயப்பட்டது. முடிவில் உயிலில் பல்வேறு சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் நிலவுவதாகவும், அது வாதி தரப்பில் தெளிவாக விளக்கப்படவில்லை என்றும் கூறி விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்து, பிரதிவாதிகளின் மேல்முறையீட்டை கர்நாடக உயர் நீதிமன்றம் அனுமதித்தது. இதனால் குறையுற்ற வாதிகள் உச்ச நீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு (Civil Appeal) செய்தனர்.

வழக்கு சம்பந்தப்பட்ட உயில் சந்கேத்திற்குகிடமில்லாத வகையில் உண்மையானதா, கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்யும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதா என்பதை இந்த உரிமையியல் மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய முழு நிறைவாயம் தீர ஆராய்ந்தது.

முதலில் உயிலின் நிரூபணம் பற்றி உச்ச நீதிமன்றம் சட்ட விளக்கமளிக்கையில், உயில் எழுதி வைத்தவர் அதனை எழுதி வைக்கும் போது நல்ல மனநிலையில் இருந்தார் என்றோ, சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்தார் என்றோ மெய்ப்பிப்பது மட்டுமே, அது சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளில் எழுதி வைக்கப்படவில்லை என்றாகி விடாது என்றும், உயிலை தனது வழக்கிற்கு ஆதாரமாக சார்ந்திருக்கும் தரப்பினர் அது சாட்சிகளால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதை மெய்பிப்பதுடன், அந்த உயிலின் உண்மை நிலையை மறைத்துள்ள சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளை தெளிவுபடுத்தும் வண்ணம் கோவையாகவும் மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும் விளக்கமளிக்க வேண்டும் என்றும், ஒரு சூழ்நிலை சந்தேகத்திற்கிடமானதா, இல்லையா என்பது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைச்சார்ந்ததாகும் என்றும் தெளிவுபடுத்தியது.

அது மேலும் கூறுகையில், (1) நடுக்கமான அல்லது ஐயப்பாட்டிற்குரிய கையொப்பம், (2) உயில் எழுதி வைப்பவரின் பலவீனமான மற்றும் குழப்பமான மனநிலை, (3) உயிலில் சொத்தை நியாயமற்ற முறையில் வகை செய்து வைத்தல், (4) தனது சட்டமுறை வாரிசுதாரர்களுக்கு குறிப்பாக தன்னை சார்ந்திருப்போருக்கு உயிலில் எந்த வகைமுறையும் செய்யாமல் அவர்களை ஒதுக்கி வைத்தல், (5) உயில் மூலமாக யாருக்கு சொத்து சென்றடைய உள்ளதோ அவர்கள்

உயில் தயாரிப்பின் போது அதிக அக்கறையுடன் ஈடுபட்டிருத்தல் ஆகிய இவை யாவும் ஒரு உயில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலை களில் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பதற்கான எடுத்துக் காட்டுகள் ஆகும் என்றும், எனினும் இந்த எடுத்துக்காட்டுகளே முடிவானதல்ல என்றும், இன்னும் இது போன்ற எத்தனையோ சந்தேக சூழ்நிலைகள் உள்ளன என்றும் கருத்துரைத்தது.

இந்த வழக்கில் பின்வரும் நான்கு சூழ்நிலைகளை சந்தேகத் திற்கு இடமானது என்றும், அதனால் உயிலை மெய்யான ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் உயர் நீதிமன்றம் கூறியதை உச்ச நீதிமன்றம் பரிசீலனை செய்தது. அதாவது,

(1) உயில் தட்டச்சு செய்யப்பட்ட மூன்று தாள்களும் வெவ் வேறானவை. அதாவது அவை யாவும் ஒரே வண்ணத்தில் இல்லை. பொதுவாக தட்டச்சு செய்யும் போது தாள் முடிந்து போனால், தட்டச்சர் சாதாரணமாக ஒரே தாள் கட்டிலிருந்து தாளை உருவி எடுத்து தட்டுச்சு செய்யத் தொடங்குவார். எனவே இது சந்தேகத் திற்கிடமானதாக உள்ளது.

(2) உயிலின் ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்து முடிக்கும் இடத் திற்கு கீழே நெருக்கமாக கையொப்பமிடாமல், அதிகப்படியான இடம் விட்டு உயில் எழுதி வைத்தவர் கையொப்பமிட்டு உள்ளார். பொதுவாக தட்டச்சு செய்யப்பட்ட பிறகு கையொப்பம் செய்தால், இந்த நிலை சாதாரணமாக எழாது. எனவே இதுவும் ஐயப்பாட்டிற் குரியது.

(3) மூன்று தாள்களைக் கொண்டு 5 பக்கங்களில் தட்டச்சு செய்யப்பட்டஇந்த உயிலில், உயில் எழுதி வைத்தவர் வெவ்வேறு எழுதுகோலால் மூன்று கையொப்பங்களைச் செய்துள்ளார். அதாவது பக்கம் எண். *1* மற்றும் *5*-இல் மை எழுது கோல் (ink pen) கொண்டும், பக்கம் எண். *3*-இல் உருளை முனை எழுதுகோல் (ballpoint pen) கொண்டும் கையொப்பம் செய்துள்ளார். *1*-ஆம் பக்கத்தில் கையொப்பம் செய்த பிறகு மை தீர்ந்து விட்டதால், உருளை முனை எழுதுகோலால் உயில் எழுதி வைத்தவர் கையொப்பம் செய்தார் என்று வாதி தரப்பு சாட்சி கூறுவதை நம்ப இயலவில்லை என்றும், காரணம், அவ்வாறு கையொப்பமிட் டிருந்தால், *5*-ஆம் பக்கம் ஏன் திரும்பவும் மை எழுதுகோலால் உயில் எழுதிவைப்பவர் கையொப்பமிட வேண்டும் என்றும், எனவே இது சந்தேகத்தை அதிகமாக்குகிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அடுத்து முக்கியமாக,

(4) உயில் தட்டச்சு செய்யப்பட்ட அனைத்து 5 பக்கங்களிலும் உயில் எழுதி வைத்தவர் கையொப்பம் செய்யவில்லை. அதாவது 1,3,5-ஆம் பக்கங்களில் கையொப்பம் உள்ளது; 2 மற்றும் 4-ஆம் பக்கங்களில் கையொப்பம் இல்லை. சாதாரணமாக உயில் வழியாக சொத்து சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் உயிலாவணம் செய்பவர் அதன் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிடுவார்; ஆனால் இந்த வழக்கின்படி ஒன்றிரண்டு பக்கங்களில் கையொப்பம் செய்யாமல் இருப்பது என்பது மேற்சொன்ன சாதாரண போக்கிற்கு முரண்பட்டதாக உள்ளது. ஐயப்பாடான இச்சூழல்கள் யாவும் அந்த உயில் உண்மையானதல்ல என்பதையே காட்டுகிறது.

உச்ச நீதிமன்றம் நிறைவாகக் கூறுகையில், தட்டச்சு செய்யும் போது அல்லது உயிலில் கையொப்பம் செய்யும் போது மேற் சொன்னவாறான வழக்கத்திற்கு மாறான ஒன்றிரண்டு சூழல்கள் எழுவதை சில சமயங்களில் தவிர்க்க முடியாது போனாலும், அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கும் போது, சம்பந்தப்பட்ட உயிலாவணத்தை அவை குறைபாடு உடையதாக ஆக்குகிறது என்றும், எனவே அதனை உண்மையான ஆவணமாக ஏற்கவியலாது என்றும் தீர்ப்புரைத்து, உயர் நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்து, வாதிகளின் இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து ஆணையிட்டது.

[Evidence Act, 1872 (1 of 1872), Sections 68, 101 to 103 – Proof of Will – Mere proof that the testator was of sound mind at the time of execution of the will and that, he signed in the presence of attesters, will not remove suspicious circumstances. Party relying on the Will not only has to prove the attestation but also has to offer cogent and convincing explanation for the suspicious circumstances shrouded in the Will. Whether circumstance is suspicious or not, depends on facts and circumstances of each case. Shaky or doubtful signature, feeble and uncertain mind of testator, unfair disposition of property, unjust exclusion of Legal Heirs more particularly the dependents, active participation in the preparation of Will by beneficiary are few examples of suspicious circumstances. The said instances are illustrative only and not exhaustive.

Four unusual features of the document in question are evident on the face of the record. To recapitulate, the disturbing unusual features of the document in question are that: (i) it is typewritten on 3 different sheets of paper; (ii) the placement of signatures of the testator is not of uniformity

and excessive space is seen between the typewritten contents and the signatures on page number 1 and page number 5; (iii) different pens have been used for signatures on different pages with ink pen having been used for first and third signatures (on page number 1 and page number 5) and ballpoint pen having been used for the second signature (on page number 3); and (iv) all the typewritten pages do not carry the signatures of the testator, with there being no signature on page number 2 and page number

It does not require any great deal of elaboration that in the ordinary, normal and usual course, such a typewritten document is expected to be on the sheets of paper drawn from the same stack; there would be reasonable uniformity in placement of the signatures running through the document and every signature would be placed alongside or at a reasonable distance from the contents; a single pen or instrument would be used for signing at all places; and, ordinarily, a maker of the Will would not leave such ambiguity in expression of his intention as would arise by his signing 3 pages and not signing 2 other pages of the same document. In fact, in the normal and ordinary course of dealing, the maker of a Will is least expected to leave any page of the document unsigned. Although existence of some such unusual features (as noticed above) cannot be ruled out during the course of typing and signing of the document but when all such unusual features combine together, the document becomes too vulnerable and cannot be readily accepted as a genuine document.]

Shivakumar and others v. Sharanabasappa and others - Dinesh Maheshwari, J. - Supreme Court of India (FB - Three Judge) - ***Citation : 2020 (4) CTC 321*** *decided on 24-04-2020*

வழக்கு எண். 45

உயிலை மெய்ப்பிக்க அதன் சாட்சிகளில் ஒருவரை விசாரித்தால் போதும் - சென்னை உயர் நீதிமன்றம்

90 வயதுடைய முதியவர் ஒருவர் உயில் ஒன்றை எழுதி

அதனை பதிவு செய்கிறார். பின்னிட்டு அவர் இறந்துவிடுகிறார். அந்த உயிலில் தனது சொத்துக்கள் தனது பேரனான 5-ஆம் பிரதிவாதிக்கு சேர வேண்டியது என்று எழுதி வைத்துள்ளார். ஆனால் இந்த உயில் பொய்யாகத் தயாரிக்கப் பட்டது என்று வாதி வாதிடுகிறார். எனவே உயிலை மெய்ப்பிக்க உயிலில் கண்ட இரண்டு சாட்சிகளில் ஒருவரை பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் விசாரித்துக்கொள்கின்றனர். ஆனால் அவரது சாட்சியத்தில் சில சிறு முரண்பாடுகள் இருந்தன.

இதைக் காரணமாகக் காட்டியும், மேலும் உயிலில் கண்ட இரண்டு சாட்சிகளையும் பிரதிவாதிகள் விசாரித்துக் கொள்ள வில்லை என்பதால் உயில் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் கீழமை விசாரணை நீதிமன்றம் கூறி, வாதியின் பக்கம் தீர்ப்புரைத் தது. இதை எதிர்த்து 5-ஆம் பிரதிவாதி செய்த மேல்முறையீட்டில் உயிலில் கண்ட சாட்சிகளில் குறைந்தபட்சம் எவரேனும் ஒருவரை விசாரித்தால் அதுவே போதும் என்றும், சாட்சியின் சாட்சியத்தில் உள்ள சில சிறு முரண்பாடுகள் உயிலை நிராகரிப்பதற்கு காரண மாக முடியாது என்றும், அய்யப்பாட்டிற்கு இடமான சூழலில் உயில் எழுதப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கு சாட்சியம் ஏதும் இல்லை என்றும், கீழமை நீதிமன்றம் உயிலை நிராகரித்தது சரியல்ல என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்து, அவரது மேல்முறையீட்டை அனுமதித்தது.

Palaniswami v. Ramayammal and others - A.C.Arumugaperumal Adityan, J. - Madras High Court - ***Citation : 2007 (2) CTC 543***

வழக்கு எண். 46

ஒலிப்பதிவு சாதனத்தில் பதிவு செய்யப்பட்ட குரலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

கணவனும் மனைவியும் திருமணத்திற்குப் பின்னிட்டு அய்க்கிய அமெரிக்க நாடுகளில் வசித்து வந்தனர். இடையில் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டனர். இதைத் தொடர்ந்து கணவன் தனது மனைவியிடமிருந்து மணமுறிவு கோரி குடும்ப நீதிமன்றத்தில் வழக்கிட்டுள்ளார். அதன் விசாரணையின் போது, சற்றே நூதனமான ஒரு சான்றாவணத்தை கணவன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

அதாவது அவர் தனது மனைவி அமெரிக்க நாடுகளிலிருந்து இந்தியாவில் உள்ள தனது பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும் பேசிய தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய கணினி வன் வட்டு (hard disc) ஒன்றை தன்தரப்பு சான்றாவணமாக முன்னிலைப்படுத்து கிறார். அது கணவன் தரப்பு சான்றாவணம் எண். 18 (ம.சா.ஆ. 18) ஆக குறியிடப்படுகிறது. இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில் அந்த உரையாடல்களை மனைவிக்குத் தெரியாமல் கணவன் இரகசியமாக பதிவு செய்தவையாகும். இது பற்றி கணவனது தரப்பில் மனையிடம் குறுக்கு விசாரணை செய்கின்ற போது, அந்த வட்டில் உள்ள குரல் தன்னுடையதுதான் என்று மனைவி ஒத்தேற்கிறாள். ஆனால் அதே நேரத்தில் உரையாடல்களின் சில பகுதிகள் தன்னுடைய குரல் அல்ல என்று அவள் மறுத்துரைக்கிறார்.

எனவே அவ்வுரையாடல்களில் உள்ள குரல் தன்னுடைய மனைவியுடையதுதான் என்பதை மெய்ப்பிக்க அவ்வன் வட்டை வல்லுநர் ஆய்வுக்கும் கருத்துரைக்கும் அனுப்ப வேண்டும் என்று அக்கணவன் இந்திய சாட்சியச் சட்டத்தின் 45-ஆம் பிரிவின்படி மனு தாக்கல் செய்கிறார். இம்மனுவை குடும்ப நீதிமன்றம் ஏற்று பின் வருமாறு ஆணை பிறப்பிக்கிறது. அதாவது, "கணவன்-மனைவி ஆகிய இரு தரப்பினர்களின் முன்னிலையில் மனைவியின் ஒத்தேற் கப்பட்ட குரலை முதலில் வல்லுநர் தனது ஒலிப்பதிவு சாதனத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும், பின்னிட்டு மனைவியின் அந்த ஒத்தேற்கப்பட்ட குரலை வன் வட்டில் உள்ளதும் மனைவி மறுத் துரைப்பதுமான உரையாடல்களின் பகுதியோடு ஒப்பிட்டு பார்த்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும்'' குடும்ப நீதிமன்றம் ஆணை யிட்டது. இதனால் குறையுற்ற மனைவி, இதை எதிர்த்து ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்கிறார்.

சற்று சிக்கலான இவ்வழக்கில் தீர்ப்புரைக்க ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் பல்வேறு முன் தீர்ப்பு நெறிகளை ஆராய்ந்தது. அவற்றின்படி, மனைவி மற்றவர்களுடன் தொலைபேசி வாயிலாக செய்த உரையாடல்களை அவளுக்குத் தெரியாமல் கணவன் இரகசியமாக பதிவு செய்த செயல் சட்ட விரோதமானது என்றும், அது அவளது அந்தரங்க உரிமையில் (right to privacy) தலையிட் டதாகும் என்றும், மேலும் இந்திய அரசமைப்புச் சட்டம் உறுபு 21-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட சுதந்திர உரிமையை பறிப்ப தாகும் என்றும் உயர் நீதிமன்றம் கணவனுக்கு எதிராக கூறியது.

மேலும் "கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிறிதள

வாவது நம்பிக்கை இருக்க வேண்டும்'' என்று கூறிய ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம், "மனைவி மற்றவர்களுடன் தொலை பேசியில் பேசிய உரையாடல்களை கணவன் பதிவு செய்திருப்பது என்பது அவளது அந்தரங்க உரிமையை மீறுவதாகும் என்றும், அடிப்படையான இந்த உரிமையே மீறப்பட்டுவிட்ட பிறகு, சட்ட முரணான, அரசமைப்பிற்கு விரோதமான, ஒழுங்கீனமான வழிகளை கையாண்டு கணவனால் சேகரிக்கப்பட்ட அத்தகு சாட்சியத்தை அவரே ஆதாரமாகக் கொள்ள முடியுமா?'' என்றொரு வினா எழுப்பி, "இது நிச்சயம் அனுமதிக்கப்படக் கூடாது'' என்றொரு பதிலையும் தனது தீர்ப்புரையில் தந்தது.

முடிவில், "வன் வட்டில் உள்ள குரல் ஒலிப்பதிவுகள் உண்மை யாகவே இருந்தாலும் கூட, அதை ஒரு சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்றும், எனவே மனுதாரர் தரப்பு சான்றாவணம் எண். 18 சாட்சியமாக அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்றும், இதனால் குரல் சோதனைக்கு உட்பட வேண்டும் என்று மனைவியை கட்டாயப் படுத்துவதற்கோ, அவள் ஒத்தேற்றுக் கொண்ட குரலுடன் அவளால் மறுத்துரைக்கப்பட்ட குரல் பதிவை ஒப்பிட்டுப்பார்க்கச் சொல்லி வல்லுநரைக் கேட்டுக் கொள்வதற்கோ இங்கு இடமில்லை'' என்றும் கூறியது.

மேற்சென்ற காரணங்களின் அடிப்படையில் மனைவியின் சீராய்வு மனுவை அனுமதித்து ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் தீர்ப் புரைத்தது. குடும்ப நீதிமன்றத்தின் ஆணை இரத்து செய்யப்பட்டது.

Smt. Rayala M.Bhuvaneswari v. Nagaphanender Rayala - Bilal Nazki, Actg. C.J. - C.R.P. No. 6456 of 2006 - Dt. 20-12-2007 - Andhra Pradesh High Court - ***Citation : AIR 2008 A.P. 98***

மேற்கண்ட வழக்கின் தீர்ப்பில் வன்வட்டில் பதிவாகியுள்ள உரையாடல்களை, அவை கணவன்-மனைவி சார்ந்தவையாக இருந்த காரணத்தாலும், அந்தரங்க விடயமாக ஆனதாலும், ஓர் சாட்சிய மாக ஏற்க ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. ஆனால் இதே இரு வேறு தனி நபர்களுக்கிடையில் நடைபெற்ற உரையாடல்கள் வன்வட்டில் பதிவான வழக்காக இருப்பின், அங்கு அதனை எவ்வாறு மெய்ப்பிப்பது என்ற வினா எழுகிறது. கணினி வன் வட்டு (hard disc) என்பது ஓர் மின்னியக்க ஆவணமாகும். இதில் பதிவாகியுள்ள உரையாடல்களை மெய்ப்பிக்க வேண்டுமெனில் அதற்குரிய சாட்சியப்பிரிவு என்ன? வழக்குகள் என்ன சொல்கின்றன? இவற்றின் பதில்களை அடுத்து வரும் கட்டுரை தெளிவாக்குகிறது.

வன்வட்டு (Hard Disc),
விரலி அல்லது விரலியக்கி (Pen Drive),
நினைவக அட்டை (Memory Card),
மறைகாணிக்காட்சிகளை சேமிக்கும்
எண்ணிம காணொலி பதிவாக்கி
[Digital Video Recorder (DVR) storing CCTV footages],
தகவல்தரவு வழங்கன் கணினி (Server Computer),
அகிலத்தொடர்பு தகவல்தரவு பாட்டை இயக்கி
(Universal Serial Bus Drive - USB Drive),
குறுவட்டு இயக்கி (CD Drive),
செல்பேசி (அழைப்பு விவர பதிவுருக்கள்)
(Cell Phone CDRs - Call Details Records),
கட்புலனம் (Whatsapp)
ஆகியவற்றில் சேமிக்கப்பட்ட அல்லது பதிவான

மின்னியக்க பதிவுருக்களை இந்திய சாட்சிய சட்டப்படி எவ்வாறு மெய்ப்பிப்பது?

மின்னியக்க பதிவுருக்கள் தொடர்பான சாட்சியத்தை மெய்ப்பித்தல் பற்றி பிரிவு 65-அ மற்றும் 65-ஆ கூறுவது என்ன?

எப்போது பிரிவு 65-ஆ(4) படியான சான்றிதழ் கட்டாயமாகிறது? அண்மைக்கால வழக்குத் தீர்ப்பு நெறிகள் என்ன சொல்கின்றன?

மின்னியக்க பதிவுருக்களின் நிரூபணம் பற்றிய புதிரான சட்ட நிலைப்பாட்டை தெளிவாக்கும் முக்கிய கட்டுரை:

இந்திய சாட்சிய சட்டத்தில் 65-அ மற்றும் 65-ஆ என்ற இரண்டு பிரிவுகள் 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் சேர்க்கப்பட்டன. மின்னியக்க பதிவுரு (சாட்சியத்தின்) உள்ளடக்கங்களை பிரிவு 65-ஆ கூறும் வகைமுறைகளுக்கு இணங்க

மெய்ப் பிக்கலாம் என்று பிரிவு 65-அ (**Section 65-A[1] :** The contents of electronic records may be proved in accordance with the provisions of section 65-B) கூறுகிறது. மின்னியக்க பதிவுருக்களை சாட்சியமாக ஏற்றுக் கொள்ளும் நடைமுறை (**Section 65-B[2] :** Admissibility of elect/ ronic evidence) பற்றி பிரிவு 65-ஆ விரிவாகக் கூறுகிறது. கடினமான மொழிநடையைக் கொண்ட இவ்விரண்டு பிரிவுகளின் தமிழாக்க மானது ஓர் பார்வைக்காக பின்வருமாறு அடிக்குறிப்பில் தரப் பட்டுள்ளது.

மின்னியக்க பதிவுருக்களை மெய்ப்பிக்க, அவை சேமித்து வைக்கப்பட்டுள்ள சேமிப்பக சாதனங்களின் இயக்கம் மற்றும் மேலாண்மைக்கு யார் அதிகாரபூர்வமாக பொறுப்புடையவர் களாக உள்ளாரோ அவரிடமிருந்து சான்றிதழ் ஒன்று பெறப்பட வேண்டும் என்றும், அச்சான்றிதழில் குறிப்பிடப்படும் விடயம் எதற்கும் அது சாட்சியம் ஆகும் என்றும் பிரிவு 65-ஆ(4) கூறுகிறது.

இதன் பொருள் யாதெனில், வழக்கு நடவடிக்கை ஒன்றில் சம்பந்தப்பட்ட மின்னியக்க பதிவுரு (தகவல்தரவுகளை) சேமித்து வைக்க பயனாகும் சாதனங்களான (device) வன்வட்டு (Hard Disc), விரலி அல்லது விரலியக்கி (Pen Drive), நினைவக அட்டை (Memory Card), மறைகாணிக்காட்சிகளை சேமிக்கும் எண்ணிம காணொலி பதிவாக்கி (Digital Video Recorder (DVR) storing CCTV footages),

---

1. **பிரிவு 65அ. - மின்னியக்க பதிவுரு தொடர்பான சாட்சியம் குறித்த சிறப்பு வகைமுறைகள்,-** பிரிவு 65ஆ-இன் வகைமுறைகளுக்கு இணங்க மின்னியக்க பதிவுருக்களின் உள்ளடக்கங்கள் மெய்ப்பிக்கப்படலாம்.

2. **பிரிவு 65ஆ. - மின்னியக்க பதிவுருக்களின் ஏற்புடைமை,-** (1) இந்தச் சட்டத்தில் யாது கூறப்பட்டிருப்பினும் அதைப்பொருட்படுத்தாது, கணினி ஒன்றால் தயாரிக்கப்பட்டு தாள் ஒன்றின் மீது அச்சடிக்கப்பட்டதும், ஒளிசார் அல்லது காந்தப்பூச்சு ஊடகத்தில் சேமிக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட, நகலெடுக்கப்பட்டதுமான மின்னியக்க பதிவுரு ஒன்றில் அடங்கியிருக்கின்ற தகவல் (இதற்குப் பிறகு இது கணினி வெளிப்பாடு என்று சுட்டப்படும்) எதுவும், பிரச்சனையில் உள்ள அந்தத் தகவல் மற்றும் கணினி தொடர்பாக இந்தப்பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால், ஓர் ஆவணமாகவே கருதப்படுதல் வேண்டும் மற்றும் அதன் அசலின் உள்ளடக்கங்கள் எதற்கும் அல்லது நேரடிச் சாட்சியம் ஏற்கத்தக்கதாக உள்ளதும் அதில் குறிப்பிடப்பட்டதுமான பொருண்மை எதற்கும், சாட்சியமாக அந்த அசலின் மேலதிக நிரூபணம் அல்லது முன்னிலைப்படுத்தல் இன்றி வழக்கு நடவடிக்கைகள் எதிலும் ஏற்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் கணினி வெளிப்பாடு குறித்து உட்பிரிவு (1)-இல் சுட்டப்பட்ட நிபந்தனைகள் வருமாறு, அதாவது:-

(அ) அந்தத்தகவலை உள்ளடக்கியிருக்கும் கணினி வெளிப்பாடானது, அக்கணினி

தகவல்தரவு வழங்கன் கணினி (Server Computer) ஆகியவற்றை அப்படியே நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக (Material Object) ஒப்படைத்தால், அது முதல்நிலை சாட்சியமாக (Primary evidence) ஆகும். எனவே இங்கு பிரிவு 65-ஆ(4)-இன்படியான சான்றிதழ் அவசியமில்லை. ஆனால் அதே நேரம் அவ்வாறு ஒப்படைப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக இருக்கும் போது, அதிலுள்ள மின்னியக்க சாட்சியம் குறித்து அச்சாதனங்களை யார் தன் வசம் அதிகாரபூர்வமாகக் கொண்டு இயக்கி, மேலாண்மை செய்து வருகிறாரோ அவரிடமிருந்து அது குறித்து விவரிக்கும் சான்றிதழ் ஒன்றைப்பெற்று அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இது அந்த மின்னியக்க பதிவுரு குறித்த இரண்டாம்நிலை சாட்சிய மாக (Secondary evidence) ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வாய்ப்பு பெறும்.

Anvar P.V. v. P.K.Basheer & Ors. [Citation : (2014) 10 SCC 473 (SC)] என்ற இந்த முக்கிய வழக்கில், பிரிவு 65(ஆ)-இன்படியான சான்றிதழ் இல்லாமல், குறுவட்டு (CD) ஒன்றில் பதிவு செய்யப்பட்ட மின்னியக்க சாட்சியத்தை ஏற்புடைய சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்று உச்ச நீதிமன்றத்தின் **மாண்பமை நீதியரசர்கள் ஆர்.எம்.லோதா, குரியன் ஜோசப், ரோஹின்டன் ஃபாலி நாரிமன் ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய நிறைவாயம்** (Larger Bench) கூறியது.

பயன்பாட்டின் மீது சட்டப்படியான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் நபரால் சம்பந்தப்பட்ட அந்தக் கால அளவில் வழக்கமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் எதனுடைய நோக்கங்களுக்காகவும் தகவலைச் சேமிக்க அல்லது செயல்முறைப்படுத்த அந்தக்கணினி வழக்கமாகப் பயன்படுத்தப்பட்ட காலஅளவின் போது அக்கணினியால் தயாரிக்கப்பட்டது;

(ஆ) மேற்சொல்லப்பட்ட அந்த காலஅளவின் போது, மின்னியக்க பதிவுருவில் அடங்கியுள்ள வகையான தகவல் அல்லது அவ்வாறு அடங்கியிருக்கிற தகவலில் இருந்து பெறப்பட்ட வகையான தகவலானது சொல்லப்பட்ட அந்தச் செயற்பாடுகளின் இயல்பான போக்கில் கணினிக்குள் வழக்கமாக ஊட்டப்பட்டது ;

(இ) மேற்சொல்லப்பட்ட அந்த காலஅளவின் முக்கிய பகுதி முழுவதும், கணினியானது முறையாக இயக்கப்பட்டுக் கொண்டி ருந்தது அல்லது, அவ்வாறு இல்லையெனில், அது முறையாக இயக்கப்பட்டுக்கொண்டிராத காலஅளவு எதிலும் அல்லது அந்தக் கால அளவின் அந்தப்பகுதியின் போது அது இயங்காநிலையில் இருந்தும், அது அந்த மின்னியக்க பதிவுருவைவோ அல்லது அதன் உள்ளடக்கங் களின் சரிநுட்பத்தையோ பாதிக்காத வண்ணம் இருந்தது;

(ஈ) மின்னியக்க பதிவுருவில் அடங்கியுள்ள தகவலை மீண்டும் தயாரிக்கின்ற அல்லது அத்தகு தகவலிலிருந்து பெறப்பட்ட தகவலானது மேற்சொல்லப்பட்ட அந்தச் செயற்பாடுகளின் இயல்பான போக்கில் கணினிக்குள் ஊட்டப்பட்டது;

தேர்தல் தகராறு குறித்த இவ்வழக்கில் ஆட்சேபணைக்குரிய பேச்சுகள், பாடல்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியன சில சாதனங் களின் வாயிலாக குறுவட்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்த வட்டுகளை ஒரு கணினியில் இட்டு, அதிலிருந்த அப்பேச்சுகளும் பாடல்களும் வேறு குறுவட்டுகளில் பதிவு செய்யப்பட்டு அவை நீதிமன்றத்தில் மின்னியக்க சாட்சியமாக தாக்கல் செய்யப்பட்டன. அதாவது மூல குறுவட்டுகள் முதல்நிலை சாட்சியமாக தாக்கல் செய்யப்படாமல், அதிலிருந்த தகவல்தரவுகள் வேறு பல குறு வட்டுகளில் பதிவு செய்யப்பட்டு, **அவை இரண்டாம் நிலை சாட்சியமாக தாக்கல் செய்யப்பட்டதால், அவற்றின் நிரூபணத்திற்கு பிரிவு 65-ஆ(4)-இன் கீழ் சான்றிதழ் பெற வேண்டியது கட்டாயம் என்று கூறி, மேற்படி வழக்கில் அத்தகு சான்றிதழ் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட குறுவட்டுகளை மின்னியக்க சாட்சியமாக நீதிமன்றம் ஏற்கவில்லை.** (The speeches, songs and announcements were recorded using other instruments and by feeding them into a computer, CDs were made therefrom which were produced in court, without due certification. Those CDs cannot be admitted in evidence since the mandatory requirements of Section 65B of the Evidence Act are not satisfied.)

மேலும் மின்னியக்க சாட்சியத்தை மெய்ப்பிப்பது தொடர் பாக இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 65ஆ-இல் கூறப்பட்டிருக்

---

(3) உட்பிரிவு (2)-இன் கூறு (அ)-இல் குறிப்பிடப்பட்டவாறான காலஅளவின் போது வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்ற செயல்பாடுகள் எதனின் நோக்கங்களுக்காக தகவல் சேமிக்கும் மற்றும் செயல்முறைப்படுத்தும் பணியானது அந்த காலஅளவு எதிலும் கணினிகளால் வழக்கமாக செய்யப்பட்டிருக்குமிடத்து, அது ஒன்று

(அ) அந்தக் காலஅளவின்போது இயக்கத்திலிருக்கும் கணினிகளின் ஓர் பிணைப்பாலோ, அல்லது

(ஆ) அந்தக் காலஅளவின்போது அடுத்தடுத்து இயக்கத்தி லிருக்கும் வெவ்வேறு கணினிகளாலோ, அல்லது

(இ) அந்தக் காலஅளவின்போது அடுத்தடுத்து இயக்கத்தி லிருக்கும் கணினிகளின் வெவ்வேறு பிணைப்புகளாலோ, அல்லது

(ஈ) அந்தக்காலஅளவின் போது அடுத்தடுத்த இயக்கத்தை உள்ளடக்கியிருக்கும் வேறு முறை எதிலும், ஒழுங்கமைவு ஏதாக இருந்தாலும் அதில், ஒன்று அல்லது மேற்பட்ட கணினிகள் மற்றும் ஒன்று அல்லது மேற்பட்ட கணினிகளின் பிணைப்புகளை உடையதாகவோ

அந்தக்காலஅளவின் போது அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கணினிகள் அனைத்தும் இந்தப்பிரிவின் நோக்கங்களுக்காக, தனியொரு கணினியை உருவாக்குவதாக பாவிக்கப்படுதல் வேண் டும், மற்றும் இந்தப்பிரிவில் கணினி ஒன்றைக்குறித்த சுட்டுகைகளும் அவ்வாறு பொருள் கொள்ளப்பட வேண்டும்.

கும் சான்றிதழ் பெறும் நடைமுறை கட்டாயமானதாகும் என்றும், மின்னியக்க சாட்சியம் ஒன்று இரண்டாம்நிலை சாட்சிய வடிவில் இருக்கும் போது, அதற்கு இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவுகள் 63, 65 ஆகியன பொருந்தாது என்றும், மின்னியக்க சாட்சியத்தைப் பொறுத்தவரை பிரிவு 65அ மற்றும் 65ஆ மட்டுமே தொடர்புடைய தாகும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது (In this case, the honourable Supreme Court made it clear that the requirements given under Section 65B are mandatory. The court also clarified that Section 63 and 65 of the Indian Evidence Act, 1872 do not apply to secondary evidence in the form of electronic evidence. As far as electronic evidence is concerned, only Section 65A and 65B are relevant). அதாவது பிரிவு 65அ மற்றும் 65ஆ-இன் கீழான மின்னியக்க பதிவுரு சாட்சியத்தின் இரண்டாம்நிலை சாட்சியத்தை பிரிவு 63 மற்றும் 65-இன் கீழான இரண்டாம் நிலை சாட்சியத்துடன் ஒன்றாக வைத்து பரிசீலித்தல் ஆகாது என்பதே இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் நிலை நிறுத்திய நெறியாகும்.

Ramajayam @ Appu v. The Inspector of Police [Citation : 2016 (2) CTC 135 (Madras High Court)] என்ற வழக்கு கொலைக் குற்றம் சம்பந்தப்பட்டது. இதில் மின்னியக்க சாட்சியத்தைப் பெற்ற பிறகு விசாரணை நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய நடைமுறை என்ன

---

(4) வழக்கு நடவடிக்கைகள் எதிலும் இந்தப் பிரிவின் வாயிலாக வாக்குமூலம் ஒன்றை சாட்சியத்தில் வழங்க விரும்புகிறவிடத்து, பின்வரும் செயல்கள் எதையும் செய்யும், அதாவது,–

(அ) வாக்குமூலம் அடங்கியிருக்கும் மின்னியக்க பதிவுருவை அடையாளங்காட்டும் மற்றும் அது தயாரிக்கப்பட்ட முறையை விவரித்துரைக்கும்;

(ஆ) அந்த மின்னியக்க பதிவுரு ஓர் கணினியால் தயாரிக்கப் பட்டது என்பதைக்காட்டும் நோக்கத்திற்கு பொருத்தமானதாக இருக்கக் கூடியதும் அந்த மின்னியக்க பதிவுருவின் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டதுமான சாதனம் எதனின் அத்தகு விவரங்களை கொடுக்கும்;

(இ) உட்பிரிவு (2)–இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு தொடர்புடைய விடயங்கள் எதையும் கையாளும்,

மற்றும் சம்பந்தப்பட்ட சாதனத்தின் இயக்கத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட செயற்பாடுகளின் மேலாண்மைக்கு (இவற்றில் எது பொருத்தமானதோ அது) தொடர்புடைய அலுவல்பூர்வ நிலைக்கு பொறுப்பு வகிக்கும் நபர் ஒருவரால் கையொப்பமிடப்பட்டதாக புலப்படுத்தும் **சான்றிதழ் ஒன்று**, அதில் குறிப்பிடப்பட்ட விடயம் எதற்கும் சாட்சியமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக விடயம் ஒன்றைக் குறிப்பிடும் நபரின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரை சிறப்பாக அது குறிப்பிடப்படுவதாகக் கூறுவது போதுமானதாகும்.

(5) இந்தப்பிரிவின் நோக்கங்களுக்காக,–

என்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடக்கூறியது. இதில் கொலை நடந்த போது மறைகாணியால் படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் சேமிக்கப்பட்ட எண்ணிம காணொலி பதிவாக்கி (Digital Video Recorder containing CCTV Footages) ஓர் சான்றுப்பொருளாக (Material Object) அரசு தரப்பில் குறியிடப்பட்டது.

அக்கொலை வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றியனுப்பும் முன் குற்றவியல் நீதித்துறை நடுவர் மேற்கொள்ளும் முதனிலை நடவடிக்கைகளில் மறைகாணியில் பதிவான காட்சிகளை பார்வையிட அவருக்குள்ள அதிகாரம், அது சேமிக்கப்பட்டுள்ள பதிவாக்கியிலிருந்து (DVR) காப்புப்பிரதி (Backup) எடுக்கும் முறை, பிரிவு 65-ஆ(4)-இன்படி சான்றிதழ் பெறுதல் ஆகியன பற்றி இந்த முக்கிய வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் பல்வேறு சட்ட நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தியது. அதாவது,-

மின்னியக்க வடிவில் இருக்கும் வழக்கு தொடர்புடைய தகவல்தரவு அடங்கிய நினைவட்டை, வன்வட்டு, குறுவட்டு, விரலி ஆகிய சாதனங்கள் சான்றுப்பொருட்களாக இருந்தாலும், இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 3-இன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு அவை "ஆவணங்களே" ஆகும் (Articles like Memory Card, Hard Disc, CD, Pen-drive, etc., containing relevant data in electronic form are 'documents' as defined under Section 3 of the Indian Evidence Act, 1872, albeit, marking them as material objects).

(அ) கணினி ஒன்றுக்கு பொருத்தமான படிவம் எதிலும் தகவல் வழங்கப்பட்டிருப்பின் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்டது நேரடியாக இருந்தாலும் சரி அல்லது (மனித தலையீடுடன் அல்லது தலையீடின்றி) பொருத்தமான கருவி எதன் வாயிலாக இருந்தாலும் சரி, அது அக்கணினிக்கு வழங்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) அலுவலர் எவராலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு களின் போக்கிலோ, அந்தச் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக அந்தச்செயற்பாடுகளின் போக்கில் அல்லாமல் வேறுவிதமாகவோ இயக்கப்படுகின்ற கணினி ஒன்றால் சேமித்து வைக்கப்படுகின்ற அல்லது செயல்முறைப்படுத்தப்படுகின்ற ஓர் கருத்துடன் தகவல் வழங்கப்பட்டிருந்து, அது அந்தக் கணினிக்கு முறைப்படி வழங்கப்பட்டிருப்பின், அது அந்தச் செயற்பாடுகளின் போக்கில் அதற்கு வழங்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்;

(இ) கணினி வெளிப்பாடு ஒன்று, அது கணினியால் நேரடி யாக அல்லது (மனித தலையீடுடன் அல்லது தலையீடின்றி) பொருத்தமான கருவி எதன் வாயிலாகவும் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அது கணினி ஒன்றால் தயாரிக்கப்பட்டிருப்பதாக எடுத்துக் கெள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம் .- இந்தப்பிரிவின் நோக்கங்களுக்காக பிற தகவலில் இருந்து பெறப்படுகின்ற தகவலைச் சுட்டுகிற எதுவும் கணக்கீடு, ஒப்புமை அல்லது வேறெந்த செயல்முறையாலும் அதிலிருந்து பெறப்படு கின்ற தகவலின் ஓர் சுட்டுகையாக கொள்ளப்படுதல் வேண்டும்.

மின்னியக்க பதிவுருவைப் பெறும் குற்றவியல் நீதித்துறை நடுவர், அதனைத்தாம் பார்வையிட்டு, அதன் காப்புப்பிரதி (backup) ஒன்றை குறுவட்டு அல்லது விரலி அல்லது வேறு சாதனம் எதிலும் சேமிக்க வேண்டும். அவ்வாறு செய்கையில் அம்மின்னியக்க பதிவுரு மூலத்தின் நம்பகத்தன்மைக்கு (integrity of source) இடையூறு ஏதும் விளைவித்துவிடக்கூடாது. அடுத்து காப்புப்பிரதி அடங்கிய சாதனத்தை நிலைமின் தடுப்பு உறையால் (anti-static cover) சுற்றி, அதை பாதுகாப்பு பொறுப்பில் பத்திரமாக வைத்து, வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றும் போது அனுப்ப வேண்டும். (நிலைமின் தடுப்பு உறை, அதாவது "anti-static cover" என்பது, மின்னியக்க பதிவுரு சேமிப்பு சாதனத்தை நிலைமின் உற்பத்தியிலிருந்து பாது காப்பாக வைத்திருப்பதாகும். பொதுவாக பொருட்கள் ஒன்றை யொன்று உராய்வதன் காரணமாக தோன்றும் மின் உற்பத்தியால் இத்தகு சாதனங்களில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்தரவு சேதமாக வாய்ப்புண்டு. எனவே இச்சாதனங்களை நாட்பட நீதிமன்ற பாது காப்பு பொறுப்பில் வைத்துக் கொள்வதில் அல்லது ஓரிடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்கையில், அல்லது அனுப்புகையில் பாதுகாப்புக்காக இப்படிப்பட்ட உறை பயன்படுத் தப்படுகிறது.)

மறைகாணி காட்சியில் (CCTV Footage) தெரியும் நபர் கைதி கூண்டில் நிற்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர்தானா என்று மனநிறை வடைய, அக்காட்சியை குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்னிலையில் பார்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313-இன்படி விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை வினவுகையில், மறைகாணிக்காட்சியில் தெரியும் குற்றச்செயல்கள் பற்றி அவரிடம் குறித்தவகையிலான வினாக்களைக் கேட்டு, அவரது விடைகளை பதிவு செய்தல் வேண்டும் (Court has power to view CCTV Footage in presence of Accused for satisfying itself as to whether individual seen infootage is Accused in dock.Trial Court should specifically put questions to Accused, when he is examined underSection 313 of Cr.P.C. about his overt acts appearing in footage and record his answers.)

இந்த வழக்கில் கொலைச்சம்பவத்தை காட்டும் மறைகாணிக் காட்சிப்பதிவுகளே பெரும் சாட்சியமாக அரசுதரப்பால் முன் வைக்கப்பட்டன. மறைகாணிக்காட்சிகள் யாவும் தகவல்தரவுகள் ஆகும். இவை பொதுவாக எண்ணிம காணொலி பதிவாக்கியில்

(Digital Video Recorder - DVR) சேமிக்கப்படுகின்றன. எனவே இப்பதிவாக்கி ஓர் மின்னியக்க பதிவுரு (DVR containing CCTV footage is an electronic record) ஆகும். இதில் சேமிக்கப்பட்டுள்ள தகவல் தரவுகளை (காட்சிகளை) வெளியே எடுக்கவும் முடியும். இவ்வழக்கில் காவல்துறையினர் அப்பதிவாக்கியை சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப வல்லுநரின் உதவியால் கைப்பற்றியது சட்டப்படியான நடைமுறை என நிலைநிறுத்தப்பட்டது. (Digital Video Recorder (DVR) is Electronic record as it stores data in Electronic form and is also capable of output. Reliance upon CCTV recordings by prosecution. Digital Video Recorder seized by Police under cover of Mahazar with aid of technician. Procedure adopted by Police to rely upon Electronic data cannot be faulted.)

மின்னியக்க சாட்சியத்தை நீதிமன்றம் ஏற்பதற்கு இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 65-ஆ(4)-இன்படியான சான்றிதழ் எப்போது அவசியம் என்பது குறித்தும் இவ்வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் முக்கியக்கருத்துரைத்தது. அதன்படி, (1) மின்னியக்க பதிவுருவை அப்படியே வழக்கில் பயன்படுத்தும் போது அது ஓர் முதல்நிலைச்சாட்சியம் ஆகும். எனவே அதைச் சாட்சியமாக நீதிமன்றம் ஏற்பதற்கு பிரிவு 65-ஆ(4)-இன்படி சான்றிதழ் பெறுவது அவசியமில்லை. இந்த வழக்கில் மறைகாணிக்காட்சி அடங்கிய எண்ணிம காணொலி பதிவாக்கியானது முன்சொன்னது போல் ஓர் மின்னியக்க பதிவுருவாகும். எனவே அது அப்படியே ஓர் சான்றுப்பொருளாக விசாரணை நீதிமன்றத்தில் குறியிடப்பட்டது. எனவே அது முதல்நிலைச்சாட்சியமாகிவிட்டது. (When Electronic record as such is used as Primary Evidence, is admissible in evidence without compliance with conditions in Section 65-B. In this case, Digital Video Recorder marked as Material Object before Trial Court) (2) ஆனால் அதே நேரம், இப்பதிவாக்கியில் இருந்து தகவல்தரவை வெளியில் எடுத்து, வேறொரு சாதனத்தில் சேமித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினால், அது இரண்டாம் நிலைச்சாட்சியமாகும். அதற்கு பிரிவு 65-ஆ(4)-இன்படியான சான்றிதழ் சட்டப்படி அவசியம்.

ஓர் பெரும் வழங்கன் கணினியை (Server) அப்படியே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவது சாத்தியமில்லை. எனவே அதில் இருக்கும் தகவல்தரவை ஓர் அகிலத்தொடர்பு தகவல்தரவு பாட்டை இயக்கி (Universal Serial Bus Drive - USB Drive) அல்லது குறுவட்டு இயக்கி (CD Drive) அல்லது வேறு சாதனம் வாயிலாக

வெளியில் எடுக்க காவல் துறையினர் தடய அறிவியல் துறைசார் கணினி வல்லுநர்களின் சேவையை நாடலாம். அவ்வல்லுநர்கள் இதிலிருந்து வெளியெடுத்துக்கொடுத்த தகவல்தரவை காவல்துறை யினர் தங்கள் புலனாய்வு மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தும் நோக்கத்திற்கு பயன்படுத்தலாம். இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில், இயற்கூறான திட தகவல்தரவைப் (Physical data) பொறுத்து நாம் 'நகல்' என்று குறிப்பிடுவது மின்னியக்க தகவல் தரவுக்குப் பொருந்தாது. எனவே வழங்கன் கணினியில் இருந்து தகவல்தரவை வெளியெடுத்த பிறகு, அவ்வழங்கன் கணினியை யார் தன் பொறுப்பில் வைத்துள்ளாரோ அந்நபரிடமிருந்து அது தொடர்பாக சான்றிதழ் பெற்றால் அதுவே பிரிவு 65-ஆ(4)-ஐ நிறைவு செய்வதற்குப் போதுமானதாகும். (Police can secure services of Computer Experts from Forensic Science Department to retrieve data from huge server through USB Drive or CD Drive or any other gadget for purpose of investigation and production of same before Court without disturbing integrity of original source. Question of copy as it is normally understood in physical data may not be applicable for Electronic data. Certificate can be obtained from person, who is in-charge of Server after retrieval of data from Server would suffice requirement under Section 65-B).

அதே நேரம் வழங்கன் கணினியில் இருந்து தகவல்தரவை வெளியெடுக்கும் வல்லுநர் ஒருவர், அத்தகவல்தரவை தன் கணினி யில் உள்ளிட்டு, அதிலிருந்து தொட்டுணரக்கூடிய வடிவிலான அச்சுப்படியை வெளியெடுத்த பிறகு, அத்தகவல்தரவை தாம் வழங்கன் கணினியிலிருந்து எவ்வாறு சேகரித்து, தனது கணினியில் எவ்வாறு உள்ளிட்டு, அச்சுப்படிகளை உருவாக்கியது என்பது குறித்து குறிப்பிட்டு சான்றிதழ் அளித்தால், அது பிரிவு 65-ஆ(4) கூறும் தேவையை நிறைவு செய்வதாகும். (Expert can feed data into his Computer and take print outs in tangible form with his certification stating as to how he had collected from Server and fed them into his Computer and produced outputs).

இவ்வாறு மின்னியக்க பதிவுரு, மின்னியக்க சாட்சியம், அதன் ஏற்புடைமை, பிரிவு 65-ஆ(4)-ன் கீழான சான்றிதழ் எனப்பல்வேறு சட்ட நிலைப்பாடுகளையும் தெளிவாக்கிய இந்த **வழக்கின் சங்கதிகள்** **படி** தனராம், குணராம் என்ற சகோதரர்கள் இருவர் "பாலாஜி பான் புரோக்கர்ஸ்" என்ற பெயரில் வட்டிக்கடை மற்றும் நகைக்கடை வைத்து நடத்தி வந்தனர். இவர்களில் குணராம் என்பவர் சம்பவ

தினத்தன்று காலை 8 மணி அளவில் கடையை திறந்துள்ளார். சுமார் 9 மணி அளவில் அவரது சகோதரர் தனராம் கடைக்கு வந்து அங்கு சிறிது நேரம் இருந்துவிட்டு, வேறு வேலை காரணமாக வெளியே கிளம்பிவிட்டார். அவர் சுமார் 12 மணி அளவில் கடைக்கு திரும்பி வந்து பார்த்தபோது அவரது சகோதரர் குணராம் கொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி யில் உறைந்து போனார். உடனடியாக அவர் அபாய மணியை ஒலிக் கச்செய்ததன் பேரில் அக்கம்பக்கம் உள்ள கடை உரிமையாளர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர். குணராம் கொலை செய்யப்பட்டது மட்டுமல்லாமல், கடையில் வைக்கப்பட்டிருந்த 935 கிராம் தங்கமும் திருடு போயிருந்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தின் போது நாம் முன்னதாகக் கண்ட ***Anvar P.V. v. P.K. Basheer & Ors. [Citation : (2014) 10 SCC 473 (SC)]*** என்ற வழக்கில், பிரிவு 65(ஆ)-இன்படியான சான்றிதழ் இல்லாமல், குறு வட்டு (CD) ஒன்றில் பதிவு செய்யப்பட்ட மின்னியக்க சாட்சியத்தை ஏற்புடைய சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்று உச்ச நீதிமன்றம் கூறிய பொருள் விளக்கம் முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் முகமாக, அதே வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய மற்றொரு பொருள் விளக்கம் அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டது. அதாவது, மின்னியக்க சாட்சியம் ஒன்று பிரிவு 62-இன் கீழ் ஓர் முதல்நிலை சாட்சியமாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட் டால், அங்கு பிரிவு 65-ஆ கூறும் சான்றிதழ் நிபந்தனைகளை கடைப் பிடிக்க வேண்டியதில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு நெறி அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த வழக்கில் பிரிவு 65ஆ(4)-இன் கீழான சான்றிதழ் ஏன் அவசியமில்லை என்பதையும், மேற்சொன்ன வழக்கின் தீர்ப்பு நெறியை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஏன் பொருள் விளக்கம் கொள்ள முடியாது என்பதையும் தெளிவுபடுத்தியது. அது தனது தீர்ப்பில் கூறுகையில், பொதுவாக தொடர்வண்டி, விமான நிலையங்கள் போன்ற பெரும் நிருவாக அமைப்புகளில் ஆங்காங்கே பல மறைகாணி படமெடுப்பு கருவிகள் பொருத்தப் பட்டிருக்கும் என்றும், மறைகாணியில் பதிவாகும் காட்சிகள் (அதாவது இங்கு தகவல்தரவுகள்), மற்ற கணினிகளுக்கு பகிர்ந்து வழங்கும் ஓர் பெரும் வழங்கன் கணினியில் எண்ணிம வடிவில் சேமிக்கப்படும் என்றும், குற்றச்சம்பவம் ஏதும் அதில் பதிவாகையில்

அவ்வழங்கன் கணினியை காவல்துறையினர் அப்படியே பறிமுதல் செய்து தடய அறிவியல் துறைக்கு அனுப்பவோ அல்லது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவோ இயலாது என்றும், இந்த இடர்ப்பாட்டைக் களைவதற்காகவும், மின்னியக்க வடிவில் உள்ள இரண்டாம் நிலைச்சாட்சியத்தின் ஏற்புடைய தன்மைக்கு எதிரான ஆட்சேபணைகளை ஏற்புடையவாறு சமாளிக்கவும்தான், அது குறித்து பிரிவு 65ஆ-இன் கீழ் சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டியது பொருத்தமாக இருக்கும் என நாடாளுமன்றம் கருதியது என்றும், இச்சான்றிதழை சாட்சியத்தைத் திரட்டும் சமயத்தில் பெறவில்லை என்றாலும், வழக்கு விசாரணையின் போது சம்பந்தப்பட்ட அந்த வழங்கன் கணினியை தம் பொறுப்பில் வைத்திருந்த நபர் வாயிலாக பிரிவு 65ஆ-இன் வரைவுரைகள்படி புற சாட்சியத்தை அளிக்கச் செய்யலாம் என்றும், இத்தகு வசதியை நாம் காவல்துறைக்கு வழங்காது போனால் குற்றவியல் நீதி வழங்கும் முறை என்பது முடமான வாத்து போலாகும் என்றும் உணர்வுபூர்மாக கூறியது. (There may be occasions when in large establishments like Railways, Airports where large number of cameras are installed and the information is stored digitally in huge servers, it may not be possible for the Police to seize the server and send them either to the Forensic Science Department or produce them before the Court. Only to obviate this difficulty and to satisfactorily meet the objections relating to admissibility of secondary evidence in electronic form, the Parliament thought it fit to provide a certification under Section 65B. Even if the certification is not obtained at the time of collection of evidence, yet, at the time of trial, evidence aliunde can be given through the person who was in charge of the Server, in terms of Section 65B of the Act. If we fail to provide this facility to the Police, the Criminal Justice Delivery System will become a lame duck.)

இந்த வழக்கில் மறைகாண் காட்சிகளை பதிவு செய்ததும், வழங்கன் கணினி போல் செயல்பட்டதுமான எண்ணிம காணொலி பதிவாக்கியையே (DVR) காவல்துறையினர் உரிய சட்ட நடைமுறைப்படி பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக முன்னிலைப்படுத்தினர். இங்கு அந்த பதிவாக்கியே மறைகாண் படமெடுக்கும் கருவியின் வாயிலாக பதிவான காட்சிகளுக்கு முதல் நிலை சாட்சியமான (The DVR containing the CCTV footage is primary evidence) காரணத்தால், ***Anvar P.V. v. P.K. Basheer & Ors.*** வழக்குத் தீர்ப்பை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்த முடியாது என்றும், முதல்நிலை சாட்சியமான பதிவாக்கியையே

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திவிட்ட காரணத்தால், அதில் பதிவாகியிருக்கும் மறைகாண் காட்சிகளின் நிரூபணத்திற்கு பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழ் ஏதும் தேவையில்லை என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

பதிவாக்கியில் பதிவான மறைகாண் காட்சியை ஓட விட்டு, அதை சென்னை உயர் நீதிமன்றம் பார்வையிட்டது. அதில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர் நன்கு பதிவாகியுள்ளதும், அவர் கொடூரமாக கொலை செய்ததும் தெளிவாகத் தெரிகிறது. எனவே இந்த வழக்கில் அவர் உள்ளிட்ட மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர் களுக்கு அமர்வு நீதிமன்றம் விதித்த கடும் தண்டனைகளை சில மாற்றங்களுடன் சென்னை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

Vikram Singh v. State of Punjab [Citation : (2017) 8 SCC 518 = AIR 2017 SC 3227 = 2017 Crl LJ 4305 (SC)] என்ற வழக்கின் பொருண்மைகள்படி கடத்தப்பட்டவரை விடுவிக்க பணம் கேட்கும் அழைப்புகளின் (ransom calls) உரையாடல்களை பதிவு செய்த அசல் ஒலிப்பதிவு நாடாவானது (Tape recorded conversation) காவல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒலிப்பதிவு நாடா அப்படியே அசலாக ஒப்படைக்கப்பட்டதால், இது முதல்நிலை சாட்சியமாகும் என்றும், எனவே பிரிவு 65-ஆ கூறும் சான்றிதழ் தேவையில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Sonu @ Amar Vs. State of Haryana [Citation : 2017 SCC OnLine SC 765 = (2017) 8 SCC 570, decided on 18.07.2017 என்ற வழக்கில் மின்னியக்க பதிவுருவை ஒரு சாட்சியமாக ஏற்பது மற்றும் அதன் நிரூபணம் பற்றி ஓர் சட்டக்குழப்பம் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுந்தது. இவ்வழக்கில் கொலை மற்றும் ஆட்கவர்தல் குற்றங்களுக் காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கீழமை நீதிமன்றம் தண்டனை விதித்தது. அது மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் உறுதியும் செய்யப்பட்டது. இதை எதிர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சியமாக குறியிடப்பட்டது யாதெ னில், குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் கொலையுண்டு இறந்து போனவரின் செல்பேசிகளின் தொடர்புகளிலிருந்து அச்சு வடிவில் வெளியெடுக்கப்பட்ட "அழைப்பு விவர பதிவுருக்கள்" (CDRs - Call Details Records) ஆகும். அந்த அச்சுப்படிகள் மின்னியக்க பதிவுரு வாக கீழமை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்து கொண் டிருக்கும் போது இரண்டாம்நிலை சாட்சியமாக, பிரிவு 65ஆ(4)-

இன்படியான **சான்றிதழ் ஏதுமின்றி** அரசு தரப்பில் சமர்ப்பிக்கப் பட்டது. இதற்கு அச்சமயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆட்சேபணை ஏதும் செய்யப்படவில்லை.

இந்த வழக்கு மேல்முறையீடாக உச்ச நீதிமன்றத்தில் எழுந்த போது, செல்பேசிகளின் அழைப்பு விவர அச்சுப்பிரதிகளை பிரிவு 65(ஆ)(4)-இன்படி சான்றிதழ் பெறாமல் அரசு தரப்பில் சான்றா வணமாகக் குறியிட்டது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்று கூறி, அதற்கு ஆதரவாக நாம் ஏற்கனவே கண்ட ***Anvar P.V. v. P.K. Basheer & Ors.*** என்ற வழக்கில், மின்னியக்க பதிவுருவை இரண்டாம்நிலை சாட்சியமாக தாக்கல் செய்யும்போது பிரிவு 65ஆ(4)-இன்படி சான்றிதழ் பெற வேண்டியது கட்டாயம் என்று இதே உச்ச நீதிமன் றம் கூறியதை மேற்கோளாகச் சுட்டிக்காட்டி குற்றஞ்சாட்டப்பட்ட வர் தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் அரசு தரப்பில் அத்தகு சான்றிதழ் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தால், செல்பேசி அழைப்பு பதிவுருக்களை (Call Detail Records) சாட்சியமாக ஏற்க இயலாது என்றும், எனவே தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இரத்து செய்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் குற்றஞ்சாட் டப்பட்டவர் தரப்பில் கோரப்பட் டது.

ஆனால் ***Anvar P.V. v. P.K. Basheer & Ors.*** வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு நெறி இந்த வழக்கிற்கு ஏற்புடையதல்ல என்றும், ஒரு ஆவணத்தை சாட்சியமாக நீதிமன்றம் ஏற்பதை இரு விதங்களில் ஆட்சேபிக்கலாம் என்றும், அவை (1) முதலில் சம்பந்தப்பட்ட ஆவணமே ஓர் சாட்சியமே ஏற்கத்தக்கதன்று என்று ஆட்சேபணை செய்வது; (2) மற்றொன்று சம்பந்தப்பட்ட ஆட்சேபணை அந்த ஆவணத்தை சாட்சியமாக ஏற்பது பற்றி அல்லாமல், அந்த சாட்சி யத்தை நிரூபிக்கும் முறை பற்றியதாக இருப்பது. [(a) The document is per se inadmissible. b) When the objection is directed not on the admissibility of document in evidence, but towards the method or mode of proof of evidence]. ஒரு ஆவணத்தை மெய்ப்பிக்கும் முறை பற்றிய ஆட்சேபணையை, வழக்கு விசாரணையின் போது அது ஓர் சான்றாவணமாக குறியிடப்படும்போதே செய்ய வேண்டும் என்றும், அதன் பின் செய்ய இயலாது என்றும், அதே நேரம் ஒரு ஆவணமே சாட்சியமாக ஏற்கத்தக்கதன்று என்ற ஆட்சேபணை அடிப்படையானது என்றும், அதனை வழக்கின் பிந்தைய நிலையி லும் குறிப்பாக மேல்முறையீட்டின் போதும் எழுப்பலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இவ்வழக்கில் செல்பேசிகள் தொடர்பிலிருந்து அச்செடுக்கப் பட்ட அழைப்பு பதிவுருக்களை மின்னியக்க சாட்சியமாக அரசு தரப்பில் சான்றாவணங்களாக குறியிடுகையில் அது பிரிவு 65-ஆ(4)-இன்படி யான சான்றிதழ் பெறப்படாமல் தாக்கல் செய்யப்படுவதை சாட்சிய மாக ஏற்க முடியாது என்று அதனை நிரூபிக்கும் முறை பற்றி குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்த ஆட்சேபணையும் எழுப்பாமல் தற்போது மேல்முறையீட்டின் போது எழுப்புவது சட்டப்படி செல்லாது என்றும், ஒருக்கால் வழக்கு விசாரணையின் போது அத்தகு ஆட்சேபணையை எழுப்பியிருந்தால், அந்த ஆவணத்தை முறைப் படி நிரூபிக்கும் வாய்ப்பை அரசு தரப்பு பெற்றிருக்கும் என்றும், தனது வழக்கில் இருந்த அச்சட்டக்குறைபாட்டை களைந்திருக்கும் என்றும், இங்கு செல்பேசி அழைப்பு பதிவுருக் களான மின்னியக்க சாட்சியத்தை நிரூபிக்கும் முறை பற்றி குற்றஞ் சாட்டப்பட்டவர் கீழமை நீதிமன்றத்தில் ஆட்சேபிக்காத காரணத் தால், அதற்கான வாய்ப்பை மேல்முறையீட்டில் அவருக்கு வழங்க இயலாது என்றும் கூறி அவருக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்து, அவரது மேல்முறையீட்டை மாண்பமை இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் **எஸ்.ஏ.பாப்டே மற்றும் எல்.நாகேஸ்வரராவ்** அடங்கிய ஆயம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது. [In this case where the reliability of the Call Detail Records (CDRs) produced as proof was questioned for not complying with the requirements under Section 65B of the Evidence Act, 1872, the bench of S. A. Bobde and L. Nageswara Rao, JJ said that the mode or method of proof is procedural and objections, if not taken at the trial, cannot be permitted at the appellate stage. It was held that an objection relating to the mode or method of proof has to be raised at the time of marking of the document as an exhibit and not later.

The bench said that though the admissibility of a document which is inherently inadmissible is an issue which can be taken up at the appellate stage because it is a fundamental issue, if the objections to the mode of proof are permitted to be taken at the appellate stage by a party, the other side does not have an opportunity of rectifying the deficiencies.

The Court was hearing an appeal against conviction in a case of abduction and murder where the Police had collected the CDRs of all the mobile phones that were recovered from the accused and the mobile phones of the deceased. The appellants had objected to the credibility of

these CDRs. Rejecting the contention of the appellants, the Court said that the crucial test is whether the defect could have been cured at the stage of marking the document and applying this test to the present case, if an objection was taken to the CDRs being marked without a certificate, the Court could have given the prosecution an opportunity to rectify the deficiency but not now.]

Anvar P.V. v. P.K. Basheer & Ors. வழக்கில் மின்னியக்க பதிவுரு ஒன்றின் இரண்டாம்நிலை சாட்சியத்தை பிரிவு 65-ஆ(4)-ன்படியான சான்றிதழ் இன்றி ஓர் சாட்சியமாக கண்டிப்பாக ஏற்க இயலாது என்று கூறிய அதே உச்ச நீதிமன்றம், இந்த ***Sonu @ Amar Vs. State of Haryana*** வழக்கில் ஆவணத்தின் நிரூபணம் பற்றி மேற் சொன்ன சட்டநுணுக்கங்களின் அடிப்படையில் அத்தகு சான்றிதழ் ஏதுமின்றி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட செல்பேசி அழைப்பு பதிவுருக்களை இரண்டாம்நிலை சாட்சியமாக ஏற்றுக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கீழமை நீதிமன்றம் விதித்த தண்டனையை உறுதி செய்தது இங்கு கவனத்திற்கு மட்டுமல்ல, மேலதிகமான ஆய்வுக்கும் உரியதாகும்.

மின்னியக்க பதிவுரு மற்றும் சாட்சியம் குறித்த சட்டப் புரிதலும், பொருள் விளக்கங்களும் காலத்தின் போக்கில் எப்படி எல்லாம் வளர்ச்சியுற்றன, மாறின என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டு பின்வரும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய ஓர் தீர்ப்பு நெறியாகும்.

Shafhi Mohammad v. State of Himachal Pradesh [Citation : (2018) 2 SCC 801 = 2018 (1) CTC 777 (SC)] என்ற இந்த வழக்கில் புலனாய்வின் போது மீட்கப்பட்டவை தொடர்பான காட்சி காணொலியாக பதிவு செய்யப்பட்டது (Scene of recovery during investigation was videographed). இந்த காணொலிக்காட்சியைச் சேமித்து வைத்துள்ள மின்னியக்க சாதனத்திலிருந்து (electronic device) வெளியெடுக்கப்பட்ட விடயம் ஓர் மின்னியக்க பதிவுருவாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டது. ஆனால் இது குறித்து சாட்சியமளித்தவர் வசம் அச்சாதனம் கிடையாது. இந்நிலையில் இந்த மின்னியக்க சாட்சியம் ஏற்புடையதா என்ற கேள்வி எழுந்தது. அப்போது அந்த சாதனத்தின் கட்டுப்பாட்டை யார் தன் வசம் வைத்துள்ளரோ அவரால் மின்னியக்க சாட்சியம் முன்னிலைப் படுத்தப்படும் போது மட்டுமே பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழ் தேவையாகிறது என்றும், அச்சாதனத்தின் கட்டுப்

பாட்டை தன் வசம் கொண்டிராத தரப்பினரை பிரிவு 65ஆ-இன் படியான சான்றிதழை முன்னிலைப்படுத்தும்படி வேண்டுறுத்த முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

இங்கு உச்ச நீதிமன்றம் தான் ஏற்கனவே ***Anvar P.V. v. P.K. Basheer & Ors.*** என்ற வழக்கில் கூறிய தீர்ப்பு நெறியை ஒதுக்கித் தள்ளி, மின்னியக்க பதிவுருவின் இரண்டாம்நிலை சாட்சியத்திற்கு பிரிவு 65-ஆ கூறும் சான்றிதழை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டியது எப்போதும் கட்டாயமானதல்ல என்றும், நீதியின் நலன் கருதி அச்சான்றிதழ் இல்லாமலும் மின்னியக்க சாட்சியத்தை சமர்ப்பிக்கலாம் என்றும் இந்த ***Shafhi Mohammad*** வழக்கில் சட்ட நிலைப்பாட்டை, நடைமுறையை தளர்த்திவிட்டது. [The Supreme Court relaxed the mandatory requirements under Section 65B and stated that electronic evidence presented without a certificate under Section 65B(4) can be relied upon. In cases when an electronic device, which produced an electronic record, is not in the possession of a party presenting the evidence, requirements of Section 65-B(4) cannot be fulfilled. At the same time, there must be no denial of justice to such parties and the court must relax this procedural requirement if the interests of justice so satisfy.]

அன்வர் வழக்கில் மின்னியக்க சாட்சியத்திற்கு பிரிவு 65ஆ-இன்படியான சான்றிதழ் **கட்டாயம் தேவை** என்றும், **ஷாஃபி வழக்கில்** அச்சான்றிதழ் **எப்போதும் கட்டாயமல்ல** என்றும் முரண்பாடான தீர்ப்பு நெறிகளை வழங்கியதன் கரணமாக உச்ச நீதிமன்றம் தன்னைத்தானே தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய நிலை பின்வரும் வழக்கில் அதற்கு எழுந்தது என்றால் அது மிகையல்ல.

அதாவது, ***Arjun Panditrao Khotkar vs Kailash Kushanrao Gorantyal and Others [Citation : 2020 (5) CTC 200 (SC)]*** என்ற இந்த வழக்கு தேர்தல் தொடர்பானதாகும். இதில் தேர்தலில் வெற்றி பெற்ற அர்ஜூன் பண்டிட்ராவ் என்பவரின் தேர்தலை இல்லாநிலையது என விளம்பக் கோரி (to declare the election of the returning candidate as void) தேர்தலில் தோல்வியுற்ற கைலாஷ் கிஷன் ராவ் என்பவர் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறார். இதற்கு அவர் கூறும் சட்ட முகாந்திரங்கள் வருமாறு:- (1) தேர்தலில் வெற்றி பெற்றவர் தனது வேட்பு மனுவை குறித்த நேரத்திற்குள் தாக்கல் செய்யாமல் காலந்தாழ்ந்து தாக்கல் செய்துள்ளார். (2) இது குறித்து உடனே புகார் அளித்தும், அதை தேர்தல் அலுவ

லர் பரிசீலிக்காமல் நிராகரித்துவிட்டார். (3) வேட்பு மனு தாக்கலில் இப்படிப்பட்ட பெருங்குறைகள் இருப்பதால், தேர்தலில் வெற்றி பெற்ற அர்ஜூன் பண்டிட்ராவின் தேர்தலை இல்லாநிலையது என விளம்ப வேண்டும்.

தனது இந்த முகாந்திரங்களுக்கு ஆதரவாக கைலாஷ் கிஷன் ராவ் தேர்தல் அலுவலரின் அலுவலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வைக்கப்பட்டுள்ள படமெடுக்கும் கருவி வாயிலாக பதிவான காணொலிக்காட்சிகளை (video recording through the cameras) சுட்டிக்காட்டுகிறார். அதன்படி மதியம் 3 மணிக்குள் தாக்கல் செய்ய வேண்டிய வேட்பு மனு, 3.53 மணிக்கு தாக்கல் செய்யப்படுவது தெரிகிறது.

எனவே சம்பந்தப்பட்ட தொகுதிக்கு நடந்த தேர்தல் குறித்த அனைத்து பதிவுருக்களையும் முன்னிலைப்படுத்தும்படி தேர்தல் ஆணையத்திற்கு பம்பாய் உயர் நீதிமன்றம் ஆணையிட்டது. அதற்கு இணங்க அப்பதிவுருக்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் தங்கள் அலுவலக பயன்பாட்டிற்காக மின்னியக்க பதிவுருக்களை உருவாக்கும் நோக்கத்துடன் கண் காணிப்பு படமெடுக்கும் கருவிகள் பொருத்தப்பட்டன என்று தேர்தல் அலுவலர் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமும் அளித்தார். மேலும் பதிவாகும் காட்சிகளை பார்வையிடவும், அதற்கான பதிவுச் சாதனங்களைப் வைக்கவும், தேர்தல் அலுவலக கட்டடத்தின் முதல் தளத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. மேலும் தேர்தல் அலுவலரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவே, சம்பந்தப்பட்ட காணொலிக்காட்சிப்பதிவுகள் குறுவட்டுகளாக (VCD) நீதிமன்றத்தில் சான்றாவணமாக தாக்கல் செய்யப்பட்டன.

மின்னியக்க சாட்சியம் பதிவான சாதனங்கள் தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளன; பதிவான காட்சிகள் அடங்கிய குறுவட்டுகள் மின்னியக்க சாட்சியமாக நீதிமன்றத்தில் குறிக்கப்பட்டுள்ளன். மேலும் தேர்தல் அலுவலர் இது தொடர் பாக நீதிமன்றத்தில் சாட்சியமும் அளித்துள்ளார். எனவே இவை யாவற்றையும், பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழைப் பெறுவது தொடர்பான வகைமுறைகளை நிறைவு செய்வதாக பாவிக்கலாம் என்றும், மீண்டும் தனியாக ஒரு சான்றிதழைப்பெறுவது அவசிய மில்லை என்றும் பம்பாய் உயர் நீதிமன்றம் கூறியது. முடிவில், அக்குறு வட்டுகளை செல்லத்தக்க சாட்சியமா ஏற்றுக்கொண்டு, அர்ஜூன் பண்டிட்ராவின் வேட்புமனு முறைப்படி தாக்கல் செய்யப்

படவில்லை என்று நிலைநிறுத்தி, அவரது தேர்தலை இல்லா நிலையது என பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பினால் குறையுற்ற அர்ஜுன் பண்டிட்ராவ் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் செய்த மேல்முறையீடு செய்தார். அது மாண்பமை **நீதியரசர்கள் அசோக் பூஷன், நவீன் சின்ஹா** ஆகிய இரு நீதிபதிகளின் முன் பரிசீலனைக்கு வந்தது. அப்போது ***Shafhi Mohammad v. State of Himachal Pradesh*** என்ற முந்தைய வழக்கில் மின்னியக்க சாட்சியத்தின் நிரூபணத்திற்கு பிரிவு 65ஆ(4)-இன்படி சான்றிதழ் பெற வேண்டியது கட்டாயமல்ல என்று உச்ச நீதிமன்றத் தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய ஆயம் கூறியதை அப்படியே அடியொற்றி தனது தேர்தலை பம்பாய் உயர் நீதிமன்றம் இரத்து செய்து விட்டது என்றும், இது அந்தப் பிரிவுக்கு கொடுக்கப்பட்ட தவறான பொருள் விளக்கம் என்றும், அதற்கும் முந்தைய ***Anvar P.V. v. P.K. Basheer & Ors.*** என்ற வழக்கில் மின்னியக்க பதிவுருவின் இரண்டாம்நிலை சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள பிரிவு 65ஆ(4)-இன் கீழான சான்றிதழைப் பெற வேண்டியது கட்டாயம் என்று உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய நிறைவாயம் கூறியதுதான் தனது வழக்கிற்குப் பொருந்தும் என்றும் அர்ஜுன் பண்டிட்ராவ் வாதிட்டார். [The RC, Shri Arjun Panditrao challenged the judgment of the High Court in an appeal before the two-judge bench of the Supreme Court. The RC in its appeal contended that the Bombay High Court erred by relying upon the Shafhi Mohammad judgment which is a two-judge bench judgement of this court and did wrong interpretation of the provision mentioned under Section 65B(4) of Evidence Act, 1872. Further, the appellant relied upon the earlier judgement of this court in Anvar P.V. which is a larger bench judgement to support his claim that certificate under Section 65B(4) is mandatory to make the electronic evidence admissible.]

இவ்வாதத்தை கேட்டறிந்த இந்திய உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய ஆயம், அன்வர் வழக்குத்தீர்ப்பின் அடிப் படையில், ஷாஃபி வழக்கை மறுபரிசீலனை செய்து பிரிவு 65ஆ-க்கு சரியான சட்டப்பொருள் விளக்கமளிக்க, அர்ஜுன் பண்டிட்ராவ் தாக்கல் செய்த மேல்முறையீட்டை உச்ச நீதிமன்ற மாண்பமை நீதியரசர்கள் **ரோஹின்டன் ஃபாலி நாரிமன், எஸ்.ரவீந்திர பாத், வி.இராம சுப்ரமணியம்** ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய நிறைவாயத்திற்கு மேற்கோள் பரிசீலனைக்காக (Reference) 26-07-2019-ஆம் தேதி யன்று சுட்டியனுப்பி ஆணை பிறப்பித்தது.

இம்மூன்று நீதிபதிகளும் மேற்படி மேற்கோள் பரிசீலனையில் கடந்த 14-07-2020 அன்று வழங்கிய தங்கள் தீர்ப்பில் கூறிய சட்டப் பொருள் விளக்கங்கள், மின்னியக்க சாட்சியத்தின் நிரூபணத்திற்கு பிரிவு 65ஆ-இன் கீழான சான்றிதழைப் பெற்று தாக்கல் செய்வதில் நிலவி வந்த சட்டக் குழப்பங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்தது என்றே கூறலாம். அப்பொருள் விளக்கங்கள் வருமாறு:-

முதற்கண் எல்லா நேரங்களிலும் பிரிவு 65ஆ(4)-இன்படி சான்றிதழ் பெற வேண்டியது கட்டாயமல்ல என்று **ஷாஃபி வழக்கில்** இரண்டு நீதிபதிகள் அடங்கிய ஆயம் கூறிய தீர்ப்பு நெறியை, இந்நிறைவாயம் ஏற்புடையதல்ல என்று ஒதுக்கித்தள்ளிவிட்டு, **அன்வர் வழக்கின்** தீர்ப்பு நெறியை சரியான ஒன்றாக ஏற்றுக்கொண்டது. அதாவது, மின்னியக்க சாட்சியத்தின் நிரூபணத்திற்கு பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழ் தேவை என்று **அன்வர் வழக்கில்** உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கூறிய தீர்ப்பில் தலையிட அவசியம் ஏதுமில்லை என்று கருத்துரைத்தது. இதன்படி, **மின்னியக்க சாட்சியத்தின் ஏற்புடைமைக்கு பிரிவு 65ஆ(4)-இன் கீழ் சான்றிதழ் பெற வேண்டியது ஓர் முன் நிபந்தனையாகும், அதாவது கட்டாயமாகும்** [Certificate under section 65B(4) Evidence Act is a condition precedent to the admissibility of electronic evidence] என்று இந்த **அர்ஜுன் பண்டிட்ராவ் வழக்கில்** உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

இரண்டாவதாக மின்னியக்க பதிவுரு அடங்கிய மின்னியக்க சாதனத்தின் (Electronic device containing electronic record) உடைமையை (கட்டுப்பாட்டை) யார் தன் வசம் வைத்துள்ளரோ அவரால் மின்னியக்க சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படும் போது மட்டுமே பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழ் தேவையாகிறது என்றும், அச்சாதனத்தின் கட்டுப்பாட்டை தன் வசம் கொண்டிராத தரப்பினரை பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழை முன்னிலைப் படுத்தும்படி வேண்டுறுத்த முடியாது என்றும் **ஷாஃபி வழக்கில்** வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு நெறியை சரியல்ல என்றும், ஏற்புடையதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கடுமையாகச் சாடியது. அந்தச் சான்றிதழை நீதிமன்ற நடவடிக்கை மூலம் பெற சட்டத்தில் இடம் இருக்கும்போது, அதைப் பயன்படுத்தி சான்றிதழ் பெற வழக்குத் தரப்பினர்கள் முயற்சித்தல் வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியது.

எனவே இதன் அடிப்படையில் மேலும் கருத்துரைக்கையில், மின்னியக்க பதிவுரு அடங்கிய சாதனம் யார் வசம் உள்ளதோ அவர் பிரிவு 65-ஆ(4)-இன்படியான சான்றிதழ் வழங்கவில்லை

என்றாலோ, வேண்டுமென்றே வழங்க மறுத்தாலோ, அதனைப் பெறுவதற்கான சட்ட நடைமுறை யாது என்பது பற்றி உச்ச நீதிமன்றம் இதில் தெளிவுற விளக்கியது.

இந்த அர்ஜூன் வழக்கில் மின்னியக்க சாதனத்தை தம்வசம் கொண்டிருக்கும் தேர்தல் ஆணையத்திடமிருந்து பிரிவு 65-ஆ(4)-இன் கீழ் தேவைப்படுகின்ற சான்றிதழைப் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தேர்தலில் தோல்வியுற்ற எதிர்மனுதாரர்கள் உயர் நீதிமன்றம் வாயிலாகவும், வேறுவிதமாகவும் எல்லா முயற்சிகளை யும் செய்தனர். ஆனால் தேர்தல் ஆணைய அலுவலர்கள் ஏதோ காரணத்தின் அடிப்படையில், அச்சான்றிதழை வேண்டுமென்றே வழங்க மறுத்தனர்.

எனவே, இந்நிலையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக மின்னியக்க பதிவுரு குறித்து பிரிவு 65-ஆ(4)-இன்படி சான்றிதழ் வேண்டி தேர்தல் அலுவலருக்கு விண்ணப்பித்தும், அவர் வழங்க மறுத்தாலோ, அல்லது பதிலளிக்கவில்லை என்றாலோ, **அதனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தக் கோரி வழக்கின் தரப்பினர் இந்திய சாட்சியச்சட்டம், உரிமையியல் நடைமுறைச்சட்டம் (கட்டளை XVI) அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி (பிரிவுகள் 91, 165 மற்றும் 349) நீதிமன்றத்திடம் விண்ணப்பம் தாக்கல் செய்ய லாம்** என்றும், இதன் பேரில், அச்சான்றிதழை முன்னிலைப்படுத்த ஆணையிட்டு அல்லது ஏவுரைத்து சம்பந்தப்பட்டவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. இவ்வழக்கில் மேற்சொன்ன சான்றிதழைப்பெற எதிர்மனுதாரர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து விட்டார்கள். ஆனால் சான்றிதழைப் பெற இயலவில்லை.

இங்கு மேற்கண்டவாறு சான்றிதழை முன்னிலைப்படுத்தக் கோரி வழக்குத் தரப்பினர் நீதிமன்றத்திடம் விண்ணப்பித்து, நீதிமன்றமும் அத்தகு சான்றிதழை முன்னிலைப்படுத்த சம்பந்தப் பட்ட நபருக்கு ஆணை பிறப்பித்து அல்லது அழைப்பாணை அனுப்பி விட்டால், அங்கு சான்றிழைப் பெற்று முன்னிலைப்படுத்த அவ்வழக்குத் தரப்பினருக்கு இருக்கும் சட்டக்கடப்பாடு நிறைவடை கிறது என்று இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் மேலும் கூறியது. (Once the party has made an application before the court for production of the certificate and the court has ordered or summoned the requisite person to produce such certificate then the obligation of the party asking for the certificate is completed.)

மின்னியக்க பதிவுருவின் நிரூபணத்திற்கு பிரிவு 65ஆ(4)-இன்படி சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டியது கட்டாயமாக இருந்தாலும், சட்டப்படியான எல்லா முயற்சிகளையும் செய்த பிறகும் சான்றிதழ் பெற முடியாது போனால், அக்கடப்பாட்டிலிருந்து சம்பந்தப்பட்ட தரப்பினரை விடுவிக்க வேண்டும் என்றும், அதற்கு இந்த வழக்கில் பின்வரும் இரண்டு முக்கிய சட்ட முதுமொழிகள் எதிர்மனுதாரர்களுக்குப் பொருந்துகிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அவை, (1) **சாத்திய மல்லாவற்றை சட்டம் கோருவதில்லை** (*Lex non cogitad impossibilia* - Law does not demand the impossible). (2) **சட்டத்திற்குக் கீழ்படிவதை ஓர் இயலாமை சாத்தியமற்றதாக ஆக்கும் போது, அந்த சட்ட கீழ்படியாமை மன்னிக்கப்படும்** (*Impotentia excusat legem* - When there is a disability that makes it impossible to obey the law, the alleged disobedience of the law is excused).

பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழை வழக்கின் பிந்திய கட்டத்தில் கூட தரப்பினர் முன்னிலைப்படுத்தலாம் என்றும், இச் சான்றிதழை எப்போது முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதைப் பொறுத்து பிரிவு 65ஆ(4)-இல் வகைமுறை ஏதும் இல்லை என்றும், அன்வர் வழக்கில் மின்னியக்க பதிவுரு முன்னிலைப்படுத்தப்படும் போதே அத்துடன் இச்சான்றிதழையும் சேர்த்து முன்னிலைப் படுத்த வேண்டும் என்று அன்வர் வழக்கின் தீர்ப்பில் எங்கும் குறிப் பிடப்படவில்லை என்றும், எனவே இச்சான்றிதழைப்பெற வழக்குத் தரப்பினர் தன்னால் இயன்ற வரை முயற்சித்தும் முடியாது போனால், அதனை முன்னிலைப்படுத்த சம்பந்தப்பட்ட நபருக்கு விசாரணை நீதிமன்றம் ஏவுரைத்து அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்றும், உரிமையியல் வழக்காக இருந்தால் வழக்கின் பொருண்மைகள் உரியவாறு ஆராய்ந்து இது குறித்து நீதிமன்றம் முடிவெடுக்க வேண்டும் என்றும், குற்றவியல் வழக்காக இருந்தால், வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே அரசு தரப் பினர் தாங்கள் சார்ந்துள்ள ஆவணங்கள் அனைத்தையும் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு அளிக்க வேண்டியது சட்டப்படி கட்டாயம் என்பதால், அங்கு நீதிமன்றம் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண் டும் என்றும் இதில் உச்ச நீதிமன்றம் மேலும் பொருள் விளக்க மளித்தது.

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் மேலும் கூறுகையில், நீதிமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்னியக்க சாட்சியம் அசலாக இருந்

தால் **(அதாவது முதல்நிலை சாட்சியமாக இருந்தால்)**, அங்கு பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழை முன்னிலைப்படுத்த வேண்டிது கட்டாயமானதல்ல என்றும், அதாவது ஓர் மின்னியக்க பதிவுருவானது ஓர் மின்னியக்க சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு, அச் சாதனத்தை தன் பொறுப்பில் வைத்திருப்பவர் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சிக்கூண்டில் நின்று அது குறித்து சாட்சியமளித்தால், அங்கு அன்வர் வழக்கில் கூறப்பட்டவாறு பிரிவு 65ஆ(4)-இன்படியான சான்றிதழின் தேவை கட்டாயமல்ல என்றும், ஒருவேளை மின்னியக்க சாட்சியம் ஓர் பெரும் வலைக்கட்டமைப்பு கணினியில் இருந்து, அக்கணினியை நீதிமன்றத்தில் அப்படியே கொண்டு வந்து முன்னிலைப்படுத்த முடியாது போனால், அங்கு பிரிவு 65ஆ(4)-இன் கீழான சான்றிதழை முன்னிலைப்படுத்த வேண்டியது கட்டாயமாகும் என்றும் பொருள் விளக்கமளித்தது. [The court also observed that the production of certificate is not mandatory if the electronic evidence submitted is an original. The court reiterate that if an electronic evidence is recorded on an electronic device and the owner of the device testifies the same in the witness box then the requirement of the certificate under section 65B(4) is not mandatory, clarifying the stand of primary evidence in P.V. Anwar case. Court also observed if the evidence is from a computer network that cannot be brought physically to the court then the certificate is mandatory].

இந்த முக்கியமான வழக்கில் உச்ச நீதிமன்றம் நிறைவாகக் கூறுகையில், இதில் பம்பாய் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் எவ்வித தவறும் இல்லை என்றும், பிரிவு 65அ(4)-இன்படியான சான்றிதழை தங்களுக்கு வழங்கக்கோரி இவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள் (தேர்தலில் தோற்றவர்கள்) தேர்தல் ஆணையத்தை பல முறை கேட்டுக் கொண்டுள்ளனர் என்றும், மேலும் அச்சான்றிதழை முன்னிலைப்படுத்தக் கோரி தேர்தல் ஆணையத்திற்கு பம்பாய் உயர் நீதிமன்றமே ஆணையிட்டும், அதற்குக் கட்டுப்படாமல் மனச்சாய்வுடன் செயல்பட்டு மேல்முறையீட்டாளரான அர்ஜூன் பண்டிட் ராவ்-க்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்பட்டுள்ளது என்றும், மேலும் வேட்பு மனுவை குறித்த காலத்திற்குள் தாக்கல் செய்து விட்டதாக அர்ஜூன் பண்டிட் ராவ் கூறும் கூற்று பொய் என்பதை தேர்தல் அலுவலர் தனது குறுக்கு விசாரணையில் வழங்கிய சாட்சியம் தெளிவாக்குகிறது என்றும் கூறி, ஷாஃபி வழக்கின் தீர்ப்பை ஒதுக்கித்தள்ளி, அன்வர் வழக்கின் தீர்ப்பை பின்பற்றி, அர்ஜூன் பண்டிட் ராவ்-இன் தேர்தலை இல்லாநிலையது என்று பம்பாய்

உயர் நீதிமன்றம் வழங்கி தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்து, அர்ஜூன் பண்டிட் ராவ் தாக்கல் செய்த இந்த மேல் முறையீட்டை ரூபாய் 1 இலட்சம் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப் புரைத்தது. [This court did not find any error in the judgement of the High Court in the present case. The respondents requested several times to the Election Commission to issue the requisite certificate under Section 65B(4) of Evidence Act 1872. Even the order was made by the court directing the Election Commission to produce such certificate, still the Election Commission acted in a biased manner and favoured the Appellant. Apart from this, the High Court based its judgement after cross-examining the RO, Smt. Mutha which clearly falsifies the contention of the Returning Candidate that the nomination papers were filed by him on time.]

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக முந்தைய ஆண்டு வினாத்தாள்கள்

– பார்வைக்கு

[Previous Year Question Papers of Tamil Nadu Dr.Ambedkar Law University]

- For Reference

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்

[Law University Question Papers]

மூன்றாண்டு சட்டக்கல்வி

B.L. DEGREE EXAMINATION, MAY 2015.

Fourth Semester / Second year

LAW OF EVIDENCE

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்

1. Law of Evidence is "Lex Fori" - Comment. Does the Law of Evidence apply to all proceedings?

"சான்றியல் சட்டம் வழக்காடும் நாட்டின் சட்டம் ஆகும்" – இதனை விமர்சனம் செய்க. சான்றியல் சட்ட விதிகள் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருந்துமா?

2. When do facts not otherwise relevant become relevant?

எப்பொழுது தொடர்பில்லாத பொருண்மைகளும் தொடர்புடைய சங்கதிகளாகின்றன?

3. How the accused can be convicted on the basis of circumstantial evidence? Discuss the liability in the light of decided cases?

சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் எவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படலாம்? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு பொறுப்புரிமையை விவாதிக்க.

4. "An accomplice is unworthy of credit unless he is corroborated in material particulars" - Comment.

"முக்கியமான விபரங்களில் உறுதியூட்டம் கிடைக்கப் பெற்றாலன்றி, ஓர் உடன் குற்றவாளி நம்பிக்கைக்கு அருகதையற்றவராவார்". விமர்சிக்கவும்.

5. What is estoppel? Explain the different kinds of estoppel.

முரண்தடை என்றால் என்ன? முரண்தடையின் வகைகளை விளக்குக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவன வற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

a) Admissions and Confessions
ஏற்புரை மற்றும் குற்ற ஏற்புரை

b) Best Evidence Rule
தலைசிறந்த சாட்சி விதி

c) Chief Examination
முதன்மை விசாரணை

d) Dying declaration
மரண வாக்குமூலம்

e) Expert Evidence
வல்லுனர் சாட்சியம்

f) Facts in issue
தீர்வு தரு பொருண்மை

g) Court questions
நீதிமன்ற வினா

h) Hostile witness
பிறழ் சான்றுரைஞர்

i) Impeaching credit of witness
சான்றுறுரைஞரின் நாணயத்தை தாக்குதல்

j) Electronic Record and digital signature
மின்னியல் ஆவணம் மற்றும் இலக்கக் கையெழுத்து

PART C - (4 X 4 = 48 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A is tried for murder. During the trial, evidence of bad character is produced by the prosecution against the accused. State the admissibility of bad character evidence.

அ என்பவர் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார். விசாரணையின் பொழுது அரசு தரப்பு அக்கு எதிரா தீய குண இயல்பு உடையவர் என்ற சான்றினை அளிக்கிறது. தீய குண இயல்பு சான்று ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்பதை முடிவு செய்க.

8. A agrees in writing to sell a horse to B for Rs.10000 (or) Rs. 15000/-. A intends to give evidence that he agreed to sell it for Rs.15000/- only. Will he be allowed to do so?

ஒரு குதிரையை ரூபாய் 10000/– அல்லது 15000/–க்கு விற்க அ என்பவர் எழுத்து மூலம் இசைகிறார். ரூபாய் 15000/–க்கு விற்கவே இசைந்ததாக அ சான்று அளிக்க விழைகிறார். அவ்வாறு சான்று அளிக்க அ அனுமதிக்கப்படுவாரா?

9. A intentionally and falsely leads B to believe that certain lands belong to A and thereby induces B to buy the land. the land afterwards becomes A's property. Will A be permitted to dispute the earlier sale?

அ என்பவர் வேண்டுமென்றே ஏமாற்றுகின்ற விதமாக குறிப்பிட்ட சொத்து தன்னுடையது என கூறி ஆ வினை வாங்க செய்கிறார். பின்னாளில் உண்மையாகவே அது அவின் சொத்தாகிறது. அ தன்னுடைய முந்தைய விற்பனை செல்லாது என வழக்கிட அனுமதிக்கப்படலாமா?

10. A sues B for money due on a bond. The execution of bond is admitted. but B says it was obtained by fraud, which A denies. On whom does the burden of proof lie?

அ என்பவர் ஓர் கடனுறுதிச் சீட்டின் மீதான பணம் வேண்டி ஆ–வின் மீது வழக்கு தொடுக்கிறார். பணம் பெற எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் உண்டு என ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அது ஏமாற்றி பெறப்பட்டது என ஆ கூறுகிறார். இதில் நிரூபிக்கும் சுமை யாரைச் சார்ந்தது.

11. On 1st January 2014, A the husband, who was married to B, died. On 10th February 2014 B married C. On 30th September, a child was born. Discuss the legitimacy of the child.

2014ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதி ஆ–வின் கணவர் அ என்பவர் இறந்துவிடுகிறார். 204 பிப்ரவரி மாதம் 10–ஆம் தேதி ஆ மீண்டும் இ என்பவரை மணம் புரிகிறார். செப்டம்பர் மாதம் 30ம் தேதி ஓர் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தையின் சட்டப்பூர்வ தந்தை யார் என்பதை விவாதிக்கவும்.

12. A was charged with murder and he is in police custody. A makes a statement which leads to discovery of material objects. Decide the relevancy of the statement.

அ என்பவர் மீது கொலை குற்றச்சாட்டு வனையப்பட்டு உள்ளது. அவர் காவலர் பாதுகாப்பில் இருக்கிறார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு அதிலிருந்து முக்கிய பொருட்கள் கைப்பற்றப் படுகின்றன. வாக்குமூலத்தின் தொடர்புடைய தன்மையை முடிவு செய்க.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016.

Second Year / Fourth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்

1. Explain "The Golden rules of evidence".
   சான்றுச்சட்ட "பொன் விதிகளை" விவரிக்கவும்.
2. Explain the circumstances in which oral evidence is admissible to clear up ambiguities in documents.

ஆவணங்களின் எழும் ஐயப்பாடுகளை அகற்றுவதற்கு வாய்மொழிச் சான்று எச்சூழ்நிலைகளில் அனுமதிக்கப்படுகிறது என்பதை விவரிக்கவும்.

3. Which documents do not need formal proof? Explain proper custody regarding electronic records.
தக்க முறையில் மெய்ப்பிக்க தேவையில்லாத ஆவணங்கள் யாவை? மின் ஆவணங்களைப் பொறுத்த மட்டில் உரிய பாதுகாப்பில் இருப்பதை விளக்கவும்.

4. State and explain the exceptions to the general rule that opinions of third parties are irrelevant.
மூன்றாவது நபர்களின் கருத்துக்கள் தொடர்பற்றது என்கிற பொதுவான விதிக்குண்டான விலக்குகளை எடுத்துக் கூறி விளக்கவும்.

5. Explain the nature of privileged communications under the Indian Evidence Act.
இந்திய சான்றுச் சட்டத்தின் கீழ் காப்புடைய செய்திகளின் தன்மையை விளக்கவும்.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Alibi
வேற்றிடவாதம்

(b) Burden of proof
மெய்ப்பிக்கும் சுமை

(c) Confession
குற்றயேற்புரை

(d) De Novo Trial
புத்துரு விசாரணை

(e) Estoppel
முரண் தடை

(f) Conclusive proof
அறுதிச் சான்று

(g) Patent ambiguity
வெளிப்படை பொருள் மயக்கம்

(h) Circumstantial evidence
சூழ்நிலைச் சான்று

(i) Re-examination
மறு விசாரணை

(j) Judgment in rem
மன்று கட்டிய தீர்ப்பு

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி, தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The question is, whether a given road is a public way or not, in which a statement of A, a deceased head man of the village saying that it is a public way is relevant or not?

ஒரு குறிப்பிட்ட சாலை பொது வழியா என்ற விசாரணையில் அது ஒரு பொதுவழி என்று இறந்து விட்ட கிராம நிர்வாகியின் வாக்குமூலம் தொடர்புடையது ஆகுமா?

8. In a criminal case the death by poisoning is the main charge against the accused; whether the fact, before the death of the deceased, the accused procured poison similar to that which was administered to the deceased, is relevant?

ஓர் குற்ற வழக்கில் விஷம் கொடுத்து கொலை செய்தார் என்பது முக்கிய குற்றச்சாட்டாக கூறப்படுகையில் குற்றவாளி, இறந்தவருக்கு கொடுக்கப்பட்டதைப் போன்ற ஓர் விஷத்தினை அவரின் இறப்புக்கு முன்னதாக வாங்கினார் என்பது தொடர்புடைய சங்கதி ஆகுமா?

9. 'A' is tried for the murder of 'B' by intentionally shooting him dead. The fact is that 'A' has shot 'B' on other occasions. Explain the relevancy of the fact.

'B' யைக் கொல்ல வேண்டுமென்ற உட்கருத்துடன் அவரைச் சுட்டதாக 'A' யின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. 'A' இதற்கு முன்பு 'B' யைச் சுட்டுள்ளார் என்பது நிகழ்மையாகும். இந்நிகழ்மையின் தொடர்புடைமையினை விளக்குக.

10. A prosecution witness was asked whether he had quarrelled with the family of the accused. He denied it. Whether evidence can be adduced to prove the fact of the quarrel. Decide.

குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பத்திற்கு எதிராக தகராறு ஏதேனும் செய்தாரா என அரசுத் தரப்பு சான்றுரைஞரிடம் கேட்கப்பட்டது. சான்றுரைஞர் அதனை மறுத்தார். தகராறு நடந்தது பற்றிய நிகழ்மை குறித்து அதனை மெய்பிக்க சான்றளிக்கலாமா? முடிவு செய்க.

11. The wife saw her husband commits a murder. She refuses to give evidence. Can she be compelled to give evidence against her husband?

தன் கணவர் கொலை செய்வதை மனைவி பார்க்கிறார். தன் கணவருக்கு எதிராக சான்று அளிக்க மறுக்கிறார். அவரை கணவருக்கு எதிராக சான்றுரைக்க கட்டாயப்படுத்த முடியுமா?

12. Kumar, a lunatic declares that Balan stabbed him before his death. Is Kumar's dying declaration admissible? Decide.

குமார் என்ற பித்தர் தான் இறக்கும் போது பாலன் என்பவர் தன்னைக் குத்தியதாகக் கூறினார். குமாரின் மரண வாக்கு மூலம் ஏற்புடையதாகுமா என்று முடிவு செய்க.

B.L./LL.B. DEGREE EXAMINATION, MAY 2017.

Second Year / Fourth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்

1. Define Evidence. What are the different kinds of Evidence?
சான்று என்பதை வரையறு. சான்றின் பல்வேறு வகைகள் யாவை?

2. What do you understand by Burden of Proof? When does the burden of proof shift to the other parties?
மெய்ப்பிக்கும் சுமை என்றால் என்ன? எப்போது மெய்ப்பிக்கும் சுமையானது மற்றொரு நபர் மீது மாற்றியளிக்கப்படுகிறது?

3. Who is an expert? What are the matters fas which opinion of experts may be obtained by the court?
வல்லுநர் என்பவர் யார்? எந்தச் சூழ்நிலைகளில் வல்லுநரின் கருத்தை நீதிமன்றத்தால் பெற முடியும்?

4. What do you understand by a competent witness? Can a wife be compelled to give evidence against her husband in a civil or criminal case?
தகுதியுடைய சான்றுரைஞர்கள் என்பதை எவ்வாறு புரிந்துள்ளீர்கள்? மனைவி அவரது கணவருக்கு எதிராக குற்றவியல் மற்றும் குடிமையியல் வழக்கில் சான்று அளிக்கக் கட்டாயப்படுத்த முடியுமா?

5. What is Dying Declaration under clause 1 of Section 32? How does it differ from English Law?
பிரிவு 32(1)–ன் கீழ் மரண வாக்குமூலம் என்றால் என்ன? ஆங்கிலச் சட்டத்திலிருந்து இந்தியச் சட்டம் எவ்வாறு வேறுபடும்?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

   (a) Accomplice.
   உடன் குற்றவாளி

   (b) Facts in issue.
   தீர்வுதரு நிகழ்மைகள்

   (c) Confusion while in Police custody.
   காவல்துறை பாதுகாப்பில் இருக்கும் பொழுது கூறப்படும் குற்ற ஏற்புரை

   (d) Disproved.
   பொய்ப்பிக்கப்பட்டது.

   (e) Estoppel.
   முரண்தடை

   (f) May Presume.
   துணிபிடலாம்

   (g) Cross Examination.

குறுக்கு விசாரணை

(h) Hostile witness
பிறழ் சான்றுரைஞர்

(i) Refreshing Memory
நினைவைப் புதுப்பித்தல்

(j) Judgment in personam
தனிமுகத் தீர்ப்புரை

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The question is whether 'A' robbed 'B'. The fact is shortly before the robbery, 'B' went to a fair with money in his possession and that he showed it, or mentioned the fact that he had the money to third persons. Whether the fact is relevant, if so how is it relevant?

'A' என்பவர் 'B' என்பவரைக் கொள்ளையடித்தாரா என்பது வினாவாகும். கொள்ளைக்குச் சற்று முன்னர், பணத்துடன் 'B' பொருட்காட்சிக்குச் சென்றது மட்டுமன்றி பணம் வைத்திருப்பதை மூன்றாமவர்களிடம் காட்டி உள்ளார். இது தொடர்புடைய நிகழ்மையா? அப்படியானால் எவ்வாறு தொடர்புடையது?

8. The question is whether 'A' committed a crime. The fact, is that 'A' absconded after receiving a letter warning him that inquiry was being made for the criminal. Whether the contents of the letter are relevant?

'A' என்பவர் ஒரு குற்றம் புரிந்துள்ளாரா, என்பது வினாவாகும். 'A' தான் குற்றவாளியென விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என்ற எச்சரிக்கைக் கடிதத்தைப் பெற்றவுடன் தலைமறைவானார். அக்கடிதத்தின் உள்ளடக்கம் தொடர்புடையதா?

9. 'A' is charged for shooting 'at 'B' with an intention to kill him. Whether 'A' 's intent may be proved by the fact of 'A' having previously shot at 'B'.

'A' என்பவர் 'B' யைக் கொலை செய்யும் எண்ணத்தோடு சுட்டார் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ளார். 'A' ஏற்கனவே 'B' யைச் சுட்டுள்ளார் என்ற நிகழ்வை 'A'–யின் குற்ற மனத்தை மெய்ப்பிக்கத் துணை புரியுமா?

10. A witness is asked whether he was dismissed from service dishonesty and he denies it. Evidence is offered to show that he was dismissed for dishonesty. Discuss the admissibility of such evidence.

ஒரு சாட்சியர் அவர் மோசடி குற்றம் இழைத்தமைக்காகப் பணியிலிருந்து நீக்கப்பட்டாரா என்று கேட்கப்படுகிறது. அவர் இல்லை என்று மறுக்கிறார். மோசடி இழைத்தமைக்காக அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்பதைக் காட்ட சான்றளிக்க முனைவு செய்யப்பட்டது. அந்தச் சான்று – அனுமதிக்கத்தக்கதா என்பதை விவரிக்கவும்.

11. 'A' sues 'B' for the price of goods sold and delivered to 'B'. 'C' says that 'A'

delivered the goods to 'B'. Evidence is offered to show that, on a previous occasion, he said that he had not delivered the goods to 'B'. Is the evidence of 'C' admissible?

'A' என்பவர் தான் 'B' க்கு விற்ற பொருட்களின் விற்பனைத் தொகையைப் பெற வழக் கிடுகிறார். 'C' என்பவர் 'A', 'B' யிடம் பொருட்களை வழங்கிவிட்டார் என்று கூறுகிறார். முந்தைய நிகழ்வு ஒன்றில் 'B' யிடம் 'A' பொருட்களை வழங்கவில்லை என சான்றூட்டப் படுகிறது. 'C'–யின் சான்றுரை ஏற்றுக் கொள்ளத் தகுந்ததா?

12. 'A' undertakes to collect rents for 'B'. 'B' sues 'A' for not collecting rent due from 'C' to 'B'. 'A' denies that rent was due from 'C' to 'B'. Shall the statement of 'C' that he owed rent to 'B' is admissible.

'B' என்பவரது வாடகைகளை வசூலிக்கும் பொறுப்பை 'A' என்பவர் ஏற்றுக் கொள்கிறார். 'C' என்பவரிடமிருந்து 'B' க்கு வர வேண்டிய வாடகையை வசூலிக்காததற்காக 'B', 'A'யின் மீது வழக்குத் தொடர்கிறார். வாடகையானது 'C' யிடமிருந்து 'B' க்கு வர வேண்டியதில்லை என 'A' மறுக்கிறார். 'B' க்கு வாடகை தர பொறுப்புடையவர் என்ற 'C' யின் வாக்குமூலம் ஏற்புடையதாகுமா?

LL.B./B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017.

Second Year / Fourth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்

1. "The rules of evidence are the same in Civil and Criminal proceedings". Examine this statement with its exceptions, if any.

   "உரிமையியல் மற்றும் குற்றவியல் செயல் முறைகளில் சான்று விதிகள் ஒரே இயல்புடைய தாகும்." – இக்கூற்றிற்கு விதிவிலக்குகள் இருப்பின் அவைகளுடன் ஆராய்க.

2. Explain the principle of Res Gestae. Refer to decided cases.

   ஒன்றிய செயல் நெறிமுறைகளை விளக்குக. முடிவுற்ற வழக்குகளைக் குறிப்பிடுக.

3. What is a dying declaration? If a person making a dying declaration happens to live, can the declaration be admissible in evidence.

   "மரண வாக்குமூலம்" என்பதென்ன? மரண வாக்குமூலம் கொடுத்தவர் இறக்கவில்லை யெனில், அவர் அளித்த வாக்குமூலம் சான்றாக ஏற்கப்படுமா?

4. What is primary evidence and secondary evidence? Under what circumstances secondary evidence can be produced?

   தலைநிலைச் சான்று மற்றும் சார்நிலைச் சான்று என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் சார்நிலைச் சான்று முன்னிடப்படலாம்?

5. Explain the different categories of privileged communications and explain

the scope of their privileges.

காப்புடைய சான்றுகளின் வகைகளைக் கூறி, அவைகளின் காப்புடைமையின் நோக்கெல்லையை விவரிக்கவும்.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Accomplice
உடன் குற்றவாளி

(b) Hearsay evidence
செவிவழிச் சான்று

(c) Cross-Examination
குறுக்கு விசாரணை

(d) Documentary evidence
ஆவணச் சான்று

(e) Exclusion of oral evidence by documentary evidence
வாய்மொழிச் சான்று, ஆவணச் சான்றால் விலக்கப்படுதல்

(f) Facts otherwise relevant
பிற வகையில் தொடர்புடைய நிகழ்மைகள்

(g) Refreshing memory
நினைவைப் புதுப்பித்தல்

(h) Doctrine of Corpus
குற்றக் கூறுகளின் தொகுதிக் கோட்பாடு

(i) Identification parade
அடையாள அணி வகுப்பு

(j) Judicial notice.
நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டியன.

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A is stabbed to death by B. C is an eye witness to this occurrence. C informs this to his friend D. Decide the admissibility of the oral evidence given by C at the time of trial of B for murder.

B என்பவர் A என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்கிறார். இந்த நிகழ்வை C என்பவர் நேரில் பார்த்தார். இந்த நிகழ்வை C என்பவர் D என்பவரிடம் தெரிவிக்கிறார். B என்பவர் A என்பவரைக் கொன்ற வழக்கில் C என்பவர் கொடுக்கின்ற வாய்மொழிச் சான்று ஏற்புடையதா?

8. An accused person makes the following statement to the police, "I will show you where I have hidden my share from the bank robbery". Discuss the admissibility of this statement.

குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர் காவல் அலுவலரிடம் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் தனது பங்கை மறைத்து வைத்துள்ள இடத்தை காவல் அலுவலரிடம் காட்டுகிறேன் எனக் கூறுகிறார். இக்கூற்று சான்றாக ஏற்றுக் கொள்ளத்தக்கதா?

9. 'A', an accused of murder, claims that he was insane and did not know the nature of the act. State whether the burden of proving insanity is on the accused person or on the prosecution?

'A' என்ற கொலைக் குற்றவாளி குற்றம் நடந்த சமயம் தான் பித்து நிலையில் இருந்ததால் தன்னுடைய செயலின் தன்மையை அறிந்திருக்கவில்லை எனக் கூறுகிறார். பித்து நிலைமில் இருந்தார் என்பதை மெய்ப்பிக்கும் சுமை எதிரியைச் சாருமா அல்லது வழக்கீட்டுத் தரப்பினரைச் சாருமா?

10. The question is whether A has been guilty of cruelty towards B, his wife. Whether the expression of their feeling towards each other shortly before and after the alleged ciuelty are relevant?

A என்கிற தன் மனைவியிடம் A என்பவர் வன்கொடுமைக் குற்றம் புரிந்தாரா என்பது வினாவாகும். சொல்லப்படும் கொடுமைக்கு முன்பும், பின்பும் ஒருவருக்கு ஒருவர் வெளிப் படுத்தும் உணர்வுகள் தொடர்புடையதா?

11. A has proposed to prove, by a copy, the contents of a document said to be lost. State the method of proof prescribed by the law to prove the contents of the document.

'A' என்பவர் தொலைந்ததாகக் கூறப்படும் ஆவணமொன்றின் உள்ளடக்கத்தை அதன் படி வாயிலாக மெய்ப்பிக்க முனைகிறார். ஆவணத்தின் உள்ளடக்கத்தை மெய்ப்பிக்க சட்டத்தால் வரையறுக்கப்பட்ட முறையினைக் குறிப்பிடவும்.

12. The question is whether A and B were married. The fact is that they were usually received and treated by their friends as husband and wife. Explain is this a relevant fact?

A–வுக்கும், B–யிற்கும் இடையே திருமணம் நடைபெற்றதா என்பது வழக்கிடை வினா. அவர்கள் வழக்கமாகவே அவர்களுடைய நண்பர்களால் கணவனும், மனைவியுமாக வரவேற்று நடத்தப்பட்டனர். இந்நிகழ்மை தொடர்புடை நிகழ்மையா?

B.L./LL.B. DEGREE EXAMINATION, MAY 2018.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the followi ng not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்

1. Explain the significance of 'May presume', 'Shall presume' and 'Conclusive

proof' in the Indian Evidence Act.

இந்திய சான்று சட்டத்தில் காணப்படும் 'துணியிடலாம்', 'துணியிடல் வேண்டும்' மற்றும் 'அறுது துணிபு' எனும் சொற்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

2. State the essentials of a valid 'Dying Declaration'. Discuss its evidentiary values.

ஒரு செல்லத்தகு மரண வாக்குமூலத்தின் முக்கியக் கூறுகளை கூறுக. அதன் சான்று மதிப்பினை ஆராய்க.

3. "Oral evidence cannot be adduced to vary the contents of a document" - Elucidate and state the exceptions, if any.

"ஆவணமொன்றின் உள்ளடக்கத்தை மாற்றுவதற்கு வாய்மொழிச் சான்றை ஏற்க முடியாது" – இக்கூற்றினை எடுத்தியம்பி அதற்கான விதிவிலக்குகளைக் கூறுக.

4. What is meant by Burden of proof? It is said that the Burden of proof may shift in the course of a suit or prosecution. Explain with illustrations.

மெய்ப்பிக்கும் சுமை என்றால் என்ன? உரிமையியல் வழக்கு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் மெய்ப்பிக்கும் சுமை இடம் மாறலாம் என்ற கூற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

5. Explain in detail the privileged communications under the Indian Evidence Act.

இந்திய சான்றுச் சட்டத்தின் கீழ் காப்புடைச் செய்திகளைப் பற்றி விவரமாக விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Res gestae
ஒன்றியச் செயல்

(b) Hostile witness
பிறழ் சான்றுரைஞர்

(c) Relevancy of character
குணத் தொடர்புடைமை

(d) Plea of Alibi
வேற்றிட வாதம்

(e) Leading question
விடை அமை வினா

(f) Secondary evidence
சார்நிலைச் சான்று

(g) Expert opinion
வல்லுநர் கருத்துரை

(h) Res Judicata
முன் தீர்ப்புத் தடை

(i) Estoppel

முரண் தடை

(j) Best evidence rule.
சிறந்த சான்று விதி

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The question is whether A and B were married. The fact is that they were usually received and treated by their friends as husband and wife. Explain the relevant facts.

A என்பவருக்கும், B என்பவருக்கும் இடையே திருமணம் ஆகியுள்ளதா என்பது வழக்கிடை வினா. அவர்கள் வழக்கமாகவே அவர்களுடைய நண்பர்களால் கணவனும் மனைவியுமாக வரவேற்று நடத்தப்பட்டனர். தொடர்புடைய நிகழ்மைகளை விளக்குக.

8. A who is accused of murder alleges that by grave and sudden provocation, he was deprived of the power of self control. On whom does the Burden of proof lie?

கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட A என்பவர் திடீரென்று கடுமையாக ஆத்திர மூட்டப்பட்டதால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறனை இழந்து விட்டதாகச் சொல்கிறார். அதை மெய்ப்பிக்கும் சுமை யாரைச் சார்ந்தது?

9. A prosecution witness was asked whether he had quarrelled with the family of the accused but he denied it. Whether evidence can be adduced to pro ve the fact of the quarrel?

குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்பத்திற்கு எதிராக தகராறு ஏதேனும் செய்தாரா என அரசுத் தரப்பு சான்றுரைஞரிடம் கேட்கப்பட்டது. சான்றுரைஞர் அதனை மறுத்தார். தகராறு நடந்தது பற்றிய நிகழ்மை குறித்து அதனை மெய்ப்பிக்க சான்றளிக்க இயலுமா?

10. A is on his trial for the murder of C. There is evidence to show that C was murdered by A and B and that B said A and I murdered C. Is the statement admissible?

C என்பவரைக் கொலை செய்ததாக A மீது ஒரு குற்ற வழக்கு விசாரணையில் உள்ளது. A மற்றும் B சேர்ந்து அக்குற்றத்தைச் செய்ததாக சான்று அமையும் நேர்வில் B தானும் A வும் சேர்ந்த C-யைக் கொலை செய்தோம் எனக்கூறிய வாக்குமூலம் சான்றாக்கப்படுகிறது. இவ்வாக்கு மூலம் ஏற்புடையதாகுமோ?

11. 'A' sues 'B' for the money on a bond. The execution of the bond is admitted. But 'B' says that the bond is obtained by fraud, which 'A' denies. State on whom does the burden of proof lie?

பணஉறுதிமுறி ஒன்றின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய பணத்திற்காக 'B' மீது 'A' வழக்காடுகின்றார். பணஉறுதிமுறி கொடுக்கப்பட்டதை ஒப்புக் கொண்ட 'B' அவ்வாவணம் மோசடியால் பெறப்பட்டதாக கூறுகின்றார். இதனை 'A' மறுக்கின்றார். மெய்ப்பிக்கும் சுமை

யார் மீது உள்ளது என்பதைக் கூறுக.

12. 'A' is tried for the murder of 'B' by intentionally shooting him dead. The fact is that 'A' on earlier occasion shot 'Br. State whether this fact can be treated as a relevant fact.

'B' யைக் கொல்ல வேண்டும் என்ற உட்கருத்துடன் 'A' அவரைச் சுட்டுக் கொன்றார் என்பதற்காக 'A' யின் மீது வழக்கிடப்பட்டது. 'A' யின் உட்கருத்தை மெய்ப்பிப்பதற்காக அவர் இதற்கு முன்பு 'B' யை பார்த்து சுட்டிருக்கின்றார் என்ற நிகழ்மை தொடர்புடைய தீர்வுதரு நிகழ்மை ஆகுமா என்பதனை விளக்குக.

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.L./LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the followi ng not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்

1. Can the court convict an accused only on the basis of the circumstantial evidence? Discuss with the decided cases.

சூழ்நிலைச் சான்றினை மட்டும் கருத்தில் கொண்டு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட நபரை தண்டனைக்கு உட்படுத்தலாமா? நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்கவும்.

2. "The rule of evidence are in general the same-in Civil and Criminal proceedings". Comment and mention the important exceptions to the statement.

"குற்றவியல் வழக்கு என்றாலும் உரிமையியல் வழக்கு என்றாலும் நீதிமன்ற நடவடிக்கை ஒரே சான்றுச் சட்டத்தை வழிமுறையாகக் கொண்டே நடத்தப்படுகிறது" – விமர்சிக்கவும். முக்கிய விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.

3. All admissible facts are relevant but all "relevant facts are not admissible" — Comment.

"அனைத்து ஏற்புடைய நிகழ்மைகளும் தீர்வு தருபவைகள் ஆகும். ஆனால் அனைத்து தீர்வுதரு நிகழ்மைகளும் நீதிமன்றத்தின் முன்னர் ஏற்புடையதல்ல" – விமர்சிக்கவும்.

4. Discus the law of conspiracy as laid down in the Evidence Act.

சான்றுச் சட்டத்தில் கூறியுள்ளபடி சதிக் குற்றம் பற்றிய விதிகளை விவாதிக்கவும்.

5. What do you mean by confession? State the provisions of the Indian Evidence Act as to confession?

குற்ற ஏற்புரை என்பதனால் நீங்கள் அறிவது என்ன? குற்ற ஏற்புரை குறித்து இந்தியச் சான்றுச் சட்டத்தின் வகைமுறைகளை கூறுக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Dying Declaration
மரண வாக்குமூலம்

(b) Res-Judicata
முன் தீர்ப்புத் தடை

(c) Judgement in Personam
நபர் சுட்டிய தீர்ப்புரை

(d) Hearsay Evidence
கேள்விநிலைச் சான்று

(e) Documentary Evidence
ஆவணச் சான்று

(f) Secondary Evidence
சார்நிலைச் சான்று

(g) Public Documents
பொது ஆவணங்கள்

(h) Latent Ambiguity
உட்கிடைப் பொருள் மயக்கம்

(i) Deo Narain V. State of UP (AIR 1973 S.C)
டீயோ நாராயண் / எதிர் / உத்திரப் பிரதேச அரசு.

(j) Section 113 A of the Indian Evidence Act.
இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 113A.

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A married woman committed suicide within a period of seven years from the date of her marriage. Her mother-in-law without the knowledge of her husband subjected her to cruelty. Can there be a presumption as to abetment of suicide by husband?

திருமணமான ஏழு வருடங்களுக்குள் ஒரு பெண் தற்கொலை செய்து கொள்கிறார். அவருடைய கணவனின் தாய், கணவனுக்குத் தெரியாமல் அவளை துன்புறுத்தியுள்ளார். இச்சூழலில் அந்த திருமணமான பெண்ணின் தற்கொலைக்கு கணவனும் உடந்தை என துணியிட இயலுமா?

8. The question between 'A' and 'B' is'whether a certain document is forged or not. 'A' affirms that it is genuine and 'B1 affirms that it is forged. Whether 'A' can prove a statement by himself that the document is genuine and by 'B' that the document is forged?

'A' வுக்கும், 'B' க்கும் இடையிலான கேள்வி என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட ஆவணம் உண்மையான ஆவணமா? இல்லை பொய்யாவணமா என்பதாகும். அந்த ஆவணம் உண்மையானதே என 'A' வும், பொய்யானது என 'B' யும் உறுதியாகக் கூறுகின்றனர். தங்களது வாக்குமூலம் மெய்ப்பிக்க இயலுமா?

9. 'A' is accused before the court of session of attempt to commit murder of a police officer whilst on his trial before 'B', a session judge. Whether 'B' may be examined as to what occurred?

'B' என்ற ஓர் அமர்வு நீதிபதியின் முன் 'A' என்ற நபர் ஒரு காவல் அலுவலரைக் கொலை செய்ய முயன்ற வழக்கு நடைபெற்றது. நீதிமன்றத்தில் நடைபெற்றது என்ன என்பது குறித்து 'B'விடம் விசாரிக்க முடியுமா?

10. 'A' desires a court to give judgement that he is entitled to certain land in the possession of 'B', by reason of facts which he averts and which 'B' denies to be true. Who must prove the existence of facts.

A–வின் உடைமையிலுள்ள நிலம் தனக்கு உரிமையானது என்றும், நீதிமன்றம் தனக்கு சாதகமாக தீர்ப்பு தர வேண்டும் என்றும் A விரும்புகிறார். அதற்கு காரணங்களாக சில பொருண்மைகளை B உறுதியாகக் கூறுகிறார். ஆனால் 'B'மறுக்கிறார். இந்நிகழ்மைகளை மெய்ப்பிக்க வேண்டியக் கடமை யாருடையது?

11. 'A' is accused for murder of 'B'. 'B' knew that "A" had murdered 'C' previously and 'B' tried to extort money from 'A' by threatening to make his knowledge to police. Is this fact is relevant?

'B' யைக் கொலை செய்ததாக 'A' குற்றம் சுமத்தப்படுகிறார். 'C' யை முன்னர் 'A' கொலை செய்தது 'B' க்கு தெரியும். 'B' தனக்குத் தெரிந்த இந்த செய்தியை காவலருக்குத் தெரியப்படுத்த இருப்பதாக மிரட்டி 'A' யிடம் இருந்து பணம் பறிக்க முயற்சி செய்திருக்கிறார். இது தொடர்புடைய நிகழ்மையா?

12. A is tried for having committed a crime at Calcutta on a particular day. He leads in evidence to the fact that on that day he was at Lahore. Is it relevant?

கல்கத்தாவில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குற்றம் செய்ததாக 'A' மீது வழக்கு விசாரணையில் உள்ளது. அவர் தான் அன்றைய தினம் லாகூரில் இருந்ததை சான்றுரைக்கச் சாட்சியம் கொணர்கிறார். இது ஏற்புடையதாகுமா?

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For the candidates admitted during 2017-2018)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, MAY 2019.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Hearsay Evidence is No Evidence" - Discuss.
கேள்விநிலைச் சாட்சியம் சான்றுரையே ஆகாது – விவாதி.

2. "Facts judicially noticeable need not to be proved" — Explain with list of such facts.

நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத்தக்க பொருண்மைகளை நிரூபிக்க வேண்டிய அவசிய மில்லை. அவ்வாறான பட்டியலிட்ட பொருண்மைகளை விளக்குக.

3. State the essentials of a valid dying declaration. Discuss the evidentiary value.

செல்லத்தக்க மரண வாக்குமூலத்தின் முக்கிய ஆக்கக்கூறுகளைக் கூறுக. அதன் சாட்சிய மதிப்பினை விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the law of conspiracy as laid down in the Evidence Act.
சாட்சிய சட்டத்தில் கூறியுள்ளபடி சதிக் குற்றம் பற்றிய விதிகளை விவாதிக்கவும்.

5. Point out the distinction between Civil and Criminal Evidence.
உரிமையியல் வழக்கு மற்றும் குற்றவியல் வழக்குகளில் சாட்சியம் அளிப்பதில் உள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டுக.

6. Write a essay on: Amendments to the Indian Evidence Act, 1872 made by the Criminal Law Amendment, Act, 2013.

குற்றவியல் திருத்தச் சட்டம் 2013 ஆனது 1872 வருட இந்திய சாட்சிய சட்டத்தில் ஏற்படுத்திய திருத்தங்கள் குறித்து கட்டுரை வரைக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Alibi.
வேற்றிட வாதம்

(b) Scandalous question.
அவதூறான வினாக்கள்

(c) De novo trial.
புத்துரு விசாரணை

(d) Woolmington /Vs./ — Director of Public Prosecution.
ஊல்மிங்கடன் / எதிர் / இயக்குநர், குற்றவழக்கு தொடர்வுதுறை.

(e) Estoppel by law's.
சட்ட விவரங்களின் வழி முரண்தடை.

(f) M.C. Verghese /Vs./ T.J. Ponnan.

எம்.சி. வர்கீஸ் / எதிர் / டி.ஜெ. பொன்னன்

(g) Court Question.

நீதிமன்ற வினாக்கள்.

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' desires a court to give judgement that he is entitled to certain land in the possession of B , by reason of facts which he asserts and which B denies to be true. Who must prove the existence of facts?

'B' யின் உடமையிலுள்ள நிலம் தனக்கு உரிமையானது என்றும், நீதிமன்றம் தனக்கு சாதகமாக தீர்ப்பு தர வேண்டும் என்றும், 'A' விரும்புகிறார். அதற்கு காரணங்களாக சில பொருண்மைகளை 'A' உறுதியாகக் கூறுகிறார். ஆயினும் 'B' அவற்றை முழுமையாக மறுக்கிறார். இப்பொருண்மைகளை நிரூபிக்க வேண்டிய கடமை யாருடையது?

9. An accused informed Advocate "A", the he murdered "X" and requested the Advocate to conduct his case. Later he changed his case to another Advocate. "A" wants to disclose this communication to the Court. Can he do so?

குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவர், வழக்கறிஞரிடம் ('A' விடம்) தான் 'X' என்பவரை கொலை செய்ததாக சொன்னார். மேலும் அந்த வழக்கறிஞரை தன் வழக்கை நடத்துமாறு கேட்டுக் கொண்டார். பிறகு தன் வழக்கை வேறு ஒரு வழக்கறிஞரிடம் மாற்றினார். 'A' இச் செய்தியை நீதிமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டினார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

10. 'A' is tried for the murder of 'B' by Poison. The fact is that before the death of 'B', A procured similar poison which was administered to B. Is it relevant?

'B' என்பவரை நஞ்சிட்டு கொலை செய்ததாக 'A' என்பவர் மீது விசாரணை நடைபெறுகிறது. 'B' மரணமடைவதற்கு முன்பு அவருக்கு ஊட்டப்பட்டது போன்ற நஞ்சினை 'A' பெற்றார். இது தொடர்புடையதா?

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, NOVEMBER 2019.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. State the circumstances in which statements by persons who cannot be called as witnesses are relevant.

எவ்வித சூழ்நிலைகளில் சாட்சிகளாக அழைக்கப்பட இயலாதவர்களின் வாக்கு மூலங்கள் தொடர்புடையவை என்பதனை எடுத்துரைக்கவும்.

2. Explain the rules for burden of proof.

மெய்ப்பிக்கும் சுமை தொடர்பான விதிகளை விளக்கவும்.

3. "A Conviction can be based on the Uncorroborated testimony of an accomplice" — Discuss.

ஒரு உடன் குற்றவாளியின் உறுதியூட்டப்படாத சாட்சியத்தின் அடிப்படையில் தண்டனை வழங்கலாம் – விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும், ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Distinguish between private documents and public documents.

தனியார் ஆவணங்கள் மற்றும் பொது ஆவணங்கள் – வேறுபடுத்துக.

5. State the relevancy of Judgements in the Indian Evidence Act.

இந்திய சாட்சிய சட்டத்தில், தீர்ப்புகளின் தொடர்புடைமையை எடுத்துக் கூறுக.

6. Explain the competency and compellability of witnesses.

சான்றுரைஞர்களின் தகுதி மற்றும் அவர்களை கட்டாயப்படுத்தப்படுதலும் குறித்து விளக்குக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) NOT PROVED

மெய்ப்பிக்கப்படாதது.

(b) SECONDARY EVIDENCE

இரண்டாம் நிலைச் சான்று

(c) PRESUMPTION OF LAW

சட்டத் துணிபு

(d) CORROBORATIVE EVIDENCE

உறுதியூட்டும் சான்று

(e) Refreshing Memory

நினைவைப் புதுப்பித்தல்

(f) Retracted Confession

மறுக்கப்பட்ட குற்ற ஏற்புரை

(g) Ancient document

தொல்லாவணம்.

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The question is whether 'A' had committed a crime at Calcutta on certain date. The'fact is that on that day 'A' was at Mumbai. State and explain whether this can be treated as a relevant fact.

'A' என்பவர் குறிப்பிட்ட நாளில் கல்கத்தா நகரில் குற்றம் ஒன்றை புரிந்தாரா என்பது கேள்வி. அந்த குறிப்பிட்ட நாளில் அவர் மும்பையில் இருந்தார் என்ற பொருண்மை வழக்குதவு பொருண்மையாக கருத முடியுமா – விளக்குக.

9. 'A' a client, says to 'B' an advocate, "I wish to obtain possession of property by the use of a forged deed on which I request you to Issue". Is this a privileged communication?

'A' என்ற கட்சிக்காரர், 'B' என்ற வழக்குரைஞரிடம் போலியாக உருவாக்கப்பட்ட ஆவணத்தைப் பயன்படுத்தி ஒரு சொத்தை அடைய விரும்புகிறேன். அந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்காட வேண்டுமென உங்களை வேண்டுகிறேன் என்று கூறுகிறார். இது ஒரு காப்புடைச் செய்தியாகுமா?

10. In a Murder trial, evidence is sought to be given of signs made by the decreased in answer to questions put to him about the persons who caused the fatal injuries. Is it admissible?

ஒரு கொலை குற்ற விசாரணையில் மரணம் விளைவித்தவர்கள் யார் என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் வகையில் இறந்து போனவர் காட்டிய சைகைகளைச் சாட்சியமாக அளிக்க முனைகின்றனர். இது ஏற்புடையதா?

(For the candidates admitted during 2017-2018)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Admission can be proved against the person who made it, but it cannot be

proved by or on behalf of the person who made it. State the exceptions, if any, to this rule.

ஒருவருக்கு எதிராக அவர் சொன்ன ஏற்புரையை மெய்ப்பிக்க முடியும். ஆனால் அவர் அவருக்கு சாதகமாக சொன்ன ஏற்புரையை மெய்ப்பிக்க முடியாது. இவ்விதிக்கு விலக்குகள் இருப்பின் விளக்குக.

2. Explain the various kinds of examination of witness under the Indian Evidence Act.

இந்திய சாட்சிய சட்டத்தில் சாட்சிகளின் விசாரணையின் பல்வேறு வகைகளை விளக்குக.

3. Explain the doctrine of estoppel and distinguish it from Res judicata.

முரண்தடை கோட்பாட்டை விளக்கி, அதை முன் தீர்ப்பு தடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain 'Latent Ambiguity' and 'Patent Ambiguity'

"உட்கிடை பொருள் மயக்கம்" மற்றும் "வெளிப்படை பொருள் மயக்கம்" ஆகியவற்றை விளக்குக.

5. Explain the "Golden Rules of Evidence".

சான்றியலின் பொன் விதிகளை விவரிக்கவும்.

6. Explain the relevancy of character of a person in civil and criminal cases.

உரிமையியல் மற்றம் குற்றவியல் வழக்குகளில் ஒரு நபரின் குண இயல்பின் தொடர்பை விளக்குக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Confession to police officer
காவல்துறை அதிகாரியிடம் குற்ற ஏற்புரை

(b) Expert opinion
வல்லுநர்கள் கருத்து

(c) Plea of Alibi
வேற்றிட வாதம்

(d) De novo trial.
புத்துரு விசாரணை

(e) RES GESTAE
ஒன்றிய செயல்

(f) Public documents
பொது ஆவணங்கள்

(g) Child witness
குழந்தை சாட்சியம்

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, who is accused of murder, alleges that by grave and sudden provocation, he was deprived of the power of self control. On whom does the burden of proof lie?

கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட அ என்பவர் திடீரென்று கடுமையாக ஆத்திரமூட்டப்பட்டதால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறனை இழந்துவிட்டதாகச் சொல்கிறார். அதை மெய்ப்பிக்கும் சுமை யாரைச்சார்ந்தது?

9. A, a minor. Before dying said that B stapped him. Whether A's dying declaration is admissible?

அ என்ற இளவர் தான் இறக்கும் தருவாயில் ஆ என்பவர் தன்னைக்குத்தியதாகக் கூறினார். அ–வின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

10. 'A' said to his wife that, 'I will kill sundar'. Decide whether such communication is admissible.

அ அவருடைய மனைவியிடம் "நான் சுந்தரை கொல்லப்போகிறேன்" என்று கூறினார். இத்தகைய செய்தித்தொடர்பானது ஏற்புடையதா என்பதனை முடிவு செய்க.

(For the candidates admitted during 2017-2018)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What do you mean by confession? State the provisions of the Indian Evidence Act as to confession.

குற்ற ஏற்புரை என்பதனால் நீங்கள் அறிவது என்ன? குற்ற ஏற்புரை குறித்து இந்திய சாட்சிய சட்டத்தின் வகைமுறைகளைக் கூறுக.

2. Discuss with reference to decided cases the nature and scope of the presumption of legitimacy of children born during coverture.

மண வாழ்வில் பிறந்த மகவு சட்டப்படி முறையானது என்ற அனுமானத்தின் தன்மையையும், அளாவுகையையும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை எடுத்துக்காட்டி விவாதிக்க.

3. Can the court convict an accused only on the basis of the circumstantil evidence ? Discuss with the decided cases.

சூழ்நிலைச்சான்றினை மட்டும் கருத்தில் கொண்டு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட நபரை தண்டனைக்கு உட்படுத்தலாமா? நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the significance of
   (a) May presume
   (b) Shall presume

   தனிமுறைச்சிறப்பை விளக்குக.

   (அ) அனுமானிக்கலாம்

   (ஆ) அனுமானித்தல் வேண்டும்

5. Distinquish between primary evidence and secondary evidence

   வேறுபடுத்துக : தலைநிலைச்சாட்சியம் மற்றும் சார்நிலைச்சாட்சியம்

6. Distinguish between Estoppel and Res judicata

   வேறுபடுத்துக : முரண்தடை மற்றும் முன்தீர்ப்புத்தடை

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

- (a) Ancient documents
  தொல்லாவணம்
- (b) Proof of custom
  வழக்காறு நிரூபணம்
- (c) Admission without prejudice
  பாதகமின்றி ஒத்தேற்பு
- (d) Kashmira Singh vs. State of Madhya Pradesh AIR 1952 SC 159
  காஷ்மீரா சிங் எதிர் மத்திய பிரதேச அரசு AIR 1952 SC 159
- (e) Attestation
  சான்றொப்பம்
- (f) Public Document
  பொது ஆவணம்
- (g) Patent Ambiquity
  வெளிப்படையான பொருள் மயக்கம்

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A married woman committed suicide within a period of seven years from the date of the marriag. Her mother-in-law without the knowledge of her husband subjected her to cruelty. Can there be a presumption as to abetment of suicide by husband also?

திருமணமான ஏழு வருங்களுக்குள் ஒரு பெண் தற்கொலை செற்து கொள்கிறாள். அவளுடைய கணவனின் தாய், அப்பெண்ணின் கணவனுக்குத் தெரியாமல் அவளை துன்புறுத்தியுள்ளார். இச்சூழலில் அந்த திருமணமான பெண்ணின் தற்கொலைக்கு கணவனும் உடந்தை என அனுமானிக்க இயலுமா?

9. 'A' a client says to B, an advocate - 'I have committed robbery and I wish you to defend me'. Is this communication protected under law. Decide.

'அ' என்ற கட்சிக்காரர் ஆ என்ற வழக்குரைஞரிடம், நான் கொள்ளைக்குற்றத்தைப் புரிந்திருக்கின்றேன். எனக்காக நீங்கள் எதிர் வழக்காட வேண்டும்' எனக்கூறுகிறார். இச்செய்தி சட்டப்படி பாதுகாக்கப்படுமா? தீர்மானிக்க.

10. The question is whether A and B were married. The fact is that they were usually received and treated by their friends as husband and wife. Is this fact relevant?

அ என்பவருக்கும் ஆ என்பவருக்கும் திருமணம் ஆகியுள்ளதா என்பது கேள்வி. அவர்கள் வழக்கமாகவே அவர்களது நண்பர்களால் கணவனும் மனைவியுமாக வரவேற்று நடத்தப்பட்டனர் எனும் நிகழ்வு தொடர்புற்றதாகுமா?

(For the candidates admitted during 2017-2018)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three year Regular Course)
Second Year - Fourth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "In every confession there is an admission to prove that relevant facts" - Examine.

"ஒவ்வொரு குற்ற ஏற்புரையிலும் ஒரு ஏற்புரை தொடர்புடைய பொருண்மைகளை நிரூபிக்க இருக்கின்றது"– ஆராய்க.

2. "The role of documentary evidence is appreciable in civil and criminal case" - Discuss

"உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஆவண சாட்சியங்களின் பங்கு பாராட்டுதலுக்குரியது" – விவாதிக்கவும்.

3. "Presumptions reduce the burden of proof of parties"- Comment.

"அனுமானங்கள் தரப்பினர்களின் மெய்ப்பிக்கும் சுமையைக் குறைக்கின்றது" – கருத்தாய்வு செய்க.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of estoppel and its kinds.
முரண்தடை கோட்பாடு மற்றும் அதன் வகைகளை விளக்குக.

5. Discuss the different types of ambiguity in the Indian Evidence Act.
இந்திய சாட்சிய சட்டத்தில் உள்ள பல்வேறு வகையான பொருள் மயக்கங்களை விவாதிக்கவும்.

6. When judgement of courts are relevant in court proceedings?
நீதிமன்ற நடவடிக்கைகளில், நீதிமன்ற தீர்ப்புகள் எப்போது தொடர்புடையதாக்கப் படுகின்றன?

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Identification parade
அடையாள அணிவகுப்பு

(b) Compromise of cases
வழக்குகளை சமரசம் செய்வது

(c) Judicial Notice
நீதிமன்ற அறிவிப்பு

(d) Circumstantial Evidence
சூழ்நிலைச்சாட்சியம்

(e) Ancient Document
பழமையான ஆவணம்

(f) Civil Death
உரிமையியல் மரணம்

(g) Child witness
குழந்தை சாட்சியம்

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a corona patient before death says that he died because of wrong treatment of doctors. Is A's statement admissiable?
அ என்கின்ற கொரோனா நோயாளி இறக்கும் முன், தனது மரணத்திற்கு மருத்துவர்கள் தவறான சிகிச்சையே காரணம் என்று கூறியுள்ளார். இந்த வாக்குமூலம் ஏற்புடையதா?

9. 'X' was not found for 7 years. The court passed a judgment that he died. Later "X' returned after 8 years. Decide the validity of judgment.

'X' என்பவர் 7 வருடங்களாக காணவில்லை. நீதிமன்றம் அவர் இறந்துவிட்டதாக தீர்ப்பு வழங்குகின்றது. 8 வருடங்களுக்குப் பிறகு 'X' திரும்பி வருகிறார். அந்த தீர்ப்பின் செல்லும் தன்மையை முடிவு செய்யவும்.

10. 'A' orally gifts a property to 'B'. 'B' was in enjoyment for 12 years. Later 'A' sued 'B' for cancellation of oral gift. Decide.

அ என்பவர் வாய்மொழியாக ஆ என்பவருக்கு சொத்தை கொடை கொடுக்கின்றார், ஆ என்பவர் அச்சொத்தை 12 வருடங்களாக அனுபவிக்கின்றார். பின்னர் அந்த வாய்மொழி கொடையை ரத்து செய்வதற்கு அ என்பவர் ஆ என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்கின்றார். முடிவு செய்க.

ஐந்தாண்டு சட்டக்கல்வி

B.L. DEGREE EXAMINATION, MAY 2015.

Fifth Semester / Third year

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What is meant by direct and indirect evidence? Can a court convict an accused only on the basis of the circumstantial evidence?

நேரடி மற்றும் மறைமுக சாட்சியம் என்றால் என்ன? சூழ்நிலை சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாக வைத்து ஓர் குற்றவாளியை தண்டிக்க இயலுமா?

2. Explain the relevancy of the statements made by persons who cannot be called as witnesses to the court.

நீதிமன்றத்திற்கு சாட்சிகளாக அழைக்க முடியாதவர்களின் வாக்குமூலங்களின் தொடர்பை பற்றி விளக்குக.

3. State and explain the exceptions to the general rule that opinions of third parties are irrelevant.

மூன்றாவது நபர்களின் கருத்துக்கள் தொடர்பற்றது என்கிற பொதுவான விதிக்குண்டான விதிவிலக்குகளை எடுத்துக் கூறி விளக்கவும்.

4. Which documents do not need formal proof? What is proper custody as regards electronic records?

தக்க முறையில் நிரூபிக்க தேவையில்லாத ஆவணங்கள் யாவை? மின்னணு ஆவணங்களைப் பொறுத்த மட்டில் சரியான பாதுகாப்பில் இருந்தது என்பது என்ன?

5. Who are competent witnesses? Explain the competency of an approver and co-accused to give evidence.

தகுதி வாய்ந்த சாட்சியம் யார்? குற்றமற்ற சான்றுரைஞர் மற்றும் உடன்குற்றவாளி ஆகியோரின் சாட்சிய தகுதியை விளக்கவும்.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Admissions
ஏற்புரைகள்

(b) Burden of proof in criminal cases
குற்றவியல் வழக்குகளில் மெய்ப்பிக்கும் சுமை

(c) Conspiracy
கூட்டுச் சதி

(d) De-Novo Trial
புத்துரு விசாரணை

(e) Examination-in-chief
முதன்மை விசாரணை

(f) Facts which need not be proved
நிரூபிக்க தேவையில்லா பொருண்மைகள்

(g) Latent ambiguity
உட்கிடை பொருள் மயக்கம்

(h) Number of witness
சான்றுறுரைஞர்களின் எண்ணிக்கை

(i) Identification parade
அடையாள அணிவகுப்பு

(j) Refreshing memory
நினைவை புதுப்பித்துக் கொள்ளல்

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A and B quarreled at a place resulted in the death of B. Whether the marks on the ground near the place where the murder was committed are relevant?

அ மற்றும் ஆ இருவரும் சண்டையிட்டதில் ஆ இறந்துவிடுகிறார். கொலை நடந்த இடத்தின் அருகில் உள்ள நிலத்தில் காணப்பட்ட அடையாளங்கள் தொடர்புடையவையாகுமா?

8. A is charged with shooting at B with intent to kill him. In order to show A's

intention, the fact of A having previously shot at B is relevant or not?

ஆவை கொல்ல வேண்டும் என்ற நோக்கில் அ அவரை நோக்கி சுட்டார் என்ற வழக்கில் அ-வின்குற்ற எண்ணத்தை நிரூபிக்க முன்பு ஒரு சயம் இது போன்றே அ, ஆவை நோக்கி சுட்டார் என்பது தொடர்புடைய பொருண்மையா, இல்லையா?

9. A produces a copy of a letter compared with the xerox copy of the letter as evidence in the court. Whether it is admissible as evidence?

அ என்பவர் ஜெராக்ஸ் நகலுடன் ஒப்பிடக்கூடிய கடித நகல் ஒன்றை நீதிமன்றத்தில் சாட்சியமாக சமர்பிக்கிறார். இது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக் கூடுமா?

10. The wife saw her husband committing the murder. She refuses to give evidence. Can she be compelled to give evidence against her husband.

தன் கணவர் கொலை செய்வதை மனைவி பார்த்தாள். அவள் கணவருக்கு எதிராக சாட்சியம் அளிக்க மறுக்கிறார். அவரை கணவருக்கு எதிராக சான்றுரைக்க கட்டாயப்படுத்த முடியுமா?

11. A police officer was questioned as to on what date the accused was arrested. He answered that he did not remember the date. He was asked to refresh his memory by looking into the case diary, which he refused to do. What kind of presumption can the court draw against the police officer?

ஓர் காவல்துறை அதிகாரியிடம் குற்றம் சாட்டப்பட்டவர் எந்த தேதியில் கைது செய்யப்பட்டார் எனக் கேட்கப்பட்டது. தேதி தனக்கு நினைவில் இல்லை என பதில் அளித்தார். அவருடைய வழக்கு குறிப்பேட்டை பார்த்து நினைவு புதுப்பித்துக் கொண்டு கூறுமாறு கேட்டதற்கு அவ்வாறு செய்ய மறுத்துவிட்டார். காவல் துறை அதிகாரிக்கு எதிராக நீதிமன்றம் எவ்விதமாக அனுமானிக்கும்?

12. John a doctor was charged with the murder of a girl. Evidence of the death of three other women under similar circumstances were produced before the court. Whether they are admissible as evidence?

ஜான் என்ற ஓர் மருத்துவர் ஓர் சிறுமியை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். வேறு மூன்று பெண்கள் இதே போன்று ஓர் சூழ்நிலையில் ஏற்கனவே இறந்து இருப்பது பற்றிய சாட்சியம் நீதிமன்றத்தில் முன்பாக வைக்கப்படுகிறது, அவை ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியம் ஆகுமா எனக் கூறவும்?

(For candidates admitted from 2009 - 2010 onwards)

B.A. B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2015.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Define and explain "The Golden Rules of Evidence".
சான்றியலின் பொன் விதிகளை வரையறுத்து, விவரிக்கவும்.

2. Define admission and confession ar.d point out the difference between them.
ஏற்புரை மற்றும் குற்ற ஏற்புரைகளை வரையறுத்து அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை சுட்டிக் காட்டுக.

3. What are the exceptions to the general rule that the burden of proof lies on the person who asserts the affirmative of the issue?
பொருண்மையை வலியுறுத்தி உறுதி கூறும் நபர் மீதே மெய்ப்பிக்கும் சுமை விழுகிறது என்ற பொது விதிக்குள்ள விதிவிலக்குகள் யாவை?

4. Explain the doctrine of estoppel and distinguish it from res judicata.
முரண்தடை கோட்பாட்டை விளக்கி, அதை முன் தீர்ப்பு தடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

5. What are the ways of impeaching the ciedit of a witness?
சான்றுரைஞர் ஒருவரின் நாணயத்தை எவ்வழிகளில் பழித்துரைக்கலாம்?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) Alibi
வேற்றிட வாதம்

(b) Admission by silence.
அமைதி வழி ஒத்தேற்பு

(c) Court Questions.
நீதிமன்ற வினாக்கள்

(d) Dumb witnesses.
ஊமை சான்றுரைஞர்கள்

(e) Expert opinion
வல்லுநர் கருத்து

(f) Facts admitted.
ஏற்றுக் கொள்ளப்பட்ட நிகழ்மைகள்.

(g) Judicial notice.
நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டியன.

(h) Hostile witness
பிறழ் சாட்சி

(i) Mathura Rape Case
மதுரா வன்புணர்ச்சி வழக்கு

(j) R vs Christie.
அரசர் எதிர் கிறிஸ்டி.

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தருந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A crime is committed by several persons. A,B and C, three of the criminals are captured at the spot and kept apart from each other. Each giving an account of the crime implicating D. Is it admissible.

பலர் சேர்ந்து செய்த ஒரு குற்றத்திற்காக, A, B மற்றும் C ஆகிய மூவரும் சம்பவ இடத்தில் பிடிபட்டு தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக குற்றத்தைப் பற்றி கூறுகையில் D என்பவருடன் சேர்ந்து செய்ததாய் கூறுகின்றனர். இது ஏற்புடையதாகுமா?

8. A is tried for murder of B by poison. Before death of B. A procured poison similar to that which was administered to B. Is it a relevant fact?

'B' என்பவரை விஷம் கொடுத்துக் கொலை செய்ததாக 'A' என்பவர் விசாரணை செய்யப்படுகிறார். 'B' இறப்பதற்கு முன்பு 'A' என்பவர், 'B' –க்கு கொடுக்கப்பட்டதைப் போன்ற விஷத்தை வாங்கியிருக்கிறார். இது தொடர்புடையப் பொருண்மையாகுமா?

9. A, a lunatic, before dying said that 'B' stabbed him. Is A's dying declaration admissible?

A என்ற பித்தர் தான் இறக்கும் பொழுது B என்பவர் தன்னைக் குத்தியதாகக் கூறினார். Aயின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

10. Ramu is tried for murder. During the trial, evidence of bad character is produced by the prosecution against, the accused. State the admissibility of bad character evidence.

ராமு என்பவர் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார். விசாரணையின் போது அரசு தரப்பு ராமுவிற்கு எதிராக தீய குண இயல்பு உடையவர் என்ற சான்றினை அளிக்கிறது. தீய குண இயல்பு சான்று ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்பதை முடிவு செய்க.

11. The question is whether a horse sold by 'A' to 'B' is sound. 'A' says to 'B', go and ask 'C', 'C' knows about it. Whether C's statement is admissible?

'A' என்பவர் 'B' என்பவருக்கு விற்ற குதிரை திடகாத்திரமானதுதானா என்பது வினா வாதம். 'B' என்பவரிடம் 'A' என்பவர் கூறுகிறார். 'A' என்பவரிடம் சென்று கேள். 'C' என்பவருக்கு அதைப் பற்றி தெரியும். 'C' என்பவரின் கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதா?

12. A was charged with murder and he is in police custody. A makes a statement which leads to discovery of material objects. Decide the relevancy of the statement.

'A' என்பவர் மீது கொலை குற்றச்சாட்டு வனையப்பட்டு உள்ளது. அவர் காவலரது காவல் வைப்பில் இருக்கிறார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் வாயிலாக சான்றுப் பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. வாக்குமூலத்தின் தொடர்புடைய தன்மையை முடிவு செய்க.

(For candidates admitted from 2009 - 2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2016.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the significance of 'may presume', 'shall presume' and 'conclusive proof in the Indian Evidence Act.

இந்திய சான்றுச் சட்டத்தில் காணப்படும் 'துணிபிடலாம்', 'துணிபிடல் வேண்டும்' மற்றும் 'அறுதியான சான்றுறுதி' எனும் சொற்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

2. Explain the circumstances under which judgment of courts are relevant.

எவ்வித சூழ்நிலைகளில் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தொடர்புடைய நிகழ்மைகள் ஆகும் என்பதனை எடுத்துரைக்கவும்.

3. Explain the nature of privileged communications under the Indian Evidence Act.

இந்திய சான்றுச் சட்டத்தின் கீழ் காப்புடை செய்திகளின் தன்மையை விளக்கவும்.

4. Discuss in the light of decided cases, the nature and scope of the presumption of legitimacy of children born during coverture.

மண வாழ்வில் பிறந்த மகவு முறைப்படியானது என்ற துணிபின் தன்மையையும், அதன் அளாவுகைகையையும் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் ஆராய்க.

5. Explain how far oral evidence is admissible to clear ambiguities in documents.

எப்பொழுது வாய்மொழிச் சான்று ஆவணங்களில் உள்ள தெளிவற்ற நிலையை நீக்குவதற்கு ஏற்கப்படும் என்பதை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) Accomplice
உடன் குற்றவாளி

(b) Burden of Proof
மெய்ப்பிக்கும் சுமை

(c) Cross examination
குறுக்கு விசாரணை

(d) Doctrine of Corpus delicti
குற்றக் கூறுகளின் தொகுதி கோட்பாடு

(e) Estoppel by election
தெரிவு முரண்தடை

(f) Fact in issue
தீர்வுக்குரிய நிகழ்வுகள்

(g) Number of witnesses
சான்றுரைஞர்களின் எண்ணிக்கை

(h) Res Gestae
ஒன்றிய செயல்

(i) Corroborative evidence
உறுதியூட்டும் சான்று

(j) Leading question
விடையமை வினா

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A is charged with the offence of travelling in a train without a ticket. A alleges he had a ticket. On whom does the burden of proof lie?

பயணச்சீட்டு இல்லாமல் இருப்பூர்தியில் பயணம் செய்ததாக A என்பவர் குற்றம் சாட்டப் படுகிறார். தான் ஒரு பயணச் சீட்டை வைத்திருந்ததாக A கூறுகிறார். இதில் மெய்ப்பிக்கும் சுமை யாரைச் சாரும்?

8. 'A' is accused before the court of sessions of having given false evidence before 'B', a Magistrate. Can :B' be compelled to depose what 'A' had said to him?

'B' என்ற குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன்பு பொய் சான்று அளித்ததற்காக 'A' என்பவர் அமர்வு நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 'A' என்ன கூறினார் என கூறும்படி 'B' யைக் கட்டாயப்படுத்த முடியுமா?

9. The question is whether 'A', who is dead, was the father of 'B'. Is a statement by 'A' that 'B' was his own son, relevant, or not?

இறந்து போன 'A' என்பவர், 'B' யின் தந்தையா என்பது கேள்வி 'B' என்பவர் தம்முடைய மகன் தான் என்று இறந்து போன 'A' கூறிய கூற்று தொடர்புடையதா இல்லையா?

10. The question is whether 'A' was robbed. In this case, evidence leads to the fact that soon after the alleged robbery, he made a complaint relating to the offence. Can this be admissible?

'A' என்பவரிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்டதா என்பது வினா. இவ்வழக்கில் நிகழ்வுகள் நடந்தவுடன் 'A' அது தொடர்பாக ஒரு முறையீடு சமர்ப்பித்தார் என்ற சான்று அளிக்கப்படுகிறது. இதனை ஏற்றுக் கொள்ள இயலுமா?

11. The question is whether 'A' committed crime at Kolkata on a certain day. The fact is, that day 'A' was at London. Explain the relevancy of the fact.

'A' என்பவர் ஒரு குறிப்பிட்ட நாளில் கொல்கத்தா நகரில் குற்றமொன்றை புரிந்தாரா என்பது வினா? அந்த குறிப்பிட்ட நாளில் அவர் லண்டனில் இருந்தார் என்பது நிகழ்மை. இந்நிகழ்மையின் தொடர்புடைமையினை விளக்குக.

12. Raju gives a receipt for money paid by Vivek. Oral evidence in offered of the payment. Is the evidence admissible?

விவேக்கினால் செலுத்தப்பட்ட பணத்திற்காக ராஜு என்பவர் ரசீது ஒன்றை அளிக்கிறார். பணம் செலுத்தப்பட்டதைப் பற்றி வாய்மொழி சான்று அளிக்கப்படுகிறது. இச்சான்று அனுமதிக்கத்தக்கதா?

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2017.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain in detail the different kinds of evidence. In which cases evidence need not be produced?

சான்றின் பல்வேறு வகைகளை விரிவாக விவரிக்கவும். எந்தெந்த நேர்வில் சான்றளிக்கத் தேவையில்லை?

2. "All confessions are admissions; but not all admissions are confessions" — Explain.

"அனைத்து குற்ற ஏற்புரைகளும் ஒத்தேற்புரைகளே. ஆனால் அனைத்து ஒத்தேற்புரைகளும் குற்ற ஏற்புரைகளாகாது" – விளக்குக.

3. Explain the evidentiary value of character evidence. How it exists in civil and criminal proceedings?

குண இயல்புச்சான்றினை விளக்கவும். அவை உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் எவ்வாறு செயல்படுகிறது?

4. "The document proved to be thirty years old and produced from proper custody is free from suspicion" - Explain.

"தக்க பாதுகாப்பில் இருந்து தாக்கல் செய்யப்படும் முப்பது வருடப் பழமை வாய்ந்த ஆவணமானது அனைத்து ஐயங்களுக்கும் அப்பாற்பட்டது" – விளக்குக.

5. "Cross examination though very powerful is also a very dangerous weapon"

- Explain.

"குறுக்கு விசாரணை என்பது சக்திமிக்கதாயினும் மிகவும் ஆபத்து நிறைந்த ஆயுதம் ஆகும்" – விவரி.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) Alibi.
வேற்றிடச் சான்று

(b) Best Evidence Rule.
சிறந்த சான்று விதி

(c) Conclusive proof.
முபமையான மெய்ப்பிப்பு

(d) Dying Declaration
மரண வாக்குமூலம்

(e) Electronic document.
மின்னணு ஆவணம்

(f) Foreign judgement.
வெளிநாட்டுத் தீர்ப்பு

(g) Estoppel and Res judicata.
முரண்தடை மற்றும் முன்தீர்ப்புத் தடை

(h) Leading questions.
விடையமை வினாக்கள்

(I) Patent ambiguity.
வெளிப்படையான பொருள் மயக்கம்

(j) Improper admission of Evidence.
சான்றுகளைத் தவறுதலாக ஏற்றல்.

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Dead body resultant of a homicide was found in the house of the accused 'A'. 'A' failed to explain it. What kind of presumption may the court to raise?

மரணம் விளைவிக்கப்பட்டு இறந்து விட்டவரின் உடல் குற்றஞ்சாட்டப்பட்டவர் 'A' ன் வீட்டில் காணப்பட்டது. 'A' வினால் உரிய விளக்கம் கொடுக்க இயலவில்லை. இந்நிலையில் நீதிமன்றம் எவ்விதமான துணிபிடும்?

8. In case of death in police custody, the accused police officer contended that the deceased was at the time in question somewhere else; which they could not

prove. Is these facts relevant in a trial for murder?

ஓர் காவல் நிலைய காவல் வைப்பின் போது ஏற்பட்ட மரணத்திற்கு குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அலுவலர் இறந்து விட்டவர் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் நேர்வில் வேறு இடத்தில் இருந்தார் எனக் கூறினார்கள். ஆனால் அதனை அவர்களால் மெய்ப்பிக்க இயலவில்லை. கொலைக்கான குற்ற விசாரணையில் இவை தொடர்புடை நிகழ்மைகளா?

9. 'A', a lunatic, before said that 'B' - stabbed him. Is A's dying declaration admissable?

'A' என்ற பித்தர் தான் இறப்பதற்கு முன்பாக 'B' என்பவர் தன்னைக் கத்தியால் குத்தியதாகக் கூறினார். 'A'யின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

10. An accused person makes the following statement to the police. "I will show you where I have hidden my share from the bank robbery". Discuss the admissibility of this statement as evidence.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவல் துறை அலுவலரிடம் "வங்கிக் கொள்ளையில் என்னுடைய பங்கை எங்கு ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு காண்பிக்கிறேன்" எனக் கூறினார். இக்கூற்றின் சான்று ஏற்புடைமையை விவாதிக்கவும்.

11. A, an accused of murder, alleges that by grave and sudden provocation, he was deprived of the power of self-control. On whom the burden of proof lies?

'A' என்ற கொலைக்குற்றம் சாட்டப்பட்ட நபர் தனக்கு திடீரென ஏற்பட்ட ஆத்திரத்தால் தான் சுயக்கட்டுப்பாட்டை இழந்ததாகக் கூறினார். இதனை மெய்ப்பிக்கும் சுமை யாருடையதாகும்?

12. Marry Anne was charged only for the murder of her husband by poisoning him. Still evidence of death of her three sons under similar circumstances were produced before the court. Is they are admissable as evidence?

மேரி அன் என்பவர் தனது கணவரை நஞ்சு வைத்துக்கொன்றதாக மட்டுமே குற்றம் சாட்டப்படுகிறார். இருப்பினும் அவருடைய மூன்று மகன்கள் இதுபோன்ற சூழ்நிலையில் இறந்தார்கள் என்ற நீதிமன்றத்தின் முன் சான்று அளிக்கப்படுகிறது. அவை ஏற்புடைச்சான்றாகுமா?

(For candidates admitted from 2009 - 2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Unless excluded all facts having rational probative value are admissible in Evidence — Explain.

அறிவுசார் சான்றளிக்கின்ற நிகழ்மைகள் யாவும் மற்ற வகையில் தவிர்க்கப்பட்டால் அன்றி

சான்றாக ஏற்றுக் கொள்ளத்தக்கவை – விவரி.

2. Distinguish between judicial and extra-judicial confessions.

நீதித்துறை சார்ந்த மற்றும் நீதிமன்ற புறத்தே ஆன குற்ற ஏற்புரைகளை வேறுபடுத்திக் காட்டுக.

3. What facts need not be proved under the Evidence Act?

சான்றுச்சட்டத்தின்படி நீதிமன்றத்தில் மெய்ப்பிக்கத்தேவை இல்லாத நிகழ்மைகள் யாவை?

4. "Evidence is to be weighed and not numbered"— Elucidate.

"சான்றை எடையிட வேண்டுமே அன்றி எண்ணிக்கை பார்த்திடலாகா" – விவரித்தியம்புக.

5. What are the circumstances under which a person cannot be allowed to deny his earlier statement?

எந்தெந்தச் சூழ்நிலைகளில் ஓர் நபர் தனது முந்தைய நிலையை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Alibi
வேற்றிடவாதம்

(b) Burden of proof
மெய்ப்பிக்கும் சுமை

(c) Character in criminal cases
குற்ற வழக்குகளில் குண இயல்பு சான்று

(d) Document
ஆவணம்

(e) Exceptions to hearsay evidence
செவி வழி சான்று செல்லாது என்பதின் விதிவிலக்குகள்

(f) Facts presumed
துணியிடப்பட்ட நிகழ்மைகள்

(g) Public document
பொது ஆவணம்

(h) Refreshing memory
நினைவைப் புதுப்பித்தல்

(i) Court questions
நீதிமன்ற வினாக்கள்

(j) De-novo trial
புத்துரு விசாரணை

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to

provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. X a witness of seizure mahazur in a dacoity case, refreshes his memory by referring the seizure mahazur which is inadmissible as evidence. Can 'X' refresh his memory by the use of seizure mahazur?

'X' என்ற சான்றுரைஞர் ஓர் கூட்டுக் கொள்ளைக் குற்றத்தில் கைப்பற்றிய ஆவணத்தின் உதவியுடன் தனது நினைவைப் புதுப்பித்துக் கொள்கிறார். அந்த ஆவணம் நீதிமன்றத்தால் சான்றாக அனுமதிக்கப்படவில்லை. 'X' அந்த ஆவணத்தை பார்த்து நினைவை புதுப்பித்துக் கொள்ள இயலுமா?

8. An accused person makes the following statement to the police "I will show you where I have hidden my share from the bank robbery". Is this statement admissible as Evidence?

குற்றம் சாட்டப்பட்ட ஓர் நபர் காவல் அலுவலரிடம் "வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் என் பங்கினை மறைத்து வைத்துள்ள இடத்தை தங்களிடம் காட்டுகிறேன்" எனக் கூறுகிறார். இக்கூற்று சான்றாக ஏற்றுக் கொள்ளத்தக்கதா?

9. The copy sought to be produced was neither photocopy nor true copy of the original. It was not compared with the original; The plaintiff Wanted to prove it as a secondary evidence; Is it permissible?

சான்றாக ஏற்கக் கோரும் ஓர் நகல் ஒளிம நகலும் அல்ல மற்றும் உண்மை நகலும் அல்ல; இந்த நிலையில் அதனை இரண்டாம் நிலை சான்றாக மெய்ப்பிக்க வழக்கீட்டாளர் முனைகிறார். இது அனுமதிக்கத்தக்கதா?

10. Records of a nationalised bank have been produced before a court as documentary evidence in a recovery of loan case. Is it necessary to examine the persons who prepared such documents?

ஓர் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் கடன் வசூல் வழக்கில் வங்கியின் ஆவணங்கள் ஆவணச் சான்றாக சமர்ப்பிக்கப்பட்டன. அவை சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட அவற்றை தயார் செய்தவர்களை விசாரிக்க வேண்டியது அவசியமானதா?

11. A police officer while making investigation makes entries in the site inspection map and the site inspection memo. Whether they are relevant and admissible as evidence?

தனது புலன் விசாரணையின் போது ஓர் காவல்துறை அலுவலர் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த வரைபடத்திலும், சோதனைக் குறிப்பிலும் சில பதிவுகளைப் பதிவு செய்கிறார். இவை குற்ற வழக்கில் தொடர்புடையவயா? சான்றாக ஏற்கத்தக்கவையா?

12. Simultaneous civil and criminal pioceedings arising out of an accident is pending before the motor accident claims tribunal and the respective Magistrate court. Can the claim proceedings be stayed till the final verdict of the Magistrate court?

ஒரே விபத்தின் அடிப்படையில் எழுந்த குற்றவியல் வழக்கும் இழப்பீடு கோரும் வழக்கும் இயக்கூர்திகள் விபத்தீடு கோருரிமைத் தீர்ப்பாயம் மற்றும் உரிய நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் போது, குற்றவியல் நடுவரின் இறுதித் தீர்ப்பு வரும்

வரையில் இழப்பீடுக் கோரும் மனுவைத் தடை செய்ய இயலுமா?

(For candidates admitted from 2009 - 2010 onwards)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATION, MAY 2018.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. State the circumstances under which statements of persons who cannot be called as witnesses are relevant.

சான்றுரைஞர்களாக அழைக்க முடியாதவர்களின் கூற்றுக்கள் எந்நேர்வுகளில் தொடர்புடையன என்பதைத் தெரிவிக்கவும்.

2. Define the term 'Admission' and state the persons who are entitled to make admission.

ஏற்புரை என்பதை வரையறு. யார் ஏற்புரை அளிக்கத்தக்கவர் என்பதைக் கூறவும்.

3. The contents of a document must be proved by the document itself. State the exceptions if any.

ஒரு ஆவணத்தின் உள்ளடக்கத்தை ஆவண வாயிலாக மட்டுமே மெய்ப்பிக்க வேண்டும். இதற்கு விதிவிலக்குகள் இருப்பின் தெரிவிக்கவும்.

4. Who are competent witnesses? Explain the competency of an approver and co-accused to give evidence.

தகுதிறமுடைய சான்றுரைஞர்கள் யார்? குற்றமேற்ற சான்றுரைஞர் மற்றும் உடன் குற்றவாளி ஆகியோரின் சான்றுரை தகுநிலையை விளக்கவும்.

5. What is the object of cross-examination? What ai e the questions that may be lawfully asked during cross-examination?

குறுக்கு விசாரணை மேற்கொள்வதின் நோக்கம் என்ன? குறுக்கு விசாரணையில் சட்ட ரீதியில் எவ்வகையான வினாக்களை கேட்க இயலும்?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Conclusive proof
அறுதியான சான்றுறுதி

(b) Latent ambiguity

உட்கிடை பொருள் மயக்கம்

(c) Promissory Estoppel
வாக்குறுதி முரண்தடை

(d) Burden of proof
மெய்ப்பிக்கும் சுமை

(e) Valid confession
செல்லத்தகும் குற்ற ஏற்புரை

(f) Impeaching the credit of witness
சான்றுரைஞரின் நன்மதிப்பைப் பழித்தல்

(g) Hostile witness
பிறழ் சாட்சி

(h) Alibi
வேற்றிடச் சான்று

(i) Expert opinion
வல்லுநர்கள் கருத்து

(j) De Novo Trial
புத்துரு விசாரணை

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' is tried for the murder of 'B' by intentionally shooting him dead. The fact is that 'A' on other occasions shot at 'B' Explain the relevancy of the fact.

'B' யைக் கொல்ல வேண்டுமென்ற உட்கருத்துடன் அவரை சுட்டுக் கொல்ல செய்ததாக 'A'யின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. 'A' யின் உட்கருத்தை மெய்ப்பிப்பதற்காக அவர் இதற்கு முன்பு 'B'யை சுட்டுள்ளார் எனக்கூறப்பட்டது. இந்நிகழ்மையின் தொடர்புடைமையினை விளக்குக.

8. 'A' sues 'B' for money due on a promissory note. The execution of the promisssory note is admitted, hut 'B' says that it was obtained by fraud, which 'A' denies. State on whom is the burden of proof lies.

கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பணத்திற்காக 'A' என்பவர் 'B' என்பவரின் மீது வழக்கிடுகிறார். 'B' என்பவர் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்ததை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் அது மோசடியாகப் பெறப்பட்டது என்று கூறுகிறார். அதை 'A' மறுக்கிறார். மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் அமைந்துள்ளது என்பதைக் கூறுக.

9. 'A', a client says to 'B', an advocate - "I have committed robbery and I wish you to defend me". Is this communication protected? Decide.

'A' என்ற கட்சிக்காரர் 'B' என்ற வழக்குரைஞரிடம் "நான் கொள்ளைக் குற்றத்தைப் புரிந்திருக்கிறேன். எனக்காக நீங்கள் எதிர் வழக்காட வேண்டும்" எனக்கூறுகிறார்.

இச்செய்தி காப்புடைச் செய்தியாகுமா? தீர்மானிக்க.

10. The issue is whether 'A' has been guilty of cruelty towards 'B' his wife. Whether the expressions of the feeling towards each other shortly before and after the alleged cruelty are relevant to prove cruelty.

'B' என்கிற தன் மனைவியிடம் 'A' என்பவர் வன்கொடுமைக் குற்றம் புரிந்தாரா என்பது எழுவினாவாகும். தெரிவிக்கப்படும் கொடுமைக்கு முன்பும், பின்பும் ஒருவருக்கு ஒருவர் வெளிப்படுத்தும் உணர்வுகள் கொடுமைக் குற்றத்தை மெய்ப்பிக்க தொடர்புடைய நிகழ்மைகளா?

11. 'A' has proposed to prove, by a copy, the contents of a document said to be lost. State the method of proof prescribed by law to prove the contents of the document.

'A' என்பவர் தொலைந்ததாகக் கூறப்படும் ஆவணம் ஒன்றின் உள்ளடக்கத்தை நகல் வாயிலாக மெய்ப்பிக்க முனைகிறார். ஆவணத்தின் உள்ளடக்கத்தை மெய்ப்பிக்க சட்டத்தால் வழி வகுக்கும் முறையினை குறிப்பிடவும்.

12. A sues B for a land of which B is in possession and which, as A asserts was left to A by the will of C, B's father. B denies it. On whom the burden of proof would lie?

'B' யின் உடைமையிலுள்ள ஒரு நிலம், தனக்கு 'B' யின் தந்தை 'C'–யால் விருப்பாவண வாயிலாக தரப்பட்டதாக வலியுறுத்தி, 'A' என்பவர் 'B' யின் மீது வழக்கிடுகிறார். அதை 'B' மறுக்கிறார். யார் மீது மெய்ப்பிக்கும் சுமை அமைந்துள்ளது?

(For candidates admitted from 2009 - 2010 to 2016 - 2017)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Law of Evidence is "Lex Fori' — Comment. Does the Law of Evidence apply to all proceedings?

"சான்றியல் சட்டம் வழக்காடும் நாட்டின் சட்டம் ஆகும்" – இதனை விமர்சிக்க, சான்றியல் சட்ட விதிகள் அனைத்து வகையான செயல்முறைகளுக்கும் பயன்படுத்திடல் இயலுமா?

2. When do facts not otherwise relevant become relevant?

எப்பொழுது தொடர்பில்லா நிகழ்மைகள் தொடர்புடையன ஆகும்?

3. What are the exceptions to the general rule that the burden of proof lies on the person the affirmation of the issue?

எழுவினாவினை வலியுறுத்துபவர் மீது மெய்ப்பிக்கும் சுமை அமைந்துள்ளது என்ற விதியினது விலக்குகள் யாவை?

4. Is direct evidence superior or inferiui to circumstantial evidence? Discuss.

நேர்நிலைச் சான்று சூழ்நிலைச் சான்றை விட மேலமையானதா அல்லது கீழமையானதா? விவாதிக்கவும்.

5. What is estoppel? Explain the diffcicnt kinds of estoppel.

முரண் தடை என்றால் என்ன? முரண் தடையின் வகைகளை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Admission
ஏற்புரை

(b) Best Evidence Rule.
நற்சான்று விதி

(c) Chief examination.
முதன்மை விசாரணை

(d) Dying declaration
மரண வாக்குமூலம்

(e) Expert evidence.
வல்லுநர் சான்று

(f) Judicial notice.
நீதிமுறை கவனயேற்பு

(g) Ancient document.
தொல்லாவணம்

(h) Res Judicata.
முன் தீர்ப்புத் தடை

(i) Dumb witness.
ஊமை சாட்சியம்

(j) Refreshing memory.
நினைவைப் புதுப்பித்தல்

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Sekar accused ot murder, alleges that by reason of unsoundness of mind he did not know the nature of the act. On whom does the burden of proof lie?

கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட சேகர் என்பவர் பித்து நிலையால் அச்செய்கையின் தன்மையை அறிந்திருக்கவில்லை என்று சொல்கிறார். மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் உள்ளது?

8. A client says to his advocate, "I wish to obtain possession of property by use of a forged deed on which I request you to sue". Is this communication protected from disclosure.

ஒரு வழக்காளர் தனது வழக்குரைஞரிடம், "போலி ஆவணத்தைப் பயன்படுத்தி ஒரு சொத்தை அடைய விரும்புகிறேன். அந்த ஆவணத்தின் மீது வழக்காட வேண்டுமென்று வேண்டுகிறேன்" என்று கூறுகிறார். இந்தச் செய்தி காப்புடைச் செய்தி ஆகுமா?

9. A, a lunatic, before dying said that B stabbed him. Is A's dying declaration admissible?

'A' என்ற பித்தர் தான் இறக்கும் பொழுது, 'B' என்பவர் தன்னை குத்தியதாகக் கூறினார். 'A' வின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

10. A, sues B for Rs. 5,000 and shows entries in his account books, showing B to be indebted to him for that account. Do these entries in the account books are relevant and sufficient?

'B' என்பவர் தன்னிடம் ரூபாய் 5,000 கடன் வாங்கியதாக தனது கணக்குப் புத்தகங்களில் உள்ள குறிப்புகளைக் காட்டி 'A' என்பவர் வழக்கிடுகிறார். இந்த கணக்குப் புத்தகங்களில் உள்ள குறிப்புகள் தொடர்புடைமை மற்றும் போதுமானத் தன்மையை வெளிப்படுத்துகிறதா?

11. 'X' is tried for murder. During the trial, evidence of bad character is produced by the prosecution against the accused. State the admissibility and appreciability of bad character as evidence.

'X' என்பவர் கொலை குற்றத்திற்காக விசாரிக்கப்படுகின்றார். விசாரணையின் பொழுது அரசு தரப்பு 'X' க்கு எதிராக தீய குணத்தர் என்ற சான்றினை அளிக்கிறது. தீய குணம் என்ற சான்றின் ஏற்புடைமையினையும், திறனாய்வினையும் கூறுக.

12. Raju agrees in writing to sell a horse to Ramu for Rs. 10,000 (or) Rs. 15,000/-. Raju intends to give evidence that he agreed to sell it for Rs. 15,000/- only. Will he be allowed to do so?

ராமு என்பவருக்கு ஒரு குதிரையை ரூபாய் 10,000/– அல்லது ரூபாய் 15,000/–க்கு விற்க ராஜு என்பவர் எழுத்து வாயிலாக இசைகிறார். ரூபாய் 15,000/–க்கு விற்கவே இசைந்ததாக ராஜு சான்று அளிக்க விழைகிறார். அவ்வாறு சான்று அளிக்க ராஜு அனுமதிக்கப்படுவாரா?

(For candidates admitted from 2009 - 2010 to 2016 - 2017)

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATION, MAY 2019.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. "The rules of evidence are general for both civil and criminal proceedings" — Discuss.

"உரிமையியல் மற்றும் குற்றவியல் நடைமுறைகளில் விதிகள் பொதுவானவை" – விவாதிக்க.

2. What are the kinds of presumptions under the Indian Evidence Act? Explain the significance of each.

இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு அனுமானங்கள் யாவை? அவற்றில் ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

3. Explain the law relating to confession under the Indian Evidence Act.

இந்திய சாட்சிய சட்டத்தில் குற்ற ஏற்புரையைப் பற்றி கூறப்பட்டுள்ள சட்டத்தினை விளக்குக.

4. Who is an Expert? Explain the rules regarding the relevancy of Expert opinion.

வல்லுநர் என்பவர் யார்? வல்லுநரின் கருத்து சாட்சியத்தின் தொடர்புடைமை சார்ந்த விதிகளை விளக்குக.

5. Explain under what circumstances, the previous conviction of the accused is relevant.

எந்த சூழ்நிலைகளில் ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் முன்குற்றத் தீர்ப்பு தொடர்புடையது என்பதனை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Judicial Notice
நீதிமன்ற கவனயேற்பு

(b) Conspiracy
கூட்டுச் சதி

(c) Accomplice
உடன் குற்றவாளி

(d) Child witness
குழந்தை சான்றுரைஞர்

(e) Oral evidence
வாய்மொழி சாட்சியம்

(f) Public document
பொது ஆவணம்

(g) Evidence of Third person
மூன்றாவது நபர் சாட்சியம்

(h) Order of examination
விசாரணைகளின் வரிசை

(i) Judgment in personam
தனி நபருக்கான தீர்ப்பு

(j) Scandalous questions

பழி தூற்றும் கேள்விகள்

PART C - (4 x 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. An offence of theft is committed by A and B. They are captured and kept apart from each other. Both gives an account of the crime implicating other one. Is it admissible?

ஒரு திருட்டுக் குற்றத்தை A மற்றும் B சேர்ந்து செய்தனர். இருவரும் சம்பவ இடத்திலேயே பிடிபட்டு தனித்தனியாக வைக்கப்பட்டனர். இருவரும் தனித்தனியே குற்றத்தைப் பற்றிக் கூறுகையில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து செய்ததாக கூறுகின்றனர். இது ஏற்புடையது ஆகுமா?

8. The question is, whether rent was paid to 'A' for certain land. A letter from 'A's deceased agent to A, saying that he had received the rent on A's account. Whether it is relevant fact? Decide.

ஒரு நிலத்திற்கான வாடகையை 'A' க்கு செலுத்தப்பட்டதா என்பது கேள்வி. 'A' என்பவருக்கு அவருடைய முகவர் எழுதிய கடிதத்தில், "A-ன் கணக்கில் வாடகை பணம் பெறப்பட்டது" என்பதாகும். இது தொடர்புள்ள சங்கதியா? தீர்மானிக்க.

9. The question is, whether A and B were married. They are usually treated by their friends as husband and wife. Whether it is relevant? Decide.

'A'–யும் 'B'-யும் திருமணமானவர்களா என்பது இங்கு கேள்வி ஆகும். அவர்கள் இருவரும், அவர்களுடைய நண்பர்களால் கணவன் மனைவியாக நடத்தப்பட்டனர். இது தொடர்புடைய சங்கதியா என்பதை தீர்மானிக்க.

10. A was prosecuted for murder of B. In this case, A's wife was also as witness. Whether it is admissible?

'A' என்பவர் 'B' என்பவரைக் கொலை செய்த குற்றத்திற்கு வழக்கிற்குள்ளாகிறார். இவ்வழக்கில் 'A'–யின் மனைவி ஒரு சாட்சி ஆகும். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதா?

11. The question is whether 'A' was the legitimate son of B. The fact is that 'A' was always treated as such by members of the family, relevant fact.

'A' என்பவர் 'B' என்பவருக்கு முறை மகனா என்பது வினா. நிகழ்மை என்னவெனில், 'A' எப்போதும் அக்குடும்பத்தின் உறுப்பினர் என நடத்தப்பட்டனர். இந்நிகழ்வுகளில் தொடர்புடைய நிகழ்மைகளை எடுத்துக் கூறி விளக்குக.

12. A is charged with travelling on a train without a ticket. A alleges he had a ticket. On whom does the burden of proof lie?

பயணச்சீட்டில்லாமல் இரயிலில் பயணம் செய்ததாக A குற்றம் சாட்டப்படுகிறார். தாம் ஒரு பயணச்சீட்டை வைத்திருந்தேன் என்று A கூறுகிறார். இதில் மெய்ப்பிக்கும் சுமை யாரைச் சாரும்?

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For candidates admitted from 2017 - 2018)

B.A., LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Law of Evidence is 'LEXFORI' - Explain with relevant case laws.
"சான்றியல் சட்டம் வழக்காடும் நாட்டின் சட்டம் ஆகும்" – தகுந்த வழக்குகளுடன் விவரிக்கவும்.

2. 'Hearsay evidence not admissible' - Explain the statement with its exceptions.
"கேள்வி நிலைச்சான்று ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல" – இதனை அதனுடைய விதி விலக்குகளுடன் விளக்குக.

3. 'Oral Evidence cannot be adduced to vary the contents of a document' - Discuss.
"ஆவணமொன்றின் உள்ளடக்கத்தை மாற்றுவதற்கு வாய்மொழி சாட்சியத்தை அனுமதிக்க முடியாது" – விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the different kinds of presumptions under the Indian Evidence Act.
இந்திய சாட்சிய சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு அனுமானங்களை விவாதிக்கவும்.

5. "The burden of proof is on the person who asserts a fact" - Comment.
"ஒரு பொருண்மையை வலியுறுத்துபவர்கள் மீதே மெய்ப்பிக்கும் சுமை உள்ளது" – எடுத்தியம்புக.

6. 'Some of the witnesses cannot be compelled to disclose communications' - State and explain their privilege.
"சில சான்றுரைஞர்களைக் கண்டிப்பாகப் பரிமாறப்பட்ட தகவல்களைக் கூற வேண்டும் எனக்கட்டாயப்படுத்த முடியாது" – அந்த சான்றுரைஞர்களின் சிறப்புரிமை பற்றி விளக்குக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Impeaching Character of Witness.
சான்றுரைஞரின் நாணயத்தைப்பழித்தல்

(b) Best Evidence Rule
சிறந்த சாட்சியத்தின் விதி

(c) Ambiguity
பொருள் மயக்கம்

(d) Ancient Document
தொல்லாவணம்

(e) Hostile Witness
பிறழ்சாட்சி

(f) Leading Questions
விடையமை வினாக்கள்

(g) Pakala Narayana Swami v. King Emperor AIR 1939 PC 47
பகல நாரயண சாமி எதிர் அரசர் AIR 1939 PC 47

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Question is whether 'A' was the legitimate son of 'B'. Is that 'A' was always treated as such by the members of the family relevant?

அ என்பவர் ஆ என்பவருடைய சட்டப்பூர்வமான மகனா என்ற கேள்வி எழுந்தது. அ என்பவர் அவ்வாறு தான் குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்படுகிறார் என்ற பொருண்மை தொடர்புடையதா?

9. Sankaran, an accused of murder, alleges that by reason of unsoundness of mind he did not know the nature of the act. On whom the burden of proof lies?

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட சங்கரன் என்பவர் பித்துநிலையால் அச்செய்கையின் தன்மையை அறிந்திருக்கவில்லை என்று சொல்கின்றார். மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் உள்ளது?

10. 'A' is accused of theft. During the police custody he indicated the place where the stolen goods were hidden and the police recovered those goods. Can this information be used against 'A'?

அ என்பவர் திருட்டுக்குற்றம் சாட்டப்படுகிறார். அவர் காவல் இருப்பில் இருக்கும் போது திருடப்பட்ட பொருட்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டுகிறார் மற்றும் அவை கைப்பற்றப்பட்டன. இந்த தகவலை அ–விற்கு எதிராகப் பயன்படுத்த முடியுமா?

(For candidates admitted from 2017 - 2018)

B.A. / L.L.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Five-year Regular Course)

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "All admissible facts are relevant but all relevant facts are not admissible" - Comment.

அனைத்து ஏற்புடைய நிகழ்வுகளும் தீர்வுதவுபவைகள் ஆகும். ஆனால் அனைத்து தீர்வுதவு நிகழ்வுகளும் ஏற்புடையதல்ல – விமர்சிக்கவும்.

2. What are leading questions? When may leading questions be put in.

விடையமை வினாக்கள் என்றால் என்ன? எப்பொழுது விடையமை வினாக்கள் கேட்கப் படலாம்?

(a) examination-in-chief
முதல் விசாரணையின்போது

(b) re-examination
மறு விசாரணையின்போது

3. Define and explain "The Golden Rules of Evidence".

"சான்றியலின் பொன் விதி"களை வரையறுத்து, விவரிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the exceptions to the general rule that the burden of proof lies on the person who asserts the affirmative of the issue?

பொருண்மையை வலியுறுத்தி உறுதி கூறும் நபர் மீதே மெய்ப்பிக்கும் சுமை விழுகிறது என்ற பொது விதிக்குள்ள விதிவிலக்குகள் யாவை?

5. Who are the persons who cannot be called as witnesses before a court of law? How far are their evidence admissible?

நீதிமன்றத்தின் முன் சாட்சிகளாக அழைக்க முடியாதவர்கள் யார்? அவர்களின் சாட்சியங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்கவை?

6. What do you mean by judgement in rem and judgement in personam? How far they are admissible as evidence?

மன்று சுட்டிய தீர்ப்பு மற்றும் நபர் சுட்டிய தீர்ப்பு என்றால் என்ன? அவை எந்த அளவிற்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளத்தக்கவை?

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) What do you mean by conclusive proof?
அறுதியான நிரூபணம் என்றால் என்ன?

(b) Write a note on promissory estoppel.
வாக்குறுதி முரண்தடை பற்றி குறிப்பு எழுதுக.

(c) What is corroborative evidence?
உறுதியூட்டும் சான்று என்றால் என்ன?

(d) What is meant by Res Gestae?
ஒன்றிய செயல் என்றால் என்ன?

(e) Hostile witness
பிறழ் சாட்சி.

(f) Privileged Communication
காப்புடைச் செய்திகள்.

(g) Impeaching the credit of witness.
சான்றுரைஞர்களின் நாணயத்தைப் பழித்தல்.

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a lunatic before dying said that 'B' stabbed him. Is 'A's dying declaration admissible?

'அ' என்ற பித்தர் இறக்கும் போது 'ஆ' என்பவர் தன்னை குத்தியதாக கூறினார். 'அ'வின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

9. A client sells his property to his advocate and then brings a suit against him for setting aside the sale on the ground of fraud. On whom the burden of proof lies? Decide.

தனது சொத்தினை, தனது வழக்கறிஞருக்கு விற்பனை செய்யும் ஒரு கட்சிக்காரர், பின்னர் மோசடி நடந்து விட்டது எனக்கூறி அந்த விற்பனையை ரத்து செய்யக்கோரி வழக்கு தொடுக்கிறார். இதில் மெய்ப்பிக்கும் சுமை யாரை சாரும் என்று முடிவு செய்க.

10. 'A' gives 'B' a receipt for money paid by 'B'. Oral evidence is offered of the payment. Is the evidence admissible? Decide.

'B'–யினால் செலுத்தப்பட்ட பணத்திற்காக 'A' என்பவர் ரசீது ஒன்றை அளிக்கிறார். பணம் செலுத்தப்பட்டதைப் பற்றி வாய்மொழி சான்று அளிக்கப்படுகின்றது. இச்சான்று ஏற்புடையதா? முடிவு செய்க.

(For candidates admitted from 2017 - 2018)

B.A. / L.L.B. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Five-year Regular Course)

Third Year / Fifth Semester

LAW OF EVIDENCE

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
500 சொற்களில் விடையளிக்கவும்.

1. 'Facts which the court takes judicial notice' need not be proved. Explain.
நீதிமுறையில் மெய்யெனக் கொள்ளும் பொருண்மைகளை நிரூபிக்கத்தேவையில்லை. விவரி.

2. Explain the rules relating to burden of proof.
'மெய்ப்பிக்கும் சுமை' தொடர்பான விதிகளை விளக்குக.

3. Discuss promissory estoppel.
வாக்குறுதி முரண்தடை குறித்து விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ
300 சொற்களில் விடையளிக்கவும்.

4. When is character relevant?
இயல்பு (குணாதிசயம்) தொடர்புடையதாவது எப்போது?

5. Explain documentary evidence.
ஆவணச்சான்று குறித்து விவரி.

6. Can one of the accused be a compenent witness?
குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் தகுதி வாய்ந்த சான்றுரைஞராகலாமா?

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

   (a) Hearsay evidence
   கேள்விநிலைச்சான்று

   (b) Experts
   வல்லுநர்கள்

   (c) Confession to a Police officer
   காவல் அதிகாரியிடம் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம்

   (d) Fact in issue
   தீர்வுதரு பொருண்மை

   (e) Digital Evidence
   மின்னணு சான்று

   (f) Motive
   (உள்) நோக்கம்

(g) Judge's power to put questions
நீதிபதியின் கேள்வி கேட்கும் அதிகாரம்

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' and 'B' are jointly tried for the murder of 'C'. It is proved that A said - 'B' and I murdered 'C'. What is the effect of this confession as against 'B'.

'C' என்பவரின் கொலைக்காக, 'A' என்பவரும் 'B' என்பவரும் கூட்டாக விசாரணை செய்யப்படுகிறார்கள். "Aயும் நானும் 'C' ஐ கொலை செய்தோம்" என 'A' கூறியது நிரூபிக்கப்பட்டது. 'B'க்கு எதிரான இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் விளைவு என்ன?

9. The question is, whether A and B were married. Their friends usually receive and treat them as husand and wife. Decide whether this fact is relevant.

Aயும் Bயும் திருமணமானவர்களா என்பது வினா. அவர்களது நண்பர்கள் அவர்களை வழக்கமாக கணவன் மனைவியாக வரவேற்கிறார்கள் மற்றும் நடத்துகிறார்கள். இந்த பொருண்மை தொடர்புடையதா என்பதை தீர்மானிக்கவும்.

10. 'A' agrees in writing, to pay 'B' Rs. 1,000 on the first March 1973. At the same time an oral agreement was made that the money should not be paid till the thirty - first March 1973. Can this fact be proved?

1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் 'A' என்பவர் 'B' என்பவருக்காக ரூ.1,000 தரவதாக எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார். 'அதே ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதி வரை பணம் செலுத்தப்படக்கூடாது' என அச்சமயத்தில் வாய்மொழி ஒப்பந்தம் செய்து கொள் கிறார்கள். இந்த பொருண்மை நிரூபிக்கப்படலாமா?

தேர்வுக்குத் தயாராக சில குறிப்புகள்

நாம் இந்நூலின் தொடக்கத்திலேயே கண்டவாறு, இந்திய சாட்சியச்சட்டத்தை (1) பொருண்மைகளின் தொடர்புடைமை [Relevancy of Facts]; (2) மெய்ப்பித்தல் பற்றி [On Proof]; (3) சாட்சியம் தாக்கல் செய்யப்படுதலும் அதன் விளைவும் [Production and Effect of Evidence] என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். எனவே இதன் அடிப்படையிலேயே நாம் தேர்வுக்கும் தயாராகிவிடலாம்.

முதற்பகுதியைப் பொறுத்தவரை, 'சாட்சியம்' என்பதன் வரையறையை முக்கியமாகப் படித்துக் கொள்ள வேண்டும். இப்பாடம் குறித்த எந்த வினாவிற்கு விடையெழுதும் முன்பாக, சாட்சியச் சட்டத்தின் வரையறையை, முன்னுரையாக விடையில் சுட்டிக் காட்டலாம். அதுபோல் சாட்சியங்களின் பல்வேறு வகைகளைப் படித்துக் கொண்டால், குறுகிய விடை எழுதுக வினாக்களுக்கு விடையளிக்க ஏதுவாகும். சூழ்நிலைச் சாட்சியம் என்பதற்கு சற்று கூடுதல் கவனம் கொடுத்து படிக்கவும். இதில் நெடு வினா கேட்கப்பட வாய்ப்புண்டு. அடுத்ததாக, பொருண்மை [Fact], அனுமானம் அல்லது துணிபு [Presumption], மெய்ப்பித்தல் [Proving], குற்றக் கூறுகளின் தொகுதிக் கோட்பாடு [Doctrine of Corpus Delicti], சாட்சியத்தின் தொடர்புடைமையும் சாட்சியத்தை அனுமதித்தலும் [Relevancy and Admissibility of Evidence], ஒன்றிய செயல் [Res Gestae], சதி மற்றும் சதிகாரர்களின் செயல்கள் – எப்பொழுது தொடர்புடையதாகின்றன? [Conspiracy and acts of conspirators - When relevant?], மற்றபடி தொடர்பில்லாத பொருண்மைகள் அல்லது வேற்றிட வாதம் அல்லது அலிபி [Facts not otherwise relevant (or) Alibi - When relevant?], ஒத்தேற்புரை [Admission], குற்ற ஏற்புரை [Confession], சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் [Statements by Persons who cannot be called as witnesses], மரண வாக்குமூலம் [Dyeing Declaration], நீதிமன்றங்களின் தீர்ப்புகள் – எப்பொழுது தொடர்புடையவை? [Judgments of Court - When relevant?], கருத்துச்சாட்சியம் – எப்பொழுது தொடர்புடையது? [Opinion Evidence - When relevant?], வழக்குத் தரப்பினர்களின் குணஇயல்பு – எப்பொழுது தொடர்புடையது? [Character of parties - When relevant?] ஆகியன மிகமிகமிக முக்கியமானவையாகும். இதிலிருந்து நெடு வினாக்கள், குறுகிய விடை எழுதுக வினாக்கள், பிரச்சனை வினாக்கள் பரவலாக கேட்கப்படுகின்றன.

இரண்டாம் பகுதியிலிருந்து 'நீதிமுறை கவன ஏற்பு' [Judicial Notice] என்பது பலமுறை ஒரு குறுகிய விடை எழுதுக வினாவாக கேட்கப்பட்டுள்ளது. அதுபோல் வாய்மொழிச் சாட்சியம், ஆவணச் சாட்சியம், பொது ஆவணங்கள், ஆவணங்கள் பற்றிய துணிபுகள் ஆகியவற்றிலிருந்து நெடு வினாக்களும், குறுகிய விடை எழுதுக வினாக்களும் கேட்கப்படுகின்றன. மேலும் 'ஆவண சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் ஒதுக்கப்படும் சூழ்நிலைகள்' பல சமயங்களில் ஒரு நெடு வினாவாக கேட்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பகுதியிலிருந்து மெய்ப்பிக்கும் சுமை, முரண்தடை எனும் தலைப்புகள் பல வினாத்தாள்களில் நெடுவினாவாகவும், குறுகிய விடை எழுதுக வினாவாகவும் கேட்கப்பட்டுள்ளது. அதுபோல் 'சாட்சிகள்' எனும் தலைப்பிலிருந்து சாட்சிகளின் தகுதி, சாட்சிகளின் கட்டாயப்படுத்தும் தன்மை, குழந்தை மற்றும் ஊமை சாட்சியம், உடன் குற்றவாளியும் அவரது சாட்சியமும் ஆகியன குறுகிய விடை எழுதுக வினாக்களாக கேட்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் சாட்சிகளை விசாரித்தல் என்பது மிகமிக மிக முக்கியமானதாகும். இதிலிருந்து நெடு வினாக்களையும், குறுகிய விடை எழுதுக வினாக்களையும் நிச்சயம் எதிர்பார்க்கலாம். சாட்சிகளை முறையற்ற விதத்தில் அனுமதித்தலும் நிராகரித்தலும் எனும் தலைப்பு பெரும்பாலும் ஒரு குறுகிய விடை எழுதுக வினாவாக கேட்கப்பட்டுள்ளது.

பிரச்சனைகளுக்கு தீர்வளிப்பது எப்படி?

இந்திய சாட்சியச் சட்டப் பிரிவுகளின் கீழான பல்வேறு எடுத்துக்காட்டுகளே, பல சமயங்களிலும் ஒரு பிரச்சனை வினாவாக வடிவமைக்கப்படுகிறது என்பதை கவனத்தில் கொண்டு, அவ்வெடுத்துக்காட்டுகளை நன்கு படித்துக் கொள்ளவும். அந்த வகையில் ஒத்தேற்புரை, குற்ற ஏற்புரை, சாட்சிகளாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் (வாக்குமூலங்கள்), மரண வாக்குமூலம், அய்யத்திற்குரிய பத்திரத்தை விளக்கவோ, திருத்தவோ கொடுக்கப்படும் சாட்சியத்தை ஒதுக்குதல், மெய்ப்பிக்கும் சுமை, முரண்தடை, திருமண வாழ்வில் பரிமாறிக் கொள்ளப்பட்ட செய்திகள், தொழில்முறையில் தெரிவிக்கப்படும் செய்திகள் ஆகியவற்றிலிருந்து பிரச்சனை வினாக்கள் கேட்கப்படுகின்றன. பிரச்சனைகளுக்கு விடையளிக்கும் பொழுது, சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவை தெளிவாக சுட்டிக்காட்டி விளக்க வேண்டும். மேலும் அனைத்து வினாக்களின் விடைகளுக்கும், முக்கியமான வழக்குகளை சுட்டிக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான மதிப்பெண்கள் கிட்டும்.

புதிய வடிவிலான வினாத்தாள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது?

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் வினாத்தாள் தற்போது புதிய வடிவில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் இரண்டு. அவை, (1) தேர்வெழுதும் காலம் 3 மணி நேரங்களில் இருந்து 2 ½ மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது. (2) மதிப்பெண்களும் அவ்வாறே குறைக்கப்பட்டுள்ளது. அதாவது 100 மதிப்பெண்கள் என்பது தற்போது 70 மதிப்பெண்களாக குறைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 30 மதிப்பெண்கள் கல்லூரி வகுப்பு செயல் முறை தேர்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

முந்தைய வினாத்தாள் பகுதி **A, B, C** என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும். தற்போதைய புதிய வினாத்தாள் **A, B, C, D** என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி A-யில் நெடு வினாக்கள் மூன்று கேட்கப்படுகின்றன. அவற்றில் நீங்கள் இரண்டு வினாக்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றுக்கும் 500 சொற்களில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் 12 மதிப்பெண்கள் வீதம்

இரண்டு வினாக்களுக்கான விடைகளுக்கு மொத்தம் 24 மதிப்பெண்கள். பகுதி **B**-யில் மூன்று குறுவினாக்கள் கேட்கப்பட்டு அவற்றில் நீங்கள் இரண்டு வினாக்களுக்கு 300 சொற்களில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் 7 மதிப்பெண் வீதம் இரண்டுக்கு 14 மதிப்பெண்கள். பகுதி **C**-யில் சிறு குறிப்புகள் எழுதுக வினாக்கள் 7 கேட்கப்படுகின்றன. அவற்றில் ஐந்துக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடைக்கும் 4 மதிப்பெண் என்ற அடிப்படையில் ஐந்துக்கு மொத்தம் 20 மதிப்பெண்கள். பகுதி **D**-யில் பிரச்சனைகள் வடிவில் வினாக்கள் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு மொத்தம் மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு, அவற்றில் இரண்டுக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். உங்கள் விடையில் வினா தொடர்பான சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்குகளைச் சுட்டிக்காட்டி, தகுந்த காரணங்களுடன் விளக்க வேண்டும். பிரச்சனைக்கான தீர்வு ஒவ்வொன்றுக்கும் 6 மதிப்பெண்கள் வீதம் இரண்டுக்கு 12 மதிப்பெண்கள்.

அதிக மதிப்பெண் பெற என்ன வழி?

மேலே கண்ட புதிய முறை வினாத்தாள் சற்று கடினமானது. எனவே விருப்பத் தேர்வு போக விடையளிக்க வேண்டிய அத்தனை வினாக்களுக்கும் விடையளிக்கவும்; எவற்றையும் விட்டுவிட வேண்டாம். குறிப்பாக சிறு குறிப்பு எழுதுக வினாக்களில் விடையளிக்க வேண்டிய ஐந்து வினாக்களில் எவற்றையும் விட்டுவிட வேண்டாம். அது போல் பிரச்சனை வடிவிலான வினாக்களுக்கு, நன்கு தீர்வு தெரிந்த வினாக்களை முதலில் தேர்ந்தெடுத்து தீர்வளிக்கவும். சரியான தீர்வு தெரியாத பிரச்சனைக்கு தொடர்புடைய சட்டப்பிரிவைச்சுட்டிக்காட்டி வாதிட்டு எழுதவும். அதாவது எக்காரணம் கொண்டும் விடையளிக்காது விட்டுவிட வேண்டாம். முயற்சி செய்யவும்.

சிறந்த முறையில் தேர்வுக்கு தயாராக இந்நூலில் பிரச்சனை வினாக்களுக் கான தீர்வுகளையும், அதுபோல அண்மைக்கால முக்கிய வழக்குத்தீர்ப்பு நெறிகள் பலவற்றையும் தனித்தனி தொகுப்பாக தந்துள்ளேன்.

படிப்பதற்கு '5R' சூத்திரம்

1 R	-	**Read**	-	ஒருமுறை படி;
2 R	-	**Re-read**	-	மற்றொருமுறை படி;
3 R	-	**Remember**	-	நினைவில் வைத்துக் கொள்;
4 R	-	**Re-collect**	-	நினைவிற்கு கொண்டு வந்து பார்;
5 R	-	**Re-produce**	-	எழுதிப்பார்; தேர்வில் வெளிப்படுத்து.

தேர்விலும் வாழ்விலும் வெற்றி பெற எனதன்பு வாழ்த்துக்கள்!

- ஆசிரியர் பி.ஆர்.ஜெ.

-o0o-

சட்டக்கல்வியாளர் திரு. பி.ஆர்.ஜெ. எழுதிய பிற நூல்கள்

1.	இந்திய தண்டனைச் சட்டம் (திருத்திய பதிமூன்றாம் பதிப்பு)	420–00
2.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – I (திருத்திய பத்தாம் பதிப்பு)	300–00
3.	குறித்தவகை நிவாரணச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	120–00
4.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – II (பத்தாம் பதிப்பு)	240–00
5.	நுகர்வோர் உரிமைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்	240–00
6.	மொழி பெயர்ப்புக்குப் பயனாகும் முக்கிய சட்டத் தமிழ் பதங்களும் விளக்கமும்	185–00
7.	அளவையியல் (அல்லது) தருக்கவியல் (Logic)	55–00
8.	சட்ட மொழியும் சட்டம் வரைதலும்	100–00
9.	சொத்துரிமை மாற்றுச் சட்டம் (வசதியுரிமைச் சட்டத்துடன்)	380–00
10.	சட்டப் பொருள் விளக்கம் (ஏழாம் பதிப்பு)	430–00
11.	வங்கியியல் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	230–00
12.	மாற்று முறையாவணங்கள் சட்டம்	150–00
13.	நிருவாகமுறைச் சட்டம் (ஐந்தாம் பதிப்பு)	380–00
14.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் I (மூன்றாம் பதிப்பு)	360–00
15.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் II (நான்காம் பதிப்பு)	395–00
16.	இந்திய சாட்சிய சட்டம் (பத்தாம் பதிப்பு)	460–00
17.	நிறுவனச் சட்டம் (பதினொன்றாம் பதிப்பு)	490–00
18.	இந்திய குடும்பச் சட்டம் I (ஒன்பதாம் பதிப்பு)	380–00
19.	இந்திய குடும்பச் சட்டம் II (திருத்திய எட்டாம் பதிப்பு)	370–00
20.	பொது நாட்டிடைச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	320–00
21.	இசைவுத் தீர்ப்பு, சமரசம் மற்றும் மாற்றுவழியில் தகராறுகள் தீர்வு முறை	320–00
22.	உரிமையியல் நடைமுறைச் சட்டம் (பதிமூன்றாம் பதிப்பு)	330–00
23.	குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்திய பதினொன்றாம் பதிப்பு)	495–00
24.	குற்றவியல் தத்துவம் மற்றும் தண்டனையியல் (திருத்திய எட்டாம் பதிப்பு)	410–00
25.	வாதுரைச் சட்டம் (மாதிரி வரைவுகளுடன்)	165–00
26.	பத்திரமெழுதும் முறையும் மாதிரிப் பத்திரங்களும் (ஒன்பதாம் பதிப்பு)	195–00
27.	நீதிமன்ற விதிகள் (எட்டாம் பதிப்பு)	120–00
28.	Rules of Court	90–00
29.	பொது வகையங்கள் விளக்கச் சட்டம்	100–00
30.	நீதிமன்ற ஆணையர்கள் மற்றும் சொத்துப் பேணுநர்கள் தொடர்பான சட்டம்	165–00
31.	குடியுரிமை தொடர்பான சட்டங்கள்	100–00
32.	வணிக நீதிமன்றங்கள் சட்டம் (திருத்திய இரண்டாம் பதிப்பு)	180–00
33.	ஆதார் சட்டம்	210–00
34.	ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	200–00
35.	மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	240–00
36.	தமிழ்நாடு கட்டட வாடகைச் சட்டம் (இரண்டாம் பதிப்பு)	160–00

எமது சட்ட நூல்கள் கிடைக்கும் இடங்கள்

சேலம்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,

69/42–சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,
சேலம் 636 007.
தொலைப்பேசி : 0427–2403402
செல்லிடபேசி : 9943025132
இணையதளத்தில் அஞ்சல் செலவு இலவசத்துடன் விரைவாக வாங்க :
www.shripathirajanpublishers.com

சென்னை

சென்னை லா ஹவுஸ்,

223, YMCA பில்டிங்ஸ், பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25390210. செல்லிடபேசி : 9940286311

சி.சீதாராமன் அண்டு கோ. பி.லிட்.,

37, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 600 014

பானுஷா லா புக் சென்டர்,

9, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25360679.

மதுரை

நேஷனல் லா புக் டிரேடர்ஸ்,

ராஜா முத்தையா மன்றம் சாலை,
டாக்டர் தங்கராஜ் சாலை முதல் குறுக்குத் தெரு,
வினாயகா நகர், ஈகோ பார்க் பின்புற நுழைவாயில் எதிரில், மதுரை 625 020.
செல்லிடபேசி : 9344017798 & 9842117798

கிளை : மதுரை உயர் நீதிமன்ற அமர்வாயம் அருகில்,
பெட்ரோல் பங்க் எதிரில், உலகனேரி, மதுரை 625107

ஓ.பி. ராஜன் லா புக் சென்டர்,

பிளாட் நிர். 540, கே.கே.நகர், மகரிஷி வித்யாமந்திர் பள்ளி அருகில்,
மதுரை 625 020.
செல்லிடபேசி : 9842873176

சுக்லா லா ஹவுஸ்,
12/5, டாக்டர் எஸ்.வி.கே. தங்கராஜ்ரோடு,
அரசு சட்டக் கல்லூரி அருகில்,
விநாயகா நகர், மதுரை 625 020.
தொலைப்பேசி: 0452 – 2538170
செல்லிட பேசி : 94430 53817.

கோயம்புத்தூர்

வி.அங்கமுத்து லா புக் ஷாப்,
61, அரசு கலைக்கல்லூரி சாலை,
புதிய நீதிமன்ற கட்டடம் எதிரில்,
கோயம்புத்தூர் –18. பேசி: 0422 – 2301136
செல்லிட பேசி: 9443383047
மின்னஞ்சல் : angamuthulawbookshop@gmail.com

திருச்சி

பி.ஆர்.லா புக்ஸ் சென்டர்,
9, இப்ராஹீம் நகர்,
ஈவேரா கல்லூரி மற்றும் அரசு சட்டக் கல்லூரி அருகில்,
அண்ணா ஸ்டேடியம் மெயின் ரோடு,
காஜா மலை, திருச்சி 620023.
செல்லிட பேசி: 98421–89564.

விழுப்புரம்

புக் பார்க்,
171, ஆர்.கே.எஸ். காம்ளெக்ஸ், நேருஜி சாலை,
காந்தி சிலை அருகில்,
விழுப்புரம் 605602.
செல்லிட பேசி : 9944412800

திருநெல்வேலி

எம்எஸ்ஆர் லா புக் சென்டர்,
அரசு சட்டக்கல்லூரி எதிரில்,
ரஹாமத் நகர், திருச்செந்தூர் ரோடு,
திருநெல்வேலி 627 011.
செல்பேசி : 9443284358